T. 2123

I.
123
Acq. 1223
GOVERNMENT ORIENTAL ... TRIPLICANE, MADRAS
28 NOV 1955

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

உபயவேதாந்த க்ரந்தமாலை

ஆண்டாள் அருளிச்செய்த

நாய்ச்சியார் திருமொழி.

T 2123

ஸ்ரீ பரஹம்ஸபரிவ்ராஜக உபயவேதாந்தாசார்ய

(ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி)

ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன் திருவடியான

ஸ்ரீ உத்தமூர், தி. வீரராகவாசார்யன்

இயற்றிய

ப்ரபந்தரக்ஷை

என்னும் உரையுடன்

ஸ்ரீ காஞ்சீபுரம் ஸ்ரீ வேங்கடேச்வர அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

1954

விலை] [ரூ. 4—0—0

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானர் தேசிகன் திருவடிகளே சரணம்.

உபயவேதாந்த க்ரந்தமாலை

ஆண்டாள் அருளிச்செய்த

நாய்ச்சியார் திருமொழி.

ஸ்ரீ பரஹம்ஸபரிவ்ராஜக உபயவேதாந்தாசார்ய

(ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி)

ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன் திருவடியான

ஸ்ரீ உத்தமூர், தி. வீரராகவாசார்யன்

இயற்றிய

ப்ரபந்தரக்ஷை

என்னும் உரையுடன்

ஸ்ரீ காஞ்சீபுரம் ஸ்ரீ வேங்கடேச்வர அச்சகத்தில்

அச்சிடப்பெற்றது.

விலை] 1954 [ரூ. 4-0-0

இதுவரையில் உபய வேதாந்த க்ரந்தமாலையில் வெளியான க்ரந்தங்கள்

(நாகர லிபியில்)

1.	ஈச. கேந. கட வுபநிஷத்துக்கள். ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிக ஸ்ரீ. கூர நாராயண ஸ்ரீரங்கராமாநுஜ ஸ்வாமி பாஷ்யங்க ளுடனும் பரிஷ்காரத்துடனும்	5—0—0
2.	ப்ரச்ந. முண்டக. மாண்டுக்ய. அதர்வசிகைகள். ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி பாஷ்யத்துடனும் பரிஷ்காரத்துடனும்....	4—0—0
3.	தைத்திரீய—ஐதரேய வுபநிஷத்துக்கள் ,, ,,	6—0—0
4.	சாந்தோக்யோபநிஷத்து ,, ,,	8—0—0
5.	ப்ருஹதாரண்யகம் ,, ,,	7—0—0
6.	(தமிழ்) பெரியாழ்வார் திருமொழி ப்ரபந்தரக்ஷை யென்னும் உரையுடன் (பைண்டுள்பட)	12—0—0
7.	திருப்பாவை ப்ரபந்தரக்ஷையுடன்....	3—8—0
8.	நாய்ச்சியார் திருமொழி ,,	4—0—0

ஏற்கனவே வெளிவந்துள்ள க்ரந்தங்கள்.

(நாகர லிபியில்)

1.	ஸித்தித்ரயம், கூடார்த்த ப்ரகாசத்துடன்	2—0—0
2.	பரமார்த்த ப்ரகாசிகா (அத்வைதாமோத விமர்சம்)	2—0—0
3.	ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம் ஆசார்யபாஷ்ய தாத்பர்யத்துடன்	1—8—0
4.	ந்யாயகுஸுமாஞ்ஜலி—விஸ்தர வ்யாக்யானத்துடன்	6—0—0
5.	மீமாம்ஸா ந்யாய ப்ரகாசம். ஸுதாஸ்வாதத்துடன்(ஆய்விட்டது)	4—0—0
6.	வைசேஷிக தர்சந விமர்சம்	0-12—0
7.	தர்க்க ஸங்க்ரஹம். ஸுகப்ரவேசனியுடன்	1—0—0
8.	ஸ்ரீ வேங்கடேச்வர கல்யாண சரிதம் (காவ்யம்) தமிழ் தாத்பர்யத்துடன்	0-12—0
9.	ந்யாஸாதிகார ஸர்வஸ்வம் (மணி ப்ரவாளம்)	1—0—0
10.	வைசேஷிக தர்சனம். வைசேஷிக ரஸாயனத்துடன்	6—0—0

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ உத்தமூர் தி. வீரராகவாசார்யர்,

உபய வேதாந்த க்ரந்தமாலை ஆபீஸ், (திருப்பதி.)

Sri Uttamur T. VEERARAGHAVACHARYA, (EDITOR)

Ubhaya Vedanta Granthamala Office, (TIRUPATI)

3-A, DANDAPANI STREET, T. NAGAR, MADRAS-17.

ஶ்ரீ:

“ சதகமணிநீலா சாருகல்ஹாரஹஸ்தா
ஸ்தநபரநமிதாங்கீ ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து:
அலகவிநிஹிதாபி: ஸ்ரக்பிராக்ர்ஷ்டநாதா
விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா ந: ”

ஸ்ரீ :



ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ப்ரபந்தசாரத்தில் 10-வது பாசுரம்.

வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப் பூரம்
மேன்மேலு மிகவிளங்க விட்டு சித்தன்
தூயதிரு மகளாய்வந் தரங்க னார்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே!
நேயமுடன் திருப்பாவைப் பாட்டா றைந்து
நீயுரைத்த தையொருதிங் கட்பா மாலை
ஆயபுகழ் நூற்றுநாற் பத்து மூன்றும்
அன்புடனே யடியேனுக் கருள்செய் நீயே.

ஸ்ரீ :

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

நாய்ச்சியார் திருமொழி.

𑌗𑍋𑌪𑌿𑌕𑌾𑌧𑌿𑌕𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌂 𑌗𑍋𑌪𑍀𑌸𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑍀𑌮𑍍 ।
𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌲𑌾𑌘𑍍𑌯𑌪𑌦𑌾𑌕𑍃𑌷𑍍𑌟𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂 𑌗𑍋𑌦𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥

கோபிகாதிகமாஹாத்ம்யாம் கோபிஸ்தத்வார்த்ததர்சிநீம் ।
குருச்லாக்யபதாக்ர்ஷ்டக்ர்ஷ்ணம் கோதாமுபாஸ்மஹே ॥

முதலாயிரத்தில் மூன்றாவதும், ஆண்டாள் அருளிச்செய்த இரு ப்ரபந்தங்களில் இரண்டாவதுமானது நாய்ச்சியார் திருமொழி. திருமொழியாவது— இன்னார் இயற்றினது, இன்ன பலனைத் தருவது என்றவற்றை வெளியிடும் பாசுரத்தோடு சேர்ந்து பாசுரங்கள் பத்துக்குக் குறைவில்லாத பாக மாகும். இப்படிப் பல பாகங்கள் கொண்டதாலே இ ப்ரபந்தம் திருமொழி யெனப் படுகிறது. திருப்பாவையில் பத்துப் பாசுரங்கள் தோறும் இத்தகைய பிரிவில்லாமே, 'முப்பதும் தப்பாமே' என்றபடி ஒன்றாக அமைத்திருப்பதால் அது திருமொழி யென வழங்கப்பெறுவதன்று. பெரியாழ்வார்திருமொழி, பெரிய திருமொழி போன்ற பல திருமொழிகளிருப்பதால் அவற்றினின்று வேறுபாடு தோற்ற 'நாய்ச்சியார் திருமொழி' எனப்படுகிறது. திருப்பாவை யெனப் படும் ப்ரபந்தங்கள் பல வில்லையாகையாலே அங்கே நாய்ச்சியாரென்ற சொல் சேர்க்கப்படவில்லை. நாய்ச்சியாவாள் நாயகப்பெண்பிள்ளை. நாயன்=நாயகன்; பெருமையிற் சிறந்தோன். இச் சொல் பெண்பாலைக்குறிக்குமிடத்து நாய்ச்சி எனவாம். ஸர்வலோகநாயகனான எம்பெருமானுடைய மனைவிமார்களெல்லோரும் நாய்ச்சிமாராவார். அவரினும், 'அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணுபத்நீ' என்றபடி உலகை நியமிக்கும் மேன்மை யுள்ள இவள் நாய்ச்சியாராவதற்குக் குறை யில்லை. ஆண்டாள் அரங்கனைப் பெற்று நாய்ச்சியாரானமை இத் திருமொழியிலிருந்தே தெளிவாதல் பற்றியும் இத் திருமொழியின் பெயரிலேயே 'நாய்ச்சியார்' என்ற சொல்லைத் தொகுத்ததாம். திவ்ய ப்ரபந்தங்களுக்குப் பெரும்பாலும் ஸ்ரீ நாதமுனிகள்காலத்திலேற்பட்ட திருநாமங்களே வழங்கப்பெறுகின்றன வென்றும், ப்ரபந்தம் அருளினவர் வைத்த பெயர்கள் இவை யிருக்கமாட்டா வென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். கூடுமானவிடங்களில் அதையும் கொள்க.

இப்ரபந்த விஷயத்திலே ஆண்டாளின் தனியனுயிருப்பது கீழ்வருமாறு:-

(தனியனருளிச்செய்தவர் திருக்கண்ணமங்கையாண்டான் என்பர்.)

அல்லிநாட் டாமரைமே லாரணங்கி னின்றுணைவி
மல்லிநாடாண்ட மடமயில்—மெல்லியலாள்
ஆயர்குல வேந்த னாகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

அல்லி —(ஆயிரம்) இதழ்கள் (உள்ள)
நாள் —மலரும் தருணம் வாய்ந்த
தாமரை மேல் – தாமரைப் பூவின் மேல்
ஆர் —ஆதர வுள்ள
அணங்கின் } தெய்வப் பெண்ணான பெரிய பிராட்டியாருக்கு
இன் —இஷ்டமான
துணைவி —தோழியாயும்,
மல்லி நாடு —திருமல்லி நாட்டை
ஆண்ட } தனக்கு அதீனமாக்கின வளாய்
மடம் —அழகிய

மயில் —மயில்போன்றவளும்,
மெல் இயலாள் } மென்மை பொருந்திய ஸ்வபாவமுள்ளவளும்,
ஆயர் குலம் —இடையர் குலத்திற்கு
வேந்தன் —நாதனான கண்ணனுக்கான
ஆகத்தாள் } தன் திருமேனியையுடையளுமானவள்
தென் —தெற்கிலிருக்கும்
புதுவை —ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த
வேயர் —வேயர் குலத்தாரால்
பயந்த —பெறப்பட்ட
விளக்கு } விளக்கு போல் விளங்கும் கோதை.

தாமரைக்கு இதழ்கள் இயற்கையிலிருக்க, அல்லி என்றது ஸஹஸ்ர பத்ரம் என்றாற்போலே அளவற்ற உள்ளிதழ் உள்ளதை யறிவிக்க. அணங்கு— தெய்வம். இதனால், 'தம்பதீ தைவதம் ந:' என்றபடி எம்பெருமானோடொத்த ஐச்வர்யாதிகளைப் பெற்றமை பணிக்கப் பெற்றதாம். இன்துணைவி. அபராதிகளான சேதனர்களைக் கண்டு எம்பெருமான் இரங்கும்படி செய்விக்கும் பெரிய பிராட்டியாருக்குப் பூமிப் பிராட்டியாரும் துணையாயிருப்பதை கோதாஸ்துதியில் ஆண்டாளிடத்தில் ஈடுபட்டு ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தது காண்க.

'ஆர்த்ராபராதிநி ஜநேப்யபிரக்ஷணார்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமாநே ।
பார்ச்வே பரத்ர பவதீ யதி தத்ர ந ஸ்யாத்
ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திதம் ஸ்யாத் ।।'

'ரக்ஷணத்தைச் செய்துவரும் எம்பெருமானிடம் ஜநங்களை அபிரக்ஷணம் செய்யும்படி கேட்கின்றனள் மலர்மங்கை. ஏனெனில், அபராதிகளை யவள் புருஷகாரமாகாது எம்பெருமான் காப்பதில்லை. ஆர்த்ராபராதிகளையும் அபிரக்ஷணம் செய்யவேணும் என்று அவள் புருஷகாரமாக முயன்றால் அப்போது அவளுக்கு உனது ஸஹாயம் அவசியம் வேண்டியிருக்கிறது. இடப் பக்கத்தில் நீ யில்லாமலிருந்தால் அப் பக்கம் முகம் திருப்பி அவன் அவள்வார்த்தையை யலட்சியம் செய்யும்படியாகலாமே' என்று ஆண்டாளை வர்ணித்ததிலிருந்து ஆண்டாள் பூமிப்பிராட்டி யென்றதாயிற்று. இது, 'ஸாக்ஷாத் க்ஷமாம்' என்று கோதாஸ்துதியின் தொடக்கத்திலும் அருளிச்செய்யப்பெற்றது. இப்படி யிவள் பூமிப்பிராட்டியே யன்றி பெரியபிராட்டி யல்லளென்பது இத் தனியனிலே 'அணங்கின் இன் துணைவி' என வெளியிடப்பட்டதாம்.

இங்ஙனம் முதலடியில் இவளது ஐசுவரியம் சொல்லிற்று. அவதாரத்தின் சிறப்பு மேலே சொல்லப்படுகிறது. மல்லிநாடு. ஸ்ரீ வில்லிபுத்தூரைச்

சேர்ந்த நாடு. அந்நாடு முழுதும் விபவத்திலே இவள் மேன்மையைக் கண்டு தெய்வமாகக் கொண்டாடினது. புதுவைக்கோனாகை விளங்கின பெரியாழ்வாருக்குப் பெண்ணாகப் பிறந்து அந்நாட்டை முழுதுமே ஆண்டவள் இவள் எனச் சிறப்பித்தபடி. மடமயில். இவ்வளவு ஆட்சி பெற்றும் பெரியாழ்வாருக்குப் பவ்யப்பட்டு, ‘விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே’ என்றபடி அவரையே யாச்ரயித்திருந்தவள். மயிலென்று குடிக் கொடுத்தவளின் குழலின் மேன்மையை யுணர்த்தினபடி. மெல்லியலாள். ‘உலங்குண்ட விளங்கனிபோலுள் மெலியப் புகுந்தென்னை நலங்கொண்ட நாரணற்கென் நடலைநோய் செப்புமினே’ (8—6) என்றபடி மெலிந்த மனமுள்ளவள். ‘கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்’ என்றது போன்றவற்றையும் காண்க. கோபிகளைப் பின்பற்றி இவள் கோவிந்தனைக் கொண்டது தோற்றுவிக்க, ஆயர் இத்யாதி. வேந்தனைத்தாள் என்பதற்கு வேந்தனின் திருமேனியிலே பொருந்தினவள் எனப் பொருளுரைப்பதுண்டு. இது எல்லாப் பத்தர்களுக்கு முள்ளதாம். பெண்மணியான இவள் தனது ஆகத்தை, ‘மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்’ என்கிறபடி வேறொருவருக்காக்காமல் வேங்கடவற்கே யாக்கிக் கொண்டது சிறப்பானதாலே அதை நன்கு விளக்கும்படி உரை வரைக. வேயர் பயந்த விளக்கு. வேயர்குலத்திலே விளக்காய் நின்ற பெரியாழ்வாரைப் பணிந்து கற்று விளங்கினவர் பல்லாயிரக்கணக்காக இருந்தனர். ஆண்களும் பெண்களு மெல்லோரு மெம்பெருமானிடத்திலீடுபடும்படி அற்புதமாகத் தன் ஒழுக்கத்தாலும் அருளிச்செயலாலும் தெளிவித்த இவள் தீபத்தினின்று பிறந்த ப்ரதீபம் போலே மிகவும் சிறப்பு வாய்ந்தவளென்க.

எம்பெருமானுக்கே தன் திருமேனியைக் கொடுக்க வியன்றதற்கேற்ப அவனை மாலை யிட்டு மணந்து திருப்பவளத்தின் சுவையும் மணமும் அனுபவிக்க வல்லளானமையை யுரைத்து அவளையே யாச்ரயிக்கவேணுமென்றறிவிக்கும் மற்றொரு தனியனாவது :—

கோலச்சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தினள் தென்திருமல்லிநாடி செழுங்குழன்மேல்
மாலைத்தொடைத் தென்னரங்கருக்கீயும் மதிப்புடைய
சோலைக்கிளியவள்தூய நற்பாதந் துணை நமக்கே.

தென் திரு மல்லி நாடி } தெற்கிலுள்ள திருமல்லி நாட்டை யாண்டவளும்
மாயன் —கண்ணபிரானுடைய
செம் வாயின் —சிவந்த திருப்பவளத்தின்
குணம் —சுவையையும் நாற்றத்தையும்
கோலம் சுரி சங்கை } அழகும் புரியுமுள்ள (அவனது) பாஞ்சசன்னியத்தை
வினவும் சீலத்தினள் } கேட்கும் ஸ்வபாவமுள்ளவளும்,
செழும் —செழுமை பொருந்திய
குழல்மேல் —(தனது) கூந்தல் மேல்
மாலை தொடையை } ஒழுங்காயிருந்த பூ மாலையை
தென் அரங்கருக்கு } அழகிய ஸ்ரீரங்கநாதனுக்கு
ஈயும் —ஸமர்ப்பிப்பதற்கேற்ற

மதிப்பு	—மேன்மையை
உடைய	உடையளாய்
சோலை கிளி	ஆழ்வார் சோலையில் வளரும் கிளி போன்றவளுமான
அவள்	—கீழ்ச்சொன்ன கோதையின்
தூய	—பரிசுத்தமாய்
நல்	—ஆச்ரிதர்க்கு நன்மை யளிப்பதுமான
பாதம் ஏ	—திருவடியே
நமக்கு துணை	—நமக்குத் தஞ்சமாகும்.

கோலமித்யாதி, 'மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே' என்ற கருப்பூரத் திருமொழியைக் குறிக்கின்றது. வினவும் சீலத்தின ளென்றதாலே ஒரு தரத்திற்குப் பத்து தரமாகக் கேட்க நினைத்தது குறித்ததாம். செழு மித்யாதி. மாலை=ஒழுங்காயிருப்பது; தொடை=மாலை. கலையாமல் மாலையாகவே யிருந்த மாலை யென்னவுமாம். ஸ்ரீ வில்லிபுத்தூரில் வட பெருங் கோயிலுடையானுக்குப் பெரியாழ்வார் நிச்சலும் மாலை ஸமர்ப்பித்துவந்தபோது இவள் சூடிக் கொடுத்ததாக ப்ரஸித்தி யிருக்க, 'தென் அரங்கருக்கு ஈயும் மதிப்பு' என்று அரங்கனுக்குக் கொடுத்ததாகக் கூறினது கூடுமோ வென்னவேண்டா. அரங்கனும் வட பத்ரசாயியும் ஒரே பரமாத்மா வாகையாலும், திருவரங்கம் பெரிய கோயிலாய் மற்றவை யெல்லாம் அதன் அம்சங்களானதாலும், 'அரங்கன் பெரிய கோயிலுடையான், இவனும் பெருங் கோயிலுடையான். வடதளம் (ஆலிலை) கூட இருப்பதொன்றே விசேஷம். ஆகையால் அப்பள்ளிகொண்ட மூர்த்தியே யிவன்' என்ற கருத்தினாலும் கூடும். இனி ஆண்டாளுடன் பெரியாழ்வார் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளியிருந்த காலத்திலே அரங்கருக்கு மிவள் சூடிக் கொடுத்தாளென்னலாம். அன்றி, பெரியாழ்வாரின் ப்ரார்த்தனைக்கிணங்கி ரங்கமன்னார் ஸ்ரீ வில்லிபுத்தூர் எழுந்தருளி ஆண்டாளை மணந்தபோது அவள் மாலையைச் சூட்டி யளித்ததுமாம். இதைத் தோன்றுவிக்கத் தென்னரங்கருக்கென்றது. அரங்கத்திலெழுந்தருளி யிருப்பவன் தெற்குதிக்குச் சென்று ஸ்ரீ வில்லிபுத்தூரைச் சேர்ந்தபோது தென்னரங்கனானான். மதிப்புடை. சேஷர்கள் உபயோகித்துக்கொண்டதை சேஷிகள் கொள்வது கிடையாது. பதிபத்நீபாவமிருந்தபோது சேஷபூதையான பத்னி உபயோகித்ததையும் பதி தனக்காக வேற்பது காதல் மிகுந்த தசையிலே கண்டதுண்டாகையாலே அது வேதலோகஸம்மதமாகும். சோலைக்கிளி. சோலையில் தானே மாலைக்குப் பூக்கள் கிடைக்கும். கிளிதானே கொவ்வையின் சுவையும் நாற்றமு முணரவியலும். அதைக் கேட்ட கிளிமொழியா ளிவள். தூய. நாராயணன் நம்பி செம்மை யுடைய திருக்கையால் பற்றும்படி யிருந்தமையாலே பரிசுத்தமானது.

மார்கழி நீராட்ட மென்ற நோன்பை நோற்கப் புறப்பட்டு ஆயச்சிறுமிகள் கண்ணனைக் கிட்டி யடி பணிந்து, 'எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முந்தன்னோடுற்றோமே யாவோ முனக்கே நாமாட் செய்வோம்' என்று விண்ணப்பித்ததைக் கூறும் வகையிலே தான் மார்கழிமாதத்திலே கண்ணனிடம் இவ்வாறு விண்ணப்பித்துக் கொண்டதைத் திருப்பாவையிலே தெரிவித்தருளினாள். இதனை இங்கும் (6—8) 'இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றுவான் நன்மை

யுடையவன் நாராயணன் நம்பி' என வருளிச்செய்வள். இப்படி எம்பெருமானுக்கு ஆட்செய்வதென்பது உலகினில் ஆண்களுக்கும் பெண்களுக்கும், அவரிலும் கன்னிகளுக்கும், பெண்தன்மைக் கேற்பப் புருஷரை மணந்துள்ள பெண்டிர்க்கும், எல்லோருக்கும் பொதுவாயிருப்ப தொன்றாகையாலே இவ்வளவிலிருந்தே ஆண்டாளுக்குக் கண்ணனே கணவனாகவேண்டு மென்ற மனவுறுதி இருப்பது வெளிப்படாது. 'மற்ற நம் காமங்கள் மாற்று' என்பதால் கண்ணனே கணவனாக வேண்டுமென வுறுதி கூறினதாகாது. யார் கணவனாயிருந்தாலும், கணவனைப் பெறாம லிருந்தாலும் எப்போதும் மற்ற காம மொன்றிலும் இழியாண்மையை மட்டும் மொழிந்ததாம். ஸ்ரீ பாகவதாதிகளிற் சொன்னபடி அவனைக் கணவனாகக் கோபிகள் வரித்து நோன்பு செய்தது திருப்பாவையிலருளப் பெறவில்லையே. ஆகவே கீழ்ச் செய்த ப்ரபத்திமாத்திரத்தினாலே இப் பலன் சித்திக்க வழியில்லை யாகையாலே இதனை வேறு வகையிலே பெற முயன்றாளென்னவேண்டும். இல்லை யேல், ப்ரபத்தியும் பலியாதொழியவே பிற கர்மத்தை யநுஷ்டித்தாளென்றதாகும். இவ்வளவு முயன்று ஆண்டாள் செய்தவை யெல்லாம் இங்கு நாய்ச்சியார் திருமொழியிலே தெளிவாகின்றன.

மார்கழிமாதம் கழிந்து தை பிறந்தபோதே காமதேவபூஜையைச் செய்ய விழிந்த இவள் மறுபடி மாரிகாலம் கழியும் வரையில் கண்ணன் விஷயமாகப் பட்ட பாடுகளும் இடையிலே சொப்பனத்தில் அவனை மணந்ததும், கடைசியாக அவனை பிருந்தாவனத்திலே கண்டு கொண்டதும் இங்கு நன்கு காணக்கிடக்கும். அடைவாக அருளப்படும் விஷயங்களாவன—(1) காமதேவனைப் பணிதல், (2) சிற்றில் சிதையேலெனவும் (3) துகிலைத் தரவேண்டு மென்றும் ஆய்ச்சிகள் வேண்டினது. (4) கூடலிழைத்தல், (5) குயிலை வேண்டுதல் (6) கனவு கண்டதைக் கூறுதல் (7) சங்கைக் கேட்பது (8) மேகங்களைத் தூது விடுதல் (9) மாரி காலத்தில் தோன்றினவற்றினிடம் அழகனை நினைத்துத் தான் படுவதைப் பகர்வது (10) பூக்கொடி முதலானவற்றோடு பேசிக் கடைசியாகத் தேறுவது (11) தாய்மார்களிடம் தன் தசையைத் தெரிவித்தல் (12) கண்ணபிரானிடம் தன்னைக் கொண்டுவிட வேண்டுதல் (13) கண்ணனது வஸ்துக்களைக் கொணர்ந்தாவது வாட்டம் தணிக்க வேண்டுதல் (14) கண்ணனைக் கண்டு களித்தல் என்பனவாம்.

இவள் மன்மதபூஜை செய்தது முதற்றிருமொழியிலே மொழியப்பெற்றது. இப் பூஜைதானும் தை முதல் பங்குனி வரையில் மூன்று மாதம் தொடர்ந்து நடந்ததென, 'தையொரு திங்களும் தரை விளக்கித் தண் மண்டலமிட்டு மாசி முன்னாள் (1—1), 'வைகல் தெருவிடை யெதிர்கொண்டு பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன் காமதேவா' (1—6) என்ற பாசுரங்களினின்று தெரியலாம். இப் பூஜை செய்த வகையாவது தரை விளக்கித் தண் மண்டலமிடுதல், மணற்கொண்டு சிற்றிலிழைத்துத் தெருவணிதல், வெள்வரைப்பதன் முன்னம் துறைபடிதல், சுள்ளி யெரிமடுத்தல், மத்தமலர் முருக்கமலர் கொண்டு முப்போதும் வணங்குதல், சுவரிற் பேரெழுதி மீன்கள், குதிரைகள், கவரிப்பிணாக்கள் போன்றனவற்றை ஸமர்ப்பித்தல், நெல், கரும்பு, வெல்லக்

கட்டி, அரிசி முதலானவற்றை நைவேத்யமாக ஸமர்ப்பித்தல், எல்லாம் முப்போதும் வல்லார்களைக்கொண்டு நடத்துவது என்றபடியாம்.

பரமைகாந்திகுலத்திற் பிறந்த ஆண்டாள் காமதேவார்ச்சனை செய்தது கூடுமோ என விங்கே எழும் கேள்விக்குச் சிலர் சொல்லும் மறுமொழி யாவது— அயோத்தியிலுள்ளார், 'ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே' என இராமனுடைய மேன்மைக்காக எல்லாத் தேவதைகளையும் தொழுதார் களே. ஹநுமார், 'நமோஸ்து வாசஸ்பதயே ஸவஜ்ரிணே' என்றபடி பிரஹஸ் பதி, இந்திரன் முதலானோரை வணங்கினரே. அவ்வண்ணம் இவளும் செய்வது. பிரிவாற்றாமையாலே வந்த கலக்கத்தினாலே க்ருத்யாக்ருத்யவிவேகமின்றி இங் ஙனம் செய்தாளென்க. இதுதானும் எம்பெருமானுடைய ஸமிருத்திக்காகச் செய்யப்படுவதால் தேவதாந்தரபஜனம் என்கிற தோஷமில்லை என்றவாறு. மற் றும் சிலர், 'ப்ராப்யத்தைக் கடுகப் பெறவேணுமென்கிற விரைவாலே செய்த தாமிதெனவும் ஸித்தோபாயமான எம்பெருமானாலே பலன் ஸித்தமாயிருக்க இவள் உபாயமாகச் செய்வதொன்றில்லை; இது கைங்கர்யத்தோடொத்து உபேயத்திலே சேருமென்றும் ஒன்றோடொன்று முரண்படும்படி சொற்களைச் சொல்லா நிற்பர். மோக்ஷம் போன்ற பலனுக்காகத் தேவதாந்தரபஜனம் செய்யலாமாகில், இவள் விவேகமின்றி அனுஷ்டித்ததாக ஏன் கொள்ள வேண்டும்? எம்பெருமான் தன்னை மணந்து கொள்ளவேண்டு மென்று கடுகப் பெறக் கோலிச் செய்த செயலை உபாயமாகச் செய்யவில்லை யென்று எங்ஙனம் கொள்வது?

இங்குச் சுருக்கமாகப் பின் வருமாறு வரைகின்றனம்— ராமபக்தர் களென்றதைக் கொண்டு ராமாயணத்திற் சொன்ன எல்லோரையும் பரமை காந்திகளென்ன வொண்ணாது. பரமைகாந்திகளல்லாதார்க்கும் எம்பெருமான் உள்ள பக்திக்கு உவந்து உயர்ந்த பலன்களைக் கொடுப்பதற்கு உதாரணங்களை இதிஹாஸ புராணங்களி லெங்கும் காணலாம். தேவதாந்தரங்களை நமஸ்கரித் தார்களென்பது வியக்தமாய்த் தேறினபோது அவர்களைப் பரமைகாந்திகளாகக் காட்டி ஆண்டாளையும் அக்கோவையிலே சேர்ப்பது எதற்கு? 'நாந்யம் தேவம் நமஸ்குர்யாத் விஷ்ணுபாதாப்ஜஸம்ச்ரய:' என்று வேறு தேவதையை வணங் கக் கூடாதென்றிருக்க, பகவானுடைய ஸமிருத்திக்காக வணங்குவதில் குற்ற மில்லை யென நாம் புதிதாகச் சொன்னால், இதுதானே குதர்க்கத்தால் செய்யும் கற்பனையாகும். எம்பெருமானுக்குக் கோயில் கட்டுவது முதலான கைங்கர்யங் கள் செவ்வனே செய்யப்பட வேண்டு மென்று சிவாலயம் முதலிய விடங்களிற் புகுந்து சேவை செய்வதில் குற்றமில்லை யென்றும் ப்ராமாணிகர் பகர்வரோ? ராமனவதரித்திருந்தபோது மனுஷ்யபாவனையி லிருந்தபடியாலே அவருக்கு மேன்மைக்குறைவாகப் பல நேருவதைக் கணிசித்து அவர்கள் தேவதாந்தரங் களைப் பணிந்தார்களென்னலா மாகிலும், ஆண்டாள் மனைவியாகாததால் எந்த அவதாரத்திலுள்ள எம்பெருமானுக்கு என்ன குறை வந்ததாக இவள் நினைத் துப் பயந்து தேவதாந்தர பஜனம் பண்ணுவதாகும்? தன் பலனுக்காகப்

பண்ணுளென்றால், அது யுக்த மாகுமோ? பரமைகாந்தியாயிருப்பார் பகவத் பாகவத ஸம்ருத்தி, ஜ்ஞானம், பக்தி முதலான சில பலன்கள் தவிர மற்றப் பலன்களை வேண்டார். அவைகளையும் எம்பெருமானிடமோ, ஆப்தரான நித்ய ஸூரிகள் போன்றாரிடமோ கேட்கலாமே யல்லது அநாப்தர்களான தேவதாந்தரங்களிடத்தில் கேட்கலாகாதெனவும் பாஞ்சராத்ரம் முதலான ப்ரமாணங்களிலுள்ளதைப் பலவிடங்களிலே ஸ்ரீ தேசிகன் எடுத்துரைத்துள்ளார்.

சாஸ்திரம் இருப்பது உண்மை. வ்யாமோஹம் வளர்ந்தபோது சாஸ்திர பராமர்சத்திற்கு இடமேற்படுவதில்லை. அந்த வியாமோஹம் உலக விஷயத்திலே யாகில் கூடாததாம். உயர்ந்த புருஷார்த்தமான எம்பெருமான்விஷயத்திலே யாகில் கொண்டாடத்தக்கது. அத்தகைய வியாமோஹத்தினாலே சாஸ்திரவரம்பை மீறிச் சில கார்யங்கள் செய்யப்பட்டாலும் எம்பெருமான் அக்ருத்யம் செய்தாரென நினைத்து வெறுக்காமல் அதற்குக் காரணமாய் நின்ற தன் விஷயமான வியாமோஹத்தைக் கண்டு களிப்பன் என்னில்-, இதனால் என்ன சொன்னதாகிறது? அதர்மமானாலும் எம்பெருமான் பொறுப்பானென்றும், உண்மையில் இது செய்யக்கூடிய தர்ம மன்றென்றும், இவ்வளவு வியாமோஹமுள்ளவரே விரைவில் எம்பெருமான்விஷயமான தமது பலன் பெற விவேகத்துடன் வேறு விரகே செய்திருந்தால் அது மிகவும் உகக்கத்தக்கதே யென்றும் சொன்னபடி யன்றோ? ஆக வியாமோஹத்தை மட்டும் கண்டு கொண்டாட வேண்டுமே யல்லது வழி யில்லா வழியில் வந்த செயலை நல்லதாக நினைக்க வேண்டா என்றதாயிற்று. பட்டமஹிஷியாயிருப்பாள் மடிப்பிச்சை யெடுத்து மஹாராஜனின் பொக்கசத்திற்குப் பணம் திரட்டினால் அதை அவன் வெறுக்குமா போலே எம்பெருமானும் இதற்கு வெறுக்குமெனவும் கூறவேண்டியிருக்கிறது. ஆகையால் எக்காரணத்தாலும் இறைப் பொழுதும் மற்றொருவருக்கு ஆட் செய்வதை மாயன் ஸஹியான்.

மேலும் மார்கழி நீராட்டமென ஆயச்சிறுமிகள் செய்தது தேவதாந்தரத்தின் அர்ச்சனையாகில் அது தகாதென முடிவுசெய்து அந்த நீராட்ட முறையைத் தக்கபடியிலே யமைத்து 'நாராயணனே நமக்கே பறை தருவான்', 'எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்தன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று' என்று முதல்நாள் உபதேசித்த ஆண்டாள் மறுநாளே தன் நிலைமையை மறந்தொழிந்து முன் சொன்னதற்கு முரணாகத் தானுமனுஷ்டித்துத் தன் அனுஷ்டானத்தின் சிறப்பை நாட்டிற்கும் பாசுரமிட்டு வெளியிடுகின்றனளென்பது மனமார்ந்த மொழிவதிற் சேராது. ஆகவே ஸ்ரீதேசிகன், "நாய்ச்சியார் கிருஷ்ணனைப் பெறுகைக்காகப் பண்ணின காமதேவார்ச்சநம் ச்ருங்காரஸமாத்ய நுகுண க்ருஷ்ணரூபாந்தர விஷயம்" என, தேவதாந்தரார்ச்சனையா யிராதபடி நிர்வஹிக்கக்கூடுமென்பதைக் கருதி, அருளிச்செய்தார்—இதன் கருத்தாவது—

ஆழ்வார்களும் மற்ற பக்தர்களும் எம்பெருமானைப் பெற நினைத்த வண்ண மன்று ஆண்டாள் நினைத்தது. இவள் அவனைக் கொழுநனாக வரித்

தாள். மணந்து பெற விரும்பினுள். பெண்ணுய்ப் பிறந்தவள், காலத்தில் ஒருவனை மணந்திருக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் விதிக்கின்றன. புருஷனுக்கு உபநயனம் போல் பெண்ணுக்கு விவாஹம் முக்கியமானது. ஆர்த்த ப்ரபந்நராய் அடுத்த க்ஷணமே மோக்ஷம் போக விசையாமல் இவ்வுடல் உள்ளவரை உலகில் வாழ விரும்பினவர் அந்தந்தக்கால குணத்திற்குத் தகுந்த ஆச்ரமங்களைக் கைப்பற்றுவதும் அவசியமாகும். ஆகவே ப்ரபந்நராயிருந்தாலும் புருஷர்கள் கூட விவாஹத்திற்குப் பொருந்தின பிராயத்திலே விவாஹம் செய்து கொள்வது கேவலம் காம்யமாகாதென்றால், பெண்கள் விஷயத்தில் கேட்க வேண்டுமோ? ஸதாசார சீலரான பெரியாழ்வாரின் பெண்ணுகத் தோன்றினவள் விவாஹத்தை வெறுத்தால் உற்றார் சுற்றார் ஒப்புவரோ? சாஸ்திரத்தை மீறி அதிகாரம் பெறுமே நின்ற இவள் செய்யும் கைங்கர்யங்களை வடபெருங்கோயிலுடையானைப் போன்ற எம்பெருமான்தான் உவப்பனே? எனவே பத்து வயதிற்குள்ளே யுக்தகாலத்திலே தனக்கு எம்பெருமானோடு விவாஹம் நேராததற்கு வருந்தி புஷ்பவதியாவதற்கு முன்னுவது பரமபுருஷனைப் பெற வேண்டுமென்று விரைந்தாள் ஆண்டாள். 'கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்தாவியை யாகுலஞ்செய்யும்' (5—7) இத்யாதிகளைக் கொண்டு மணம் புரிந்ததற்கு முன்னமே புஷ்பவதியானதாகக் கற்பிக்கக் காரணம் யாதுமில்லை. கொங்கை கிளர்வது பெரும்பாலும் புஷ்பவதியாவதற்கு முன்னே யுள்ளதேயாம். பதினைந்து பதினாறு வயது ஆகியும் பருவம் பெறாத பெண்கள் பலரைக் கண்டிருக்கிறோமே. இப்படி விரைந்த இவள், காலம் கடந்தால் நேரும் குற்றம் அண்டாதபடிக்கு என் செய்வதென ஆராய்ந்தாள். இவ்வளவு நாள் இவள் பிடிவாதமாயிருந்து யாரையும் மணந்து கொள்ளாததைப் பலர் குறை கூறினதுமுண்டெனலாம்.

'நாடுமூருமறியவே போய் நல்ல துழாயலங்கல்
சூடி நாரணன் போமிடமெல்லாம் சோதித்துழிதருகின்றாள்.
கேடு வேண்டுகின்றார் பலருளர் கேசவனோடிவளைப்
பாடுகாவலிடுமென்றென்று பார் தடுமாறுகின்றதே.'
(பெரியா. 3—7—5)

என்ற பாசுரத்தில் நமது உரையைக் காண்க. ஆகவே பிறர்க்கிணங்கி யாரேனுமொரு மனிதனோடு சேர்க்கை பெறுமே அங்ஙனம் எம்பெருமானைப் பெறுகைக்கும், பருவம் கடந்து குற்றம் நேராமைக்குமாக வ்ரதமொன்றநுஷ்டிப்பதென முடிவுக்கு வந்தனள். பருவம் நெருங்கிவிடு மென்று பயப்பட்டவர் செய்ய வேண்டியதாக அநங்கவ்ரதமொன்றிருப்பது தெரியலாயிற்று. ஆகையாலே இது புத்திரன் பிறந்தால் செய்யும் ஜாதேஷ்டி என்ற வைச்வாநரயாகம் போல் நைமித்திகமாயும், வேண்டும் பலனைத் தருவதுமாயிற்று. "ப்ரத்யவாயபரிஹாரே பலாந்தரஸமந்விதே, தத்ர ஸம்வளிதம் பராஹூரதிகாரம் விசக்ஷணா:" என்றபடி இதுதோஷத்தை விலக்கி, அது விலகக் காரணமாக வரனைப்பெறுவதற்கு விர காயிருந்தது. தோஷத்தை விலக்கும் கார்யமானது அவசியம் செய்யவேண்டிய நைமித்திககர்மாவானதால் அதனைச் செவ்வனே செய்யத் தான் சக்திவாய்ந்தவ

ருமாகையால் ஆண்டாள் அநங்கவ்ரதத்தை யநுஷ்டித்தனள். பாரமைகாந்தியா யிருப்பார் நித்யநைமித்திகங்களுக்குப் புறம்பான காம்யகர்மங்களைச் செய்வது கூடாதாகிலும் நைமித்திகமான இது செய்யப்படவேண்டியதானதால் அதையும் தனக்குள்ள தத்துவஜ்ஞான நிலைக்கு விரோதம் வாராதபடி, தேவதாந்தரார்ச்சனை யிலே முடிக்காமல் எம்பெருமானுடைய அர்ச்சனையாகச் செய்தனள். அதிலே வழிகள் இரண்டு உள. ஒன்று-தேவதாந்தரத்தை யடியோடு விட்டுவிட்டு 'ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமினி:' என்ற விதமாக அநங்கன், காமன், மந்மதன் என்ற சொற்களுக்கு எம்பெருமானையே நேர்ப்பொருளாகக்கொண்டு செய்வது; மற்றொன்று-தேவதாந்தரத்தை யதன் பொருளாகக் கொண்டு அதிலே நிற்காமல் அதற்கு அந்தர்யாமியான எம்பெருமானையே அச் சொல்லின் உண்மைப் பொருளாகத் தெளிந்து அவ்வெம்பெருமானின் அர்ச்சனையாகச் செய்வது. அவ் விரு வழிகளிலும் பாரமைகாந்தியத்திற்குக் குறையில்லை. இங்கு முதல்வழி கூடு மாகில் கொள்க. கூடாதாகில் இரண்டாம் வழி யாகுக. இப்படி பகவானை யாராதிப்பதென்றபோது அந்த பகவத்ரூபமானது இப்போது கோலப்படும் பலனுக்குத் தக்கவாறு அமைய வேண்டியிருப்பதால், 'ச்ருங்காரஸமாத்யநு குண' என்று ஸ்ரீதேசிகனருளிச்செய்தார். கண்ணனைக் கணவனாகக் கொள்ள நோன்பு நோற்ற ஆயச்சிறுமிகள் அவனுக்கே நோன்பு நடத்தினதாக மார்க சீர்ஷமாகாத்ம்யக்ரந்தத்திலே யிருப்பதைத் திருப்பாவையி னுரையிலே குறித் தோம். அவ்வகையில் ஆண்டாளும் க்ருஷ்ணரூபத்தை யர்ச்சனை யிப்போது செய்திருக்கலாமாகையாலே, 'ச்ருங்காரஸமாத்யநுகுண க்ருஷ்ணரூபாந்தர விஷ யம்' என அருளினது நன்கு பொருந்தும். ஸந்தானகோபாலன் என்றாற் போலே மதனகோபாலன் என்ற க்ருஷ்ணரூபமும் ப்ரஸித்தமன்றோ.

இதற்கு மற்றொருபடியும் கருத்தாகலாம். அதாவது—பெரியவாச் சான்பிள்ளை முதலில் தேவதாந்தரநமஸ்காரத்தை ரமாயணநிகளைக் கொண்டு இசைந்து மேலே, 'உன்னையும் உம்பியையும் தொழுதேன்' என்ற இடத்தில், 'உம்பியாவான் காமன்தம்பி சாமன்' என்றார். அதனைப் பின்பற்றி, சாம னவான் ஸாம்பனெனபடியாலே அவனுக்கு அண்ணனாய் மந்மதாம்சனாக ப்ர ஸித்தனான ப்ருத்யும்நன் இங்குக் காமதேவனென இசைந்தார்கள். பகவான் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்த ரூபங்களான வ்யூஹங்களா யவதரித்திருப்பவன். இவ் வவதாரத்திலும் பலராமனுக்கு ஸங்கர்ஷணன் என்றும் தனக்கு வாஸுதேவனென்றும் தன் குமாரனுக்கு ப்ரத்யும்நனென்றும் தன் பேரனுக்கு அநிருத்தனென்றும் பெயர் வைத்துக்கொண்டதிலிருந்து இந் நாலு மூர்த்திகளும் நாலு வ்யூஹ மூர்த்திகளின் அம்சங்களென விளக்கின னென்னல் யுக்தமானது. எனவே மந்மதாம்சனான ப்ரத்யும்நனுக்குள்ளே தான் ஆவேசித்திருப்பது தோற்றுவதால், 'ச்ருங்கார ஸமாத்யனுகுண க்ருஷ்ணரூப' மென்பதாலே ப்ரத்யும்நரூபத்திலுள்ள பகவத் ரூபத்தைக் கொள் ளலாம். 'காமதேவ: காமபால: காமீ' என ஸஹஸ்ரநாமத்திலே காமதேவபதமும் பகவானின் நாமமாகக் கூறப்பட்டுள்ளது காண்க. 'காம=' என்ற நாமத்

திற்கு ப்ராஷ்யமியற்றும்போது, இவனுடைய குணத்தின் ஒரு திவலையைப் பெற்றே மதனனும் மூலகினை மயக்குவதெனப் பட்டரு மருளிச்செய்தார். ஆகக் காமதேவா எனப் பகவானையே விளித்ததாம். அனங்கதேவா என்றதும் அனங்கனுக்கும் தேவனானவனே எனவும் பொருள் பெறும். மன்மதனே என்றதும் ஸாக்ஷாந் மன்மத மன்மதனான கண்ணனைக் குறிக்கக்கூடியது. இவ்வந்தர்யாமியையே தான் ஆராதிப்பதை, மேலே எம்பெருமான் என்று விளித்து விளக்கினளெனவு மாராய்க. உண்மையில் எம்பெருமான் என்பது அங்கே விளிச்சொல்லுமன்று. காமதேவார்ச்சனவிஷயம் இப்படியாகில் மடலெடுத்த விடங்களில் நிர்வாஹமெங்ஙனென்னில், அங்குப் பரமைகாந்திநிலைமைக்காகாதது என்னவோ? பர்த்தாவைப் பெறப் பார்யை ப்ரயத்னமே செய்யக்கூடாதென்று யாரும் சொல்லவில்லையே. ‘ப்ரணயாச்சாபிமாநாச்ச பரிசிரேஷ்ப ராகவம்’ என்ற ஸீதையின் நிலைமையையும் நோக்குக.

பகவானை யாச்ரயித்தவர்கள் பலவகை யாயிருப்பர். ஐச்வர்யம் அல்லது கைவல்யத்தைக் கேட்பவர் சிலர். மோக்ஷத்தை யபேக்ஷிப்பவர் சிலர். மது வித்யை போன்ற சில பக்தியோகங்களில் இழிந்து மோக்ஷத்தோடு வேறு சில பலன்களைச் சேர்த்து வேண்டுகின்றவரும் சிலர் உளர். மோக்ஷ மொன்றையே விரும்பி பக்தியோகம் செய்பவரும் அந்த உபாயம் பூர்த்தியாகப் பல இடையூறுகள் நேரிடும்போது, மழை முதலிய சில பலன்களை அப் பக்தியோகத்திற்காகவே விரும்புகின்றவராவர். அப் பலன்களை விரைவிற் பெறவேண்டுமென்று வேறு தேவதைகளை யாராதிப்பாரும் சிலர் இருக்கலாம். பர-அவர-தத்துவ விவேகமுள்ளவரானபடியாலே அப் பலன்களுக்காக தேவதாந்தரங்களைச் சொல்லும் மந்த்ரங்களைச் சொல்லி யாகஹோமங்களைச் செய்யும்போதும் அந்தந்த தேவதைக்கு அந்தர்யாமியான எம்பெருமானையே அச் சொற்களின் பொருளாகக்கொண்டு அப் பலன்களுக்காக எம்பெருமானையே ஆராதிப்பர் பிறர். எம்பெருமானும் நன்கு ஆராதிக்கப்பட்டு உவந்து தனக்கு உடலாய் நின்ற அந்தந்த தேவதையின் மூலமாகவோ, அதற்கு ஸௌகர்யமிராதபோது நேராகவோ அப் பலன்களை யளித்து வருவான். தேவதாந்தரத்தை யிடையிடாமல் நேராக அவனையே பற்றினார்க்கும் அவன் பலனளிப்பது தெளிவானதே. ஆக ஆண்டாள் காமனுக்கு அந்தர்யாமியான கண்ணனது ரூபத்தை யாராதித்தாள் என்றோ, மதனகோபால மூர்த்தியையே ஆராதித்தாளென்றோ இங்கு இசைந்ததாகிறது. காமதேவதைக்குப்போலே, அவனுக்கு எல்லா ஐச்வர்யத்தையு மளிக்கும் மதனகோபாலமூர்த்திக்கும் கரும்பு வில்லாவதும், புஷ்பங்கள் பாணங்களாவதும், மீன் த்வஜமாவதும் மற்றுமுள்ள அம்சங்களும் இருப்பதாலே எல்லாம் பொருந்தும். மன்மதனுக்கு அந்தர்யாமி யென்ற நிலையில் ஆராதிப்பதாகில் ஐயத்திற்கிடமில்லை. இப்படி யிவள் ஆராதித்துப் பெற விரும்பின பலனும் க்ஷுத்ரபலனாகமாட்டாது. பரமபதத்தில் பெறப்படும் புருஷார்த்தம் போலே இங்கும் தனது உடல்கருவிகளை உத்தமபுருஷனான அவன் உகப்பிற்கே யாம்படி செய்வது தானே இவள் கோலினது. இப்பரிபூர்ண கைங்கர்யத்திற்கு மேற்பட புருஷார்த்த மேது எனவு மாராய்க.

இவ்வர்ச்சனையில் செய்யவேண்டுவன பல வுள. அவற்றை யெல்லாம் முழுநாளிலும் செய்துவிட்டுக் கடைசியில் அவற்றை அடைவாகச் சிறிதுசிறிதாகச் சொல்லி அவனை இறைஞ்சிக் கேட்ட முறையைப் பாசுரங்களிட்டு விளக்குகின்றனள்.

தையொரு திங்கள்.

(காமதேவார்ச்சனம்.)

முதன்முதல் இடங்களை விளக்கி அலங்கரித்தது அருளப்படுகிறது.

1. தையொரு திங்களுந் தரைவிளக்கித்
   தண்மண்டலமிட்டு மாசிமுன்னாள்
ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து
   அழகினுக் கலங்கரித் தனங்கதேவா!
உய்யவு மாங்கொலோ வென்றுசொல்லி
   உன்னையு மும்பியை யுந்தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
   வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே.

அனங்க தேவா	காமதேவனே !
தை ஒரு திங்கள் உம்	தையென்கிற மாதம் முழுதும்
தரை	—(உனது) இடத்தை
விளக்கி	சுத்திசெய்து விளங்கச் செய்து, (வீற்றிருப்பதற்காக)
தண்	—குளிர்ச்சியுள்ள
மண்டலம்	—மண்டலாகாரத்தை (மேடைபோன்றதை)
இட்டு	—செய்து
மாசி முன் நாள்	மாசிமாதத்தின் முற்பகுதியில்
ஐய நுண்	—அழகியதும் சிறிதுமான
மணல் கொண்டு	(மணலை நானே கொண்டு வந்து)
தெரு	—நீவரும் வழியை
அணிந்து	—அலங்காரம் செய்து

அழகினுக்கு	—அழகுக்காக
அலங்கரித்து	—மற்ற வலங்காரங்களையும் செய்து
உய்ய உம்	—உஜ்ஜீவிக்கவும்
ஆம் கொல் ஓ	—வாய்க்குமோ
என்று சொல்லி	என்று கேட்டுக்கொண்டு
உன்னை உம் உம்பியை உம்	உன்னையும் உனது தம்பியையும்
தொழுதேன்	—வணங்கினேன்.
வெய்யது	—கொடியதும்
ஓர்	—ஒப்பற்றதும்
தழல்	—ஜ்வாலைகளை
உமிழ்	—கக்குகின்றதுமான
சக்கரம்	—திருவாழியை
கை	—திருக்கையிலுடைய
வேங்கடவற்கு	—திருவேங்கடத்தானுக்கு
என்னை விதிக்கிற்றி	என்னை மனைவியாக நியமிக்க வல்லனாகிறாய்.

பூஜைக்கு முன்னே செய்யவேண்டுவன பூஜைஸ்தலத்தைச் சோதிப்பது முதலானவை. அவற்றை இங்கே சொல்லிற்றும். தையொருதிங்களும். உம்மையானது மார்கழி நோன்பு நோற்றாய்விட்டது; மற்றொரு நோன்பும் தொடங்குகின்றேனென வறிவிக்க; மாசி முன்னாளோடு தை மாதத்தையும் சேர்க்கவுமாம். ஒருதிங்கள் என்றது மாசியிற் போலே யன்றி திங்கள் முழுது மிங்கே கொள்வதைக் குறிக்கவாம். மண்டலமிட்டு என்பதற்கு, தைமாதத்தை மாசி முற்பகுதியோடு சேர்த்து ஒரு மண்டல நாளாக்கி எனவு முரை கொள்வர் போலும்.

ஐய நுண் மணல். தெருவில் மணலிடுவது வரும் காமதேவனுக்குக் காலில் புழுதி படியாமைக்காம். பெரு மணலாகில் காலில் உறுத்து மென்று

அதற்கு. நுண்மையையும் கொண்டது. அணிந்து என்றே அலங்காரத்தைச் சொன்ன பிறகு, அழகினுக் கலங்கரித்து என்றது எதற்கென வினவிற்கு, 'அலங்காரத்திற்கு வேறு பலனென்றையும் கோலவில்லை யென வறிவிக்க இது' என மறுமொழி கூறுவர். அப்போதும் அணிந்து அழகினுக்கென்றதே போதுமானது. மேலும் தெருவணிதல் நோன்புக்கு ஓர் அங்கம். கர்மாவில் அங்கங்கள் பல விருக்கும். அவற்றிற்குத் தனித்தனியே பலனை யபேக்ஷிக்க ந்யாயமில்லை. அங்கியின் பலனுக்கு எல்லாம் ஒரு வகையாக உபயோகப்படுவதை மறுக்கவும் முடியாது. ஆகையால் அணிந்து என்ற வரையில் மணற்களால் தெருவை யலங்கரித்தது சொல்லிற்று. அழகினுக்கு அலங்கரித்து என்றதால் வீதியாகத் தெரியும்படி இரு பக்கங்களில் கற்களும் செடிகளும் வைத்தும், தோரணங்கள் வாழைமரங்கள் முதலானவற்றைக் கொண்டும் செய்த அலங்காரம் கொள்ளற்பாலது. ஆக மணற்களால் தெருவணிதல் நடந்துவர அனுகூலமாவதற்கும் மற்ற அலங்காரம் அழகுக்கு மென்றதாம். இங்கு, 'வெள்ளை நுண் மணற் கொண்டு சிற்றில் விசித்திரப்பட வீதி யாய்' (2—5) என்றதை நோக்கும்போது இரு பக்கங்களிலும் சிற்றில்களைக் கட்டித் தெரு ஏற்படுத்துவதெனத் தெரிகிறது.

அனங்கதேவா. காமன் சிவனுக்குப் பார்வதியினிடம் காதலை வளர்க்க முயன்றபோது சிவனுடைய நெற்றிக்கண்நெருப்பினால் தன் உடலழிந்தான். உடலழிவதற்குக்கூட அஞ்சாமல் அண்டினவர்கட்கு உதவி செய்தவனென்று அவனது குணத்தைக் குறிப்பதற்காக அனங்க என்ற சொல்லைச் சொன்னது. அனங்கதேவா—அனங்கனாகிய தேவனே! அன்றி, அனங்கனுக்கும் தேவனே என்று அந்தர்யாமியைச் சொன்னதுமாம்.

உய்யவுமாங் கோலோ. இங்கே உம்மையினால் பாவம் பெருமைக்கு மெனக் குறித்ததாம். பருவம் பெறுவதற்கு முன் விவாஹம் நடக்காதபோது பாவம் நேரிடுமே யெனப் பயந்தன்றோ இவள் இவ்வநுஷ்டானத்திலிழிந்தது. யாரேனு மொருவரை மணந்தாலும் அது நீங்குமாகையால் உய்வதை ப்ரதானமாகச்சொல்லி அதை உம்மையினால் குறித்தது. கோல் என்று ஐயப்படுவதேன் எனில், '(மாரனென்ற) அழிக்கும் தேவதையைப் பற்றுகிறேன். அழிவு தான் நேர்ந்துவிடுமோ அல்லது உய்வேனோ' என ஸந்தேஹித்தாளென்பர். உண்மையில் இதன் கருத்தாவது—மானிடப் பேச்சுப் படில் வாழகில்லேனென நான் உய்யவும், பிறர் குறை கூறுவதும் பாவம் பெறுவது மிராமலிருக்கவும் விரும்பி இதை யநுஷ்டிக்கிறேன். இவ்வநுஷ்டானமே நேராகப் பலன் கொடுப்பதன்றே. இதனைக் கண்டுகந்து நீயல்லவோ பலனை யளிக்கவேண்டும். உனது அனுக்ரஹத்திற்குத் தடை யொன்று மில்லாமலிருக்கவேண்டுமே என்றவாறு. இதனால் ஸித்தோபாயத்தின் ப்ராதான்யத்தை விளக்கினபடி. என்று சொல்லி என்றதற்கு என்றவாசையால் எனப் பொருள் கொள்வர். கோல் என்று ஸந்தேஹத்தைக் குறித்ததால் ஆசையின் ஆகாரம் இவ்வாறு இருக்க முடியாது. சொல்லி என்பதற்கு விரும்பி, கருதி என்றாற் போன்றன பொருள்கள் நேர்ப் பொருளுமாகா. சொல்லிக்கொண்டு என்ற பொருளே இங்குக் கூடும்.

உன்னையு மும்பியையும். மன்மதனுக்குத் தம்பி யொருவனிருப்பதாக எங்கும் காணாமையைக் கொண்டு உன்னை யென்ற சொல்லாலே மன்மதாம்ச மான ப்ரத்யும்னனையும், உருக்குமிணியின் புதல்வனான அவனுக்குத் தம்பியான ஸாம்பனென்ற ஜாம்பவதியின் குமரனை உம்பியை யென்ற சொல்லாலும் கொள்வர். இதனால் ரதியின் அவதாரமான மாயாவதிக்கு உன்னிடமுள்ள காதலையும், உனது தம்பிக்கு ஸ்வயம்வரத்தில் அவனாலே பலாத்காரமாகக் கொள்ளப்பட்ட துரயோதனனது பெண்ணிடம் வளர்ந்த காதலையும் நினைத்து, நீங்கள், எத்தனை இடையூறுகள் நேர்ந்தாலும் எல்லாம் நீங்கி எனக்கும் கண்ணனுக்கும், ரதியைப் போல் நானும் முயற்சி செய்ய ஸாம்பனைப் போல் கண்ணனும் பலாத்கரிக்க அதனால், காதல் பலன் பெறும்படி செய்யவேண்டு மென்று குறித்தபடி. இத்தகைய பொருளைப் பெறுவிக்கவே 'உன்னையு மும்பியையும்' என இருவரைச் சேர்த்ததென்க.

இப்படித் தான் நோற்ற நோன்பில் ஓர் அம்சத்தைக் கூறி அதற்குத் தக்க பலனைக் கேட்கின்றனள் இங்கு நான்காமடியில். தண் மண்டல மிட்டுத் தொழு மிவளுக்கு வெம்மண்டல வடிவான திருவாழி நினைவுறவே அது விளங்க நிற்பவனும், அதற்கேற்ப வினைகளை யெல்லாம் தஹிக்கும் தன்மை பொருந்திய திருமலை யப்பனுமான எம்பெருமானை அனுபவிக்கத்தினியளாகி யருளினதாம் வெய்யதோர் இத்யாதி. வேங்கடவற்கு 'வேம்=பாபம், கட=தஹதி' என்று வேங்கட பதத்தின் பொருளை யுரைப்பர். ஆகப் பாவங்களை யெரிக்கும் மலை யென்றதாயிற்று. இச் சொல்லுக்கு வேறு பொருள்களு முள. ருத்ரனின் அக்னிக்கண்ணாலே அனங்கனான உனக்கு உஷ்ணமென்பது உறைக்காதபடி சிறந்த முறையிலே தண்மண்டலமிட்டுத் தொழுகிறேன். இக்குளிர்ச்சியானது வெம்மையாய் சுழலுமிழும் திருவாழி யேந்தி வினைகளைத் தஹிக்கும் வேங்கடத்தில் நின்ற (விளக்கையும்) பரம் ஜ்யோதிஸ்ஸையும் குளிரச்செய்யும். அதனால் 'வேங்காரோऽம்ருதபீஜம் து கடமைச்வர்ய முச்யதே' என்றபடி அம்ருதமும் ஐச்வரியமுமே வடிவெடுத்தாற் போலுள்ள மலையிலே அமுதுக்குமமுதாய் விளங்குமவன் வடிவத்தின் சேர்த்தி யேற்பட்டு நாம் எல்லோரும் களிக்கும்படியே யாமென்றபடி.

என்னை விதிக்கிற்றியே. கிற்றல்=கட்டுப்படுத்தல் அல்லது வல்லமை கொள்ளல். காமன் வேங்கடவனைக் கட்டுப்படுத்தக்கூடுமோ? தனக்கு விதேயராயிருப்பாரைத் தான் விதிக்கக்கூடும். எம்பெருமான் காமனுக்கு விதேயனாகான். ஒருக்கால் இமையோர் தலைவனும் எதேனும் யோநியிற் பிறந்து தனது பெருமையை மறைத்து உலகப்ராணியைப் போல் நடிக்கும் போது காமனுக்கும் விதேயனானவன் போல் நடிக்கலாம். தெய்வமான நிலையிலே இது கூடுமோவென்னில்—இதற்கு இஃதொரு பரிஹாரம்—எம்பெருமானை விதியென்றிவள் இரக்கவில்லையே. என்னை விதியென்றன்றோ இவள் கேட்கிறது. மேலும் காமாந்தர்யாமியை யிவள் கேட்கின்றனள். எம்பெருமானை யடக்கி விதிக்க அவனுக்கு மேல் யாருமில்லை. தன்னைத் தானே விதித்துக்

கொள்வதும் முடியாததாம். ஆயினும் ஆராத்யனை காமாந்தர்யாமியான எம்பெருமான் தன்னிடம் சேரும்படி யவனை விதிக்க வென்ன தடை யென்ற வாறு. . இது, கிற்றி என்றதாலே குறிக்கப்பெறும். கில் என்ற வினைப்பகுதி யின்மேல் நிகழ்கால முன்னிலை யொருமை விகுதியாலான வினைமுற்று இது.

ஆண்டாளின் பாசுரங்களை யாராய்ந்தபோது அளவற்ற விசேஷார்த்தங்கள் தோன்றும். அவற்றை யெல்லாம் உரைக்குங்கால் உரை விரிந்து விடும். ஆகையால் கருத்துரையில் விரிவை விட்டு உண்மைப்பொருள்களை மட்டு முணர்த்துவதிலே எமக்கு இங்கு நோக்கானபடியாலே சுருங்கவே வரைவதாக வுணர்க. (க)

நாட்காலே நீராடி நெருப்பில் சுள்ளிகளைச் சேர்ப்பதென வோர் அம்சத்தைச் செய்ததாகக் கூறித் தகுந்த பலனைக் கேட்கின்றள் 2-ம் பாசுரத்தில்—

2\. வெள்ளைநுண் மணற்கொண்டு தெருவணிந்து
வெள்வரைப்பதன்முன்னம் துறைபடிந்து
முள்ளுமில் லாச்சுள்ளி யெரிமடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா!
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு
கடல்வண்ண னென்பதோர் பேரெழுதிப்
புள்ளினை வாய்பிளந் தானென்பதோர்
இலக்கினிற் புகவென்னை யெய்கிற்றியே.

காமதேவா —மன்மத தேவனே!
வெள்ளை நுண் —வெளுத்தவையும் சிறியனவுமான
மணல் கொண்டு —மணற்களாலே
தெரு —(நீ வரும்) வழியை
அணிந்து —அலங்கரித்து
வெள் வரைப்பதன் முன்னம் —கீழ்வானம் வெளுப்பதற்கு முன்னைகவே
துறை —ஸ்நான கட்டத்திலே
படிந்து —இறங்கி நீராடி
முள் உம் —முள் முதலியன
இல்லா —இல்லாத
சுள்ளி —சிறு மிலார்களை
எரி —நெருப்பில்
மடுத்து —சேர்த்து
முயன்று —மிக ப்ரயாஸப்பட்டு
உன்னை நோற்கின்றேன் —உனக்கு நோன்பு நடத்துகின்றேன்.
கள் —தேனை
அவிழ் —பெருக்குகின்ற
பூ கணை —புஷ்பபாணங்களை
தொடுத்துக் கொண்டு —வில்லில் இணைத்து
கடல் வண்ணன் என்பது —கடல் நிறமுள்ள கண்ணனென்கிற
ஓர் பேர் —ஒப்பற்ற திருநாமத்தை
எழுதி —குறித்துவிட்டு
புள்ளினை வாய் பிளந்தான் என்பது —பகாஸுரனை வாயிற் பிளந்தவனெனப்படும்
ஓர் இலக்கினில் —ஒரே லக்ஷ்யத்தில்
புக —புகும்படி
என்னை எய்கிற்றி —என்னை அடிக்க வல்லனாகிறாய்.

'வெள்ளை நுண் மணற் கொண்டு தெரு அணிந்து' என்று முன் கூறினதையே மறுபடியும் கூறினது, அதற்கு அடுத்தபடி செய்யப்படுவது நீராட்ட மென்றும், 'அழகினுக்கு அலங்கரித்து' என்று முன் சொன்ன அலங்காரங்கள் பிறரைக் கொண்டும் செய்விக்கப்பெறு மென்றும் தோற்றுவிக்கவாம். துறைபடிந்து. இதனால் குடைந்து நீராடுவது சொல்லிற்றும். ஸ்நா

நங்களுக்குள் அவகாஹந ஞானமே முக்கியமானதன்றோ? முள் உம். உண்மையானது சுள்ளிகளில் எத்தகைய துர்குணங்கள் தகாவென்று சாஸ்திரத்திற் சொல்லப்பட்டனவோ, அவை யொன்றுமிலலை யென வறிவிக்கவாம் முயன்று. விடியற் காலத்திலே எழுந்து ஒரு நாள் விடாதே இவ்வாறு செய்து திப்புகையினண்டையிலு மிருந்து வருவது போன்ற எல்லா ஆயாஸங்களையும் குறித்தபடி. கடல்வண்ணனித்யாதி. நீர்த்துறைகளிலிறங்கி நீராடு மென்னை நீர்வண்ணன் பேரெழுதித் தேன் பெருக்கும் பாணங்களால் அடிப்பதும், முள்ளில்லாச் சுள்ளி யெரியிடு மென்னை முள் போன்ற மூக்கினாற் குத்தி வயிற்றுத் தீயில் வைக்க நினைத்த கொக்கின் வாய் கீண்டவனிடம் அனுப்புவதும் பொருந்து மென்றபடி. எய்கிற்றி. எய்தல் சேர்தலாய் இதைப் பிறவினையாக்கி, சேர்ப்பிக்கவேணுமென்று பொருள் கொள்வது முண்டு. கடல்வண்ணனென்பது பொதுவாகிலும் கண்ணனையே குறிக்கும் என விளக்கப் புள்ளின் இத்யாதி.

• எழுதி. எழுதுவது பாணத்தில் அல்லது தன் மனத்தில் என்பர். என் உடலில் எழுதி யென்னவு மாம். (2)

புஷ்பங்களாலர்ச்சனை செய்ததைக் கூறிப் பலன் கேட்கிறாள் —

3. மத்தநன் னறுமலர் முருக்கமலர்
   கொண்டுமுப் போதுமுன் னடிவணங்கித்
தத்துவ மிலியென்று நெஞ்சேரிந்து
   வாசகத்தழித்துன்னை வைதிடாமே
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு
   கோவிந்த னென்பதோர் பேரெழுதி
வித்தகன் வேங்கட வாணனென்னும்
   விளக்கினிற் புகவென்னை விதிக்கிற்றியே.

நல் —நல்லவையும்
நறு —மண முள்ளவையுமான
மத்தம் மலர் முருக்கம் மலர் கொண்டு } ஊமத்தம் பூக்களாலும் முருக்கம் பூக்களாலும்
மு போதும் —மூன்று காலங்களிலும்
உன் அடி —உனது திருவடிகளை
வணங்கி —வணங்கின பிறகு (இப் பலன் கிட்டாத காரணத்தினாலே).
நெஞ்சு எரிந்து } மனம் கொதிப்புற
வாசகத்து —உக்திகளாலே
தத்துவம் இலி என்று } உண்மையில்லாதவன் என்று
உன்னை அழித்து வைதிடாமே } உன் பெருமையை யழித்து உன்னை நான் திட்டாம லிருக்கும்படி (நீ)
கொத்து —கொத்துக்கொத்தாக
அலர் —மலராநிற்கும்
பூ கணை —புஷ்பபாணங்களை
தொடுத்துக் கொண்டு } வில்லில் சேர்த்து
கோவிந்தன் என்பது ஓர் பேர் எழுதி
வித்தகன் —ஆச்சர்யனான
வேங்கடம் வாணன் } திருவேங்கடத்தில் (வாழ்நன்) வஸிக்கும் பிரான்
என்னும் —எனப்படும்
விளக்கினில் —பரஞ்ஜ்யோதிஸ்ஸில்
புக —புகும்படி
என்னை விதிக்கிற்றி.

நேரில் எம்பெருமானை ஆராதிப்பவர் துளஸி, தாமரை போன்ற புஷ்பங்களைக் கொள்வர். ச்ருங்காரஸமாதிக்குத்தக்க இந்த ரூபத்தில் இழிந்தார்க்கு ஊமத்தமலர்போன்றவை வேண்டுவன. மன்மதனுக்கு, தாமரை, அசோகம், மாம்பூ, மல்லிகை, கருநைதல் என ஐந்து பாணங்கள் ப்ரஸித்தமானவை.

அப்படிப்பட்டவன்தன்னை ஆராதிக்க இந்தப் புஷ்பங்கள் தாம் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டனபோலும். இவை காமத்திற்குக் காரணமான ரஜோகுணத்தை வளர்க்கின்றன. தமிழ் அகராதியிலே மன்மதன்கணைகள் ஐந்தைக் குறிக்குமிடத்து (தாமரையை) வநஜ மென்று சொல்லி அதற்கே உன்மத்தம் எனப் பெயரிட்டிருக்கிறது. அது உன்மாதாவஸ்தையை விளைவிப்பதைப் பற்றியாம்.

உன்னை வைதிடாமே. ஆண்டாள் நிந்திப்பது மன்மதனையா அல்லது எம்பெருமானையா என்னில், இருவரையு மென்னலாம். உலகில் பரமைகாந்தி எம்பெருமானையே யாராதித்தாலும் எம்பெருமானின் ஆக்ஞைக்குட்பட்டு நவக்ரஹங்கள் முதலான தேவதைகளே அவனுக்கு வேண்டுவனவற்றைச் செய்து வருகின்றன. பரமைகாந்தியாயல்லாதவனுக்கு மழை, வெப்பம் முதலியன கொடுக்கும் தேவதைகளே யன்றோ பரமைகாந்திக்கும் அவற்றைக் கொடுப்பது. ஆகவே ஆண்டாள் எம்பெருமானை யாராதித்தாலும் அவள் கண்ணனைப் பெறும்படி செய்துவைப்பவன், மற்ற ஸ்திரீகள் விஷயத்திலேபோலே அவ்வதிகாரம் பெற்ற மன்மதனே யாவான். ஆகையாலேயன்றோ இவள் பூங்கணை தொடுத்துக் கொண்டு இத்யாதிகளைக் கூறுவது. அவன் பூங்கணை தொடுத்துச் செய்ய வேண்டியதைச் செய்யாமலிருந்தால், இம் மன்மதன் உண்மைப்படி நடக்காதவன். அதனால் தனக்குப் பிறகு ஏதேனும் கெடுதி ஏற்பட்டாலொழிய இவன் தத்துவம் உணரமாட்டிலன். கோவர்த்தன பூஜையைக் கண்டு வெருண்டு தேவேந்திரன் பட்ட பாடு இவன் கண்டிலன் போலும். கோவிந்தன் என நினைத்த போது அதுவும் நினைக்கப்படுமே. தன்னை நேரில் ஆராதிக்கவில்லையே என நினைத்து இவன் செய்யவேண்டுவன செய்யாது நின்றானாகில், இவனைத் தத்துவமிலி என வைவது தகுமே யென்று நினைத்தனள் ஆண்டாள். வாசகத்தழித்து என்பதற்கு, அனங்க, காம, மன்மத என்ற பதங்கள் மன்மதனைச் சொல்வதாக நினைத்ததே பிசகு போலும். ப்ரகாரமாய்க்கூட அவனைப் பாவித்தல் இனி வேண்டாம். 'ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:' என்ற வழிதான் சரியாகும். கர்மாதீனமான அங்கமில்லாதவனாகையாலே அனங்கன் பகவானே; காமிக்கப்படுகிற அவனே காமன்; மனத்தைக் கடைகின்ற அவனே மன்மதன் எனக் கருத்தாம். எம்பெருமானையும் நிந்திக்கலாம்.—தன்னையே யிவள் அடைய வேண்டுமென்று இவள்சூடிக்கொடுத்த மாலைகளையே யணிந்துவருமிவன் இவளுக்கு அவதூறு நேரும் வரை வெறுமனே இருந்து இக் நோன்பு நோற்றும் வாளாவிருந்தால் வால்லப்யம் பெற்ற இவள் பொறுக்கமுடியுமோ? 'ப்ரணயாச்சாபிமோநாச்ச பரிசிக்ஷேப ராகவம்' என்றது காண்க. மன்மதன் உனக்கு அதீனனாய்ப் பூங்கணை யெறியக் கடவனாயிருக்க அவன் செய்யாமலிருப்பது நீ அவனை ஏவாமலிருப்பதால் தானே என்று இவனை யிவள் ஏசலாமே. தத்துவமிலி என்பதற்கு மன்மதனைக் குறித்து உனக்கு அந்தர்யாமித்வமில்லையா என் பதிலே இப்போது நோக்கு.

கோத்தலர் ஒரு பூவை நான் ஸமர்ப்பித்தால் மன்மதன் ஒரு கொத்துப் பூக்களைக் கொண்டு எனக்கு உதவவேண்டு மென்றபடி. இப்படி மன்மதாந்தர்யாமியை வணங்கி மன்மதனை நியமிக்கிறாளெனவும் கொள்க.

கோவிந்தன். வேங்கடவாணனுக்கருகில் கோவிந்தன் காட்சி யளிப்பது மட்டு மின்றி, வேங்கடவாணனை எல்லோரும், கோவிந்தா, கோவிந்தா என்றழைத்துச் சென்றே ஸேவிப்பதும் ப்ரஸித்தம். அவன் கண்ணனுகையாலே கோவிந்தனுமாகிறான். இந்திரன் கோவிந்தபட்டாபிஷேகம் செய்து கண்ணனுக்கு அடங்கினமை தோற்ற இங்கே **கோவிந்தன்** என்றது. (3)

புஷ்பங்களால் ஆராதித்த காமதேவனுக்குப் பரிகாரங்களை ஸமர்ப்பித்ததைச் சொல்லித் தன் இஷ்டத்தைக் கோருகிறாள்—வேங்கடவாணனே வேண்டுமென்பதென் என்னவேண்டா. நான் பிறப்பிலேயே அவனையே நினைத்துப் பிறந்தவளெனவும் வெளியிடுகிறாள்—

4. சுவரிற் புராணநின் பேரெழுதிச்
சுறவநற் கொடிக்களும் துரங்கங்களும்
கவரிப் பிணைக்களுங் கருப்புவில்லும்
காட்டித்தந்தேன் கண்டாய் காமதேவா!
அவரைப் பிராயந் தொடங்கி யென்றும்
ஆதரித் தெழுந்த வென் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுதுவைத்தே னொல்லை விதிக்கிற்றியே.

காமதேவா —மன்மத தேவனே!
புராணம் —புராணங்களில் ப்ரசித்தங்களான—பழமையான
நின்பேர் உனது பெயர்களை சுவரில் எழுதி,
சுறவம் —சுறு மீன்களாகிற
நல் கொடிகள் உம் } நல்லவையான உனது த்வஜங்களையும்
துரங்கங்கள் உம் } குதிரைகளையும்
கவரிப்பிணைக்கள் உம் } பெண்கவரிமாக்களையும் (சமரீம்ருகங்களையும்;
கரும்பு வில் உம் } கரும்பாகிற வில்லையும்
காட்டி தந்தேன கண்டாய் } எதிரில் கொண்டுவந்து (அல்லது சுவரில் எழுதி) ஸமர்ப்பித்தேன்.

அவரைப் பிராயம் தொடங்கி } சிறு பருவத்திலிருந்து
என்றும் ஆதரித்து } எப்போதும் அவனையே விரும்பி
எழுந்த —கிளர்ந்த
என் தடம் முலைகள் } எனது விசாலமாய் பருத்துள்ள ஸ்தனங்களை
துவரைப் பிரானுக்கு ஏ } த்வாரகையிலிருக்கும் உபகாரகனுக்கென்றே
ஸங்கற்பித்து } முடிவு செய்து
தொழுது வைத்தேன் } (உன்னை) நமஸ்கரித்திருக்கிறேன்.
ஒல்லை —விரைவில்
விதிக்கிற்றி —நியமிக்கவல்லவனாய்.

புராண என்பது பேருக்கு அடைமொழி. இதை விளிச் சொல்லாக்கி, நெடுநாளாக எனக்கு உபகரிக்குமவனே! எனப்பொருள் கொண்டால்—ஆண்டாள் பால்யத்தை அவளுக்குப் புராணநாளாகக் கொள்ளவேண்டும்; அப்போது அவளுக்கு அவன் செய்த உபகாரங்களு மென்ன வென்றாராயவேண்டும். 'பழையதாகப் பிரிந்தாரைச் சேர்த்துப் போருமவனன்றோ நீ' என்பது பெரிய

வாச்சான்பிள்ளையுரை. அங்கே புராணம் என்றே பதப்பிரிவு காண்கிறது. **கவரிப்பிணை.** பிணை என்பது பெண்போதுப் பெயருமாயிருப்பதாலே கவரி என்றது சாமர மாகையாலே சாமரங்களை வீசும் ஸ்திரீகள் எனப் பொருள் கூறி, எம்பெருமானுக்கு விமலாதிகள் போலே மன்மதனுக்கும் சிலர் என்றார் பெரிய வாச்சான்பிள்ளை. அப்படியாகில், கவரி என்பது கபரியாய் அதாவது கூந்தலாய் அழகிய கூந்தலுள்ள பெண்மணிகளை யெனவும் பொருள் கொள்ளக்கூடும். ஸ்திரீகள் எல்லோரும் காமன்பரிகரங்களல்லரோ? உண்மையில் பிணை என்பது பெண்பொதுப்பெயரானாலும் சில பெண்மிருகங்களைச் சிறப்பாகச் சொல்வதுமாயிருப்பதாகையாலே அப்பொருளைக் கொள்வதில் குறை யிராதபோது பொதுப் பொருளைக் கொள்வது என் என்று பதவுரையில் வேறு பொருள் கூறினம். கவரிமாவை விட்டு வேறு பெண்மாவைக் கொள்ளவேண்டா மென்பதற்காக கவரி என விசேஷித்தது. கீழ் மீன்களையும் குதிரைகளையும் சொன்னதற்கேற்ப ஒரு திர்யக்ஜாதியைக் கொள்வதே பொருத்தமுளது. **காட்டித்தந்தேன்.** ஆராதனைக் காலத்திலே விபூதிகளாக ஸமர்ப்பித்தேன். இவையும் சுவரில் எழுதப் பெற்றன வெனவாவது கொள்க.

அவரைப்பிராயம். கீழ்ப்பட்டது எனப்பொருள் உள்ள 'அவரம்' என்ற வடமொழி அவரை என விகாரப்பட்டுள்ளதென்பர். அவரை யெனப் பிரித்து அந்த எம்பெருமானை யென உரைத்து **ஆதரித்து** என்றதோடு சேர்ப்பது முண்டு. அது ஸ்வாஸமாகாது. பன்மைக்கும் பொருத்தம் இல்லை. **ஆதரித்து.** தடமுலைகள் தாங்களே யவனை யாதரித்திருக்கும்போது நான் அவற்றை வேறொருவனுக்கு ஸங்கற்பிக்கமுடியுமோ? அசேதநங்களான அவற்றிற்கே அவனிடத்தில் பற்றுதலிருக்க விவேகியான நான் வேறுவிதமிருப்பேனோ என இதன் கருத்து. மேலும், 'நான் பிறந்தது அவனையே நினைத்து' என்றால் உடல் மற்றொருவனுக்கும் சேஷமாகலா மெனவாம். உடலே அவனுக்கென்றே எழுந்ததென்றால் வேறு விதம் கூடாதென விளக்கினதாம். **தடமுலைகள்** என்ற அங்கத்தைச் சிறப்பாகக் குறித்தது பர்த்தாவாகவும் அவனையே தான் கொள்ளவேண்டுமென்பது விளங்கவாம். தனக்கு அவ்வங்கத்தின் பெருமையை யுணர்த்தினதுமாம். பூமிக்குத் தானே பர்வதம் ஸ்தனமாகிறது. 'ஸ்தநபாநமிதாங்கீ' எனவருளப்பெற்றதே. ஆகவே இவள், நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம்' என்றபடி யிருந்த கண்ணனைச் சிக்ஷித்து வசமாக்கினது போலும். **துவரைப்பிரானுக்கே.** விரோதிகளை வென்று, விரும்பின ஸ்திரீகளை வசமாக்கி வாழ்விக்கத் துவரை யெழுந்தருளி பதினாயிரம் தேவிமார்களோடு விளங்கின பிரானல்லனோ அவன். .... (4)

வேறொருவனைப் பர்த்தாவாகக் கொண்டு உடலை அவனுக்கு சேஷமாக்கினாலும் பாரமைகாந்த்யத்திற்குக் குறையில்லையே. உலகிலுள்ள ஸ்திரீகளில் பாரமைகாந்த்யம் பொருந்தியவர் எத்தனை பேரில்லை?. மேலும் ஒல்லை விதிக்கிற்றியே என்று சொல்லுகின்றாயே; எவ்வளவு சீக்கிரம்? என வினா எழ அதனை விவரிக்க மேற்பாசுரம். முலைகளிரண்டுக்குப் பாசுரங்களு மிரண்டாயின. ஆகவே இப்படிச் சொன்ன அம்சத்தை விவரிப்பதால் இங்குக் காமார்ச்சனையின் அம்சமொன்றும் கூறப்படுகிறதில்லை.

5. வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தவவி
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங் குத்தமற்கென்
றுன்னி த்தெழுந்தவென் தடமுலைகள்
மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன்கண்டாய் மன்மதனே !

மன்மதனே —காமதேவனே !
வானிடை —சுவர்க்கத்திலே
வாழும் —பெருமையாக வாழ்கின்ற
அவ் வான வர்க்கு — அப்படிப்பட்ட தேவதைகளுக்கு
வேள்வியில் —யாகத்திலே
மறையவர் —வேதமோதினவர்
வகுத்த —வகைப்படுத்திய
அவி —ஹவிஸ்ஸை
கானிடை —காட்டிலே
திரிவது —திரியும்
ஓர் நரி —நீசமான நரியானது
புகுந்து —வேள்வியிடத்தில் நுழைந்து
கடப்பது உம் மோப்பது உம் — பாய்வதும் முகந்து பார்ப்பதும்
செய்வது —செய்வதற்கு
ஒப்ப —ஒத்திருக்கும்படி—
ஊனிடை —திருமேனியிலே
ஆழி சங்கு —திருவாழியையும் திருச்சங்கையுமுடைய
உத்தமற்கு —புருஷோத்தமனுக்கு
என்று உன்னித்து — என ஆதரித்து எழுந்த என் தட முலைகள்
மானிட வர்க்கு — மனிதர்களுக்கு ஆகட்டும்
என்று பேச்சு படில் — என்றவிதமாகப் பேச்சு உண்டாமாகில்
வாழ கில்லேன் — ஜீவித்திருக்கமாட்டிலேன்.

வானிடை—கானிடை, வாழும்—திரிவது, அவ்வானவர்—ஓர் நரி என்று நேருக்கு நேராக ஒன்றுக்கொன்று வெகு விதமாக வேறுபட்டதை விளக்கினது நோக்குக. அவ் என்ற அகரச்சுட்டு அவர்களுடைய ஜ்ஞானசக்தி முதலானவற்றையும் வேதப்ரஸித்தியையும் குறிக்கும். மறையவர் இத்யாதி. வேதமோதினவர்கள் பெரிய யாகங்களிலே தாங்களாகவே வானவர்களை ஆவாஹனம் செய்து வகுக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்த வண்ணமே ஹவிஸ்ஸைக் கொள்ளுகிறார்கள். இந்த நரி வராதபடி தடையிட்டும் உட்புகுந்து கடந்து முகந்து பார்க்கிறது. மோப்பதும். ஒருக்கால் நரிபுகுந்து நெருங்கினாலுங்கூட, முதலில் முகந்து பார்த்துத் தின்பது பிராணிகளின் இயற்கையாகையாலே மோப்பது செய்யும். அதற்குள் அங்கிருப்பார் அதை விரட்டி விடுவார்கள். அதற்கு அனுபவிக்க நேராது என்றபடி. மானிடவர்க்கென்று பேச்சுப் படுவது மாத்திரத்தையும் நேரில் தொட்டு மோப்பதற்கு ஒப்பாக நினைத்து பயப்படுகிறாள் ஆண்டாள். செய்வதொப்ப என்றவரையிலான வாக்கியத்தாலே நான் மற்ற ஸ்திரீகளைப் போலே வேறொருவனுக்கு நினைக்கத் தக்கவளல்லேன். எப்போழ்தும் எம்பெருமானுக்கே யாகும் ஆகத்தாள் நான் எனத் தன் அவதாரமேன்மையை யறிவித்தாளென்க.

ஊனிடையாழி சங்கு. அவனது திருமேனியை ஸேவியுங்கோள். நான்கு திருக்கைகள் உள. இரண்டு சங்குசக்கரங்களை யேந்துகின்றன. மற்றிரு திருக்கைகளாலே அவற்றைப் போல் எனது தடமுலைகளை அவன் எந்துவதே தகும்.

அவனுக்கென்று உன்னித்தெழுந்து இவைகள் இயற்கையாகவே ஈடுபட்டிருப்ப தாலே அத்தகைய நித்ய ஸூரிகளுக் கொப்பாகும் என்றபடி. மானிடவர்க்கு. யாருக்குக் கொடுக்கலா மென்று விசாரிப்பார் பந்துக்கள் அவரவர்களுக்குத் தோன்றின பல மானிடரைக் குறிப்பரென வறிவிக்க இங்கே பன்மை. ஆண்டாளைப் பரிக்ரஹிக்கத் தகாததன்மையிலே எல்லாமானிடரும் சமரே யென்றதுமாம். பேச்சுப்படில். சிறுவயதாயிருக்கிறபடியாலே இன்னும் சிறிது நாள்வரை விவாஹம் செய்யாமலிருந்தாலும் சரி யென்று பந்துக்கள் நிர்பந்தமாக ஒன்றும் பேசார். தகப்பனாரும் எனது குணங்களை யனுபவித்துவருகிறபடியாலே வெறுமனே இருப்பர். பருவகாலம் நெருங்கிவிடுமாகில் பந்துக்கள் மேல் விழுந்து வந்து பலரைக் காண்பித்து, 'கொடுத்துவிடும். இஃதென்ன மூடபக்தி? தெய்வமாவது, பர்த்தாவாவது' என எசிப் பேசுவர். அப்பேச்சுப் பிறப்பதற்கு முன்னரே என்னை எனது துவரைப்பிரானிடமே சேர்ப்பிக்க வேண்டும் என்றபடி.

காமவேத மோதினவர் பலரைக் கொண்டு பேராசீர்வாதமும் பெற்று நடத்தும் வகையைக் கூறிக் கண்ணன் தன்னைக் கடாக்ஷிக்கவேண்டு மென்ற விருப்பை வெளியிடுகிறாள். நோன்பு மாசியோடு நிற்காமல் பங்குனியிலும் வளர்வது இங்கே தெரியலாகும்.—

6. உருவுடையாரிளையார்களல்லார்
 ஓத்துவல்லார்களைக் கொண்டுவைகல்
தெருவிடை யெதிர்கொண்டு பங்குனிநாள்
 திருந்தவே நோற்கின்றேன் காமதேவா!
கருவுடை முகில்வண்ணன் காயாவண்ணன்
 கருவிளை போல்வண்ணன் கமலவண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
 திருந்தவே நோக்கெனக் கருள்கண்டாய்.

காமதேவா —மன்மத தேவனே!
பங்குனி நாள்-பங்குனி மாதத்திலே
வைகல் —தினந்தோறும்
உரு உடையார் } அங்கவமைப்புப் படைத்தவரும்
இளையார்கள் —யௌவனம் வாய்ந்தவரும்
நல்லார் —சீலம் பொருந்தியவரும்
ஓத்து —வேதத்திலே
வல்லார்களை —ஸமர்த்தர்களுமான பாகவதர்களை
கொண்டு —அழைத்துக்கொண்டு (முன்னிட்டு)
தெரு இடை —(நீ எழுந்தருளும்) வழி நடுவிலே
எதிர் கொண்டு } உபசாரங்களுடன் எதிர் வந்தழைத்து
திருந்த வ —ஒழுங்குபெறும்படியே
நோற்கின்றேன். } நோன்பு நடத்துகிறேன்.
கரு உடை —கர்ப்பம் தரிக்கும்
முகில் —மேகத்தினுடைய
வண்ணன் —வர்ணமுள்ளவனும்
காயா வண்ணன் } காயாம்பூ வண்ணனும்
கருவிளை போல் வண்ணன் } காக்கணம்பூப் போன்ற வர்ணமுள்ளவனுமான கண்ணன்
கமலம் வண்ணம் } செந்தாமரைப்பூவின் வர்ணமுள்ள
திரு உடை —எல்லா மேன்மையு முடைய
முகத்தினில் —திருமுகத்தினில் விளங்கா நிற்கும்
திருக்கண் களால் } காதல் நிறைந்த கண்களால்
திருந்த வ —நான் தேறும்படியாகவே
நோக்க —என்னைக் கடாக்ஷிக்க
எனக்கு (நீ)
அருள் கண்டாய் } அருளவேண்டும்.

மன்மதனின் மனத்துக்குப் பிடிப்பானவர்களைக் கொண்டு நோற்க வேண்டுமென உருவுடையார் இத்யாதி அடைமொழிகள். மன்மதமன்மதனை முகில்வண்ணனித்யாதியால் வர்ணிக்கப்படுமவன் கடாக்ஷிக்க இத்தகைய பாகவதரைப் புரஸ்கரிப்பது பொருந்தும். வேதத்திலும், 'யுவா ஸ்யாத் ஸாது யுவாத்யாயக: ஆசிஷ்டோ த்ரஷ்டோ பலிஷ்ட:' என்று இளமை முதலிய குணங்களின் சேர்க்கையில் நன்மை சொல்லப்பெற்றது. கருவுடை யென்று நிரம்ப நீர் கொண்டதைச் சொன்னபடி. முகில் வண்ணன் இத்யாதிகளால், தாபம் நீக்கி நன்கு வர்ஷிப்பதும், அழகும், நிறமும் கூறினதாம். கமல வண்ணன் என்பது திருமுகத்திற்கும் சேரும். திருக்கண்களுக்குச் சேர்ப்பது சிறக்கும். செந்தாமரைக் கண்ணனல்லனோ அவன். நோக்க எனக்கு நோக்கெனக்கு எனப் புணர்ச்சியில் விகாரம். நோக்கு என்றே பிரித்து, திருக்கண்களால் ஆம் நோக்கை = கடாக்ஷத்தை எனக்கருள் என்று முரைக்கலாம். .... (5)

எம்பெருமானையே யாதரித்த தன்னை யவன் கடாக்ஷிக்கவேணு மென்று வேண்டினாள், இனி அவன் திருக்கைகளால் தொட்டருளவேணு மென்று வேண்டுகின்றவளாய் மன்மததேவனுக்கு நைவேத்யம் ஸமர்ப்பித்த வகையையும் விளக்குகிறாள் :—

7. காயுடை நெல்லொடு கரும்பமைத்துக்
கட்டியரிசி யவலமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
மன்மதனே உன்னை வணங்குகின்றேன்
தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளா லென்னைத் தீண்டும்வண்ணம்
சாயுடை வயிறுமென் தடமுலையும்
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே.

மன்மதனே —காமதேவனே !
காய் உடை நெல்லொடு —பசுங்காய் நெல்லையும்
கரும்பு —கருப்பையும்
அமைத்து —அமையப்பண்ணி
கட்டி —வெல்லக்கட்டி
அரிசி —பச்சரிசி
அவல் —நெல்லை ஊரவைத்து வறுத்திடித்த அரிசி
அமைத்து —இவற்றையு மமையப் பண்ணி
வாய் உடை —வாக்கின் திறமையுள்ள
மறையவர் —வேதமோதினவர்
மந்திரத்தால்—படித்த மந்திரத்தைக் கொண்டு
உன்னை வணங்குகின்றேன்.
முன் —முன் ஒரு காலத்திலே
தேசம் —உலகமடங்கலும்
அளந்தவன் — திருவடிகளால் அளந்தருளின
திரிவிக்கிரமன் —த்ரிவிக்ரமாவதாரம் செய்த பிரான்
இப்போது என்னை
திருக்கைகளால் —மேன்மை பொருந்திய இரு கைகளாலும்
தீண்டும் வண்ணம் —தொட்டருளும் படி
என் —எனது
சாய் உடை —ஒளியுடையனவான
வயிறு உம் —வயிற்றுப்ரதேசத்தையும்
தட முலையும் —பருத்த முலைகளையும் குறித்து
தரணியில் —பூமியில்
தலை —சிறந்ததான
புகழ் —கீர்த்தியை
தர கிற்றி —கொடுக்க வல்லனாகிறாய்.

காயுடை நெல். பால் மாறாத பசுங்காய் நெல்லாகில் அரிசி இடியாமலும் அன்னம் போக்யமாயு மிருக்கும். அந்நெல்லும் கூட தேவதைக்கு அரிசி போல் நைவேத்யமாகிறது. விதிப்படி இரண்டு மமைப்பது. உனக்கு இவ்வளவு போக்யங்களைத் தந்தபோது நீயு மெம்பெருமான் என்னை போக்யமாக வுகந்து தீண்டும்படி செய்யவேண்டு மென்றபடி. **தேசமித்யாதி.** திரிவிக்ரமன் அளந்த காலத்திலே திருவடிகள் ஒருக்கால் பட்டிருக்கலாம். ப்ரார்த்தனை செய்யாத போது கூட பாதங்களா லெல்லாம் தொடும் பரமகாருணிகன் ப்ரார்த்தனைக் கிணங்கி என் அங்கங்களைத் தீண்டலாமே. அவன் பெருமைக்குத் தக்க மேன்மை பெற்றிருந்தாலன்றோ அவன் இங்ஙனம் திருக்கையால் தீண்டுவது. அவ்வளவு புகழ் இவ்வங்கங்களுக்கு உண்டாம்படி நீ தான் அருளவேண்டும். **திருக்கை களால்.** வயிற்றுக்கொரு திருக்கையும், தடமுலைக்கு மற்றொரு திருக்கையுமென நினைத்தனள் போலும்; நான்கு திருக்கைகளையும் கொள்வது மாம். வயிறு என்று கீழ்ப்பாகம் முழுதும், முலை யென்று மேற்பாகம் முழுதும் குறித்தபடி. **புகழ்.** தீண்டினதாலுண்டாம் புகழ்; அல்லது தீண்டுதற்குரிய புகழாம். .... (7)

முதலில் அவன் திருக்கண்களால் கடாக்ஷிப்பதும் பிறகு தீண்டுவதும் சொல்லப்பெற்றன. அவன் முழுதும் அனுபவிக்கவேண்டுமாறு அவனுக்குத் தான் அடிமையாவதைக் கேட்கின்றளாய், உனக்கிப்படி நைவேத்யம் முதலியன ஸமர்ப்பிக்கும் நான் இந்நோன்புநாட்களில் என்ன வ்ரதத்துடனிருக்கிறே னென்பதையும் குறிக்கொள் என்கிறள்—

8. மாசுடை யுடம்பொடு தலையுலறி
வாய்ப்புறம் வெளுத்தொரு போதுமுண்டு
தேசுடைத் திறலுடைக் காமதேவா !
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள்கண்டாய்
பேசுவ தொன்றுண்டிங் கெம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத்தாக்கும்வண்ணம்
கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள்
என்னுமிப் பேறெனக் கருள்கண்டாய்.

தேசு உடை—காந்தியையுடையனும்
திறல் உடை—பராக்ரம முடையனுமான
காமதேவா —மன்மதனே! (நான்)
மாசு உடை —அழுக்கை உடைய
உடம்பொடு --உடம்புடன் கூடி
தலை உலறி —தலை காய்ந்து
வாய் புறம் —உதடுகளின் பிரதேசம்
வெளுத்து —வெளுப்பாய்விட
ஒரு போது —ஒரே வேளை
உண்டு உம் —ஆஹாரம் உட்கொண்டும்
நோற்கின்ற
நோன்பினை - இந்த நோன்பை
குறிக்கொள் கண்டாய் } நன்கு கவனிப்பாயாக.
இங்கு பேசுவது } இதன் பலன் விஷயத்திலே நான் சொல்வது
ஒன்று உண்டு } இது ஒன்றுதானிருக்கிறது. (என்ன வெனில்)
எம்பெருமான் } கண்ணபிரான்
பெண்மையை—எனது பெண்தன்மையை
தலை உடைத்து } சிறப்பு உடையதாக
ஆக்கும் வண்ணம் } செய்யும்படி
கேசவன் நம்பியை } கேசவனாய் குணபூர்ணனுமான அவனை
கால் பிடிப்பாள் } திருவடி பிடித்துபசரிப்பவ ளிவள்
என்னும் — என்கிற

இ பேறு எனக்கு	— இந்த புருஷார்த்தத்தை	அருள் கண்டாய்	அநுக்ரஹிப்பாயாக.

'துறை படிந்து' என்று முன் சொன்னபடி துறைகளில் மூழ்கி எழுந்திருப்பது மாத்திரம். ஏகாந்தஸ்தலத்திலே அழுக்குத் தேய்த்துக் குளிப்பது கிடையாது. தலை காய்ந்து கிடக்கிறது. எண்ணெய் தேய்ப்பது, மெதுவாய் மயிர் படிந்திருக்கும்படி வாருவது, பூ அணிவது ஒன்றும் செய்வதில்லை. வெற்றிலையைப் பார்த்து வெகுநாளானதாலே வாய்ப்புறம் வெளுத்துக்கிடக்கிறது. நிச்சலும் உண்பதும் ஒரே வேளை. இவ்வளவு நியமங்களோடு நோற்கின்றேன். இதற்காக நான் கோலும் பலன் விஷயமாக இனி நான் சொல்லவேண்டுவது இஃதொன்றுதான். அதாவது—எம்பெருமான் எனது தடமுலைகள் முதலான அங்கங்களைத் தீண்டுவதோடு எனது பெண்மைக்குத் தலைமை யளிக்கவேண்டும். பெண்ணாயிருப்பாள் அனுபவிக்கும்போகத்தில் குறைவொன்றுமிராதபடியாக்கு. அதற்குத் தக்கபடி நானும் அஹங்காரமமகாரங்களற்று அவன்திருவடித்தாமரைகளைத் தடவி உபசரிக்கவேண்டும். தேசுடைத் திறலுடையனை உனக்கு நான் தேசழிந்து நோன்பு நோற்பதைக் கண்டு இரக்கமுண்டாம். இந்த இஷ்டம் பூர்த்தி செய்விக்கத் திறலு மிருக்கிறதென்றபடி. 'உலறி விரித்து. தேசு பிரிந்தாரைக் கூட்டும் சக்தி. திறல் விரோதிகளை விலக்கும் திறமை' யென வுரைப்பர். எம்பெருமான் என்று காமனை விளித்ததாகவும் கொள்வர். இங்கு என்பதற்கு இப்புவியில் எனப் பொருள் கூறி மேலே அந்வயமும் கொள்க.

கேசவன். ப்ரம்மருத்ரர்களுக்கீச்வரனும், கேசியென்ற அஸுரனைக் கொன்றவனும், அழகிய கேசங்கள் உள்ளவனும் கேசவனை கண்ணன் தலையுலற நான் படுவது கண்டு விடுவானோ. நம்பியமாயிற்றே. .... (8)

இப் பலனைத் தனக்குத் தராவிடில் அவனுக்கு விளைவதையும் விளக்குகின்றனள்—

9\. தொழுதுமுப் போதுமுன் னடிவணங்கித்
தூமலர் தூய்த்தொழுதேத்துகின்றேன்
பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே
பணிசெய்துவாழப்பெறுவிடில்நான்
அழுதழுதலமந்தம்மாவழங்க
ஆற்றவு மதுவுனக்குறைக்குங்கண்டாய்
உழுவதோரெருத்தினைநுகங்கொடுபாய்ந்
தூட்டமின்றித்துரந்தாலொக்குமே.

மு போது உம்	மூன்று காலங்களிலும்	தொழுது	— அபசாரங்களைப் பொறுக்க ஸேவித்து
தொழுது	— தூரத்தினின்று ஸபரிவாரமாக உன்னை ஸேவித்து,	ஏத்துகின்றேன் நான்	ஸ்தோத்ரம் பண்ணும் நான்
உன் அடி	— உனது திருவடிகளிலே	பார் கடல்	—பூமியைச் சூழ்ந்த கடலின்
வணங்கி	— வணக்கத்துடன்	வண்ணனுக்கு ஏ	நிறமுடைய கண்ணனுக்கே
தூ மலர்	— சுத்தமான புஷ்பங்களை	பழுது இன்றி	— குற்றமிராமல்
தூய்	— ஸமர்ப்பித்து,		

பணி செய்து } கைங்கர்யம் செய்துகொண்டு
வாழ பெறுவிடில் } ஸுகவாழ்க்கைக்கு பாக்ய மில்லாதவளாகில்,
அழுது அழுது—எப்போது மழுதுகொண்டு
அலமர்து நான் } வருந்தி நான்
அம்மா வழங்க—ஐயோ வெனக் கதற
அது —அச் செயலானது உனக்கு
ஆற்ற உம் —மிகவும்
உறைக்கும் கண்டாய் } துன்பத்தை விளைவிக்கும். (அப்போது உனது செயல்)
உழுவது —உழுதுவரும்
ஓர் —ஒப்பற்ற
எருத்தினை —எருதை
ஊட்டம் இன்றி } உண்ணவொன்று மளிக்காமல்
நுகம் கொடு } உழுவதற்கிருந்த நுகத்தடியாலேயே
பாய்ந்து —மேல் விழுந்து
துரந்தால் ஒக்கும் } துரத்திவிடுவதற்கு ஒத்திருக்கும்.

வணங்கி, தொழுது என்றவற்றிற்குப் பொருள் வெவ்வேறானமையைப் பதவுரையில் காண்க. நேராக நோன்பையே நோற்கு மிவள் ப்ரபத்தி பண்ண ப்ரஸக்தி யில்லையாகையாலே தொழுதென்பதற்குப் பலனுக்காக ப்ரபத்தி செய்தெனப் பொருள் கூடாது. நோன்பில் நேரும் குறைகளை நீக்க ப்ரபத்தி செய்கிறாளென்னலாம். அப்போது, 'ப்ரபந்நனைக் காக்காமல் விடுகிறபடியால் ப்ரபந்நனிடமுள்ள பாபங்களெல்லாம் உன்னிடமே குவிந்துவிடு' மென வறிவிக்கவு மிங்கே கருதினாளென்னலாம்.

தூய். தூ என்ற வினையினாலான வினையெச்சம்; போய் என்றது போலாமிது. பார்க்கடல். பூமியைச் சூழ்ந்த கடலாவது உப்புக்கடல். அதே கருநிறமானது. பாற்கடல் முதலானவை இங்ஙனமல்ல. அது வுனக்குறைக்கும். இவ்வளவு நோன்பு நோற்ற பிறகும் வாளாவிருப்பவனுக்கு அழுதால் மட்டுமேன் உறைக்குமென்னில், அழுவதைக் கண்டார் இந்நோன்பு ஒன்று மளிக்காததை நினைத்து உன் பூஜைமுறையையே நிறுத்திவிடுவார்கள். உனக்குள்ள ஐசுவரியம் மறைந்துவிடும். ஊட்டமிடமாட்டாமே உழவெருதை உழவன் விரட்டிவிட்டால் அவனுக்குத் தான்ய மேது? ஐசுவரிய மேது? அது போலாகுமென்றால் உறைக்குமே.

இந்தப் பாட்டு மன்மதனை வேண்டிக் கொள்வ தொன்று மிராமே முன் வேண்டினதையே சொல்வதாகையால் இங்கு விளிச்சொல் இல்லாமற் போயிற்று. .... (9)

இனி இத்திருமொழி கற்றார்க்குப் பலன் கூறப்பெறுகிறது—

10. கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக்
கழலிணை பணிந்தங்கோர் கரியலற
மருப்பினையொசித்துப்புள் வாய்பிளந்த
மணிவண்ணற் கென்னை வகுத்திடென்று
பொருப்பன்ன மாடம் பொலிந்துதோன்றும்
புதுவையர் கோன்விட்டு சித்தன்கோதை
விருப்புடை யின்றமிழ் மாலைவல்லார்
விண்ணவர் கோனடி நண்ணுவரே.

பொருப்பு அன்ன	மலைகளுக்கொத்த
மாடம்	—உப்பரிகைகள்
பொலிந்து தோன்றும் புதுவையர்	விருத்தி பெற்று விளங்கும் புதுவை நகரிலுள்ளவர்களுக்கு
கோன்	—ஸ்வாமியான
விட்டுசித்தன்	—பெரியாழ்வாரைச் சேர்ந்த
கோதை	—ஆண்டாளின்—!
கரும்பு வில்	கரும்பை வில்லாக உடையனும்
மலர் கணை	புஷ்பங்களை பாணங்களாக உடையனுமான
காமம் வேளை	காமபுருஷார்த்த தேவதையான மன்மதனை
கழல் இணை பணிந்து	அவனது இரு அடிகளையும் வணங்கி, '(காமதேவா! நீ)
அங்கு	—அவதரித்திருந்தவிடத்திலே
ஓர் கரி	ஒப்பற்ற குவலயாபீடமென்ற ஆனையானது
அலற	—கதறும்படி
மருப்பினை	—அதன் கொம்பை
ஒசித்து	—ஒடித்து
புள்	—பகாஸுரனுடைய
வாய்	—மூக்கை
பிளந்த	—கிழித்தருளின
மணி வண்ணற்கு	நீலமணிநிறத்தனான கண்ணனுக்கு (பார்யையாக)
என்னை வகுத்திடு	என்னை வகைப்படுத்த வேணும்'
என்று விருப்புடை	என்னும் அபேக்ஷையை வெளியிடும்
இன் தமிழ்	—இனிய தமிழாலான
மாலை	—பாமாலைகளை
வல்லார்	—கற்றூர்
விண்ணவர் கோன்	நித்யஸூரி நாயகனுடைய
அடி	—திருவடிகளை
நண்ணுவர்	—கிட்டுவர்.

வேளை. வேள்=மன்மதன். இப்பதம் இங்கு அவனுக் கந்தர்யாமியான இருப்பிலே எம்பெருமானைச் சொல்லுகிறது. **மணிவண்ணற்கு** என்று தன் ஸ்வரூபத்திலே விளங்கும் எம்பெருமானைச் சொல்லும். ஆகவே, 'க்ருஷ்ண ரூபாந்தர விஷயம்' என்று 'அந்தர' என்ற சொல்லை ஸ்ரீதேசிகனருளிச்செய்ததாம். **ஒசித்து பிளந்த** என்றவிடத்திலே பூர்வோத்தரகாலத்திலே நோக்கில்லை. இரண்டையும் செய்தவ னொருவ னென்பதே கருதப்படுவது. புள்வாய் பிளந்தது திருவாய்ப்பாடியில்; பிறகு மதுரையில் ப்ரவேசித்தபோது கரிமருப்பொசித்தது. கரியின் மருப்புக்கு மேல் நீண்டும் கெட்டியாகவு மிருந்தது புள்ளின் மூக்கென வறிவிக்க இவ்வாறு கூறினதாம். **என்று விருப்பு** என அந்வயம். (என்ற எனவு மிருக்கலாம்). விருப்புடை என்பதற்கு விருப்பமடி யாகப் பிறந்த எனப் பொருள் கொள்வர். **கோதை** யென்றதற்கு கோதையினுடைய எனவே பொருள். இங்கு 'அருளிச் செய்த' என்றொரு பதம் சேர்க்கவேண்டுவதில்லை. 'விருப்புடன்' என்ற பாடம் எங்கு மில்லை. 'விருப்பமடி யாகப் பிறந்த' என்ற பொருள் கொள்வதில் ச்ரமத்தைப் பார்த்துச் செய்த கற்பனை யாமது என்க. வகுத்திடு என்று விருப்புடைக் கோதையின் இன்தமிழ் எனவு மந்வயமாம். **விண்ணவர் கோனடி நண்ணுவர்.** 'காமன் காலிலே விழவேண்டும்படியான இவளைப் போலன்றி, இப்ரபந்தம் கற்றவர் நித்ய ஸூரிகளோடேயொரு கோவை யநுபவிக்கப் பெறுவர்' எனக் கருத்துரைப்பர். இவள் காமன் காலில் விழுந்தது நித்ய ஸூரிகள் கோவையிலே பிறகு சேரவிரும்பாமே யன்று. இந்த தேஹத்தையும் எம்பெருமானின் பார்யையான படியிலே உபயோகிக்கவேண்டு மென்பதற்காக. அவ்வளவு மனத்திடமுள்ள பெண்மணி இந்

நோன்பு நோற்பதில் தேவதாந்தரார்ச்சனை செய்த தோஷமிராதபடியை முன்பே சொன்னோம். இப்படி ஆவியும் உடலு மெல்லாம் எம்பெருமானுக்கே யென்ற கோதையினிருப்பைக் குறிக்கு மித் திருமொழிவல்லார்க்கு அவன்திருவடி கிட்டுவது எளிதெனப் பலன் கூறினபடி காண்க.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 1. தையொருதிங்கள் உரை முற்றிற்று.

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

நாம மாயிரம். 2.

சிற்றில் சிதையேலெனல்.

ஆண்டாள் தான் செய்த காம ஸமாச்ரயணத்தைக் கூறிவிட்டு ஆயச் சிறுமிகள் செய்த காமஸமாச்ரயணத்தில் நடந்த சில விசேஷங்களைக் குறிப்பிடுகிறாள். எதற்காக வென்னில், எம்பெருமானைக் கணவனாகப் பெற இவ்வண்ணம் செய்தவரு முளர் என வெளியிடவாம். இதற்காக ஆயச்சிறுமிகள் காமார்ச்சனை, காத்யாயநியின் அர்ச்சனை யென்ற விரண்டையும் செய்ததாக வறிவிக்க இரண்டு திருமொழிகள் பிறந்தன. இதற்காக வன்றி, அங்கே செய்தது போல் இங்கும் கண்ணன் வந்து செய்யவில்லையே என்கிற மனக்குறையைக் குறிக்கவன்று. ஆனால் இங்கே அவன் தீம்பு செய்த வண்ணம் சொல்லுவானென்னில், அவர்கள் செய்தது தேவதாந்தரார்ச்சனையா யிருந்ததாலே அங்குக் கண்ணன் சில தீமை செய்தான். நாம் அங்ஙனம் செய்திலோ மென்று தன் பரமைகாந்தித்வத்தை வெளியிடவாம். திருப்பாவையிலும் ஆய்ச்சிகளின் செயலை இவள் பரிஷ்கரித்தன்றோ பின்பற்றினது—

தான் காமனைப் பூசித்தபிறகு, தான் கூடலிழைத்தது முதலானவற்றை நான்காம் திருமொழியிலிருந்து அருளப்போகிறாள். நடுவில் இரண்டு திருமொழிகள் ஆய்ச்சிகளின் பேச்சை வெளியிடுவது. இதனை வெளியிட நேர்ந்ததிங்கு எதற்காக வென்பது சொல்லியாயிற்று.

1 நாமமாயிர மேத்தநின்றநாராயணாநர னேயுன்னை
மாமிதன்மக னாகப் பெற்றாலெமக்குவாதை தவிருமே.
காமன்போதருகாலமென்றுபங்குனிநாள்கடைபாரித்தோம்
தீமைசெய்யும்சிரீதராவெங்கள் சிற்றில்வந்து சிதையேலே. (11.)

ஆயிரம் நாமம்	ஸஹஸ்ரநாமத்தைக் கொண்டு	ஏத்த	—ஸ்துதி செய்யும்படி
		நின்ற	—மேலாக நின்ற

நாராயணா	—நாராயணனே.!
நரனே	—நரனெனப்படுபவனே !
உன்னை (நாங்கள்)	
மாமிதன் மகனாக	மாமியாரின் குமாரனாக (கணவனாக)
பெற்றால்	—அடைந்துவிட்டால்
எங்கள் வாதை	எங்களுடைய கஷ்டமானது
தவிறுமே	—நீங்குமோ (அல்லது) நீங்கும்.
தீமைசெய்யும்	—தீம்புகளைச் செய்துவரும்
சிரீதரா	—திருமாலே !

பங்குனி நாள்	பங்குனி மாஸத்திய இந்நாள்களிலே
காமன் போதரு காலம் என்று	இது காமன் வரும் காலமென்றுத் தெரிந்து
கடை பாரித்தோம்	(தெரு அமைத்து) வழி உண்டாக்கினோம்.
வந்து	—இந்த இடத்திற்கு நீ வந்து
எங்கள் சிற்றில்	விளையாட்டாக நாங்கள் செய்த சிறிய இல்லங்களை
சிதையேல்	—அழிக்க வேண்டாம்.

நீ நாராயணன். உனது குணங்கள், செயல்கள் முதலான பலவற்றைச் சொல்லும் ஸஹஸ்ர நாமங்களாலே நீ எத்தப் படுகிறவன். நாராயண என்னும் சொல்லை விவரித்தபோதே பல சிறப்புக்கள் விளங்கும். இப்படி எத்தப்படும் நீ இப்போதே நாமமாயிரம் கொண்டு நிந்திக்கப்பட வேண்டும்படி நடந்து கொள்ளலாமோ.

நாராயணா நரனே. எம்பெருமானே நாராயணனும் நரனுமாய் குரு சிஷ்யர்களாயிருந்து பிறரைத் தத்துவஜ்ஞானிகளாக்க முன் வந்தான். நன்மை செய்ய வந்த நீ தீமை செய்யலாமோ. அன்றி, **நாராயணா** பாற்கடலில் பள்ளி கொண்டவனே! **நரனே!** நாராயண சப்தத்தில் அடங்கிய நரசப்தத்தாலும் சொல்லப்படுகிறவனே! அதை யாராய்ந்தபோது 'ந ரிஷ்யதீதி நர:' என்ற வ்யுத்பத்தியாலே ஒருபடியும் அழிவில்லாப் பெருமான் என விளங்கும். சிற்றில் சிதைக்குமுன்னை அழிக்க யாராலுமாகாதே. நீ எல்லாம் அழித்து ஏகோதக ஸமுத்ரத்திலே நாராயணனாயிருப்பவனென்றபடி. நரனிடம் பிறந்த நாரங்களுக்கு அயனமே யென்றால், நரனென்பவன் வேறெனத் தோற்றும். அவ்வாறில்லை யென விளக்கவும் **நரனே** யென்றதாம். 'தைர் யுக்த: ச்ரேயதாம் நர:' என்றாற்போல் மனுஷ்யபாவனை செய்து ஆகரிக்கின்றாய். இப்படி ஸ்வரூபத்திலும் அவதாரத்திலுமுள்ள உனது குணங்கள் பல்லாயிரக் கணக்கானவை. அவற்றில் நீ இப்போது நடந்து கொள்வது என்ன குணத்திற் சேரு மென்றதுமாம். நேர்பட பர்த்தா என்று சொல்ல வாய் கூசி மறைமுகமாகச் சொல்லுகின்றனர் **மாமிதன் மகனாக** என்று. நீ தாய் தந்தைகளுக்குத் தெரியாமல் இப்போது வரும் வண்ணமிராது, நாங்கள் பர்த்தாவாகப் பெற்ற பிறகு நீ எங்களோடு சேருவது. அப்போது மாமிதன் மகனாகவே பெறுவோம். வாதையும் தீரும். **தவிருமே.** தவிருமோ. ஏதோ ஒரு ஸமயம் நேர்பட்டபோதே இங்ஙனம் பாதிக்கும் நீ மாமி மகனாய்விட்டால் பஹிரங்கமாகவே எப்போதுமே பாதிப்பாயே. அப்படியாகாத வரையில் எங்களுக்கு அனுகூல மென்றபடியுமாம். மாமிமகனாகப் பெறவேண்டு மென்று தங்களுக்குள்ள பேராவலை இவ்வண்ணம் வியங்கியமாக வெளியிடுகிறார்கள். அன்றி, எங்கள் வாதை தவிரும் எனவு முரையாம். ஏ— ஈற்றசை. மாமிமகனாகப் பெறுதலாலிருக்கும் காமவாதை போன்றவை யெல்லாம், பெற்றால் தவிரு மென்றபடி. ஆகையால் அதற்காகக் காமனைக் குறித்துச் சிற்றிலிழைக்கின்றோம். இதை நீ யழித்தால் நாங்கள் உன்னைப் பெறமுடியாது;

பாதையும் நீங்காது என்றபடி. காமன் இத்யாதி. நாங்கள் வெறுமனே விளையாட்டுக்காகச் சிற்றிலிழைத்தால் நீ யழிக்கலாம். இப்போது தகாதென்றதாம்.

சிரீதரா. எங்களைச் சேர்ப்பிக்கும் பிராட்டி நீ செய்யும் தீம்பைத் தடுக்கவில்லையோ? அவளைப் போலெங்களையும் நீ தரிக்க வேண்டாமோ என்றபடி.

வந்துசிதையேல். வரவும் வேண்டாம்; சிதைக்கவும் வேண்டாம். வந்தாலும் சிதைக்கவேண்டாம். சிதைப்பதாகில் வரவேண்டாமென்றபடி. இவனை வரிக்க இவர்கள் நோன்பு நோற்றுவரும்போது, அவன் என் சிற்றில் சிதைக்கிறானென்னில், அவர்களிடத்தில் ஆசையில்லாதவனென்று ஆயர்களுக்கு எண்பிப்பதற்காக வாம். உண்மையில், இவர்கள் செய்வது தேவதாந்தரத்தின் பூஜையாகையாலே அதை ஸஹியாமே அவன் அழிக்கிறான். இந்திர பூஜையை விட்டொழியச் செய்தவனல்லனோ அவன். இதனை வெளியிடவே இத் திருமொழி பிறந்தது. நம்மைப்போலன்றி தேவாந்தர ஸேவையில் ஆய்ச்சிகள் இழிந்தபடியாலே கண்ணன் ஸஹிக்கவில்லை. அதனால் நாம் பாரமைகாந்த்யத்திற்குக் குறை வராதபடி நடத்த வேண்டி யிருந்ததென வறிவித்தபடி. சிதையலே என்ற பாடம் சிறந்ததன்று. சிதையேலே என்ற அத்யாபகபாடமே பொருந்தும். .... (1)

சிற்றிலிழைப்பதும் ஸுகமாய்ச் செய்யக்கூடிய தொன்றன்று. ஆர்வத்தோடு நீ வருவதானால் வந்து கடாக்ஷித்தருளவேணுமே யல்லது, அழிக்கலாகாதென்கின்றனர்—

2. இன்றுமுற்று முதுகு நோவ விருந்திழைத்தவிச் சிற்றிலை
நன்றுங்கண்ணுற நோக்கிநாங்களு மார்வந்தன்னைத்தணிகிடாய்
அன்றுபாலக னாகியாலிலை மேற்றுயின்றவெம் மாதியாய்
என்றுமுன்றனக் கெங்கள்மேலிரக்கமெழாததெம் பாவமே. (12.)

அன்று —பிரளய காலத்திலே
பாலகன் ஆகி —சிறு குழந்தை வடிவமெடுத்து
ஆல் இலை மேல் —ஆலந் தளிரிலே
துயின்ற —யோகநித்ரை கொண்ட
எம் ஆதியாய் —பக்தரான எங்களுக்கு ஆதி காரணமே!
இன்று முற்றும் —இன்றைய தினம் முழுவதும்
முதுகு நோவ —எங்கள் முதுகு நோவெடுக்கும்படி
இருந்து —குனிந்திருந்து
இழைத்த —நாங்கள் செய்த
இ சிற்றிலை —இச் சிறு இல்லங்களை (உம் எங்களுக்கு ஸம்மதம்)
கண் உற —உனது கண்கள் பதியும்படி
நன்று நோக்கி—நன்றாகவே கண்டு—
நாங்களும் —நாங்களும் நோக்குகின்றோம் (அல்லது நோக்க)—
ஆர்வம் தன்னை —உனக்கிருக்கும் ஆசையை
தணிகிடாய்—தணித்துக் கொள்.
என்றும் —எப்போதும்
உன் தனக்கு—உனக்கு
எங்கள் மேல்—எங்களிடத்தில்
இரக்கம் —தயை
எழாதது —உண்டாகாமைக்குக் காரணம்
எம் பாவமே—எங்கள் பாபமே யாம்.

நோக்கி நாங்களும். இங்கு நாங் கொளும் என்ற பாடம் எங்கும் புலப்படவில்லை. பெரியவாச்சான் பிள்ளையும், 'நாங்களும்' என்ற பாடத்தையே யாதரித்

துள்ளனர். ஆனல் இப்போது வாக்யம் அந்வயம் பெறவில்லை. நாங்கள் நோக்கி நீ தணி கிடாயென்ற வாக்யம் ஸமஞ்ஜஸ மாகாதே. நாங்களும் நோக்க என எச் சத்திரிபாகக் கொண்டால் சரிப்படலாம். ஆச்சானுரையில் கண்ணன் நோக்கு வதும் இவர்கள் நோக்குவது மெல்லாம் கலந்தாற் போல் கூறப்பட்டுள்ளது. உற்று நோக்கில், நீ கண்ணுற நோக்கி ஆர்வம் தன்னைத் தணி என்பதே ஒரு வாக் யம். நடுவே, 'நாங்களும்' என்றது, 'நாங்களும் நோக்குகிறோம்' என மற்றொரு வாக்யத்தைக் கருதி யாம். நோக்கி என்ற பதத்தின்மேல் நாங்களும் என்று உம் மையுடன் அமைத்ததிலிருந்தே அதற்கேற்ப, 'நோக்குவோம்' எனச் சொல் சேர்க் கக் கருதினது சொல்லாமலே விளங்கும். இது ஓர் அழகான ப்ரயோகம். நாங் களு மென்பதை முதலடியிலே இழைத்த என்பதோடும் சேர்க்கலாம். இழைக் கத் தெரியாத நாங்களும் முதுகு நோவ இழைத்த எனப் பொருள்படும். இதைக் காட்டிலும் முன் சொன்னதே அழகியது. சொல் உள்ள இடத்திலேயே பொருள் படுகிறது.

இப் பழைய பாடத்தை விட்டு நாங்கோளும் எனப் பாடம் கல்பித்து, கொள்ளும் என்றது கொளும் என விகாரப்பட்டதென்றால், நாங்களும் என்ற பாடத்தையே விடாமல், நாம் களும் எனப் பிரித்து கள்ளும் என்பது களும் என விகரித்ததாகக் கூறலாம். அதன் கருத்தாவது—, சிற்றிலில் உனக்குள்ள அபிநி வேசத்தை நாங்கள் களவு கொள்ளுகிறோம். அதை நோக்கிவிட்டபடியாலே அத்துடன் அங்கு ஆர்வத்தை விட்டு அதை எங்கள் மேல் வைக்கச் செய்கிறோம். ஆக நாங்கள் கள்ளும் ஆர்வ மிது என்றபடியாம்.

ஆர்வம் தன்னைத் தணிகிடாய் என்பதற்கு நீ நோக்க வேண்டு மென்று நாங்கள் சிற்றிலிழைப்பதால் நீ நோக்கினபோது எங்கள் ஆர்வம் தீரும்; அவ் வகையில் தணி எனக் கருத்துரைப்பர். சிற்றில் சிதையே லென்கிற சந்தர்ப் பத்தை நோக்குங்கால், 'உனக்குள்ள ஆர்வத்தை கண்ணுற நோக்கிவிட்டுத் தணித் துக்கொள். மேலே சிதைப்பதிலும் கொண்டு போகாதே' யெனக் கருத்துரைத் தல் தகும். நாங்களும் என்ற வாக்யத்தின் கருத்தாவது——சிறிது சிறிதாக நாங்கள் செய்து கொண்டு வரும்போதே நீ அழித்து வந்தால் முழுமையுமாகச் சேர்த்துக் காண்பதேது? நாங்களும் கண்ணுற நோக்கவேண்டும். ஆகவே அழிக்கவேண்டாம். எல்லாம் செய்தான பிறகு நீ அவற்றை நோக்குவதை நாங்கள் நோக்கவேண்டும். இப்படித் தணிந்த ஆர்வத்துடனுள்ள உன்னையும் நாங்கள் கண்ணுற நோக்குவோம். ஆகவே நாங்களும் நோக்க (நோக்கும்படி) நீ நோக்கி ஆர்வம் தணி யென்றதாயிற்று.

அன்று இத்யாதி. பாலகன் பாலகன்; வாலகன். சிறு பையனை நான் இவ்வளவு யோசிக்கத் திறமை யற்றவனென்னவேண்டா. சிறு குழந் தையா யிருக்கும் போதே எவ்வளவு திறமையைக் காண்பித்திருக்கிறாய். பெருங் கடலிலே ஆலந்தளிரிலே படுத்தாய். தளிர் நீரில் மூழ்கிப் போகாதபடி வெகு இலகுவா யிருந்தாய். உலக மெல்லாம் அழிந்திருந்தும் அவ்வுலகமடங்கலும் குழந்தை வடிவ வயிற்றி லடங்கி யிருக்கும்படி செய்தாய். அதனால் பிறகு

GOVERNMENT ORIE...

உலக ஸ்ருஷ்டிக்கும் காரணமானாய். இப்படிச் சிறு பாலகனாயிருந்து எல்லாவற்றையும் வயிற்றிலும் வைத்துக் காத்தும் பாலகனை நீ ஆராயத் திறமையற்றவனாவாயோ? ஆகையால் உன்னிடம் ஒரு குறைவுமில்லை. 'மத்பாபமேவாத்ர நிதாநமாஸீத்' 'மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி ந ஸம்சய:'. எங்கள் பாவம் உனக்கெங்களிடம் இரக்க மிராதபடி செய்கிறது எனப் பின்னடிகளுக்குப் பொழிப்பாம். .... (2)

நான் சிற்றிலைச் சிதைப்பேன் என்று நினைத்து இங்கே கண்ணோட்டமாக இவர்கள் இருக்கின்றார்களா, வேறிடத்திலா? வேறு நோக்காக இருந்தால் அவர்களுக்குத் தெரியாமே சிதைத்துவிடலாம் எனக் கருதி அவர்களைக் கடைக் கண்களால் நோக்கினான். அதனைக் கண்டு கூறுகின்றனர்—

3. குண்டு நீருறை கோளரீ மத யானைகோள்விடுத்தாயுன்னைக்
கண்டுமாலுறு வோங்களைக்கடைக் கண்களாலிட்டு வாதியேல்
வண்டல் நுண்மணல் தெள்ளியாம்வளைக் கைகளாற்சிரமப்பட்டோம்
தெண்டிரைக்கடற் பள்ளியாயெங்கள் சிற்றில்வந்துசி தையேலே. (13)

குண்டு	ஆழமான
நீர்	கடலில் (ப்ரளயகாலத்தில்)
உறை	வஸிக்கின்ற
கோள் அரீ	மிடுக்கையுடைய சிங்கமே!
மதம் யானை	மதம் பிடித்த யானையின்
கோள் விடுத்தாய்	கோளைத் தொலைத்தவனே!
தெண்	தெளிவு பெற்ற
திரை	அலைகளை யுடைய
கடல்	சமுத்திரத்திலே
பள்ளியாய்	சயனித்திருப்பவனே!
உன்னை கண்டு	உன்னைப் பார்த்த க்ஷணத்திலேயே
மால் உறு வோங்களை	மோஹத்தை யடைந்த எங்களை

கடைக்கண் கள் இட்டு	(நீயும்) உனது கோணப் பார்வைகளை யெறிந்து
வாதியேல்	நலிய வேண்டாம் (ஆல் = வருத்தம்)
வண்டல்	நீரால் ஒதுக்கப்பட்ட மண்ணிலிருந்து
நுண் மணல்	—சிறிய மணற்களை
வளை கைகளால்	வளையல்கள் அணிந்த கைகளால்
தெள்ளி	—புடைத்தெடுத்து
யாம்	—நாங்கள்
சிரமப் பட்டோம்	கஷ்டப்பட்டுச் செய்தோம்
எங்கள் சிற்றில்	நாங்கள் செய்திருக்கும் சிற்றில்களை
வந்து சிதையேல்.	வந்து அழிக்க வேண்டாம்.

கோளரீ. ப்ரளய நீரிலே யிருப்பவனைச் சிங்கமென்பதென் என்ன வேண்டா. அவ்யக்தோபநிஷத்திலே ஏகோதக சமுத்ரத்தில் நரசிங்கனாகவே அவன் இருப்பது ஓதப்பட்டிருப்பது காண்க. சிங்கம் யானையைக் கொன்றதென்றே லொக்கும். யானையின் துயரத்தைப் போக்கி அதனைக் காத்தருளினது இஃதொரு அற்புதமே. **மதயானை.** கஜேந்த்ராழ்வான் பல யுகங்கள் முதலையோடு போரிட்டுக் கடைசியிலேயே யன்றோ மூலமே யென்று கூவினது. ஆக வலி வுள்ள அதை மதமுள்ள யானை யென்பது தகும். 'மதமொழுகு வாரணமுய்ய வளித்த' (4—10) எனவருளிச்செய்வரே. இனி, **கோள் விடுத்தாய்** என்ற விடத்தில் கோள் என்பதற்குத் துயரம் எனப் பொருள் கொள்ளாது, **கோளரீ** என்ற விடத்திற் போலே மிடுக்கு என்றே பொருள் கொண்டால், தன் சிங்கத்

தன்மைக்கேற்ப, மதம் பிடித்த குவலயாபீடத்தின் மிடுக்கை யடக்கினது சொல்லப்பெறலாம். அதனை அழித்தேயிருந்தாலும், 'அதன் கொம்பொசித்தான்' என்றாற்போலே 'அதன் கோள் விடுத்தான்' என்னலும் கூடும். உன்னை யித்யாதி. நாங்கள் கண்டதற்கே மயங்கிக்கிடக்கிறோம். நீயும் இரண்டு கண்களாலும், ஒருவித நோக்க மிராது கண்டால் அவ்வளவு கலிவில்லை. கடைக் கண்களால் காணுவது மிகவும் வாதிக்கின்றதென்றபடி.

வண்டல் இத்யாதி. முன்பாட்டிலே மணலைச் சேர்த்த பிறகுச் சிற்றில் விடுவதில் முதுகு நோவு மொழியப்பெற்றது. இப்போது மணல் தெள்ளுவதில் ச்ரமம் சொல்லிற்றும். வண்டல் நுண்மணல் ஒதுக்குமணல். வளைக்கைகள். இட்ட வளைகளில் ஒன்றும் அழியாதபடி மெதுவாய் வெகு காலம் தெள்ளி யெடுத்ததில் ச்ரமம் அதிகம். தெண். ஆழமான பாற்கடலிலே அழுக்குச் சேர இடமில்லை யாகையாலே எவ்வளவு திரை யுண்டானாலும் தெளிவுக்குக் குறையில்லை.

கோளரியான நீ யானையிடம் உனது திறலைக் காண்பிக்கவேண்டுமே யொழிய வளைக்கைகளால் சிற்றில் செய்யும் சிறுமிகளிடம் தீம்பு செய்வது தகுமோ? கஜேந்த்ரனைக் காத்த கருணாநிதியான நீ காக்கக் கடாக்ஷிக்காமல் வாதிக்கப் பார்ப்பது பொருந்துமோ? பாற்கடலில் பள்ளிகொண்டவண்ணம் உனது திருமாளிகையிலே பள்ளிகொண்டிருப்பதை விட்டு ஏன் இங்கு வரவேண்டும்? நீ இருக்குமிடங்களுக்கு இதனால் யாதொரு கேடு மில்லையே. சிற்றிலைச் சிதைத்ததாலுனக் காவதென்? நீ கடலுக்கு அணை கட்டினயே. அப்போது யாராவது தடை செய்தழித்திருந்தால் உனக்குச் சின மெவ்வளவு இருந்திராது? என்றபடி..... (3)

தாமரைக்கண்ணாலே கடாக்ஷித்த கண்ணன் இவர்கள் பேச்சைக் கேட்டு, 'நீங்கள் கண்பார்வையைக் கூடப் பொறுக்காத எளிய பெண்பிள்ளைகள்' என்று பேசிக்கொண்டே சிற்றில் சிதைக்க முயன்றான். அதைக் கண்டு மீண்டும் மொழிகின்றனர்—

4\. பெய்யுமாமுகில் போல்வண்ணாவுன்றன் பேச்சுஞ்செய்கையு மெங்களை
மையலேற்றி மயக்கவுன்முகம் மாயமந்திரந் தான்கொலோ
நொய்யர்பிள்ளைக ளென்பதற்குன்னை நோவநாங்களுரைக்கிலோம்
செய்யதாமரைக் கண்ணினா யெங்கள் சிற்றில்வந்துசி தையேலே. (14)

பெய்யும்	—மழை பெய்யும்	மையல் ஏற்றி	வ்யாமோஹத்தை விருத்தி செய்து
மா முகில் போல்	பெரிய மேகம் போன்ற	எங்களை	அன்புள்ள எங்களை
வண்ணா	—வர்ணமுள்ளவனே!	மயக்க	—மயங்கிவிடச் செய்யும்படி
செய்ய தாமரை கண்ணினாய்	செந்தாமரைக் கண்ணனே!	உன் முகம்	—உனது திருமுகமானது
உன் தன்	—உன்னுடைய	மாயம் மந்திரம் தான் கொல்	ஆச்சரியமானதொரு மந்திரந்தானோ.
பேச்சு உம் செய்கை உம்	பொருளில்லாத வார்த்தைகளும் தீம்பாக முடியும் செயல்களும் கூட	(ஏனெனில்)	
		'நொய்யர்	—'இவர்கள் எளியவர்;
		பிள்ளைகள்	—சிறிய பெண்கள்'

என்பதற்கு } என்று நீ சொல்வதற்கு எதிராக
கோவ } உன் மனம் நொந்து போம்படி
நாங்கள் உன்னை
உரைக்கிலோம் } ஒன்றும் தூஷணமாகச் சொல்வதில்லை
(நாங்கள் இப்படி அடங்கி யிருக்கும்போது) எங்கள் சிற்றில் வந்து சிதையேல்.

உனது ஏசும் பேச்சுக்களும் இழிவான செயல்களுமே எங்களை மயக்குகின்றனவென்றால் அதற்குக் காரணம் வேறு இருக்கவேண்டும். உரோடத்தை யுண்டுபண்ணவேண்டியவை மயங்கச்செய்வதென்றால் ஏதோ மாய மந்திர பலத்தா லென்னவேண்டும். அம் மந்த்ரந்தானும், ஆராயுங்கால், உனது திருமுக மென்றே தேறும். அதனைக் கண்டுதானே அவற்றை யெல்லாம் கூட அநுகூலமாகவே நினைக்கிறோமென்றபடி. என்பதற்கு என்பதற்கு 'என்று நீ சொல்லுவாய் என்று பயப்பட்டு' என வுரை செய்வது முண்டு- அவதாரிகைக் கேற்பப் பதவுரை அமைந்தது காண்க. .... (4)

இவ்வளவு சொல்லியும் சிற்றிலைச் சுற்றி யிட்ட கோலங்களை யழித்து வரும் கண்ணனைக் கண்டு கோபத்தை யடக்கிப் பேசுகின்றனர்—

5. வெள்ளைநுண்மணற் கொண்டு சிற்றில்வி சித்திரப்பட வீதிவாய்த்
தெள்ளி நாங்களிழைத்தகோலமழித்தியாகிலு முன்றன்மேல்
உள்ளமோடியுருகலல்லாலுரோடமொன்றும்லோங்கண்டாய்
கள்ளமாதவா கேசவாவுன்முகத்தனகண்களல்லவே. (15)

கள்ளம் } கபடச் செயல்களை இங்குடைய
மாதவா —ச்ரிய: பதியே!
கேசவா —கேசியை ஸம்ஹரித்தவனே!
வெள்ளை நுண் மணல் } வெளுத்த சிறிய மணற்களை
கொண்டு —களுகளி லெடுத்துவந்து
சிற்றில் விசித்திரப்பட } பலவித சிற்றில்கள் அமையும்படி
வீதி வாய் தெள்ளி } தெருவிலே கொழித்து
நாங்கள்
இழைத்த —படைத்த
கோலம் —அலங்காரங்களை
அழித்தி —அழிக்கிறாய்.

ஆகிலும் —இப்படி யழிக்கும்போதும்
உன்தன் மேல்-உன் விஷயத்தில்
உள்ளம் —எங்கள் ஹ்ருதயமானது
ஓடி } உன் ரூபகுண சேஷ்டிதங்களி லெல்லாம் விரைந்து சென்று
உருகல் அல்லால் } வியப்புண்டு உருகி விடுவதைத் தவிர
உரோடம் ஒன்றும் } கோபமென்பது சிறிதும் (நாங்கள்)
இலோம் —உடையோமல்லோம்.
உன் முகத்தன } உன் முகத்திலிருக்குமவை
கண்கள் அல்லவே } கண்களல்லவோ ?

உன்தன்மேல் என்பது ஓடி, உரோடம் என விரண்டிலும் சேருவதாம். உன் முகத்தன கண்களல்லவே. கண் என்ற பெயர், காணும் வல்லமை உள்ளபடி. கண்டால் தான் தகும். குணமுள்ள அழகிய சிற்றில்களை அங்ஙன மல்லனவாகவும், உன்னிடம் உரோட மொன்று மில்லாமே உருகுகின்ற உள்ளமுள்ள எங்களை அவ்வாறன்றியும் காண்கின்ற கண்கள் கண்களாமோ? உள்ளபடி கண்டிருந்தால் நீ சிதைக்க நினைப்பாயோ? இப்படிக் கண்ணில்லாத உன்னைக் கண்ணனென்றுதான் எப்படி நினைக்கிறது? மாதவனும் ப்ரம்மருத்ரேச்வரனுனதாலே கேசவனுமுள்ள நீ ஒருக்கால் தேவதாந்தரத்தின் பூஜையைப் பொறுக்காமல் கள்ளமாக இப்படிச் செய்கிறாயோ என்றபடி.... .... (5)

நானொன்றும் சிதைப்பதற்காகவே வந்தேனல்லேன். என் முகத்தன கண்களானபடியால்தான் இங்கே இருக்கின்றேனென்று மேலும் கண்ணோட்டம் வைத்துக் காதலனின் நிலையைக் கொண்டான் கண்ணன். அப்போது சொல்லுகின்றனர்—

6. முற்றிலாதபிள் ளைகளோம்முலை போந்திலாதோமை நாடோறும்
சிற்றில்மேலிட்டுக் கோண்டுநீசிறி துண்டுதிண்ணென நாமது
கற்றிலோம்கடலையடைத்தரக்கர்குலங்களை முற்றவுஞ்
செற்றிலங்கையைப் பூசலாக்கிய சேவகாவெம்மை வாதியேல். (16)

கடலை அடைத்து — சமுத்திரத்தில் அணை கட்டி
அரக்கர் குலங்களை — ராக்ஷஸக் கூட்டங்களை
முற்றவும் —முழுமையும்
செற்றி —அழித்து
இலங்கையை—லங்கா நகரத்தை
பூசல் ஆக்கிய –போர்க்களமாக்கின
சேவகா —வீரனே!
நாள்தொறும்—தினந்தோறும்
சிற்றில் —சிற்றில் செய்வதை
மேல் இட்டு —மேலுக்கு வியாஜமாக்கி—
முற்று இலாத–பக்குவம் பெறாத

பிள்ளைகளோம்–சிறு பெண்களாய்
முலை போந்திலாதோமை — ஸ்தனமும் கிளர்ந்து வராமலிருக்குமெங்களை
கொண்டு -ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு
நீ (செய்வதும் பேசுவதுமான)
சிறிது உண்டு –சில விஷயங்கள் உள.
அது —அந்த விஷயத்தை
திண்ணென —திடமாக
நாம் கற்றிலோம். — நாங்கள் கற்றிருக்கிறோமல்லோம்.
எம்மை —எங்களை
வாதியேல் —நலிய வேண்டாம்.

நீ சிறிதுண்டு என்றவிடத்தில், செய்வது என்றோ பேசுவதென்றோ ஒன்றைச் சொன்னால் மற்றொன்றை விட்டுவிடும்படியாம்; ஒன்றும் ப்ரயோகிக்காத போது கூடுமான சொல்லெல்லாம் சேர்க்கப்படுமெனக் கருதி அதைச் சொல்லாதொழிந்ததென்க. அப்படிச் சொற்களைச் சேர்க்காமலே பொருள் கொள்ளப் பார்க்கில், நீ என்ற வரையிலுள்ளதை சிறிதுண்டு என்றதோடு சேர்க்காமல், 'நீ வாதியேல்' எனமேலே சேர்க்க. ஒரு பெண்மணிக்காக நீ கடலை யடைத்தது முதல் செய்த செயல்களை நினைத்தபோது உனக்கு அநுராகத்திற்களவில்லை யென விளங்கும். ஆகிலும் அவளைப் போல் நாங்கள் பருவம் பெற்றிருக்கவில்லை யாகையால் வாதிக்கவேண்டாம். நீ போர் புரிந்து பாதிப்பது அரக்கரிடம் தகும்; எங்களிடம் தகாதென மேலடிகளின் கருத்து. .... (6)

'சிறிதுண்டு' என்று நீங்கள் சொல்வது சரியில்லை. சிற்றிலிழைக்கிறீர்களே. இது யாருக்கு? உங்கள் இல்லங்களில் பலர் இருப்பதாலே வேறிடம் தேடுகிறீர்களாகில், யமுனைக்கரையிலுள்ள புதர்கள் போன்ற இடங்கள் தகும். இத்தகைய சிற்றில்களைச் செய்தென் பயன்? காமன் போதருவா னென்று செய்கிறோ மென்னில், காமன் ரதியோடு கலந்து பரிமாறத்தான் இவை போதுமோ' என்றவாறெல்லாம் பேசிக்கொண்டே சிற்றில் சிதைக்க முயன்றான். அப்போது உனக்கு எங்களை நலிந்துதான் என்ன பயன்? 'நலிந்தால் விநோதமாகப் பேச்சு வளரும். கேட்டுக் களித்து மேன்மேல் சொற் பொழிந்து ஸந்தோஷிக்கலாம்' என்பது மில்லையே யென்கிறனர்—

7\. பேதநன்கறி வார்களோடிவை பேசினல்பெரி தின்சுவை
யாதுமொன்றறி யாதபிள்ளைக ளோமைநீநலிந் தென்பயன்
ஓதமாகடல் வண்ணவுன்மண வாட்டிமாரோடு சூழறும்
சேதுபந்தந் திருத்தினையெங்கள் சிற்றில்வந்துசி தையேலே. (17)

ஓதம்	—பெருந்திரைகள் உள்ள
மா	—பெரிய
கடல்	—கடலின்
வண்ண	—நிறமுள்ளவனே!
சேதுபந்தம்	—அணை கட்டலை
திருத்தினை	—நன்கு செய்தவனே !
பேதம்	—வேறுபாட்டை
நன்கு	—நன்றாக
அறிவார்களோடு	தெரிந்துகொள்ள வல்லவர்களோடு
இவை	—இப்பேச்சுக்களை
பேசினல்	—நீ பேசினையாகில்
பெரிது இன் சுவை	மிகவும் போக்யமான அனுபவமுண்டு.
யாது ஒன்றும்	எந்த விஷயத்தையும் சிறிதும்
அறியாத	—தெரிந்துகொள்ளமாட்டாத
பிள்ளைகளோமை	சிறுமிகளான எங்களை
நீ நலிந்து	—நீ வாதித்து
என் பயன்	—பெறும் பலன் என்னவோ!

எங்கள் சிற்றில் வந்து சிதையேல். (அப்போது)

உன் மணவாட்டிமாரோடு	நீ மணந்திருக்கும் பெண்மணிகள் மேல்
சூள் அறும்	—ஆணை இராமலிருக்கும்.

சேதுபந்தம் திருத்தினவனுக்கு மணவாட்டி ஒருவளாயிருக்க மணவாட்டிமா ரெனப் பன்மை பொருந்துமோ வென்னில், எங்களை யிப்படி நலியும் நீ அப்போதுமட்டும் ஏகதாரவ்ரதனாயிருந்திருக்க முடியுமோவென்று பரிஹஸித்ததாம். இனி, 'அவ்வொருத்தியைப் பல மனைவிகளின் ஸ்தானத்திலே வைத்துப் பாராட்டும் உனக்கு அவளிடத்தில் சிறந்த மதிப்புண்டே; அப்படிப்பட்டவள் பேரில் ஆணை வைப்போ' மென்று பயமுறுத்தப் பன்மையாம். அன்றி, அவனுக்கே மூலமான பரவாஸுதேவன் நிலைமையிலும், பின்னிட்ட இந்த வாஸுதேவன் நிலைமையிலும் பல மணவாட்டிகளுண்டாகையால் ஒரு குறையுமில்லை.

சூழறும் என்றே பெரும்பாலும் ஓதுவது. ஆணையென்று பொருளுரைப்பர். சூள்=ஆணை. வாழைப் பழத்தை வாளைப்பளம் என்பதுபோல், மாறுபாடாக, சூள் என்பது விகரித்து சூழ் என்ற வழக்குச்சொல்லாயிருந்ததென்னலாம். சூள் என்னமே, சூளறும் என்றது இவர்கள் ஆணையிடமாட்டாமே ஆணையிட்டிடுவதாக மிரட்ட நினைத்தாம். இனி சூழ் சுற்று=சூழ்வதென வுரைத்து உன் மணவாட்டிகளோடு நீ சூழாதபடி செய்துவிடுவோம். எங்களிடத்திலேயே உன்னை யடக்கி வைத்துக்கொள்வோமென்றும் பொருள்படுவதற்காக, 'சூளறும்' என்னமே சூழறும் என்று மழலைச்சொல் போல் இவர்கள் சொன்னார்களென்னலாம். மேலே 'ஆயர்சிறுமிகள் மழலைச் சொல்லை' (10) என்றது காண்க. இதனுல் பெரிதின் சுவை பெறுவிக்கும்படி எங்களுக்கும் பேசத் தெரியுமென்று மறிவித்ததாம். (7)

என் பேச்சின் இன்சுவை யனுபவிக்க மாட்டிவீர்களாகிலும், எனது அழகிய வடிவம் கண்டு கன்னலுண்ணுமா போலே களித்திருங்கள் என்றனவன். அப்போது சொல்லுகின்றனர்.—

8. வட்டவாய்ச்சிறு தூதையோடுசிறுசுளகும்மண லுங்கொண்டு
இட்டமாவிளை யாடுவோங்களைச் சிற்றிலீடழித் தென்பயன்?
தொட்டுதைத்து நலியேல்கண்டாய்சுடர்ச் சக்கரங்கையி லேந்தினாய்
கட்டியுங்கைத் தாலின்னாமைய றிதியேகடல் வண்ணனே. (18).

சுடர்	—ஜ்வாலைகள் நிரம்பின
சக்கரம்	—திருவாழியை
கையில்	—திருக்கையில்
ஏந்தினாய்	—தரிப்பவனே !
கடல்வண்ணனே	கடல் நிற முள்ளவனே !
வட்டம்	—மண்டலாகாரமான
வாய்	—முகத்தையுடைய
சிறு	—சிறிய
தூதையோடு	—கலசத்தையும்
சிறு சுளகு உம்	சிறிய முச்சிலையும்
மணலும்	—மணலையும்
கொண்டு	—எடுத்துவந்து

இட்டம் ஆ	எங்களுக்கு இஷ்டமான படியிலே
விளையாடுவோங்களை	விளையாடும் எங்களுடைய
சிற்றில்	—சிற்றிலை
ஈடு அழித்து	—நன்றாக அழித்து (பெறும்)
என் பயன்	—பலன் என்ன?
தொட்டு உதைத்து	சிற்றிலைத் திருவடியால் தொட்டு உதைத்து
நலியேல்	—வாதிக்கவேண்டாம்.
கைத்தால்	—கசந்து விட்டால்
கட்டி உம்	—வெல்லக்கட்டியும்
இன்னாமையை	இனியதாகாதென்பதை
அறிதியே	—அறிகின்றாயே.

வட்டவடிவமான சிறு தூதையைச் சொன்னபோது அப்படிக் கொத்த சக்கரம் நினைவுற்றது. அவனும் தன்னை போக்யமாகக் காண்பிக்கக் கடல் வண்ணனாய்த் தனது பெருமை தோற்றச் சக்கரம் ஏந்தி நின்றான். அவனைக் கண்டவுடன் அவர்களுக்குத் தேவதாந்த்ரார்ச்சனையில் மனம் செல்லவில்லை. ஆகிலும் சிற்றில் சிதைப்பதை விரும்பவில்லை. சிறுமிகள் செய்யும் விளையாட்டாகச் சிற்றிலிழைப்பதை எண்பிக்க நினைத்தார்கள். அதன்மேல் சொல்லுகின்றனர். நாங்கள் மிகச் சிறிய பெண்களானபடியாலே மற்றொருவருடைய இஷ்டப்படி நடந்துகொள்ளத் தெரியாமல் எங்கள் இஷ்டப்படி ஏதோ விளையாடுகிறோம். எங்கள் தூதையையும் சுளகையும் பார்க்கும்போது நாங்கள் விளையாடுகிறோமென்பது விளங்குமே. இப்படி நாங்களே காமார்ச்சனையை விட்டிருக்க எங்கள் சிற்றிலை யழித்தாக வேண்டியதென் என்றவாறு.

தொட்டுதைத்து. தொடுக்கிறாப்போலே பாவித்து ஸமயம் பார்த்து உதைத்து. கட்டியும் கைத்தாலின்னாமை. வெல்லத்திற்கு இனிப்பு இயற்கைக் குணமாயிருக்கக் கைப்பு எங்ஙனமென்னில், கண்ணில் பித்ததோஷமுள்ளவனுக்கு எல்லாம் பொன்னிறமாகக் காணப்படுவது போல், நாக்கில் கைப்புள்ளவனுக்கு வெல்லமும் கைத்துவிடுமென்க. இதனால் உன்னிடம் போக்யதைக்குக் குறையில்லை. எங்கள் மனம் கெட்டிருப்பதால் இப்போது நீ போக்யனாகா யென்றறிவித்தபடியாம். 'தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே ப்ருசம்' (கண்ணோயுள்ளவனுக்கு விளக்குப் போல் நீ எனக்கு ப்ரதிகூலமாயிருக்கிறாய்) என்று ஸீதைப்பிராட்டியைப் பார்த்துச் சக்கரவர்த்தித்திருமகன் அருளிச் செய்தது போலாமிது. (8)

வெளிப்புறங்களிலே சிற்றிலிழைத்தால் கண்ணன் வந்து கலைத்துப் பல தீம்புகளும் செய்கின்றானென்று வீட்டிற்குள்ளே முற்றத்திலே சேர்ந்து கதவையு மடைத்துவிட்டுச் சிற்றிலிழைத்தனர் சிறுமிகள். அப்போது அவனும்,

'இந்த இடம்தான் நமது ஆர்வம் தீர்க்கத் தகுந்ததாகு' மென மகிழ்ந்து வந்து புகுந்து, வெளியிலுள்ளவர் யாரும் வராத அவ்விடத்திலே பலாத்காரமாகப் பிணங்கமுயற்சி செய்தான். அத்தசையிலே சொல்லுகின்றனர்—

9. முற்றத்தூடுபுகுந்துநின்முகங் காட்டிப்புன்முறு வல்செய்து
சிற்றிலோடெங்கள் சிந்தையுஞ்சிதைக் கக்கடவையோ கோவிந்தா
முற்றமண்ணிடந் தாவிவிண்ணுற நீண்டளந்துகோண்டாயெம்மைப்
பற்றிமெய்ப்பிணக் கிட்டக்காலிந்தப் பக்கம்நின்றவ ரென்சொல்லார். (19)

கோவிந்தா —கோவிந்தனே !	எங்கள் —எங்களுடைய
முற்ற மண் இடம் } உலகங்களை யெல்லாம்,	சிற்றிலோடு —சிறிய வீடுகளையும்
தாவி —தாண்டி	சிந்தை உம் —மனத்தையும்
விண் உற —பரமபதத்திற்படும்படி	சிதைக்க கடவையோ } அழித்தாகவேண்டுமோ ?
நீண்டு —வளர்ந்து	எம்மை —எங்களை
அளந்து கொண்டாய் } அளந்து மாவலியினிடம் பெற்றவனே ! (நீ)	பற்றி —பிடித்து
முற்றத்தூடு —வீட்டு முற்றத்தின் நடுவிலே	மெய் பிணக்கு } அணைகை போன்ற உடல் சேர்த்தியைச்
புகுந்து —நுழைந்து	இட்டக்கால் —செய்தால்
நின் முகம் காட்டி } உனது திருமுகத்தை எல்லோருக்கும் காண்பித்து,	இந்த பக்கம் —சுற்றுப்புறங்களில்
புன் முறுவல் செய்து } புன்சிரிப்பும் செய்து,	நின்றவர் —நின்றிருப்பவர்
	என் —எதைத்தான்
	சொல்லார் —சொல்லமாட்டார்?

கோவிந்தா ! உன் பெயருக்கேற்ப, நீ மாடு மேய்க்கப் போயிருப்பதாக நினைத்துச் சிற்றிலிழைக்கப் புறப்பட்டோம். ஆயினும் ஒருக்கால் அதற்குள் நீ வந்தால் என் செய்வது என்று பயந்தே வீட்டுக்கு வெளியில் செய்வதைவிட்டு முற்றத்திலிழைக்க இறங்கினேம். நீ எப்படியோ கதவைத் திறந்து முகங் காட்டி முறுவல் செய்து கொண்டு முற்றத்தின் நடுவே வந்து நின்றாய். முற்றத்தில் வந்து நின்று இங்குக் கூடியிருக்கு மொவ்வொரு பெண்ணுக்கும் தனித் தனியே முகம் காட்டி முறுவலும் செய்கிறாய். 'வரமுடியாதென நினைத்தீர்களே. வந்தேன் பாருங்கள்' என்கிறாய்போலும். முன்னே சிற்றில்மட்டும் சிதைந்தது. இப்போதெங்கள் சிந்தையும். நாங்கள் நினைத்தது பிசகு. நீ மிகச் சிறிய வாமநனாய் மூவடி மண் இரந்து அப்போதே முற்ற அளந்திட விண் வரை வளர்ந்தவனல்லையோ. முற்றம் புகுவது உனக்கு மிகப் பெரிதா. வந்தது கிடக்கட்டும். 'நீங்கள் முற்றத்தில் யாரும் வராத விடத்தில் இருப்பதே எனக்கு அனுகூல' மென நினைத்துத் துணிந்து எங்களைப் பற்றுகிறாய்; அணைகிறாய்; என்னென்னமோ செய்கிறாய். சுற்றுப் பக்கங்களில் நின்றிருப்பவர் பல விதமாக எங்களைப் பரிபவிப்பார்களே. நாங்கள் என் செய்வது என்றவாறு கூறினர். .... (9)

10. சீதைவாயமு தமுண்டாயெங்கள் சிற்றில்நீசிதை யேலென்று
வீதிவாய்விளை யாடுமாயர்சிறுமியர்மழலைச்சொல்லை
வேதவாய்த்தொழி லார்கள்வாழ்வில்லி புத்தூர்மன்விட்டு சித்தன்றன்
கோதைவாய்த்தமிழ் வல்லவர்குறை வின்றிவைகுந்தம்சேர்வரே. (20)

சீதை —சீதைபிராட்டியின்
வாய் ஆமுதம் } அதரத்தின் அமிருதத்தை
உண்டாய் —பானம் செய்தவனே!
எங்கள் —எங்களுடைய
சிற்றில் —சிற்றில்களை
நீ சிதையேல்—நீ அழிக்கவேண்டாம்.
என்று —என்றவாறு
வீதிவாய் —தெருவிலே
விளையாடும் --விளையாடின
ஆயர் சிறுமியர் } இடப்பெண்களின்
மழலைச் சொல்லை } அரைகுறையாகப் பேசினதைப் பற்றின—
வேதம் —வேதத்தைச்சேர்ந்த

வாய் தொழிலார்கள் } வாயும் க்ரியையு முடையவர்கள்
வாழ் —வாழ்கின்ற
வில்லிபுத்தூர்–வில்லிபுத்தூருக்கு
மன் — ஸ்வாமியான
விட்டுசித்தன் தன் } பெரியாழ்வாருடையவளான
கோதை —ஆண்டாளின்
வாய் —வாக்கிலிருந்து பிறந்த
தமிழ் --தமிழ் மாலைகளை
வல்லவர் --அப்யஸித்தவர்
குறைவு இன்றி } இங்குக் குறைவற்றிருந்து, பிறகு
வைகுந்தம் —வைகுண்டத்தையும்
சேர்வர் --பெறுவர்.

முன்பாசுரத்திற் கூறியபடி மெய்ப்புணர்ச்சி யிட்ட கண்ணன் ஆய்ச்சிகளின் வாயமுத முண்ண முயன்றது தோற்ற இங்கே, சீதைவாயமுதமுண்டாய் என்றதாம். வீதிவாய் விளையாடு மாயர் 'விளையாடு மென்றதாலே இவர்கள் விளையாட்டுக்குச் சிற்றிலிழைத்ததாகத் தோன்றுகிறது. காமன்போதருகால மென்ற முதற்பாட்டைப் பார்த்தபோது நோன்பு நோற்பது தோற்றும். எது உண்மை' யென்னில்—சிறுமிகளானபடியாலே நோன்பு நோற்பதும் விளையாட்டாகவே யிருந்ததென்க. அல்லது, விளையாடும் சிறுமிகளே இவர்கள். கண்ணன் சிதைக்காமலிருக்கவேண்டு மென்று அவனைக் கணவனாகப் பெறக் காமனுக்கு நோன்பு நோற்பதாக நடித்தனர் என்றதாம். அல்லது, சிறுமிகளின் கூட்டத்தில் சிலர் நோன்பு நோற்பவர். அவர்களுக்கு ஸஹாயமாயிருந்து சிற்றிலிழைத்தனர் சில விளையாடும் சிறுமிகள் என்றவாறு ஆராய்க.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 2. நாமமாயிரம் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

கோழியழைப்பதன்முன்னம். 3.

(துகில்தரவேண்டுதல்)

கோபஸ்த்ரீகள் பொய்கையின் கரையில் பட்டுவஸ்திரங்களை அவிழ்த்து வைத்துவிட்டுப் பனி நீராடினபோது கண்ணபிரான் காணுமே போந்து அவற்றை யபஹரித்துக்கொண்டு குருந்தமேறி ஒளித்து உட்கார்ந்துவிட்டான். அவர்களும் அதனை யொருவாறு கண்டு, 'பட்டுப் பணியாய்' என்று ப்ரார்த்தித்துக் கொண்டனரென்பது மேற்றிருமொழியின் விஷயம். இதை யருளிச்

செய்யக் காரணம் முன்பே சொன்னோம். இங்கே காமார்ச்சனை செய்து, 'எம்மைப்பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் என்றபடி கலவி யேற்படவே இப்படி ஈருடம்பு ஒருடம்பானவர்கள் பிரிந்து கூடினால் இருப்பு காய்ந்து பொருந்துவது போலாகும். போகம் வளரும். இல்லையேல் இருதலையு மழியு' மென வாயர்கள் நினைத்து இவர்களை வெகுநாள் பிரித்துப் பனிநீராட்டம் வியாஜமாக வெளிப்படுத்தி மறுபடி சேர்வித்தார்க ளெனவு முரைப்பதுண்டு. இது முன் திருமொழியில் காமார்ச்சனையைச் சொல்லிப் பின்னே இதைச் சொன்னதற் கேற்பச் செய்த கற்பனையானாலும் அழகியதே. மார்கழி நீராட்டத்திற்குப் பிறகு தை மாசி பங்குனிகளிலே காமார்ச்சனை யென்பதும் முன்னே ஏற்பட்டுள்ளது. மற்றொரு படியும் கூடலாம். அதாவது—இடைச்சிகள் காம ஸமாச்ரயணம் செய்ததும் அப்போது கண்ணன் சிற்றில் சிதைத்ததும் நடந்தே யிருக்கும். இதில் ஐயப்பட வேண்டாம். பட்டைக் களவு கொண்ட கதையைக் கொண்டே இதுவும் நடந்திருக்கு மென இசையலாம். துகில் திருடினது ஸ்ரீபாகவதாதிகளிலே மிகவும் பிரஸித்தமாயிற்றே. இதில் காத்யாயனியின் அர்ச்சனைக்கிசையாமலே அவன் இவ்வண்ணம் வஸ்த்ராபஹாரம் செய்திருக்கலா மென்பதும் கூடுமே. தேவதாந்தரத்தின் பூஜையை இவன் தடுப்பவனல்லனோ என வறிவிக்க இத் திருமொழி யென்பது.

1. கோழியழைப்பதன்முன்னம் குடைந்துநீராடுவான்போந்தோம்
ஆழியஞ்செல்வனெழுந்தானரவணைமேற்பள்ளிகொண்டாய்
ஏழைமையாற்றவும்பட்டோ மினியென்றும் பொய்கைக்குவாரோம்
தோழியும்நாமும்தொழுதோம் துகிலைப்பணித்தருளாயே. (21)

அரவு அணை மேல் பள்ளி கொண்டாய் — சேஷ சயனத்திலே சயனித்திருப்பவனே!
குடைந்து நீராடுவான் — மூழ்கி ஸ்நானம் செய்வதற்காக
கோழி யழைப்பதன் முன்னம் — கோழி கூவும் காலத்திற்கு முன்னமே
போந்தோம் —வந்தோம்.
செல்வன் —ஸம்பத்துள்ளவனான
ஆழியன் — மண்டலாகாரமாயிருப்பவன் (சூரியன்)
எழுந்தான் — கடலினின்றுகிளம்பி விட்டான்.
ஆற்ற ஏழைமை உம் — எளிமைத் தனத்தை முழுதும்
பட்டோம் —அனுபவித்துவிட்டோம்.
இனி —இனிமேல்
என்றும் —எப்போதும்
பொய்கைக்கு —குளத்திற்கு
வாரோம் —வரமாட்டோம்.
தோழியும் —தோழிகளும்
நாமும் —நாங்களுமாகச்சேர்ந்து
தொழுதோம் —ஸேவித்தோம்
துகிலை —(எங்கள்) வஸ்திரங்களை
பணித்தருளாய் — கொடுத்தருளவேணும்.

ப்ராம்மமுஹூர்த்தத்திற்கு முன்னமே கோழி கூவிக் காலத்தைக் குறிக்கும். அது காலத்தை நமக்குத் தெரிவிக்க நம்மை அழைப்பது போலிருக்கும். அதற்கும் முன்னரே நாங்கள் நீராட வந்தோம். ஏனெனில், இரவில் இடைப் பெண்களோடு கலவி செய்து களைத்துறங்கும் நீ எங்களைப் பின்பற்றமாட்டா யென்றும், நீ விழிக்கும்போது உன் எதிரில் வந்து நிற்கவேண்டு மென்றும், நீராட ஒருவரும் வராதபோது வந்தால் துகிலைக் களைந்துவிட்டு விரைவின்றிக் குடைந்து குளிர நீராடலா மென்றும் நினைத்ததால். இப்போது என்னவாயிற்று? சூரியன்

மண்டலவடிவமாக எழுந்து வந்துவிட்டான். பலர் நீராட வருவதாயிற்று. நீரை
விட்டு வெளிப்புறப்பட முடியாமற் போய்விடுமே யென்று குடைந்து நீராடு
வதை விட்டு உன்னை யிரைஞ்சுகின்றோம். அரவணைப் பள்ளிகொண்டாய். நீயோ,
'ஆமாம் நான் மிகவும் களைத்துத்தானிருக்கிறேன். ஆகையாலே இங்கே வந்த
விடத்தில் உறங்குகிறேன்' என்று மரக்கிளையையே மிக வழகிய அரவணையாக்கிக்
கொண்டு நாங்கள் கேட்பதையும் கேளாதவன் போல் உறங்குகின்றாய். உலகில்
தாஸர்கள் தாஸிகள் போன்றாரை எசமான் என்ன செய்தாலும் கேட்பாரில்லை
யென்பர். நீ எங்கள் துகிலையும் அபஹரித்துக்கொண்டு நிர்வாணமாக நிறுத்தி
விட்டாய். இதற்கு மேல் எளிமைத்தன மென்ன? என்னைவிட்டு என் பொய்
கைக்கு வந்தீர்கள் என்கிறாயோ. இனி வருவதில்லை. வந்தால் வீட்டில் இருப்ப
தற்கு மேல் பரிபவம் அதிகமாகிறது. 'இருக்கட்டும் செய்த குற்றத்திற்கு நமஸ்
காரம் செய்யுங்கோள். பொய்கைக்கு வந்தது, விரதமநுஷ்டிப்போ மென்று
சொல்லி வஸ்திரமிராமல் நீராடினது, இரண்டு குற்ற மென்னில்—இதோ நமஸ்
காரம் செய்கிறோம். கரை யேறி வந்து நமஸ்கரியுங்கள் என்னில், அப்படியே
வருகிறோம். ஒரு கையால் நமஸ்கரிக்கிறோம். 'ஏக ஹஸ்த ப்ரணாமம் என்ற ஒற்
றைக்கை நமஸ்காரம் சாமரம் போடுகின்றவர்கள் தவிர மற்ற பேருக்குக் கூடாத
தாயிற்றே. ஆகையால் கைசேர்த்து அஞ்சலிபண்ணால் தான் நமஸ்காரமாகு'
மென்னில், அதுவும் செய்கிறோம். மானத்தைக் காக்க ஒரு கை வேண்டியிருப்
பதால் இருகைகள் சேராதபோது அஞ்சலியாகாததால் நாங்கள் சொந்த கை
யொன்றும் தோழிகையொன்றுமாக இருகைகளைச் சேர்த்துத் தொழுகிறோம்.
துகிலை யளித்தருள் என்றனர். ஆழியன் செல்வன். சந்தர்பத்தை யிட்டு ஆழியன்
என்பதற்கு சூரியனென்ற பொருள் கொள்ளப்படுகிறது. ஆழி—சமுத்ரம்.
அதிலே இரவில் இருந்தவன் இப்போது எழுந்தான். மண்டல வடிவமான சூரி
யன் முழுது மெழுந்தானெனவுமாம். ஆழி மண்டலம். செல்வன். 'பீஷோதேதி
ஸூர்ய:' என்றபடி எம்பெருமான் நியமனத்தை நடத்துவதால் செல்வமுள்ளவன்.
எல்லோரும் சந்திகளிலே ஸேவிக்கும்படி யுள்ளவன். எனிந்த சூரியன் எழுந்
தான்? எங்களுக்கு மானம்போகிறதே என்று அவனைப் பாழும் சூரியனென்று
பழிக்க இவ்வண்ணம் விபரீதமாய்ச் சொன்னதென்பது முண்டு. நல்ல காலம்
சூரியன் எழுந்தது. இல்லையேல் கண்ணன் எவ்வளவு காலமானாலும் நம்மை
விடான். இனிப் பிறர் வரும் காலம் நெருங்கினதால் நல்லதாயிற்று என்று சூரி
யனைக் கொண்டாடினதுமாம். இனி, இது கண்ணனைப் பார்த்துச் சொன்ன
தன்று. தாங்களே சொல்லிக்கொண்ட தென்னலாம். அதாவது—கோழியெ
ழுப்புவதற்கு முன்னமே போந்தோமே. கண்ணன் வரமாட்டானென்று தானே.
இதோ பாருங்கள்; துகிலைக் காணோம். அந்தத் திருவாழியானான ஸ்ரீமந் நாராய
ணன் எழுந்துவிட்டா னென்று தெரிகிறது. அவன் தான் வந்து கொள்ளை
கொண்டு போயிருக்க வேண்டு மென்றனர். அவன் மரத்தின்மீது இருப்பது
முதலில் தெரியவில்லை. அதனால் எடுத்துக்கொண்டு தன் இடம் பள்ளிகொள்ளப்
போய் விட்டானென்று நினைத்து அரவணைமேற் பள்ளிகோண்டா யென்றனர்.
நான் இங்கே இருக்கிறேனென்று மரத்தினின்று தொனி கிளம்பிற்று. பிறகு
மேலே சொல்லுகின்றனர் என்றவாறு கொள்க. ஏழமை யென்றவிடத்தில்

ஏழைமை யென்று சிலர் படிப்பர். 'தோழியும் நானு' மென்பதை விடத் தோழியும் நாமும் என்ற பாடமே சிறந்தது. ...., (1)

குருந்த மரத்தில் கண்ணனைக் கண்டதை வெளியிட்டு அவன், இருவர் சேர்ந்து செய்யுமிது அஞ்சலி யாகாது. ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்றதற்கு மறுமொழி கூறுகின்றனர்—

2. இதுவென்புகுந்ததிங்கந்தோ விப்பொய்கைக்கெவ்வாறுவந்தாய்
மதுவின்றுழாய்முடிமாலே மாயனேயெங்களமுதே
விதியின்மையாலதுமாட்டோம் வித்தகப்பிள்ளாய்விரையேல்
குதிகொண்டரவினடித்தாய் குருந்திடைக்கூறைபணியாய். (22)

மது	—தேன் கொண்ட
இன்	—இனிய
துழாய்	—திருத்துழாயை
முடி	—கிரீடத்தில் உடைய
மாலே	—திருமாலே !
மாயனே	—ஆச்சரிய பூதனே !
எங்கள் அமுதே	எங்களுக்குப் போக்யமானவனே !
இங்கு புகுந்தது இது	இங்கே நீ வந்ததென்கிற விது
என்	—எதற்காக?
அந்தோ!	—கஷ்டம்.
இ பொய்கைக்கு	இந்தத் தடாகத்திற்கு
எ ஆறு	—எந்தவிதமாக

வந்தாய்	—வந்தாயோ
வித்தகம் பிள்ளாய்	சாதுர்யங்களையுடைய பிள்ளையே!
விதி இன்மையால்	கதி இல்லாமையால்
அது	—நீ கேட்பதொன்றை
மாட்டோம்	—இசைய மாட்டிலோம்
விரையேல்	—அவசரப்படவேண்டா.
குதி கொண்டு	—குதித்துக்குதித்து
அரவில்	—காளிய சர்ப்பத்தின்மேல்
நடித்தாய்	—நடனம் செய்தவனே !
குருந்திடை	—குருந்தமரத்தில் (வைத்துள்ள)
கூறை	—(எங்கள்) துகில்களை
பணியாய்	—கொடுப்பாயாக.

இதுவென்புகுந்தது. எங்களோடு கலவி வேண்டுமானால், அது இரவில் முன்னே நடந்ததே. நாங்கள் இங்கு வருவது ஸம்மதமன்றாகில், புறப்படும் போதே தடுத்திருக்கவேண்டும். எங்களோடு ஜலக்ரீடை செய்யவேண்டு மென்றிருந்தால், நீயும் பீதாம்பரத்தைக் கரையில் வைத்துவிட்டு இறங்கியிருக்கவேண்டும். துகிலைக் கொள்ளை கொள்ளப் புகுந்ததென்? விளங்கவில்லையே. 'இதுவென் புகுந்ததிங்கந்தோ' என்று ஒருத்திக்கொருத்தி கண்ணனை 'இது' என்று கையால் சுட்டிக்காட்டித் தங்களுக்குள் சொல்லிக்கொள்வது மாம். இது என்று அலக்ஷியமாகக் கூறினதாகக் கொள்ளவேண்டா மென்று துதிக்கின்றனர் மது இத்யாதியால். இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய் நாங்கள் இந்தப் பொய்கைக்கே வந்தோ மென்று எப்படி யறிந்தாய். உன்னைத்தடுக்கப்பவரை வைத்திருந்தோமே. அவர்களை எப்படி மீறினாய். வேறு வழியாய் வந்தாயோ. வேறு வேஷம் பூண்டு வந்தாயோ. நீ மாறுவேஷம் போட்டாலும் உன் மதுவின் துழாய் உன்னைக் காண்பித்திருக்குமே. என்ன மாயனப்பா நீ என்றபடி. துழாய்முடிமாலே என்று நித்யஸூரிகளை வ்யாமோஹப்படுத்தும் நித்யவிபூதி நாதனின் நிலை சொல்லிற்று. மாயனென்றது மாயையெனப்படும் லீலாவிபூதிக்கு ஈச்வர னென்றதாம். நீ இங்கு வந்தது எங்களுக்கு இஷ்டமே என்கின்றனர் எங்களமுதே யென்றதால்.

விதியின்மையால். ஆகில் சாஸ்திரப்படி அஞ்சலி பண்ணுங்கோள் என்ருய். இப்போது எங்களுக்குப் பாக்யம் கூடவில்லையே. மானத்தைக் காக்க வேண்டியிருக்கிறதே. அஞ்சலி பண்ணல் கூறை என்கிருய். கூறை பணித்தால் உடனே உடுத்து அஞ்சலி செய்வோம். இப்போது அவ்வளவு செய்ய எங்களுக்கு விதியில்லை. கதியில்லை. சாமரம் வீசுகின்றவர்களுக்கு ஒற்றைக் கைப்ரணாமம் ஒப்புக்கொள்ளப்பட்டதே. என்? மற்ருெரு கைக்கு வேறு முக்கியமான கார்யமிருப்பதால் தானே—அது எங்கள் விஷயத்திலும் ஒக்கும். மேலும் துகிலைத் தரித்துதானே தெய்வத்தைத் தொழவேண்டும். அம்மணமாய் அஞ்சலிசெய்ய மட்டும் விதியுண்டோ? பெரியோர்களுடைய விதியில்லாமல் பெண்பிள்ளைகள் புருஷனைச் சேருவதுதானுண்டோ? அவர்கள் விதித்து உன்னைக் கணவனுகப் பெற்ற பின்பு எது வேண்டுமானுலும் செய்வோம். வாயுவின் வாதைக்குட்பட்ட ராஜகன்னிகைகளின் வரலாற்றை ராமாயணத்திலே காண்க. திருவேங்கடத்தானை மேலுக்கு வெறுத்த ஆகாயராஜகன்னியின் கதையைக் கேட்க. வித்தகப்பிள்ளாய். சிறுபிள்ளை. உனக்கெங்கேயோ நோக்கு. அதனல் சாதுர்யமாகப் பேசுகிருய். அதற்கு விரையேல். சமயம் நேர்ந்தபோது எல்லாம் வாய்க்கும். குதி கோண்டு இத்யாதி. மரத்தின் கிளையிலே துகில்களை வைத்துவிட்டு, என்னிடம் இல்லையே என்று கைகளைக் காண்பித்துக்கொண்டு கிளையில் குதிக்கின்ருயே. என்ன விநோதம். நீ அரவில் குதித்ததைக் கண்டோமே. குதித்தவண்ணமே கூறையுள்ள கிளைக்கும் சென்று கூறை பணியாய் என்றபடி.

ஏழுமை முழுதும் பட்டோமென்று பரிதவிக்காதீர்கள். இளமையிப்படி செய்விக்கிறதென்று சொல்லிக்கொண்டு மரத்திலே மேலு மேறினபோது சொல்லுகின்றனர்—

3. எல்லேயீதென்னவிளமை யெம்மனைமார் காணிலொட்டார்
போல்லாங்கீதென்று கருதாய் பூங்குருந்தேறியிருத்தி
வில்லாலிலங்கையழித்தாய் நீ வேண்டியதெல்லாம் தருவோம்
பல்லாருங்காணுமேபோவோம் பட்டைப்பணித்தருளாயே. (23)

வில்லால்	வில் என்ற ஆயுதமொன்ருலே
இலங்கை	—லங்கையை
அழித்தாய்	—அழித்தவனே!
ஈது	--இது
என்ன	—எத்தகைய
இளமை	--சிறுபிராயச் செயலாம்?
எல்லே	--என்னே!
எம்மனைமார்	—எங்கள் அன்னைமார்கள்
காணில்	--இந்நிலையைக் கண்டார்களானுல்
ஒட்டார்	—நம்மை மதியார்கள்; தள்ளிவிடுவார்கள்.
ஈது	--இப்படி நிர்வாணமாய் நிறுத்துவது
பொல்லாங்கு	கெட்ட நடத்தை
என்று கருதாய்	என்று நீ நினைக்கவில்லை.
பூ குருந்து	--புஷ்பித்த குருந்தமரத்தில்
ஏறி இருத்தி	--உயரச்சென்றிருக்கிருய்.
நீ வேண்டியது	நீ அபேக்ஷை பண்ணினவை
எல்லாம்	--யாவையும்
தருவோம்	—கொடுப்போம்.
பல் ஆர் உம்	--பலபேர் யாரும்
காணுமே	--காணுதபடி
போவோம்	-இல்லம் போய்ச் சேருவோம்.
பட்டை	--பட்டு வஸ்திரங்களை பணித்தருளாய்.

இளமை யென்கின்றாயே. இப்படியு மொரு இளமை யுனக்குண்டோ? பஹிரங்கமாகப் பொய்கையிலே பல பெண்கள் கூடியிருக்கும்போது எல்லோரையும் அம்மணமாக்கி அழச் செய்கிறதும் ஓர் இளமைத் தொழிலா? இஃதென்ன யௌவகமென்ற இளமையா, பிள்ளைத்தனமா? எங்கள் இளமையைக் கண்டு மோஹம் மிகவாயிருக்கிறதென்னில், எங்கள் இளமைதான் என்ன? முலை குவிந்திடவில்லை. சிறு பெண்கள். எம்மனைமார்காணிலோட்டார். நீரிலேயே இருந்து நீ செய்யும் தீம்புக்கழுது வந்தால் ஒருக்கால் பெரியோர் எங்களை யழைத்துப் போகலாம். அம்மணமாய் உனக்காகக் கரையேறி நின்றோமாகில், அதை அன்னைமார் கண்டால் பிறகு எங்களை வீட்டுக்கும் வரவொட்டார்கள்; உன்னோடும் சேரவொட்டார்கள். உனக்கிருக்கும் இளமையானது இது பொல்லாங்கு, இது நற்செயலென்று தெரிய வொட்டாமல் செய்கிறது போலும்.

பூங்குருந்தேறியிருத்தி ஒரு பெண்ணுக்காகக் கடலை யடைத்துச் சென்று இலங்கை யழித்தாய். வில்லாலழிக்கு முனக்கு அங்கே போகவேண்டு மென்பதில்லை. மல்லயுத்தமாகில் மாற்றருக்கு அருகில் இருக்கவேண்டும். வில்லாலழிப்பதற்கு லேறிடத்தினின்று கூடக் கணை யெறியலாம். சமுத்ரராஜன் சரணமடைந்தபோது அங்குநின்று பாணத்தை அதிகதூரத்திலுள்ள மருப்ரதேசத்தைக் (பாலைவனத்தைக்) குறித்தனுப்பின வுனக்குக் கிஷ்கிந்தையினின்றே கணை யெறியத் திறமை யுண்டே. வாலியைப் போல் அவனும் உண்மையில் தண்டிக்கப்பட வேண்டியவனே. அப்படியிருந்தும் பெண் உள்ளவிடம் போய்ப் பிறரை யழித்தாயே. இப்போது எங்களிடம் நெருங்கி யளிப்பதற்குப் பதிலாக, மரமேறி நிற்கின்றாய்? நாங்கள் அங்கே வரமுடியுமோ வென்றபடி. நீ இத்யாதி. நான் விரும்பினதை நீங்கள் கொடாதவர்கள். உங்களுக்கும் சீதைக்கும் எவ்வளவோ வாசியுண்டு என்றதற்கு இது மறுமொழி. உனக்கு வேண்டுவன வெல்லாம் தரக் காத்திருக்கிறோம். ஆனால் அதற்கு இது இடமுமன்று; தருணமுமன்று. யாரும் காணாதபடி எல்லோரும் தகுந்த இடம் போய்ச் சேருவோம். அதுவும் நீ பட்டைப் பணிக்காதபோது நடத்தமுடியாதே. ஆகவே அருளாய் என்றனர். போவோம். அவர்வரில்லம் போய்விடுவோம்; அல்லது சேருமிடத்திற்குச் செல்வோம். .... (3)

இவ்வளவு சொல்லியும் இரக்க மிராமே மரக்கிளைகளிலே இருளில் தாவினபடி யிருந்தான். கண்ணீர்விட்டழுது கேட்கின்றனர்.

4. பரக்கவிழித்தெங்கும்நோக்கிப் பலர்குடைந்தாடுஞ்சுனையில்
அரக்கநில்லாக்கண்ணநீர்க ளலமருகின்றவாபாராய்.
இரக்கமேலொன்றுமிலாதா யிலங்கையழித்தபிரானே
குரக்காசாவதறிந்தோம் குருந்திடைக்கூறைபணியாய். (24)

இலங்கை —லங்காபுரத்தை
அழித்த பிரானே } அழித்து உபகரித்தவனே!
பரக்க —விஸ்தாரமாக
விழித்து —கண்ணைத் திறந்து
எங்கும் { நாலு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டின மட்டிலே
நோக்கி —நன்றாகப் பார்த்து
பலர் —பல ஜனங்கள்

குடைந்து ஆடும்	மூழ்கி நீராட இருக்கும்
சுனையில்	--பொய்கையிலே
அரக்க நில்லா கண்ண நீர்கள்	அழிக்க (தடுத்தாலும்) நிற்காத கண்ணீரை உடைய ஸ்திரீகள்
அலமருகின்ற	--அஞ்சுகின்ற
ஆ	--விதத்தை
பாராய்	--பார்ப்பாயாக.
இரக்கம்(எல்)	--தயை யென்பது
ஒன்றும்	--சிறிதும்
இலாதாய்	--இல்லாதவனே !
குரங்கு அரசு ஆவது	நீ குரங்குகளுக்குத் தலைவனவதை
அறிந்தோம்	--கண்டறிந்துகொண்டோம்.
குருந்து இடை	குருந்த மரத்தின் மேலுள்ள
கூறை	--ஆடைகளை
பணியாய்	--தந்தருளாய்

இந்தச் சுனை பல புருஷர்களும் ஸ்திரீகளும் வந்து குடைந்தாடும் இடம். விடிந்துவிட்டதே; எந்தப் பக்கம் யார் வந்திடுவாரோ என்று எல்லாப் பக்கங்களிலும் பார்க்கிறோம். கஷ்டத்தினால் வரும் கண்ணீரானது தடுக்க எவ்வளவு முயன்றாலும் நிற்காமல் பெருகுகிறது. இந்த நிலையில் நாங்கள் வருத்தப்படுவதையும் பார்க்காமல் பெரும் குரங்குக்கு மேலாகக் கிளைகளில் தாவித் தாவி மறைகிறாயே. இலங்கை யழித்து சீதையைக் காத்தவன் இவ்வள விரக்க மில்லாமல் இருப்பது வியக்கத்தக்கது. குரங்கின் மனம் போலே நிலையில்லாத மனமோ. அதனால் இரக்கம் மாறிவிட்டதோ. ஸுக்ரீவனை மஹாராஜனாக்கி அவனுக்கு மேல் கோமானாயிருக்கும் நீ குரங்கரசாவது எளிது. அது முதல் குரங்குகளோடு பழக்கத்தாலே அக்குணமும் படிந்தது போலும். குருந்த மரத்தில் கூறைகளை வைத்துவிட்டுப் பக்கத்து மரத்திலே கூடப் பாய்கிறாப் போலிருக்கிறாய். நீ இருக்கும் மரத்திலில்லாவிட்டாலும் குருந்தில் கூறைகளிருக்கின்றன; பணியாய் என்றபடி.

நோக்கி. நோக்குகின்றவன் கண்ணனாகில், நோக்கிப்பாராய் என அந்வயம் ஸுகமாகக் கிடைக்கும். அப்போது எங்கும் நோக்கி என்பதற்கு ஒருத்தியையும் விடாமல் எல்லோரையும் கவனித்து எனப் பொருள். அல்லது மரத்தின் மேலிருக்கு முனக்கு நீராட ஜனங்கள் வருவதை நோக்குவது எளிதானபடியாலே யாராவது வருகிறார்களா வென்று நாலுபக்கத்திலும் நோக்கிவிட்டு எங்களுக்குக் கண்ணீர் தளும்புவதையும் பார் என்றதுமாம். நாங்கள் நான்கு பக்கங்களிலும் நோக்கி வருந்துகிறோ மெனப் பொருள் வேண்டுமாகில், நோக்குகின்றவர் சிறுமிகள் என்னவேண்டும். அப்போது பாராய் என்றதோடு சேராதாகையாலே அரக்க என்றதோடு சேர்க்கலாம். நோக்கிவிட்டு நாங்கள் அடக்கினாலும் கண்ணீர்கள் அலமருகின்றன வென்றபடி. அலமரலாவது அலைப்பல், தளும்பல் என்னவேண்டும். அலமரலாவது அஞ்சுவது துன்பப்படுவது என்ற நேர்ப்பொருளைக் கொண்டு பதவுரையில் நோக்கி என்பதற்கு அலமருகின்ற என்றதொடு அந்வயம் செய்து அதற்கேற்ப, நில்லாக்கண்ண நீர்கள் என்பதற்கு கண்ணீர் உடைய ஸ்திரீகள் எனப் பொருள் கொண்டது. எதேனு மாகுக. குரங்கு அரசு=குரக்கரசு. .... (4)

'நீ பரக்க விழித்தெங்கும் நோக்குமா போலே நாங்களும் நோக்கி வருகின்றோம், உன்னை வரவொட்டாமற் செய்யும் எங்கள் பெரியோர்களுக்கு அகப்

GOVERNMENT ORIENTAL MSS

படாமல் இங்கே வந்த உன்னை இங்கே யாவது வந்து விரட்டுவார்களா வென நினைத்து' என வறிவித்துக் கூறை பணிக்கக் கோலுகின்றனர்—

5. காலைக்கதுவிடுகின்ற கயலோடுவாளைவிரவி
வேலைப்பிடித்தென்னைமார்க ளோட்டிலென்னவிளையாட்டோ
கோலச்சிற்றாடைபலவுங் கோண்டுநீயேறியிராதே
கோலங்கரியபிரானே குருந்திடைக்கூறைபணியாய். (25)

கரிய	--கறுத்த
கோலம்	--திருமேனியை யுடைய
பிரானே	--உபகாரகனே !
கயலொடு வாளை	கயலென்னும், வாளை யென்னும் மீன் வகைகள்
விரவி	--ஒன்று சேர்ந்து (கலந்து)
காலை	--எங்கள் கால்களை
கதுவிடுகின்ற.	பலமாகப் பற்றிக் குத்துகின்றன.
என்னைமார்கள்	எம் தந்தைகள்
வேலை	--வேலாயுதத்தை
பிடித்து	--பிடித்துக்கொண்டு

ஓட்டில்	--உன்னை ஓட்டிவிட்டால்
என்ன விளையாட்டோ	எவ்விதமான விளையாட்டாகுமோ ?
நீ	
கோலம்	–அழகிய
சிற்றாடை பல உம்	பலவிதமான சிற்றாடைகளையும்
கொண்டு	—அபஹரித்து
ஏறி இராதே	மரத்தின்மேல் ஏறியிருந்துவிடாமல்
குருந்திடை	—குருந்தமரத்திலிருக்கும்
கூறை	—வஸ்திரங்களை
பணியாய்	—அளித்தருளாய்.

கரை மேலேறிக் கைகளைக் கூப்பினல் கூறை யளிப்பே னென்று சொல்லி நீ, நாங்கள் தோழிகளோடு அஞ்சலி செய்தும் திருப்தி பெறுமல் பச்சையிலைகள் அடர்ந்த இம் மரத்தில் நம்மை யார் காணமுடியு மென்று கரிய கோலப் பிரானுய் ஏறியிருந்து மோசம் செய்கிறுய். ஆகவே நாங்கள் கரையிலிருக்க வெட்க முற்று மறுபடி மருங்குல் வரை நீரில் நின்றுகொண்டிருக்கிறேம். அதனல் உன்னுடைய நியமனத்துக்குட்பட்டுத் தான் போலும் வாளைகளும் கயல்களும் எங்கள் கால்கள் முழுமையும் கதுவுகின்றன. இது உனக்கு இப்போது விளையாட்டாகத் தோன்றுகிறது. நீராட வந்த நாங்கள் விரைவில் திரும்பாததால் ஸந்தேஹப்படும் எங்கள் தந்தைகள், கையில் வேலைப் பிடித்துக்கொண்டு வந்து சேருவார்கள். அப்போது கூறை களவுசெய்த கரியகோலனை உன்னைக் கண்டு விரட்டியோட்டுவது திண்ணம். அது கூட விளையாட்டோ? என்னவிதமான விளையாட்டோ? என்ன கண்ணு? அது விளையாட்டாமோ? நீ பரிவப்படவேண்டுமோ? நீ ஒன்றுக்குப் பலவாகச் சிற்றாடைகளைத் தரித்திருக்கிறுயே. உன் ஆடைகளையும் நீ களைந்துவிட்டு ஏன் இருக்கக்கூடாது. புருஷனை உனக்கே அதில் வெட்கமிருந்தால் ஒரு கூறை கூட இராமே நாங்கள் ஸ்திரீகள் எப்படி நிற்பது? 'நீங்கள் விலகியிருக்கும்போது உங்கள் கூறைகளையாவது அணிந்து உங்களை யணைத்துக் கொண்டாற் போல் களிப்பே' னென்கிறுயா. அப்போது எங்கள் சிற்றாடைகள் பல நீ கட்டிக்கொள்வதானலும் மற்ற வஸ்திரங்களை=குருந்தின்மேல் வீணே வைத்திருக்குமவற்றையாவது எங்களுக்கு அளித்துவிடு. நாங்கள் கிழித்தாவது எல்லோரும் தரித்துக்கொள்ளுகிறேம். உண்மையில் நீ தரித்திருக்கும் சிற்றாடைகளையு மளித்தாயாகில் உடுத்துக் களைந்த நின் ஆடைகளைத் தரிப்பதால் எங்கள் ஆவியும் தரிக்கப்படும். ஆடையால் மறைபடாமல் உனது கரிய திருமேனியும்

நாங்கள் காணும்படியிருக்கும். பிரானே! நீ எங்கள் கோலுதலுக்கினைங் கென்றனர்.

கதுவிடுகின்ற. கதுவு என்ற வினையோடு இடு என்ற துணைவினையும் சேர்ந்திருக்கிறது. கதுவுகின்றன. 'அ' என்ற பன்மை விகுதி பெற்றது இது. **வேலைப்பிடித்து,** அவரவர் தங்கள் வேலையெடுத்துக்கொண்டு. அல்லது, 'நின் கையில் வேல் போற்றி' யென்று ஒருக்கால் நாங்கள் சொல்லும்படியிருந்த உனது வேலைத் தங்கள் கையால் பிடித்துக்கொண்டு. **என்னை** யென்பதொரு முழுச் சொல். எம் தந்தை யெனப் பொருள். என் ஐமார் எனவும் பிரிப்பர். இங்கே எம் ஐமார் என்று பன்மை யப்போது வேண்டும். சிற்றாடை யென்று கண்ணனின் ஆடையையும் கூறுவதுண்டு. 'சிற்றாடையுஞ் சிறுப்பத்திரமும்' (பெரியா. 3. 3. 5.) என்றது காண்க. .... (5)

நீங்கள் கால்களாலும் கைகளாலும் நீரை அலப்பிக்கொண்டு நில்லுங்கோள். கயலும் வாளையும் கதுவாமலிருக்கு மென்ன, ஜங்கமங்களால் வந்த வேதனைக்கு மேலிருக்கிறது தாவரங்கள் விளைக்கும் துன்ப மென்கின்றனர்—

6. தடத்தவிழ்தாமரைப்பொய்கைத் தாள்களெங்காலைக்கதுவ
விடத்தேளெறிந்தாலேபோல வேதனையாற்றவும்பட்டோம்
குடத்தையெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல வெங்கோவே
படிற்றையெல்லாந்தவிர்ந்தெங்கள் பட்டைப்பணித்தருளாயே. **(26)**

குடத்தை —பல குடங்களை
எடுத்து —தலைகளிலும் கைகளிலும் தோள்களிலும் தரித்து
ஏறவிட்டு —வானத்தில் ஏறும்படி சில வற்றை எறிந்து
கூத்தாட —குடக்கூத்தாடுவதற்கு
வல்ல —ஸமர்த்தனான
எம் கோவே —எங்கள் சுவாமியே!
தடத்து —கரைவரையில்
அவிழ் —விரிந்திராகின்ற
தாமரை —தாமரைக்கொடிகளையுடைய
பொய்கை —குளத்தின்
தாள்கள் —தாமரைத்தண்டுகள்
காலை கதுவ —காலைப் பற்றுவதால்,
விடம் தேள் —விஷமுள்ள தேள்கள்
எறிந்தால் போல } குத்தினாற் (கொட்டினாற்) போலே
ஆற்ற உம் —முழுமையும்
வேதனை பட்டோம் } துன்பப்படுகின்றோம்.
படிற்றை —வஞ்சனையை
எல்லாம் —முழுதும்
தவிர்ந்து —விட்டு
எங்கள் பட்டை } எங்கள் வஸ்திரங்களை
பணித்து அருளாய் } அளித்து உதவவேண்டும்.

கயல்கள் கிடக்கட்டும். தாமரைக் கொடிகள் கரை வரையில் விரிந்து படர்ந்திருப்பதால் அவற்றின் தாள்கள் எங்கும் கால்களில் முள்கொடிகள் போல் உறுத்துகின்றன. அப்போது விஷத்தேள்கள் கொட்டினாற் போல வேதனை யுண்டாகிறது. நீராடு மிடத்திலே மட்டும் நிற்போ மென்றால் இடம் போதாது என்றனர். நான் என்ன செய்கிறது? குருந்திடையில் துகில்களைக் காணேமே என்றான் அவன். எல்லாம் தெரியும். எங்கள் துணிகளை எத்தனையோ மூட்டைகளாகக் கட்டிக் குடங்கள் போல் ஆக்கி மூட்டையின்மேல் மூட்டையாய்த் தலையின்மேல் சில வைத்துத் தோள்களிலும் கைகளிலும் சில கொண்டு, நாற்சந்திகளில் குடக்கூத்து ஆடுகிறாப் போலே, கிளைகளில் குதித்தாடுகின்றாயே. இப்படியெல்லாம் வஞ்சகம் செய்யாமல் வஸ்திரங்களை யளித்தருளா யென்றனர்.

தடத்தவிழ் என்ற விடத்திலே அத்து என்பதை உபேக்ஷித்துவிட்டு தடம்—விசாலமான பொய்கை என வுரைப்பர். விடத்தேள். கடற்கரை யோரங்களில் தேள்களுக்கு விஷம் இராதாம். அங்ஙனமில்லாதது தோற்ற விடமென்றதாய். ஆற்றவும் பட்டோம். தேள் கொட்டுவது ஓர் அங்கத்திலானாலும் உடல் முழுதும் வேதனை யுண்டாம். அங்ஙனமென்றபடி. படுகின்றோமென்னாமே பட்டோம் என்றது, கண்ணனையும் அவன் ஆட்டத்தையும் கண்டு விண்ணப்பிக்கும் க்ஷணத்திலே இவர்களுக்கு அந்த அநுபவத்திலே அவ் வேதனை மறைந்தது போலிருந்தமையாலென்க. வேண்டியது பட்டாய்விட்டது. இவ்வளவு மட்டிலே நீ திருப்தி பெற்று அளிக்கலாமே எனக் குறிக்கவு மாம்.

படிறு வஞ்சகம். தீம்பு எனவு முரைப்பர். எங்கள் பட்டை. த்ரௌபதிக்குப் பல வஸ்திரங்களை ஸங்கல்ப்பமாத்திரத்தாலே ஸ்ருஷ்டித்த நீ என்னென்னவோ வஸ்திரங்களையும் கொடுக்கக் கூடும். எங்களுக்கு வேண்டியன எங்கள் பழைய வஸ்திரங்களே. வேறு வஸ்திரங்களை உடுத்துச்சென்றால், 'இது எது' என்று எங்களை எம்மன்னைமார் கேட்பரே. நாங்கள் என்ன சொல்வது எனக் கருத்து. .... (6)

இங்கே ஜங்கமங்களாலும் தாவரங்களாலும் வரும் துன்பமிருக்கட்டும். நீரில் நிற்பதே எங்களுக்குப் பெரும் கஷ்டமாய்விட்டதென வறிவித்து வேண்டுகின்றனர்.

7. நீரிலேநின்றயர்க்கின்றோம் நீதியல்லாதனசெய்தாய்
ஊரகஞ்சாலவுஞ்சேய்த்தா லூழியெல்லாமுணர்வானே
ஆர்வமுனக்கேயுடையோமம்மனைமார்காணிலோட்டார்
போரவிடாயெங்கள்பட்டைப் பூங்குருந்தேறியிராதே. (27)

ஊழி எல்லாம்	எல்லா பிரளய காலத்திலும்	உனக்கே	—உன் விஷயத்லேயே
உணர்வானே	எல்லாம் உணர்ந்திருப்பவனே !	ஆர்வம்	—ஆசையை
நீதி அல்லாதன	(நீ) அந்யாயங்களை	உடையோம்	—உடையவர்களாயிருக்கிறோம்.
செய்தாய்	—செய்துவிட்டாய்; (நாங்கள்)	காணில்	—இந்நிலையைக் கண்டார்களாகில்
நீரிலே நின்று	ஜலத்திலேயே நின்றபடி இருந்துகொண்டு	அம்மனைமார்	—(எங்கள்) தாய்மார்
அயர்க்கின்றோம்	வருந்துகின்றோம்.	ஓட்டார்	எங்களை அநுமதிக்க மாட்டார்களே.
ஊர், அகம்	ஆய்ப்பாடி யென்ற ஊரும் (எங்கள்) வீடும்	எங்கள் பட்டை	எங்களுடைய பட்டுச் சிற்றாடைகளை
சால உம்	—மிகவும்	போர	—எங்களிடம் வரும்படி
சேய்த்து	—தூரத்திலிருக்கின்றன.	விடாய்	—விட்டுவிடு.
ஆல்	—விருத்தம்.	பூ குருந்து	—பூத்திருக்கும் குருந்த மரத்திலே
		ஏறி இராதே	ஏறி உட்கார்ந்திருக்க வேண்டாம்.

கண்ணா ! நீ ஊரில் உறங்குவாய் ; வரமாட்டா யென நினைத்தோம். ஒருவரு மில்லா ஊழியிலும் உறங்காது சிந்தையிலாழ்ந்தவ னென்பது இப்போதே நினைவுற்றது. ஊழி யெல்லா முணர்வானே! ப்ரளய காலத்திலே பெருங்கடலில் கிடக்கு முனக்கு நீரில் நிற்பதிலுள்ள கஷ்டம் நன்கு விளங்கி யிருக்கின்றதே.

ஆகவே யல்லவோ. நீ நீரில் படாதபடி ஆலிலை மேற் பள்ளிகொண்டதும், எல்லா ஜந்துக்களையும் அப்போது மூழ்கி விடாதபடி வயிற்றில் வைத்துக் காத்ததும். இப்படி யுணர்ந்த நீ நாங்கள் நீரை விட்டேறுதபடி இவ்வளவு அந்யாயம் செய்யலாமோ? ஆகில் இருட்டிலேயே புறப்பட்டு இல்லம் புகுந்து வேறு வஸ்திரங்களை யணிந்து கொள்ளுங்கள் என்கிறாயோ. அது முடியாதது. ஊரே வெகு தூரத்தில் இருக்கிறது. அதற்குமேல் அகங்களைச் சேருவது அடியோடு சாத்யமாக இல்லை. 'நீங்கள் எனக்கு அனுகூலர்களா யிராதபோது நான் மட்டும் அனுகூலனாக இருக்கவேண்டுமோ' என்னவேண்டா. எவ்விதத்திலும் உன் மேல் அன்புள்ளவர்களோம் யாம். ஆகில் துகிலை யுடுத்தாமல் இங்ஙனமே எனக்குக் காட்சியளியுங்கள் என்கிறாயோ. உதயமாய்விட்டது. இந் நிலையைக் கண்டால் எங்கள் தாய்மார் எங்களைத் தங்களோடும் சேரவொட்டார்; நீரிலே நிற்கும் நாங்கள் மடுவிலே மூழ்கி யழியும்படியாம். அப்படியானால் நான் போகிறேன். நீங்களே மரத்தினின்று பட்டுக்களை யெடுத்துக் கொள்ளுங்களென்னாதே. எங்களால் கரை ஏறுவதே முடியாது. மரமேறுவதேது என்றனர். இதோ எறிகின்றேன். எடுத்துக்கொள்ளுங்கள் என்றானவன். கண்ணா! நீ போரவிடாய் எங்கள் பட்டை. நடு ஜலத்திலே யெறிந்து விடாதே. இப் பெருந் திரளிலே யொரு பக்கம் எறியவேண்டியதை மற்றொரு பக்க மெறியாதே எங்கள். எங்கள் ஆடையையும் உன் ஆடையோடு கலந்து நீ யணிந்திருப்பதால் தெரியாமல் உனது ஆடையை எங்கள் மேல் விடாதே. அதைத் தரித்துப் போனால் அன்னைமார் காணிலொட்டார். அவரவர் பட்டை யவரவர்க்குச் சேரும்படி விடவேண்டும். உனக்கு இது இன்னாருடையதென அனுபவித்திருப்பதுதானே. பூங்குருந்தேறியிராதே. இப்பொழுதே வெகு நாழியாய் விட்டது. நீ யேறி இராமல இறங்கி வந்து வஸ்திரங்களை விடவேண்டும். இனியும் நீ மரத்தில் இருந்தால் உன்னால் தான் நாங்கள் இவ்வளவு தாமதித்தோம் என்றெங்களை நலிவர் பெரியோர். ஆகையால் நீ எங்களுக்கு முன்னரே இறங்கிப் போய்விடு. பூங்குருந்து. குருந்தப்பூக்களின் தேனைப் பருகத் திரியும் எறும்புகளும் மற்றப்பூச்சிகளும் உன்னை வாதித்துக் கொண்டிருக்க நீ எங்கள் மேலுள்ள அன்பினால் அதை யறியாமல் இருக்கின்றாய் போலும். நாங்கள் விலகினால் அந்த வாதிப்பு உணரலாகும். அது வேண்டாம். உடனே இறங்கி விடு என்றனர் இச்சிறுமிகள். போர. போருதல், போதருதல், வருதல்.

ஊழியெல்லாமுணர்வானே என்றதைக் கேட்டதும் குருந்திடைத் துகில்களைப் பரப்பித் துயில்வதாகத் தோற்றமளித்தான் அவன். அதனை யறிவித்தழைத்துக் கேட்கின்றனர்—

8. மாமிமார்மக்களேயல்லோம் மற்றுமிங்கெல்லாரும்போந்தார்
தூமலர்கண்கள்வளரத் தொல்லையிராத்துயில்வானே
சேமமேலன்றிதுசாலச்சிக்கென நாமிதுசொன்னோம்
கோமளவாயர்கொழுந்தே குருந்திடைக்கூறைபணியாய். (28)

தூ	—பரிசுத்தமான	கண்கள்	—திருக்கண்கள்
மலர்	—செந்தாமரைமலர் போன்ற	வளர	—வளர்ச்சி பெறும்படி

தொல்லை —பழமையான
இரா துயில் வானே! } இரவில் கொள்ளும் உறக்க முள்ளவனே !
இங்கு —இங்கிருக்கும் (நாங்கள்)
மாமிமார்மக்கள் ஏ அல்லோம் } மாமிகளின் மகளிரென்ற உன் மனைவிகள் மட்டு மல்லோம்.
மற்றும் —மற்றவர்களும்,
எல்லாரும் —எல்லோரும்
போந்தார் —வந்துவிட்டனர்.
சேமம் ஏல் } (எங்களுக்கு) க்ஷேமம் என்றால்,
இது அன்று } நீ செய்யும் இவ்வகை யாகாது.
சால —மிகவும்
சிக்கென —உறுதியாக
நாம் —நாங்கள்
இது —இதனை
சொன்னோம் —சொல்லிவிட்டோம்.
கோமளம் —அழகிய
ஆயர் கொழுந்தே } இடையரின் இளம்பிள்ளையே!
குருந்திடை —குருந்தமரத்தில் இருந்து கூறை பணியாய்.

நாணத்தினாலே தங்களை மனைவிகளென்று நேராகச் சொல்லாமே, மாமிமார் மக்களென்று சொன்னார்களென்க. மற்ற உறவுகளை யிட்டு அழைக்கின்றது போல் தம்பதிகள், அகமுடையானே! அகமுடையாளே! என அழைத்துக் கொள்வதில்லை பலரெதிரில். 'மாமி தன் மகனைப் பெற்றால்' என்று கீழே கூறப்பட்டது போல விது. ஆகவே போலும் வடமொழியிலும் 'ஆர்யபுத்ர' என்று கணவனை யழைப்பது. குல கௌரவத்தை முன்னிடும் வகை யிதென்னவுமாம். மற்றும் என்றது மாமியார் போன்ற பல ஸ்திரீகள் போந்ததைக் குறிக்கும். எல்லோரும் என்றதாலே, 'குண்டலம் தாழக் குழல் தாழ நாண் தாழ எண் திசையோரு மிறைஞ்சித் தொழுதேத்த' (பெரியாழ்—2—10—2) (எட்டு திசைகளிலுள்ள எல்லாப் பெரியோரும் பரியட்டங்களை யபஹரிக்கும் போதுண்டான அவன் அழகை அனுபவிக்க வந்து விட்டார்களே) என்றபடி பலர் வந்து குவிந்துகொண்டிருப்பது கூறினதாம். தூமலர் இத்யாதி. தொல்லை யிரா என்று பழைய இரவுகளைச் சொல்வதால் துயின்றனே என இறந்த கால மாக வன்றோ கூறவேண்டு மென்னவேண்டா. துயில்வு என்ற பெயர்ச் சொல்லின்மேல் ஆன் விகுதி சேர்க்கத் துயில்வான் என்ற சொல் ஆயிற்று. தூக்கமுள்ளவனெனப் பொருள். தொல்லை யென்பது துயில்வுக்கே அடைமொழியாம். கண்வளர என்றதும் துயில்வான் என்பதும் ஒரு பொருள் உள்ளனவாகையால் மீமிசைச்சொல்லா மென்பர். பதவுரையில் வெவ்வேறு பொருள் கூறினது கொள்க. இதற்காகத் துயில்வானே என்பதற்குப் பள்ளி கொள்வானே என உரை செய்வர் சிலர். இவ்விரண்டாமடியின் கருத்தாவது— இப்போது உதயமாய்விட்டது. நீ திருக்கண்கள் நன்கு ஆரோக்யம் பெறும்படி முன் செய்து வந்த பழமையான இராத்தூக்கத்தை இப்போது நடிப்பது எங்களுக்குத் தெரியுமென்றதாம். அன்றி, தொல்லையிரா என்பதற்குத் தொந்திர வில்லாத எனவும் பொருளாம். நாங்கள் இவ்வளவு நிர்ப்பந்தித்து வரும்போது கண் வளரும்படி தொந்திரவில்லாத் தூக்கம் உனக்கெப்படி வந்தது? நீ வேணுமென்று நடிப்பது எங்களுக்குத் தெரியாதோ என்றதாம். சேமமேல். ஏல் என்பது அசை. சேமமென்றால் எனப் பொருளைத் தெளிவிக்க இங்கே ஏல் என்றதெனவாவது கொள்க. சேமமாவது உள்ள நன்மையை நழுவாதபடி காத்தல். எங்களுக்கு நன்மையை நிலை நாட்டச் செய்யவேணு மென்ற நோக்க முனக்கிருப்பது தெரியும். அது இத்தகைய செயலாகாது. இது அழிப்பதற்குத் தான் காரணமென்றபடி. நான் உங்களிடத்தில் வைத்துள்ள

அன்பை இவ்வாறு வெளியிட வந்திருக்க நீங்கள் இப்படிக் கூறுவது கூடுமோ என்ன, சாலச்சிக்கென நாமிது சொன்னோம் என்றுரைத்தனர். சால என்பதை சேமமன்று என்றதோடும் சேர்ப்பர். சிக்கன எனவு மோதுவர். ஆகில் நான் துயில் கொள்ளாமல் உங்களிடம் வந்து துகில் கொடுத்துவிட்டுப் போகிறேனென்றானவன். அப்போது சொல்லுகின்றனர் கோமளவாயர் சொழுந்தே குருந்திடை என்று. நீ மரத்தில் விளங்கும்போது அங்குள்ள கொழுந்துகள்போல் கொழுந்தாகவே தோற்றமளிக்கின்றாய். இவ்வளவு அழகிய சிறு பிள்ளையான நீ இங்கே மற்றும் பலர் இருப்பதை நினைத்து எங்களிடம் அணுகாமல் குருந்திடையினின்றே கூறைகளை எங்களிடம் போர விடவேண்டு மென்றவாறு. குருந்திடையென்பதற்கு வேறு கருத்து வேறிடத்திலே கூறப்பட்டுள்ளது காண்க. (8)

உன்னைத் தண்டிக்க ஒருவரும் கிடையார். நீயே யுணர்ந்து வெள்கியளித்தால் தான் உண்டென்கின்றனர்—

9\. கஞ்சன்வலைவைத்தவன்று காரிருளெல்லிற் பிழைத்து
நெஞ்சுதுக்கஞ்செய்யப்போந்தாய்நின்றவிக்கன்னியரோமை
அஞ்சவுரைப்பாளசோதையாணுடவிட்டிட்டிருக்கும்
வஞ்சகப்பேய்ச்சிபாலுண்ட மசுமையிலீகூறைதாராய். (29).

கஞ்சன்	--கம்ஸனால்
வலைவைத்த	--தடுக்கப்பட்டிருந்த
அன்று	--அந்தக்காலத்திலே
கார்	--கறுத்த
இருள்	--இருட்டையுடைய
எல்லில்	--நாளில் (இரவில்)
பிழைத்து	--நீ உயிர் பெற்று (இப்போது)
நின்ற	நடுத்தண்ணீரில் நின்றிருக்கும்
இ கன்னிய ரோமை	இந்தச் சிறுமிகளான எங்களை
நெஞ்சு துக்கம் செய்ய	நெஞ்சில் துக்கத்தை வளர்த்த
போந்தாய்	--வந்தாய்
அசோதை	--யசோதைப்பெருமாட்டியும்
அஞ்ச	--நீ பயப்படும்படி
உரைப்பாள்	--உரையாதவளாய்
ஆண் ஆட	(நீ விரும்பும் போல்) ஆண்மையுடன் திரியும்படி
விட்டிட்டு	--கேட்காமல் விட்டுவிட்டு
இருக்கும்	--ஆனந்தமாயிருக்கின்றாள்.
வஞ்சகம்	--ஏமாற்றம் செய்துவந்த
பேய்ச்சி	--பூதனையின்
பால் உண்ட	--ஸ்தந்யத்தைக் குடித்த
மசுமை இலீ	--வெட்கமற்றவனே!
கூறை தாராய்	பட்டைப் பணியாய்.

வெகு காலமாகச் சிறையிலடைத்து உன் தாய்தந்தைகளைக் கஞ்சன் வலைப்படுத்தியிருந்தபோது அங்கே பிறந்த நீ அப்போதே அழிந்திருக்கவேண்டும். ஏதோ எமது பாக்யம் அவ்விரவில் அக் காரிருள் உன்னைக் காத்தது. இல்லாவிட்டால் நீ அங்கிருந்து வெளிப்புறப்படும்போதே உயிரழியும்படியாயிருக்கும். காரிருளானபடியாலே, நீயும் இருள்வண்ணனாயிருப்பதாலே, அவர்கள் மனமும் இருள்மூடி அவர்களுமுறங்கிவிட்டதாலே, அவ்வண்ணமே அசோதையில்லமுமிருந்ததாலே பிழைத்தாய். இப்படி நாங்கள் களித்திருப்பதற்கு நேர்மாறாக நீ செய்யும் தீம்புகள் எங்களை வருத்துகின்றன. கன்னிகளான எங்களைக் கூறையின்றி நிற்கவைத்து நெஞ்சு துக்கப்படுத்தவே தான் நீ வந்தாயோ என நினைக்கவேண்டியிருக்கிறது. இத் துக்கத்தை வெளியில் சொல்லில் வெட்கக்கேடு என்று நாங்கள் நெஞ்சில் நிறுத்திக்கொள்ள வேண்டியிருப்பதால் இது

நெஞ்சு துக்கமாகவே வளர்கின்றது. ஏகாந்தமாக யசோதையினிடம் போய் முறையிடலாமென்றால், அவள் உன்னை அஞ்ச உரைப்பதில்லை. நாங்கள் போய்ச் சொல்லியவள் கேட்காதொழியில் நீ ஆணுடுவது வளரும். பேய்ச்சி யின் பாலுண்டு அவளையழித்த உன் வலியை நினைத்தபோது அசோதை அஞ்சாம லிருப்பளோ? ஏதேனு முரைக்கத் தான் முன் வரமுடியுமோ. இப்படியிருக்க நாங்கள் யாரிடம் என்ன சொல்லிக்கொள்ளக் கூடும். ப்ரதிகூலரிடம் சொல்வதா? அநுகூலரிடமா? கஞ்சனிடம் சொல்லில் அவன் என் செய்யமுடியும்? அவன் சிறை யிலடைத்திருந்தபோதே, பிறந்த ஸமயத்திலேயே அவனை ஜயித்தாயே. அவனோ அவ்வூரைவிட்டு அசையான். அநுகூலரிடம் சொல்லலா மென்றால், அசோ தைக்கு மேல் அநுகூலர் யார்? அவளே அஞ்ச உரைப்பாள். அதாவது நீ அஞ்சும்படி உன்னை உரைக்கமாட்டாள். 'அறிந்து கொண்டே னுனக்கஞ்சு வனம்மம் தரவே' என்றபடி, தான் அஞ்சிவிட்டதாலே உரைக்கமாட்டாள். மேலும் முறைப்படும் நாங்கள் அஞ்சும்படி எங்களுக்கு ஏதேனும் உரைப் பாள் = சொல்வாள். என் செய்வது? இனிக் கஞ்சனால் அனுப்பப்பட்டு வருபவ ரிடம் சொல்லலாமென்றால், முதன் முதல் வஞ்சகப்பேய்ச்சி பட்டதை நினைத்தால் போதுமே. இப்போது நன்கு வளர்ந்துவிட்ட பிறகு யார் உன்னை என்ன செய்யமுடியும்—என்றனர். உரைப்பாளென்பது உரையாளென்றும் உரைப்பள் என்றும் இருவகைப்பொருள் பெறும்.

ஆணுடைவிட்டிட்டிருக்கும். ஆணுடுவது ஆண்மையின் மிகுதியால் இஷ்டப்படித் திரிவது. விட்டிட்டு என்றாற்போலே, 'இட்டிட்டு' என வும் பிரிப்பதாம். பொருள் ஒன்றே. மசுமையிலீ. மசுமையாவது வெட்க மென்பர். தண்டகாரண்யத்திலே நுழைந்ததும், தங்களைக் காக்கும்படி மஹர்ஷி கள் முறையிட்டபோது, 'ஹ்ரீ ரேஷா ஹி மமாதுலா' என்றான் சக்ரவர்த்தித் திரு மகன். 'என் தகப்பனாரே வந்து உங்களைக் காத்திருக்கவேண்டும். நானாவது முன்னமே இதனைத் தெரிந்து வந்து காத்திருக்கவேண்டும். இப்போது நீங்கள் கேட்டுக்கொண்டபிறகு நான் காக்க நினைத்தேனே யொழிய முன்னரே நம் கடமையைச் செய்யவில்லையே யென்று வெகு வெட்கமாயிருக்கிறது' என்றான். அவ்வண்ணம் உனக்கு, எங்களைக் காக்கவில்லையே யென்று கூட வெட்கம் வருமோ? உன் பிறப்பு வேறாயிற்றேயென்றபடி. அன்றி, பெற்ற தாயின் பாலை விட்டு, பேரன்புடன் போஷிக்கும் அசோதையின் முலைப்பாலையும் விட்டுப் பயங் கரமான பேய்ச்சியின் முலைப் பாலிலே பேராசை கொண்டனையே. பிள்ளைகள் பிற ஸ்திரீகளின் ஸ்தன்யத்தை ஸுகமாகப் பருகுவதுண்டோ? இப்படிச் செய் தோமே யென்று உனக்கு இப்போதாவது லஜ்ஜை யுண்டோ வென்றதாம். இனி, யாரும் சொல்லக் கேட்கும் நிலைமையி லிராதவர்கள் தாங்களேயாகவாவது தப்புச் செய்தால் வெட்கமுற்று விலகும்படி விவேகமுள்ளவராயிருக்கவேண்டும். நீ எங்களிடமுள்ள மோஹத்தினாலே மறைந்து வந்து மரமேறி இருளில் ஒளித்து, ஆணுடை விடப்பட்டவன் செய்யும், தீம்புகளை எங்களிடம் செய்கின்றாயே. பலர் பார்த்திருக்கு மிவ்விடத்தில் நீ செய்யும் செயலுக்கு உனக்கே வெட்கம் வர வேண்டுமே; இல்லையே யென்றது மாம். .... (9)

10. கன்னியரோடெங்கள் நம்பி கரியபிரான்விளையாட்டைப்
பொன்னியல்மாடங்கள்சூழ்ந்த புதுவையர்கோன்பட்டன்கோதை
இன்னிசையாற்சொன்னமாலை யீரைந்தும்வல்லவர்தாம்போய்
மன்னியமாதவனோடு வைகுந்தம்புக்கிருப்பாரே. (30)

கன்னியரோடு — ஆயச்சிறுமிகளோடு
எங்கள் — எங்கள் ஸ்வாமியும்
நம்பி — கல்யாணகுணபூர்ணனும்
கரிய — கறுத்தமேனியனுமாய்
பிரான் — உபகாரகனுமான கண்ணன் (செய்த)
விளையாட்டை — திவ்யலீலைகளைப் பற்றி
பொன் இயல் — பொன்னின் ஸ்வபாவமுள்ள
மாடங்கள் — உப்பரிகைகளாலே
சூழ்ந்த புதுவையோர் — சூழப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளோர்களுக்கு
கோன் — ஸ்வாமியான
பட்டன் — பட்டநாதருடைய (மகளான)
கோதை — கோதையென்ற நான்
இன் — இனிமையான
இசையால் — இராகத்துடன்
சொன்ன — இயற்றின
மாலை ஈர் ஐந்து உம் — பத்துப் பாட்டுக்களையும்
வல்லவர் தாம் — கற்றவர்கள்
போய் — ப்ரக்ருதிமண்டலத்தைக் கடந்து
வைகுந்தம் புக்கு — ஸ்ரீ வைகுண்டத்தில் புகுந்து
மன்னிய — அங்கே நிலை பெற்று விளங்கும்
மாதவனோடு — ச்ரிய:பதியோடு
இருப்பார் — கூடிக் களித்திருப்பர்.

எங்கள் என்றதாலே கோதை யென்றவிடத்தில் கோதையான நான் எனப் பொருள் கொண்டது. எங்கள் என்று தன் திருத்தகப்பனாரையும் சேர்த்துச் சொன்னதாம்.

விளையாட்டை. கூறைகளைக் கைக்கொண்ட கண்ணனிடம் கன்னிகள் கேட்கும் வகைகளைக் கூறும் இத்திருமொழிக்கு அப்போழ்து அவன் செய்தருளின திவ்யலீலைகளை யநுஸந்திப்பதிலே நோக்கென்று கருத்து. தாம் போய் இத்யாதி. கன்னிகள் உள்ள இடம் போய் கண்ணன் செய்த விளையாட்டை நினைப்பார் அவன் நிலைத்திருக்குமிடம் தாமே போய் பிராட்டியைப் போல் அவனோடு கூடிக் களித்திருக்கப் பெறுவர்களென்றபடி.

இத் திருமொழியால் கண்ணன் கோப கன்னிகளின் துகில்களை யபஹரித்ததைச் சொல்லி வெகு ப்ரஸித்தமான இவ்வரலாற்றைப் போலவே சிற்றில் சிதைத்ததும் நடைபெற்றதாகக் கொள்ளுங்களெனத் தெளிவித்ததாம். அகங்களிலும் ஆற்றங்கரைகளிலும் தேவதாந்தர பூஜையிலிழிந்த கோபிகளையே கொண்ட மணாளன் தன்னையும் கொள்வனெனவும் கோதையின் கருத்தென்க.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி—3. கோழியழைப்பதன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

தெள்ளியார். 4.

(கூடலிழைத்தல்.)

அனங்கதேவார்ச்சனை செய்த ஆண்டாள், கண்ணபிரான் ஆயச்சிறுமிகள் உள்ளவிடம் தானே வந்து கலந்துகொண்டாப்போலே தன்னோடும் வந்து கலந்துகொள்வா னெனத் திடமாக எதிர்பார்த்திருப்பவளாய், நடுவிலே ஒரு நிமித்தத்தைக் கொண்டும் அதை யுணர்ந்து உள் மகிழ முயன்றவளாய் கூடலிழைக்கின்றனள். இத்திருமொழியில், தான் கூடலிழைத்ததே கூறப்படுகிறதல்லது கோபிகள் கூடலிழைத்தது நேராகக் கூறப்படவில்லை. கூடலிழைத்தலாவது சோழிகள், விதைகள் என்றாற்போலே சிலவற்றைக் குவியலாகக் கீழே சேர்த்து, அல்லது பல சுழிகளைச் சுழித்து, இரண்டு இரண்டாகக் கூட்டுவது. அதில் ஒன்றாக மிகாமே இரட்டையாகவே முடிவது கண்டால் தான் கூடுவது நிச்சய மெனத் தேறுவதாகும். இங்குப் பாட்டுக்களில் கூடிடுகூடலே என்றவிடத்தில் கூடல் என்பதற்குச் சோழி போன்றனவான கூடும் வஸ்து எனப்பொருள். கூடலே=கூடும் வஸ்துவே! நீ கூடிடு=சேர்ந்துகொள் என்றபடி. கூடல் என்பதற்கு இணைதல் என்றே பொருளாகிலும், இணைதலே! நீ கூடிடு=ஏற்படு எனவுரைக்கவேண்டும். அசேதநமான அதை விளித்ததிலிருந்து, 'இதனை விளிப்பதற்கும், கீழே, காமதேவா என்று மன்மதனை விளித்ததற்கும் வாசி யொன்று மில்லை. இதைப் போல் அவனும் அந்தர்யாமியான எம்பெருமானுக்கு உட்பட்டே கார்யம் செய்பு' மென வறிவித்ததாம்.

1. தெள்ளியார்பலர்கைதொழுந்தேவனார்
வள்ளல்மாலிருஞ்சோலைமணாளனார்
பள்ளிகொள்ளுமிடத்தடிகொட்டிடக்
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே. (31)

கூடலே —கூடும் வஸ்துவே!
தெள்ளியார் பலர் } விசதமாக அறிந்தவர்கள் பலரால்
கை தொழும்—அஞ்சலிசெய்து வணங்கப் படும்
தேவனார் —தேவதேவனையும்,
வள்ளல் —மிகவும் உதாரனையும்,
மாலிருஞ் சோலை } திருமாலிருஞ்சோலையில்
மணாளனார் —மணவாளனாயு மிருக்கும் அழகன்
பள்ளிகொள்ளும் } சயனித்துக்கொள்ளும்
இடத்து —இடத்திலே
அடி —(அவனது) திருவடிகளை
கொட்டிட —(நான்) குவித்துப் பிடித்து உபசரிக்க
கொள்ளுமாகில் } அவன் என்னை ஸ்வீகரிப்பானாகில்
நீ கூடிடு —நீயும் உன் இனத்தோடு சேர்ந்து விளங்கு.

தெள்ளியார் பலர். தெளிவு உள்ளவர் தெள்ளியர். தெளிவாவது விசதஜ்ஞானம். ஜ்ஞானமானது பூர்ணஸாக்ஷாத்காரமாக ஆனபோது மிக விசதமாகும். அப்படிப்பட்ட தெளிவு உள்ளவர் பரமபதத்திலிருப்பவர். அவர்

பலர். நித்யஸூரிகள், முக்தர்களெனப் பலவிதமானவர். இப்படியே ப்ரக்ருதி மண்டலத்தில் தேவர்கள், ரிஷிகள் போன்ற மஹாபக்தர்களும் தெள்ளியராவர். அவர்களுக்கும் கூடின மட்டில் விசதஜ்ஞானமிருக்கின்றதன்றோ? கைதொழும். 'பத்தாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந:' என்கிறபடி எப்போதும் கைகளைக் கூப்பின வண்ணமே யிருப்பவ ரல்லரோ பரமபதத்திலுள்ளவர். தேவனார். 'அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:' என்றபடி அவனே தேவன். மற்ற தேவர்களுக்குத் தேவத்தன்மை நிறைந்தது மன்று; நிலைப்பதுமன்று. 'ச்ரத்தயா தேவோ தேவத்வமச்நுதே' என்றபடி பெரியபிராட்டியாரின் சேர்க்கையாலே அவனுக்கு அம் மேன்மை. இருவரும் சேர்ந்தல்லவோ எல்லாம் நடத்தி ரஸிக்கின்றனர். இப்படி எல்லா ஜ்ஞானிகளாலும் ஸேவிக்கப்படும் பெருமான் அவ்வளவிலே திருப்தி பெறாமல் பெரியபிராட்டியாரின் சேர்க்கையினாலேற்பட்ட தேவத்வத்திற்கு (ஸ்ருஷ்டி முதலிய விஹாரங்களுக்கு) ஏற்ப, இங்குள்ளவர்களுக்கும் வள்ளலாயிருப்பதற்காக மாலிருஞ்சோலைக்கெழுந்தருளி மணாளனாயிருந்து எல்லோரையும் பிராட்டியைப் போலவே அநுபவிக்க இசைந்திருப்பதாலே, அவன் பள்ளிகொள்ளுமிடத்தில் அவனுடைய திருவடித்தாமரையைத் தடவிப் பிடிக்கும்படி நோன்பு நோற்றுள்ள என்னை நிச்சயமாய்க் கொள்வனென்று நம்பியிருக்கின்றேன். கூடலே! நீ கூடுவதென்ற நிமித்தத்தைக் கண்டால் அதுவிஷயத்திலே உத்ஸாஹம் வளரு மென்று கூடலிழைக்கின்றேனென்றபடி. தேவனாரென்ற பன்மை அவன் தன் மணாளனாய்விட்டதாலே.

மணாளனார். மணக்கோலத்தோடிருப்பவன். இதனால் தன்னை அவன் மணந்துகொண்டு கொள்ளவேண்டு மென்ற கருத்தை வெளியிட்டபடி. ஆகவே 'அடிகொட்டிட' என்று கேவலமான தாஸ்யத்தைச் சொன்னதன்று; பதியின் பெருமையையும் குணங்களையும் கண்டு இவளுக்குண்டான ஈடுபாட்டைக் குறிப்பதாம். இவள் இப்படி நினைப்பது. அவன் நினைவைப் பார்த்தால், சோலைமணாளனவன் பள்ளிகொள்ளுமிடத்திலே எனது அடியைக் கொட்டி என்னைக் கொள்வானாகில் கூடிடு கூடலே எனப் பாட்டுக்கு உரை செய்யும்படியாம். 'அங்கே நிதாய கரபோரு! யதாஸுகம் தே ஸம்வாஹயாமி சரணாவுத பத்மதாம்ரௌ' என்றபடி யன்றோ காமியின் இருப்பு. 'தெள்ளியார் கைதொழு மடியுள்ளவன் தன் கையாலென் அடி கொட்டிடக் கூடுகிறான்!' என்கிறாள்.

பள்ளிகொள்ளுமிட மென்று அரங்கத்தை நினைத்தனரென வுரைப்பர். அழகனே அரங்கத்திற் பள்ளிகொண்டதால் அழகியமணவாளனான் போலும். 'கூடிடு கூடலே என்று கூடலைச் சரணாகதி செய்தாள். அசேதநத்தையும் சரணாகதி செய்யும்படி இருந்தது இவளுக்கு அபிநிவேச' மென்பர். கூடல்கூடுதலானது அனங்கதேவார்ச்சனை போல் எம்பெருமானோடு இவளைக் கூட்டுவதற்கானதன்று; அதாவது எம்பெருமானோடு இவள் கூடுவதற்கு இது காரணமன்று. ஆனாலும், கூடுவேன் என்ற உறுதிக்கும் ஸந்தோஷத்திற்கும் காரணமாகும். .... (1)

இப்படித் தன் அடிகொட்டிக் கைதொழவேண்டி யன்றோ அவன் தெள்ளியார் கைதொழு மிடத்தை விட்டு மாலிருஞ்சோலைக்குள் புகுந்து மணாள

னது. திருமாலிருஞ்சோலையையும் திருவரங்கத்தையும் கூட்டிச் சொன்னபடியிலே கூடல்திருமொழியிலே திருவேங்கடத்தையும் திருக்கண்ணபுரத்தையும் கூட்டிச் சொல்லுகின்றனள்—

2. காட்டில்வேங்கடம் கண்ணபுரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டரா வந்தென்கைபற்றித்தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே. (32)

வேங்கடம் காட்டில் — திருவேங்கட மலையின் காட்டிலும்
கண்ணபுரம் நகர் — திருக்கண்ணபுரமென்ற பெரிய பட்டணத்திலும்
வாட்டம் இன்றி — ஆயாசமில்லாமல்
மகிழ்ந்து — உள்ளம் பூரித்து
உறை — நித்யவாஸம் செய்யும்
வாமனன் — வாமனாவதாரம் செய்த பிரான்
ஓட்டரா வந்து — தானே ஓடிவந்து
என் கை பற்றி — எனது கையைப் பிடித்துக்கொண்டு
தன்னொடும் — உயர்ந்த தன் திருமேனியோடு (என் ஆகத்தை)
கூட்டுமாகில் — அணையுமாகில் கூடலே! நீ கூடிடு

சக்கரவர்த்தித்திருமகனானபோது தண்டகாரண்யத்திலும் அயோத்தியிலுமிருந்தான். கண்ணனானபோது கோகுலத்திலும் ப்ருந்தாவனத்திலுமிருந்தான். தனியே நித்யவிபூதியும், தனிப்ரக்ருதிமண்டலமும் போதாதென்று இரண்டும் கூட மகிழ்கின்ற இவன், தனிக்காடும் தனிநகரும் வேண்டாமென்று வேங்கடம் கண்ணபுர மிரண்டையும் கொண்டு அவை கூடவே வாட்டமின்றி மகிழ்ந்தான். அப்படி மகிழ்ந்தவன் அம் மகிழ்ச்சியாலே திருமேனி பூரித்துத் திருவிக்கிரமனாக ஸேவை யளிக்கவேண்டியிருக்க வாமனனாகவே வேங்கடத்தில் விளங்குவதேன்? என்னைத் தான் பெறவில்லையே என்ற வாட்டத்தினாலே என்னல் வேண்டும். என்னால் காட்டிலும் பெரும் பட்டணத்திலும் புகுந்து அலையமுடியுமோ? அவனே இங்கு வரவேண்டும். மாவலிவேள்விக்கு நடந்து சென்றாற் போலே அடிமேலடி வைத்து வரும் ஸமய மன்று இது. காலம் கடந்துவிட்டதேயென்று துடிக்கின்றேனே. ஆகவே ஓடிவரவேண்டும் அவன். கஜேந்த்ராழ்வானைக் காக்கவும் ருக்மிணியைக் கைப்பற்றவும் சென்றபோது இருந்த ஓட்டம் இப்போது வேண்டும். ஓடிவந்து என் கையைப் பிடித்திழுத்துத் திருமார்பில் அணைந்துகொள்ளவேண்டுமென்றபடி.

உறைவாமனன் ஓட்டரா. நித்யவாஸம் பண்ணி மகிழுமவன் அந்த வாஸம் பிடிக்காமல் ஓடிவரும்படி என் நிலைமை யிருக்கிறபடியென்றதாம். மண்ணைக் கொள்வதற்கு மாவலியஸுரனை யாசிக்கப் போனான். யாசிப்பவனை, ஓடின வண்ணமிருக்கும் காற்றுக்கும் மேலாக வெகு இலகுவாயிருப்பதாகச் சொல்வர். அம் மண்ணுக்கெல்லாம் அபிமானிதேவதையாய் பூமிப்பிராட்டியான ஆண்டாளைப் பெறுவதற்காக பூஸுரச்ரேஷ்டரான பெரியாழ்வாரிடத்திலே வந்து கேட்பதற்கு அவன் ஏன் ஓடிவரலாகாது. அங்கே பலன் கிடைக்குமா என்ற ஸந்தேஹத்திற்கு இடமிருந்தது. இங்கு அது கூட இல்லை. தயங்காமல் ஓடிவரலாமே. **ஓட்டரா,** ஓட்டம் தரா. ஓட்டத்தைத் தந்து. தன்னைக் கொண்டு

வரும் பெரியதிருவடி முதலானோருக்கும் தானே ஓட்டத்தைத் தந்து எனவு முறை தகும். கைபற்றி என்று பாணிக்ரஹணமென்ற விவாஹத்தையும், தன்னோடும் கூட்டுமாகில் என்று ஸ்ரீவில்லிபுத்தூரில் விவாஹம் நடந்தபிறகு பருவம் பெற்றவுடன் தன்னை யழைத்துக் கூட்டிக்கொள்வதையும் கூறினதாம். தன்னோடும் என்ற உம்மையானது அவன் பெருமையையும், என் என்பது இவள்சிறுமை யையும் குறிக்கும். வாமனன் தன் ப்ரம்மசர்யத்திலேயே என்னை விடாமற் கூடவேண்டுமென்றதுமாம். .... (2)

இனி, கண்ணபுரநகரென்றதற்கேற்ப ஆறு பாட்டுக்களால் கண்ண னுடைய வரலாற்றை யொருபடி கூறிக்கொண்டே கூடலிழைக்கின்றனள்—

3. பூமகன்புகழ் வானவர் போற்றுதற்
காமகனணிவாணுதல் தேவகி
மாமகன் மிகுசீர் வசுதேவர்தம்
கோமகன்வரில் கூடிடு கூடலே. (33)

பூமகன் — எம்பெருமானின் நாபி கமலத்தில் பிறந்த பிரமனும்
புகழ் வானவர் — (அவனைப்போல்) புகழப்படும் தேவர்களும
போற்றுதற்கு ஆம் — புகழ்வதற்குத் தகுதிபெற்ற
மகன் — புருஷனும்,
அணி —அழகியதும்
வாள் —ஒளிபொருந்தியதுமான
நுதல் —நெற்றியையுடைய
தேவகி —தேவகியாரின்
மாமகன் —மேன்மை பொருந்திய குமாரனும்,
மிகு சீர் —மிகுந்த குணங்கள் கொண்ட
வசுதேவர் தம் — வஸுதேவருக்கு
கோமகன் —நாயகனுமான கண்ணன்
வரில் —என்னிடம் வந்து கூடுவானாகில்
கூடலே! கூடிடு.

புகழ் என்பதை, 'போற்றுதற்கு' என்றதோடு சேர்த்துப் புகழ்ந்து போற்று தற்கு என வுரைத்தல் ஸ்வரஸமுமன்று, வீணுமாம். பெரியவாச்சான்பிள்ளையும் புகழ்வானவரென்றே கொண்டனர். பூமகன் என்று பிரமனைச் சொன்னது முழுப்ரக்ருதி மண்டலத்தையும் சொன்னபடியாகக் கொண்டு புகழ்வானவர் என்று அவனாலும் புகழப்படும் நித்யஸூரிகளைக் குறிப்பது என்பதுமாம். போற்றுதற்காமகன் என்றவிடத்தில், 'ஆமவன்' என்ற பாடம் எங்கும் காணாதது. எல்லாவடிகளிலும் 'க' வே பொருத்தமுள்ளது. பெரியவாச்சான் பிள்ளையும் அங்ஙனமே படித்தார். அப்போது மகனென்பது 'வானிளவரசு வைகுந்தக்குட்டன்' என்றபடி இளம்புவராஜனாகவே எப்போதுமிருத்தலை விளக் கும். அகன் என்பதற்கு அகன்ற என்ற பொருள் சில அகராதிகளில் கூறப்பட் டுள்ளது. அகல் என்பதே முன்பின்னடிகளுக்கேற்ப அகனென வாயிற்றென் னலுமாம். இங்ஙனம் கூடுமாகில் போற்றுதற்கா மென்பதும் நுதலுக்கு அடை மொழியாம். அப்போது ஆம் அகன் எனப் பிரிக்க. இஃது இதன் கருத்தாம்.— பூமகன் என்றபோதே பிரமனுடைய பெருமை சொல்லப்பெற்றது. மற்ற தேவதைகளும் உலகினில் எல்லோராலும் தோத்திரமும் யாகமும் செய்து புகழப் பெற்றவர்கள். அப்படிப்பட்டவர்கள் வந்து போற்றும்படி விளங்கினள்

தேவகிப்பிராட்டி யென்றால் அவளுடைய பாக்யத்தை என்னென்று சொல்வது? புகழப்பட்டவர் புகழ்ந்தனரெனத் தோற்றுவிக்க வானவரென்னுமே புகழ் வானவரென்றது. தேவகியாரின் கர்ப்பத்தில் எம்பெருமான் எழுந்தருளி யிருந்தபோது அவர்கள் வந்து துதித்தது ப்ரஸித்தம். அவர்கள் வந்து ஸ்தோத்ரம் செய்தபோது கர்ப்பத்தில் எம்பெருமான் இருக்கிறானென்ற மகிழ்ச்சியாலே அவள் நுதலும் திருமுகமும் விளங்கின அழகு அகன் இத்யாதியாலே அநுஸந்திக்கப்பட்டதாம். எம்பெருமான் அவதரிக்கவேண்டுமென்று அதற்காகத் தாம் எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக் காத்திருந்த மஹாநுபாவரின் சீர் அவளுக்கும் மேம்பட்டதாகையாலே மிகுசீர் என்றது. அவ் வசுதேவர் தம்மையும் கண்ணன் அவர்கள் உள்ளத்திற்கிணங்கி கோகுலம் கொண்டு சேர்ப்பிக்க நியமித்தது முதலானவை தோற்ற கோமகன் என்றது. கோமகனானவான், அரசன், ராஜகுமாரன், தலைவன். கோவும் மகனுமானவன் என்னவுமாம். 'யுவாம் மாம் புத்ரபாவேந ப்ரம்மபாவேந சாஸக்ருத்' என்றதும் காண்க.(3)

கோகுல மெழுந்தருளின பிறகு நடந்த வரலாறு கூறப்படுகிறது—

4. ஆய்ச்சிமார்களுமாயரு மஞ்சிடப்
பூத்தநீள்கடம் பேறிப்புகப்பாய்ந்து
வாய்த்தகாளியன் மேல் நடமாடிய
கூத்தனார்வரில் கூடிடு கூடலே. (34)

- பூத்த —அப்போது புஷ்பித்த
- நீள் —நீண்ட
- கடம்பு —கடப்பமரத்தில்
- ஏறி —நுனியிற் சென்று
- ஆய்ச்சிமார் களும் — இடைச்சிகளும்
- ஆயரும் —இடையர்களும்
- அஞ்சிட —பயப்படும்படி
- புக —மடுவின் உள்ளுக்குள்ளே புகும்படி
- பாய்ந்து —மரத்தினின்று குதித்து

- வாய்த்த — உள்ளே இருக்கமாட்டாமே நீர்மேல் கிளம்பும்படி வாய்ப்புண்ட
- காளியன் மேல் — காளிய ஸர்ப்பத்தின் தலைகளிலே
- நடம் —அற்புத நாட்டியத்தை
- ஆடிய —செய்தருளின
- கூத்தனார் வரில் — நடராஜராஜன் என்னிடம் வந்து கூடுவானாகில் கூடலே! கூடிடு.

அஞ்சிட என்பது பாய்ந்து என்றதோடு சேரும். பூத்த. காளிய விஷத் தீயினால் கொளுத்தப்பட்ட கடம்பும் கண்ணனுடைய திருவடித்தாமரைகள் பட்டமாத்திரத்திலே தளிரும் பூவுமாக விளங்கினது. இராமபிரான் அயோத்தியை விட்டபோது அங்கே மரங்கள் வாடிக்கிடந்தன. அவன் போனவிடங்களிலெல்லாம் பூத்து விளங்கின. 'அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:', 'புஷ்பிதாக்ராணி மத்யேந ஜகாம வததாம் வர:' என்றாரல்லரோ?

வாய்த்த கூத்தனார் என்ற பதங்களை நோக்குங்கால் எம்பெருமான் திருவடிகளை வைத்துக் கூத்திடும்படி காளியனுக்கு வாய்த்தது பாக்ய மென்றதாம். அதைக் கொண்டு அதுபோல் என் தடமுலைகளில் அவன் நடிக்கும்படி எனக்கு வாய்க்கவேணு மென இவள்விருப்பமென வுரைத்து ரஸிப்பர். நடமாடிய.

நடமாடுதல் ஸஞ்சரித்தலும் நடனம் செய்தலும். அவன் அநாயாஸமாக ஸஞ்சாரம் செய்யுமா போலே செய்தான். அது நாட்யசாஸ்திரத்தாலும் அறியா அற்புத நடனமாயிற்றென்றபடி. (4)

5. மாடமாளிகை சூழ்மதுரைப்பதி
நாடிநந்தெருவின் நடுவேவந்திட்
டோடைமாமதயானை யுதைத்தவன்
கூடுமாகில் நீ கூடிடுகூடலே. (35)

மாடம் —உப்பரிகைகளாலும்
மாளிகை —பெரிய ராஜக்ருஹங்களாலும்
சூழ் —சூழப்பட்ட
மதுரை பதி —மதுரை யென்ற வூருக்கு
நாடி —எழுந்தருளி
நம் தெருவின்—நமது வீதியின்
நடுவே —நடுவிலே
வந்து இட்டு —வந்து சேர்ந்து சிலவற்றைச் செய்து (பிறகு)

ஓடை —நெற்றிப்பட்டம் உள்ளதும்
மா —பெரியதுமான
மதம் யானை—மதம் பிடித்த யானையை (குவலயாபீடத்தை)
உதைத்தவன் } திருவடியால் உதைத்தழித்த கண்ணன்
கூடுமாகில் —என்னுடன் சேருவானாகில்
கூடலே! நீ கூடிடு

மாடமென்பதே போதுமாயிருக்க மாளிகை யென்றது அரசர் கிருஹங்களைச் சிறப்பாகச் சொல்லவாம். கூடல் திருமொழியானதால் இரண்டிரண்டாய்க் கூட்டிச் சொல்வது எங்கு முளது. **நந்தெருவின்.** ஸ்ரீவில்லிபுத்தூரி லிப்போதுள்ள ஆண்டாள் வடமதுரையி லப்போது இருந்த தெருவை **நம் தெரு** வெனக் கூறினது கூடுமோ வென்னில்—கூடாதாகில் பாட்டில், 'மாடமாளிகை சூழ் மதுரைப்பதி நாடி ஓடைமாமதயானை யுதைத்தவன் நம் தெருவின் நடுவே வந்திட்டுக் கூடுமாகில்' என அந்வயம் கொள்ளலாம். இப்போது **நம் தெரு** வென்று ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள இவளுடைய வீதியைச் சொன்னதாம். **நடுவே வந்திட்**டென்றதாலே எல்லோரு மறியும்படி பஹிரங்கமாய், 'கோதையின் கிருஹத்திற்குப் போகிறோம். அது எங்கே' யென்று விசாரித்துக்கொண்டு அநுகூலர்களை யெல்லாம் கண்டுகந்து வரவேணு மென்றதாம். வடமதுரை நகரிலிருந்த தெருவையும் நம் தெரு வென்னக்கூடும். எங்ஙனே யென்னில்—திருவாய்ப்பாடியைத் தன்னதாக நினைத்தாப் போலே மதுரையில் இவளுக்கு இல்லமும் ஒரு தெருவு மிருப்பதாக இவள் நினைத்துக்கொண்டா ளென்பர். தான் பூமிப்பிராட்டியின் அவதாரமானபடியாலே அவ்வித அவதாரமாய் அப்போ திருந்த ஸத்யபாமை போன்றாருடைய இல்லமும் தெருவும் இவளுடையனவாகலாமென்னவுமாம். மேலும் தன்னைப் போல் கண்ணனிடம் காதல் கொண்ட த்ரிவக்ரையும், தன் தகப்பனாரைப் போல் பக்தி மிகுந்த மாலாகாரரும் இருந்த தெருவை நம் தெருவென்றாளென்னலாம். கஞ்சன் வஸித்த தெருவை யவன்தெருவாக நினைக்கலாகாது. நம் கண்ணன்தேருவே யது. ஆக நம் தெருவும தது என்றாளென்னலு மாம். நம் என்ற பன்மை, கூடலையும் தன்னோடு சேர்த்துக் கொண்டதாலாம். அல்லது அவன் கூடும்படி தனக்குள்ள மேன்மையைக் குறிக்கவாம்.

இங்கே நம் என்று ஆண்டாளைக் குறிப்பதாகப் பெரியவாச்சான்பிள்ளை சொன்னது கூடுமோ? ஆய்ச்சிகளின் கூடற் பேச்சையே தானே ஆண்டாள் இத் திருமொழியிலே அநுவாதம் செய்கிறாள். ஆகையால் நம் என்று ஆய்ச்சிகளையே கொள்ளவேண்டும். ஆய்ச்சிகளுக்கு மட்டும் மதுரையில் தெரு ஏதெனில், அதைத் தான் விசாரிக்கவேண்டு மென வினா எழுகிறதென்பர். இத் திருமொழியானது ஆய்ச்சிகளின் பேச்சுக்கு அநுவாதமன்று; ஆண்டாள், தான் கூடலிழைத்ததையே கூறுகிறாளென்று முடிவுகொண்டால் ஆச்சான் உரைத்தபடி நம் என்று ஆண்டாளைக் குறிக்கக் குறையில்லை. இந்த விசாரத்தை இத் திருமொழிகடைப் பாசுரத்திலே காண்க.

வந்திட்டு. இங்கே இட்டு என்றது, நாறிய சாந்தம் திருவுடம்பிலிட்டது, மாலையிட்டுக்கொண்டது, வண்ணனை வதைத்தது, வஸ்திரங்களை யணிந்தது முதலான செயல்களைச் சொல்லும். **ஓடை.** நெற்றியில் கட்டப்பட்டிருக்கும் பட்டம். .... (5)

குவலயாபீடத்தைக் கொன்றபிறகு கஞ்சனைக் கொன்று கொற்றவனானது கூறப்படுகிறது—

6. அற்றவன் மருதமுறியநடை
கற்றவன்கஞ்சனை வஞ்சனையிற்
செற்றவன் திகழும் மதுரைப்பதிக்
கோற்றவன் வரில் கூடிடுகூடலே. (36)

அற்றவன் —தீர்ந்தவனும்,
மருதம் —இரு மருதமரங்கள்
முறிய —உரல்பட்டு முறிந்துவிழும்படி
நடை —தவழ்ந்த நடையை
கற்றவன் —அப்யாஸம் செய்தவனும்,
கஞ்சனை —கம்ஸனை
வஞ்சனையில் —அவன் எண்ணத்தையெல்லாம் வஞ்சித்து
செற்றவன் —அழித்தவனும்,
திகழும் —ப்ரஸித்திபெற்ற
மதுரைபதி —மதுரை நகருக்கு
கொற்றவன் —அரசனுமான கண்ணன்
வரில் —என்னிடம் வந்து கூடில் கூடலே! கூடிடு.

அற்றவன். கம்ஸவதத்திற்காகப் பிறப்பவனாக ஏற்கனவே அசரீரிவாக்கினாலே அறிவிக்கப்பட்டவனாகையாலே அதற்கே தீர்ந்தவன் அச்செயலைச் செய்தானென்றபடி. அதற்காகவே அவன் ஆயர்குலத்தில் ஒளித்து மருத முறிய நடை கற்றது. அற்றவனென்பதற்கு ஆண்டாளுக்காகவே பிறந்தவனென்னும்படி அற்றுத் தீர்ந்தவனென உரை செய்வர். கண்ணனவதரித்தது ஆண்டாளுக்காக என்று எந்த பிரமாணத்திலுள்ளதெனில், 'பரித்ராணாய ஸாதூநாம்' என விருப்பதால் இவள் தானும் ஸாதுக்களிலொருத்தியானதால் ப்ரமாணமுண்டென்பர். இதை விட பொதுவாகவே, துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனாதிகளுக்காகவே தீர்ந்தவன் என்றே உரைக்கலாம். **வஞ்சனையில்.** வேற்றுருவு கொண்டு வஞ்சனையால் புகுந்து கொல்லும்படி பலரைத் தூண்டினவனும், வில் வேள்விக்கு அழைக்குமா போலே வஞ்சனை செய்து அழைத்து மல்லரோடு

போரிலே மூட்டினவனுமான கஞ்சனை வில்வேள்விக்கு வந்தாற் போலே வந்தானும் வஞ்சனை செய்தழித்தானென்றபடி. வஞ்சனையில் வஞ்சனுக்கு இருப்பிடமான கஞ்சனை யெனவுமந்வயமாம். திகழும். 'மதுரா பகவாந் யத்ர நித்யம் ஸந்நிஹிதோ ஹரி:' என்றபடி கண்ணனுடைய அவதாரத்திற்கு முன்பே பண்டைக் காலத்திலிருந்தே எம்பெருமானுடைய இருப்பிடமாக ப்ரஸித்தமானது மதுரை. லவணாஸுரஸம்ஹாரம் செய்து சத்ருக்னன் பரிஷ்கரித்தெழுந்தருளியிருந்த நகருமிதுவே. திகழும் என்பது கொற்றவனுக்கு அடைமொழியுமாம். உக்ரஸேநன் அரசனானாலும் கண்ணனே அவனுக்கும் தலைவனாகத் திகழ்ந்தானென்றபடி, (6)

துஷ்டநிக்ரஹத்திற்காக ஆற்றத் தீர்ந்தவனிவன். ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களிலே ஸ்திதி யென்பது நேராக இவனாலே செய்யப்படுவதன்றோ? 'ந ஹி பாலநஸாமர்த்யம் ர்தே ஸர்வேச்வரம் ஹரிம்' என்றார் ஸ்ரீபகவத்பராசரரும். இப்படி யிவன் கம்ஸவதத்திற்காகப் பிறந்தானென்பதால் ஆற்றவனானாற் போலே சிசுபாலனை வதிக்கும் விஷயத்திலும் ஆற்றவனாகிறான். எனெனில், ஒரு காலத்தில் த்வாரபாலகர்களாயிருந்தவர்களே ஹிரண்யாக்ஷஹிரண்யகசிபுகளாகவும் ராவணகும்பகர்ணர்களாகவும் பிறந்தது போல், சிசுபாலதந்தவக்த்ரர்களாகவும் பிறந்தார்களாகையால் அவர்களை ஸம்ஹரிக்க ஏற்பட்டது க்ருஷ்ணாவதாரம். மேலும் சிசுபாலன் நான்கு கைகளும் மூன்று கண்களுமாகப் பிறந்தான். அப்போது ஆகாயவாணியானது, 'யார் தொடும்போது இவனுக்கு அதிகப்படியான கைகளும் கண்ணும் மறையுமோ, அவனே இவனைக் கொல்பவன்' என்றது. ஒரு சமயம் கண்ணன் அவனைத் தொடும்போது அவை மறையவே கண்ணனால் அவனுக்கு அழிவென்று அப்போதே தீர்ந்துவிட்டது. ஆகையால் கம்ஸவிஷயத்திலே போலே சிசுபாலவிஷயத்திலும் இவன் ஆற்றவனென விளங்கியிருப்பதால் கம்ஸவதத்திற்குப் பிறகு சிசுபாலவதையைக் கூறுகின்றனள்—

7. அன்றின்னாதன செய்சிசுபாலனும்
நின்றநீள்மருது மெருதும் புள்ளும்
வென்றிவேல்விறற்கஞ்சனும் வீழமுன்
கொன்றவன் வரில் கூடிடு கூடலே. (37)

நின்ற —சாபத்தாலும் அஸுராவேசத்தாலும் நிலைநின்ற
நீள் மருது உர் } நீண்ட இரண்டு மருத மரங்களும்,
எருது உம் —எருதாக வந்த அரிஷ்டாஸுரனும்,
புள் உம் —பகாஸுரனும்,
வென்றி —வெற்றிக்கான
வேல் —வேலாயுதமும்
விறல் —வலியும் உடைய
கஞ்சன் உம்—கம்ஸனும்,

அன்று —கண்ணன் சத்ருவென ஏற்பட்டதிலிருந்து
இன்னாதன —அப்ரியங்களானவற்றை
செய் —செய்தவந்த
சிசுபாலன் உம் } சிசுபாலனென்பவனும்
வீழ —அழிந்துவிழும்படி
முன் கொன்றவன் } க்ருஷ்ணாவதாரத்திலே வதைசெய்தவன்
வரில் —வருவானாகில்
கூடலே! கூடிடு.

சிசுபாலவதை இங்குக் கூறப்படவேண்டியதாம். அந்த வதையானது மருதம் முதலியனவற்றிற்குச் செய்த வதையைப்போல் எளிதானதென அறிவிக்க

அவைகளை த்ருஷ்டாந்தங்களாகக் கருதி அவைகளும் கூறப்பெற்றன. ஸ்தாவர பசுபக்ஷிகளின் வதத்திற்குச் சமானமாயிருந்தது கம்ஸவதம். அதைப் போலவே சிசுபாலவதமும் என்றதாம். நின்ற என்ற பதம் ஸ்தாவரம் என்பதை உணர்த்தும். இன்னதன. ருக்மிணியை மணந்துகொள்ள முயன்று செய்தது, தர்மபுத்ரருடைய ராஜஸூயயாகத்திலே கண்ணனுக்குச் செய்த அக்ரபூஜையைப் பொறுக்காமே பல வசைச்சொற்களைச் சொன்னது போன்றவையாம். எருதும் என்பதற்கு ஏழு விருடபங்கள் என்ற பொருளும் கொள்வர். நப்பின்னைப்பிராட்டியை மணந்துகொள்வதற்காக அவற்றின் வலியடக்கினனே. .... (7)

திருமதுரையை விட்டுத்துவரையிலே பதினாறாயிரம் தேவிமார்கள் போன்றவர்களோடு விளங்கினது கூறப்படுகின்றது—

8. ஆவலன்புடையார் தம்மனத்தன்றி
மேவலன் விரைசூழ்துவராபதிக்
காவலன்கன்று மேய்த்து விளையாடும்
கோவலன் வரில் கூடிடு கூடலே. (38)

ஆவல்	—ஆஸ்தையையும்
அன்பு	—ஸ்நேஹத்தையும்
உடையார் தம்	உடையவர்களின்
மனத்து அன்றி	மனத்தில் தவிர
மேவலன்	—வேறெங்கும் மேவுதல் இல்லாதவனும்,
கன்று	—பசுங்கன்றுகளை
மேய்த்து	—மேயச் செய்து
விளையாடும்	—இடைப்பிள்ளைகளோடு விளையாடுகின்ற
கோவலன்	—இடையனாய் (பிறகு)
விரை சூழ்	—வாசனையால் சூழப்பெற்ற
துவராபதி	—துவாரகை நகருக்கு
காவலன்	—ரக்ஷகனுமான கண்ணன்
வரில்	—வருவானாகில் கூடலே! கூடிடு.

துவராபதி. துவராவதி. த்வாரவதீ. இது நடுஸமுத்ரத்திலே தனக்கென்று ஒரு தீவைக் கிளப்பி அங்கே கண்ணனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட நகரம். இது நடுக்கடலிலே தனியே பூஞ்சோலைகள் சூழ்ந்ததாலும் பரிமளம் நிறைந்த பதினாறாயிரம் பத்னிகளின் வாஸத்தாலும் வாஸனை சூழ்ந்து விளங்காநின்றது. பால்யத்திலே ஆயர்களிடத்திற் போலே யௌவனத்திலே துவரையிலுள்ளவரிடம் அன்பு பாராட்டி வந்தானவன். அதற்குக் காரணம் அவர்களும் ஆவலும் அன்பும் உடையராயிருந்ததாம். ஆவலாவது, ‘எம்பெருமானைப் பெறவேண்டும், அவனுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும், அவன் நீடூழி வாழவேண்டு’ மென்றாற் போலுள்ள ஆஸ்தை. அன்பாவது, அதற்குக்காரணமாய் அவனிடமுள்ள பக்தி; காதல் போன்ற ஸ்நேஹம். இங்கே நோன்பு நோற்பது போன்றவை ஆவலென்றும், பல்லாண்டென்பது அன்பெனவு முரைப்பர். அதாவது தமக்கொரு பலனில் நசையுள்ளாரின் ப்ரேமம் ஆவல். பெரியாழ்வாரைப் போலே பெருமாளின் ஸம்ருத்தியிலேயே நோக்கு அன்பு என்றதாம். உசிதமான படியைக் கொள்க. .... (8)

இப்படி 2-ம் பாட்டில் திருக்கண்ணபுரமென்றதாலே கண்ணனைப் பற்றி விஸ்தாரமாகக் கூறி அங்கே வாமனன் என்று சொன்னதை விஸ்தரித்தனுபவித்

தருளுவது மேற்பாசுரம். அதற்கு மேல் முதற்பாசுரத்திலே யனுஸந்தித்த அழகனை முடிவிலு மனுஸந்திப்பதாம்—

9. கொண்டகோலக்குறளுருவாய்ச்சென்று
பண்டு மாவலிதன்பெரு வேள்வியில்
அண்டமும் நிலனுமடியொன்றினால்
கொண்டவன்வரில் கூடிடுகூடலே. (39)

பண்டு —முன் ஒருகாலத்திலே
கொண்ட —இல்லாமல் ஏற்றுக்கொண்ட
கோலம் குறள் உரு ஆய் } அழகும் அலங்காரமு மமைந்தவாமனப்ரம்மசாரி உருவையுடையனாய்
மாவலிதன் —மஹாபலியின்
பெரு வேள்வியில் } பெரிய யாகத்திலே
சென்று —போய்ச்சேர்ந்து
அடி ஒன்றினால் } ஒவ்வோர் அடியினாலேயே
அண்டமும் —மேலுலகமெல்லாவற்றையும்,
நிலனும் —பூமியடங்கலும்
கொண்டவன் } ஸ்வாதீனம் செய்து கொண்ட பெருமான்
வரில் —என்னிடம் வருவானாகில் கூடலே! கூடிடு.

கொண்ட கோலம். கோலம் கொண்ட எனவும் அன்வயம் கொள்ளலாம். வேஷமும் உருவுமெல்லாம் இயற்கைக்கு மாறானவை யென்றதுமாம். பெரு வேள்வியில். எதைக் கேட்டாலும் கொடுத்து வேள்வியைச் செய்வனே செய்தானுகையாலும், எல்லோருக்கும் எம்பெருமானின் திருவடிஸ்பர்சம் ஏற்படும்படி செய்வித்தது முதலானவற்றைக் கொண்டும் வேள்விக்குப் பெருமையிருந்தது. (அவனும் அன்புமிருந்தால் அசுரனையும் காப்பான், இன்ன சாதியாயிருக்கவேண்டு மென்பதில்லை யென்பது இங்கே வெளியிடப்பெற்றதாம்.) அடியொன்றினால். ஒரே அடியினாலுலகம் முழுதும் அளக்கவில்லையாகையாலே ஒவ்வோரடியினால் எனப் பொருள்கொண்டது. மூன்றடிகளும் மண்ணிலே ஒரு மூலையிலடங்கிவிடுமென்று நினைத்ததற்கு நேர்மாறாக நிலம் முழுதும் ஓர் அடியாகவும், மற்றவை யெல்லாம் மற்றோர் அடியாகவும் ஆன்மையைக் கண்டு வியந்து இவ்வாறு கூறினதாம். எம்பெருமானுடைய திருமேனியில் திருக்கை முதலான மற்ற அங்கங்கள் இருக்கட்டும். அடி யொன்று செய்த ஆச்சரியத்தைப் பாரீரென்றதுமாம். .... (9)

10. பழகுநான்மறை யின்பொருளாய்மத
மொழுகுவாரணமுய்யவளித்த எம்
அழகனாரணி யாய்ச்சியர் சிந்தையுள்
குழகனார்வரில் கூடிடுகூடலே. (40)

அணி —அழகு பொருந்திய
ஆய்ச்சியர் —இடைப்பெண்களின்
சிந்தையில் —மனத்தில்
குழகனார் —தீம்பும் திடநன்மையும் கலந்து விளங்கினவனையும்,
பழகு —(எல்லோராலும் எப்போதும்) வழங்கப்படும்
நால் மறை —நான்கு வேதங்களின்
இன் —இனிய
பொருளாய் —பொருளாயும்,
மதம் ஒழுகு —மதம் பெருகாநின்ற
வாரணம் கஜேந்த்ராழ்வான்
உய்ய —உஜ்ஜீவிக்கும்படி
அளித்த கிருபை செய்தவனையுமிருக்கிற
எம் அழகனார்—எமது மாலிருஞ்சோலையழகன்
வரில் —வந்து கூடுவானாகில் கூடலே! கூடிடு

பழகு என்பதற்குப் பழமையான, அநாதியான எனப் பொருள் கூறுவர். பழகுதல் இணங்குதல், வழங்குதல். பழகுநான்மறை யென்றது வினைத்தொகை. எல்லோரும் ஆதரித்து வழங்கு மெல்லா மறைகளிலும் இவன் இனிய பொருளாய் நின்றான். சில வேதங்கள் இவனை அந்தர்யாமியாகச் சொல்லும். வேதத்தின் பொருள்களுக்குள்ளே பரமாநந்தரூபமான இவனே இன்பொருள்; வாரணமுய்ய. இத்திருமொழியின் முதற்பாட்டில் திருமாலிருஞ்சோலையெம்பெருமானை யநுஸந்தித்ததால் முடிவிலும் அவ்வழகனை யநுஸந்திக்கின்றாள். அங்கே வாரணங்கள் விளையாடுவது சிறந்திருப்பதால் கஜேந்த்ரமோக்ஷத்தை யருளுகின்றாள். 'ஒரு வாரணம் பணிகொண்டவன் பொய்கையில், கஞ்சன்தன் ஒருவாரணமுயிருண்டவன் சென்றுறையும் மலை, கருவாரணம் தன் பிடி துறந்தோடக் கடல்வண்ணன் திருவாணை கூறத் திரியுந் தண் திருமாலிருஞ்சோலையே' (பெரியா. 4–2–5) யென்றதும் காண்க. இப்படி அஸுரர், திர்யக்கு, இடையர் முதலாக எல்லா உயிர்களையும் உய்விப்பவனென்றதாயிற்று. .... (10)

தான் கூடலிழைத்ததைக் கூறும் பாட்டுக்களைக் கற்றார்க்கு, கூடாமையை விளைவிக்கும் வினை விலகு மென்று பலனருளப்படுகின்றது—

11. ஊடல்கூடலுணர்தல் புணர்தலை
நீடுநின்று நிறைபுகழாய்ச்சியர்
கூடலைக் குழற் கோதைமுன் கூறிய
பாடல்பத்தும் வல்லார்க்கில்லை பாவமே. (41)

ஊடல்	—ப்ரணயகலஹமென்ன,	முன்	—முதன்முதலாக (பற்றி)
கூடல் உணர்தல்	கூடலையறிகையென்ன (அல்லது)	குழல்	—கொண்டைகொண்ட
கூடல் உணர்தல்	ஊடலுக்குமுன் கூடலென்ன, உணர்த்தலென்ன,	கோதை	—கோதையினால்
புணர்தலை	—கலவியென்ன இவற்றை	கூறிய	—சொல்லப்பட்ட
நீடுநின்று	—நீண்டகாலம் நிலைத்திருந்து	பத்து பாடல் உம்	பத்துப் பாட்டுக்களையும்
நிறை	—நிலைநிற்கும்	வல்லார்க்கு	—கற்றோர்க்கு
புகழ்	—பெருமையை யுடைய	பாவம்	—கூடாமையை விளைவிக்கும் பாவம்
ஆய்ச்சியர்	—இடைப்பெண்களுடைய	இல்லை	—விலகும்.
கூடலை	—கூடல் என்கிற நடுவிஷயத்தையே		

ஊடல், உணர்தல், புணர்தல் என மூன்று காமகார்யங்கள் தமிழ்க்காவ்யங்களிலும் ப்ரஸித்தமானவை. ஊடலாவது ப்ரணயகலஹம். அதாவது— காதலியைச் சிறிது காலம் விட்டுப் பிரிந்த காதலன் அவளிடம் கூட வந்தபோது, அவளிடம் ஸந்தேஹித்துக் காதலி சண்டையிட்டு விலக்கல். உணர்தலாவது உணர்த்தலென்பர். அதாவது கூட்டுகின்றவர்கள்மூலமாகவோ நேராகவோ காதலன் தன்னிடம் குற்றமில்லை யென்பதைத் தெளிவித்தல். இப்படிப் பிறவினைப் பொருள் கொள்ளாமல் உணர்தலாவது தெளிதலென்றும் கூறலாம். அதாவது காதலன் நன்கு உணர்த்த, காதலி ஊடலில் இருந்த

ஊக்கத்தை விட்டு நிதானித்துத் தெளிவதாம். இப்போது ஊடல், உணர்தல், புணர்தல் இம் மூன்றும் காதலியின் செயலே யாகும். முன்பக்ஷத்தில் ஊடல் காதலிசெய்வது, உணர்த்தல் காதலன் செய்வது, புணர்தல் இருவருடைய தென்னலாம். திருவாய்மொழியில், (6-1 5) 'உணர்த்தலூடலுணர்ந்துடன் மேயு மடவன்னங்காள்' என்ற விடத்திலுமிதனைக் காண்க காதலன் செய்யு முணர்த்தலையும் தான் முன்னே செய்த ஊடலையும் உணர்ந்து=நன்கு பரா மரித்து என்று காதலியின் உணர்தலும் கூறப்பட்டுள்ளதே. இது நிற்க.

காதல் மூலமான இம் மூன்று கார்யங்களும் இப்பாட்டில் முதலடியிற் கூறப்பட்டுள்ளன வென்பது பொருந்தும். ஆகவே இங்கிவை நான்கல்ல. அப்போது கூடலென்பது என்ன வென வாராயவேண்டும். இது தனிப்பட்ட தொன்று அன்றாகையாலே ஊடல் கூடலெனக் கூட்டி ஊடலோடு கூடியிருத்தல் ஊடல் செய்தலெனப் பொருள் கொள்வர். இதை விட உணர்தல் என்பதோடு கூட்டுவது கூடும். ஊடலென்றவிடத்தில் கூடலென்பது வேண்டுவதில்லை. உணர்தலென்றபோது எதை யுணர்தல் என வினா எழுமாகையாலே கூடலை யுணர்தலெனக் கூறுதல் வேண்டுமே. உணர்தலாவது உணர்த்தல் என்றோ, உணர்தல் என்றேயோ ஏதேனுமாகுக. இக் கூடலுணர்தல் முவ்வகையாம். தனக்கிஷ்டமானவன் தன் கணவனாகக் கூடுவனா என்று கூடலிழைத்துணர்தல் ஒன்று; ஊடலாலே காதலன் விலக்கப்பட்ட பிறகு காதலியானவள் அவனிடம் உண்மையாயுள்ள ப்ரணயத்தாலே அவன் வந்து கூடுவனா என்று கூடலிழைத்தல் முதலான வழிகளில் தான் தனக்குள்ளே உணர்தல் மற்றொன்று; காதலன் காதலியினிடம் தன் செயலெல்லாம் இவளுடன் கூடல் பற்றியே யென்று முறையிட அதனை யுணர்தலென்பது மூன்றாவது. இப்படிப்பட்ட ஊடல் கூடலுணர்தல், புணர்தல்களை ஆய்ச்சிகள் நடத்திப் புகழ் பெற்றிருந்தனர்.

கூடலை யென்று மூன்றாமடியிற் சொன்ன கூடலானது முதலடியிற் சொன்னவற்றில் ஒன்றாயிருந்தால் முதலடிக்கு இங்குச் சேர்க்கை அழகியதாம் ஆய்ச்சியர் கூடலை யென்று இணங்கும்படி யமைத்ததாலும் இது விளங்கும். இத் திருமொழியில் ஊடலைப் பற்றினது ஒன்றுமில்லை. ஆகவே ஊடலென்ப தோடு கூடலென்பது சேராமல் உணர்தலென்பதோடு சேருகிறதென்பதும் தெளியலாகும். உணர்தல் என்பதற்குக் கூடலிழைத்துணர்தல் என்ற பொருள் எங்கும் பிரஸித்தமிரா திருக்க ஆண்டாள் அப் பொருள் கொண்டு கூடலுணர்த் லெனக் கூடுமோ என்னவேண்டா. ஊடலுக்குப் பின்னே புணர்தலுக்கு முன்னே யுள்ள நிலை யெல்லாம் உணர்தலென்றவிடத்திலே கொள்ளப்படும். ஆக, காதலன் உணர்த்த உணர்தலோடு, தானே உணர்தலும் அதிற் சேர்ந்த தாம். அது போல் ஊடலுக்கு முன்னுள்ள கூடலும் குறித்ததாம். கூடலா வது விவாஹத்திற்கு முன்னே கூடலிழைத்தல். பாட்டின் அமைப்புக்கு ஒத்தி ருப்பதற்காகக் கூடலூடலெனக் கூறப்படவில்லை. திருவாய்மொழியிலும், 'உணாத்தலூடல்' என்றவிடத்திலே ஊடலுணர்த்தலென இணைப்பது போல் இங்கு மிணைக்க. கூடலென்பது ஊடலுக்குப் பின்னும் நேருவதுண்டென விளக்கவும் ஊடல்கூடலென வமைத்ததாம்.

உண்மையில் நாலாகவே கொண்டு, கூடல், ஊடல், உணர்தல், புணர்தல் என நான்கை யென்பதும் யுக்தமாம். ஊடல் தொடக்கமாக மூன்றே வேறிடங்களில் ப்ரஸித்தமானாலும் ஊடலுக்கு முன்னுள்ள கூடலையு மிங்குச் சேர்த்துரைப்பதே ச்லாக்கியமாம்.

நீடுநின்று நிறைபுகழ். ஊடலில் இழிந்த இடைப்பெண்கள் இலகுவர்கக் கண்ணனுக்கு இடம் கொடுக்காமல் நீண்ட காலம் அதிலேயே நிற்பர்கள். 'நாலு பட்டினி' கொண்டாள், பத்துப்பட்டினி கொண்டாள் என்றெல்லாம் கூறப்படும் ஆய்ச்சியர் பலர்' என்பராம், என்பார். அதாவது நாலுநாள் பட்டினியுடன் அவன் காத்திருக்கும்படி நீடுகின்றவள் ஒருத்தி. அவளுக்கும் மேலாக மற்றும் பலரென்றதாம். இப்படி ஒவ்வொன்றிலும் நீடு நிற்பது இங்கே சொல்லப்படுகிறது. நின்று என்ற பாடமிருப்பதும் கண்கூடு. நிறை புகழ் என்ற வினைத்தொகையில் நிறையென்பதற்கு நிறைதலென்ற பொருள் கொள்ளாமல் நிறைத்தல் என்ற பொருள் கொள்வது கூடும். இப்போது புணர்தலை என்ற செயப்படு பொருள் பொருந்தும். இதனை விட்டு 'ஐ' யை அசையாக்கி, புணர்தல் என்பதற்கு புணர்தல்களிலே என உரை செய்வதும், நிறை புகழ் என்பதற்கு நிறைந்த புகழ் என வுரை செய்துவிட்டதாலே நீடுநின்று என்ற வினையெச்சத்திற்கு அந்வயம் வாராமையைக் கண்டு நீடுகின்ற என்ற பாடமே இசைந்து அப்பாடத்தைப் புறக்கணிப்பதும் உசிதமல்ல. நின்ற என்றே பாடமானாலும், புணர்தலை நிறைக்கின்ற என அந்வயத்திற்குக் குறையில்லை.

இப்படி யாராயும்போது முன் என்பதும் நன்கு பொருந்துகிறது. கோதைப்பிராட்டி தான் கூறும்போது முன்கூறிய என எங்ஙனம் கூற முடியும்? அதற்காக உரையாளர் முன் என்பதை இரண்டாமடியிலே நீடு நின்று என்றதோடு சேர்க்கின்றனர். அது ஸ்வரஸ மன்று. ஆகையால், ஊடல் கூடல் உணர்தல் புணர்தலென்ற ஆய்ச்சிகளின்செயல்களில் ஊடலைவிட்டுக் கூடலையே (முன்) முதன் முதலாகக் கோதை கூறிய பாடலெனப் பொருள் கொள்க. மணந்து கலந்துவரும்போது தானே ஊடலுக்கு இட முண்டு. இப்போது மணந்துகொள்வதற்கு முன்னர் கூடல் தானே கூடும். ஆக அதனையே முன் கூறினதெனக் கருத்து. 'முன் கூடலை' யெனச் சேர்த்து ஊடலுக்கு முன்னுள கூடலை யெனக் கொள்ளலாமாகிலும் கொள்க.

இத் திருமொழியிலும் ஆய்ச்சிகளின் சொல்லுக்கே அநுவாத மென்கிறனர். ஆய்ச்சிகள் போல் ஆண்டாளும் கூடலிழைத்துவரும்போது கூடலைப் பார்த்துத் தான் சொல்லும் சொற்களே யாம் இவை. முன் இரண்டு திருமொழிகள் போல் மொத்தம் ஆய்ச்சிகளின் பேச்சல்ல. ஆகையாலே; என் கைபற்றி, நம் தெருவின் நடுவே என்ற விடங்களில் என், நம் என்றவை ஆண்டாளையே அறிவிக்கும். இந்தப் பக்ஷத்தில் ஆய்ச்சிமார்களும் ஆயரும், அணியாய்ச்சியர் சிந்தையுள் இத்யாதிகளிலே 'நாங்களும்,' 'எங்கள்' என்னுமையாலும் அவை ஆய்ச்சிகளின் சொற்களல்லவென்று ஸ்வரஸமாகக் கொள்ளலாம். ... (11)

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 4. தெள்ளியார் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

மன்னுபெரும்புகழ் 5.

(குயிலை வேண்டுதல்)

பங்குனி வரையில் காமதேவார்ச்சனம் செய்தபிறகுக் கூடலிழைத்துத் தன்னிடம் கண்ணன் வந்து கூடுவான் என்பதைக் கண்டு களித்தனள். கண்ணனும் இவள் கண்முன்னே தோன்றி, கூடுவதாகக் கூறிப்போனான். வஸந்த ருது வாராநின்றது. புன்னை குருக்கத்தி கோங்கு செருந்தி மாம்பொழில்களெல்லாம் பூவும் தளிருமாகப் பொலிந்தன. குயில்கள் கூவத் தொடங்கின. நம் காவிலுள்ள குயில் நம்மையே நகைக்கின்றதே யென்று நினைத்தாள். தனக்கு அநுகூலமாம்படி யதை உபயோகப்படுத்திக்கொள்ள விரும்பினாள். வருகிறேனென்ற கண்ணன் வந்துசேரும்படி யவனை இது கூவினால், இச் சத்தம் அவன் காதில் விழுந்தால், சத்தம் உண்டான இடத்தை யறியக் காதுக்குச் சக்தி யிருப்பதாலே எனனிடமே வரவேண்டுமென்பதை யுணர்ந்து அவன் வருவானென்று தெளிந்து குயிலை ஏவினாள். இதனை யறிவிப்பதாம் மேற்றிருமொழி. இத்தகைய அவதாரிகை இத்திருமொழிப்பாசுரங்களை யெல்லாம் நோக்கினபோது அறியப்பெறும். 'காமார்த்தா ஹி ப்ரக்ருதிக்ருபணாச் சேதநாசேதநேஷு' என்கிறபடி இவை யவனைப் போயழைக்கவல்லதா, அல்லதா என விவேகம் செய்யாமலே காமிகள் அசேதநத்தையும் ஏவுவதுண்டு. ஆகிலும் இங்கு விவேகத்துடன் செய்ததாகக் கொள்ளிலும் குறையில்லை என்க. இங்கே கூடலின் காலில் வீழ்ந்து காரியம் பெறுமே வருத்தமுற்றுக் குயிலின் காலில் விழுகின்றாளென அவதாரிகை வைப்பதுண்டு.

1. மன்னுபெரும்புகழ் மாதவன்மாமணிவண்ணன்மணிமுடிமைந்தன்
தன்னையுகந்ததுகாரணமாக வென்சங்கிழக்கும் வழக்குண்டே.
புன்னைகுருக்கத்திஞாழல் செருந்திப்பொதும்பினில் வாழுங்குயிலே
பன்னியெப்போதுமிருந்து விரைந்தென்பவளவாயன் வரக்கூவாய். (42)

புன்னை குருக்கத்தி செருந்தி } புன்னை முதலான மரங்களினுடையவும்
ஞாழல் —கோங்கு மரத்தினுடையவும்
பொதும்பினில் } பொந்தில்
எப்போதும் — எல்லாக் காலங்களிலும்
பன்னி இருந்து } திருநாமங்களை அப்யஸித்துக்கொண்டேயிருந்து

வாழும் குயிலே } வாழ்க்கை பெறுகிற்கும் குயிலே !
மன்னு —நிலைநின்ற
பெரு —மஹத்தான
புகழ் —கீர்த்தியையுடையனும்,
மாதவன் —ஸ்ரிய:பதியும்,
மாமணி வண்ணன் } நீலமணி நிறமுள்ளவனும்,

மணிமுடி	—நவரத்னமயமான திருவபிஷேகமுடையதும்
மைந்தன் தன்னை	திண்ணியனுமான கண்ணனை
உகந்தது காரணம் ஆக	நான் விரும்பியிருப்பதால்
என் சங்கு இழக்கும்	எனது வளை இழந்திருப்பது
வழக்கு	—ந்யாய விசாரமானது
உண்டே	—ஏற்பட்டிருக்கிறது.
விரைந்து	—துரிதமாக
வர	—வரும்படி
என்	—எனது
பவளம் வாயன்	பவளம் போன்ற திருவதரமுடையவனை
கூவாய்	—கத்தி யழைப்பாயாக.

மாதவன்திருநாமத்தையே எப்போதும் பன்னு மின் அருகிலே புன்னை முதலிய மரங்களிலே அத் திருநாமங்களைப் பன்னியே வாழ்கின்ற குயிலல்லையோ நீ. ஆகையால் நீ இப்போது அவன் விரைந்துவரும்படி விரைந்து கூவவேண்டும். அநியாயமாக நான் வளை யிழந்திருக்கும்படி செய்திருக்கிறான். 'நீ என்ன செய்தாயோ' யென்னில், என்ன செய்தேன்? அவனிடமுள்ள ஒவ்வோர் அம்சத்தையும் கண்டு உகந்துதான் வந்தேன். ஒருபோதும் ஒன்றும் தவறுதல் செய்தேனல்லேன். முதலில் பெரும்புகழனை அவனது நிருபாதிகமான வாத்ஸல்யம் முதலான குணங்களைக் கண்டு உவந்தேன். அந்த வாத்ஸல்யம் இருந்தும் பலன் வராமைக்குக் காரணமான தடைகள் விலக அவன் புருஷகாரமான பிராட்டியோடு பொலிகின்றதைக் கண்டு உவந்தேன். அக் கல்யாண குணங்களும் பிராட்டியும் அவனையே நான் பெறும்படி செய்யவேண்டு மென நானாசைப்படும்படி செய்த மாமணி போன்ற மேனியையும், கூட இருந்து அனுபவிக்கக் குறையில்லாதபடி யிருக்கும் அம் மணிமுடியானின் ஐசுவரியத்தையும், இடையூறுகளை விலக்கி யனுபவிக்கத் தக்க வலியையும் கண்டும் உவந்தேன். இப்படி உவக்கு மெனக்கு இவ் வளைகளோடு மேலும் பல வளைகளிட்டுக் களித்திருக்கவேண்டியவன் உள்ள வளைகளையும் இழக்கும்படி செய்தான் இது நியாயமா? ஆகவே நீ ஒவ்வொரு மரத்திலும் இருந்து ஒவ்வொரு திருநாமத்தையு மிட்டுக் கூவி யழைப்பாயாக என்றபடி. பவளவாயன். குயிலை வாயைத் திறந்து கூவச் சொன்னபோது அவன் திருப்பவளவாய் நினைவுற்றது. திருப்பவளச் செவ்வாயின் குணத்தை யனுபவிக்கவேண்டும்; கூவா யென்கிறனள். நாலாமடியில், நீ பன்னியிருந்து விரைந்து கூவா யெனவும் அந்வயம் கொள்வர். பன்னிக் கூவாயென்னவுமாம். (1)

மரப்பொதும்பினிலிருந்த குயிலுக்குக் கூறிவிட்டுச் செண்பகப் பூவினிலிருக்கும் குயிலை ஏவுகின்றனள்—

2. வெள்ளைவிளிசங்கிடங்கையிற்கொண்ட விமலனெனக்குருக்காட்டான்
உள்ளம்புகுந்தென்னைநைவித்து நாளுமுயிர்ப்பெய்து கூத்தாட்டுக்காணும்.
கள்ளவிழ்செண்பகப்பூமலர்கோதிக்களித்திசைபாடுங்குயிலே
மெள்ளவிருந்துமிழற்றி மிழற்றாதென்வேங்கடவன்வரக்கூவாய். (43)

கள் அவிழ்	—தேன் பருகும்படி யிருக்கும்
செண்பகம் பூ மலர்	செண்பகப்பூவின் மலர்ந்த பாகத்தை
கோதி	—மூக்கினால் பறித்துண்டு
களித்து	—மதித்து
இசை பாடும் குயிலே	பஞ்சமஸ்வரம் பாடும் கோகிலமே!
வெள்ளை	—வெளுப்பாயும்

விளி —வேண்டியவர்களை யழைப்பதுமான
சங்கு —ஸ்ரீபாஞ்சசன்னியத்தை
இடம் கையில் } இடது திருக்கையில்
கொண்ட —எடுத்திருக்கும்
விமலன் —நிர்மலனான பிரான்,
எனக்கு —காணக் காத்திருக்குமெனக்கு
உரு —தனது திருமேனியை
காட்டான் —அவனாகவே வந்து காட்டாதவனாய்,
நாளும் —தினந்தோறும்
உள்ளம் புகுந்து } என் நெஞ்சிலே மறைந்திருந்து
என்னை நைவித்து } என்னை வாட்டி
உயிர் பெய்து —சாயாதபடியும் பார்த்துக்கொண்டு
கூத்தாட்டு —நான் தவித்து ஆடுவதை
காணும் —பார்த்து வருகிறான்.
(ஆகவே நீ)
இருந்து —கூவக் கூடும் நிலையில் நின்று
மிழற்றாதே —மழலைச் சொல்லாக்காதே
மெள்ள —அக்ஷர மக்ஷரமாய் நிதானமாக
மிழற்றி —ஒலித்துச் சொல்லி
என் வேங்கடவன் } எனது திருவேங்கடத்தானை வரக் கூவாய்.

வெண்வலம்புரிசங்கைக் கையிலேந்தித் தானும் அதைப் போல் விமலனாய்த் தெளிந்திருப்பதைத் தெரிவித்து எல்லோரையும் தன்னை வந்து காணும்படித் திருவேங்கடமலைமேல் நின்று விளிக்கின்றான் அவன். நானோ, நான் இருக்குமிடம் அவன் வரவேண்டும் நிலைமையில் இருக்கின்றேன். அதனால் அவன் எனக்குத் தானே தன் உருவத்தைக் காண்பிக்கமாட்டான் போலும். திருமலை வரையில் வந்தவன் இங்கு வந்தாலென்ன? வரவில்லையென்பது மில்லை; உள்ளே புகுந்திருக்கிறானே. இப்படி யென்னைப் படுத்துகின்றவன் என்னை உருவே யிராதபடி யழித்து விட்டால் சிந்தை யில்லை. அப்படிச் செய்யாமல் அப்போதைக்கப்போது உயிர்ப்பித்தும் வருகிறான். அதாவது—இத்தனை யடி அடிக்கவேண்டுமென்று குற்றவாளியைத் தண்டிப்பவர் அத்தனை அடிகளையும் அவன் பெறுவதற்குள்ளே ஆயாஸமுற்றால் தண்ணீர் பெய்து தெளிவித்து அடிக்குமா போலே மேன்மேல் வதைப்பதற்காக இடையிடையே தன்னைக் கண்டாற் போலிருக்கவைக்கிறான். அவ்வளவிலே கண்டதாகக் கொண்டு களித்தும், கட்டியணைய முயன்று காணாதபோது தவித்தும் நான் ஆட, அதனைக் கண்டு வருகிறான். இதனால் அவனுக்கு என்னிடம் அன்பிருக்கிறது நன்கு வெளியாகிறது. ஆனபடியாலே நீ யவனை நேரில் வரும்படி கூவவேண்டும். கூவும்போது நிதானமாய் அக்ஷரம் அக்ஷரமாகச் சொல்லிக் கூவவேண்டும். ஏனெனில், அவன் வெகு தூரத்தில் வேங்கடமலையில் இருப்பதாலே குளறிக் கூவினால், 'என்னவென்று எனக்குத் தெரியவில்லையே' யென்பான். அவன் விமலனானபடியாலே மேன்மைப் படுத்தியே கூவவேண்டும். இப்படி நிதானித்துக் கூவ உனக்கிப்போது வலியிருக்கிறது. நீ கள்ளவிழ்மலர் கோதிக் களித்து இசை பாடி என்னை வதைக்கின்றாயே. எனக்கு அனுகூலமாக இந்த வல்லமையைப் பயன்படுத்து. கள்ளைக் குடித்துக் கண்டபடி கூவாதே என்றபடி.

விமலன். உருவமுள்ளவனென்பதாலே ஜீவர்களைப் போல ப்ராக்ருத சரீரம் பெற்றவனல்லன். திவ்யரூபமுள்ளவனும்படி அகில ஹேயப்ரத்யநீகன். பிறர் பாவத்தையும் போக்குகின்றவன். தன்னிடம் எல்லோரையும் வரும்படி விளிக்கின்ற தயாமூர்த்தி. பக்தர்களைப் பிடித்துக் கரையேற்ற அனுகூலமாயிருப்பதற்காகவே அவதரிப்பவன்.

.மிழற்றி மிழற்றாதே. மிழற்றல்=நயமாய்ச் சொல்வதுமாம், அறைகுறையாகச் சொல்வதுமாம். மிழற்றி என்றவிடத்தில் முதற் பொருளும், இரண்டாம் சொல்லில் இரண்டாம் பொருளும் கொள்வது பொருந்தும். மிழற்றி குதலைச் சொற்களைச் சொல்லிக்கொண்டு; மிழற்றாதே விலாஸசேஷ்டிகங்களைச் செய்யாதே எனவும் பொருள் உரைப்பர். .... (2)

பிராட்டியின் அவதாரமான பத்மாவதியைப் பெறப் பாடுபட்ட திருவேங்கடமுடையான் தன்னிடம் தயை புரியுமென நம்பி அவனை அழைக்கச் சொன்னாள். இனி, ஸீதாபிராட்டியைப் பெற ஸேது கட்டி ஸர்வராக்ஷஸ ராஜனை ஸம்ஹரித்த மஹாவீரனை யழைக்கவேண்டுகிறாள்—

3\. மாதலி தேர்முன்புகோல் கொள்ள மாயனிராவணன் மேல்சரமாரி
தாய்தலையற்றற்றுவீழத்தொடுத்த தலைவன்வரவெங்கும்காணேன்;
போதலர் காவில் புதுமணம் நாறப் பொறிவண்டின்காமரங்கேட்டுன்
காதலியோடுடன்வாழ்குயிலே யென் கருமாணிக்கம் வரக்கூவாய். (44)

போது —புஷ்பங்கள்
அலர் —மலர்ந்திருக்கும்
காவில் —சோலையில்
புது மணம் நாற } புதிய வாசனை வீச
பொறி வண்டின் } அழகிய வண்டினுடைய
காமரம் கேட்டு } இசையைக் கேட்டு
உன் காதலியோடு } உன்னிடம் காதல் கொண்ட வண்டோடு
உடன் —கூடவே
வாழ் குயிலே } வாழும் கோகிலமே!
மாதலி } இந்திரனின் ஸாரதியானவன்
தேர் முன்பு —தேரில் முன்பக்கத்தில்
கோல் கொள்ள } குதிரைகளை நடத்தக் கோல் கொண்டிருக்க

மாயன் இராவணன் மேல் } மாயாவியான ராவணனைக் குறித்து
தாய் தலை —முதன்மையான அவன் தலைகள்
அற்று அற்று வீழ } அறுபட்டு அறுபட்டு விழும்படி
சரம் மாரி —மழை போல் மேன்மேல் பாணங்களை
தொடுத்த —செலுத்தின
தலைவன் —மஹாவீரனுடைய
வரவு —வருகையை
எங்கும் —எந்தப் பக்கத்திலும்
காணேன் —காண்கிறேனல்லேன். ஆகையால்,
என் கரு மாணிக்கம் } கரிய மாணிக்கம் போன்ற எனது தலைவன் வர கூவாய்.

மாதலி இத்யாதி. ராவண ஸம்ஹாரத்திற்காகவே இராமன் அவதரித்ததென வெல்லாம் தெரிந்தும், ஒருக்கால் ராவணனே ஜயம் பெறில் நமக்கு என்ன விளையுமோ என்று பயந்து இந்திரன் முதலில் தேர் அனுப்பாமலிருந்தான். கடைசியாக எல்லோரும் ஒழிந்து ராவணன் நிற்கவே, நிர்பயமாய் இந்திரன் அனுப்ப மாதலியும் துணிந்து ராவணன் எதிரிலே தேர்முன்பு கோல் கொள்ளலாம்படியிருந்தது, தலைவனின் திறலென்றபடி. மாயன்—தாய்தலை. மாயாவியான இராவணன் மாயாராமனை ஸ்ருஷ்டித்துத் தலை வெட்டினது போல் எண்பித்து ஸீதையை வருத்தினனே, அது போலன்றி அதற்கு சிக்ஷையாகவே ஒருதரத்திற்குப் பல தரமாக அவன்தாய்தலையை யறுத்துத் தள்ளினான். அறுக்கப்பட்ட தலை மாயையினலான தலையாகில் முதன்மை பெற்றிராது. அவ்வாறின்றி அவன் உண்மையில் உயிர் மாள்வதற்கானதால் முதன்மை வாய்ந்ததாயிற்று. ஆக மெய்யான தலைகளை என்றபடி. மேலெழுந்த தலைக்கு

மூலமான தலைகளையென்னவுமாம். 'ஏவ மேகசதம்ச் சின்னம்' என்றபடி நூற்றொரு தலைகளை யன்றோ ராமன் அறுத்தது. தலைவன். ஶ்ரேஷ்டன் அல்லது எனது நாயகன். அழியாத் தலையுள்ளவனென்றும் இங்கே தோற்றும். மாயையினாலே வெட்டினது போல் எண்பிக்கலாமே யல்லது, உண்மையில் அழிக்க முடியாதே. வரவெங்கும் காணேன். வரவு எனப் பதப்பிரிவாம். எங்கும் வரக் காணேனென்னவுமாம். காமரம். இசைப்பொது. காமரமென்றே ஓர் இசையென்பதுமாம். அவனுடைய பிரிவாலே போதலர்காவும் மணமும் காமரமுமெல்லாம் எனக்குக் கேடு விளைக்கின்றன. நீ வரக் கூவினையாகில், காமரம் கேட்டு அவனும் உன்னைப் போல் காதலியோடு வாழ்வன் என்றதாம். .... (3)

தலை மறைந்த விபவாவதாரத்தைத் தேடுவதென்? அவதாரங்களுக்கெல்லாம் முதற்காரணமான பரவாஸுதேவன்தன்னையே யழைக்கலாமென நினைத்தருளிச்செய்கிறாள்—

4\. என்புருகியினவேல் நெடுங்கண்களிமைபொருந்தாபலநாளும்
துன்பக்கடற்புக்குவைகுந்தனென்பதோர்தோணி பெறாதுழல்கின்றேன்.
அன்புடையாரைப்பிரிவுறுநோயது நீயுமறிதிகுயிலே
பொன்புரைமேனிக்கருளக்கொடியுடைப்புண்ணியனைவரக்கூவாய். (45)

பல நாளும் -- வெகு நாளாகவே (எனது)
என்பு உருகி—எலும்புகள் உருகிவிட,
இனம் வேல் } நல்ல இனத்திற் சேர்ந்த வேலாயுதம் போன்ற
நெடு கண்கள் —நீண்ட (என்) கண்களும்
இமை பொருந்தா } இமைகள் நொடிப்பொழுதும் சேராமலிருக்கின்றன.
துன்ப கடல்—துக்க ஸமுத்திரத்திலே
புக்கு —புகுந்து
வைகுந்தன் என்பது } வைகுண்டனெனப்படும்
ஓர் தோணி —ஒப்பற்ற மரக்கலத்தை
பெறாது --பெறாமல்
உழல்கின்றேன்-தத்தளிக்கின்றேன்.
குயிலே! —கோகிலமே!
அன்புடையாரை } காதலரை
பிரிவு உற --பிரிவதால் நேரும்
நோய் அது --அவ்வித நோயை
அறிதி --அறிகின்றாய்.
பொன் புரை--பொன்னைப் போன்ற
மேனி --திருமேனியை யுடைய
கருளன் கொடி உடை } கருடனை த்வஜமாக உடைய
புண்ணியனை புண்ணிய புருஷனை வரக்கூவாய்.

எலும்புகளெல்லா முருகி வேலாயுதம் போன்ற நீண்ட கண்களும் இமை கொட்டுவதற்குக் கூட மாட்டாமலிருக்கும் நிலையைக் கண்டார்க்கு எவ்வளவு நாளாக யான் துன்பக்கடலில் தத்தளிக்கின்றேன் என்பதை யறிவ தெளிது. இக் கடலினின்று கரை யேறுவதற்குத் தோணியாயிருப்பவன் வைகுந்தனே. அத் தோணி கிடைத்தால் அக் கரை யேறுவது திண்ணம். பொய்கையில் பரிதவித்த கஜேந்த்ரனைக் காக்கக் கருடனையும் இழுத்துக்கொண்டு வைகுண்டத்திலிருந்து விரைந்து வந்த கருணாமூர்த்தியான அக் காரணபுருஷன் இவ்வளவு நாளாகியும் வராதிருக்கக் கண்ட நீ வெறுமனே இருக்கலாமோ? வேண்டினவரை விட்டுப் பிரிந்தால் வரும் நோயை நீயு மறிந்திருக்கின்றாயே. நோய் அது இப்போது உனக்கிராவிடினும் முன் இருந்தது மறந்திருக்கமாட்டாயே. அப்படிப்பட்ட நீ கூவினையாகில் பரமபதநாதனும் பறந்து கருடனோடு வந்து நிற்பான். கூவாயென்றபடி.

பொன்புரை மேனி. இது கருடனுக்கும் அடைமொழியாம்; புண்ணியனுக்குமாம். நான் என்புருகி நிற்க அவன் பொன்புரை மேனியனா யிருந்தால் புண்ணியனாவானோ? அவன் என்னை மறந்து வைகுண்டத்திலிருக்கும் நித்ய ஸூரிகளோடு கலந்து பரிமாறிக்கொண்டு நிறம் மாறாதே யிருக்கிறானாகில், நீயோ புண்ணியன் என்று நீயே கேட்பாயாக. **புண்ணியனை.** 'ராமோ விக்ரஹவாந் தர்ம:', 'க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்' என்றபடி புண்யங்களே வடிவு கொண்டாற் போலுள்ளவனாகையாலும், புண்யங்கள் பலிக்கின்றதும் ஸித்தோபாயனான தன்னாலே என்றிருப்பவனாகையாலும், புண்ணியனானவன் இவன் இராமகிருஷ்ணாத்யவதாரங்களிலே காண்பித்த இங்கிதங்களெல்லாம் மூலமான வைகுந்த மூர்த்தியிலே மிகச் சிறப்புடனிருக்கவேண்டுமே. ஆகவே அவனையே வரக்கூவாய். (4)

வைகுந்தனை வரக் கூவும்படி குயிலைக் குறித்து இவள் கூறும் தருணத்திலே இவள் வளர்க்கும் கிளியானது வடபெருங்கோயிலுடையானின் திருநாமத்தை இவள் சிக்ஷித்திருந்தவண்ணம் சொல்லிற்று. அதனைக் கேட்டதும், அப் பொன்புரை மேனியன் இங்கே அருகில் இருக்கின்றானே என்பதை நினைத்து, 'வேறு நிலத்திலுள்ள அர்ச்சையையும், வெகுகாலத்திற்கு முன் இருந்த விபவத்தையும், வெகுதூரமான வைகுண்டத்திலிருக்குமவனையும் அழைப்பதென்? இங்குள்ளவனிடமே யன்றோ இக் குயிலினுடைய குரலும் கிட்டக்கூடும்' எனவும் ஆராய்ந்து இவனது பொன்னடியையே பார்க்கப் பேராவல் கொண்டு இவனை வரக் கூவும்படி குயிலை வேண்டுகின்றனள்—

5. மென்னடையன்னம்பரந்துவிளையாடும் வில்லிபுத்தூருறைவான்றன்
பொன்னடிகாண்பதோராசையினாலென்பொருகயற்கண்ணிணைதுஞ்சா.
இன்னடிசிலோடுபாலமுதூட்டியெடுத்தவென்கோலக்கிளியை
உன்னோடுதோழமைக்கொள்ளுவன்குயிலேயுலகளந்தான்வரக்கூவாய். (46)

குயிலே —கோகிலமே!
மெல் நடை —மெதுவான நடையையுடைய
அன்னம் —அன்னப்பட்சிகள்
பரந்து —எங்கும் வியாபித்து
விளையாடும் —விளையாடுவதற்கிடமான
வில்லிபுத்தூர் —ஸ்ரீவில்லிபுத்தூரிலே
உறைவான் தன் —நித்யவாசம் செய்யும் எம்பெருமானுடைய
பொன் அடி —அழகிய திருவடிகளை
காண்பது —காணவேண்டுமென்ற
ஓர் ஆசையினால் —ஒப்பற்ற ஆசையிருப்பதாலே
என் —எனது
பொரு கயல் —சண்டையிடும் மீன்கள் போன்ற
கண் இணை —கண்கள் இரண்டும்
துஞ்சா —உறங்குகின்றனவல்ல.
உலகு அளந்தான் —உலகங்களை அளந்த த்ரிவிக்ரமனை
வர —வரவேண்டுமென்று
கூவாய் —அழைப்பாயாக.
இன் அடிசிலொடு —இனிமையான அன்னமும்
பால் அமுது —அமுதான பாலும்
ஊட்டி —உண்ணச்செய்து
எடுத்த —கையில் எடுத்து வளர்க்கப்படும்
என் கோலம் கிளியை —எனது அழகிய கிளியை
உன்னொடு —அதைப் போல் எனக்கு இஷ்டத்தைச் செய்யும் உன்னுடன்
தோழமை —ஸ்நேஹத்தை
கொள்ளுவன் —கொள்விப்பேன்.

வேறு லோகங்களிலோ, வேறு திவ்ய தேசங்களிலோ இருக்கும் எம்பெருமானை இவள் காணப் பெறாமையாலே குயிலைக் கூவ ஏவினளாகில் கூடும்.

நிச்சலும் சூடிக்கொடுத்து நெருங்கித் தொழப்படும் தன்னூர்வடபெருங்கோயி லுடையானைக் காணுமே கண்கள் உறங்காமலிருப்பனவாகக் கூறுகின்றதும், கூவச்சொல்வதும் கூடுமோ வென்னில்—இதற்கு நஞ்சீயர் இங்ஙனமருளிச் செய்வராம்—'குழையும் வாண்முகத்தேழையைத் தொலைவில்லிமங்கலம் கொண்டு புக்கு இழைகொள் சோதிச் செந்தாமரைக்கண்பிரானிருந்தமை காட்டினீர். மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினொடு அன்று தொட்டும்மையாந்த இவள் நுழையுஞ்சிந்தையள் அன்னைமீர்! தொழு மத்திசை நோக்கியே' (திருவாய். 6—5—5) என்றபடி இவளை அவனுள்ள இடம் கொண்டுபுக்கால் மோஹித்துக் கிடக்கு மென்று அங்கு இவள் நுழைய இடம் கொடுப்பதில்லை. எனவே ஆசைப்படுகின்றனள் என்றதாம் அது. இங்கு ஓர் ஆசையினால் என்றதால் இக் கேள்விக்கு இத்தகைய பரிஹாரத்தை இவள் கருதினளென்க—வேறு இடங்களில் இருந்த ஆசை போன்றதன்றே இங்கு இவளுக்கு ஆசை. வேறு மூர்த்திகள் சிறிதும் காணக்கிடைக்காமையாலே அவற்றில் ஆசை யிருந்தது. இம் மூர்த்திதன்னை எல்லாத் தினங்களிலும் இவள் கண்டுவந்திருக்கும்போதும் இவ் வாசை விஞ்சிற்று. இவள் கோயிலில் நுழைந்து காணும் காலம் போக மிகுதி யான காலத்திலே குயிலோடு பேசும் தருணத்திலல்லவோ அவனைக் காண வாசைப்படுகிறது. இவளுக்காகக் கோயிலை எப்போதும் திறந்துவைத்திருப் பார்களோ? 'ஆஸ்தானஸ்த: ஸதா ஸேவ்ய:, விமாநஸ்தச்ச காலத: ஸ்வக்ருஹே ஸர்வதா ஸேவ்ய: மத்யராத்ரம் விநா ப்ரபு:' என்றபடி கோயிலில் காண்பதற்குக் காலவ்யவஸ்தை உண்டே. அது போக மிகுதியான காலங்களிலும் அவனை விட்டுப் பிரிய மனம் தாங்காமே பரிதவிக்கு மிவளுக்கு இவனிடமுண்டா யிருக்கும் ஆசை யொப்பற்றதாம். மேலும், கோயிலில் நுழைந்து அவனைக் காணக்கருதவில்லை யிப்போது. வரக்கூவாய் என்றாளே. தானுள்ள இடத்திற்கு அவன் அர்ச்சாஸமாதியைக் குலைத்து அழகிய நடையுடன் எழுந்தருளி கலந்து பரிமாறவேண்டு மென்று பேராசை பிடித்தவள் இவள். வேறு ஊருக்குப் போவதென்றால் உனக்கு இயலாது. இங்கே யுள்ள கோயில் போய்க் காண லாமே என்ற வினு வெழாதபடியும் பணித்தருளினாள். இது மென்னடை யன்னம் பரந்துவிளையாடும் வில்லிபுத்தூர். அவ்வன்னங்கள் அந்நடையை என்னிடமே கற்றனவென்று கூறலாமாறு மிகவும் மெதுவாக நடக்கும் நான் எப்போது அவனை அங்கே போய்க் காண்கிறது? அவைகளைப் போல் பரந்து விளையாடும் நிலைமையில் நான் இல்லை. படுக்கையில் பொருந்தின வண்ணமிருக் கிறேனே. நொடிப்பொழுதும் அவனை விடாதிருக்க விரும்பும் என்னை அவன் தானே வந்து அடையவேண்டும். அவன் இப்படி மெதுவாக நடப்பவனில்லையே. உலகளந்தானுயிற்றே; திருக்கையில் தண்ணீர் பட்ட தக்கணமே தேவலோக மெல்லாம் கடந்து சென்றதே அவன் திருவடி என்றன்றோ இங்கிவள் அருளினது.

பொன்னடி என்றதாலே முன் பாசுரத்திற் சொன்ன பொன்புரை மேனியனை புண்ணியனெனப்பட்ட வைகுந்தனும் இவனும் ஒருவனென்ற தாயிற்று.

பொருகயற்கண். இரு கண்களும் போட்டியிட்டுக்கொண்டு உறங்காம லிருக்கின்றன போலும். மூக்குக்கு இரு பக்கமும் இரு கண்கள் அமைந்த நிலையைப் பார்க்கும்போது, ஒரு மீனோடு மற்றொரு மீன் எதிர்த்துப்போரிடுவது போலிருந்ததாம்.

கண்ணிணை துஞ்சா. 'வைகுந்தனை நினைத்துத் தானே கண்கள் இமை பொருந்தாமலிருக்கின்றன. வில்லிபுத்தூரானை அழைத்துப் பயனென்ன' என்ன வேண்டா. இவன் விஷயமாகத் தான் கண்கள் துஞ்சா. அவன் தானே என்னைப் போல்வர்களை யநுக்ரஹிக்க இவனாக வந்திருப்பது.

இன்னடிசிலோடுபாலமதூட்டி என்பதற்கு அன்னமும் பாலும் கலந்து அளித்தல் பொருளாம். அடிசிலை விடப் பால் மிகவாயிருப்பது காரணமாக பாலோடு அடிசில் என்னுமே அடிசிலோடு பால் என்றது. இத்தகைய ப்ரயோகங்களில் ஓடு என்ற விகுதிக்குப் பகுதியான பதத்தின் பொருளுக்கே ப்ராதான்யம் தமிழர் நினைத்திருப்பதென்பது முண்டு. அடிசிலுக்கு இனிமையானது உயர்தர அரிசியினாலானதாலும், தக்கவாறு சமைத்ததாலுமாம். அமுது என்றது அடிசில் இயற்கையில் இனிமையானது; பாலும் அதற்கேற்றவாறு அமுதம் போல் மிக இனிப்பானதென்னவாம். அல்லது எம்பெருமான் கண்டருளின தாலே அமுதானமை குறிக்கப்பட்டதாம். இனி, கிளியினிடத்தில் சிறந்த மதிப்புடன், பாகவதர்களை அமுது செய்விக்கும் கணக்கிலே அதற்கு அமுதூட்டு கிறேன் யானென்று சொன்னதுமாம். இங்கு, 'இன்னடிசிலாவது கன்னலமுது; பாலமுதாவது பாலன்னம்' என விரண்டாக வுரைப்பது முண்டு. கிளியைத் **தோழமை** என்றதிலிருந்து கிளி வடபெருங்கோயிலுடையானைக் கூவி யென்னைக் களிப்பிக்கின்ற வண்ணம் நீயும் செய்வதால் உன்னிடம் அவ்வளவு மதிப்பு வைத்து உனக்கும் இன்னடிசிலோடு பாலமுதூட்ட முன் வருவேன் என்றறிவித்தபடி. கொள்விப்பன் என்னுமே கோள்ளுவன் என்றதிலிருந்து அது தோழமை கொள்வ தென்பது நான் உன்னோடு தோழமை கொள்வதே யாமென்று குறித்தபடி. கூவா யென்று முடிவது இத்துடன் முடிவுபெறுகிறது. மேற்பாசுரங்களின் முடிவு வெவ்வேறு படி யாகும். ஆகையால் இனி வடபெருங்கோயிலுடையானை அழைக்க வேண்டிய குயிலையே, இளங்குயிலே, அங்குயிலே, சிறுகுயிலே என்றவாறு அழைத்துச் சொல்லுகிறாளென்னலாம்.

உலகளந்தான். ஒருவரையும் விடாது எல்லோரையு மடியால் தொட்டு அனுக்ரஹித்தவனும் ஸாராஸாரப்ரியனுமான, அவன் பொன்னடி என்னை நெருங்காதது ந்யாயமோ? (5)

குயில் காவினில் உறங்குவதைக் கண்டாள். இது இங்கு அலர்ந்த கொத்தின் கள்ளவிழ்மலரைக் கொத்திக் களித்துக் கண் வளர்கின்றது. இது இன்னடிசிலும் பாலமுது மெனக்கென் என்னும்போலிருக்கிறது. நாள்தோறும் உன்னிலையை நீ கோயிலில்இருந்து அவனுக்குக் காணவைத்து வரும்போது அவனே உன்னிடம் வரமாட்டானா? உன்னிட மன்பில்லாமல் உனக்கு மெய்யனல்லாதவனை முயன்றழைத்துப் பயனென்ன என நினைக்குமிது என்று கொண்டு மீண்டும் சொல்லுகிறாள் :—

6. எத்திசையு மமரர்பணிந்தேத்துமிருடீகேசன்வலிசெய்ய
முத்தன்னவெண்முறுவற் செய்யவாயுமுலையுமழகழிந்தேன்நான்
கொத்தலர்காவில்மணித்தடம் கண்படைகொள்ளு மிளங்குயிலேயென்
தத்துவனைவரக்கூ[வ்]கிற்றியாகில் தலையல்லால் கைம்மாறிலேனே. (47)

கொத்து	—கொத்துக்கொத்தாகப் பூ
அலர்	—மலராநிற்கும்
காவில்	—சோலையில்
மணி	—அழகிய
தடம்	—அகன்ற இடத்திலே
கண்படை	—நித்திரையை
கொள்ளும்	—கொண்டிருக்கும்
இள குயிலே	—இளமை பொருந்திய கோகிலமே!
எ திசை உம்	—எல்லாத் திக்குகளிலும்
அமரர்	—தேவதைகளால்
பணிந்து	—வணங்கி
ஏத்தும்	—ஸ்தோத்திரம் செய்யப்பட்ட
இருடீகேசன்	—ஹ்ருஷீகேசனனவன்
வலி செய்ய	—வஞ்சனை செய்ததாலே நான்
முத்து அன்ன	முத்துக்கள் போன்ற
வெண்	—வெளுப்பான
முறுவல்	—பற்களுடையவும்
செய்ய	—சிவந்த
வாய் உம்	—அதரத்தினுடையவும்
முலை உம்	—ஸ்தனங்களுடையவும்
அழகு அழிந்தேன்	அழகை இழந்துவிட்டேன்
என் தத்துவனை	எனது நாயகனை
வர	—வரும்படி
கூவ்கிற்றி ஆகில்	கூவ வல்லை யானல்
தலை அல்லால்	தலைவணங்கின வண்ணமிருப்பதன்றி வேறு
கைம் மாறு	—ப்ரத்யுபகாரம்
இலேன்	—உடையேனல்லேன்.

உலகளந்தபோதும் மற்றும் பல ஸமயங்களிலும் எல்லாத் திக்குக்களிலும் தேவதைகள் அவனைக் கண்டு பணிந்து ஏத்தும்படியும், எப்போதும் எங்கும் நித்ய ஸூரிகள் நன்கு போற்றும்படியுமுள்ள இருடீகேசன் என் கண்ணைத் தன்னைக் காணுதபடியாக்கி என் மனத்துள்ளே என்றும் நின்று அவாவை மட்டும் அதிகப் படுத்தி, அனுபவிக்க இடங்கொடாமே, வஞ்சனை செய்துவருவதால் அவனைப் பெறுவது திண்ணமென்ற பெரும் நம்பிக்கையினுலுண்டான உவப்பாலே அழகு பெற்று விளங்கின என் முறுவல், வாய்,முலைகளெல்லாம் இப்போது ஒளியிழந்தன. 'காறை பூணும் கண்ணுடி காணும் தன் கையில் வளை குலுக்கும் கூறையுடுக்கு மயர்க்கும் தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்' (பெரியா. 3-7-8) என்ற படி எனது பல்லும் வாயும் இருந்த இருப்பை யானே கண்ணுடியிற் கண்டிருக் கிறேனே. என்னிடத்தில் அவனுக்கன்பு இல்லை யாகில் ஹ்ருஷீகேசனை அவன் என் மனத்துக்கும் மற்று மங்கங்களுக்கும் இந் நிலை கொடுத்திருக்கமாட்டான். ஆகையால் எனது தத்துவனே அவன். என்னை விடான். ஆக நீ அவனை வரக் கூவாய். உனக்கென்னு லாகவேண்டுவ தொன்றுமில்லை. உண்ணவும் உறங்கவும் உனக்கெல்லாம் உயர்ந்த படியிலே கிடைத்திருக்கிறது. கொத்தலரும் காவில் இருக்கின்றுய். படுக்குமிடம் மணித்தடமாயிருக்கிறது. ஆகவே வேறு கைம்மாறு காணுத நான் என்றும் உனக்குத் தலையால் வணங்கின வண்ண மிருப் பேன். ஏதேனும் வேறு உனக்குச் செய்ய நேர்ந்தாலும் அது நீ செய்வதற்குத் தகுந்த கைம்மாருகாது. ஆக நான் தலையால் வணங்காமல் என்னை மேம்பட்டவளாக வைத்துச் செய்யும் கைம்மாறென்று மில்லை. இளங்குயிலே! நீ இளமை பொருந்திய குயிலானபடியாலே இளமையி லிருப்பவரின் நிலை யறிவா யென்றனள்.

வலி செய்தல்= மிடுக்குப் பண்ணுவதுமாம், வஞ்சனை செய்வதுமாம். **முறுவல்**' என்றது இங்கே, வாய், முலை யென்ற சேர்த்திக்கேற்ப ஓர் அவயவத்தைச் சொல்வதால் பல் என்ற பொருள் பெறும். சிரிப்பு என்ற பொருளு மிதற்கு உண்டு. **மணித்தடம் கண்படை.** படை யென்றும் நித்திரைக்குப் பெயரானதால் **கண்** என்பதை ஏழாம் வேற்றுமை யுருபாக்கி தடம்கண் தடத்திலே என வுரைக்கலாம். ஆயினும் 'கண்படைகொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே' என்று மேலுள்ளதற்கேற்ப இங்கும் கண்படை யென்றே பதம் கொண்டது. **தத்துவனுவான்** அதிகாரி; அரசன்; கடவுள், விஷ்ணு. இனி, தத்துவமென்பதற்கு வஸ்துவின் தன்மை யெனப் பொருளானபடியாலே **என் தத்துவன்** என்பதற்கு எனது தன்மை யுள்ளவ னெனப் பொருளுமாம். உலகிலுள்ள எல்லா வஸ்துக்களுடைய தன்மைகளுக்கும் எம்பெருமானே ஆதாரமாயிருப்பவன். 'ஸ்தூலத்வம் யாதி சேச: ப்ரக்ருதிகது:' என ஸ்ரீதேசிகன் அருளினது காண்க. இதனுல் அந்தர்யாமியா யிருப்பவ னென்று குறித்ததாயிற்று. ஆகவே எனது ஸத்தைககு அவனே காரணம் என்றதும், அவனுக்காகவே எனது ஸத்தை யென்றதும் கருதினபடியாம். உலகில் ஸ்திரீயும் புருஷனும் ஒரே ஆத்மா என்று சாஸ்திரம் புகழ்வதாலும், ஸ்திரீபுருஷர்களின் மனம் ஒரே நிலையிலிருப்பதாலும் தன்னைப் போல் அவனு மிருக்கிருனென வறிவிக்கவும் என்தத்துவன் என்று காதலனைக் கூறினதுமாம்.

கூகிற்றி. கூவு என்ற வினைப் பகுதியில் ஓர் எழுத்துச் செய்யுளமைப்புக்காக விடப்பட்டிருக்கிறது. கூவ்கிற்றி எனவு மிருக்கும். **தலையல்லால்** என்பதற்குத் தலையால்வணங்குவதல்லால் என்ற பொருள் ஸுகமா யறியக்கூடியதே. எங்ஙனெனில்—தலையே கைம்மாருகாதாகையாலே தலையினுலாகும் காரியம் கைம்மாறென்பது எளிதில் அறியப்படும். தலையால் செய்வதென்றுல், அது தலையால் வணங்குவது போன்றதே யாம். ('தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணுதி வை ஸ்வயம்') பரமைகாந்திகளின் செயல்களை எம்பெருமான் சிரஸ்ஸினுலே ப்ரதிக்ரஹிக்கிரு னென்றுல், தலை குனிந்து பெறுகிருன் எனப் பொருளாகிறதே. (சிரஸா யாசிதோ மயா என்றுல்) தலையால் யாசிக்கப்பட்டான் என்றுல், தலை வணங்கி வேண்டினது தெளிவாகுமே.

இங்கே நஞ்சீயர் சிஷ்யர் பெற்றி யென்பாரொருவர் தலையல்லால் என்பதற்குத் 'தலையறுத்துக் கொடுப்பதல்லால்' எனப் பொருள் கூறிவிட்டுப் பிறகு நஞ்சீயர்திருவுள்ள மென்னவென்று கேட்டு உண்மையான பொருளைத் தெரிந்து கொண்டா ரென்று ஓர் ஐதிஹ்ய மெழுதுவர். தலையறுத்துக் கொடுத்துவிட்டால் கூவினதற்குப் பலன் இவள் தான் என்ன பெற்றதாகும்? குயிலும் தான் அத்தலையைக் கொண்டு என் செய்யும்? தலையல்லால் என்பதற்கு, தலையால் வணங்குவதல்லால் என்பதைவிட, தலையை வெட்டிக் கொள்வ தென்ற பொருள் எளிதிற் பெறக் கூடியதோ? பெற்றியின் சொல்லுக்குப் பொருள் வேறு மாகலாம். அவர் சொல்லாவது, 'என் தலையைத் தரு மத்தனை யிறே' என்பது. அதற்குத் தலையைப் பாதத்தில் சேர்க்கும்=வணங்கும் என்றதும் பொருளாகலாம். இதைவிட நஞ்சீயர் அருளிச்செய்தது வேறு. 'தலையை யுனக்காக்கிக் காலமெல்லாம்

உன் காலிலே வணங்கி வர்த்திக்கு மத்தலை' என்றதா மது. அதன் கருத்தாவது—'ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிர: ப்ரதாநம்' என்றபடி இங்குத் தலையைச் சொன்னாலும் முழு உடலைச் சொன்னதென்பர். ஒரு ஸமயம் வணங்குவது மட்டு மின்றி என் உடலையே உனக்கு சேஷமாக்கி உன்னை வணங்கின வண்ணமே யிருப்பேனென்ற தாம். சேஷியின் திருவடி யென்றபோது திருமேனி மொத்தம் கருத்திலுள்ளது போல், சேஷனை சேதநன், தலையென்றபோது அவனுக்குத் தன் உடல்முழுதும் கருத்திலுள்ளதாம். 'சரணௌ சரணம்' என்றதை நோக்குக. முன் கூறியபடி குயிலுக்கு ஒன்று மிவளா லளிக்கக்கூடியதில்லாதபோது முழுஉடலைக் கொண்டாலும் வணங்கி நிற்பதொன்றே இவள் செய்யக்கூடியதாயிற்றென்க. தலையல்லால் தலையாக ஆக்குவதன்றி = சேஷியாக பாவிப்பதன்றி எனவு முரையாம். 'பெற்றியின் பேச்சுக்குப் பொருள் ஏதேனுமாகுக. இவ்வைதிஹ்யத்தாலேற்படுவதென்' எனில்—பொருள் கூறுபவருக்குப் பெரியோர் மூலம் கேட்டலும், பொருந்துகின்றதா வென ஆராய்தலும் வேண்டு மென்றவாறென்னலாம். (6)

'கடலைத்துக் கண்வளர்ந்தருளும் வடபெருங்கோயிலுடையானைக் கடுக எழுந்து வரச் சொன்னால் வரக்கூடுமோ? இவளே காலையில் அங்கே போய்க் கண்டுகொள்ளலாமே' என்று நினைத்து இந்தக் குயில் மறைந்துறைகின்றதெனத் தானாகவே எண்ணி மீண்டும் கூவச் சொல்லுகிறாள்—

7. பொங்கியபாற்கடற்பள்ளிகோள்வானைப் புணர்வதோராசையினாலேன்
கொங்கைகிளர்ந்துகுமைத்துக்குதுகலித்தாவியை யாகுலஞ்செய்யும்.
அங்குயிலேஉனக்கேன்ன மறைந்துறைவு ஆழியுஞ்சங்குமொண்தண்டும்
தங்கியகையவனைவரக்கூவில் நீசாலத்தருமம்பெறுதி. (48)

பொங்கிய —உயரக் கிளராநின்ற
பால் கடல் —பாலான கடலிலே
பள்ளி கொள்வானை } சயனித்திருக்கும் பிரானை
புணர்வது —கலந்தணைய வேண்டுமென்ற
ஓர் ஆசையினால் } ஒப்பற்ற காதலினாலே
என் கொங்கை } எனது ஸ்தனங்கள்
கிளர்ந்து —மேலே எழுந்து
குமைத்து —மனத்தைக் குழையச் செய்து
குதுஹலித்து—பேரவா கொண்டு
ஆவியை —என் ஆத்மாவை (உயிரை)
ஆகுலம் செய்யும் } வியாகுலப்படுத்துகிறன

அம் குயிலே—அழகிய கோகிலமே!
மறைந்து உறைவு } நீ ஒளித்து இங்கே வசிப்பது
உனக்கு என்ன } உனக்கு எத்தன்மைத்தாம் (எப்பலனைத் தருவதாம்)
ஒண் —அழகிய
ஆழி உம் —திருவாழியும்
சங்கு உம் —பாஞ்சசன்னியமும்
தண்டு உம் —கதையும்
தங்கிய கையவனை } தாமே தங்கும்படி விளக்கும் திருக்கைகளையுடைய பிரானை
வர —வரும்படி
கூவில் —கூவினையாகில்
சால —மிகவும்
தர்மம் —தர்ம (புண்ய)த்தை
பெறுதி —பெறுவாய்.

உட்கார்ந்து அல்லது நின்று இருப்பவனை அழைத்தால் விரைவில் காரியம் கூடும். பள்ளிகொண்டவனைக் காண விரும்புகிறாயே என்று நினைக்கின்ற குயிலே! என் கொங்கை பள்ளிகொள்பவன் தான் வேண்டு மென்கிறது. அவன் பள்ளிகொண்டிருக்கும்போது அவனோடு அணைந்து புணர்வதிலே நோக்கு வைத்துக் கிளர்ந்தென்னைக் குமைக்கின்றதே. பிராட்டிக்கு இருப்பிட

மான பாற்கடலுக்குச் சென்று அவளோடு பள்ளிகொண்டவனுக்குள்ள காதலைக் கண்டு யானும், யானுள்ள இடத்திற்கும் அவ்வண்ணம் அவன் வரவேண்டுமென்றிருக்கிறேன். பிராட்டியோடு புணர்வதிலுள்ள பேரவாவினாலே பாற்கடல் பொங்குவதைக் கூட கவனிக்காமல் அதன் நடுவே பள்ளிகொள்பவன் அவன். பாற்கடலும் இப்படிப்பட்ட மருமகன் கிடைத்தானே என்று பொங்கிப் பூரிக்கின்றது. என் தந்தையாரும் அங்ஙனம் ஆனந்தம் பொங்கும்படியாகவேண்டும். படுத்தவன் எழுந்து வருவது ச்ரமம் என்கிறாயே. பாற்கடலில் பள்ளிகொண்ட அவன்தானே 'தமத்புதம் பாலக மம்புஜேக்ஷணம் சதுர்புஜம் சங்ககதார்யுதாயுதம்' என்றபடி திருவாழியும் சங்கும் கதையும் இம் மூன்றும் தாங்களாகவே திருக்கைத்தலங்களிலே தங்கும்படி விரைந்து வந்து என் கண்ணனாக அவதரித்தருளினான். நான்கு கைகளிருக்க மூன்றாயுதங்களே வந்தன என்? தெரியுமோ. என் கொங்கையின் குதூகலத்தைக் கண்டு அது தங்க ஒரு திருக்கையை வெறுமனே வைத்துக்கொண்டான். உனக்கென்னமறைந்துறைவு? இப்படிப்பட்டவனுடைய குணங்களை யறியாமே நீ ஏதோ ஒளித்துக் கூவாமலிருந்தால் உன் உறைவு இங்கே நிலைக்குமா என்பதையும் நீயே ஆராய்ந்து பார், க்ஷீரார்ணவ நிகேதநனான நாராயணனை வரக்கூவாயே லிங்குத்தை நின்றும் துரப்பன். கூவினாயானால் பெருந்தர்ம மாகும். நீ எனக்குச் செய்யவேண்டியது தர்மம்= கடமை. விசேஷமாகப் புண்யமென்கிற தர்மமுமுண்டு. நீயும் எப்பொழுதும் இங்ஙனமே உன் இனத்தோடு புணர்ந்து மிருக்கலாம். தர்மங்களிலே உயர்ந்த தர்மம் சரணாகதரக்ஷணம். கபோதோபாக்யானம் உனக்குத் தெரியாதோ? அதுவுள்ள இடம் வந்தமட்டிலேயே சரணாகதனென்று விரோதியான வேடனையும் அது காத்ததே. இது உன் இடமாகில் நானும் சரணாகதையே எனக் கருத்தாம்.

பொங்கிய. பாற்கடல் பொங்குவது ஏன் என்றால், சந்திரனைக் கண்டால் கடல் பொங்குமே. எம்பெருமானின் நகமண்டலங்களாகிற பல சந்திரன்கள் அங்கே விளங்கும்போது பொங்காமலிருக்குமோ. சந்திரனைக் கண்டாலே கடல் பொங்குமானால், சந்திரனுக்குக் காரணமா (சந்த்ரமா மநஸோ ஜாத:), ய் அவனுக்கு மேல் குளிர்ந்து இனிய மனதுள்ள பெருமானைக் கண்டு பொங்காலிருக்குமோ என உரைப்பது முண்டு. பெருங்கடலுக்குப் பொங்குவதென்பது இயற்கையானாலும் அதைப் பலவிதமாக உத்ப்ரேக்ஷிக்கலாம். எம்பெருமானுடைய க்ருபாம்ருதகடாக்ஷங்கள் மேன்மேல் குவியவே பாற்கடல் பொங்கும்போலும். பெண்ணான பிராட்டியினுடையவும் பெருமானுடையவும் சேர்த்தியின் சிறப்பைக் கண்டு பொங்கினதாகவும் உரைத்துள்ளோம். குமைத்து. நான் துணிந்து தடுக்க முயன்றாலும் என்னைக் குமைத்துவிட்டு அவை கிளர்கின்றன. குமைத்து என்பதைப் பிரித்து ஆவியை என்றதோடு சேர்ப்பதுமுண்டு. அங்கீயிலே. நீ எப்போதும் மறைந்துறைவதால் உன் உடல் அழகு பொருந்தியிருக்கிறது. அழகுக்குத் தக்க ஆத்மகுணமுண்டாகிலன்றோ அதற்கு மதிப்பு. 'குணைத் ரூபகுணைச்சாபி' என்றாரே ஆதிகவி. ஸீதையின் சிறந்த குணங்களிலீடுபட்டபிறகே அவளுடைய மேனியழகில் மதிப்பு வைத்தான் இராமபிரான். ஆக நீ உதவ முன்வரவேண்டும் என்றபடி. தர்மம்பெறுதி. வாசா தர்மமவாப்நுஹி' (7)

உன்னைக் கொங்கை ஆகுலம் செய்கிறதென்று இவ்வளவு தவிக்கின்றாயே. நீயுமவனை யாகுலம் செய்து உன்னை விட்டகலாதபடி செய்துகொள்ளலாகாதோ. இப்படி அடிக்கடி எங்களை வேண்டி வருந்துகின்றாயே. மேலும் இதுவரையில் உன்னைக் கண்ணெடுத்துக் காணாதவன், நான் கூவினமட்டிலே மனம்பொருந்தி வருவனெனக் கூடுமோ. அப்படி வர நினைத்தாலும் பல இடையூறுகளால் அது தடைபடலா மென்றவாறு குயில் கூறுமென நினைத்து மேலே யருளுகிறாள்——

8. சார்ங்கம்வளையவலிக்குந்தடக்கைச் சதுரன்பொருத்தமுடையன்
நாங்களெம்மிலிருந்தொட்டியகச்சங்கம் நானுமவனுமறிதும்.
தேங்கனிமாம்பொழிற்செந்தளிர்கோதுஞ் சிறுகுயிலேதிருமாலை
ஆங்குவிரைந்தொல்லைக்கூ[வ்]கிற்றியாகிலவனைநான் செய்வனகாணே. (49)

தேம்	—இனிப்பான
கனி	—பழங்களை யுடைய
மாம்பொழில்	—மாந்தோட்டத்திலே
செம் தளிர்	—சிவந்த துளிரை
கோதும்	—மூக்கால் கொத்தும்
சிறு	குயிலே !
சார்ங்கம்	—சார்ங்க மென்ற வில்லானது
வளைய	—நாணேற்ற வளையும்படி
வலிக்கும்	—வலிமையை உபயோகிக்கும்
தட கை	—விசாலமான திருக்கைத் தலங்களையுடைய
சதுரன்	— விரோதிகளெல்லோரையும் வெல்ல வல்லனான பிரான்
பொருத்தம் உடையன்	என்னிடம் இணக்க முள்ளவன்.
	நாங்கள்
இருந்து	—சேர்ந்திருந்தபோது
எம் இல் ஒட்டிய	எங்களுக்குள்ளே ஸம்மதித்துச் செய்துள்ள
கச்சங்கம்	—உறுதிமொழியை
	நானும் அவனும்
அறிதும்	—இருவருமே அறிவோம்.
ஆங்கு	—அவ்விடத்திலேயே
விரைந்து	—உத்ஸாஹமுற்று. வேண்டி
ஒல்லை	—சீக்கிரமே
திருமாலை	—ச்ரிய:பதியை
கூவுகிற்றி ஆகில்	நீ கூவவல்லையானால்
	(உடனே வந்து நிற்கும்) அவனை நான்
செய்வன	—படுத்தும் பாட்டை
காண்	--நேரில் காண்பாயாக,

எல்லா விரோதிகளையும் வெல்லும் திறலுடைய சார்ங்கபாணி என்னிடம் வர இடையூறு ஒன்றும் இருக்கமுடியாது. என்னிடத்தில் நன்கு இணக்க முடையனாகையாலே என்னை யுபேக்ஷிப்பா னென்னவேண்டா. இணக்கமுள்ளவ னென்பதை முன் நானும் அவனும் செய்துகொண்ட ப்ரதிஜ்ஞையின் போதே நான் கண்டிருக்கிறேன். இதற்கு முன்னமே நான் இரஹஸ்யமாக அவனிடம் சேர்ந்திருப்பவளானதால் அவனை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள வல்லமை யில்லாதவளாக என்னை நினைக்கவேண்டாம். என் வல்லமையைப் பயன்படுத்தி நான் என்ன செய்யப்போகிறேனென்பதை நீ நேராகக் காணலாம். அதற்காகவாவது அவனை நீ கூவவேண்டும். வராதவனை வேண்டி என் கொங்கையின் கிளர்ச்சியை விளக்குகிறாய் என்று என்னைப் பார்த்துச் சொல்லுகிறாய் போலே கூவாமலிருக்கிறாயே. என்ன, யாரையாவது நாதனாகக் கொண்டு என் வயதைப் பயன்படுத்துவனென்று நினைத்தாயா. மிகவும் இனிப்பான பெரும் பழங்கள் நிரம்பின மாம்பொழிலிலே மாங்கனிகளை விட்டு, துவர்ப்பான தளிரைக் கொத்தும் உன்னைப் போல் என்னை நினைத்துவிட்டாயா? சார்ங்கமுதைத்த சரமழையாலே ராவணனை வென்ற ராமபிரானிடத்திலும், சிசுபாலனைச் செற்ற கண்ணபிரானிடத்திலும் ஸீதைக்கும் ருக்மிணிக்கும் இருந்த நிலையே என்னிலை யென்று நீ அறிகிறாயல்லையோ? அவனை விட்டு அந்யனின் பேச்சை யென்னிடத்

தில் நினைக்கலாமோ. 'அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா,' 'ததா த்விரதவத் ராம: த்வம் நீச சசவத் ஸ்ம்ருத:' என்ற நிலை என் நிலை யென்றனள்.

கச்சசங்கமாவது ப்ரதிஜ்ஞை அல்லது ஸங்கேத மென்கின்றனர். இது ஒரு தமிழ் முழுச்சொல்லா, அல்லது வேறுமொழியின் விகாரமா, அல்லது கச்ச மாவது நிச்சயம், கம் என்றால் செயல். ஆக நிச்சயச் செயல் எனப் பொருள் பெற்றதாவென ஆராய்க. இச் சொல்லையே இங்குச் சொன்னதற்கு வேறு கருத்து மிருக்கலாம். அதாவது—கச்சு அங்கம் கச்சங்கம். கச்சு என்றது முலைக்கட்டு. முன் இரஹஸ்யமான இடத்தில் கச்சும் அங்கமும் ஒட்டும்படி நாங்கள் இருந்த இருப்பு எங்களுக்குத்தான் தெரியு மென்றதாம்.

தேங்கனி இத்யாதிக்கு, மாம்பொழிலிலுள்ள தேங்கனிகளைப் புசித்து அச்சுவையை மாற்றுவதற்காகத் தளிர் கொத்தும் கிளியே எனப் பெரியவாச் சான் பிள்ளையின் உரையாம். விரைந்து என்பது வேகத்தைச் சொல்வதன்று. ஒல்லையென்பது அதைச் சொல்லும். விரைதலாவது வேண்டுதல்; கூவும்போது மனம் பொருந்தி உத்ஸாஹமும் சிரத்தையும் கொண்டிருத்தல். (8)

நான்செய்வனகாணே. இவள் செய்வன என்னவெனில், உலகில் ப்ரணய கலஹம் செய்யும் ஸ்த்ரீகள் செய்வன எல்லாமே கொள்ளலாம். அன்றி, திருமாலை என்ற சொல்லில் கருதியவையுமாம். அகலகில்லேனிறையுமென்றுறையும் திரு வைப் போல்தானே நானுமிருப்பது. அவளை விட்டுப் பிரிவதுண்டா. அவள் தான் இப்படி என்னை வதைப்பதை ஸஹிப்பாளா என்றது போன்றன உறைக் கும் சொற்களை உரைப்பதுமாம். அன்றி, வேற்கண் மடந்தையான எனக்குச் சார்ங்கம் வளைய வலிக்கும் தடக்கைச்சதுரனை அவன்தானே பொருத்தமுடை யன். அச் சதுரனும் வலியிழந்து நிற்கும்படி நான் எனது வேற்கண்ணுற நோக்குவதே போதுமே, என்னை விட்டுத் தெங்கனி யிழந்த அவன் வேற்கண் காணவிரும்பினால் காணுதபடி யிருந்து விடுவேன் என்றதுமாம்.

கூவவேண்டுவதைக் கேட்டிருந்தும் குயில் ஏதோ சாக்குப்போக்கில் நோக்காயிருக்கிறதென்று இவள் நினைத்து அதற்கேற்றவாறு கூறிவந்தாள். வண்டிரைக்கும் பொழிலில் வாழ்வதாலே கூறுவது காதில் விழவில்லை போலு மென விப்போது உணர்ந்தாள். ஒருக்கால் காதில் விழுந்தும், இது என் காதில் விழவில்லையே யென்று பிறகுச் சொல்லலாமென்று மெண்ணினாள். அதன்மேல் கூறுவதாம் மேற்பாசுரம்—

9. பைங்கிளிவண்ணன் சிரீதரனென்பதோர்பாசத்தகப்பட்டிருந்தேன்
பொங்கொளிவண்டிரைக்கும் பொழில்வாழ்குயிலே குறிக்கொண்டிதுநீகேள்.
சங்கொடுசக்கரத்தான் வரக்கூவுதல் பொன்வளைக்கொண்டுதருதல்
இங்குள்ளகாவினில் வாழக்கருதிலிரண்டத்தொன்றேல் திண்ணம்வேண்டும்.

பொங்கு —அதிகப்படுகிற
ஒளி —கார்த்தியையுடைய
வண்டு —வண்டுகள்
இரைக்கும் —இரைச்சலிடுமிடமான
பொழில் — சோலையிலே
வாழ் குயிலே } அவ்விசையி லீடுபட்டு வாழ்கின்ற குயிலே!
குறிக்கொண்டு—கவனம் செலுத்தி

இது நீ கேள்—நான் சொல்லப்போவதை நீ கேட்பாயாக.
பை கிளி —பசுமையான கிளியின்
வண்ணன் —நிறமுள்ள
சிரீதரன் —ச்ரிய:பதி
என்பது —என்னப்படுகிற
ஓர் —ஒப்பற்ற
பாசத்து —வலையில்
அகப்பட்டு இருந்தேன் } உட்பட்டிருந்தேன்.
இங்கு உள்ள—என்னைச் சேர்ந்த இடத்திலிருக்கும்
காவினில் —சோலையில்
வாழ கருதில்—உனக்கு வாழ்வதற்கு எண்ணமிருந்தால்,
சங்கொடு சக்கரத்தான் } சங்கும் சக்கரமுமுடையவன்
வர கூவுதல்—வரும்படி அவனை நீ கூவுவதோ,
பொன் வளை—எனது பொன்மயமான வளையை
கொண்டு தருதல் } அவனிடம் கொண்டுபோய் சேர்ப்பதோ
இரண்டத்து —இவ்விரண்டில்
ஒன்று —ஏதேனுமொன்று
திண்ணம் —கட்டாயமாக (உன்னால்)
வேண்டும் —செய்யப்படவேண்டும்,

பைங்கிளிவண்ணன்சிரீதரன். 'மாதவன் மாமணிவண்ண' னென்று தொடக்கத்திலே சொன்னாள். கிளிவண்ணனிடமுள்ள காதலினாலேதானே இவள் இன்னடிசிலோடு பாலமுதூட்டிக் கிளியை வளர்ப்பது. **பாசம்.** கயிறு (வலை). இதற்கு ஸ்நேஹமென்ற பொருளுமுண்டு. சிரீதரன்விஷயமான ஸ்நேஹத்தைக் கயிறாக உரூபித்து மறைத்துப் பாசமென்றாளென்னலாம். ஆனால் இப்போதும் ஸ்நேஹத்தில் அகப்பட்டிருப்பதால் **இருந்தேன்** என்று இறந்தகாலமாகச் சொல்வது அப்போது பொருந்தாது. சிரீதரனே வலையென்றால், அவன் கலந்திருந்தபோது அவனை விட்டகலலாகாதபடிச் சிக்கியிருந்ததைச் சொல்வதால் அது பொருந்தும். **பொங்கொளிவண்டிரைக்கும்** என்றது, 'இக்காரணத்தினாலேயே குயிலின் காதில் நம் சொல் விழவில்லை' யென்று இவள் நினைப்பதைக் குறிக்கும். ஆகவே **குறிக்கொண்டு** என்றது, வண்டினிசையில் அது செவிபடுத்தியிருப்பதால் அதைத் திருப்பச் சொன்னதாம். **கொண்டுதருதல்** என்பதற்கு என் வளையை என்னிடம் தந்து நான் தரித்திருக்கச் செய்தல் எனப் பொருள் கொண்டால் இரண்டத்தொன்று என்றது சேராது. கூவின பிறகு அவன் வந்துசேர்ந்தால் தானே வளை தரிக்கப்பட்டு நிற்கும். ஆகக் கூவுதலும் தருதலும் சேரவேண்டுமாகையால் ஏதேனுமொன்றென்னக் கூடுமோ? ஆகையால், அவனையாவது கூவு, அல்லது அவனுடைய பிரிவாலே விழுந்த பொன்வளையை அவனிடம் போய்க் கொடுத்து அம்மூலமாவது நான் பாசத்தகப்பட்டிருப்பதை யறிவி எனப் பொருள் கொண்டது. 'இரண்டுமே செய்யப்படவேண்டியவையே. இஃதொரு ச்மத்காரோக்தி. கூவினாலல்லது வரமாட்டான். வராதபோது இவளுக்குப் பொன்வளை தருவது வீண். ஆகவே விழுந்துபோன வளையை என்னிடம் கொண்டு கொடு என்றால் தானே கூவுதலையும் செய்யு மெனக் கருதி இவ்வாறு கூறின' தென வுரைக்கின்றனர். முன் சொன்னபடி கொண்டால் **இரண்டத்தொன்று** என்றது நன்கு பொருந்தும். இவ்வளவு நான் வேண்டுவதைப் பார்த்து அவனைக் கூவுவதே யுக்தம். ஒருக்கால், 'இங்கே வண்டிரைக்குமிடத்திலே நீ கூறுவது என் காதில் விழவில்லையே. நான் எம்பெருமானைக் கூவினால் அங்கே எத்திசையுமமரர்பணிந்தேத்தின வண்ண மிருக்கு மவன்செவியிற் படுவது கூடுமோ. ஆதலால், கூவமாட்டேன்' என்கிறாயோ, அல்லது கூவச் சக்தியில்லை யென வேதேனும் நினைக்கிறாயோ. அப்படியானால் நீ நேராக என் பொன்வளையை

எடுத்துக்கொண்டு அவனிடம் போய் கொடுத்துவா என அதன் கருத்து. கொண்டு தருவது கஷ்டம். கூவுதலையே செய்வோமென்று அது நினைத்துக் கூவுமென உட்கருத்தாகும். என் வளையை என்னிடம் கொண்டுகொடு என்வே பொருள் கொள்வதானாலும் விழுந்தபோதெல்லாம் பார்த்திருந்து விழுந்தவிடத்தி லிருந்து என்னிடம் கொடுத்தவண்ணமிரு. இப்படி யெப்போதும் செய்ய வியலாதே யென்னில், அப்போது அவனைக் கூவு எனக் கருத்துரைக்கலாம். தன் கையாபரணத்தைக் கூற நினைத்தபோது அவனது கையாபரணம் நினைவுற்றதாலே ஸ்ரீதரன் என்றவாறு கூறுமே சங்கொடுசக்கரத்தா னென்றதாம். அவனுக்குச் சங்குசக்கரம்போல் எனக்கும் பொன்வளை எப்போது மிருக்கவேண்டாவோ. இப்படிச் செய்வது நியாயமோ வென வருவித்தபடி. (9)

பல நாள் கூறியும் கோரினபடி நடந்து கொள்ளாத குயிலைப் பார்த்துக் கோபத்துடன் கூறுகின்றனள்—

10. அன்றுலகமளந்தானை யுகந்தடிமைக்கணவன்வலிசெய்யத்
தென்றலுந்திங்களுமூடறுத்தென்னை நலியுமுறைமையறியேன்
என்றுமிக்காவினிலிருந்திருந்தென்னைத் ததைத்தாதே நீயுங்குயிலே
இன்றுநாராயணனைவரக்கூவாயே லிங்குத்தைநின்றும்துரப்பன். **(51)**

குயிலே —கோகிலமே!
அன்று —மாவலி யளித்த காலத்திலே
உலகம் —எல்லா வுலகங்களையும்
அளந்தானை —திருவடியை வைத்துக் காத்த மஹாபுருஷனை
உகந்தடிமை கண் } மிக்கக் கொண்டாடி நான் செய்யும் கைங்கர்யத்திலே
அவன் வலி செய்ய } அவ்விஷ்ணுவானவன் வஞ்சனைசெய்வதால்
தென்றல் உம் } தெந்திசைக்காற்றும்
திங்களும் —சந்திரனும்
என்னை
ஊடு அறுத்து —நடுவிலே பிளந்து
நலியும் முறைமை } ஹிம்ஸிக்கும் வகையை
அறியேன் —மனத்தால் அளவிட்டறிய மாட்டிலேன்.
(இப்படியிருக்க) நீயும்
என்றும் —எல்லாக் காலங்களிலும்
இ காவினில் —இந்தச் சோலையிலேயே
இருந்து இருந்து } நிலைத்திருந்து
என்னை ததைத்தாதே } என்னை ஹிம்ஸிக்க வேண்டாம்.
இன்று வர —இன்றைத்தினமே வரும்படி
நாராயணனை கூவாயேல் } நாராயணனை அழைக்க வில்லையானால்
இங்குத்தை நின்றும் } இந்த இடத்திலிருந்தே
துரப்பன் —துரத்தி விடுவேன்.

எல்லோரும் தனக்கு அடியார்களாகவேண்டு மென்று தன்னடியால் அனைவரையும் தானே தொட்டருளின உலகளந்தானின் க்ருபையை நினைத்து உவந்து அப்படிப்பட்ட திருவடிக்கு அடிமை செய்ய நான் இழிந்திருக்க என்னை யவன் வஞ்சனை செய்தான். அது கண்டு தென்றலும் திங்களும் நலியாநிற்கிறன. விரஹத்தால் துன்புற்ற சீதைக்கு உதவின உத்தமனின் தந்தையாயிருந்தும் தென்றலுக்கு அக்குண மில்லை. திருவின் உடன் பிறந்தானான திங்கள் என்னை யும் திருவைப் போல் அபிமானிப்பான் என்றிருந்தேன். அவன் தேவகிக்குக் கம்ஸனைப் போலாகின்றவனென்பதை முன் அறியவில்லை. இப்போது அவை செய்யும் நலிவுக்கு அளவே யில்லை. இவ்வளவென்று மனத்தாலு மறியமுடிய வில்லை. சொல்வதெங்ஙனம்? இராக்காலத்தில் வரும் திங்களும், இடையிடையே

வந்து போய்விடும் தென்றலுமே இப்படி நலியுமானால் அல்லும் பகலும் இக் காவிலேயே இருந்து உன் குரலை என் நலிவுக்கென்றே வளர்த்தவாயாகில் நான் பிழைப்பதேது? ஆகையால் நீ ததைக்கவேண்டாம். நீ என் காவினில் இருந்து எனக்கு அனுகூலமாக என் குரலை உபயோகிக்கலாகாதா. ஆகையால் இத்தனை நாள்களைப் போலின்றி இன்று வடபெருங்கோயிலுடையான் வரும்படி கூவ வேண்டும். இல்லையேல் இப்போதே உன்னைத் துரத்திவிடுகிறேன், பார் என்றனள். இதற்கு முன்னுள்ள பாசுரங்களிற் போலே இங்கும் முன்னடிகளும் குயிலைக் குறித்துக் கூறப்பட்டவை யல்லாமே தானே தனக்குள் சொல்லிக் கொண்டவை யல்ல. **உகந்தடிமைக்கண்.** உகந்த அடிமைக்கண் என்றது இங்ஙனம் குறைந்து கிடக்கிறது. உவப்பின் பலனை அடிமையை உகந்த அடிமை யென்கிறது. உகந்து எனப் பிரிப்பதாகில் உகந்து செய்த அடிமைக்கண் எனச் சொல் ஒன்றைச் சேர்க்க. உகந்து என்பதற்கு உகக்க என எச்சத்திரிபாகவும் பொருள் கொள்வர். **ததைத்தாதே** என்றவிடத்திலே 'ததர்த்தாதே' எனவும் இங்குத்தை என்றவிடத்தில் 'இங்குத்து' என்னும் பாடமு முண்டு. நாராயணனை. 'மென்னடையன்னம்' என்ற பாட்டிலிருந்து கூவியழைக்கும்படி கிட்டியிருக்கும் வடபெருங்கோயிலுடையானையே வரக் கோருகின்றனள் என்பது யுக்தமாகத் தோற்றுகிறது—ஆகையால், 'ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:' 'ஆபோ நாரா இதி ப்ரோக்தா: ——— தேந நாராயண: ஸ்ம்ருத:' என்றபடி. பாற்கடலிலும் ப்ரளயக்கடலிலும் பள்ளிகொண்டாற்போலே சயனித்திருக்கும் வடபெருங்கோயிலுடையானைச் சொல்வதாகலாம். அவனையே உலகளந்தானென்று அங்கே அநுஸந்திக்கிறாள். (10)

11. விண்ணுறநீண்டடிதாவியமைந்தனை வேற்கண்மடந்தைவிரும்பிக்
கண்ணுறவென்கடல்வண்ணனைக்கூவுகருங்குயிலேயென்றமாற்றம்
பண்ணுறுநான்மறையோர்புதுவைமன்னன் பட்டர்பிரான்கோதைசொன்ன
நண்ணுறுவாசகமாலைவல்லார் நமோநாராயணாயவென்பாரே. (52)

விண் —பரமபதம்
உற —ஸ்பர்சிக்கும்படி
நீண்டு —வளர்ந்து
அடி —திருவடியால்
தாவிய —உலகளந்த
மைந்தனை —வலிவுள்ள யுவாவை
வேல் கண் — வேல் போன்ற கண்களை யுடைய
மடந்தை —பெண்
விரும்பி —ஆசைப்பட்டு (குயிலைப் பார்த்து)
கரு குயிலே —'கறுப்பு நிறமான குயிலே!
என் கடல் வண்ணனை } எனது கடல்போல் கறுத்திருப்பவனை
கண் உற —என் கண் அவனிடம் பொருந்தும்படி
கூவு —அழைப்பாயாக'
என்ற —என்று சொன்ன
மாற்றம் —சொல்லாக இருக்கும்—

பண் உற —பலவகை ஸ்வரம் பொருந்தியுள்ள
நால் மறையோர் } நான்கு வேதங்களையு மோதினவர்கள் வஸிக்கும்
புதுவை —ஸ்ரீவில்லிபுத்தூருக்கு
மன்னன் —ஸ்வாமிகளாய்
பட்டர் பிரான் } பண்டிதர்களுக்கெல்லார் உபகாரகருமான பெரியாழ்வாரின் புதல்வியான)
கோதை —ஆண்டாள்
சொன்ன —ப்ரதாற்றுவித்த
நண் உற —நெருங்கினவையும் பொருந்தியவையுமான
வாசகம் மாலை } சொல் மாலைகளான இத் திருமொழியை
வல்லார் —அப்யஸித்தவர்கள்
நமோநாராயணாய என்பாரே } திருவஷ்டாக்ஷரத்தில் ஈடுபட்டு விளங்குவர்.

பரமபதம் தன் முடியிற் படும்படி நீண்டு ப்ரம்மாண்டம் முழுதும் தன்னடியால் அளந்தவனுடைய பரத்வமும் வாத்ஸல்யமும் பணித்து முடியா. அப்படிப்பட்ட மைந்தனே வேற்கண்ணியான தனக்குத் தருந்தவனென் ஒரு மடந்தை விரும்பித் தன் கணுற் காண நினைத்தால் அவள் எங்ஙனம் குயிலைக் கூவ ஏவக்கூடுமோ, அங்ஙனம் யான் சொன்ன சொன்மாலையை யோதுவார்க்கு நாராயணன் நெருங்கி விளங்க, 'நமோ நாராயணாய' என்றே கால முழுதும் கழிக்கும்படி பாக்கிய முண்டாமென்றபடி.

வேற்கண்மடந்தை. உண்மையில் வேற்கண் மடந்தையும் கோதையுமொருத்தியேயானாலும் மடந்தை என்பதை கோதை யென்றதோடு அந்வயித்துப் பொருள் கூறுவது சொல்லமைப்புக்குச் சேராது. ஆகையால் உள்ளபடியே உரைத்து முன் சொன்னவாறு கருத்துக்கொள்க. வேற்கண்மடந்தை விரும்பி என்னாதே, 'தான் விரும்பி' எனச் சொன்னால் தன்னிடமுள்ள வேற்கண் முதலிய சிறப்புக்கள் சொல்லப்பட்டன வாகா என்று இங்ஙன மருளினது. மடந்தை யென்றது பருவம் நிரம்பாத பெண்ணையும், இருபது வயதுக்குட்பட்ட யுவதியையும் சொல்லும். இளமை பொருந்திய யுவதி சொல்லுமா போலே பருவம் நிரம்பாத நான் சொன்ன சொல்லாம் இவை எனத் தெரிவித்தபடி. உண்மையில் இவள் சிறு பெண்ணாயிருந்தும் கண்ணன் கோபகன்னிகளிடம் நடந்து கொண்டதுபோலவே இவளிடமும் நடந்துகொண்டிருப்பதை, 'நாங்களெம்மிலிருந்தொட்டியகச்சங்கம் நானுமவனுமறிதும்' என்றாற்போலே யௌவனம் பொருந்தியவள் சொல்லுமாறு சொல்லி யறிவித்தனளே. தாவிய மைந்தனை வேற்கண்மடந்தை. உலகம் முழுதும் நடந்துவந்தவனுக்குத் தெரியுமே நம்மைப் போல் வேற்கண் யாருமில்லை யென்று என்றதாம். வேற்கண் கண்ணுற என்றதாலே, அவனை இவ்வேலிட்டு வசப்படுத்தவேண்டும்; கூவாயென்றதாம். (11)

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 5. மன்னுபெரும்புகழ் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

வாரணமாயிரம்

(கனாக்காணல்)

கூடலிழைத்துக் கண்ணன் வந்து கூடுவானெனத் தேறினாள், ஆற்றாமையாலே உடனே அவன் வந்து கூடவேண்டு மென்று விரைந்து குயிலைக் கூவ ஏவினாள். ஆயினும் அவன் வரவில்லை. குயில் கூவாமலு மிருந்திருக்கலாம். ஒருக்கால் இவளோடிருந்த பழக்கத்தாலே ஒருவாறு கூவத்தெரிந்து கூவியுமிருக்கலாம். எப்படியும் அவன் வாராமையினாலே வருந்தினாள். இவ்வளவு வருந்தின

வளுக்கு ஏதேனும் தேறுதல் ஏற்படவேண்டுமென்று கண்ணபிரானும் கருதினன். 'என்னை மணந்த பிறகே என்னுடன் சேர்பவன்' என இவள் நினைக்கும்படி செய்ய வேண்டுமென்றுமெண்ணி அவளைத் தான் விபவமாய் மணந்துகொண்டதாக அவளுக்கு ஓரிரவில் கனவைக் கல்பித்தான். அக் கனவிற் கண்ட விவரத்தைத் தோழியுடன் அவள் களித்துக் கூறினமையை யறிவிக்கும் திருமொழியாம் இது. இதில் ஆயிரம் ஆனைகள் சூழ அவன் தன்னை மணந்துகொள்ளத் தன் ஊர் புகுந்தது முதல் மணந்தபிறகு தன்னோடு ஆனைமேல் மணநீராடினது வரையிலாகக் கனவில் கண்ட காட்சிகளைத் தன் தோழியிடம் கூறுகின்றனள்—

1. வாரணமாயிரம் சூழவலஞ்செய்து
நாரணன்நம்பி நடக்கின்றானென்றெதிர்
பூரணபொற்குடம் வைத்துப்புறமெங்கும்
தோரணம்நாட்டக் கனாக்கண்டேன்தோழீநான். **(53)**

தோழீ —எனது தோழியே!
நாரணன் —நாராயணனென்ற
நம்பி —கல்யாணகுண பூர்ணன்
ஆயிரம் வாரணம் } ஆயிரம் யானைகள்
சூழ —தன்னைச் சூழ்ந்து கூட வர
வலம் செய்து —ப்ரதக்ஷிணமாக
நடக்கின்றான் என்று } வீதிகளில் நடந்து வருகிறான் என்றறிந்து
புறம் எங்கும் } ஊரில் ப்ரதக்ஷிணமாக வரும் இடங்களெல்லாவற்றிலும்
எதிர் —வருமவனுக்கெதிரில்
பூரணம் —தீர்த்த பூர்ணங்களான
பொன் குடம் —பொன்மயமான குடங்களை
வைத்து —வீடுதோறும் வைத்து
தோரணம் நாட்ட } தோரணங்கள் கட்டிய ஸ்தம்பங்கள் நடுதல் விஷயமான
கனா —சொப்பனத்தை
நான் கண்டேன் } நான் அனுபவித்தேன்.

கண்ணபிரான் தன்னை மணந்துகொள்ளத் தன் ஊரில் நுழைந்து ஊர்வலம் வரும் விஷயமாகவும், அப்போது ஊரிலுள்ள யாவரும் அவன்வருமிடங்களி லெல்லாம் அவன் எதிரில் வீடுதோறும் தோரணம் நாட்டிப் பூரணகும்பங்கள் வைத்தது போன்ற விஷயமாகவும் கனவில் முதன்முதல் தோற்றினதைத் தோழியினிடம் சொன்னாள்.

வாரணமாயிரம். பெரியாழ்வாருக்கு எதிர்கொண்டழைக்க வாரண மாயிரத்தோடு போம்படி செல்வ மில்லையாகிலும் சொப்பனத்திலே அவன் ஸங்கல்ப்பிக்கத் தட்டில்லையே. அவனுடைய யானைகளாகவுமாம். 'மத்தக் களிற்று வசுதேவர்' (பெரியா. 1-3-6) என்றபடி தகப்பனாருக்கும் யானைகள் பல. 'உந்துமதகளிற்றன்——நந்தகோபாலன்' (திருப். 18) என்றபடி நந்தரும் யானைகள் உள்ளவர். கம்ஸகுவலயாபீடாதிகளைக் கொன்று அவனது இராஜ்யத்தைக் கைப்பற்றினமையாலும் கரிகள் மிகவாம். ஒருக்கால் கண்ணனாயிருக்கும் போது யானைகளிராவிட்டாலும் முன்பின் ஜன்மங்களிலிருக்கத்தட்டென்? சிறந்த ஐசுவரிய மிருப்பதற்கு யானையிருப்பதே முக்கிய குறியாதல் பற்றி அதனையே இங்கு அருளினது. ஆகக் குதிரை முதலானவற்றையும் கூடக் கொள்க. கல்லியாணத்திற்கு அவன் தன் தோழர்களோடு வருவானாகையாலே, 'தன்னே ராயிரம் பிள்ளைகளோடு' (பெரியா. 3-1-1.) என்றபடி ஆயிரம் பிள்ளைகளான அவர்கள் ஏறிவர ஆனைகளாயிர மென்பர் சிலர். ஆண்டாள்காலத்திலே அவ்

விடப்பின்னைகள் இல்லாமையாலும் கண்ணனைப் போல் அவர்களும் அவதரித்துத் தோன்றினரென்பது ஸ்வரஸமில்லையாகையாலும் யானைகள்மட்டும் வந்ததாகவே கொள்ளலாமே யென்னில், இதிலும் குற்றமில்லை. நடக்கின்றான். இவனும் யானைமீது வருகின்றதே இங்ஙனம் கூறப்படுகின்றதென்பது முண்டு. எல்லோரும் தன் பக்கத்தில் வந்து கலந்துகொள்ளும்படி கிருபையாலே நடந்தே வருகின்றா னென்றதையுமிது அறிவிப்பதாம். வாரணமாயிரம் என்றது—ஐசுவரியமற்றவர் கடன் செய்தாவது கரி போன்ற வாகனம் தேடுவர் கல்யாண காலத்தில். ஆயிரக்கணக்கில் வாரணங்களிருந்தும் நடக்கின்றானென்னவாம். நாரணனுக்கு வாஹனங்கள் பலவகையாக வுள. தன்னைச் சார்ந்த நரர்களை அநுக்ரஹிக்க நடந்துசெல்லுகிறான் நம்பியானதாலே என விளக்க நம்பி நடக்கின்றானென்றது. 'நம்பி பிறந்தினில்' என்றபடி அவன் அவதரித்து ஸௌலப்யத்தை வெளிப்படுத்தினதுபோல் இப்போது நடந்து ஸௌலப்யத்தை வெளிப்படுத்துவதாலே ஸகலகல்யாணகுண பூர்ணனாகிறான்.

புறமெங்கும் என வல்லின றகரப்பாடமே முன்னோரிசைந்தது. புறமாவது (ஊர்வலம்வரும்) ப்ரதேசம். புர மென்றபாடமானால் பட்டணத்திலெங்குமெனப் பொருளாம். வைத்துப் புறமெங்கும் என்ற சொல்லமைப்பால் பூரணகும்பங்கள் அவன் நெருங்கிவந்ததும் அவன் எதிரிலே வைக்கப்படுவதும் அங்ஙனம் ஓரிடத்தில் பூரணகும்பங்கள் வைக்க நேர்ந்த பொழுதே அவன் வரப் போமிடங்களிலெங்கும் தோரணம் நாட்டுவதும் தோற்றும். நான் என்று முடிவிற் சொன்னது இப்போதே தான் ஸத்தை (நிலை) பெற்றதாகக் குறிக்கவாம். (1)

கண்ணபிரான் கிருபையினாலெல்லோரையும் கடாக்ஷிக்க வருகிறானோ, கல்யாணவிஷயமாக வருகிறானோ, பாணிக்ரஹணம் இப்போதே செய்துகொள்ள வருகிறானோ என்றெல்லாம் மனம் அலையாதபடி அத்தருணமே விவாஹமஹோத்ஸவம் நடத்திக்கொள்வதை வெளியிட்டுக்கொண்டு வருகிறானென்கிறாள். இதனால் முன்பாசுரத்திற் சொன்ன ஊர்வலம், விவாஹத்திற்கு வரும் வரனை எதிர்கொண்டழைக்கும்போது நடத்தப்பெற்றதொன்று என்றதாகும்—

2. நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ்
கோளரிமாதவன் கோவிந்தனென்பானோர்
காளைபுகுதக் கனாக்கண்டேன்தோழீநான். (54)

நாளை —நாளையதினமே
வதுவை மணம்என்று } விவாஹோத்ஸவம் நடப்பதாக
நாள் இட்டு } முஹூர்த்தத்தை நிர்ணயம் செய்து (நிச்சிதார்த்தம் செய்வதற்காக)
கோள் அரி மாதவன் கோவிந்தன் என்பான் } மிடுக்கு உடைய சிங்கம், திருமால், கோவிந்தன் எனப்படும்
ஓர் —ஒப்பற்ற
காளை —யுவாவானவன்
பாளை —பாளைகளோடு கூடின
கமுகு —(க்ரமுகம்) பாக்குமரங்களின்
பரிசு உடை —பண்பை உடையதான
பந்தல் கீழ் —பந்தலினுள்ளே
புகுத —புகுவதாக
நான் கனா கண்டேன் தோழீ !

வதுவையாவது கல்யாணம். ஆகவே மணமென்பதற்கு இங்கு மஹோத்ஸவமெனப் பொருள். இட்டு என்பது புகுத என்பதோடு இயைவதே ஸ்வரஸமாமாகையால், அவனும் அவனுடைய பந்துக்களும் நாளிட்டதாகக் கொள்ளவேண்டும். பரிசு என்பதோடு இட்டு என்பது சேருமாகிலும் சேர்க்க. பரிசாவது—பண்பு, செயல். அழகுபடும்படி அலங்கரிக்கும் வகை. வாழை, தேங்காய்க்குலை முதலானவற்றோடு கண்களைக் கவருமாறு அமைத்தல். கோளரி இதயாதிகளால் அடைவாக, பெருமையும், பெண்களை மோஹிக்கும் அழகும், ஸர்வஸுலபனுகவே யிருந்து இடையூறுகளை நீக்கி இன்பம் ஊட்டுவதும், இவ்வளவோடு விவாஹத்திற்குத் தக்க சிறுபருவம் பொருந்தினதும் பணிக்கப்பெற்றன. கோள் மிடுக்கு. கோள் இடையூறுய் அதை அரி போக்கும் மாதவனென்னவுமாம். கோவிந்தன் என்பது பூமிப்பிராட்டிக்கு நாதனென்றதையும், பூமியில் அவதரித்ததையும், இந்திரனை ஜயித்து அவனே கோவிந்தபட்டாபிஷேகம் செய்திட விளங்கினமையையும் விளக்கும். மாதவன் கோவிந்த னென்றதால், 'நமக்கும் பூவின்மிசைநங்கைக்கு மின்பன்' என்றபடி பெரியபிராட்டியினிடம் போல் எல்லோரிடமும் காதல் கொண்டவ னென்றதும் குறிக்கப்பெறும். காளை யென்று விருடபத்திற்குப் போலே யுவனுக்கும் பெயர். புகுத. புகு என்றது போல் புகுது எனவும் வினைப்பகுதி யுண்டு. (2)

கோவிந்தனுடன் அவன்பந்துக்கள் யார் வந்தனர்? வசுதேவர் நந்தர் முதலானோர் ஆண்டாள்காலத்திலில்லையே யென்ற வினு விடைபெறுமாறு நிச்சிதார்த்தம் நடந்த வழகை யருளுகின்றனள்—

3. இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்
வந்திருந்தென்னை மகள்பேசி மந்திரித்து
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக்கனக்கண்டேன் தோழீநான். (55)

இந்திரன் —தேவேந்திரனையும்
உள் இட்ட —தங்களுக்குள் சேர்த்துக் கொண்ட
தேவர் குழாம் —தேவதைகளின் கூட்டங்கள்
எல்லாம் —முழுமையும்
வந்து —இவ்வூருக்கு வந்து
இருந்து —புவியில் தங்கி
என்னை மகள் பேசி } என்னையே மணமகளாக ப்ரஸ்தாவித்து
மந்திரித்து } சீர்விஷயமான ஆலோசனைகளைச் சுற்றார் உற்றாருடன செய்த பிறகு
அந்தரி —துர்க்கையானவள்
மந்திரம் கோடி } நிச்சிதார்த்தச் சேலையை
உடுத்தி -எனக்குத் தானே அணிவித்து
மணமாலை } மணமுள்ள மாலையையும்
சூட்ட —சூட்டினதாக
நான் கனு கண்டேன் தோழீ!

காலம்சென்றவர் கனுவிற் புகவில்லை. இந்திராதிபந்துக்களே வந்தன ரென்றபடி. இத் திருமொழியிலே மேன்மேற்பாசுரங்களாலே மணம்புரியும் காலத்திலே மேன்மேல் நடத்தும் வகைகளை அடைவாகவே அருளுகின்றுளென்பதே அழகியதாம். அங்ஙனமே அமைந்திருப்பதையும் ஆங்காங்கு விளக்குவம். ஆகவே நாத்தனார் கோடியுடுத்தினதாகக் கூறியிருப்பதைக் கொண்டு கல்யாணத்தின் நடுவே கூறையுடுத்துவதையே கூறினதாகக் கொள்ளவேண்டா. நிச்சி

தார்த்தகாலத்திலேயே நாத்தனார் வந்திருக்கும்போது அவளே கோடியுடுத்துவது கூடும். அதே பொருத்தமுமுள்ளது. நாத்தனார் உடுத்துவது நாட்டுப் பெண்ணின் லக்ஷணங்களை யறியப் பெரியோர் ஏவுவதாலென்பர். ஆக அப்போது உடுத்துவது யுக்தமாகுமே.

மந்திரித்து என்பது எச்சத்திரிபு. மந்திரிக்க என்றபடி. மந்திரக்கோடி. மந்திரமாவது ஆலோசனை. நிச்சயம் செய்வது. அது நடந்ததற்கு அடையாளமான சேலை மந்திரக்கோடி. அல்லது நாத்தனார், மைத்துனர், மாமியார், மாமனார் மற்றுமுள்ள பந்துக்கள் யாவரும் இவளுக்கு அடக்கமாயிருக்கும்படி கணவன் இவளைத் தலைமேல் வைத்துப் புகழும் வண்ணம் இவள் விளங்க ஆசீர்வதிக்கும் (உதுத்தரமாரோஹந்தீ) மந்திரத்தைச் சொல்லி மறையோர் அளித்த கோடி மந்திரக்கோடியாம். அந்தரி. கண்ணனுக்குத் தாயாக இருந்த யசோதையினிடம் மாயை பிறந்து வசுதேவரால் கொடுபோகப்பட்டுக் கஞ்சன் கத்தியால் வெட்ட முயன்றபோது அந்தரத்தில் நின்று துர்க்கையாய் எல்லோரும் பூஜிக்கும் நிலையைப் பெற்ற வரலாற்றைக் கொண்டு அந்தரியானவள் நாத்தனார் முறையைப் பெற்றனளென்க. நாட்டுப்பெண் வந்தபிறகு நாத்தனார் அந்தரத்தில் நிற்பவளாகிறுளென்று அந்தரி யென்பது நாத்தனாரைச் சொல்வதோ என்னவேண்டா. கீழ்ச் சொல்லியபடி துர்க்கை அந்தரத்திற்குச் சென்றதாலே அவளையே அந்தரி யென்கிறது.

வேறு பந்துக்கள் கல்யாணநிச்சயம் செய்து நடத்தும்போது, வந்து பார்த்து உவந்துப் பரிசளித்துப் போவதற்கு மாத்திரம் இந்திராதிகள் வந்தாரல்லர். கண்ணன் அக்கல்யாணத்திற்சாக மீண்டும் தோன்றிவரும்போது முன் இருந்த பந்துக்கள் யாரு மில்லையாகையாலே இந்திராதிகளே பந்துமுறையில் வந்து, 'தரையை மிதியார் தேவதைகள்' என்ற பிரசித்தியை மீறிப் புவியினில் தங்கியுமிருந்து நிச்சிதார்த்தம் முதலாக எல்லாம் செய்தனர். அப்போது மணமகளுக்கு நாத்தனார் கோடியுடுத்துவதென்ற கணக்கிலே துர்க்கை கோடியுடுத்தினள். பூமாலையையும் சூட்டினள் என்றவாறு கனவைக் கண்டேனென்றபடி.

மணமாலை. மணம் மாருத மாலை, திவ்யபுஷ்பமாலை யென்றபடி. மணம் மகிழ்ச்சியாய் பூமாலையைப் போல் பூஷணமாலைகளையும் கொள்ளக்கூடுமாகில் கொள்க. நிச்சிதார்த்தசமயத்திலே நேரிழை யளிப்பதும் நிகழ்வதே.

இராமாவதாரத்திற் போலின்றி, கிருஷ்ணாவதாரத்திலெ முதலினின்றே தனது ஈச்வரத்தன்மையை யெல்லோருக்கும் விளங்கச் செய்திருந்ததாலே எல்லாத் தேவதைகளும் தங்களைப் பந்துக்களாகவே பாவித்து எம்பெருமானுக்கு எல்லாம் செய்துவந்தனர். பிரமன், ருத்ரன் என்ற பெருந்தேவர்களை விட்டு இந்திரனை யெடுத்தது ஏனெனில்—ஸ்ருஷ்டி, ஸம்ஹாரங்களுக்கு ஏற்பட்டதாலே ப்ரம்மருத்திரர்கள் மேலானவாானாலும் மூவுலகும் காப்பவனாய், திக்பாலகர்களிலே ச்ரேஷ்டனுமானதாலே இந்திரனே தேவேந்திரனென்னும்படி ஒருபடி எல்லோருக்கும் மேம்பட்டவனானமையா லென்க. அன்றி, உபேந்திரனுக்கு இந்திரன் தமையனாகையாலே நெருங்கிய பந்துவாயும் பெரியவனு மாயிருந்தான்.

பரமைகாந்தையான ஆண்டாள், இந்திரன் துர்க்கை போன்ற தேவதாந்தரங்களைப் புரஸ்கரிக்கலாமோ வென்னில்—அவர்களை இவள் உபாஸனம் பண்ணிப் பார்க்கவில்லையே. அவர்கள் தாங்களே நேருக்கு நேராக வந்தால் உசிதமானபடி பேசுவதில் ஒரு குற்றமுமில்லை. தேவதை யென்கிற முறையை விட்டுப் பந்துமித்ரர்கள் முறையில் தக்கவாறு மரியாதை செய்வதுதான் சாஸ்திர ஸம்மதமே யன்றி உபேக்ஷிப்பது உசிதமாகாது. பர்த்தாவைச் சேர்ந்தவர்களாக அவனுடன் வந்துள்ளபோது அவர்களைக் கௌரவிக்கவில்லை யென்றால், அவனையே அவமதித்ததாம். ராஜஸ்திரீகள் யார்கண்ணிலும் படுகிறதில்லை யென்பது பொதுவிலே யுண்டானாலும், 'வ்யஸநேஷு ந க்ருச்ரேஷு ந யுத்தேஷு ஸ்வயம்வரே। ந க்ரதௌ ந விவாஹே ச தர்சநம் தூஷ்யதி ஸ்த்ரியா:' (6-117.) என்று சக்கரவர்த்தித்திருமகன் அருளிச்செய்தபடி யுத்தம் முதலான காலங்களிலே பிறர்கண்ணுக்குக் காண இருத்தல் அவர்களுக்குத் தோஷமாகாதென்னுமா போலே, தேவதாந்தரங்கள் உறவினிற் சேர்ந்தவரானபோது அதற்குத் தகுந்த மரியாதைக்குப் பாத்திரமாவர்களென்க. .... (3)

நிச்சிதார்த்தம் ஆனபிறகு இருவருக்கும் மங்களஸ்நானம் ரக்ஷாபந்தனமெல்லாம் செய்விப்பதும் நடந்ததாகக் கண்டேனென்கிறாள்—

4. நாற்றிசைத்தீர்த்தங்கொணர்ந்து நனிநல்கிப்
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்திப்
பூப்புனைகண்ணிப் புனிதனோடென்றன்னைக்
காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன் தோழீநான். (56)

பல்லார்	—பல பேரான	பூ புனை	--புஷ்பங்களால் பொலிவுற்ற
பார்ப்பனர் சிட்டர்கள்	சிஷ்டர்களான ப்ராம்மணர்கள்	கண்ணி	—மாலையையுடைய
நால் திசை	—நான்கு திக்குக்களினின்றும்	புனிதனோடு	பரிசுத்தனான அவ் வரனுக்கும்
தீர்த்தம்	கங்காதிபுண்ணிய தீர்த்தங்களை	என் தன்னை	—எனக்கும்
கொணர்ந்து	—கொண்டுவந்து	காப்பு நாண்	ரக்ஷாபந்தனம் என்ற கங்கண ஸூத்ரம்
நனி	—மிகவாக	கட்ட	--கட்டினதாக
நல்கி	— உவந்து (அல்லது) அளித்து,		நான் கனா கண்டேன் தோழீ!
எடுத்து ஏத்தி	கணீர் என்று வேதவாக்யங்களைக் கொண்டு புகழ்ந்து		

பாணிக்ரஹண (விவாஹ) த்திற்காக மணப்பந்தலில் மணமகன் புகுவது மேற்பாசுரத்திலே சொல்லலாயிருக்க, அதற்கு முன்னமே காப்புக்கயிறு கட்டுவதைக் கூறுவது பொருந்துமோ என்னவேண்டா. மணப்பந்தலில் புகுந்த பிறகே கங்கணம் கட்டுவதை இப்போது வெகுவாய்ச் செய்துவருகிறார்களானாலும் பண்டைய ஆசாரத்தில் கங்கணம் கட்டுவது முன்னமே யாயிருந்ததென்னல் வேண்டும். க்ருஹ்யரத்னம் என்ற க்ரந்தத்திலும்—வரனுக்கும் வதூவிற்கும் விவாஹத்திற்கு அங்கமாக அங்குரார்ப்பணம், (ப்ரதிஸரபந்தம்) கங்கணம் கட்டல் என்ற இரண்டையும் முதலிற் செய்யப்படவேண்டுவனவாகக் கூறி, பிறகு வரன் கன்னிகையை வரிப்பதற்காகத் தன்னைச் சார்ந்தாரைக் கன்னியின் இல்லத்திற்கு அனுப்புவதும், அங்கே கன்னியின் தந்தை யதை இசைந்த

பிறகே வரனை அந்த இல்லத்திற்கு அழைத்துப்போவதும், பிறகு கன்னியாதானம், விவாஹமெல்லாம் நடப்பதும் கூறப்பட்டிருப்பதால் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் தனித்தனியாகவோ அல்லது பெண்ணுக்கு வரனைக் கொண்டேயோ கங்கணம் கட்டினபிறகு அவரவரில்லம் போய் திரும்பப் புகுவது ப்ராமாணிகமேயாம்.

'நாற்றிசைத் தீர்த்தம் கொணர்ந்து' என்பது வரன் வ்ரதஸமாவர்த்தன காலத்திற் செய்யும் ஸ்நானத்திற்கோ, அல்லது இருவருக்குமான மங்களஸ்நானத்திற்கோ கொண்டுவருவதாகலாம். இப்படித் தீர்த்தங்களைக் கொண்டுவரும்படி விசேஷப்ரமாணங்களும் ஆசாரமும் கிடைக்கவில்லையாயினும், வதூவரர்கள் மங்களஸ்நானம் செய்வது உண்டானபடியாலே, ஸ்நானமும் கங்காதி தீர்த்தங்களை ஆவாஹனம் பண்ணிச்செய்யவேண்டியிருப்பதாலே, விபவமும் வல்ல பரிஜனங்களும் உள்ளபோது சிறப்பாக விவாஹம் செய்விப்பவர் புண்ணிய தீர்த்தங்களை யெல்லாம் போய்க் கொண்டுவர ஏற்பாடுசெய்தல் நன்றே. நல்கி. நல்குதல் ஈதலுமாம்; உவப்பதுமாம். இவ்வளவிலிருந்து ஸ்நானம் செய்வித்ததும் தானே தோற்றும்.

பார்ப்பனர். 'ப்ராஹ்மண' என்ற வடமொழியின் விகாரமான இச்சொல் 'பார்ப்பன' என்றே வழங்குகிறபடி இங்கும் ஓதப்படுகிறது. பாப்பன என்றும் சிலர் படிப்பர். வேதவேதாந்த ஞானமும், ஒழுக்கமும், ச்ரத்தையுமுடையவர் சிஷ்டர். அவர்களே எடுத்தேத்த வல்லவர்கள். அவர்களில் பார்ப்பனராயிருப்பவர் இங்கு அபேக்ஷிக்கப்பட்டவராவர். சிஷ்டரல்லாத பார்ப்பனர்களுக்கு ஏத்த வல்லமையிருந்தாலும், பலன் பெறுவது சிட்டர்கள் ஏத்தினபோதெனக் கருதி அவர்களைக் கூறினதாம். எடுத்து குரலெடுத்து, அல்லது தகுந்த வேதவாக்யங்களை யெடுத்து. (இங்கே வ்ரதத்தைச் செய்யும்போது, புண்யாஹவாசனம் மதந்தீஜபம் முதலியனவும் கருதப்படலாம். 'ஸர்வேப்யோ ப்ராஹ்மணேப்யோ நம:. மதந்தீஜபம் குருத்வம்' என வுள்ளதன்றோ? மதந்தியாவது ஜலகும்பம்.)

பூப்புனை கண்ணி. கண்ணி யென்றதே மாலையைக் குறிக்கப் போதுமாயிருக்க பூப்புனை யென்றது நெருக்கமாக அழகு படும்படி பூக்களை யமைத்துச் செய்த கண்ணி என அறிவிக்கவாம். ஸ்நாதகனானபோது சிரஸில் மந்த்ரபூர்வகமாக மாலை சூட்டிக்கொள்ள விதித்திருப்பதும் இங்கே கருதப்பெறலாம். புனிதன். தீர்த்தங்களால் ஸ்நானப்ரோக்ஷணங்கள் பெற்றதாலும், இடர்களும், இடையூறுகளும் விலகி வெகு பெருமையோடு விளங்கும்படி பெரியோர் எடுத்தேத்தினதாலும், இயற்கையிலுள்ள மேன்மையாலும் சுத்தமானவன். இங்குப் பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியாவது—'விவாஹஸமயத்தில் அவள் பேரொப்பனை போலன்றிக்கே ஒரு தனி மாலையை யிட்டு, ஸ்நாநம் பண்ணி, குந்தி நடந்து, புடவை யொதுக்கி விநீதவேஷத்தோடே வந்தபடி. பெரியாழ்வார்பெண்பிள்ளையை ஆசாரவைகல்யமுண்டானால் கொடார்களே' என்றதாம். இங்கே விநீதவேஷம் என்பதற்கு நன்கு சிக்ஷை

பெற்றவனுடைய வேஷமென்ற பொருள் ஸ்வரஸமாம். தீர்த்தம் கொணர்ந்தது முதல் காப்புநாண் கட்டினது வரையிலுள்ள செயல்களெல்லாம் செய்த பார்ப்பனர் ஒருவரே யாகாமல் வெவ்வேறாக இருந்தாலும் பார்ப்பனரென்ற ஒரு கூட்டத்திற்குப் பொதுவிலே கர்த்ருத்வத்தை (எழுவாய் நிலையை) ஏறிட்டு ஸமாநகர்த்ருகமாகப் பிரயோகித்தது. அல்லது எச்சத்திரிபாகக்கொண்டு, கொணர, நல்க, ஏத்த என்னலாம். பல்லார் என்ற விடத்தில் சிலர் பல்லாண்டென்று மோதுவர். (4)

காப்புநாண் கட்டியான பிறகு மணமகன் தன் இல்லத்தில் இருந்து கொண்டு மணமகளை வரிக்கத் தன்னைச் சேர்ந்தவர்களை யனுப்ப, அவர்களும் மணமகளின் தந்தையினிடம் இந்தக் கோத்ரத்திற் பிறந்த இந்தப் பரம்பரையைச் சார்ந்த இன்னானுக்கு இத்தகைய பெண்ணைக் கொடுப்பீராக என்று கேட்க, அவனும் இசைய, அதன் மேல் அவர்கள் அறிவித்தபடியிலே மணமகன் மண மண்டபத்திற்குப் புறப்பட்டுவரும்போது மணமகளைச் சேர்ந்த மங்கையர் மங்கள மரியாதையுடன் எதிர்கொண்டழைப்பதும், அவன் புகுமழகும் கனவிற் கண்டபடி கூறப்படுகின்றன—

5. கதிரொளி தீபங் கலசமுடனேந்திச்
சதிரிளமங்கையர்தாம் வந்தெதிர்கொள்ள
மதுரையார்மன்னனடிநிலை தொட்டெங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழீநான். (57)

சதிர்	—விலாசமுள்ளவரான
இள மங்கையர் தாம்	இளம் பெண்கள்
கதிர்	—சூரியனுடைய
ஒளி	ஒளி போன்ற ஒளியையுடைய
தீபம்	—தீபங்களை
கலச முடன் ஏந்தி	குடங்களுக்குள் வைத்துக் கையில் கொண்டு
வந்து	—பந்தலுக்கு முன் வந்து
எதிர் கொள்ள	வரனை எதிரில் வரவேற்க
மதுரையார் மன்னன்	வடமதுரையில் வசிப்பவர்க்கு ஸ்வாமியான கண்ணன்
அடி நிலை	திருவடி நிலையை (பாதுகைகளை)
தொட்டு	—திருவடியிலணைத்து
எங்கும்	—நாலு பக்கங்களிலும்
அதிர	—நடைச்சத்தம் உண்டாம்படி
புகுத	கல்யாணப் பந்தலினுட் புகுவதாக
நான் கனா கண்டேன் தோழீ !	

கதிரொளி என்றதாலே பெருங்காற்றிலு மணையா வென்றதாம். சதிர் என்று விவாஹமஹோத்ஸவ மகிழ்ச்சியால் மங்கையர்களின் அங்கங்களுக் கேற்பட்ட விலாஸங்களின் வகைகளைக் கருதினதாம். சதிராவது அழகு என்பர் சிலர். சாதுர்யம் கலந்த விலாஸநடை சதிராகும். இதனால் தங்கள் பாதிவ்ரத்யத்திற்கும், தீபம் அணையாமலிருப்பதில் நோக்குக்கும் தகுமாறு தலை குனிந்து முன்னடி பார்த்து மநோஹரமாய் நடப்பது சொல்லப் பெற்றது. தங்களையே எல்லோரும் நோக்கும்படி அழகு வாய்ந்தவ ரென்ற பொருளுக்கு இங்கு நன்கு பொருத்தமில்லை. இப்பெண்களின் சதிர்நடையைச் சொல்லி

வரனின் அதிர்கடையை மேலே மொழிகின்றனளென்பதற்கு மிகப் பொருத்த முண்டு. முதலிரடிகளால் த்ருஷ்டிதோஷ பரிஹாரமாகச் செய்வதெல்லாம் குறித்ததாம்.

அதிரப் புகுவதற்கேற்ற மேன்மையைக் குறிக்க மதுரையார் மன்னனென்றது. அடி நிலே. இவை மணமகளைச் சார்ந்தார் ஸமர்ப்பித்தவை யாகலாம். தோட்டு என்பதற்குக் கொடுத்து என்று பொருள் கூறுவதும், கொடுத்து என்றே பாடம் கொள்வதும் சரியல்ல. பாதுகைகளைப் பிறரிடும் கொடுப்பது புகும்போது அணிவது கூடாதாகையாலே என வேண்டா. உபாநஹ்யம் ஆத்ரம் டிணும்வு தஷிம் யுகவா விவாஹணவம் மகவா என்று, புகும்போது அடிநிலேயோடு புகுவது பணிக்கப் பெற்றுள்ளது. ஆகவே யன்றோ அதிரப்புகுத என வருளினது. அதிர. மாவலி வேள்வியில் மிகச் சிறிய மாணவனாய் மண் இரக்க முயன்று, யாசிப்பதில் உள்ள எழ்மையை நினைத்து நொந்து இளைத்து வாமநனாய்ப் போகும்போதே இருங்கடல் சூழ்ந்த பூமி யடங்கலும் அடிவைப்பில் வளைந்து கொடுத்ததென்றால், இங்கே மணம் புரிய மிகுந்த மிடுக்குடன் நடக்கும் மன்னனடிநிலே பட்டு அது அதிர்வதில் என்ன வியப்பு? பதற்றத்துடன் பாதத்தை வைத்தால் பூமி அதிரும். அங்கே விரைவிலே பெறவேண்டு மென்ற பதற்றம் உள்ளடங்கி யிருந்தது. இங்கே அது வெளிப்படையாயிருந்தது. ... (5)

விவாஹத்திலே முக்யமானது பாணிக்ரஹணம். அதாவது வரன் வதூவின் கையைத் தன் கையால் பிடித்துக்கொள்வது. ஐந்து பாசுரங்களாலே அதற்கு முன் சடங்குகளைச் சொல்லி அதை ஆறாம் பாசுரத்திலே யருளிச் செய்கின்றனள்—

6. மத்தளங்கொட்ட வரிசங்கம்நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ்
மைத்துனன்நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன் தோழீநான். (58)

மத்தளம் } மத்தளம் முதலிய வாத்யங்களெல்லாம்
நின்று கொட்ட } இடைவிடாமல் அடித்தபோது (கூடவே)
வரி } ரேகைகளுள்ள (அல்லது) நீண்ட
சங்கம் —சங்கங்களையும்
நின்று ஊத } இடைவிடாமல் ஊதினபோது,
மைத்துனன் } மைத்துனமுறைமை யுள்ளவனும்
நம்பி } கல்யாணகுண பூர்ணனும்
மதுசூதன் } மது என்ற அசுரனை ஸம்ஹரித்தவனுமான எம்பெருமான்
முத்து உடை —முத்துக்களாலான
தாமம் —மாலைகளின்
நிரை —வரிசைகள்
தாழ்ந்த —தொங்கவிடப் பெற்ற
பந்தல் கீழ் —பந்தலின் உள்ளே
வந்து } (எதிர்கொண்டழைத்த பிறகு) எழுந்தருளி
என்னை கைத்தலம் பற்ற } என்னைப் பாணிக்ரஹணம் செய்து கொண்டதாக
நான் கனா கண்டேன் தோழீ!

இளமங்கையரை முன்னிட்டு எதிர்கொண்டழைத்துத் திருஷ்டிபரிஹாரமெல்லாம் செய்து மணப்பந்தலுக்கு மதுசூதனை யழைத்து வந்தார்கள். அது

முதற்கொண்டு பாணிக்ரஹணம் செய்யும் வரை மத்தளம் முதலிய மங்கள வாத்யங்கள் முழங்கின வண்ண மிருந்தன. சிறந்த சங்கங்கள் விடாமல் ஊதப் பட்டே யிருந்தன. எங்கும் முத்து மாலைகள் தொங்க விடப்பட்டிருந்த தால் பேரழகு பெற்ற பந்தலில் புகுந்து அந் நம்பி யென்னைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டான். இவ்வனம் கனாக் கண்டேனென்கிறாள்.

நின்று என்பது வீண் சொல்லன்று. 'கனைத்திளங்கற்றெருமை கன்றுக் கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால் சோர' என்ற விடத்திற்போலே இடை விடாமல் என்ற பொருளிலே வந்தது. எனவே தோட்ட என்றதோடும் சேரும். ஆகவே பெரியவாச்சான்பிள்ளையும், 'மங்கள வாத்யங்கள் மாறாதே நின்று முழங்க' என உரைத்தனர்.

மைத்துனன். மைத்துனனென்று அத்தைமகன், மாமன்மகன் போன்று ரைச் சொல்வது. கண்ணன் ஆண்டாளுக்கு மைத்துனனாகக் கூடுமோ வென் னில், நப்பின்னைக்கு இவன் கொழுநனாய் மைத்துனன் முறைமையிலு மிருந்தது போல் தனக்கு மிருக்கவேணு மென்று ஆசைப்பட்டனளென்பர். நம்பி என்றது மைத்துனன் முறைமையை அபிமானித்து அவள் விவாஹத்திலிழிந்தாற் போலே அம் முறைமையில்லாத என்னிடமுமிரங்கி என் கைத்தலம் பற்றினனே எனப் புகழ்வதில் நோக்காமென்க. எழுதுசுவை யடர்த்ததுபோல் எவ்வித இடை யூறையும் போக்கு மென வறிவிக்க மதுசூத னென்றது. இனி, உடன் பிறந் தாளின் கொழுநனையும் மைத்துனனெனச் சொல்வதாகக் கொண்டு ஆண்டாள், தன்னிடம் கேட்கும் தோழியைப் பார்த்து, என் ஸோதரியான உனக்கு மைத் துனனாயிருப்பவ னெனக் கூறினாளெனலாம். பாணிக்ரஹணம் செய்துவிட்டால் அவன் எனக்குப் பர்த்தாவாவது போல் என் தோழியாய் கூடப்பிறந்தவள் போன்ற உனக்கு மைத்துனனுமிருப்பவனென வறிவிக்கக் கருதினாளென்ன லாம். பாணிக்ரஹணம் செய்ய வந்துவிட்டதால் இனி அவன் எனக்குப் பாத்தா வாகவே யானெனென்று முன் களித்ததைக் கூறினதா மிது. பிறருடன் பேசும் போது அவர்களின் உறவைக் கொண்டு பர்த்தாவைச் சொல்வது வழக்கம். (ஜைமூநன் என்ற பதம் மிதுநத்திலொருவனை பர்த்தாவைச் சொல்வதாய் மைத்துனனென வழங்கப்படுகிறது. ஆகையால் இதற்குப் பர்த்தா என்றே பொருள் என்னலாமாகிலும் கொள்க).

கைத்தலம் பற்ற. ஆசையில்லாதவரும், ஆசையிருந்தும் வெட்கப்பட்ட வரும் விரல்களை விரல்களால் பிடிப்பர். அவ்வாறின்றி உள்ளங்கையோடு உள் ளங்கை கலந்திருக்கும்படி பற்றின னென்றதாம். இதுவே இராமாயணத்தில், 'பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா' என்ற விடத்தில் 'பீடித:' என்ற சொல்லின் கருத்தா கும். கையைக் கையால் பிடிப்பதினால், 'இனி நாம் தர்மம் செய்வதெல்லாம் சேர்ந்தே செய்யவேண்டும்; அதன் பலனையும் சேர்ந்தே புஜிக்க வேண்டு' மென வறிவிக்கிறபடி யாம். செய்யவும் புஜிக்கவும் கை தானே முக்கியமான கருவி. 'பாணிக்ரஹணாத் து ஸஹத்வம் கர்மஸு ததா புண்யபலேஷு' என்ற

சொல்லமைப்பையும் காண்க. 'ஸஹதர்மசரீ தவ, பாணிம் க்ருண்ஹீஷ்வ' என்றது ஆதிகாவ்யம். ஸஹதர்மசரீ = கூடவே தர்மங்களைச் செய்பவள் 'அர = ஸங்கினெ' என்றதைக் கொண்டு தர்மபலனைக் கூடவே யிருந்து புஜிக்கின்றவள் என்ற பொருளும் கருத்திலிருக்கிறது போலும். மாங்கல்யஸூத்ரதாரணமென்பது பண்டைக் காலத்திலிருந்து பழக்க வழக்கத்திலுள்ளதே. அது விவாஹமானதற்கு அறிகுறியாவது மாத்திரம். பாணிக்ரஹணமே வேத ஸ்ம்ருதி இதிஹாஸ தர்மசாஸ்திரங்களிலே பணிக்கப்பட்டதாய் ப்ரதானமாகும். (6)

இங்கு, பாணிக்ரஹணத்திற்கு முன்னுகவே தந்தை கன்னிகையைத் தானம் செய்வதும், ஸூத்ரத்திற் சொல்லாமற் போனாலும், 'ஆச்சாத்ய நூதநம் வாஸோ வரோ மாங்கள்யஸூத்ரகம். ஸுவர்ணமணிஸம்யுக்தம் பத்நீயாத் கந்யகாகளே' என்கிற வசனத்தைக்கொண்டு மாங்கள்யதாரணம் செய்வதும் சொல்லப்பட்டதாகக் கொள்ளவேண்டும். இந்த வசனத்திலே, 'ஆச்சாத்ய' என்று வரன் தான் வஸ்திரத்தை உடுத்துக்கொள்வதைவிடப் பெண்ணுக்குக் கூறை யுடுத்துவிப்பதைச் சொல்வது சாலப்பொருந்தும். வரன் உடுத்துவிப்பதாக விருத்தல் பற்றியே வரனின் உடன்பிறந்தாளைக் கொண்டு உடுத்துவதாம். இவை யெல்லாம் மத்தளம் கொட்டவரிசங்கம் நின்றூதும்போது நடந்தவைகள். எல்லாம் நடக்கும் வரையில் நின்றூதினதைக் குறிக்கவே நின்று என வருளினது. இத் தருணத்திலே பெரியோர்களைக் கொண்டு நல்ல வேதமந்திரங்களை ஓதுவிப்பதும் அப்போது ஆசாரஸித்தமாயிராநின்றதாம். பாணிக்ரஹணத்தா லேற்பட்ட ஸம்பந்தம் போக்க முடியாதெனத் தெளியுமாறு கையைப் பிடித்துக்கொண்டே அக்னியை வலமாக்கிக்கொண்டு அக்னி ஸாக்ஷிகமாக ஏழடி நடப்பதும் ஒரு முக்கியமான சடங்காகும். இதனால் ஏழேழ் ஜன்மங்களிலும் ஏழேழ் லோகங்களிலும் எப்போதும் எங்கும் சேர்ந்து ஸுகிக்கும்படி பிரியாமல் தர்மாநுஷ்டானத்திலே ஊக்கம் பெறவேண்டுமென்று குறித்ததாகும். இராமபிரான் அக்னியை ஸாக்ஷியாக்கிக் கொண்டு ஸுக்ரீவனுேடு தோழமை கொண்டதையும் காண்க. இங்ஙனம் ஏழடி நடந்து தீ வலம் செய்வது ஏழாவது பாசுரத்தி லருளப்படுகிறது—

7. வாய்நல்லார் நல்லமறையோதி மந்திரத்தால்
பாசிலைநாணல் படுத்துப்பரிதி வைத்துக்
காய்சினமாகளிறன்னா னென்கைபற்றித்
தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன் தோழீநான். (59)

வாய் நல்லார் — தெளிவாக ஓதும்படி வாக்கின் திறமையுள்ளவராய் நற்சீலமுமுள்ளவர்கள்
நல்ல — விவாஹகாலத்திற்கேற்ற விசேஷ மங்களங்களான
மறை — வேத பாகங்களை
ஓதி — ஓதிக்கொண்டிருக்க,
மந்திரத்தால் — தான் சொல்லவேண்டும் மந்திரங்களைத் தானும் சொல்லிக்கொண்டு
பாசு நாணல் இலை — பசுமையான தூய நாணற் புற்களை
படுத்து — அக்னிக்கு நான்கு பக்கங்களிலும் பரிஸ்தரணமாகச் சேர்த்து
பரிதி — ஸமித்துக்களை

வைத்து	பரிதி தாரணத்துடன் வைத்து (அக்னியை வளர்த்தி)	என் கை பற்றி	எனது வலக்கைத்தலத்தைப் பிடித்துக்கொண்டு
காய் சினம்	—மிகுந்த கோபமுடைய	தீ வலம் செய்ய	(எழு அடி நடந்து) அக்னியை ப்ரதக்ஷிணம் செய்ததாக
மா	—பெரிய		
களிறு	—யானைக்கு		
அன்னன்	—ஸமானனான பிரான்		நான் கனா கண்டேன் தோழீ!

பாணிக்ரஹணம் ஆனபிறகு அம்மி மிதிப்பதற்கு முன்னே எழுடி நடந்து தீவலம் வருவது சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டது.

வாய்நல்லார். இவர்கள் எப் பலனை யுத்தேசித்து மந்த்ரஜபம் செய்வார்களோ, அப் பலன் உடனே கைக்கூடும்படி வாக்கிலே நன்மையைப் பெற்றவர்களும், செவ்வனே விஸ்பஷ்டமாக ஓதுகின்றவர்களும். நல்லமறையாவது. கல்யாணகாலத்திற்குரியது. பரமைகாந்தித் தன்மைக்கேற்ப தேவதாந்தரமந்த்ரங்களைக் கழிக்க நல்ல என்றது என்பர். 'பாஷ்யகாரஸம்ப்ரதாயத்திலுள்ள குலங்களெல்லாம் இன்றளவாக ஸ்வஸூத்ரோக்தமானபடியே தத்தத்தேவதா மந்த்ரங்களைக் கொண்டு விவாஹோபநயநாதிக ளநுஷ்டிக்கவும் காணாநின்றோம்' என்று ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த (ஸ்ரீ. ர. த். ஸா.) படி விவாஹத்திலே தேவதாந்தரமந்த்ரங்கள் விதிக்கப்படிருப்பதை விடமுடியாது. விதிக்கப்படாமல் அதிகப்படியாக ஆளப்படும் மந்திரங்களில் தேவதாந்தரஸம்பந்தத்தை விடலாம். ஓதி எனவிருக்க மீண்டும் மந்திரத்தால் என்றது வான் சொல்லும் மந்திரங்களைக் கருதியாம்.

பாசிலை யித்யாதி. பலவகைத் தர்பப்புற்களில் நாணலுமொருவகை. இதுவும் பூர்வாசாரத்தில் இருந்ததென்ன வேண்டும். 'ப்ராக் ஹோமாத் அக்நிம் ப்ரதக்ஷிணம் க்ர்த்வா' என்றபடி தீ வலம் செய்த பிறகே ஹோமம் செய்வதெனக் கருதி பரிதி வைத்து என இவ்வளவே யருளினது. காய்சினம். காய்தல் = கோபம் கொள்ளல் அல்லது ப்ரகாசித்தல். இங்கே கோபம் வெளிப்படையாக இருத்தலைக் குறிக்க காய்சின மென்றது. இப்படி யானைக்குக் கோபத்தைக் கூறினவாறே கண்ணனும் கோபித்திருக்கிறானெனக் கருதினதாகாது. கோபம் மூண்ட யானைக்குள்ள செருக்கு இவனுக்கிருந்ததென்பதே கொள்ளத்தக்கது. கோளரி என்றும், அதிரப்புகுத என்றும், காய்சின மாகளிறன்னன் என்றும் கல்யாண காலத்திலே மிடுக்கை மிகப்படுத்திக் கூறுவானென் எனில், புருஷலக்ஷணம் பூரணமா யிருப்பதை விளக்க என்க. அன்றி, வெகு ஸரஸமாக நடந்து கொண்டால் விவாஹகாலத்திலே வேடிக்கையாக விளையாடும் பிள்ளைகளுக்கு அவலீலையாக அண்டும்படியாய்விடு மென்றும் இங்ஙன மிருந்தான் போலும். அன்னன் என். அவன் புருஷத்தன்மைக்கேற்ப எனக்குப் பெண்தன்மையும், 'த்வயி ஷ்த்ரீத்வைகாந்தாந் ம்ரதிமபதிபாரார்த்த்யகருணாக்ஷமாதீந்' என்றவாறு விஞ்சியிருந்ததென்றபடி. கைபற்றி. கை பற்றும் போது இங்ஙனிருப்பவன் கால் பற்றும் போது இருக்கும் நிலையை மேற்பாசுரத்திலே யறிவிக்கவும் இங்கே காய்சினம் இத்யாதியாம். .... (7)

அம்மி மிதிப்பதென்பது பொரியிடுவதற்கு முன்னும் பின்னு முண்டு. முன் இருப்பதை யருளிச்செய்கிறள்—

8\. இம்மைக்கு மேழேழ்பிறவிக்கும் பற்ருவான்
நம்மை யுடையவன் நாராயணன்நம்பி
செம்மை யுடையதிருக்கையாற் ருள்பற்றி
அம்மி மிதிக்கக்கனக்கண்டேன் தோழீநான். (60)

இம்மைக்கும்	—இப் பிறவியிலும்	செம்மை உடைய	சிவப்பான
ஏழ் ஏழ் பிறவிக்கும்	ஏழேழாக வரும் எல்லாப் பிறவிகளிலும் கூட	திரு கையால்	மேன்மை பொருந்திய கையால்
பற்று ஆவான்	தானே ப்ராப்யனு யிருப்பவனும்	தாள்	—எனது அடியை
நம்மை உடையவன்	நமக்கு ஸ்வாமியும்	பற்றி	—பிடிக்க
நாராயணன்	—பாற்கடல் தேவனுமான	அம்மி மிதிக்க	நான் அம்மியை மிதித்ததாக
நம்பி	கல்யாணகுண பூர்ணன் (கண்ணன்)		நான் கனு கண்டேன் தோழீ!.

உலகில் பதிபத்னிகளாயிருப்பவர்களில் பத்னிக்குப் பதி பற்ருயிருப்பதென்பது அந்த ஜன்மத்திலே மட்டு மென்னலாம். இருவுடல்களுக்கும் ஏற்பட்ட இணைப்பே அது. ஆத்மாவைப் பற்றின ஸம்பந்தம் யாது மில்லை. எம்பெருமான் நமக்குப் பற்ருவது எல்லா ஜன்மங்களிலுமே. ஏனெனில், அவனே நம்மை யுடையவன்; நமக்கு ஸ்வாமி, வேருெருவருக்கு நாம் சேஷர்களல்லோம். அவனது தத்துவத்தைத் தெளிந்து அவனைப் பற்றிவிட்டால் எல்லா ஜன்மங்களிலும் அவன் பற்றே நமக்கிருக்கும். 'ஸூர்யஸ்யைவ து யோ பக்த: ஸப்தஜந்மாந்தரம் நர:. தஸ்யேவ து ப்ரஸாதேந ருத்ரபக்த: ப்ரஜாயதே. சங்கரஸ்ய து யோ பக்த: ஸப்தஜந்மாந்தரம் நர:. தஸ்யைவ து ப்ரஸாதேந விஷ்ணு பக்த: ப்ரஜாயதே' என்றபடி ஒவ்வொரு தேவதையினிடம் ஏழேழு சன்மங்கள் இருந்து மேற்பதம் ஏறுவதுண்டு. பாபங்களிலும் சில, ஏழு ஜன்மங்கள் எடுத்து அநுபவித்துத் தீர்க்கவேண்டுவனவாக உள. இப்படி வரும் எந்த ஜன்மமாகிலும் சரி; எம்பெருமானுடைய அநுபவமாகவே நமக்கு எல்லாம் போம். வேறு ஒன்றும் வாராது 'எற்றைக்கு மேழேழ்பிறவிக்கு முன்றன்ேடு உற்ேமே யாவோ முனக்கே நாமாட்செய்வோம்' என முன்னமே விண்ணப்பித்திருப்பது காண்க. என்றது முதலீரடிகளின் கருத்து.

பற்ருவான். இப்படி யவன் திருவடியையே நான் பற்ற விருக்க அவன் என் அடி பற்றினனென்ருல் நம்பியின் குணத்தை யெவ்வளவுதான் புகழ்ந்து முடியும். செம்மையுடைய. அவனைக் காணுமே இங்குமங்கும் திரிந்து எங்கிலும்பெடுத்துக் கடினமாயிருக்கும் என் காலைத் தனது புஷ்பஹாஸத்திற்கு மேல் மேன்மை பொருந்திய திருக்கையால் தொட்டால் அதற்குச் செம்மை நிறம் மிகவாமே. அதையும் பொறுத்து அவன் அபிமானித்துப் பிடிக்கின்ருனென மனமுருகி மொழிகின்றனள். தாள் பற்றி. வரன் மணப்பெண்ணின் கையை விடாமற் பிடித்தழைத்துப் போவது மாத்திரமேயல்லது அவள்காலைப் பிடிப்பது கூடாது. ஆகையால் அம்மி மிதி என்று சொல்லுவது மட்டுமே தகு மென்பாரு

முளர். காலை வரன் கையால் பற்றி அம்மியைத் தொடவைப்பதே வழக்கத்தி லிருப்பது. இந்த பண்டையாசார மென்பது ஆண்டாளின் ஸூக்தியினின்றும் விளங்கிற்று. ஆசாரமும் ஒரு ப்ரமாணம். ஹோமம் முதலியன செய்யும் போது கையை விட்டிருப்பது போல் காலைப் பற்றக் கையைத் தற்சமயம் விடுவதும் கூடும். இப்படி யாசாரஸித்தமான இதனைச் செய்யும்போது புருஷன் ஸ்திரீயின் காலைத் தொடுவதோ என்று வரனது பந்துக்கள் விரைந்து சொன்னாலும் கேட்காமல் பற்றும் நம்பி யிவன். 'மூர்த்தாநம் பத்யுராரோஹ' என்று எனது தலை மீதேறியிருக்கும்படி யவளைச் சொன்னீர்களே. கையால் காலைத் தொடுவது என் தகாதென்பானவன். பற்றி என்பது எச்சத்திரிபு; பற்ற என்றபடி. மிதிக்க என்பதை மிதிப்பிக்க என உரைத்துப் பற்றி யென்பதை உள்ளபடியே கொள்வது மாம். மிதிக்க. அம்மியை மிதிப்பதாவது கால்கட்டைவிரலினால் அம்மியைத் தொடுவது மாத்திரம். 'வதூ: பாஷாணம் ஸ்ப்ருசேத் ந தக்ஷிணேந பாதாங்குஷ்டேந', என்றது காண்க. .... (8)

அம்மி மிதித்தபிறகுப் பொரியிடுவதுசெய்வதைக் கண்டதாகவும் கூறுகின்றனள்—

9\. வரிசிலைவாண்முகத்தென்னைமார் தாம்வந்திட்
டெரிமுகம்பாரித்தென்னை முன்னே நிறுத்தி
அரிமுகனச்சுதன் கைம்மேலென்கைவைத்துப்
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் தோழீ நான். (61)

வரி சிலை	அழகிய வில் (போன்ற புருவத்தை) உடைய	என்னை முன்னே நிறுத்தி	அக்னியில் ஹோமம் செய்யத் தக்கவாறு எதிரில் என்னை யிருக்கச் செய்து
வாள்	—ஒளி பொருந்திய	அரி முகன்	சிங்கத்தின் முகம் போன்ற முகமுடைய
முகத்து	—முகத்தை யுடையரான	அச்சுதன்	—கண்ணனுடைய
என் ஐமார் தாம்	எனது உடன் பிறந்தார்கள்	கை மேல்	—திருக்கைகளின் மேல்
வந்திட்டு	—நெருங்கி யிருந்து	என் கை வைத்து	எனது கைகளை வைக்கச் செய்து
எரி	—அக்னிக்கு	பொரி	—நெற் பொரியை
முகம் பாரித்து	ஜ்வாலையை யுண்டாக்கி	முகந்து அட்ட	—எடுத்துச் சேர்க்க நான் கனா கண்டேன் தோழீ!

நெற்பொரிஹோமம் செய்விக்கத் தன் உடன்பிறந்தார்கள் தன் கையிலிட வந்தபோது அவர்களின் மகிழ்ச்சி யிருந்ததைக் குறிக்க வரிசிலைவாண்முகத்து என்றது. புருவத்தைச் சிலையாக ரூபித்துச் சொல்வது இயல்பானபடியாலே இங்கே முகத்திலுள்ள சிலை யென்றபோது புருவமே சிலை யெனப்படுகிறதென விளங்கும். 'கோதே குணை ரபநயந் ப்ரணதாபராதாந் ப்ரூக்ஷேப ஏவ தவ போகரஸாநுகூல:' என ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தபடி வணங்கினவர்களின் வினைகளை விலக்கவும், பகவானுக்கு போகரஸத்தை விளைவிக்கவும் வல்ல புருவம் கொண்ட கோதைப்பிராட்டியின் உடன்பிறந்தாரானமையாலே அவர்களுக்கு அப் புருவங்களின் அழகு மிகவாயிருந்தது. 'வில்லைத்தொலைத்த புருவத்தாள்' (13–10.) என்று இவளே சொல்லிக்கொண்டனளே. புருவத்தைப் பார்த்த

போதே இவர்கள் இவளுக்கு உடன்பிறந்தார்களென வரனுடைய பந்துக்களுக்கு விளங்குமாறு அதன் அமைப்பிருந்தது. **வாண்முகத்து.** எம்பெருமானை மணந்து கொள்ள இழிந்த தம் உடன்பிறந்தாளின் முயற்சி மிக நேர்த்தியாகப் பலித்தமை கண்ட தமையன்களுக்குள்ள மகிழ்ச்சியாலே முகம் மிக்க ஒளி கொண்டது. **என்னைமார்.** என்னை என்பதற்கு என் தந்தை யென்று பொருளாமெனக் கீழே (3. 5.) 'வேலைப்பிடித்தென்னைமார்களோட்டில்' என்றவிடத்திலே கூறினம். பொரியிடுவதற்குத் துணையாயிருப்பது உடன்பிறந்தாரென 'வத்வா: ஸோதர்யோ ப்ராத்ருஸுதோ வா' என்றவாறுள்ள ப்ரமாணத்திற்கேற்ப, இங்கே தமையன்மாரெனப் பொருள் கொள்க. ஆண்டாள் தன்னை யொருத்தியையே கூறுவதால் இங்கு என் ஐமார் எனப் பதப்பிரிவிற்குத் தடை யொன்றுமில்லை. ஆகவே, 'ஐமாராவார் ஆண், உடன் பிறந்தார்' என்று திருவாய்—6. 2. 7ல் ஒன்பதினாயிரப்படி முதலியவற்றிற் சொன்னபடி யிங்குப் பொருளாம். ஐ என்பதற்கு ஆசான் = தலைவன்—மூத்தோன் என்றவாறு பொருளாம். இங்கே தமையனைக் கொள்வது. இது வெறும் சொப்பனப் பேச்சு மாத்திரமே யென்னுமே இவளுக்கு உடன்பிறந்தார்கள் இருந்தனரெனக் கொள்வதும் கூடு மென்க. அம்மி மிதிப்பது போல் லாஜ (பொரி) ஹோமமும் மூன்று தரமாகையாலே மூன்று உடன்பிறந்தார்களும் உதவலா மென்று ஐமார் எனப் பன்மை போலும். பன்மை அங்குள்ள மதிப்பைக் காட்டுவதுமாம்.

வந்திட்டு என்பதற்கு வந்து எனவே பொருள் கொள்ளலாம். இடு என்பது துணைவினை. அன்றி, இட்டு எனப் பிரித்து மேலே சேர்க்கலாம். '[illegible]', '[illegible]' என்றபடி மேற்கில் ஜ்வாலை யேற்பட அதில் பொரிஹோமம் செய்யவேண்டியிருப்பதாலே அதற்குத் தக்கபடிச் சுள்ளிகளைச் சேர்ப்பது இட்டு என்றதின் பொருளென்க. இதனை விளக்கவே எரிமுகம்பாரித்து எனவும் கூறினதாம். **என்னை முன்னே நிறுத்தி.** இவள்கையின் கீழ் தன் கையை வைத்துக்கொண்டு அக்னியில் வரன் பொரிஹோமத்தை இவளைக் கொண்டு செய்வதற்குத் தக்கபடி வரனுக்கும் அக்னிக்கும் சிறிது இடையிலே இவள் இருக்கவேண்டும். அப்போது வரனுக்கும் அக்னிக்கும் சிறிது முன்னே இருந்தபடியா மெனக் கருதி முன்னே என்றது. நிறுத்தி என்றதாலே, நின்றுகொண்டே ஹோமம் செய்யும் ஸம்ப்ரதாயமுமுண்டென விளங்கும். உட்கார்ந்து ஹோமம் செய்யவேண்டுமென்பது முண்டு. நிறுத்தி அகலாமலிருக்கச்செய்து எனவுமாம்.

அரிமுகன் அச்சுதன். ந்ருஸிம்மாவதாரத்திலும் இவன் 'ஆகண்ட கண்டீரவ:' என்றபடி அரிமுகனே. அம்மி மிதிப்பது மணமகள் நீடூழி வாழ்வதற்காக. 'அச்மேவ த்வம் ஸ்திரா பவ' என்றதாதலின். லாஜஹோமம் செய்வது பதி தீர்க்காயுஸ்ஸுடன் சிறந்து விளங்க. இது அச்சுதன் என்றதாலும் குறிக்கப்பட்டது. **கைம்மேலென் கை வைத்து.** எனது அஞ்சலியை இரு பக்கங்களிலும் இரு கைகளால் பிடித்துக் கொள்ளச் செய்து. **பொரி முகந்து அட்ட.** பாத்திரத்திலிருந்து பொரியை யெடுத்து ஹோமத்திற்காக என் கையில் **என்னைமார்**

சேர்க்க வென்றபடி. அக்னியில் இவன் சேர்ப்பதை இதற்குப் பொருளாகக் கொண்டால், 'வந்திட்டு, பாரித்து நிறுத்தி, வைத்து' என்றவற்றிற்கு இங்கு இணைப்புக் கூடாது போம். முகத்தல்=எடுத்தல்; அட்டுதல்=வார்த்தல். (9)

விவாஹம் பூர்த்தியாம்போது வஸந்தமஞ்சனீர் தெளித்து மணநீராடுவதும் காணப்பெற்றதாகக் கூறுகின்றனள்—

10. குங்குமமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதிவலஞ்செய்து மணநீர்
அங்கவ னோடுமு டன்சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக்கனாக்கண்டேன் தோழீநான். (62)

குங்குமம்	—குங்குமக் குழம்பை
அப்பி	—அங்கங்களிற் பூசி
குளிர்	—குளிர்ந்த
சாந்தம்	—சந்தனக் குழம்பையும்
மட்டித்து	—(மென்மேல்) தேய்த்து
மங்கலம் வீதி	மங்களமான அலங்காரங்களுள்ள வீதியிலே
வலம் செய்து	—ப்ரதக்ஷிணமாகவே
அங்கு	—அந்த வீதியிலே
ஆனை மேல்	—யானையின் மேலேறியுள்ள

அவனோடும் உடன்	அச்சுதனோடும் என்னோடும் கூடவே
சென்று	ஊர்வலம் செய்யும் வகையில் நடந்து
அங்கு	மண நீராட வேண்டுமிடத்திலே
மண நீர்	—வஸந்த ஜலத்தாலே
மஞ்சனம் ஆட்ட	நீராட்டம் செய்விப்பதாக

நான் கனாக் கண்டேன் தோழீ!.

குங்குமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து என்பது சேஷஹோமம் வரையில் சந்தனப்பூச்சுமிராதபடி ப்ரம்மசர்ய நியமங்களோடிருந்தமையை விளக்கும். அதுவரையில் கீழே படுத்துப் பல நியமங்களுக்குட்பட்டிருந்ததாலும், இங்குமங்கும் அலைந்ததாலும், அக்னியின் அருகே இருந்து ஹோமம் செய்து வந்ததாலும் உடம்பிலேற்பட்ட உஷ்ணமெல்லாம் நீங்கவும், உள்மகிழ்ந்து குளிர்ந்திருப்பதற்காகவும் இவ்வாறு செய்வித்து நீராட்டுவதாம். மட்டித்தல்=மர்தித்தல். இரண்டாமடியில் மண நீர் என்பதை மஞ்சன மாட்ட என்றதோடு சேர்க்க. அல்லது மண நீருடன் வலம் செய்து என்னலாம். 'ஆபிஷேசநிகம் பாண்டம் சக்ரே ராம: ப்ரதக்ஷிணம்' என்கிறபடி மந்த்ரத்தால் புனிதமான மணநீரை வலம் செய்தென்னவுமாம். மணமாவது விவாஹமும் மகிழ்ச்சியுமாம். அங்கு. விவாஹத்திற்கு முன் நானில்லாமல் வாரணமாயிரம் சூழ வலம் வந்த இடத்திலே. வலம் செய்து, சென்று என்ற இரண்டுங் கூட, அப்பி, மட்டித்து, ஆட்ட என்றவற்றோடு ஸமாநகர்த்ருகமாகை பொருந்துமாகையாலே பந்துக்கள் கூடி வலம் செய்து செல்லுவதையே சொல்லும். அவனோடு முடன் என்றதாலே இவர்கள் செல்லுவதும் சொல்லிற்றாம். அவனோடு என்பதே போதுமாயிருக்க, ஓடும் என உம்மை எதற்கென்னில், என்னோடும் என்பது நன்கு விளங்க என்க. இது, 'ஓடுமவனுடன்' எனவும் ஒருவாறு குறிக்கின்றது. அதாவது—வஸந்த மஞ்சனீரை வேடிக்கையாக மேலே வாரி யிறைக்கப் பலர் வருவதும், அவர் அள்ளிச் சொரிவது தன் மேல் விழாதபடி யவன் சதிருடன் ஓடுவதும் கண்டேனென்றபடி. இனி, மஞ்சனமாட்ட என்பதோடு உடன் என்பதைச் சேர்க்க. உடன்மஞ்சனமாடுதலாவது

இருவரும் ஓரே புடவை யுடுத்து நீராடுதலென்பர். தம்பதிகள் சேர்ந்து களித்துச் சிறப்புடன் வாழ்வதற்கான அற்புதமான அபிஷேகமாக இருந்தது அம் மஞ்சன மாடலென்க. .... (10)

எம்பெருமான் மணந்து கொண்ட வரலாற்றைச் சொல்லும் இத் திருமொழி வல்லவர்க்குப் பலனை யருளிச்செய்கிறாள்—

11. ஆயனுக் காகத்தான் கண்ட கனவினை
வேயர்புகழ்வில்லி புத்தூர்க்கோன் கோதைசொல்
தூயதமிழ்மாலை யீரைந்தும் வல்லவர்
வாயும்நன்மக்களைப் பெற்றுமகிழ்வரே. (63)

வேயர்	—வேயர் குலத்தாரால்	சொல்	—சொல்ல ஏற்பட்ட
புகழ்	—புகழ்பெற்ற	தூய	—பரிசுத்தமான
வில்லி புத்தூர் கோன்	ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு ஸ்வாமியான பெரியாழ்வாரின் (புதல்வியான)	தமிழ் மாலை	—தமிழாலான பாசுரங்கள்
		ஈர் ஐந்தும்	—பத்தையும்
		வல்லவர்	—அப்யஸித்தவர்
கோதை	—கோதையானவள்	வாயும்	—பாக்யம் வாய்க்கப் பெற்ற
ஆயனுக்கு	—இடையனான கண்ணனுக்கு	நல்	—நற்குணம் நிரம்பிய
ஆக	(ஆயிருக்க) பார்யையானதாக	மக்களை	—பிள்ளைகளை
தான் கண்ட	—தானே நேரில் அனுபவித்த	பெற்று	—ஈன்று
கனவினை	—சொப்பனத்தைச்	மகிழ்வர்	—மகிழ்ந்து இருப்பர்.

ஆக=ஆகும்படி அல்லது ஆனதாக. ஆயனுக்காக இத்யாதி. வேயர் குலத்தில் தோன்றினவள் ஆயர்குலத்தானுக்கு வாய்ப்பதோ என்னுமே அவன் அவதாரமேன்மையை யறிந்து, ஜாதிகோத்ராதிகளுக்கு இடமாகாத அவனுடன் சேர்த்தியாலே தூய்மைபெற்ற என்று தமிழ்மாலையின் தூய்மையை யறிந்தோர் தூய மக்களைப் பெற்று அவர்களுடன் கூடி மகிழ்ந்திருப்பர் என்றபடி.

காமதேவனுக்கு நோன்பிட்டுத் தன்னை கண்ணன் மணம்புரிவது திண்ணமென்று திடநம்பிக்கையோடிருந்த ஆண்டாளைக் கனவில் அவன் வந்து மணந்தான். உஷைக்கு அநிருத்தன் போலே இவளுக்குக் கண்ணன் கணவனானான். கண்ணுக்குப் புலப்படு மிவ்வுலகு போலே கனவில் காண்பவை யெல்லாம் உண்மையாக அப்போது நடப்பவையே என்பது நமது ஸித்தாந்தம். சொப்பனத்தில் வேறு உடல் எடுத்துப் பலனை யனுபவிக்கிறதானாலும் அநுபவிக்கிறவனுக்கு இப் பிறப்பில் அநுபவிக்கவேண்டிய புண்ணிய பாபங்களின் பலனுக்காகவே கனா ஏற்படுவதால் அதை யிவன் உணர்ந்தும் வருவதால் எல்லாம் இவ்வுடலில் அநுபவிப்பதற்கொப்பாம். இது வேறு ஜன்மங்களுக்கும் சொப்பன ஜன்மத்திற்கு முள்ள வாசி. சொப்பனத்தில் ஏதேனும் பாபம் செய்தால் விழித்த பிறகு அதற்கு ப்ராயச்சித்தமுண்டு, மணந்தவன் பகவானானபடியாலே இவளைப் போல் அவனும் இதை யறிந்திருப்பதாலே இனி இருவரும் தங்களைப் பதிபத்நிகளாக நினைத்து நடந்துகொள்வதற்கு யாதொரு தடையுமில்லை. ஆகையாலே இவளுக்கு வேறு விவாஹம் செய்விப்பதும் இனித் தகாதென்க. தமயந்தியின் விவாஹத்திலே யவளை மணம்புரிய இந்திராதிகள் நளனைப் போல் உருவமெடுத்து வந்தார்கள். அவள் அவர்களுக்கு மாலையிட்டிருந்தால் சுயரூபத்தி

உள்ளபோதும் அவர்களுக்கு அவன் மனைவியாயிருக்கவேண்டியதே ஸ்வாபமன்றோ. அதுபோல் காண்க.

ஈரைந்தும். விவாஹத்தில் பாணிக்ரஹண மென்பது முக்கியமானது—அதற்குமுன் உள்ளதைச் சொல்வது முதல் ஐந்து, அது முதலானவற்றைச் சொல்வது மேல் ஐந்து எனக் கருதி ஐந்தைந்தாகப் பிரித்தது. இவற்றை வல்லார்க்கு ஐந்துஐந்து பிள்ளைகள் ஆணும் பெண்ணு மாகப் பிறக்கும். ஆண்டாளைப் போன்ற பெண்கள் பிறக்குமானல் ஒன்றென்பதென், பத்தும் பெண்களானாலும் பெரும்பாக்கியமே. சிறிதும் செலவில்லை. பகவானே வணங்கிநிற்பான். 'தசாஸ்யாம் புத்ராந் ஆதேஹி பதிம் ஏகாதசம் க்ருதி' என்றபடிப் பத்துப் பிள்ளைகளைப் பெற்றுப் பதியைப் பதினொராவனுக்குவதை யறிவிக்க இங்குப் பதினொன்று பாசுரங்களை அமைத்ததாம்.

இவ்வாண்டாளின் விவாஹத்தின் சிறப்பிலீடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவ குலங்களெல்லாம் மக்களின் விவாஹ காலத்திலே பச்சைக்கல்லியாண மொரு ஸமயம் வைத்துக்கொண்டு இந்த வாரணமாயிர மென்ற திருமொழியை யநுஸந்தித்துச் சீர்பாடல் பாடுவது வழக்கமா யிருக்கின்றது. ஒவ்வொரு பாசுரத்தின் முடிவிலும், 'சீர்பாடிக்களிமண்பாடப்போமே' எனவும் இங்கு வடதேசத்தார் சொல்லுவர். இச்சொல் பொருள் பொருந்துமாறு புலப்படவில்லையாகையால் ஏதோ நாளடைவில் சொல்லுவதில் பிழையேற்பட்டிருக்கிறதெனல் வேண்டுமென்று பலவிதமாகத் திருத்த முயல்வதுண்டு. 'சீர்பாடிக்களிமின் களிப்போமே' என முதலில் இருந்திருக்கு மென்பர் சிலர். 'களிமின்' எனத் திருத்தம் இருக்கட்டும், 'பாடப் போம்' என்பதை யடியோடு வேறாகத்திருத்துவதென்? பாடப்போவோம் என்றே கொள்ளலாம். பாசுரத்தைக் கூறி, 'இச் சீர்பாடிக் களிமின். ஆகவே எப்போதும் இப்படியே நாம் பாடப்போவோம்' என்கின்றனர் என ஆராயவேண்டியதாயு மிருக்கிறது. ஏதேனு மாகுக. மக்களின் விவாஹங்களிலே இப்பாசுரங்களை யோதுவித்து மரியாதை செய்தல் நமது பழைய வழக்கமாகும்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 6. வாரணமாயிரம் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானர் தேசிகன் திருவடிகளே சரணம்.

கருப்பூரம் நாறுமோ 7.

(சங்கை வினவல்)

மாதவனாலே மணம்புரியப்பெற்ற ஆண்டாள் அவன் திருப்பவள மணமும் சுவையு மனுபவிக்க விருப்புற்றாள். கீழ் மணநீர்மஞ்சன மாட்டக் கனாக் கண்டேன் தோழீ யென்றவள் அவனுடன் சுனையாடலென்ற நீராட்டம் நடந்த

னாகச் சிறிதும் தன் தோழிக்குச் சொல்லவில்லையாகையாலே அன்றைய கனு விவாஹத்தோடு நின்ற தென்னல் வேண்டும். ஆயினும் மறுநாள் கனவில் மாதவன் அதற்கு இடம் கொடுப்பானென வெதிர்பார்த்தனள். ஒன்றும் அநு பவத்திற்கு வாராமையாலே ஏங்கி யிளைத்து வாயாரப் பேசியாவது தரிக்கவேணு மென நினைத்து அதற்குப் பூர்வாங்கமான அதரபானத்திலே யாழ்ந்த ஆழி வெண்சங்கைச் சிறிது வினவித் தரித்தனள். இப்படி வினவின வகையைச் சொல்வது மேற்றிருமொழி—

1. கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ.
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக்கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே! (64)

ஆழி வெண் } ஆழ்ந்தும் வெளுத்து மிருக்கிற
சங்கே —ஸ்ரீ பாஞ்சசன்னியமே! (உன்னை)
கருப்பூரம் —'பச்சைக்' கற்பூரமானது
நாறுமோ —இம் மணமுள்ளதோ, (அல்லது)
கமலப்பூ —தாமரைப்பூவானது
நாறுமோ —இம்மணமுள்ளதோ,
திரு —இம்மேன்மையுடையதும்,
பவளம் செம் – பவளம்போல் சிவந்ததுமான
வாய் தான் —(அவனுடைய) அதரமொன்றே
தித்திருக்குமோ } இனிப்பென்ற ரஸமுள்ளதோ. வேறு வஸ்துவும் தித்திக்குமோ என்று—
மருப்பு —(குவலயாபீடத்தின்) தந்தத்தை முறித்த
மாதவன் தன் —கண்ணபிரானுடைய
வாய் —திருவதரத்திலுள்ள
சுவை உம் —இனிப்பையும்
நாற்றம் உம்—மணத்தையும்
விருப்பு உற்று—அனுபவிக்க ஆசைப்பட்டு
கேட்கின்றேன் } வினவுகிறேன்,
சொல் —அருளிச்செய்வாயாக.

என்னை மணந்துகொண்ட எம்பெருமானின் திருப்பவளத்தைச் சுவைக்கவும் மோக்கவும் விருப்புற்றிருக்கிறேன். நேராக அதை யனுபவிக்கக் கூடாவிடில் அதற்குச் சமமானதொன்றைக் கண்டாவது தேறவேண்டு மென வாராய்கிறேன். எனக்குத் தெரியவில்லை. அதன் மணம் பச்சைக்கற்பூரத் திற்கா, அல்லது கமலப்பூவிற்கா? கற்பூரத்தின் மணத்தில் சூடு கலந்திருப்பதால் கமலப்பூவின் மணம் ஒத்திருக்கிற தென்னலாம். ஆனால் குளிர்ந்த அதன் மணமும் கனத்திராது. மேலும் பூ வாடிவிட்டால் மணம் போய்விடும். ஆகக் கற்பூரமும் அங்ஙனம் நாறாது; கமலப்பூவும் நாறாது. திருப்பவளச் செவ்வாய் தான் நாற்றமுள்ளதென நினைக்கிறேன். மேலும் திருவதரம் தான் தித்திக் குமோ. அவ்வினிமைக்கு எது ஒத்திருக்கும்? மணத்தை யாராயும்போது எடுத்துக் கழிக்கவாவது இரண்டு வஸ்துக்கள் கிடைத்தன. சுவையை யாரா யும்போது ஒன்றும் எடுக்கக்கூடியதாகவே தோன்றவில்லை. தேன், கன்னல் என்றாற் போன்றவை யெல்லாம் தித்திப்பற்றவையாகவே தோன்றுகின்றன. ஆக நீ தான் எனக்கு இது விஷயம் அருளவேண்டுமென்றபடி.

முதலீரடிகளுக்கு—கருப்பூரமானது நாறுமோ, கமலப்பூவாவது நாறுமோ, அல்லது தித்திக்கும் செவ்வாய் தான் நாறுமோ சொல் எனவும், கருப்பூரமோ கமலப்பூவோ நாறுமோ? நாறாது. செவ்வாய்தான் நாறும்.

மேலும் அவை தித்திக்குமோ. அவற்றில் இனிப்பென்பதே கிடையாதே எனவும், நாறும் கருப்பூரமோ, நாறும் கமலப்பூவோ தித்திக்குமோ, செவ்வாய்தான் எனவும் பொருள் கொள்ளலாம். 'கருப்பூரம் நாறுமோ. செவ்வாயானது கற்பூரம் போல் நாற்றமுள்ளதா அல்லது, கமலப்பூ நாறுமோ கமலப்பூப்போல் நாற்றமுள்ளதா' எனவுமுரைப்பர். இப்போது போல் என்ற பதத்தைச் சேர்க்கவேண்டும். கற்பூரம் உபமானமாய், செவ்வாய் உபமேயமானதாலே செவ்வாயைக் குறைத்துக் கூறினதுமாம்.

தித்தித்திருக்குமோ. எம்பெருமானே, 'ஸர்வகந்த: ஸர்வரஸ:' என்று வேதம் ஓதுவதால் அவன் திருமேனியிலெங்கும் எல்லா மணங்களும் எல்லாச் சுவைகளுமிருக்கின்றன என்பது தெரிந்த விஷயமே. இப்படியிருக்கும் திருமேனியில் திருவதரத்திற்குத் தனிப்பட்டதொரு மணமும் சிறப்பாயிருக்கிறதென்பதை யவனுடன் மணம்புரிந்து நின்றபோதெல்லாம் உணர்ந்தேன். ஆகிலும் அது கற்பூரம்போலவும் கமலப்பூப் போலவும் முதலில் மணம் வீசி, நீண்டகால அநுபவத்தில் வேறாகவே உணரப்பெற்றது. இனிப்பை மட்டும் அநுபவிக்க எனக்கு அப்போது வாய்க்கவில்லை ஆகையால் எதையும் அதைப்போன்றதாக எடுக்கக் கூடவில்லை மணத்தின் பெருமையைக் கொண்டு தித்திப்பு இதற்கே யுள்ளதென நினைக்கிறேன் என்றபடி. இவ்வாறு மணமும், இனிப்பும் தனித்தனியே கூடக் கிடைக்காதபோது இரண்டுஞ் சேர்ந்த வஸ்து ஏது எனவும் கருத்தாம்.

மருப்போசித்த. தயிரும் பாலும் வெண்ணெயும் தடாவுடன் உண்டு அவ்விளம் வயதிலேயே மாபெரும் மதயானையின் மருப்பொசித்தவனின் திருமேனியின் வலிவுக்கேற்பத் திருவதரத்தில் ரஸமதிகமாமே. மாதவன். அந்தச் சுவையையும் மணத்தையும் அநுபவிப்போரிற் சிறந்தவள் பெரியபிராட்டியார் என நினைத்தேன். ஏனெனில், அவள் ப்ரம்மசாரியாயிருந்தபோதும் அவனை விடாதவள். ஆனாலும் பல மனைவிகள் திரண்டுள்ளபோது ஒருத்தி யெதிரில் மற்றொருத்தி அச்சுவை பெறுவதி லிழிவது அரிது. ஆனால் அவர்கள் எத்தனை பேர் இருப்பினும் அவர்கள் எதிரில் திருப்பவளத்தினுணர்ச்சியைக் கூச்சமின்றி நீயே பெறுகின்றாய். ஆகவே அவளையும் விட்டு உன்னைக் கேட்கிறேன். வாய்ச்சுவையும் நாற்றமும். முன் நாற்றத்தை முதலிற் கூறிச் சுவையைப் பிறகெடுத்தேன். சுவையைப் பற்றிச் சிறிதும் தெரியாமலிருப்பதாலே அதைப் பற்றி எனக்கு நீ முதலில் சொல்லவேண்டு மெனக் கருதி யிப்போது சுவையை முன்னதாக எடுத்தேன். விருப்புற்று. ஒன்றையே நன்கு சொல்லமாட்டாதவனை இரண்டையும் கேட்கின்றாயே யென்னவேண்டா. எனக்குள்ள விருப்பத்தாலே இரண்டையும் கேட்கின்றேன். உன்னால் முடிந்ததை மொழியலாம். விருப்புற்று. நீ அநுபவிக்கின்றாயே, எனக்கில்லையே யென அசூயை யில்லை. நானு மநுபவிக்கவேண்டுமென்கிற விருப்பத்தாலும், அநுபவிக்க பாக்கியம் பெற்ற உன்னிடத்தில் கௌரவத்தினாலேற்பட்ட விருப்பத்தாலும் கேட்கின்றேன். நீயும் விருப்புற்றுச் சொல். சொல். சொல்லும் சக்தி யுனக்கே யுள்ளது. சப்தங்களுக்கெல்லாம் நீதானே மூலஸ்தானம். சப்தத்திற்கிருப்பிட

மான பஞ்சபூதங்களுக்கும் முதலான சப்ததந்மாத்ர மென்ற தத்துவத்திற்கும் காரணமான அஹங்காரதத்துவத்திற்கு நீதானே அபிமானிதேவதை. உன்னுடைய ஸ்பர்சத்தைத் தன் கதுப்பிற் பெற்றுதானே ஐந்து வயதிலிருந்த த்ருவனும் அழகாக எம்பெருமானை ஏத்தினது. ஆழிவெண். கம்பீரஸ்வபாவமானபடியாலே நன்கறிந்தவனே நீ. அதனாலேயே சொல்லமாட்டாயென நினைப்பதற்கில்லை. வெண்மையானவன். சுத்தமானவன். உணர்ந்ததை மறைப்பதென்ற கபடமிருக்கமாட்டாது. கேட்பவர்மேல் குற்றத்தை நினைக்கமாட்டாய். மேலும் ஆழியாய் அனுபவித்தும் திருப்தி பிறவாமே வெளுத்திருக்குமுனக்குச் சொல்லவும் சக்தியிருப்பதாலே, 'இத்தகைய வஸ்துவை இவ்வாறெல்லாம் அநுபவித்தேன். மேன்மேல் பெறப் பாக்கியம் பெற்றிலேனே' எனவாவது சொல்லலாமே. அப்படிச் சொன்னாலும் எனக்குப் போதுமென்றபடி. சங்கே. திருவதரத்தின்மேல் சங்கை வைத்து எம்பெருமான் போர்க்களத்தில் பகைவர் அழிய ஊதுவது போல், தன்னைச் சார்ந்தார் தன்னிடம் வந்து சேருவதற்கும் இனிமையாக ஊதுவதுண்டு. ஆகவே எல்லாக் காலங்களிலு மவனை விட்டுப் பிரிவதில்லை. ஆனிரை மேய்க்கும்போதும் அவற்றையழைக்கவும் அவ்வவ்விட மனுப்பவும் இவன் சங்கையே ஊதுவது. அவன் திருமேனியிலுள்ள மற்ற ஆயுதங்களோ, பூஷணங்களோ இதைப் போல் எப்போது மிருப்பவையு மல்ல; திருப்பவளத்தைத் தொட்டவையு மல்ல. ஆகச் சங்கையே யிவள் வினவினள். இதன் பெருமையைப் பலவாறு மேற்பாசுரங்களிற் கூறவும் போகின்றாள். மேலும், 'பாலன்னவண்ணத்துன் பாஞ்சசன்னியமே போல்வன சங்கங்கள் என்று இவள் திருப்பாவையில் கேட்டுப் பெற்றிருப்பதாலே இவள்கையில் அவன் சங்கு இருக்கின்றது. அதனை யிவள், 'ஸ்ரீபாஞ்சன்னியமே!'' என விளித்துக் கேட்க வியன்றாள். அவன் கரிய திருமேனிக்கு வெண்சங்கினாலழகு அதிகமாகிறமையாலும், சொன்மாலை தொடுக்கு மிவளுக்குச் சொல்லை யளிக்கும் சங்கின் மீது மதிப்பு மிகவாயிருப்பதாலும் சங்கையே வினவினள். (1)

ஆழிவெண் சங்கே என்றபோது ஆழி யென்ற கடலில் சங்கு பிறந்தது நினைவுற, மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும் நீடுற்றுப் பெற விரும்பி நீ பிறந்த வகையையும் உன் பெருமையையும் நோக்கி உன்னிடமே நானீடுபட்டேனெனக் கருதியருளுகிறாள்—

2. கடலிற்பிறந்து கருதாது, பஞ்சசன
னுடலில்வளர்ந்து போயூழியான் கைத்தலத்
திடரில் குடியேறித்தீய வசுரர்
நடலைப்படமுழங்குந் தோற்றதாய் நற்சங்கே. **(65)**

நல் சங்கே —நற்குணம் பொருந்திய சங்கமே!
கடலில் —ஸமுத்ரத்திலே
பிறந்து —தோன்றி
பஞ்ச சனன்—பஞ்சஜநனென்ற அசுரனுடைய
உடலில் —சரீரத்தினுள்
வளர்ந்து —கண்ணனுக்குத் தக்கபடி வளர்ச்சிபெற்று

போய்	—இத்தகைய துஷ்டஸங்கத்தை விட்டு விலகி	தீய	—கொடிய
ஊழியான்	—ப்ரளயத்திலு மிருக்கும் பெருமானுடைய	அசுரர்	—அசுராம்சரான துர்போதனரின்
கை தலம் திடரில்	உள்ளங்கையாகிற உயர்ந்த இடத்திலே	நடலை	—துன்பம்
குடி ஏறி	—நித்யவாஸம் செய்து கொண்டு	பட	—அனுபவிக்கும்படி
		முழக்கும்	—ஒலியுடன் கூடின
		தோற்றத்தாய்-தோற்ற முடையாய்.	

கண்ணபிரான் ஸாந்தீபினிமுனிவரிடம் வித்யைகளை யெல்லாம் கற்ற பிறகு, கடலில் மூழ்கிப்போன குழந்தையைத் திரும்பவும் பெற குரு வாசைப்பட்டிருப்பதை யுணர்ந்து குருதக்ஷிணையாக அதனை யளிக்க முடிவுசெய்து கடலைக் கேட்க, அது பஞ்சசனனைக் காண்பிக்க, அவனை ஸம்ஹரித்து அவனிடமிருந்த சங்கத்தைப் பறித்துத் தனக்காகக் கொண்டு, அவன்மூலம் உயிரிழந்த குழந்தையை யமபுரம் சென்று அங்கே நோக்கி, ஆங்கு அவன் ஆராதித்து அக் குழந்தையை அர்ப்பணம் செய்ய, கொண்டுவந்து குருவினிடம் அளித்தாரென்ற வரலாற்றிலே சங்கம் கிடைத்ததும் சேர்ந்துகிடக்கும். கருதாது. பகவான் நம்மைப் பெறுமாறு செய்துகொள்ளவேண்டுமென்பதையே நோக்காகக் கொண்டு அஸுரர்களுக்கிருப்பிடமாயும், பாதாளம் புகுவிப்பதாயும், இராமபிரானுக்கு உதவ முன்வாராததுமான உப்புக்கடலிலே பிறக்கிறோமே என்றோ, அசுரனான பஞ்சசனன் வாயில் அகப்படுகிறோமே யென்றோ ஒன்றையும் கருதாமல் எங்கிருந்தாலும் நம் நற்குணத்திற்கு மாறுதல் வாராதென வுறுதி கொண்டவனென அதைப் புகழ்ந்தபடி. எனவே நற்சங்கே என்றனள். 'நீ பிறந்ததெங்கே, வளர்ந்ததெங்கே? இப்படியிருந்தும் உனக்கு ஊழியான் கைத்தலம் கிடைத்தது பெரும்பாக்யம் பிறந்து வளர்ந்த இடத்திற்குத் தக்கபடியிருந்துவிடக் கருதாமலிருந்தாயே. இஃதொரு பெருங் குண மெனவுமுரைப்பர். திடரில். இவ்வளவுயர்ந்த இடத்தில் நின்றாய். ஊழியிலுள்ள பெருங்கடலில் கூட மூழ்கிப்போகாதபடி மிகவுயர்ந்த இடத்திலே நின்ற உனக்கு இனி இக்கடல் போன்றவிடத்தில் விழ நேரிடுவதேது?

இங்கே சங்குக்கு பகவத்ஸாம்யத்தைச் சொல்வதிலும் நோக்கெனப் பூர்வர் உரைப்பர். கண்ணன் கஞ்சனின் சிறைக்கடலிலே பிறந்து, அசுரனான கம்ஸனுக்கு உடல் போல் அடங்கியிருந்த ஆய்ப்பாடியிலே வளர்ந்து, பிறகு மதுரைக்குப் போய் நடுக்கடலில் ஒரு மேட்டைக் கற்பித்து அங்கே துவரையில் குடியேறினான். அப்படியே ஓரிடம் பிறந்து ஓரிடம் வளர்ந்து ஓரிடம் குடியேறின பாஞ்சன்னியத்தினிடம், இது தனக்குச் சமமானதென்று அவனுக்குப் பரிவு அதிக மென அவர்களின் கருத்து.

இப்படியிருப்பதால் தான் நம்மிடமும் அவன் பரிவு கொள்ளுகிறான் போலும். நாமும் தாரக போஷக போக்யங்களான மூன்று ரஹஸ்யங்களை யாதரிக்கின்றோம். திருமந்திரத்திலே பிறந்து சரமரஹஸ்யத்திலே வளர்ந்து த்வயத்திலே குடியேறி நிலைக்கிறோம். அதாவது—திருமந்திரத்திலிருந்து நமக்கு சேஷத்வஜ்ஞானம் பிறப்பதால் நாம் பிறப்பது அங்கே. அது நமக்கு ஸத்தைக்

குக் காரணமாய் தாரகமாயிற்று. அதிகாரியான நம்மைப் பார்த்து, 'நீ லகுவான உபாயத்தை யநுஷ்டிக்கக் கடவாய். உன்னைக் காக்கிறேன்' என எம்பெருமான் விதித்தது நம்மை ஹிதத்திலே மூட்டுவதாலே போஷகமாயிற்று சரம ரஹஸ்யம். இப் போஷணமே வளர்ச்சி. பிறகு த்வயத்தைக் கொண்டு, 'த்வய மர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா' என்றபடி அதன் பொருளிலேயே எல்லாக்காலமு மீடுபட்டிருப்பதால் த்வயத்திலே குடியேறியுள்ளோம். இப்படிப்பட்ட நம்மை, வெவ்வேறிடத்தில் பிறப்பு, வளர்ப்பு, குடியிருப்புக்களைக் கொண்டு, இப்போதே தனக்கு ஸமமாக நினைத்து, 'இதம் ஜ்ஞானமுபாச்ரித்ய மம ஸாதர்ம்ய மாகதா:. ஸர்க்கேऽபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்தி ச' என்றபடியும் செய்து காக்கிறான் கீதாசார்யன்.

இங்கே ஓர் ஐதிஹ்யத்தை ப்ரஸங்கிக்கின்றவராய் பெரியவாச்சான் பிள்ளை, 'நஞ்சீயர் ஸந்யஸித்தருளின காலத்திலே அநந்தாழ்வான் கண்டு—'ஒரு பூவைச் சூடி வெற்றிலையைத் தின்று சந்தனத்தைப் பூசிப் போராநிற்கச் செய்தே எம்பெருமானே ரக்ஷக னென்றிருந்தால் பரமபதத்தினின்றும் இழியத்தள்ளுவர்களோ' என வெறுத்ததாக முதலிற் கூறி, 'திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைகநிஷ்டனாவது' என்ற வருளிச்செயலையு மெடுத்துள்ளார். நஞ்சீயர் தம் த்வயைகநிஷ்டைக்கு விரோதம் வாராமைக்காகவே ஸந்யஸித்திருக்கலாம். இவ்வருளிச்செயலும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலே திருமந்த்ராதிகாரத்தி லிடையிலே அநுவாதம் செய்து உரைக்கப் பட்டிருக்கிறது. பாசுரத்தில் மூன்று இடங்களைச் சொல்லியிருப்பதற்கேற்பத் திருமந்த்ராதிகாரத்தில் தொடக்கத்திலருளிச்செய்தபடி தாரகபோஷகபோக்யங்களை யெடுத்துப் பாசுரத்திற் சொன்னதோடு சேர்த்து அமைக்க நமக்கு இவ்வரலாற்றின் பிரசங்க முதவிற்று.

தோற்றத்தாய் என்பதையும் விளிச்சொல்லாக்கி இப் பாசுரத்தை முன் பாசுரத்தில் 'கேட்கின்றேன் சொல்' என்றதோடு பிணைக்கலாம். 4-வது பாசுரம் முதல் வேறு வாக்கிய மென்பது ஸ்பஷ்டமாகையால் அது போல் இங்கும் பிரித்தே யுரைக்கதென வறிக. .... (2)

ஊழியான்கைத்தலத்தில் நீ ஏறிநின்றது உலகத்திற்கெல்லாம் ஆனந்தத்தை விளைவிக்கின்றதாயிற்றென ஓர் உவமை யிட்டு வெளியிடுகிறாள்—

3. தடவரையின்மீதே சரற்காலசந்திரன்
இடையுவாவில் வந்தெழுந்தாலேபோல்நீயும்
வடமதுரையார்மன்னன் வாசுதேவன்கையில்
குடியேறிவீற்றிருந்தாய் கோலப்பெருஞ்சங்கே. (66)

கோலம் பெரு சங்கே	அழகிய பெரிய சங்கமே! நீயும்	இடை உவாவில் வந்து	பூர்ணிமையில் கடலினின்று கிளர்ந்து
சரத் கால சந்திரன்	சரத்ருதுவிலுள்ள சந்திரனவன்	தட வரையின் மீதே	உயர்ந்த உதயகிரியின் மேலே

எழுந்தால் போல்	எறியிருந்தால் இருப்பது போல்	வாசுதேவன்	—கண்ணனுடைய
வட மதுரையார் மன்னன்	வட மதுரையி லுள்ளாருக்கு அரசனை	கையில்	—திருக்கையிலே
		குடி ஏறி	—எறி நித்யவாஸம் பெற்று
		வீற்று	—உட்கார்ந்து
		இருந்தாய்	—வத்தையைப் பெற்றாய்.

மரங்களும் மேகங்களும் சூழ்ந்து நீலமாயிருக்கும் உதயமலையின் உச்சியில் கடலினின்று கிளர்ந்துவந்துதித்த சரத்கால பூர்ணிமைச் சந்திரன் போலே கண்ணன் திருக்கைத்தலத்திலே நீ விளங்குகின்றாய். உதயமலைக்கு வாராமே உள்ளே கடலில் கிடந்தபோது சந்திரனுக்கேது பெருமை? நீயும் கடலையும் பஞ்சசனனையும் விட்டு இங்குச் சேர்ந்ததால் இவ்வளவு பெருமையைப் பெற்றாய். அழகிய வஸ்துவுக்கு அதற்குத் தக்க இடம் வாய்க்காதபோது பெருமை ஏது? உதயகிரியில் சந்திரன் உதித்தால் உலகில் யாவரும் கண்டுவக்கின்றனர். ஓஷதிகளும் வளர்கின்றன. அது போல் உன்னையும் உன் ஒலியையும் உணர்ந்து உலகம் களிக்கின்றது. எம்பெருமானை விட்டுப் பிரிந்த எனக்கும் நீ சரத்கால சந்திரனைப் போலவே யிருக்கப்போகிறாயோ, அல்லது கேட்டதற்கு மறுமொழி கூறி யருள்வாயோ; அறியேனென்றபடி.

இடையுவாவில். சதுர்தசிக்கும் பிரதமைக்கும் இடையிலுள்ள பௌர்ணமி யென்பர் சிலர். உவாவின் இடையில் எனவுமுரைப்பர், உவா என்று அமாவாஸ்யைக்கும் பூர்ணிமைக்கும் பெயரானபடியாலே அமாவாஸ்யையைத் தள்ளுவதற்காக இடையுவா என்றது. அமாவாஸ்யைக்குப் பிறகு மறு அமாவாஸ்யை வரை ஒரு மாதமாகும் சாந்திரமானத்திலே மாதக்கோடியில் வரும் உவா அமாவாஸ்யை, மாதத்தின் இடையில் வரும் உவா பூர்ணிமையாம். ஆக இடையுவாவாவது பூர்ணிமை யென வறிக. வாசுதேவன். இச்சொல் பரவாசுதேவன், வசுதேவபுத்ர னென இருவகைப் பொருள் பெறும். .... (3)

எம்பெருமான் திருக்கையில் குடியேறினதால் அவனது திருச்செவிக் கருகிலாய யெனப் பெருமையை மற்றொருபடி விளக்குவது மேற் பாசுரம்—

4. சந்திரமண்டலம் போல்தாமோதரன் கையில்
அந்தரமொன்றின்றி யேறி யவன் சேவியில்
மந்திரங்கோள்வாயே போலும்வலம்புரியே
இந்திரனுமுன்னோடு செல்வத்துக்கேலானே. (67)

வலம்புரியே	—வலம்புரிசங்கே!	அவன் செவியில்	கண்ணபிரானின் திருச்செவியிலே
தாமோதரன்	—கண்ணனுடைய	மந்திரம்	—ரஹஸ்யமான பேச்சை
கையிலே	—திருக்கையிலே	கொள்வாய் ஏ போலும்.	நீ கேட்டுகின்றாயென்றே நினைக்கின்றேன்.
சந்திரமண்டலம்போல்	(உதயகிரியிற்) சந்திர மண்டலம்போலே	இந்திரன் உம்	—தேவேந்திரனும்
ஏறி	—சேர்ந்திருந்து	செல்வத்துக்கு	—பாக்ய விஷயத்திலே
அந்தரம் ஒன்று இன்றி	ஒருவிதமாகவும் விச்சேதம் இராமல் (இடைவிடாமல்)	உன்னோடு ஒலான்	உனக்குச் சமனாகமாட்டான்.

தாமோதரன். கோகுலத்திலே அவன் வெண்ணெய் திருடி வயிறு நிறைய வுண்டுவந்தபோது பலகால் வயிற்றில் கட்டுண்டு யசோதையினிடம் தன் மேன்மை நீர்மைகளைக் காண்பித்துத் தாமோதர னெனப்பெயர் பெற்றானே, அப்போது அவன் திருக்கையிலே பால் தயிர்களிலிருந்து எடுத்த அமுதமான வெண்ணெயை யுருட்டிச் சந்திரமண்டலம் போலே வைத்திருந்ததுண்டு. அவன் மதுரைக்கு வந்த பிறகு நீயே யெப்போதும் சந்திரமண்டலம் போலே விளங்கினாய். நீ திருப்பவளத்திற் சேருவது போல் திருச்செவிக்கும் சேர்ந்தவனாயிராநின்றாய். நீ வலம்புரிசங்க மானதாலே உன்னுள்ளே எப்போதும் ஒருவித வோசை யிருந்தபடியாம். அந்த வோசையானது கண்ணன் திருப்பவளத்தில் வைத்து ஊதினவண்ணமிருந்ததா லேற்பட்டதா, உனக்கு இயற்கையிலிருப்பதா என்று நினைக்கும்படி யிருப்பதோடு, ஆராயுமளவில் நீ அவனிடம் இரஹஸ்யமாய்ப் பேசுவதாலுண்டான ஓசை யென்றே நான் நினைக்கின்றேன். என்ன சொல்லுகிறாய் என்பது மட்டும் நன்கு விளங்கவில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்திருந்தால் சந்திரன் அவர்களுக்குக் களிப்பை விளைப்பான். என்னை விட்டுப் பிரிந்த கண்ணனுக்குச் சந்திரனால் தாபம் தானே எனக்குப் போலுண்டாகும். ஆகையா லொருக்கால் உன்னைச் சந்திரனென நினைத்து அவன் விடுவானோ என்று நீயே நினைத்து அவன் திருச்செவியிலே, 'நான் சந்திரனல்லன், உனது சங்கமே' என்று சொல்லிக்கொள்ளுகிறாய் போலும். 'அப்படி யுமக்கு என்னைக் கண்டால் சந்திரனைக் கண்டாற்போலே தாபமுண்டாவதானால் அதற்காக என்னை யேன் விடவேண்டும்?, யாவளொருத்தியைப் பிரிந்திருப்பதால் இந்தத் தாபமோ, அவளுடன் சேர்ந்துவிடலாமே. ஸத்யஸங்கற்பனான நீர் நினைத்தால் சேர்வதற்குத் தடை யென்ன' என்றும் எனக்காக மந்திரிப்பாய்போலும். உலகக்ஷேமத்திற்காக எந்தெந்த ஸமயத்திலே என்னென்ன செய்யவேண்டியதாகுமோ, அதையெல்லாம் கூட மந்திரிக்கிறாய் போலும். அங்கே மந்திரம் கொள்ளும் நீ ஒரு ஸமயமாவது என் செவிக்கு ஸமீபம் வந்து அவன் திருப்பவளத்தின் சுவை நாற்றங்களைச் சொல்லாநின்று மந்திரம் கொண்டால் எனக்கும் பாக்கியமாமே.

அந்தரம். இங்ஙனமே வடசொல் உண்டு. ஆகையால் அந்தராயபதத்தின் சிதைவென்ன வேண்டாம்.

இந்திரனுமுன்னோடு செல்வத்துக்சேலானே. இந்திரனுக்கு மேம்பட்ட தேவதைகள் பலர் இருக்க இந்திரனைச் சொல்வானேன்னில், மழை பெய்விப்பது இந்திரனே என்று நினைத்து அவனையே கொண்டாடுவர் இடையர். ஆண்டாளும் தன்னை இடைச்சிகளைப் போல் நினைத்திருப்பதால் அவர்களைப் போல் இந்திரனைப் புகழ்வது. அல்லது பெரியாழ்வாரின் திருமகளானதாலே இந்திரனென்று எம்பெருமானையே கருதுகின்றன ளென்னலாம் என்பர் முன்னோர். இங்கே இந்திரனென்கிற சொல் எம்பெருமானைச் சொல்வது வேதாந்த சாஸ்திரத்திலே இந்திரப்ராணாதிகரணத்திலே விசதமாகக் காணக்கிடக்கு மென்பர் சிலர். அந்த அதிகரணத்திலே, இந்திரன் ப்ரதர்தனனுக்கு உப

தேசித்தபோது சொன்ன அஸ்மச்சப்தத்திற்கும் ப்ராண சப்தத்திற்கும் பரமாத்மாவே பொருள் என்பதே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதே யல்லது இந்திரபதம் எம்பெருமானைச் சொல்லுகிற தென்பது ஸ்தாபிக்கப்படவில்லை. ஆகையாலும், இந்திரனுக்கு அந்தர்யாமியாக எம்பெருமானைச் சொல்வதே அந்த அதிகரணத்திலுள்ளதாகையாலும் 'இதி வாரஸ்யெஷுயெ-உ' என இந்திர பதத்தின் அமைப்புக்கு அங்கே அவகாச மில்லை. 'இந்திர ப்ராணாதிசப்தங்கள் பகவத் வாசகங்கள்' என்ற பெரியவாச்சான்பிள்ளையின் பாசுரத்தை 'இந்த்ரோ மாயாபி:' இத்யாதி விஷயமாகக்கொண்டு நிர்வஹிக்க வேண்டும். மேலும் பகவானின் செவியில் மந்திரம் கொள்ளும் பாக்கிய முனக்கே யுள்ளது; பகவானுக்குக் கூட இல்லை யென வுரைத்தால் இது பொருந்துவதாயு மில்லை.

ஆகையால் இந்திரனையே கொண்டு கருத்துரைப்பதுதான் யுக்தம் அதற்காக இடைச்சியின் நிலைக்குப் போகவேண்டா. ப்ரம்மாதிகளான தேவர்கள் மேம்பட்டிருந்தாலும் இந்திரனுக்கு ஒரு விதத்தில் சிறப்புண்டு. மூவுலகுக்கும் அரசனாய் அஸுரர்களை வென்று விளங்குவது இவனுக்கே யுள்ள தன்றோ, ஒருதரமிருந்து ஒழிந்த ஐச்வரியத்தை மீண்டும் பெரியபிராட்டியாரின் அனுக்ரஹத்தாலே பெற்றது இவனே. மேலும் எம்பெருமான் உபேந்திரனாயிருப்பதால் இந்திரன் இவனது செவியில் அஸுரரை ஜெயிக்க சில மந்திரமிடுவது உண்டு. அவனுக்கும் இப்படி அந்தர மின்றி மந்திரம் கொள்ளும் பாக்யம் கிடையாது. அவன் சில காலம் விரோதப்பட்டு விலகியு மிருப்பான். திருக்கையில் வைத்துக் காப்பதென்பதையும் அவன் திறத்திற் கண்டிலோம் என்றவாறு கருத்தாகுக. முன் திருமொழியிலும், 'இந்திரனுள்ளிட்ட தேவர் குழா' மெல்லாம் என்று இந்திரனைச் சொன்னது காண்க. சங்கே! நீ இந்திரனுக்கு மேல் மந்திரம் செய்கிறாய், வாயமுதமனுபவிப்பதில் விரோதிகளை வென்று ஸாம்ராஜ்யம் பெறுவதற்கு?

அர்ச்சையில்போல் திருக்கையிலுள்ள சங்கம் திருச்செவிக்கு மிகவும் நெருங்கியிருப்பதாலே 'மந்திரம் கொள்வாயே போலும்' என உதப்ரேக்ஷையாம். ... ... (4)

திருக்கையில் ஏறுவதும் திருச்செவிக்கு நெருங்கியிருப்பது மிருக்கட்டும். திருப்பவளவமுத முண்கின்றதை நினைக்க என்ன பாக்கிய மென்று வியக்கவேண்டியதா யிருக்கின்றதென்கிறாள்—

5. உன்னோடுடனே யொருகடலில்வாழ்வாரை
இன்னாரினையாரென்றெண்ணுவாரில்லைகாண்
மன்னாகிநின்ற மதுசூதன் வாயமுதம்
பன்னாளுமுண்கின்றாய் பாஞ்சசன்னியமே. (68)

பாஞ்சன்னியமே	பஞ்சஜனனைச் சேர்ந்த சங்கே!
ஒரு கடலில்	—ஒரே ஸமுத்ரத்தில்
உன்னோடு	—உன்னுடன்
உடன் வாழ்வாரை	கூட வாழ்ந்தவரைக் கூட

இன்னார் —இன்ன ஸ்வரூபமுடையர்கள் இவர்கள்,
இன்னையார்—இத்தன்மையர் (இக்குணமுள்ளவர்)
என்று —என்றவாறு
எண்ணுவார்—நினைக்கின்றவர்கள்
இல்லைகாண் —உலகினிலில்லை.
நீயோ,
மன் ஆகி நின்ற } ஸர்வஸ்வாமியாய் நின்ற
மதுசூதன் —கண்ணனின்
வாய் அமுதம்—திருப்பவளவமுதை
பல் நாள் உம்—எப்போதும்
உண்கின்றாய்—உண்டுவருகிறாய்.

கடலிற் பள்ளிகொண்டவனும் குணக்கடலும் கடல்வண்ணனுமான கண்ணனுக்குக் கடலிற் பிறந்தாயென்று உன்மேல் அபிமானமென்றால், அது உண்மையன்று. நீ கடலில் இருந்தபோது உன்னுடன் இருந்த சராசரங்களிலே உயர்ந்த முறையிலே வாழ்க்கையை நடத்திய பல ப்ரமுகர்கள் கூட இருந்தனர். யாரையாவது ஸ்வரூபத்திலாவது ஸ்வபாவத்திலாவது புகழ்ந்த துண்டோ? எம்பெருமான் இருக்கட்டும். கீழ்ப்பட்டவரிலாவது சில பெரியோர் யாரிடமாவது மதிப்பு வைத்ததுண்டோ? என்ன உனது பாக்கியம்? எவ்வுலகுக்கும் மன்னன எம்பெருமானே மதுவைக் கொன்றாற்போல் பஞ்சஜனனைக் கொன்று உன்னைக் கைக்கொண்டான். அவ்வளவு மட்டுமோ. தன் வாயமுதத்தையே தந்துன்னை உய்விக்கிறான். அதனால் உன்னை நான் அதைப் பற்றிக் கேட்கிறேன். இம் மேன்மையைக் கண்டு தான், இன்னான் இனையானென்று ஆழிவெண்சங்கான உனது சுரூபஸ்வபாவங்களை நான் வர்ணித்து வருவதென்றபடி. இன்னாரினியார் என்ற பாடமாகில் பகைவரும் சிநேகருமென்ற பொருளைக் கொள்க. தேவிகளுக்குப் பகைவனும் எம்பெருமானுக்கு இனியனுமானாய் நீ. இப்படி யாருமில ரென்றபடி. பாஞ்ச சன்னியமே. கடலிற் பிறந்த பெருமையினாலென்றால், அது மற்றும் சிலர்க்கும் உண்டு. பஞ்சஜனனென்ற அசுரனிடத்திலே வளர்ந்ததென்ற சிறுமை உனக்கு அதிகம். இக்கொடிய தோஷமிருந்தும் நீ பேற்றை யடைந்தாய். இத்தனை யில்லாதாரும் இப் பேறு பெறவில்லை. ஆகையால் உனக்குத் தனிச் சிறப்பே யுள்ளது. நான் பெரியாழ்வார் மகளாயினும் நீ பன்னாள் உண்ணு மமுதத்தை யொருநாள் உண்ணவும் பாக்கியமிலேன் என்று கருத்து. .... (5)

திருப்பவளவமுதுண்டது மட்டுமின்றித் திருவாய் உள்நீர்த்தமெல்லாம் உன்னுள் பாய அதனையும் உட்கொள்ளுகிறா யென்கிறாள்—

6. போய்த்தீர்த்தமாடாதே நின்றபுணர்மருதம்
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தேயேறிக்குடிகொண்டு
சேய்த்தீர்த்தமாய்நின்ற செங்கண்மால் தன்னுடைய
வாய்த்தீர்த்தம்பாய்ந்தாடவல்லாய் வலம்புரியே. (69)

வலம்புரியே —வலம்புரிசங்கமே!
நின்ற { நாரதமுனிவர் சாபத்தினால் கண்ணன் கிட்டும் வரையில் சாயாமே நின்ற
புணர் —ஒன்றோடொன்று சேர்ந்த
மருதம் —இரு மருதமரங்களை
சாய்த்து { உரலை யிழுக்கும் வியாஜத்தாலே சாயவைத்து
ஈர்த்தான் —முறித்த பிரானுடைய
கைத்தலத்தே ஏறி } திருக்கையினுள்ளேறி நின்று
குடிகொண்டு—விட்டுப்பிரியாமல் இருந்து
சேய் —கிட்டமாட்டாமல் (வெகு தூரத்திலுள்ள)

தீர்த்தமாய் நின்ற	உத்தம பவித்ரனாய்	வாய் தீர்த்தம்	திருவாயினின்று பெருகும் பெருந்தீர்த்தத்திலே
செம் தண்	—செந்தாமரைக்கண்ணனுமான	பாய்ந்து	—அவகாஹித்து
மால் தன்னுடைய	வியாமோஹமுள்ளவனுடைய	ஆட	—ஸ்நானம் செய்ய
		வல்லாய்	—வல்லமை பெற்றாய்,

போய்த் தீர்த்தமாடாதே. இதற்கு பாய்ந்தாட என்றதோடு அந்வயம். கங்காதிதீர்த்தங்கள் பாவங்களைப் போக்கவே ஏற்பட்டவைகள். ஆகவே அவை தீர்த்தங்களெனப்படுகின்றன. எவ்வளவோ பாடுபட்டு அவையுள்ள இடம் போய் நீராடுகின்றனர் எல்லோரும். சங்கமே! நீ இப்படிச் சிறிதும் கஷ்டப்படாமே எங்கும் போகாமே உட்கார்ந்தவண்ணமே உத்தமமான தீர்த்தத்திலே ஆடிவிடுகிறாய். அஹோ பாக்யம்! என்றபடி. போய் தீர்த்த மாடாதே நின்ற புணர்மருதம் என்ற சேர்த்தியால் நளகூபரன் மணிக்ரீவனென்ற இருவரும் திவ்ய தீர்த்தம் போயும் தீர்த்தமாடாதே=சாஸ்த்ர முறைப்படி ஸ்நானம் செய்யாமே தீர்த்தரான நாரதர் வரும்போதும் அம்மணமாய் ஜலக்ரீடை செய்துகொண்டு இருந்ததால் அவர்கள் மருதமாய் நின்றனர் என்ற வரலாறும் குறிக்கப்பட்டது போலும்.

வாய்த்தீர்த்தம். உலக ப்ரஸித்தமான தீர்த்தங்கள் கங்கை முதலியன. அவைகளால் சுத்தி பெற்றவனே எல்லா வினையும் போக்கும் எம்பெருமானைக் கிட்ட முடியுமாகையாலே ஸுலபமாய்க் கிட்டமுடியாத வருதல் பற்றி எம்பெருமான் சேய்த்தீர்த்தனானன். 'தீர்த்தனுலகளந்த சேவடிமேல்' இத்யாதிகளால் அவன் தீர்த்தனென்பது தெளிந்ததேயாம். 'நாபீபத்மஸ்புரணஸுபகா—தீர்க்கிகா தாவகீநா' என்ற (தயாசதகம்)படி குளிர்ந்தென்றும் தெளிந்துள்ள அந்தத் தீர்த்தத்திலே நிதானமாய் ச்ரத்தையோடிறங்கி அவகாஹனம் செய்ய வேண்டும். அங்ஙனம் அவகாஹித்தவர்களையவன் தன் செங்கண்ணாற் சிறுகச்சிறுகக் கடாக்ஷித்து வினைகளையெல்லாம் விலக்கித் தான் தீர்த்தனென்பதை யுண்மையாக்கிக் கொண்டு அவ்வித பத்தர்களிடத்திலே அழியா மோஹம் கொண்டு மால் என்ற பேரையும் பெறுகிறான். நீ அவ்விதம் தீர்த்த மொன்றுமாடாமலே சேய்த்தீர்த்தன்கைக்குச் சென்று, உன்னைக் கண்டு மாலான அவனுடைய திருமுகத்திலுள்ளதாய், அவனையணுகினவரெல்லோரும் கூட அடையமுடியாததும், பிராட்டிகளுக்கே எப்பொழுதோ பெறக்கூடியதுமான வாய்த்தீர்த்தத்தையும் பெற்றாய். சிறிது பெற்றது மட்டுமா? அதில் பாய்ந்தாடவன்றோ நீ பாக்யம் பெற்றது. எம்பெருமான் உன்னையெடுத்து ஊதும்போது அவனது அழகிய வாயிலமுத ஊறல் கலந்த காற்று உன் உடலெல்லாம் புகுந்து விடுகிறது. அதனால் திருப்பவள வமுதை யுண்பது மட்டுமின்றித் திருவாய்த்தீர்த்தவமுது முழுது முட்கொள்ளுவது உனக்கெளிதில் வாய்த்தது. இது சேய்த்தீர்த்தத்திற்கும் மேற்பட்ட தீர்த்தம். எம்பெருமானென்ற தீர்த்தத்தை நோக்கும்போது கங்காதி தீர்த்தங்கள், 'ந ஹ்யம்மயாநி தீர்த்தாநி' எனக் கழிக்கப்பட்டன. பாகவததர்சனமென்ற தீர்த்தத்தை நோக்கும்போது, 'ந தேவா ம்ருச்சிலாமயா:' என்று அவனும் கழிக்கப்பட்டான். அப்படிப்பட்ட பாகவதரும் தங்களுக்குப் பரி

ஜலங்களாம்படி அந்தப்புரத்திலுள்ள பிராட்டிகளுக்கே கிடைப்பதாலே வாய் தீர்த்தத்தின் மேன்மை வாயாற் சொல்ல முடியாததாம். அதில் ஆடின வலம் புரியே ! உன் புரியின் வலமே வலம்.

செய்தீர்த்தமென்றது எம்பெருமானுக்கே சேரும். வாய்த்தீர்த்த மென்ற விடத்தில் தீர்த்தமென்ற பத மிருப்பதாலும், அவனுடைய வாய்த்தீர்த்த மென்றதாலும் அது வெகு தூரத்திலுள்ள தீர்த்த மென்பது தெரியலாகும். .... (6)

கைத்தலத்தே யேறிக் குடிகொண்டு என்றதை விளக்குகின்றவளாய் சந்திரனைப் போன்றதாகச் சொல்லப்பட்ட அதனை அன்னம் போலவும் வர்ணிக்கின்றனள் —

7. செங்கமலநாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல்
செங்கண்கருமேனி வாசுதேவனுடைய
அங்கைத்தலமேறி யன்னவசஞ்செய்யும்
சங்கரையா உன்செல்வம் சால வழகியதே. (70)

தேன்	—பூவின் தேனை
நுகரும்	—பானம் செய்யும்
அன்னம்	—அன்னப்பட்சியானது
செம்	—சிவந்த
கமலம்	—தாமரையின்
நாள் மலர் மேல்போல்	காலத்தில் மலர்ந்த பூவின் மேலே (உறங்குவது)போல்
செம் கண்	—சிவந்த திருக்கண்களும்
கரு மேனி	—கரிய திருமேனியும் உடைய
வாசுதேவனுடைய	கண்ணனுடைய
அம் கை தலம் ஏறி	அழகிய உள்ளங்கை மேல் ஏறி யிருந்து
அன்னவசம் செய்யும்	(அன்னம் வசமாகி ஜீர்ணமாகும்படிக்கான நித்திரை கொள்ளும்
சங்கு அரையா	சங்காஜனே !
உன் செல்வம்	உனது பாக்கியமானது
சால	—மிகவும்
அழகியது	—உயர்ந்ததாம்.

இங்கே கமலமலரின் மேல் இருந்து அன்னம் மதுபானம் பண்ணுமா போலே என முதலடிக்கு உரை செய்தால் அது மேலே அந்வயம் எளிதிற் பெறாது. ஆகவே, ' தேன் நுகரும் அன்னம் மலர்மேல் போல்' என அந்வயத்தை யிசைந்தனம். அன்னவசம் என்பதற்கு உண்டதற்கீடான உறக்கமெனப் பொருளானதால் இது அன்னத்திற்கு எங்ஙன மென்பதை தெளிவிப்பதற்காகத் தேன்நுகரும் என்றது. சங்கம் வாயமுத முண்பது முன்னமே மொழியப்பட்டதாகையால் அது அன்னவசம் செய்ய வேண்டும் நிலைமையிலிருப்பது தெரிந்ததே. கமலங்கள் அடர்ந்து மலர்ந்திருக்குமிடத்திலே அன்னம் ஒரு கமலத்தி லுட்கார்ந்து மற்றொரு கமலத்திலுள்ள தேனை நுகருமா போலே யிருப்பது, சங்கம் திருக்கையின் மேலேறித் திருவதரவமுது உண்பது எனவும் கருதினதாம். அன்னவசம் செய்யும் என்று உண்ணும்பொழுது போல் உறங்கும் பொழுதும் திருக்கைத்தலத்திலேயே யிருப்பதைச் சொன்னதால் முன் குடிகொண்டு என்றது விளக்கப்பெற்றதாம். அதிகமாகப் பானம் செய்து அசையமாட்டாமே அங்கே யிருந்து அன்னவசம் செய்கிறாய். பசியுற்று எழுந்து மீண்டு முண்கிறாய். நீ அதைவிட்டகல்வது ஏது என்றபடி (7)

இவ்வளவு தோத்திரம் செய்தும் சங்கு யாதொன்றும் சொல்லாமலிருக்கவே, நான் இப்போதே மனம் புரிந்ததால் புதியவளாதல் பற்றி அலட்சியம் செய்கிறதோ வென்று பார்த்து ஆராய்ந்து, 'மற்ற ஸ்திரீகள் இத்தை நிந்திப்பது ந்யாயமே' எனவும் கருதித் தகுமாறு கூறுகின்றனள்—

8. உண்பதுசோல்லில் உலகளந்தான்வாயமுதம்
கண்படைகோள்ளில்(ளல்?) கடல்வண்ணன் கைத்தலத்தே
பெண்படையாருன்மேல் பெரும்பூசல்சாற்றுகின்றார்
பண்பலசெய்கின்றாய் பாஞ்சசன்னியமே. (71)

பாஞ்சசன்னியமே } பஞ்சஜனனென்ற அஸுரனிடம் வளர்ந்தவனே!
சொல்லில் —சொல்லப்போனால்,
உண்பது —நீ புசிப்பது
உலகளந்தான்—உலகளந்த பிரானின்
வாய் அமுதம் } திருப்பவளத்திலுள்ள அமுதமாம்.
கண்படை கொள்ளல் } நீ நித்திரை கொள்வதென்பது
கடல் வண்ணன் } கடல்போல் கறுத்த நிறமுள்ள பிரானின்
கைத்தலத்தே — உள்ளங்கையிலே யாம்.

பெண் படையார் } திரளாகக்கூடிய பெண்மணிகள்
உன் மேல் —உன் விஷயமாக
பெரும் பூசல் } பெரிதொலித்தலை (பெரும் போரை)
சாற்றுகின்றார் } உலகறியும்படி செய்கின்றனர்.
நீயும்
பண்பு அல --தகாதவற்றை
செய்கின்றாய் -செய்து வருகிறாய். (இப்படியிருக்க வேண்டாம்)

பாஞ்சசன்னியமே! நீ செய்யும் செயல்களைப் பார்க்கும்போது உனக்குச் செல்வமாய் நான் சொன்னதைக் கொண்டு உன்னைப் புகழ்வது தகாது போலாகிறது. சொல்லப் போனால் ஊணின் பெருமை சொல்லுக்கடங்காது. உலகளந்தான் வாயமுதமாயிற்றே அது. உலகளந்தானை அளவிடமுடியுமோ? இப்படியே மாபெருங்கடல் போன்றவனின் கைத்தலத்தின் பெருமையும் அளவிடக்கூடாததாம். தன் திருவடியால் உலகெல்லாம் தொட்டு அநுக்ரஹித்தவனின் வாயமுதமுண்டும், உனக்கு அந்தக் குணம் வரவில்லை. அவன் திருவடி போல் அவன்வாயமுதும் எல்லோர்க்கும் பொதுவன்றோ! எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்யதேசத்திலே வாஸம்செய்பவருக்கு நற்குணங்கள் திகழுமென்பர். அவன் திருக்கைத்தலத்தை, நித்ரை கொள்ளும்போது கூட விடாமலிருக்கின்றாய் நீ. இவ்வளவிருந்தும் பெண்கள் ஒன்றுசேர்ந்து உன்னைப் பற்றி இரையும்படி தானே நடந்துகொள்ளுகிறாய். இப்படித் தன்னலமே பெரிதாகக் கொண்டிருக்கலாமோ? எல்லோரையும் தன் கைம்மேல் வைத்து வளர்க்கும் நோக்குள்ள பிரானுக்கு ஏதோ மந்திரம் கொள்பவனாய் கைவிட்டகலாமலேயிருந்து ஒருவருக்கும் இடம் கொடுக்காமலிருக்கிறாய். இது தகாது. என்னைப் போன்றவர்க்கும் அவனது சுவை, நாற்றம் போன்றவற்றைத் தெளிவித்து அதற்காக அவனுடைய தர்சநத்திற்கு அவகாசம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் பின்வந்த இப் பெரும் சேர்க்கையும் வீணாகும்படி ப்ரபலமாக உன்னிடம் பரவிற்று உனக்குப் பிறந்து வளர்ந்த இடத்திலுள்ள கொடுமை யென்றே கூறவேண்டியிருக்கும். ஆகையால் நீ தகாதவற்றைச் செய்வது தகாதென்றதாம்.

கண்படை கோள்ளில் எனவே முன்னோர் உரையிற் காண்கிறது. நித்ரைகொள்ளுமிடத்தைச் சொல்வதானால் என வுரையாம். நித்ரைகொள்ளும்

போது எனவு மாம். இப்போது கைத்தலத்தே யென்றவிடத்தில், கண்படை கொள்ளுகின்றாய் என்றசொல் சேர்க்கப்பட வேண்டும். இங்கு, கோள்ளல் எனவே பாடம் இருந்திருக்கு மெனத் தோன்றுகிறது. உண்பது வாயமுதம், கண்படை கொள்வது கைதலத்தில் எனவுரைக்க. சோல்லி லென்பது இரண் டடிலும் சேரும். இப்போது பொருள் பொருந்தியும் ஸுகமாகப் பெறப்படு வது மாகிறது. கோள்ளில் என்றே பாடமாகில் பதவுரையிற் சொன்னது கருத் துரை யாகுக.* பெண்படை. படை சேனை. பூசல் ஒலித்தலுமாம்; யுத்தமு மாம். சாற்றுவது—ப்ரகடனம் செய்து சொல்வது. ஆகத் திரளாகக் கூடி உன்னை எதிர்த்து யுத்தம் செய்வதாக எங்கும் முழங்குகின்றனரென்றபடி. பண் பல வென்றவிடத்தில் பல பண் எனப் பிரித்தல் இசையாததால் பண்பு அல எனப் பிரிப்பர். அல= அல்லாதது என்றபடி. பல பண் செய்கின்றாய் பல கைங்கரியம் செய்கின்றாயெனப் பரிஹஸிப்பதுமாம். .... (8)

நானென்ன யாரு முண்ணக் கூடா தென்கிறேனா? கைத் தலத்திற்கு அடங்காத பெண்ணுருவங்களைக் கைத்தலத்தில் வைத்துக்கொள்ளக் கடல்வண்ண னுக்குத் தான் முடியுமோ? வேண்டுமானால் அவன் வேறு அங்கத்தில் வைத்துக் கொள்ளலாமே. பெரியபிராட்டியைத் திருமார்பிலே வைத்துக்கொள்ள வில்லையோ? மற்ற ஸ்திரீகளெல்லாம் அவளுடைய உடலின் ஓர் அம்சமாகை யால், அவளை வைத்துக்கொண்டானென்றால் அவர்களையும் வைத்துக்கொண் டதே. அவர்கள் உண்ணும்போது நானு முண்ணாமல் தானிருக்கிறேன். ஆக நான் செய்வதில் அந்யாய மேது என்ன, மேலே மொழிகின்றனள்—

9. பதினாறு மாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மதுவாயிற் கொண்டாற்போல் மாதவன்றன் வாயமுதம்
பொதுவாக வுண்பதனைப் புக்கு நீ வுண்டக்கால்
சிதையாரோ வுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே! (72)

செல்வம் —பாக்கியத்திலே
பெரு —பெருமை கொண்ட
சங்கே —பாஞ்ச சன்னியமே!
பதினாறு ஆம் ஆயிரவர் } பதினாறு ஆகும் ஆயிரங்க ளாகவான
தேவிமார் —தேவிகள்
பார்த்திருப்ப { தமக்கெப்போது ஸமய மென்று நேரில் பார்த் திருக்கும்போது,
மாதவன் தன்—திருவின் கேள்வனுடைய
வாய் அமுதம்—அதராம்ருதமென்ற

பொது ஆக உண்பதனை { அவர்களெல்லோருமே தங்க ளுக்குப் பொதுவாக விரு ப்பதென்று காலம் வருத் துண்ணப்படவேண்டு மதை
நீ புக்கு —நீ நடுவிலே புகுந்து
மது வாயில் கொண்டால் போல் } தேனை (கள்ளை) வாயில் வார்த்துக் குடிப்பது போல்
உண்டக்கால்—உண்டு வந்தால்
உன்னோடு சிதையாரோ. } அழிக்க உன்னுடன் சண் டையிடாமலிருப்பரோ?

சங்கே நீ யவன்வாயமுத முண்பதால் செல்வத்தில் பெருத்திருக்கின்றா யென்றே சொல்லவேண்டும். ஆனால் இது அந்யாயமாகச் செய்யும் செய

* இப்படி நாம் விமர்சித்ததற்கேற்ப, அரசாணிபாலை கந்தாடை கிருஷ்ணமாசாரியர் நாலாயிரப்ரபந்தப் பதிப்பில் கண்படைகோள்ளல் என்ற பாடமே நிர்விவாதமாக அமைக்கப்பட்டது கிடைத்தது.

லாகும். வாயமுத மென்பது எங்கும் கிடைக்கும் மதுவைப் போன்றதா? அதை யுண்பதற்கு உரிமை யாருக்குண்டு, தெரியாதோ? வாழ்க்கைப்பட்ட ஸ்திரீகளே அதற்குரிமையுள்ளவர். அப்படிப்பட்ட ஸ்திரீகள் அவனுக்கு ஒருத்தி, இரண்டு பேரென்றபடியாகாமல் பதினாறாயிரம் தேவிமார் இருக்கின்றனர். நரகாசுரனை வதைத்துச் சிறையினின்று மீட்டு மணந்துகொண்ட அப் பெண்மணிகள் நீங்கலாக மாதவனின் பிராட்டிகள் பெரியபிராட்டியார் முதலானோரும் பலர் உளர். இவர்களெல்லோரும் தங்களுக்குப் பொதுவானது அது என்று தெளிந்து பாகாசாரமாகக் காலவரையிட்டுண்ண ஆலோசனை செய்து பார்த்திருக்கும்போது அவர்களை அலட்சியம் செய்து அவர்கள் எதிரிலேயே அவன் வாயமுதத்தை, வழியில் மலிந்துகிடக்கும் மதுவைப் போல், உனக்கும் பொதுவாக வைத்து, உரிமை சிறிது மில்லாத நீ உறுதியுடன் புகுந்து பலாத்காரமாக, அவனவன் வாயிற்கொண்ட மது அவனவனுக்கே ஆமா போலே உட்கொண்டு உனக்கே யானதாக அதனை நினைத்து உண்டுவருகிறாய். அவர்கள் இரவில் ஸமயம் பார்த்து உண்ணவேண்டியிருப்பதை நீ அல்லும் பகலும் அசையாமல் உண்கிறாய். பகலெல்லாம் நீ உண்டுவந்தால் அது இரவில் சுரக்குமோ? கன்று காலமே புகுந்து ஊட்டினபிறகு கறவையினிடம் பால் சுரப்பது போலாகிறதே. இவ்வளவு அக்ரமம் செய்தால் யார் வாளாவிருப்பர்? எம்பெருமானிடத்தி லீடுபட்டவர்கள், 'வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்' என்றபடி முக்கியமானவரை முன்னிட்டுக்கொண்டு கூடி யனுபவிப்பது வழக்கம். அப்படி அத் தேவிமார்களின் இருப்பு. அக் குழியினில் புக வுரிமையற்ற நீ உட்புகுந்து உண்டுவந்தால் சண்டையிடுவது மட்டுமன்றி ஒருக்கால் சிதைக்கவும் வழி தேடுவார்கள். ஒழுங்காய் நடந்துகொண்டு செல்வப்பெருஞ் சங்கெனப் பேர் கொள் என்றபடி. (9)

10. பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனோடும்
வாய்ந்தபெருஞ்சுற்றமாக்கியவண்புதுவை
ஏய்ந்தபுகழ்ப் பட்டர்பிரான் கோதைதமிழீரைந்தும்
ஆய்ந்தேத்தவல்லாரவருமணுக்கரே. (73)

பாஞ்சசன்னியத்தை	எம்பெருமானின் சங்கை
பற்பநாபனோடும்	அவ்வெம்பெருமானுடன்
வாய்ந்த	—நேர்ந்த
பெரு சுற்றம் ஆக்கிய	சிறந்த உறவையுடையதாக கல்பித்த—
வண்புதுவை	—தெளிவுள்ள ஸ்ரீ வில்லிபுத்தூரைச் சேர்ந்த
ஏய்ந்த புகழ்	—நிறைந்த கீர்த்தியையுமுடைய
பட்டர்பிரான் கோதை	பெரியாழ்வாரின் புதல்வியான கோதையின்
தமிழ்	—தமிழ் மொழியான
ஈர் ஐந்தும்	—பத்துப் பாடல்களையும்
ஆய்ந்து	—ஆராய்ந்து
ஏத்த	—ஸ்தோத்திரம் செய்ய
வல்லார் அவரும்	வல்லரானவர்களும்
அணுக்கர்	—எம்பெருமானை யணுகியிருப்பவராவர்.

பற்பநாபனோடும் என்ற உம்மை அவனுக்குள்ள பரத்வத்தைக் குறிக்கும். பற்பநாபனென்றதாலே ப்ரம்மாதிகளுக்கும் மூலமானவனென்றதாயிற்று.

சுற்றமாக்கிய. பாஞ்சசன்னியம் திருக்கையில் தரிக்கப்பட்டதாலே திருச்செவிக்கு நெருங்கியும், ஊதும்போது திருப்பவளத்தைத் தொட்டுமிருப்பதைக் கொண்டு அது மந்திரம் கொள்ளவும் அமுத முண்ணவுமே அங்ஙன மிருப்பதாகவும் அத னால் சாலவும் செல்வமுள்ளதாகவும் தனக்குக் கண்ணனிடமுள்ள காதலின் கனத்தாலே கல்பித்த வென்றபடி. நித்யஸூரியான பாஞ்சசன்னியத்திற்கு வாயமுத முண்ண இயன்றாலும் அது அதற்காக வங்கு இருப்பதன்றே. ஏத்த. திருப்பவளத்தின் பெருமையையும் கோதையின் காதலையும் பாராட்டி யெம் பெருமானைத் துதிக்க வென்றபடி. அவருமணுக்கரே. பாஞ்சன்னியம் போலும், பதினாறாயிரம் தேவிமார் போலும், பாடிய கோதை போலும் இவரும் அணுகிக் களித்திருப்ப ரென்க.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 7. கருப்பூரம் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

விண்ணீலமேலாப்பு. 8.

(மேகங்களைத் தூதுவிடுதல்)

ஹேமந்த சிசிர ருதுக்களிலே நோன்பு நோற்று வஸந்த ருதுவிலே குயிலை யேவி க்ரீஷ்மத்தின் இடைக்காலத்திற்கு முன்னமே கனவில் கண்ணனுக்கு மனைவியாகிப் பிறகு அவன் வாயமுதமுண்டனுபவிக்கக் காதல் கொண்டு அவன் சங்கை நினைத்துப் பேசினின்றாள். இவ்வாறு பொழுது போக்கு மிவ ளுக்கு மாரிகாலமும் உடனே வந்தது. வானத்தில் மேகங்கள் எங்கும் நிறைந் தேறி நின்றன. அவற்றைக் கண்டதும் எம்பெருமானே எழுந்தருளி யிருப்பா னென நினைத்தாள். வாராமலிருந்தால், தன்னை நலியு மிவற்றையே யனுப்பி யவனை வருவிப்போ மெனவு மெண்ணினாள். அதன்மேல் பிறந்த பாசுரங்கள் இவையாம்.

1. வீண்ணீல மேலாப்பு (லார்ப்பு?) விரித்தாற்போல் மேசங்காள்
தேண்ணீர்பாய் வேங்கடத்தேன் திருமாலும் போந்தானே
தண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனைப்
பெண்ணீர்மை யீடழிக்கு மிதுதமக்கோர் பெருமையே. (74)

விண் —வானத்தில்
நீலம் மேலாப்பு —நீலநிறமான மேற்கட்டியை
விரித்தால் போல் —பரப்பியிருந்தால் அவ்மேற் கட்டிபோன்ற
மேகங்காள் —கருமுகில்களே!
தெள் நீர் —தெளிந்த தீர்த்தங்கள்
பாய் —பர்வஹிக்குமிடமான
வேங்கடத்து—திருவேங்கடத்திலிருக்கும்

என் திரு மால் உம் — எனது ச்ரிய:பதியும்
போந்தானோ — வந்தானோ?
கண் நீர்கள் — எனது கண்களினின்று நீர்கள்
முலை குவட்டில் — மலை போன்ற முலையின் உச்சியில்
துளி சோர — மழைபோல் சொரிய
சோர்வேனை — தளர்ந்த என்னுடைய
பெண் நீர்மை — பெண் ஸ்வபாவத்தின்
ஈடு அழிக்கும் இது — பெருமையை யழிப்பதானது
தமக்கு ஓர் — தங்களுக்கு ஒப்பற்ற
பெருமையே — பெருமையாமோ?

நீர்கொண்ட மேகங்கள் வானத்தில் பரந்து விளங்கினபோது மேலே மேற்கட்டி கட்டினதுபோலிருந்தது. தான் பர்த்தாவுடன் பள்ளிகொள்ள மேலே விரிக்கப்பட்ட மேற்கட்டியைப் போல் அதை நினைத்தாள். மேற்கட்டியை யனுப்பியவன் வந்தே யிருப்ப னெனவு மெண்ணினள். மேகமண்டலத்தின் நடுவிலே யிருப்பான், ஒரே நிறமானதால் தெரியாமலிருப்பானென்று விண் முழுதும் கண் விழித்துப் பார்த்தாள். இவள் திருக்கண்பார்வையும் விண்ணீலமேலாப்பு விரித்தாற்போலாயிற்று. அவனில்லை. 'அவன் வரா திருக்கமாட்டானே. மேகங்கள் மலை யேறி மழை பெய்ந்து தெளிந்த நீராகப் பாய்ந்தோடுமே இக்காலத்தில். அத்தகைய திருமலையிலிருப்பவனுக்கு, 'உபரி வ்ருஷ்டி ஜலம் தூரே தயிதா கிமேததாபதிதம்' என்று முன்னமே அச்சமிருந்திருக்குமே. சிலைகள் நிறைந்த மலையிலே மழை பெய்யும்போது கூட நீர் தெளிந்திருக்குமே. அத்தெளிவு திருமாலுக்கு எப்போது முள்ள தெளிவைக் காட்டுமே. தன்னைப் போல் தனது கைகால்கள் போன்ற எங்களையும் மாலோடு சேர்க்கும் திருவே அவனை அழைத்து வருவளே. ஆக அவன் என் திருமாலல்லனோ' என்று நினைத்து மேகங்களையே கேட்டனள். மின்னலோடு மேகங்களைக் கண்டபோது திருவுடன் சேர்ந்து மால் வந்திருப்பதாக எண்ணினள். மாலு மில்லை. மறுமாற்றமு மில்லை. இவளுக்குக் கண்ணீர்கள் சொரிந்தன. திருவேங்கடத்தில் தெண்ணீர் பாய்வது போலாயிற்று, இவள் முலைக்குவட்டில் கண்ணீர் சொரிவது. ஆனால் அது குளிரருவியா யிருக்கும். இது வெந்நீர் வார்ப்பது போலிருந்தது. அதனால் மிகவும் சோர்ந்தாள்.

அந் நிலையறிவித்து, 'பெண்ணினீர்மையின் பெருமையை யழிப்பது பெருமையோ' என்றனள். பெண்ணின் ஸ்வபாவமாவது புருஷன் காதல் கொண்டு நெருங்கினபோதும் தனக்கு, அவனுக்கு மேல் காதலிருந்தும் அடக்கி வெட்கமுற்றிருப்பது. இதை விட்டு வெளியில் எல்லோரையும் கேட்டுத் திரியும்படி பெய்தால் அதன் பெருமையை யழித்ததே யாம். ஈடழித்தல் பெருமை யழித்தல். இதன் பெருமை யழிந்தால் உன் பெருமை வளருமோ என்றபடி. குவடு மலையுச்சி. திருவேங்கடமலையில் தண்ணீர் ப்ரய்தல் பெருமை யாம். 'களிகேஷா போங்மீலத்—— நிர்ச்சரணா:' என்ற தயாசதக ச்லோகப்படிக்கு எல்லாம் தயா ப்ரவாஹமாம். இது நிர்த்தயன் என்பதைத்தானே விளக்கும். அத் தெண்ணீர் போலே, நானும் அவனோடு கலந்து, கலக்கமான கண்ணீரின்றி குளிர்ந்து தெளிந்த ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாலன்றோ பெருமை என்றதாம்.

தமக்கு. 'போந்தானோ' என்ற ஒருமைக்கேற்ப இங்கும் ஒருமை வேண்டும். பன்மையானது பெருமை வளர்ந்தபோது ஒருமையிற் கூறுவது

கௌரவூஹாநி என்று பரிஹஸிப்பதை யறிவிக்கின்றது. திருவுக்கும் மாலுக்கும் என இருவரையும் பிரித்துக் கூறினதுமாம். அவருக்கு என்னுமே தமக்கு என்றதால்—இவள் முதலீரடிகளில் மேகங்களைக் கேட்டவள் தனக்குள்ள பெருங்காதலாலே திருமால் வந்ததாகவே நினைத்துவிட்டாள். இப்படி மேகங்கள் புறப்பட்டு மேலார்ப்புப் போலாக அவற்றை நான் வாய்திறந்துகேட்கும் வரையிலும் வராமலிருப்பதோ? இது தங்களுக்குப் பெருமையோ என்று நேரில் சொன்னாளெனத் தோற்றுகிறது. ஆக நேரில் சொல்வதாலும் இப் பன்மையாம். .... (1)

பிறகு அவன் வரவில்லை யென்று தெளிந்து அவன் ஏதாவது சொல்லி யாவது அனுப்பியிருப்பா னென்று நினைத்துக் கேட்கின்றனள்—

2. மாமுத்த நிதிசோரியும் மாமுகில்காள் வேங்கடத்து
சாமத்தின்நிறங்கோண்ட தாளா(டா)ளன் வார்த்தையேன்னே
காமத்தீயுட்புகுந்து கதுவப்பட்டிடைக்கங்குல்
ஏமத்தோர்தேன்றலுக்கிங்கிலக்காய் நானிருப்பேனே. (75)

மா —பெரிய
முத்தம் —முத்துக்களையும்
நிதி —பொன், மணிகளையும்
சொரியும் —பெய்கிற
மாமுகில் காள் } உயர்ந்த மேகங்களே!
வேங்கடத்து—திருவேங்கடத்திலிருக்கும்
சாமத்தின் —கரியவஸ்துக்களின்
நிறம்கொண்ட—வர்ண மெல்லாம்பெற்ற
தாளாளன் —முயற்சியுள்ளவன்
வார்த்தை —அனுப்பிய ஸமாசாரம்
என்னே —எத்தகையது?
நான்
காமம் தீ —காமாக்னியானது
உள் புகுந்து —என்னுள் எங்கும் நுழைந்து
கதுவ —என்னைக் கவ்வவே
பட்டு —மிகவும் துக்கப்பட்டு
கங்குல் ஏமத்து இடை } இருண்ட இரவின் நடுவிலே
ஓர் தென்றலுக்கு } ஒப்பற்ற தெற்குதிக்குக் காற்றுக்கு
இலக்காய் —குறியான பிறகு
இருப்பேனே—பிழைத்திருப்பனோ?

மாமுத்தநிதி. நிதி யென்று நவமணிகளுக்கும், பொன்னுக்கும் பெயர். மழையைச் சொரிவதன்றி இவற்றையும் சொரிவது சிறந்த மேகங்களின் செயலானது பற்றி மா முகில்காள் என்றது. மாமுத்தநிதி யென்பதால் முக்தர்களுக்குப் பெரும் நிதியான வ்ருஷகிரி ஹரி நீலத்தையு மிங்ஙனம் சொரிதலாகாதோ என்றதாம். 'பரிமிதபலஸங்காத்,' 'யஸ்மிந் த்ருஷ்டே' என்ற தயாசதக ச்லோகங்களை யநுஸந்திக்க. சாமநிற மென்னுமே சாமத்தின் நிற மென்றது கருமுகில், கருநைதல், காயாம்பூ போன்ற எல்லா வஸ்துக்களின் நிறமும் குவிந்திருக்கிறதென வறிவிக்கவாம். வேங்கடத்து என்பது தாளாளன் என்றதோடு சேரும். முன் பாசுரத்திலே தெண்ணீர் பாய்வதைச் சொன்னதால் உடனே அங்கும் வனத்தின் வனப்பை நினைத்து வேங்கடத்துச் சாமத்து என்று ளென்னலுமாம். தாளாளன். என்னைப் பெற ஊக்கமும் முயற்சியு முள்ளவன் வார்த்தை யருளியிருப்பா னென்பது தோற்ற, இப் பதத்தைச் சொன்னது. தாடாளன் என்ற பாடத்திலும் இதே பொருள். தாளாளன் என்பது பொதுவாக வைசிய ஜாதியைச் சொல்வது மாகும். அப்போது ஆயன், கண்ணனென்றதுமாம். தாள் திருவடியாய் அது திவ்யமங்கள விக்ரஹத்துக்கு உபலக்ஷணமாய் ச்யாமரூபனனவன்

எனவு முரைப்பர். திருவடி யென்ற பொருள் கொண்டால், 'உலகமளந்தானுக்கு நடந்து வரத் திண்மை யில்லையா? என் வரவில்லை. வார்த்தையாவதுண்டா' எனக் கருத்தாம். சாமத்தீ. நீங்கள் சொரிய இத்தீ எங்கும் பரவுமே யன்றி அணையாதென்றபடி. இடைக்கங்குலேமத்து. ஏமமென இரவுக்குப் பெயரானதால் இங்கு கங்குலென இருளைக் கொண்டது. கங்குலென்பதற்கு இரா என்ற பொருள் கொண்டால் ஏம மென்பது காவலாம். இராக்கால மானபடியாலே காவலில் வைக்கப்பட்டவள் போல் ஓரிடத்திலேயே நின்று தென்றலால் தவிக்க வேண்டியிருக்கிறது. தென்றல் படுவதால் தீ மண்டிவளர்கின்றதே யென்றபடி. ஏமம் என்பதற்கு யாமம் என்ற பொருளும், புடுக்கை யென்ற பொருளும் ப்ரஸித்தமல்ல. கலக்கம், மயக்கமென்றவாறு பொருளு முண்டு. இருப்பேனே. இருக்கிறேனென்னுமே இருப்பேன் என்றது, 'நான் இருப்பேன் என்று அவன் நினைத்திருப்பானே. நீங்கள் வருவதும் தெரியுமே. வார்த்தை சொன்னதுண்டோ' என வறிவிக்கவாம். வந்தவிடமே சொல்லவில்லையானல் வேறு வார்த்தாஹரனை யனுப்பவதேது? இனி நான் இருப்பேனே. இருக்க முடியுமோ' என்றதுமாம். (2)

மேகங்கள் மெல்ல முழங்கின. தயை புரிந்து தனக்கு ஹிதோபதேசம் செய்வதாக நினைத்தாள். அவன் வராவிட்டாலும் அவன் குணம் பாடிப் பிழைத்திரு என்கிறீர்களோ? கூடவில்லையே என்கிறாள்—

3. ஒளிவண்ணம்வளை சிந்தையுறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா லிட்டென்னை யீடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ஆவிகாத்திருப்பேனே. (76)

அளி அத்த மேகங்காள் — அனுக்ரஹம் செய்யும் முகில்களே!
ஒளி —எனது காந்தி,
வண்ணம் —நிறம்
வளை —வளைகள்
சிந்தை —த்யான சக்தி
இவை எல்லாம் — இவை போன்றவைகள் யாவும்
உறக்கத்தோடு—நித்ரையும்
எளிமையால் — என்னை யவன் உபேக்ஷித்ததாலுண்டான ஹீனதசை காரணமாக
ஈடு அழிய —என் பெருமை யெல்லா மழியும்படி
என்னை இட்டு — என்னைத் தள்ளிவிட்டு
போயின —போய்விட்டன
ஆல் —கஷ்டம். (இப்படியானபிறகு)
குளிர் —குளிர்ந்த
அருவி —நீர்ப்பெருக்குகளை யுடைய
வேங்கடத்து—திருவேங்கடத்திலிருக்கும்
என் கோவிந்தன் — எனது கண்ணனின்
குணம் —கல்யாணகுணங்களை
பாடி — இசையுடன் கீர்த்தனம் செய்துகொண்டு (அதனால்)
ஆவி —எனது ப்ராணனை
காத்திருப்பேனே. — பாதுகாத்துப் பிழைத்திருக்க வல்லேனோ!

கல்யாணகுணங்களைப் பாடுவதற்குச் சக்தி வேண்டுமே. உடலும் நெஞ்சும் உரு மாறிவிட்ட பிறகு எனக்குப் பாடக் கூடுவதேது? எளிமையால். இவ்வெளிமையுள்ள வரையில் அவை வாரா. இது போவது அவன் வரவால். அப்போது அவையும் பின்னே வரும். அப்பொழுதே பாடக் கூடு மென்றபடி.

குளிருவி. கோவிந்தன்குணங்களும் குளிருவி போன்றவை. திருவேங்கட நாதனைக் கோவிந்த னென்பது வைகுந்தத்தை விட்டு இவ்வுலகுக்கு வந்தவனென்றும் கண்ணனென்று மறிவிக்கவாம். கோவிந்தா என்றே அவனை விளிப்பர் பத்தர். அளியத்த. அத்த—ஸ்வ ஸ்நேஹ. அன்பாலே ப்ரேரிக்கப்பட்ட. .... (3)

தென்றல் பட்டு மேகங்கள் வடதிசை போகின்றன. அவன் வார்த்தையைக் கொண்டு வந்த மேகங்களோ என நினைத்தேன். இல்லை. எனது வார்த்தையை யாவது ஆங்கவனுக்குக் கூறுவீர்களோ என்கிறாள்—

4. மின்னாகத்தெழுகின்ற மேகங்காள்வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கியசீர்மார்வற்கு
என்னாகத்திளங்கொங்கை விரும்பித்தாம்நாடோறும்
பொன்னாகம்புல்குதற்கென் புரிவுடைமைசெப்புமினே. (77)

- மின் —மின்னல் பொருந்திய,
- ஆகத்து எழுகின்ற —ஆகாயத்திலே எழுகின்ற
- மேகங்காள் —முகில்களே
- என் ஆகத்து—எனது மார்விலுள்ள
- இளகொங்கை —யௌவனம் பெறுகின்ற ஸ்தனங்கள்
- தாம் —தாமே
- விரும்பி —ஆசைப்பட்டு
- நாள் தோறும்—பிரதிதினமும்
- பொன் ஆகம்—(அவனுடைய) பொன்மய திருமேனியோடு
- புல்குதற்கு —புணர வேண்டுமென்று
- என் புரிவு உடைமை (யை) —நான் ஆசைப்பட்டிருப்பதை
- வேங்கடத்து—திருவேங்கடத்தி லிருக்கும்,
- தன் —தன்னுடைய
- ஆகம் —உடலான
- திருமங்கை —பெரியபிராட்டி
- தங்கிய —நித்யவாசம் செய்யும்
- சீர் —எல்லாக் குணங்களும்பெற்ற
- மார்வற்கு —திருமார்பை யுடையனுக்கு ஸ்ரீநிவாஸனுக்கு
- செப்புமின் —சொல்லுங்கோள்.

மின் ஆகத்து எழுகின்ற எனப் பிரித்து தமது சரீரத்தில் மின்னல் எழ இருக்கிற வெனவும், மின்னலை உடலிலுடையவையும் மேலெழுகின்றனவுமான எனவும் உரைப்பதும் கூடும். தன்னாகத்திரு என்றவிடத்தில் தனது திருமேனியில் திரு என்ற பொருள் வீணாம். மார்வற்கு என்றதிலிருந்தே திருமேனியில் என்பது சொன்னதாயிற்றே. தனக்கு ஆகம் சரீரபூதையான திருமங்கையென்றால், திருவின் திவ்யாத்மஸ்வரூபத்திற்குத் தான் ஆதாரமாயிருப்பது மட்டுமன்றி அவளுடைய திருமேனிக்கும் தன் திருமேனி ஆதாரமென்றது, 'ததோபி தத்ப்ரியதரம்ரூபம்' என்றபடி பிரயதமமான திருமேனிபோல் அவள் ப்ரியதமையானது முதலான விசேஷங்கள்தோற்றும். வேங்கடத்து என்றதை 8-ம் பாசுரத்திற் போலே எழுகின்ற என்றதோடு இணைக்கில், மின்னாகத்து என்பதற்கு மின்னலை உடலிலுடைய எனப் பொருளாம். தன்னாகம் என்பதற்குத் தனது மலையிலே எனவும் பொருளாம். தன் நாகம் தன்னாகம். தனக்கு ஸ்வர்கமாய் ஸ்வர்கமாயுள்ள திரு என்னவுமாம். தன் ஆகமென்பதற்கு, 'என்னைப் போல் அவளும் உனக்கு ஆகமே. அவ்வாறிருக்க அவளுக்கு மட்டும் திருமார்வு. எனக்கொன்றுமே யில்லை யெனவும் கருத்தாம். தன் ஆக எனப் பிரித்துரைக்கலாமாகில் உரைக்க. தன் திருமங்கை யென அந்வயம். 'ஸதா தவைவோசிதயா தவ ச்ரியா' என்றது காண்க. ஆக இருக்க, ஸத்தையைப் பெற என்றது தங்கிய

என்றதோடு இயையும். பிராட்டி தான் ஸத்தை பெறுவதற்காகத் தங்கினன், அல்லது 'ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்' என்றபடி அவன் ஸத்தை பெறவும், 'ச்ரத்தயா தேவோ தேவத்வமச்நுதே' என்றபடி அவன் தேவனாகைக்காகவும் தங்கினனென்றதாம்.

விரும்பித்தாம் என்ற விடத்தில் தாம் என்பது எம்பெருமானைக் குறிப்பதன்று. அப்போது மார்வற்கு என்ற ஒருமை பொருந்ாது. 'மார்வர்க்கு' என்று இடையின ரகரப் பாடம் கொள்ளில், தன்னுகை என்றவிடத்தில் தன் என ஒருமை தகாது. ஆனதால் தாம் எனக் கொங்கைகளைக் குறிக்கும். கொங்கை என்பதற்கு புல்குதற்கு என்றதோடு அந்வயம். அசேதநமான கொங்கை விரும்புமோ என்னில், விரும்பு மென்பது, (1—4.) 'என்று மாதரித்தெழுந்த வென் தடமுலைகள்' என்றவிடத்தில் காணப்பெற்றதே. கொங்கை விரும்பி. என்னுகைத்துக் கொங்கையாலும் எனக்கடங்காததால் நானே அதைப் பின்பற்றவேண்டிற்றென்றதாம். நாடோறும். முதலில் புல்க விரும்பி, வந்து சில நாளான பிறகு நாள்தோறும் புல்க விரும்பலாம். முதலிலேயே இவ்வாறு விரும்புவது தகுமோ வென்னில், 'நாங்களெம்மிலிருந்தொட்டிய கச்சங்கம் (5.8) என்றுநின்று முன்னமே புல்கினதுண்டென்ன வேண்டிற்றே. வந்து மிகப் போக்யமாகில் முதலிலாசைப்படும்போதே எப்போதும் இது வேண்டுமென்றுசைப்படுதலும் ஸஹஜமே. நாடோறும் என்பது புல்குதற்கு என்றதோடு சேருமாறு அமைத்திருப்பதால் இங்ஙனமே உரையாம். புரிவு என்றதோடு இணைப்பதானல் ப்ரதிதினமும், 'இன்றைக்காவது புல்க நேருமா' வென்று பேரவா கொண்டிருக்கிறேனென வுரைக்கவேண்டும்.

பொன்னுகம். 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்', 'ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:' என்றவற்றைக் காண்க. திருமங்கை தங்கிய சீமார்வனுனபோது அது பொன்னுகமாயிற்று. ஆக மென்பது இங்கு திருமார்வுமாம். என் புரிவு. கொங்கைக்கு இஷ்டமாகிலும் எனக்கிஷ்டமில்லையென்று நினைக்கவேண்டா. கொங்கைக்கு முன்னிலிருந்தே நான் இதனையே விரும்பியிருக்கிறேனே. (4)

முதலில் போய்ப் பேசத் தொடங்கும்போதே, 'நாள்தோறும் பொன்னுகம் புல்கும்படி வந்திருக்கவேண்டுகிறுள்' என்று சொல்லக்கூடுமோ வென்ன, அதனையும் ஒரு வகையில் கவனித்துச் சொல்லலாமென்கிறுள்—

5. வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள் வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத்திரண்டேறிப் பொழிவீர்காள்
ஊன்கொண்ட வள்ளுகிராலிரணியனையுடலிடந்தான்
தான்கொண்டசரிவளைகள் தருமாகில்சாற்றுமினே. (78)

வேங்கடத்து	—திருவேங்கட மலையில் உள்ள	மலர்	—புஷ்பங்கள்
		சிதற	—உதிர்ந்துவிழும்படி
தேன் கொண்ட	மது நிறைந்த	திரண்டு	—ஒன்றுகக்கூடி
		ஏறி	—மேல் ஏறி

பொழிவீர்கான்	மிகவாகப்பெய்கின்றவர்களாய்
வான்கொண்டு	நடுவானத்தைப் பற்றி
கிளர்ந்தெழுந்த	கிளம்பி மேற்சென்ற
மா முகில்காள்	பெரிய மேகங்களே!
ஊன்கொண்ட	மாம்ஸப்பிடிப்பினால் உறுதியான
வள்	கூர்மையான
உகிரால்	நகங்களாலே
இரணியனை	ஹிரண்யாஸுரனை
உடல்	சரீரத்திலே
இடந்தான்	பிளந்த பரமன்,
தான்கொண்ட	அவன் என் கையில் இராதபடி செய்த
சரி வளைகள்	சரியும்வளைகளை (கைவளைகளை)
தரும் ஆகில்	கொடுக்கும் நிலைமையில் இருந்தால்
சாற்றுமின்	நன்றாகச் செப்புமின்.

நீங்கள் வேங்கடத்திற்குச் சென்றவுடன் வானத்தி லெழுந்திருந்து அங்கு மரங்களிலிருக்கும் மலர்களெல்லாம் விழும்படி பொழியவேணும். அதனைக் காணும்போது அவருக்கு என் கைவளைகள் சரிவது நினைவுறும். மலர் காணும்போதெல்லாம் இவற்றைக் கோதை சூடிக்கொடுத்தால் அணிந்து ஆனந்திக்கலாமே என்று வருத்தமாயிருக்கும். அது விலகிற்றாகிலும், அவள் சரிவளை கழல்வது நினைக்கப்பட்டு வருத்துகின்றதென்று கஷ்டப்படுவர். அத் தருணம் பார்த்து, உம்மால்லவோ கைவளைகள் கழன்றன. நீர் அங்குச் சென்றால் மறுபடி கைவளைகளை யணிதல் கூடுமே யென்னுங்கோள். அவரும் இசைவர். அப்படி அவர் வளை தர இசைந்தபோது, மீண்டும் கைவளை கழலாதபடி யிருக்க வேண்டும். நாடோறும் புல்க வன்றோ அவளும் புரிவுடையளா யிருப்பதென்று சாற்றுமின் என்றபடி.

ஊன் இத்யாதி. என்னகத்தில் தேன் கொண்ட மலர்கள் போல் படியும் அவனது ஊன்கொண்ட வள்ளுகிர்களைப் பொன்னைப் போல் உறத்துள்ள இரணிய னுடலையும் பிளந்தெறியும்படி செய்யும் பெருமையுளோன், ப்ரஹ்லாத னொருவனுக்காக ஒரு விசித்ரமான அவதாரம் செய்து விரோதிகளை நிரஸித்தவன் ஒரு ப்ரயாஸமு மின்றி உள்ளபடி இங்கு வந்து நின்றால் போதுமே. என் விரோதிகள் தாமே விலகுமே யெனக் கருத்து.

தான்கொண்ட. அவன் அப்பால் போனபோது வளைகளும் கைவிட்டுப் போயின வானதால் அவற்றை அவன் கொண்டானென்றது. சரிவளை கைவளை. 'சரி' யென்றதே போதும். ஆகிலும் சரிவதென்ற பொருளை விடாமற் கொள்ளுவதற்காக வளை யென்ற சொல்லையும் சேர்த்ததாம். அவன் கொண்டானென்று சொன்னது அவை சரிந்துவிட்டதைப் பற்றி யென இதனால் விளக்கினதாம். தருமாகில். தருவதாவது, கையில் நிலைத்திருக்கும்படி செய்வதே. சாற்றுமின். அவன் உடனே வரும்படி யாகவேண்டும் நீங்கள் சொல்லும் வகை. ஆக அவனே வருவான். அது போதும். சாற்றினதைச் சொல்ல ப்ரயாஸப்பட்டு வீரவேண்டாம் என்றபடி. .... (5)

பொன்னகம் புல்குதல் இல்லையே யென்றதாலே இஷ்ட ப்ராப்தியில்லையே யென்றது சொல்லியாயிற்று. மேலே அநிஷ்டங்கள் இருக்கின்றனவே என்று சொல்ல இயன்று சரிவளைகள் போனதைப் பணித்தாள்—அணிகள் அகன்றது

கிடக்கட்டும். அவஸ்தைப்படுவது எப்போதொழி௰மென்கிற கருத்தோடு கூறுகின்றாள்—

6. சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள் மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே நிறந்தேறிப் பொழிவீர்காள்
உலங்குஉண்ட விளங்கனிபோ லுள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்கென் நடலை நோய் செப்புமினே. (79)

சலம் கொண்டு — ஆழியுட் புக்கு ஜலம் முகந்துகொண்டு
கிளர்ந்து எழுந்த — வெளிக்கிளம்பி வானம் சென்ற
தண் —குளிர்ந்த
முகில்காள் —மேகங்களே!
மா வலியை —மஹாபலியை
நிலம் —முழு உலகுடன்
கொண்டான் —வசமாக்கிக்கொண்ட பிரானின்
வேங்கடத்து எ-திருமலையிலேயே
நிறந்து —பரந்து
ஏறி —மேற்சென்று
பொழிவீர்காள்-பெய்கின்றவர்களாய்,
உலங்கு உண்ட — கொசுகினுலுண்ணப்பட்ட
விளங்கனி போல் — விளாம்பழத்தைப்போலே
உள் மெலிய —உள்பாகம் க்ஷீணிக்கும்படி
புகுந்து —என்னுள் புகுந்து
என் —என்னுடைய
நலம் கொண்ட — நன்மைகளை அழித்த
நாரணற்கு —நாராயணனுக்கு
என் —எனது
நடலை நோய் — மனத்துயரம் மூலமான வியாதியை
செப்புமின் —சொல்லுங்கோள்.

மாவலியை நிலம் கொண்டான். மூன்றடிகளில் ஓரடிக்கு மாவலியையும் ஈரடிகளுக்கு உலகினையும் கொண்டவனென்றபடி. இனி, மாவலியை = மாவலியினுடைய என்னலு மாம். உருபுமயக்கம். என்னை என்றவிடத்தில் என் எனப் பிரிக்க, ஐ—அசையாம். உள் மெலிய. கொசுகு புகுவதால் விளங்கனியில் உள் இருப்பதெல்லாம் க்ஷீணிக்கும். இவளுக்கும் உள்ளே மனம், ஹ்ருதயம், மாம்ஸமெல்லாம் க்ஷீணித்துவிட்டன. முகில்காள்! நீங்கள் சலம் கொண்டு கிளர்ந்து எழுந்தீர்கள். முகில்வண்ணனும் மாவலியினிடம நிலம் கொள்வதற்காகச் சலம் = ஒரு வியாஜம் கொண்டு கிளர்ந்தெழுந்தவன். தண்மை உங்களுக்கும் அவனுக்கு முண்டு. வேங்கடத்தேறி வேண்டியவற்றைப் பொழிவதும் இருவருக்கு முண்டு. இப்படியிருக்க உங்களுக்கும் அவனுக்கு முள்ள வாசி யென் எனில், நீங்கள் கண்முன்னே வெளியில் இருந்து என் நலம் கொண்டீர்கள். இது தானும் நாரணன் உட்புகுந்து நலம் கொண்டதால் வந்தது. அவன் நாரணனுகையாலே, ‘நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே! நீ யென்னை யன்றியிலே' என்று அவனைக் குறித்துக் கூறவியலும். ஆயினும் நாரசப்தார்த்தினுள்ளே நரசப்தரார்த்தமாகவும் வெளியிலே அயநசப்தார்த்தமாகவு மிருக்குமா போலே எனக்கும் உள்ளே போலே வெளியிலும் காணக்கிடைத்தால் இந்நடலைநோய் இராது. இதைச் செப்புமின். இதில் உங்களுக்கேன் பொறுப்பு என்று கேட்பான். முன் சொல்லியபடி பல வகைகளில் உங்களுக்கு மவனுக்கு முள்ள ஒற்றுமையை யெடுத்துக் கூறி, உம்மைப் போல் நாங்கள் இருப்பதால், உமக்கு, தேவர்கள் நிலம் கொள்ள மாவலியைக் கேட்க மன

மிரங்கினது போல் எங்களுக்கும் கோதை நலம் கொள்ள உம்மைக் கேட்க மனம் இரங்கிற்று. நீர் கோதைக்கு உம்மையே கொடுத்தால் 'நலமும் கொடுத்த தாகு மென்றும் செப்புமின் என்றபடி. நலமாவது இன்பமும் பெண்களுக்குரிய குணங்களு மாம். (6)

'ஏதி ஜீவந்தமாநந்தோ நரம் வர்ஷசதாதபி' உயிரிருந்தால் வருஷம் நூறான பிறகாவது ஆநந்தமென்பது வந்தே தீரும் என்று நம்பி நடலை நோயைப் பொறுப்போ மென்றால் முடியவில்லை, உயிர் நின்றால் தானே எப்போதாவது கொரினதைக் காண்பது. ஆவி தங்கத் தான் வழி வேறில்லையே: நாடோறும் புல்கினல் தான் ஆவி தங்குமோவென்னவேண்டா. ஒரு நாள் என் கோருதலை நிறைவேற்றினலும் போதுமென்கிறாள்—

7\. சங்கமாகடல்கடைந்தான்தண்முகில்காள்வேங் கடத்துச்
செங்கண்மால்சேவடிக்கீழடிவீழ்ச்சிவிண்ணப்பம்
கொங்கைமேல்குங்குமத்தின்குழம்பழியப்புகுந்தோருநாள்
தங்குமே லென்னுவி தங்குமென்றுரையீரே. (80)

தண்	—குளிர்ந்த
முகில்காள்	—மேகங்களே!
அடிவீழ்ச்சி விண்ணப்பம்	திருவடியில் விழுந்திருப்பவளுடைய (என்னுடைய) விஜ்ஞாபனத்தை—
வேங்கடத்து	—திருமலையிலே—
சங்கம்	—அழகிய
மா	—பெரிய
கடல்	—பாற்கடலை
கடைந்தான்	—கடைந்தவனும்
செங்கண்	—செந்தாமரைக்கண்ணனும்
மால்	—வியாமோஹமுள்ளவனுமான விஷ்ணுவின்
சே அடி கீழ்	—செவ்விய திருவடிகளின் கீழே,—
புகுந்து	—'இவ்விடம் வந்து
கொங்கை மேல்	ஸ்தனங்கள்மேலே
குங்குமத்தின் குழம்பு	அரைத்துப்பூசின குங்குமப் பூவின் ரஸமெல்லாம்
அழிய	—அவிந்துபோம்படி
ஒரு நாள் தங்குமேல்	ஒருநாள் தங்கினல் கூட
என் ஆவி	—எனது பிராணன்
தங்கும்	—அழியாமலிருக்கும்'
என்று உரையீர்	என்றவாறு சொல்லுங்கள்.

தான் ஆனந்தமாய்ப் பள்ளிகொண்டிருக்கும்படி யழகான பாற்கடலையும் கடைந்தான். தேவர்களெல்லா மொரு பக்கமும், அசுரர்களெல்லாம் மற்றொரு பக்கமு மாக நின்று கடைந்தும் பூரணமாகக் கடையமாட்டாதபடி மாபெரும்கடலையும் தானே இரு பக்கமும் இழுத்துக் கடைந்தான். அவன் எத்தனையோ ரூபங்களெடுத்துக் கீழும் மேலும் பக்கங்களிலு மிருந்து மிக்க ப்ரயாஸம் செய்து கடையும்படி யிருந்தது அக்கடல். ஏன் இவ்வளவு செய்தான்? அடியார்களான தேவர்களிடத்திலிருந்த அன்பினல் அவர்களுக்கு அமுதம் ஊட்டவோ, அமுதக்கும் அமுதான அலர்மேல்மங்கையை, யஃயஃ ௨௭௦ ஹொ யிரஃ௦யி' என்றபடி தான் பெறவோ. ஏதேனுமாகுக. அவ்வளவு வியாமோஹமுள்ளவன் அநாயாஸமாக ஒரு நாள் இங்குப் புகுந்து தங்கிப்போனல் போதும். நான் பிழைத்திடுவேன். பிறகு என் நடலை நோயைப் பொறுத்துக் கொள்வேன். ஆகவே அவன் வரும்படி அவன் திருவடியில் நீங்களும் வணங்கி நான் மிக்க வணக்கத்துடன் செய்யும் விண்ணப்பமிதென்று சொல்லுங்கோள் என்கிறாள்.

சங்கம்—சங்கு. உள்ளிருக்கும் சங்குகள் வெளிக்கிளப்பிவருமிடி கடைந்தானென்வு முறையாம். அடிவீழ்ச்சி யென்பதற்கு அடியாளெனப் பொருள். திருவடியில் எப்போதும் வீழ்ச்சியுடையவளென்னவுமாம். என்று என்பதற்கு என்றது எனப் பொருள்கொண்டால் விண்ணப்பமானது 'கொங்கை——— தங்கும்' என்றது. இதை உரையிரென இரு வாக்கியங்களாம். 'விண்ணப்பத்தை என்றுரையீர்' என்றபோது ஒரே வாக்கியமாம். என்று என்பதை விண்ணப்பத்திற்கு விசேஷணமாக்க வியலாது. அப்போது, 'என்ற விண்ணப்ப' மெனவாம். ... ... (7)

இப்படி யொரு நாள் கூட வரக்கூடாதபடி யிருந்தாலும் அவர் ஒரு வார்த்தையாவது சொல்லி யனுப்பக் கிருபை கூர்ந்தால் நலமென்கிறாள்—

8. கார்காலத்தெழுகின்றகார்முகில்காள்வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப்பொருதவனார்பேர்சொல்லி
நீர்காலத்தெருக்கினம்பழவிலைபோல்வீழ்வேனை
வார்காலத்தொருநாள்தம்வாசகந்தந்தருளாரே. (81)

வேங்கடத்து — திருமலையில்
கார்காலத்து — மழைகாலத்திலே
எழுகின்ற — மேற்கிளம்பும்
கார் — கரிய
முகில்காள் — மேகங்களே!
போர் காலத்து — யுத்தம்செய்ய வேண்டும் காலத்தில்
எழுந்தருளி — இலங்கைக்கே சென்று
பொருதவனார்—போர்செய்த ஸ்ரீராமபிரான்—
பேர் சொல்லி—தம் திருநாமத்தைச் சொல்லிவந்து,
எருக்கின் — எருக்கஞ்செடியின்
அம பழ இலைபோல் — அழகாகவே இருந்து ஸார மற்றுலர்ந்த இலைபோல
நீர்காலத்து — மழைகாலத்தில் (நீர் பட்டவுடன்)
வீழ்வேனை — உலர்ந்து விழு மென்னை
வார் கலத்து—நெடுங்காலத்திலே
ஒரு நாள் — என்றைக்காவது
தம் வாசகம் தந்து — தமது வார்த்தையையாவது சொல்லியனுப்பி
அருளாரே — அருளமாட்டாரோ.

([illegible]' என்றபடி) பெரியபிராட்டியாருக்காக அவர் கடல்கடைந்ததைச் சொன்னேன். கடலடைத்ததையும் கேளுங்கள். கார்காலம் கழிந்ததுமே பொல்லாவரக்கனைக்கண்டு போர் புரிந்தழித்துப் பெற நினைத்தவருக்கு அவ்வரக்கனைக் கண்டறியக் காலதாமதமானதாலே போர் புரிதலுக்கு விளம்பமேற்பட்டது. பிறகு அவன் உள்ளவிடம் தெரிந்தவுடன் அப்போதே போருக்கு எழுந்தருளினர். இப்படித் தன்னை யாச்ரயித்தவளிடத்திலே அன்புடனிருப்பவரென்று அவர் பேரைச் சொல்லு மென்னை அவர் காக்காமலிருப்பது நியாயமா? முகில்காள்! நீங்கள் கார்காலத்தில் எழுகின்றீர்கள். என்னைப் பாருங்கள். நான் இந்த நீர்காலத்திலே கோடையில் உலர்ந்த எருக்கிலைபோலே கீழே விழுந்துகிடக்கிறேன். இப்போது தான் நான் இங்ஙனம் வருந்துகிறேன் என்று நினைக்கவேண்டா. வார்காலமாக = நெடுநாளாகவே வருஷக்கணக்காகவே வருந்துகிறேன். நீங்கள் கார்காலத்தே எழுவதால் இப்போதே உங்களிடம் சொல்ல நேர்ந்தது. இவ்வளவு நாளாய் வருந்து மெனக்கு ஒரு வாசகமாவது அனுப்பக்கூடாதா? பிராட்டி யிருக்கு மிடம் தெரியாத போது கூட அவர் பலரைத் தேட அனுப்பி வாசகம் தந்தருளின ரல்லரோ?

எனக்கு எளிதில் தந்தருளலாமே. அதைக் கொண்டாவது ஆவி தங்கப் பார்ப்பேனே என்றுளென்க.

பொருதவனார் என்பது அருளார் என்பதற்கு எழுவாயாகும். பொருதவருடைய எனப் பொருள் கொண்டால் ப்ரதானக்ரியைக்கு எழுவாய் புதிதாகச் சேர்க்கவேண்டிவரும். பேர் என்றது அவருடைய பேர் என்பது ஸ்வரஸமாய்க் கிடைக்கும். எருக்கினம்பழவிலை என்றவிடத்தில் அம் என்பது பழுப்பாகி விழுமிலையை விட்டு அழகிய இலையாயிருந்தே கோடையில் உலர்ந்து கடைசியில் விழுமிலையைக் கொள்வதற்காக. இதனால் தான் இளவயதில் இவ்வாறிருப்பது தகாதென்றதாயிற்று. எருக்கிலம் என்று சிலர் படிப்பர். வீழ்வேனை என்பதற்கு வீழ்வேனுக்கு எனப் பொருள் கொள்ளவேண்டா. அது அருளார் என்பதற்குச் செயப்படு பொருளாம். வாசகத்தைத் தந்து என்னை யருளாரோ என்று பிரித்துக் கொள்க. வாசகம் தந்து. நேரில் எழுந்தருளி ஒரு வாசகம் தந்தருளலாம். யார் மூலமேனும் அனுப்பியு மிருக்கலாம். இனி யாவது தந்தென்னை யருள்வாரா என்றபடி. ... ... (8)

'வாசகம் தந்தருளாரோ' என்றபோது முன் அவன் சொன்ன வார்த்தை நினைவுற, அவன் பொய் சொல்லுகிறானென்று அறிந்தபிறகு அவன் வாசகத்தை எதற்கு நான் விரும்பவேண்டும்? நம்ப முடியாதே. அதனால் அவன் என்னிடத்தில் அபிமானத்தை எண்பிக்கிறான் என்றதுமட்டும் புலப்படும். அது என்னையும் உலகத்தாரையும் ஏமாற்றுவதற்காகத் தரும் வாசகமே யாமல்லது பயன்படுவதொன்றன்று. வாசகம் தராவிடில், துஷ்யந்தன் சகுந்தலையை முதலில் மறந்தாற் போலே மறந்துவிட்டானென்று இவன் விஷயத்தில் சொல்லுமாகாது' என நினைத்தருளுகிறாள்—

9. மதயானை போலெழுந்த மாமுகில்காள் வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள் பாம்பணையான் வார்த்தையென்னே.
கதியென்றுந் தானாவான் கருதாதோர் பெண்கொடியை
வதைசெய்தா னென்னும்சொல் வையகத்தார் மதியாரே. (82)

வேங்கடத்தை—திருவேங்கடமலையை
பதி ஆக —இருப்பிடமாகப் பெற்று
வாழ்வீர்கள் —வாழ்கின்றவர்களாய்
மதம் யானை போல் —(அங்கிருக்கும் மதம் பிடித்த யானைகளைப் போல்
எழுந்த —கொடுமுடிக்குச் செல்லும்
மா முகில் காள் —பெரிய மேகங்களே!
பாம்பு அணை யான் —ஸர்ப்பராஜனைப் படுக்கையாக உடையவனின்
வார்த்தை —பேச்சானது
என்னே. —என்ன இப்படியாகிறதே.
என்றும் —எக்காலத்திலும்
தான் கதி ஆவான் —தானே ரக்ஷகனாகுமவன்
கருதாது —நினைக்காமலேயிருந்து
ஓர் —ஒப்பற்ற
பெண் கொடியை —கொடிபோன்ற பெண்ணை
வதை செய்தான் —கொலை பண்ணிவிட்டான்
என்னும் சொல் —எனப்படும் சொல்லை
வையகத்தார் —பூமியிலுள்ளவர்
மதியாரே. —நம்பமாட்டார்களே.

மாதம் மும்மாரி பெய்துகொண்டு எப்போதும் திருவேங்கடத்தையே தங்கள் இருப்பிடமாக்கி, காட்டில் அங்கிருக்கும் யானைகள் கிளம்புகிறுப்

போலே கிளம்பி மேலெழும் முகில்களே! சேஷாத்ரியில் வசிப்பதாலே பாம்பணையானான அவன் வார்த்தையை என்னவென்று சொல்லுவேன். போம்போது அவன் சொல்லிப் போனதென்ன? நெடுநாளாகியும், கார்காலம் வந்தும் கருதாமலே யிருப்பதென்ன? இரு நாக்குள்ள தலைகள் ஆயிரம் படைத்த பாம்பின் மேலிருப்பானென்றால் அவன் இரு நாக்குள்ளவரில் பெரியோனென்பதில் என்ன ஸந்தேஹம்? எதிரிலொன்று, மறைவிலொன்று சொல்பவனவன். 'பாவியேன் தோன்றிப் பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல் நாவு மிரண்டுள வாய்த்து' (10—9). 'இல்லை, ஏதோ பல காரியங்களிலே மறந்துவிட்டான்' என்னில்—இவ்வார்த்தையை வையகத்தில் யாராவது மதிக்கக்கூடுமா? எப்போது மவன்தானே கதி. உறங்கும்போதும் ஜீவன் அவனையே பெற்றிருக்கிறான். மற்ற காலங்களிலும் அவனே யெல்லாப் பலனை யளிப்பவனும். எனக்கும் இந்நிலைகளெல்லாம் அவன் ஸங்கற்பிக்க ஏற்பட்டவையே. இவ்வாறிருக்க என்னை யவ்வந்தர்யாமி மறந்தானெனக் கூடுமோ? ஆகையால் கருதாதுவதைத் தானென்ன வொண்ணாது. ஒருக்கால் வேணுமென்று கருதியே வதைக்கிறானென்றால், இச் சொல்லை வையகத்தார் மதிக்கலாம். இத்தகைய அபகீர்த்தி யவனுக்கு வாராதபடி பார்த்துக்கொள்ளட்டுமென்றபடி. (9)

10\. நாகத்தினணையானை நன்னுதலாள் நயந்துரைசெய்
மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை தமிழ்
ஆகத்து வைத்துரைப்பாரவரடியாராகுவரே. (83)

நாகத்தின் —ஆதிசேஷனின்
அணையானை —ஒரம்சத்தைப் படுக்கையாக வுடைய பிரானை
நயந்து —அனுபவிக்க விரும்பி
நல் நுதலாள்—அழகிய நெற்றியுடையாளொருத்தி
உரை செய் —விவரித்துச் சொல்வதாக அமைந்ததும்,
போகத்தில் —பகவதனுபவத்திலே
வழுவாத —குறையாத
புதுவையர் கோன் —ஸ்ரீவில்லிபுத்தூரார்க்கு ஸ்வாமியான பெரியாழ்வாரின் (பெண்ணான)
கோதை —ஆண்டாளின்
தமிழ் —தமிழ்செய்யுளுமாய்
தூதில் —சொன்னதை யறிவித்திணைக்குணக விஷயமாக
வேங்கடம் கோன் —திருவேங்கட நாதனுக்கு
மேகத்தை —மேகங்களை
விடு —அனுப்புவதாய்
விண்ணப்பம் —விஜ்ஞாபனமான இத் திருமொழியை
ஆகத்து —ஹ்ருதயத்தில்
வைத்து —தரித்து
உரைப்பார் அவர் —ஓதுபவர் அவர்களுக்கு
அடியார் ஆகுவர். —அடிமை செய்பவராவர்.

நாகத்தினணையானை யென்ற சொல்லானது அவனுடைய படுக்கையில் அவனோடு புணர்ந்திருக்க ஆவலிருப்பதைக் குறிக்கச் சொன்னதாம். நன்னுதலாள். மேலேயுள்ள மேகத்தையும் வேங்கடக்கோனையும் வேண்டுதற்கு முகத்தை நிமிர்த்தியிருந்தபோதுள்ள நேர்த்தியைக் குறிக்கும் இது. 'தான் நயந்து' என்னுமே நன்னுதலாள் நயந்து என்றது, தன்னைப்போல் அவனிடமீடுபடும் வேறொருத்தியும் அநுஸந்திக்கும்படி பொதுவிலே அமைந்ததைக் குறிப்பிடுவதுமாம்; பாசுரங்களைப் பார்க்கும்போதே யாரோ நன்னுதலாள் உரைத்த

தென. விளங்குமென்றதுமாம். 'வேங்கடக்கோனை நாகத்தினணையானை' யென்றும், நன்னுதலாள்கோதை யென்றும் சேர்த்து அந்வயிப்பதை விட உள்ளபடி வைத்துரைப்பதே நலம். தூது என்று தூதுப்ரபந்தத்திற்கும் தூது செய்தலுக்கும் பெயர். போகத்தில் வழுவாத என்பது புதுவையர், கோன், கோதை யென்ற மூன்றினு மிணையும். தூதுவிட்டதற்கு அநுகூலமாக ஒருவாறு போகம் கோதைப்பிராட்டிக்கு வழுவாமலிருந்தபடியால் இத்தமிழுரைப்பார் அடியாராவது திண்ணம். ஆகத்து வைத்து. இத்திருமொழியின் சுவையை நன்கு உட்கொண்டு. உரைப்பாரவனடியார் என வோதாமல் உரைப்பாரவரடியார் எனவே ஓதுவதால் உரைப்பாரவர் என்று ஒன்றாகச் சேர்த்து அடியார் என்பதற்கு அவனடியார் எனப் பொருள் கூறுவதுமுண்டு. உரைப்பார், அவரடியார் வேங்கடக்கோன், புதுவையர், கோன் (கோதை) என்றும்போலுள்ளவர்களுக்கு அடியாராகுவரென வுரையும் கூடும். அவர் என்றது பகவத் பாகவதர்களை யென்றதாயிற்று. (10)

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 8. விண்ணீல உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

சிந்துரச்செம்பொடி. 9.

(அழகரைவேண்டுதல்)

நோன்பு நோற்கப் புறப்பட்டது முதல் ஒவ்வொரு ருதுவிலும் எம்பெருமானைப் பெறவேண்டு மென்ற அவாவினாலே பல பாடு படுமிவள் கார்காலம் வந்தவாறே கார்முகில்களைக் கண்டு அவை தங்கும் வேங்கடத்துப் பெருமானுக்குத் தூது அனுப்ப முயன்றது மொழியப்பெற்றது. மழை பெய்ந்து வரும்போது அக்காலத்திற்குரிய சில பூச்சிகளும் பூக்களும் தோற்றமளித்தன. அத் தோற்றம் காரணமாக இவளுக்கு எம்பெருமான் பிரிவினாலேற்பட்ட வருத்தமும் ஆற்றாமையும் அதிகப்பட்டது. விநோதமாகப் புறப்பட்டு, தனக்கருகில் தென் வேங்கடமான திருமாலிருஞ்சோலையில் நிற்குமழகருடைய அனுபவத்தில் ஆழ்ந்தனள். ஆகவே அங்குச் செல்லாநின்றுகொண்டு அங்குள்ளவற்றை விளித்துத் தன் நிலையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனள். மேல் இரண்டு திருமொழிகளும் முன்போல் வர்ஷாகாலத்தைப் பற்றினவையாம்.

1. சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும்
இந்திரகோபங்களே யெழுந்தும் பரந்திட்டன வால்
மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறுகொண்ட
சுந்தரத்தோளுடையான் சுழலையினின்றுய்துங்கொலோ. (84)

திருமாலி ருஞ்சோலை — திருமாலிருஞ்சோலை யென்ற திருமலையிலே
இந்திர கோபங்கள் — பட்டுப் பூச்சிகளே
எங்கும் —எல்லா விடத்திலும்
எழுந்து உம் —சில மேலே கிளம்பியும், சில மலையிலே நின்றும்
சிந்துரம்செம் பொடிபோல் — ஸிந்தூரத்தின் சிவந்த தாள் களைப்போலே
பரந்திட்டன—வியாபியா நின்றன.
ஆல் —கஷ்டம்.
அன்று —தேவதைகள் அமரத்வம் வேண்டின காலத்திலே
மந்தரம் —மந்தரமலையை
நாட்டி —பாற்கடலில் கொடு நிற்க வைத்து
மதுரம் —இனிப்பான
கொழு —கொழுத்த
சாறு —ரஸத்தை
கொண்ட —கடைந்து எடுத்தவனை
சுந்தரம் தோளுடையான் — ஸுந்தரபாஹு என்ற அழகரின்
சுழலையி னின்று — சூழ்வலையிலிருந்து
உய்தும் கொல் — உஜ்ஜீவிப்போமோமோ?

திருமாலிருஞ்சோலைமலையே கண்ணுக்குக் காணப்படாதபடிப் பட்டுப் பூச்சிகள் சிறிது மழை பெய்ந்தவுடனே கீழும் மேலு மெங்கும் பரந்தன. அவன் திருப்பவளத்தை நினைப்பூட்டும் இவற்றைக் கண்டதும் அந்தோ! அத் திருப்பவளமுதம் பெறுவ(?)தன்றோ என ஏங்குகின்றேன். அமுதம் வேண்டு மென்ற தேவர்களுக்காகத் தன் பள்ளியிடமான பாற்கடலையும் கடைந்தவ னவன். மதுரச்சாறான அமுதத்திற்கும் மேலாய் மதுரக்கொழுஞ்சாறான இன்னமுதத் திருமகளைக் கொண்டவனுமான அவனுக்கு அமுதத்திலாசை யென்பது எத்தகையதெனத் தெரியுமே. தன் பாஹுபலம் முழுமையும் கொண்டு கடைந்தபோதும் அத்தோள்களின் ஸௌந்தரியம் சிறிதும் குன்றாத படி யிருக்கச் செய்தவன் அவன் அத்திருமகளுக்காக. அத்தகைய அழகன் இவ் விந்திரகோபங்களெனப்படும் சூழ்வலையில் என்னைச் சிக்கவைத்துத் திருப்பவ ளத்தை நினைப்பூட்டி வதைக்கின்றானே இனி உய்வேனோ என்றபடி. உய்தும் என்ற பன்மையானது தோழியையும் சேர்த்துக்கொண்டதாலாம். அடுத்த பாசுரத்திலே, 'ஆர்க்கிடுகோ தோழீ' என்றதைக் காண்க. மாலிருஞ்சோலை. மனத்தைக் கவரும் பெருஞ்சோலைகள் உடைய மலை. இம்மலையிலே இந்திர கோபங்கள் சிந்துவது பெரியாழ்வார் திருமொழியிலும்(4. 2.9, சிந்தப்புடைத்து) பணிக்கப்பெற்றது. .... (1)

மழை நன்றாகப் பெய்ந்து செடிகொடிகள் செழித்துப் பூத்துப் பாதிப் பதை யருளிச்செய்கிறாள்—

2. போர்க்களிறு பொரும்மாலிருஞ்சோலையம்பூம்புறவில்
தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற
கார்க்கோள் பி(ப)டாக்கள்நின்றுகழறிச்சிரிக்கத்தரியேன்
ஆர்க்கிடுகோ தோழீ அவன்தார் செய்தபூசலையே. (85)

போர் —யுத்தத்தைத் தொழிலாக உடைய
களிறு —யானைகள்
பொரும் —தரையைக் கொம்பினால் குத்திப் போர்செய்யுமிடமான
மாலிருஞ் சோலை — திருமாலிருஞ் சோலையி லுள்ள
அம் பூ —அழகிய, பூத்த
புறவில் —காடுகளில்
தார் —புஷ்பித்திருக்கும்

கொடிமுல்லை கள் உம்	முல்லைக் கொடிகளும்
தவளம்	—வெளுத்த
நகை	—சிரிப்பை
காட்டுகின்ற	—காண்பிக்கின்றன.
கார்க்கொள் பிடாக்கள்	ஓர்வகை மரக்களும்
நின்று	—உறுதியாய் நின்று
கழறி	—தீவ்ரமாகச் சொல்லி
சிரிக்க	—பரிஹஸிப்பதால்
தரியேன்	—பிழைக்கமாட்டிலேன்.
தோழீ!	—தோழியே
அவன்	—அவ்வழகனுடைய
தார்	—மாலை.
செய்த	—விளைவித்த
பூசலை	—கேட்டை
இடு கோ	வெளியிடும் வார்த்தை யானது
ஆர்க்கு	யாரிட(ம் சொல்லத்தகு) மாம்?

களிறுகள் போர் புரிந்தாவது பிடைகளுடன் விளையாட ப்ரயத்னம் செய்கின்றன. அவற்றைக் காணும்போது அழகன் வெறுமனே இருப்பதோ என வருந்துகிறேன். இந் நிலையில் என்னைப் பார்த்து முல்லைக்கொடிகள் மந்தஸ்மிதம் (புன்சிரிப்பு) செய்கின்றன. அதைக் கண்டு கார்க் கொள்பிடாக்கள் கலகலவென்று, 'இனி என்செய்வாய்' என்று பேசுகின்றன போல் சிரிக்கின்றன. (அங்கே வண்டுகளின் ஒலி அவை கழறுவது போல் இருந்தது போலும்) இந்தப் புஷ்பங்களைப் பார்க்கும்போது எனக்கு அவன் அழகிய தோள்களி லணியும் தார் நினைவுற்றது. இதனால் நான் படும் பாதையை இனி யாரிடம் சொல்வது. பெண்கள் பரிஹஸித்தால் புருஷரிடம் சொல்லலாம். புருஷர் பரிஹஸித்தால் பெண்களிடம் சொல்லிக்கொள்ளலாம். இருவரும் பரிஹஸித்தால் யாரிடம் சொல்வது? முல்லைக்கொடியும் சிரிக்கின்றன. பிடாமரங்கள் பெரிதாகச் சிரிக்கின்றன வென்றனள்.

நகைகாட்டுகின்ற என்பதற்கு, முன்குறிப்படியிற் போல் கொடிகள் சிரிப்பதே பொருளாகும். இதைக் கண்டபோது எம்பெருமான்புன்சிரிப்பு நினைவுறுதல் பற்றி, இவ்வாக்கியத்திற்கே எம்பெருமானின் நகையை நமக்குக் காட்டுகின்றன =நினைப்பூட்டுகின்றன எனவுமுரை செய்வர். காட்டுகின்ற என்பது பன்மை வினைமுற்று. கார்க்கோள். கார்=சினை அல்லது அழகு. அதைக் கொண்ட எனப் பொருள் உரைப்பர். ககரம் இரட்டித்திருப்பது முன் பின்னடிகளோடு இணங்குவதற்காக என்ன வேண்டும். கார்க்கோள் என்ற பெயர் கொண்ட ஸ்தாவரமுமுண்டு. அது குடைவேல்மரம், ஒருவகைக்கொள் என்றவாறும். பிடா என்று ஒருவகை மரத்துக்குப் பெயர். படா என்றது வழக்குச்சொல்லா கலா மென்பதுண்டு. படாம் என்றே பெருங்கொடிக்குப் பெயராம். நின்று என்றது கொடிபோலன்றி மரமாய் நன்கு நிற்பதை விளக்கும். முல்லை சிரிப்ப தென்றதால் புணர்வதற்கு முன்னுள நிலையும், படாக்கள் முட்டாக்கிடப் பூத் திருப்பதைப் பணித்ததால் புணர்வும் நினைக்கப்படு மென்பர். இடுகோ என்ப தற்கு இடும்கோ=அதாவது சொல் எனப் பொருள் இருக்கும். வேறு பொருள் கூடுமாகிலும் கொள்க. இடுகவோ என்பது இடுகோ வென வாயிற் றென்னலுமாம். .... (2)

திருப்பவளமும், தாரும், புன்னகையும் நினைவுறும்படி செய்தவற்றைக் கண்டு தவிப்பதைக் கூறின பிறகுத் திருமேனிவண்ணம் கண்டு தவிக்கின்றமை கூறப்படுகிறது—

3. கருவிளையொண்மலர்காள் காயாமலர்காள் திருமால்
உருவொளிகாட்டுகின்றீரெனக்குய்வழக்கொன்றுரையீர்.
திருவிளையாடுதிண்டோள்திருமாலிருஞ்சோலைநம்பி
வரிவளை யில்புகுந்து வந்திபற்றும் வழக்குளதே. (86)

திருமால் —ச்ரிய:பதியினுடைய
உரு —திருமேனியின்
ஒளி —காந்தியை
காட்டுகின்நீர் —காண்பிக்கின்ற
கருவிளை —காக்கண மெனப்படும்
ஒண் —அழகிய
மலர்காள் —புஷ்பங்களே !
காயாமலர்காள் —காயாப் பூக்களே!
உய் வழக்கு ஒன்று —எனக்கு உஜ்ஜீவிக்கக் காரணமொன்றை
உரையீர் —உரைப்பீர்களா?
(உரைத்தல் முடியாது). ஏனெனில்,

திரு —பெரியபிராட்டியாருடன்
விளையாடு —விளையாடுகின்றவனும்,
திண்தோள் —திடமான தோள்கள் உடையவனும்,
திருமாலிருஞ்சோலை நம்பி —திருமாலிருஞ்சோலையில் கல்யாணகுணங்கள் நிறைந்துள்ளவனுமானவன்
இல் புகுந்து —எனது இல்லத்தில் தானே நுழைந்து
வரிவளை —(என்) அழகிய வளைகளை
வந்தி பற்றும் —வருத்திக் கொண்டுபோனதாகிற
வழக்கு —நியாயம் தான்
உளதே —இருக்கின்றதே

பெரியபிராட்டியோடு புணர்ந்துள்ள பெருமானுடைய திருமேனியின் ஒளி போன்ற ஒளியுள்ள உங்களைக் கண்டதும், அவளும் அவனும் விளையாடுவது எனது மனத்தில் நின்றது. நான் உய்ய இது போதுமோ. என்னுடன் அவன் விளையாடுவது தோற்றும்படி யேதேனும் செய்தீர்களாகில் நான் உய்யக் கூடும். இப்போதும் உய்யக்காரணமொன்று உரைக்கவல்லீர்களாகில் உரையுங்கோள்: கேட்கிறேன். 'உய்யக்கூடாதபடி என்ன விளைந்தது இப்போது' என்கிறீர்களோ, கேளுங்கள். நீங்கள் திருமாலுருவொளி காட்டினதால் திருவிளையாடுதிண்டோள் நம்பி என் நெஞ்சு நிறையப் புகுந்தான். அவனை யணைவதற்கு முயன்று, மாட்டாமே வருந்தினேன். என் வளைகளெல்லாம் கழன்று விழுந்தன. இப்படி யழிய வழக்குளதே யன்றி உய்ய வழக்கைக் காணேன். நீங்களாவது உரைப்பீர்களோ? அழிக்க வந்த நீங்கள் இது உரைப்பதேது ? உங்களால் உரைக்கவும் முடியாதென்றபடி. எம்பெருமான் திருவுடன் கூடாத போது காயாம்பூ, கருவிளைப்பூ என்றவற்றின் புகர் பெறுமென்று வைத்து இவை திருவிளையாடுநம்பி யுருவொளி காட்டினதாகக் கூறினள். திருவிளையாடு. பெருமான் பத்தர்களைப் பாராட்டாமே யிருந்தபோது திரு அவனுக்கு முகம் கொடாமலிருக்கவே அவன் நம்பியாய்த் திருமாலிருஞ்சோலையில் புகுந்தான். 'ஆரியர்களிகழ்ந்த ம்லேச்சபூமியிலுள்ளார்க்கும் ஸுலபனானான்' என்றார் பெரியவாச்சான்பிள்ளை. இப்படி வந்ததால் திருவும் விளையாடச் சேர்ந்தாள். அதனால் மிகவும் மகிழ்ந்து திண்டோளனானான். 'இப்படிப்பட்டவன் அவன் தோள் பருத்தாப் போலே என் கையுமிருக்கவேண்டு மென நினைக்காமே கைவளை கொண்டானே. இது வழக்கோ' என்கிறாள். திருவிளையா டென்பதைத் தோளுக்கு விசேஷணமாகவும் சேர்ப்பதாம். இல் புகுந்து. திருமாலிருஞ்சோலையே இவளது

இல்லாம். அவனது இல் பரமபதம். அல்லது இல் என்று தனது நெஞ்சத்தைச் சொன்னதாம். புஷ்பத்தைக் கண்டு அவனை நினைத்து இளைத்து வளைபிழந்ததையே அவன் வந்துகொண்டதாகக் கூறினள். இவள் திருமாளிகைக்கே வந்து கலந்து பிரிந்தானெனவும் கொள்வர். வந்தி பற்றும் வழக்குளதே என்பதற்கு பற்றும் வந்தி வழக்காமோ எனவு முரையாம். வந்தி= பலாத்காரம். (3)

இவளை நலிவதென்ற பரீட்சையிலே எம்பெருமான் தேற்சி பெற விரும்பினன். ஐந்து வஸ்துக்களைக் கொண்டு இவளுடைய பஞ்சப்ராணன்களையும் பஞ்சபூதமயமான உடலையும் வதைக்க நினைத்தான். முதலில் கருவிளை, காயாமலர்கள் என்ற இரண்டு கிடைத்தன. 'ஐந்தில் இரண்டுக்குப் பழுதில்லை. ஐந்துக்கு இரண்டு பெற்றாலும் பரீட்சையில் தேற்சியே' என்றுவந்தான். ஐந்துக்கு ஐந்தே பெறும் நிலைமைக்கு வந்தான். அதனால் இவளுக்கு எல்லையற்ற வாதையேற்பட்டது. அதன்மேல் மொழிகின்றனள்—

4. பைம்பொழில்வாழ்குயில்காள் மயில்காள் ஒண்கருவிளைகாள்
வம்பக்களங்கனிகாள் வண்ணப்பூவைநறுமலர்காள்
ஐம்பெரும்பாதகர்காள் அணிமாலிருஞ்சோலைநின்ற
எம்பெருமானுடையநிற முங்களுக்கென்செய்வதே. (87)

பை	—பரவியிருக்கும்	பூவை மலர்காள்	காயாம்பூக்களே !
பொழில்	—சோலைகளில்	ஐ பெரு பாதகர்காள்	இவ்வாறு ஐந்தாயுள்ள மஹாபாதகிகளே!
வாழ்	ஸுகமாய் வஸிக்கின்ற	அணி	—அழகிய
குயில்காள்	—கோகிலங்களே !	மாலிருஞ் சோலை நின்ற	திருமாலிருஞ்சோலையில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கும்
மயில்காள்	—மயில்களே !	எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு	
ஒண்	—அழகிய	என் செய்வதே	எதற்காக ?
கருவிளைகாள்	—காக்கணம் பூக்களே !		
வம்ப களங் கனிகாள்	புதிய களாப்பழங்களே !		
வண்ணம் நறு	நிறமும் மணமும் கொண்ட		

ஐம்பெரும்பாதகர்கள். வதைத்துவரும் இவ்வைந்து வ்யக்திகளாய் பாதகர்களென்னப்பட்டதோடு மஹாபாதகிகளாயிருத்தல் பற்றியும் பெரும்பாதகர்களெனப்பட்டன. நம்மைக் காணுதபோது, நம் நிறம் கொண்ட இத்தகைய பொருள்களைக் கண்டாவது ஆறுதல் பெறட்டுமென்று உங்களுக்கு இந் நிறம் கொடுத்திருப்பானென்ன நினைத்து உங்களைக் காணலானேன். இது தான் ஸமயமென்று என்னை நீங்கள் நலிவதைக் கண்டபோது, 'எம்பெருமானுடைய நிறமுங்களுக்கெதற்காக? இதற்காகவா ஏற்பட்டதென ஆராயவேண்டிற்று என்றாள், 'என்செய்வதே' என வினவினுள். 'ஶரணாகதஹம் ஸ்த்ரீஂஷு ஹ்ரீஹஜூஂஷு நஶாவஹெ‌ஸ' என்றபடி உங்களுக்குப் பெரும்பாவத்தை விளைவிக்கவே இந்நிறமேற்பட்டது. உங்களிடம் நெருங்கியதால் நான் சரணாகதையாயுமானேன். ஸ்திரீ யென்பது தெரிந்ததே. என்னை நலிந்தால் இதற்கு மேற்படப் பாப முண்டோ என்றதாம். ... ... (4)

திருமாலுருவொளி கொண்டவை, அவற்றின் அருகில் வந்ததற்கே நம்மை ரக்ஷிக்கவேண்டுமென நினைத்து அவற்றின் மேல் குறை கூறுவது கூடாது. 'ஸர்வஜ்ஞோऽபி ஹி விச்வேச: ஸதா காருணிகோऽபி ஸந். ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே' என்கிறபடி அபேக்ஷித்தால் தானே திருமால் ரக்ஷிப்பது. அவனது வண்ணம் கொண்ட இவையும் நாம் அபேக்ஷித்தால் ரக்ஷிக்கும். 'ந ஹந்யாச் சரணம் ப்ராப்தம் அபி சத்ருமவஸ்திதம்' என விருப்பதால் சரணம் புகுந்தவன் சத்ருவாயினும் காக்கப்படவேண்டியவன். ஆகையால் சரணாகதி செய்யலாமென நினைத்தாள், ஐந்து பேரில் யாரைச் சரண்புகுவதென விளங்கவில்லை. இதற்காக ஆராயும்போது மற்றும் பல வஸ்துக்கள் எம்பெருமானுக்கு ஒருபடி ஒத்தவைகளாகக் காணப்பெற்றன. இவைகளைக் கேட்டுத் தெளிந்து சரண மடையலா மென்று அவற்றை விளித்துக் கேட்கின்றனள்—

5\. துங்கமலர்ப்பொழில் சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
செங்கட்கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்
தொங்கியவண்டினங்காள் தொகுபூஞ்சுனைகாள் சுனையில்
தங்குசெந்தாமரைகா ளெனக்கோர் சரண் சாற்றுமினே. (88)

துங்கம் —உயர்ந்தனவும்
மலர் —புஷ்பங்கள் நிறைந்தனவுமான
பொழில் —சோலைகளால்
சூழ் —சூழப்பெற்ற
திருமாலிருஞ்சோலை —திருமாலிருஞ்சோலையென்ற திருப்பதியிலே
நின்ற —நின்ற திருக்கோலமாயெழுந்தருளியிருக்கும்
செம் கண் —செந்தாமரைக் கண்ணனை
கரு முகிலின் —நீலமேகப் பெருமானின்
திரு உரு போல் —திருவுடன் சேர்ந்த மேனி போலே
மலர் மேல் தொங்கிய —புஷ்பக்களின் மேல் நுனியில் வீற்றிருக்கும்
வண்டு இனங்காள் —கூட்டம் கூட்டமாயுள்ள வண்டுகளே!
தொகு —(மழைகாலமாகையாலே). மிகவாகக் கூடின
பூ —அழகிய
சுனைகாள் —ஊற்றுக்குளங்களே!
சுனையில் தங்கு —அவற்றில் வளராநின்ற
செந்தாமரைகாள் —செந்தாமரைப் பூக்களே!
எனக்கு —பல பொருள்களைக் கண்டு தடுமாறு மெனக்கு
ஓர் சரண் —ஏதேனுமொரு கதி
சாற்றுமின் —வெளிப்படையாக விளக்கிச் சொல்லுவீர்களாக.

மலர்ப் பொழில் மாலிருஞ்சோலையில் நின்ற திருமால் போல் விளங்கின, மலர்மேல் நின்ற வண்டினங்கள். ஏன்? அவன் கருமுகில் போலிருப்பதால் நிறமொத்திருந்ததாதலின். ஓர் சரண் சாற்றுமின். வெகுபேரைச் சரணமடைவது தகாது. ஸ்வதந்த்ரரான பலரைத் தனித்தனியே பற்றவேண்டும். பல சரணாகதிகள் பயன்படா. ஐம்பெரும் பாதகர்களென்று சிலரை நான் வெறுத்தேனே; அவற்றில் ஒருவரையா, அல்லது உங்களில் ஒருவரையா யாரை நான் சரணடைவது ? வருத்தம் நீங்கி வாழ வொரு வழி சொல்லுங்கள் என்று வினவினாள். (5)

தொங்கிய வண்டினங்கள் திரிந்து ரீங்காரம் செய்தன. அதைக் கேட்டாராய்ந்தாள். அப்போது அவளுக்குத் தோன்றிற்று. பரமைகாந்தி

குலத்திற் பிறந்த நாம் வேறொரு சரண் தேடுவது கூடுமோ? எம்பெருமான் பல வஸ்துக்களுக்குத் தன் நிறத்தைக் கொடுத்திருப்பது அவற்றைக் கண்டபோது தன்னை நினைத்துத் தம் பாபம் போக்குவர் சிலரென்ற நோக்கத்தினாலே யாம். அவ்வளவிலே ஆறுதல் பெறுமே எம்பெருமானைப் பெற்றன்றி தரிக்கமாட்டாத நிலையி லிருப்பவர்கள் வேறு வழியில் எம்பெருமானைப் பெற முயற்சி செய்ய வேண்டும். பலன் கொடுக்கமாட்டாத இவற்றை யெதற்குச் சரணம் பற்றுவது? எம்பெருமானையே இனி வேண்டிக்கொள்வோம். அதற்கு நமக்கு விரையும்படி செய்யவே இவை நம் கண்ணுக்கிலக்காயின என்றவாறும் அது. 'இதைத் தான் வண்டினங்கள் கூறுகின்றன' வெனவும் நினைத்திருந்திருப்பாள். உடனே யவனை வேண்டிக்கொண்டனள்—

[ஒவ்வோரிடத்திலும் முன் பாசுரத்திற்கும் மேற்பாசுரத்திற்கும் ஸங்கதி யென்ன, அதன் மேல் அது வந்ததற்குக் காரணம் யாதென்ற ஆராய்ச்சியைப் பெரும்பாலும் பூர்வர்கள் செய்தாரல்லர். ஆகவே இங்குமவர் இவ்வாராய்ச்சியி லிழியவில்லை. ஆயினும் இப்பாசுரமும் இதற்கு மேற்பாசுரமும், இவற்றிற்கு முன்னும் பின்னு முள்ள பாசுரங்கள் போலே மாரிகாலத்து மலர் முதலிய வற்றைப் பற்றிப் பிறவாமே வேறு நடையிலிருப்பதால் சிலர் இதனைக் கண்டு இதற்குக் காரணம் கூற விழிந்து ஒருவாறு இணைப்பர்—அதாவது—'எனக்கோர் சரண் சாற்றுமினே' என்றவாறே இவள் த்வயாநுஸந்தானம் பண்ண, அதில் கைங்கரியத்தைக் கூறும் உத்தரபாகத்தை நினைத்ததும் கைங்கரியத்திலே அவா பிறக்க, செய்கையில் தான் நினைத்த கைங்கரியத்தைக் காட்ட வியலாமல் வாசிகமான கைங்கர்யத்தை விரும்பிச் சொல்லுகின்றனள்' என்பதாம். இதைப் பற்றிய விசாரம் நிற்க. மேன்மேல் பாசுரம் பிறந்ததற்குக் கீழ் நாம் கூறினபடியை நன்கு நோக்குக.]

6. நாறுநறும்பொழில்மாலிருஞ்சோலைநம்பிக்குநான்
நூறுதடாவில்வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறுதடா நிறைந்த வக்காரவடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையானின்றுவந்திவைகொள்ளுங்கொலோ. (89)

நாறும்	மண்ணிலே மணமுள்ளதும்
நாறு பொழில்	பரிமளம் வீசும் சோலைகள் உள்ளதுமான
மாலிருஞ் சோலை	திருமாலிருஞ்சோலையிலிருக்கும்
நம்பிக்கு	கல்யாண குண பூர்ணனுக்கு
நான்	
நூறு தடாவில் வெண்ணெய்	நூறு பானைகள் நிறைய வெண்ணெயை
வாய் நேர்ந்து	ஸமர்ப்பிப்பதாக விஜ்ஞாபித்து
பராவி வைத்தேன்	வணங்கி நின்றேன்;
நூறு தடா நிறைந்த	நூறு பானைகள் நிறைய விருக்கும்
அக்கார வடிசில்	ஓர் வகை வெல்லப் பாயஸத்தையும்
சொன்னேன்	ஸமர்ப்பிப்பதாகச் சொல்லிக் கொண்டேன்.
ஏறு திரு உடையான்	மேன்மேல் வளரும் திரு உடையவன்
இன்று வந்து	
இவை	இவற்றை
கொள்ளும் கொல்	கொள்வானோ?

எம்பெருமானே சரணென்று நின்றாள் இவள். உலகில் பல க்ஷேத்ர பலன்களைக் கோரி பகவானுக்குத் தளிகை யிடுவாருளர். இவள் அவன் வருவதையே பலனாக்கி அதற்கு இவ்வாறு ஸமர்ப்பிப்பதாகச் சொல்லிக்கொண்டனள். ஞானம், பக்தி, தர்சனம் என்றாற் போலுள்ள பலன்களையும் பரமைகாந்தி ப்ரார்த்தனை பண்ணிப் பெறலாமே. ஆகவே இவள் ஒர் சரண் இன்னதெனத் தெளிந்து எம்பெருமானைப் பராவி ப்ரார்த்தனை செய்து கொண்டனள். அதைத் தனக்கு அனுகூலமாயிருக்கும் வண்டினங்கள் போன்றவற்றுக்கும் தோழிக்கு மிவ்வாறு கூறினள்.

நாறும் என்பது திருப்பதிக்கு விசேஷணம்; நம்பிக்குமாம். ஸர்வகந்தனென்று அவனை வேதமோதிற்று. வெண்ணெயளைந்த குணுங்குள்ளவனுக்கு நாற்றம் இருப்பதும் இவள் வெண்ணெய் ஸமர்ப்பிக்க முயன்றபோது நினைவுற்றது போலும். நறுபொழில்களாலே நாறும் என்பதை விடக் கீழ் கூறினது யுக்தமாம். பராவி. பராவுதல் வணங்கல். வாய்நேர்ந்து பராவுதலாவது வாயால் ஸமர்ப்பித்தலென்பர் சிலர். ஏறு திருவுடையான். வந்து கொண்டானாகில் அவனுக்குச் செல்வம் ஏறும். திருமார்வில் ஏறியுள்ள திருவும் களித்து அசலாமலிருப்பள். இருவருக்கு மாம் நான் ஸமர்ப்பிப்பது. நூறு நூறு தடாவாக எல்லாம் ஸமர்ப்பிக்க என்னால் முடியுமோ என்று யாரும் நினைக்கவேண்டா. ஏறு திருவுடையான் வந்த பிறகு ஐச்வர்யத்திற்குக் குறைவேது ?

இங்குச் சொல்லவேண்டும் ஐதிஹ்யத்தை அடுத்த பாசுரவுரையிற் காண்க. (6)

பரத்வாஜமஹர்ஷியைக்கொண்டு பெரும் விருந்து நடத்திக் கொண்ட பெருமான் என்னைக் கொண்டு இதை நடத்திக்கொள்வதும் கூடுமே. ஆகவே ஒன்றுக்கு லக்ஷமாகக் கூட ஸமர்ப்பிக்கவல்லேனென்கிறாள், அவன் வருவதென்பது எத்தகையதென்பதையும் விளக்குகிறாள் —

7. இன்றுவந்தித்தனையுமமுதுசெய்திடப்பெறில் நான்
ஒன்றுநூறாயிரமாகக் கொடுத்துப் பின்னுமாளும்செய்வன்
தென்றல்மணம்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரானடியேன் மனத்தேவந்துநேர்படிலே. (90)

தென்றல் —தெற்குதிக்குக் காற்று
மணம் —பரிமளத்தை
கமழும் —வீசும்படியிருக்கும்
திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்ற —நின்றகோலமான
பிரான் —உபகாரகன்
இன்று வந்து—இன்றைத்தினம் இங்கெழுந்தருளி
இத்தனையும் —அடியேன் ஸமர்ப்பித்தவற்றையெல்லாம்
அமுதுசெய்திட } திருவுள்ளம்பற்ற
பெறில் —நான் அவனைப்பெற்றால்—அதாவது
அடியேன் —தாஸ்யம் செய்யுமென்னுடைய
மனத்தே —மனதிலேயே
வந்து — எழுந்தருளி

நேர்படில்	—எதிரிலும் ஸேவை தந்தருளி னால்	கொடுத்து	—ஸமர்ப்பித்து
ஒன்று	—ஒரு தடாவுக்கு	பின்னும்	—அதற்குப் பிறகும்
நூறு ஆயிரமாக	லக்ஷம் தடாவாகவும்	ஆள் உம்	—கைங்கர்யத்தையும்
		செய்வன்	—செய்துவருவேன்.

முன் பாசுரத்திலே, வாய்நேர்ந்து என்றும், சோன்னேன் என்றும் கூறினதற்கு 'என்னால் உண்மையில் ஸமர்ப்பிக்கமுடியாததாலே வாசிகமான கைங்கர்யம் செய்கிறேன்' எனப் பொருளன்று. வெளியில் வஸ்துக்களை சேகரித்து ஸமர்ப்பிக்க முடியாதபோது மாநஸமான ஸமர்ப்பணம் செய்வது போல் இவ்வாசிகஸமர்ப்பணமும் ஒரு கைங்கர்யமாய் பிரஸித்தமன்றே. ஆகவே தன்னுடைய மநோரதம் நிறைவேறினால் தான் எம்பெருமானுக்கொருவகை ஸமர்ப்பணம் செய்வதாக உலகத்தார் அவனை வேண்டிக்கொள்வது போல் செய்ததே இது. ஆனால் இது க்ஷுத்ரபலனுக்காக வன்று. இவள் வேண்டினதற்கிணங்கி அவன் வந்திருந்தால் இவள் இதனைச் செய்தே யிருப்பள். 'இத்தனையுமமுது செய்திட' என்றனளே. 'உன்னால் இவ்வளவு செய்யக் கூடுமோ? மேலும் அவன் வரவுக்குத் தக்க நீ தெரிவிக்கும் நன்றி யிவ்வளவு தானோ? மிகவும் சொற்பமான பலனை வேண்டுபவர் கூட இவ்வளவு செய்திடுவரே' என்ற வினா எழ, இம் மேற்பாசுரம் பிறந்தது. இதன் கருத்தாவது—'நான் இவ்வளவே யென்ன, லக்ஷம் லக்ஷமாகக் கூட ஸமர்ப்பிக்கவல்லேனாவேன். எவ்வளவு ஸமர்ப்பித்தாலும் அவனுடைய வரவுக்கீடாகாதென்னில், அவனுக்குப் பிற்காலம் முழுதிலும் ஆளும் செய்வன். இதற்கு மேலென்ன செய்யவடுப்பது சேஷத்தன்மை வகிப்போர்க்கு' என்றதாம்.

'இத்தனையு மமுது செய்யுமாறு நான் திருமாலிருஞ்சோலைக்கு வந்தேயிருக்கிறேனே' யென்று அவன் மொழிவானெனக் கருதி, செய்திடப் பெறில் எனத் தான் கூறினதை விவரிக்கின்றாள் தென்றல் இத்யாதியான மேலீரடிகளால். அவன் அதனுள் வந்து நின்றது போதாது. அடியேனுக்குத் தனியே நேர்படவேண்டும், அத்ரிபகவான் ஆச்ரமத்தில் நேர்பட்ட வண்ணம். அதிலும் அவன் வருவது தெரியாதபடி யாரோ வருவது போல் வந்தால் யான் என்ன செய்வது? என் மனத்தே வந்து நேர்படவேண்டும். முதலில் மனத்தில் தான் வரும் வேஷத்துடன் வந்து நிற்கவேண்டும். அங்ஙனமே நேர்படவேண்டும்=எதிரிலும் வந்து விளங்கவேண்டும், நான் அணைத்து எனது அவாவை நிறைவேற்றிக்கொள்ளும் படி. இப்படி எழுந்தருளின தக்கணமே முன் சொன்னவற்றை ஸமர்ப்பிக்கிறேன். இங்கு இத்தனையு மமுதுசெய்திடப்பெறில், ஒன்று நூறுயிரமாகக் கொடுத்துப் பின்னு மாளும் செய்வன் என வருளினபடி.

இங்கோர் ஐதிஹ்யம் சொல்வர். அதாவது—எம்பெருமானார், 'நூறு தடா நிறைந்த வெண்ணெயும் அக்காரவடிசிலும் சொல்லிப் பிரார்த்தித்து வைத்தாள். கொடுத்தளாகச் சொல்லக் கேட்டிலோம். ப்ரார்த்தித்தவற்றை யிறுக்கை அந்த ஸந்தானத்திற் பிறந்தார்க்குப் பரம்' என்று தாம் அவற்றை

அழகருக்கு அமுதுசெய்வித்தார் என்பதாம். இப்படிச் செய்வித்து ஸ்ரீவில்லி புத்தூருக்கு எழுந்தருளினபோது, ஆண்டாள் ஸந்தோஷித்துத் தன் மநோரதம் நிறைவேற்றினதால் தன் தமையனாராக நினைத்து அண்ணரே என்றாள். அதனால் அவள் இவருக்குத் தங்கைமுறையானதை விளக்க, 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே' என்றது என்பது முண்டு. இவ்வைதிஹ்யத்தில் விரோதம் யாது மில்லை. 'நம்மால் வாசிக கைங்கர்யம் தான் செய்யமுடியு மென்று நினைத்து அவ்வளவே தான் அவள் செய்ய முன் வந்தது' என்று கூறினால் பெரிய வாச்சான்பிள்ளையுரைக்குப் பொருந்தாது. 'வரிசிலைவாண் முகத்தென்னைமார்' என்றதற்கேற்ப, 'அண்ணரே!' என்றதும் பொருந்தும். ஆகிலுமிங்கு,-அழகரை அற்புதமாய் இடைவிடாது அநுஸந்தித்துக்கொண்டு ஆண்டாள் திவ்யஸூக்தியின் பொருளை யருளிச்செய்யும்போது எம்பெருமானார்க்கு அழகர் மனத்தே வந்து நேர்பட்டுநின்றார். ஆகவே ஆண்டாளிதற்குச் செய்வதாகச் சொல்லிக் கொண்டவற்றைத் தாம் செய்யவேண்டு மென்று திருவுள்ளம் பற்றி அழகருக்கு ஸமர்ப்பித்தார் என்றவாறு இதன் உண்மை யிருக்கலா மென்று தோன்றுகிறது. .... (7)

இப்படி, 'ஓர் சரண் சாற்றுமின்' என்றவளுக்கு எம்பெருமானைப் பிரார்த்தனை செய்வதே சரணெனத் தோற்ற, அவ்வாறு செய்து அவன் வரவை யெதிர்பார்க்கின்றவளாய், தற்சமயம் காலையில் கற்றும் குருவிகளின் குரலைக் கேட்டு, அவன் பிரார்த்தனைக் கிணங்கிவருவானென்றே நினைத்துச் சொல்லுகிறாள். பக்ஷிகள் குரலைக் கொண்டு பந்துக்கள் வருவதறிவது சிலர்க்குக் கூடுவதே. அவ்வண்ணம் இவளும் அறிந்துரைக்கின்றனள் போலும்—

8. காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள்
மாலின் வரவுசொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ
சோலைமலைப்பெருமான் துவராபதியெம்பெருமான்
ஆலினிலைப்பெருமானவன்வார்த்தையுரைக்கின்றவே. (91)

கரிய குருவி கணங்கள்	வலியன்போன்ற கறுத்த குருவிக்கூட்டங்கள்	சோலைமலை பெருமான்	திருமாலிருஞ்சோலைப் பிரானும்
காலை எழுந்து	—காலையில் விழித்துக்கொண்டு	துவராபதி எம்பெருமான்	துவரைப்பிரானும்
இருந்து	—என் செவிபட இருந்து		
மாலின் வரவு	வ்யாமோஹமுள்ள பிரான் எழுந்தருளுவதை	ஆலின் இலை பெருமான்	வடபத்ரசாயியுமான
சொல்லி	—எனக்குத் தெரிவிக்குமாறு	அவன்	—அத்தமாலைப் பற்றிய
மருள் பாடுதல்	மயங்கும்படி ஒருவகைப் பாட்டைப் பாடிவருமிது	வார்த்தை	—பேச்சை
மெய்ம்மை கொல்	உண்மையானது தானோ?	உரைக்கின்றவே	பேசுகின்றனவே.

'இன்று வந்தித்தனையு மமுது செய்யும்படி நேர்படவேண்டு' மென்ற எனதுப் பிரார்த்தனைக்கிணங்கி அழகர் வருகிறார் என்று இக்கரிய குருவிக் குரலைக் கேட்கு மெனக்குத் தெரிகிறது. 'இன்று' என்று நான் சொன்னதற்கேற்ப, காலையிலேயே இவைகள் இவ் வரவைத் தெரிவிக்கின்றன. மாலான

படியாலே உன்னிடம் வியாமோஹம் கொண்டான், வருகிறானென்கிறன போலும். மெய்ம்மைகொலோ. நான் நினைத்தபடி உண்மையிலிருக்குமா, அல்லது நான் சித்தப்பிரமத்தினாலே பேசுகிறேனா என்றபடி. இப்படியாராய்ந்து இது உண்மையே என்று மேலீரடிகளால் உறுதிப்படுத்திக்கொள்ளுகிறாள். இவை சொல்லுவதைக் கேளுங்கள்—நீ பிரார்த்தனை செய்துகொண்டது யாரிடமோ, அச்சோலைப்பிரானும், உன்னைக் கனவினில் மணந்த துவரைப்பிரானும், உனது குலதெய்வமான வடபெருங்கோயிலுடையானுமான அந்த மாலே வருகின்றானென்று இவ்வளவு விவரமாக இவை, உரைக்கின்றபோது ஏன் ஸந்தேஹப்படவேண்டுமென்றபடி. (8)

அவன் வந்து சேருவதற்கு முன்னமே நான் மகிழும்படி அவன் சங்கும் சார்ங்கமும் கொண்டு ஒலிக்கவேண்டுமென்கிறாள்—

9\. கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில்கொன்றைகள்மேல்
தூங்குபொன்மாலைகளோ டுடனாய்நின்றுதூங்குகின்றேன்
பூங்கொள்திருமுகத்து மடுத்தூதியசங்கொலியும்
சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வதெஞ்ஞான்றுகொலோ (92)

கோங்கு —கோங்கு மரங்கள்
அலரும் —மலர்ந்து விளங்கும்
பொழில் —சோலைகளையுடைய
மாலிருஞ் சோலை } திருமாலிருஞ்சோலைமலையில்
கொன்றைகள்மேல் } கொன்றை மரங்களின் மேலே
தூங்கு —தொங்குகின்ற
பொன் —பொன் நிறமான
மாலைகளோடு —பூங்கொத்துக்களோடு
உடனாய் நின்று } கூடப் பிறந்தாற்போலிருந்து
தூங்குகின்றேன் } சோர்ந்து கிடக்கிறேன்

பூ கொள் —(மலர்ந்த பூப்போலே) அழகு கொண்ட
திருமுகத்து —திருப்பவளத்தில்
மடுத்து —வைத்து
ஊதிய —அவனால் ஊதப்படும்
சங்கு —பாஞ்சசன்னியத்தின்
ஒலியும் —த்வனியும்
சார்ங்கம்வில் —சார்ங்கமென்ற அவனது வில்லின்
நாண் —நாண்கயிற்றின்
ஒலியும் —டங்காரமும்
தலைப்பெய்வது } என் செவிக்கு நெருங்குவது
எஞ்ஞான்று கொல் } எப்பொழுதோ?

பெருமானுக்கு ஸமர்ப்பிக்கத் தகும் பூக்கள் நிறைந்த பொழில்சூழ்ந்த திருமாலிருஞ்சோலையிலே கோங்கினும் கேடான கொன்றைப்பூக்களுக்கு என்ன கதி? அழகரை யலங்கரிக்க அவற்றிற்கு பாக்யமேது? கொன்றைசூடியாவான் சிவன் தானே. அவற்றிற்கும் வேயர்குலப்பெரியோரின் பெண்ணான எனக்கும் என்ன வாசியிருக்கிறது? எம்பெருமானுக்கு ஆகாதபோது கொன்றைப்பூங்கோதையைப் போல் தானே விட்டுசித்தர் கோதையான என்னையும் பாவிக்கவேண்டும். ஆகையால் சுற்றார் உற்றார் என்னைப் பைத்தியக்காரியாக நினைத்துக் கொன்றைப்பூவாக்கினார்களாகில் என்ன விந்தை? இனி, '[illegible]' என்றபடி சிவனே திருவடி வணங்கும்போது அவன் ஜடையிலுள்ள பூக்களெல்லாம் பெருமானின்

பாதுகைகளிற் புகுவது போல் இவர்களே என்னை யிவன்திருவடி' சேரச் செய்யும்படி எம்பெருமான் இங்கு எழுந்தருளவேண்டும். எழுந்தருளுவதை எதிர்பாரா நிற்குமெனக்கு, ருக்குமணிப்பிராட்டிக்குக் கண்ணனின் சங்கொலி செவியில் விழுந்தது போலவும், சீதைப்பிராட்டிக்கு, ராவணஸம்ஹாரம் செய்யப் புகுந்த இராமபிரானின் சார்ங்கவொலி பட்டது போலவும், அவ் விருவொலியும் செவியில் விழுவது எப்பொழுதோ? அவ்விருவரின் பாடு நான் ஒருத்தி படுகிறேனே. குருவிகளுரைத்தது உண்மை யென்றவ்வொலியிலிருந்தறிந்து களிக்கவேணு'மென்றனள். கோங்கு கர்ணிகாரம். (மணமற்றது. கு. 3. 28) (9)

10. சந்தொடுகாரகிலும் சுமந்துதடங்கள்பொருது
வந்திழியும்சிலம்பாறுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனைச்சுரும்பார்குழற்கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ்ப்பத்தும்வல்லார் திருமாலடிசேர்வர்களே. (93)

சந்தொடு —சந்தன மரங்களையும்
கார் அகிலும்—கரிய அகிற்கட்டைகளையும்
சுமந்து —பெயர்த்தெடுத்துக் கொண்டும்,
தடங்கள் —மேடான இடங்களை
பொருது —அறுத்துக்கொண்டும்
வந்து இழியும்—வேகமாய் வந்து ப்ரவஹிக்கும்
சிலம்பாறு —நூபுரகங்கையை
உடை —உடையதான
மாலிருஞ் சோலை } திருமாலிருஞ்சோலையில்
நின்ற —நின்ற திருக்கோலம் கொண்ட
சுந்தரனை —அழகரை
சுரும்பு —வண்டுகள்
ஆர் —நிறைந்த
குழல் —கூந்தலையுடைய
கோதை —ஆண்டாள்
தொகுத்து —கருத்தையும் சொற்களையும் சேர்த்து
உரைத்த —தோற்றுவித்த
செந்தமிழ் —செம்மையான தமிழாலான
பத்தும் —பத்துப்பாசுரங்களையும்
வல்லார் —கற்றவர்
திருமால் அடி } ச்ரிய:பதியின் திருவடிகளை
சேர்வர்கள். —பெறுவர்கள்.

எம்பெருமான் நேர்படவில்லையே யென்ற வருத்தம் முதலான தடைகளை யெல்லாம் அறுத்துத் தள்ளிக்கொண்டு, சந்தனமும் அகிலும் சேர்ந்தாற் போல் பலவகை மணம் கமழ்ந்து விளங்கும் திருவுடன் சேர்ந்த அழகரின் அற்புதங்களான கல்யாணகுணங்களைச் சுமந்திடுபட்டு வேகமாகப் பெருகிச் சிலம்பாறுபோலே யுள்ள இச்செந்தமிழ்மாலைகளிலே அவகாஹிப்பவர் அவனடி சேர்பவராவரென்றபடி. தடங்கள். குளங்களென்னவுமாம். சுரும்பார் குழல். சூடிக்கொடுக்க இவள் குழலில் மாலை சாத்திக்கொண்டிருப்பதை யறிவித்தபடி. (10)

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 9. சிந்துரச்செம்பொடி உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

கார்க்கோடல் 10.

(வல்ல பரிசு விசாரித்தல்.)

வேண்டினபடி வருவானென்று எதிர்பார்த்தும் அவன் வரவில்லை. வருவதற்கொரு குறியும் காணவில்லை. யாரிடம் முறையிடுவது கூடு மென வாராய விழிந்தாள். இவள் வேண்டியும் அவன் வராமலிருந்தபோது இவள் கண்ணிற் படும் பூக்கள் முதலியன இவளை மிகவும் பாதிக்கின்றனவாகத் தோற்றின. அதன் மேல் நடந்துகொண்டதைக் கூறுவதாம் மேற்றிருமொழி—

1. கார்க்கோடல்பூக்காள் கார்க்கடல்வண்ணனெம்மேலும்மைப்
போர்க்கோலஞ்செய்து போரவிடுத்தவனெங்குற்றான் ?
ஆர்க்கோ வினிநாம்பூசலிடுவது அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லே னந்தோ. (94)

கார்	—கறுத்த
கோடல் பூக்காள்	காந்தள்பூக்களே !
உம்மை	—உங்களை
போர் கோலம் செய்து	யுத்தாலங்காரம் பண்ணி
எம் மேல்	—எம்மைக் குறித்து
போர விடுத்தவன்	வர அனுப்பினவனான
கார் கடல் வண்ணன்	கருநிறக் கடலின் நிற முடையவன்
எங்கு உற்றான்	எங்கே இருக்கிறான்?
இனி	—இதற்கு மேல்
நாம்	—இப்போதும் நலியப்படும் நாம்
ஆர்க்கு	—யாரிடம்
பூசல் இடுவதோ	முறையிடுவது தகுமோ, தெரியவில்லை.
அணி	—அலங்காரமான
துழாய் தார்க்கு	திருத்துழாய் மாலையைக் குறித்து
ஓடும் நெஞ்சம் தன்னை	ஓடுகின்ற மனத்தை
படைக்க	—எனக்கு ஸ்ருஷ்டித்துக் கொள்ள
வல்லேன்	—வல்லமையுள்ளவளானேன்.
அந்தோ !	—கஷ்டம். எதற்கிது ?

கார்க்கோடல். செங்காந்தள், வெண்காந்தள் என்பன போல் கறுத்த காந்தளு முண்டென்றதைக் கொண்டும், கடல்வண்ணன் நிறம் கொண்டதாலே அது வாதிக்கத் தக்கதாகையாலும் கறுத்த கோடல் எனப் பொருள்கொண்டது. கார்காலத்திலுண்டான, அல்லது அழகிய கோடல் என்றதுமாம். கோடற்பூவின் அழகைக் கண்டபோது, இது போர்க்கோலமென்றே இவளுக்குத் தோற்றிற்று. தன்னோடு போர் புரிய வந்ததாக நினைத்தாள். நீங்கள் சாதாரணமாக இருந்தால் நம்மை ஜயிக்கமாட்டிலீர் என்று உங்களுக்கு அழகென்ற கவசத்தை யிட்டு அனுப்பினனே அவன் எங்கே? ஸுக்ரீவனைப் பூமாலை போட்டலங்கரித்து வாலியினிடம் அனுப்பி ஒளித்திருந்த இராமன் போல் ஒளித்திருக்கிறானோ, அல்லது கார்க்கோடலெனப் பேர் திருத்திக் கார்க்கோடன் முதலிய பாம்பான உங்களை

யனுப்பி, நாகாஸ்திரங்களையே விட்டு நேரில் வரமாட்டாமே ஒளித்தோடினபடி யிருந்த இந்திரஜித்தைப்போல் மறைந்தானா? நேரில் வந்தால் ஜயிக்கமுடியா தென்று இந்திரஜித்து நன்கறிந்தது போல் இந்தக் கடல்வண்ணனும் அறிந்து கொண்டான். எமது எதிரில்வந்தால் அவன் தோற்றுத் தடுமாறுவது திண்ணம். ஆகவே எதிரில் வர அச்சமுற்று உங்களைக் கொண்டு அதர்மப் போர் நடத்த மனமில்லா நம்மை பாதிக்கின்றான். அவதாரநிலையில் மனுஷ்யபாவனை செய்த இராமன் கருடனை தானே வரச் சொல்லமாட்டாமே, என் செய்வதென்று திகைத்திருந்தது போல் நாமும் ஸ்திரீபுருஷர்களின் கலஹப்போரைப் பெரியோ ரிடம் சொல்வது தகாதென்று கருடாம்சரான எம் தமப்பனாரிடம் பூசலிடத் துணி யாமலிருக்கிறோம் என்றனள்.

எங்குற்றான் என்று அவனை யொருமையிலும், தன்னை எம் மேல், இனி நாம் என்று பன்மையாகவும் கூறினது, நேரில் வந்தால் அவனை வெல்ல வல்லமை உடைமையை நினைத்தென்க. ஆகவே எங்குற்றான் என்று அதட்டிக் கேட்ட தாம். போர்க்கோலம் செய்து என்பதை, 'போர்க்கு ஓலம் செய்து' எனவும் பிரிக்க லாம். ஓலம் செய்தல் = ஓலமிடல். தன்னால் முடியாதெனத் தெரிந்து உங்களிடம் முறையிட்டுக்கொண்டு என்றபடி. 'அவனை நான் செய்வனகாணே' என்றி ருப்பவளிடம் அவன் அணுக அஞ்சி இவற்றை யனுப்பினதாக இவள் நினைவு. அதட்டும் நிலைமையை விட்டு, 'அவன் வந்தால் போதும்' என்று எண்ணும்படி இவள் இளைக்கவேண்டு மென்று அவன் நினைத்திருக்கிறான். இவளுக்கு அத் தசையு மினி வரப்போகிறது.

அணிதுழாய் இத்யாதி. அவன் தன் நிறம் கொண்ட கரிய கோடலை யனுப்பிப் போர் செய்தால் நாம் என் நம்முடைய நிறமுள்ள தேதேனு மொன்றை யவனிடம் போருக்கனுப்பலாகாதென்று நினைத்தாள். 'தூர்வாதளப்ரதிமயா தவ தேவி காந்த்யா' என்றபடி அருகம்புல் நிறமான இவள் அருகம்புல்லை யனுப் பவேணும். அது எங்குமுளது, 'நாமென்ன அனுப்புவதுண்டு' என நினைக்கும் போது அந்நிறமுள்ள துழாய்மாலையே போதுமே என்று எண்ணினாள். அது தான் அவனுக்கு அணியாய் அனுகூலமாய்விட்டதே. அதுவே அனுகூலமான போது அவனுக்குப் பிரதிகூலமாகும் வஸ்து அந்நிறமுள்ளது எது? ஒன்று மில்லை. அந்தோ? இப்படி நான் ஆராய்ந்தது, அவனது அணிதுழாய்த்தார்க்கு என் நெஞ்சம் ஓடுவதற்கும், அதனால், 'நான் சூடிக்கொடுத்த துழாய்மாலை கூட அவனை எனக்கு அனுகூலமாக்கமாட்டாமற் போயிற்றே' என்று வருந்துவதற்கு மேயாயிற்று. இப்படிப்பட்ட நெஞ்சைப் படைத்த வல்லமைக்கு இது தான் பலன் என்றபடி. தன் அசக்தியை நினைத்தபோது வன்மையை விட்டு, வல்லேன் என்று கடைசியில் ஒருமையைக் கொண்டனள். .... (1)

கார்க்கோடலைக் கண்டு வருந்தினவள் அது கண்ணிற் படாதபடி வேறி டம் திரும்பினாள். அதன் மேல் தோன்றிப்பூக்கள் தோன்றின. பிறகு இவளுக் கொன்று தோன்றிற்று. அதாவது—எம்பெருமானை நான் முன் வேண்டிக்கொண்

டபோது இத்தகையன பரமைகாந்தியாயிருப்பார்க்குப் புகலாகத் தகா என நினைத்தேன். இவை யெல்லாம் எம்பெருமானுடையவும் அவனுக்கு அந்தரங்கமானவற்றினுடையவும் ஸாரூப்யம் பெற்று விளங்காநிற்க இவற்றை பாகவதர்களாக பாவித்தலே நலமாகும். ஆகையால் இவற்றை யுபேக்ஷித்ததாலே இப்படித் துன்பம் விளைத்ததோ ? ஆகையால் இவற்றையே பற்றலாமோ என்றதாம். இந்நினைவோடு ஒருவாறு கூறுகின்றனள்—

2. மேற்றோன்றிப்பூக்காள் மேலுலகங்களின்மீதுபோய்
மேற்றோன்றுஞ்சோதி வேதமுதல்வர்வலங்கையின்
மேற்றோன்றுமாழியின் வெஞ்சுடர்போலச்சுடாதெம்மை
மாற்றோலைப்பட்டவர் கூட்டத்து வைத்துக்கொள்கிற்றிரே. (95)

மேல் தோன்றிப் பூக்காள்	—கார்கோடலுக்கும் மேலான செங்காந்தள் பூக்களே !
மேல் உலகங்களின்	மேலே ஸத்யலோகம் வரையிலுள்ள லோகங்களுக்கும்
மீது போய்	—மேலிருக்கும் ஸமஷ்டி காரணங்களையும் கடந்து
மேல்	—பரமபதத்திலே
தோன்றும்	—விளங்காநிற்கும்
சோதி	—பரஞ்சோதியும்
வேதம் முதல்வர்	இப்படி யெல்லாம் ஓதும் வேதங்களுக்கு முதற் பொருளுமானவருடைய
வலம் கையின் மேல்	வலத்திருக்கை விரலிலே
தோன்றும்	—திகழாநிற்கும்
ஆழியின்	—திருச்சக்கரத்தின்
வெம் சுடர் போல்	உஷ்ணமான ஜ்வாலைகள் போல
சுடாது	—தஹிக்காமல்
மாற்றோலைப் பட்டவர்	வேறு ஓலையிற் பதிக்கப் பட்டவருடைய
கூட்டத்து	—குழாமிலே
எம்மை	—நம்பின எம்மை
வைத்து	—சேர்த்து
கொள்கிற்றிர்	அங்கீகரிக்க வல்லீர்களோ?

கார்க்கோட லெனப்பட்ட காந்தள் பூக்கள் போர்க்கோலத்துடன் வந்தன. அவை குளிர்ந்திருந்தன வென்னலாம். காரென்று குளிர்ச்சிக்கும் பெயர். செங்காந்தற்பூக்கள் அவற்றிற்கு மேலாயின. இவை யிவளை செஞ்சுடர் போல் சுடத் தொடங்கினவே. ஆகையால் மேற்றோன்றிப் பூக்காளென்றது. எம்பெருமானுருவத்திற்கொத்த காந்தள்களை விட அவனாழிக்கொத்த காந்தள்களுக்கு மேன்மை யதிகம். பகவானைவிட பாகவதர் மேன்மையதிகம் பெற்றவர். ஆழி அந்தரங்கநித்யஸூரியாகையாலே மஹாபாகவதர். அது போன்ற பூக்களுக்கும் அமேன்மையை நினைத்து மேற்றோன்றி என்றதென்னவுமாம். முன் சொன்ன பூக்கள் கீழேபடருமவை, இவை மேலேபடருமவை என்பது முண்டு. 'மேல்தோன்றி திருவாழிக்கு ஸ்மாரகமாய் நலிந்த' தென்றார் பெரியவாச்சான் பிள்ளை. இதனால் செங்காந்தள் இவை என்றதாயிற்று.

சோதி யென்றது, 'அத்யர்கானலதீப்தம் தத் ஸ்தானம்' என்னப்பட்ட பரமபதத்தை யென்பர். மேலுலகங்களின் மீது போய் மேல் தோன்றும் சோதி என்ற அமைப்பானது யத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விச்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷு உத்தமேஷு லோகேஷு என்ற வேதவாக்யத்தை நன்கு நினைப்பூட்டுவதால் சோதி யென்றது பரஞ்சோதியான பரமாத்மாவைச் சொல்வதாம். பரமபதமானது, ப்ருக்ருதியைத் தமஸ்ஸு

என்று சொல்லலாம்படி ஜ்யோதிர்மயமாயிருப்பதென்ற மட்டில் விவாதமொன்றுமில்லை. இந்த வேதம் நினைவுற்றதாலே வேதமுதல்வனென்றது. வேதத்திற்குக் காரணமானவன், வேதத்தின் ஒவ்வொரு சொல்லின் பொருளிலும் உண்மையில் விசேஷ்யமாய் நிற்பவன். வேதத்திலோதப்பட்ட உலகுக்கு முதல்வனென்றதுமாம். ஆழியின் வெஞ்சுடர் என்றதாலே பாகவதநிலை பெற்ற பூக்களைப் புரஸ்கரிக்கவேண்டுமே யல்லது நிந்திக்கலாகாதென இவள் இப்போது நினைத்தது தோற்றும்.

மாற்றுரைப்பட்டவர் கூட்டத்து. பகவானைச் சார்ந்து பாகவதனான அநிருத்தனிடம் த்வேஷம் வைத்து அதன்மூலம் பகவானையும் த்வேஷியாக்கிக் கொண்ட பாணாஸுரனைப் போலே எம்பெருமானுடைய நிக்ரஹத்திற்குட்பட்டு 'மாயப்பொருபடைவாணனை யாயிரந்தோளும் பொழி குருதி பாய சுழற்றிய ஆழிவல்லானுக்கு' என்ற திருவாழியின் வெஞ்சுடர்க்கு இடமாகாமே, நரகம், ப்ரக்ருதியின் பாதை யெல்லாம் போம்படி திருச்சக்கரத்தின் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடியாய் வாழாட்பட்டு நின்றவரின் கூட்டத்திலே வைத்துக்கொள்ளவேண்டும். உங்களை விரோதியாக யான் விரும்பவில்லையாகையாலே என்னை பாகவதவிரோதியாய் அதனால் பகவத்விரோதியாய் நினைத்துப் போர்க்கோலம் பெறவேண்டா வென்றபடி. ஆக எம்பெருமானுக்கு பாகவததாஸ்யபர்யந்தமாக எந்நாளும் அடியோமென்றெழுத்துப்பட்டவர், ப்ரக்ருதிமண்டலத்திலுள்ளாரைப் போலன்றி மாற்றுரைப்பட்டவரென்றதாயிற்று. எம்மை யென்ற பன்மை, தன்னைச் சார்ந்த தோழிமார் முதலானோரையும் தன்னைப் போல் அனுகூலர் கூட்டத்திலே சேர்க்க நினைத்துச் சொன்னதாம்.

இங்கு நான்காமடிக்குப் பெரியோர்கள் பலவகையில் பொருள் கூறுவதாம். மாற்றுரைப்பட்டவர் கைவல்யத்துக்கானவ ரென்பராம் திருமலைநம்பிகள். பகவானை யனுபவிப்பதில்லாவிட்டாலும் தேஹாதிப்ருக்ருதிஸம்பந்தத்தால் நேர்ந்த பாதை போகிறதென்று கைவல்யத்திலிழியுமா போலே இவளும் தன் பாதையை நீக்க நினைத்தாளென்ற கருத்தாம். கைவல்ய நிஷ்டர்கள் தனித்தனியே அந்தந்த ஆத்மாவை மட்டு மனுபவிப்பவராகையாலே கூட்டம் கூட்டமாகச் சேர்ந்திருப்ப ரல்லர். ஆகையால் அடியார்குழாங்களைக் கொள்வதென்பராம் எம்பார். எம்பெருமான் என்னைக் கொண்டுவரச் சொல்லாமல் வேறு யாரையாவது கொண்டுவரச் சொல்லியிருந்தாலும், நீங்கள் என்னையே அவனிடம் சேர்த்து, 'என் இப்படிச் செய்தீர்கள்' என்று அவன் கேட்டால், 'மாற்றுரைப்பட்டோம். வியக்தி மாறாட்டமாகச் செய்துவிட்டோம். பொறுக்க வேண்டு' மென வுரையுங்கள் என்கிறளென வுரைப்பராம் ஆழ்வான். பிராட்டியின் ஸ்ரீ ஸூக்தி எத்தனையோ பொருளை யுள்வைத்திருப்பதென வும், ஆராயவேண்டு மென்றும் பெரியோர் கருதி யுள்ளனரென்பதிங்கே விளங்கும். இப்படியே ஒவ்வொரு ஆழ்வார் ஸ்ரீஸூக்தியும். இங்கு, 'போர்க்கோலம் செய்து கார்க்கோடல் பூக்களையும், ஆழியின் வெஞ்சுடர் வைத்து மேல்தோன்றிப்பூக்களான உங்களையும் என்னை முடிக்கவோ,

வதைக்கவோ அவன் அனுப்பியிருந்தாலும், போரிலே விரோதியையும் கடைசியில் தன்னோடு சேர்த்துக்கொண்டு, ‘ இனி இவன் நம்மைச் சேர்ந்தவன்’ என்று மாற்றுலைப்படுத்துவது போல் என்னையும் செய்யவேண்டும். போருக்கு வந்தவர்களுக்கு இது செய்யவும் அதிகாரம் எசமான் கொடுப்பது வழக்கமாயிற்றே யென ஆண்டாளின் கருத்திருக்கும். ‘ பாதிப்பதாக விருக்கும் ஓலையை மாற்றி, பாதிக்கவேண்டா வென்று செய்துவந்தோ மென்று சொல்லி என்னைக் கொள்ள நீங்கள் வல்லீர் என்ற பொருள் ஆழ்வான் ஸ்ரீஸூக்திக்கு இருக்குமாகில், இதுவும் அதுவு மொன்றே யென்க. (1)

போர் செய்ய வந்தவர் போரை நிறுத்தித் தஞ்சமாவதென்பது, விரோதியானவன் அஞ்சி நின்றால் தானே. ஆகவே தான் அஞ்சியிருப்பதை யறிவிக்கின்றனள். இனி எம்பெருமானுடைய ஸாரூப்யத்தை யொவ்வொருவகையில் பெற்றவைகளை யெல்லாம் பார்த்து எங்கும் அனுகூலத்தையே வளர்த்துகின்றனள்—

3. கோவைமணாட்டிநீ யுன்கொழுங்கனிகொண்டெம்மை
ஆவிதொலைவியேல் வாயழகர்தம்மையஞ்சுதும்
பாவியேன்தோன்றிப் பாம்பணையார்க்கும்தம் பாம்புபோல்
நாவுமிரண்டுளவாய்த்து நாணிலியேனுக்கே. (95)

கோவை மணாட்டி	மாட்சிமை பொருந்திய கோவைக்கொடியே!
உன்	—உன்னுடைய
கொழு கனி கொண்டு	கொழுத்த பழங்களாலே
எம்மை	—தோழியும் நானுமான எங்களுடைய
ஆவி	—பிராணனை
தொலைவியேல்.	தொலையச் செய்யவேண்டாம்.
வாயழகர் தம்மை	திருப்பவளத்தின் அழகு பெற்ற பிரானிடம்
அஞ்சுதும்	—பயந்துள்ளோம்.
பாவியேன்	—பாவம் செய்த நான்
தோன்றி	—தோன்ற = பிறந்த பிறகு
பாம்பு அணையார்க்கு	ஆதிசேஷனைப் பள்ளியாகக்கொண்டவருக்கும்
தம் பாம்பு போல்	தம் பள்ளியான பாம்புக்குப் போலவே
நாவு இரண்டு	—இரண்டு நாக்குகள்
உள வாய்த்து உர்	உண்டாயின வானதும்
நாணிலியேனுக்கே.	வெட்கமில்லாத எனக்காகவேயாம்.

மணாட்டி என்று சக்களத்தி யென்ற நோக்கத்திலே சொன்னதென்றும், மணமுள்ளதென்று பொருள் வைத்துச் சொன்னதென்றும் உரைப்பர். மண் மாட்சிமையாய் மாட்சிமை பொருந்தியவள் என்று துதித்தபடி. மேலே முல்லைப்பிராட்டி யென்னப்போகிறாளே. விரோத பாவனையை விட்டுக் கௌரவிக்கும் நிலை யிப்போது. எம்மை. என்னைத் தொலையச் செய்தால் பிறகு என் தோழியு மழிவளென விளக்கப் பன்மையாம். ஆவி தொலைவியேல். நான் விரோதத்தை விட்டு அஞ்சி நின்ற பிறகுத் தொலைக்கப் பார்ப்பது கூடாதே. விரோதகாலத்திலே எங்குற்றான் என்று ஒருமையாகச் சொன்னவள் இப்போது கௌரவித்து வாயழகர் தம்மை யென்றும் பாம்பணையார்க்குத் தம் என்றும் சொல்வது காண்க.

‘ உன்னை நலியும்படி அவர் நியமித்திருக்க நான் வெறுமனே யிருப்பது நியாயமோ ’ என்னவேண்டா வென்கிறாள் பாவியேன் இத்யாதியால்.

ஸாஜோ விநஶஸிஹ்ஷதே 'ஒன்றே யுரைப்பான்' என்று தாமும் தம் அந்தரங்கரான எனது தகப்பனாரும் அருளினபடி ஒருவித சொல்லே யுடையவர். உலகை உய்விப்பதையே சொல்பவர், 'நான் பாவியாய்ப் பிறந்தபடியாலே எனக்காகத் தம் அணையான பாம்பிற்குள்ள ஸ்வபாவத்தைத் தமக்கு ஏறிட்டுக்கொண்டு இரண்டு நாக்கள் உள்ளவரானார். இது தானும், 'என்னிடத்திலே அவன் அஞ்சி நடந்துகொள்ளவேண்டு' மென்றும், 'நீங்கள் என்னை என் செய்யமுடியும்' என்று மெண்ணின என் மனத்தை மாற்றுவதற்கே. ஆக எனக்காகவே. இதை வெட்கமுற்றுச் சொல்லாமலிருந்தால் உனக்குத் தெரியாது போலிருக்கிறதென்று வெட்கத்தை விட்டுச் சொல்லுகிறேன். ஆகையால் இந் நிலைக்கு நான் வந்தபடியால் அவருடைய முந்திய நாவே மீண்டும் எனக்குமாகிறதென வறிக என்றபடி, இங்கு இரு நாக்களென்றது எம்பெருமானை தூஷிப்பதற்காகவோ, பரிஹஸிப்பதற்காகவோ வன்றென வாராய்ந்து ஸந்தர்பத்திற்குத் தக்கவாறு கருத்துரைத்தனம்.

உளவாய்த்து என்பதற்கு உண்டாயின என்பதைக் காட்டிலும் உண்டாயிருத்தல் என்ற பொருள் கொள்வது பொருந்துவதாம். இப்பொருள் கொண்டு 'ஆய்த்து' 'ஆயிற்று' என்றவாறு பிரயோகிப்பதை ஸம்ப்ரதாய நூல்களிலும் காண்கிறோம். ஆக இதை எழுவாயாக்கி, உளவாக ஆனது நாணிலியேனுக்காகவே= அதாவது, நான் வெட்கத்தை விட்டு இந் நிலை வருவதற்காகவே என க்ரமமாகவே பாசுரம் அந்வயம் பெறும். இங்கே, எல்லார்க்கும் ஒரு நாவுடையனாய் வெட்கம் கெட்ட என் விஷயத்திலே இருநாவுடையனானன் எனவுரைப்பது போல் 'நாவுமிரண்டுளவாய்த்து என்று வாக்கியத்தை முடித்துவிட்டு, இவ்வளவு சொல்லிவிட்டிவள், 'ஐயோ! வெட்கமில்லையே எனக்கு. தன் விஷயமான நினைவின்றி எம்பெருமானையே வாழ்த்தும் பெரியாழ்வார் பெண்ணாயிருந்து அவன்மேல் குற்றம் கூறுகிறேனே' என்று அனுதபிக்கிறாள்மேல் எனவுரைப்பதுமாம். (3)

எம்பெருமானின் திருப்பவளத்திற்கொத்த கனிகளை யுடைய கோவைக் கொடியை வேண்டினபிறகு அவன்முறுவலைக் காட்டும் முல்லைக்கொடியை அடைக்கலமாகப் பற்றுகிறாள்—

4. முல்லைப்பிராட்டிநீயுன் முறுவல்கள்கொண்டெம்மை
அல்லல்விளைவியே லாழிநங்கா யுன்னடைக்கலம்
கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும்பொய்யானால் நானும்பிறந்தமை பொய்யன்றே. (96)

முல்லை பிராட்டி } பிராட்டியான முல்லைக் கொடியே!
நீ
உன் முறுவல்கள் கொண்டு } உனது புன்சிரிப்பினால்
எம்மை —எமக்கு
அல்லல் —துன்பத்தை
விளைவியேல்—உண்டுபண்ணவேண்டாம்.

ஆழி —கம்பீரமான
நங்காய் —குணபூர்ணையே!
உன் —(நான்) உனது
அடைக்கலம் —ரக்ஷ்யவஸ்துவானேன்.
கொல்லை அரக்கியை } கொல்பவளும் வரம்பைமீறினவளுமான ராக்ஷஸியை (சூர்ப்பனகையை)
மூக்கு அரிந்து—மூக்கையறுத்து

இட்ட	—ஓட்டின	நான் பிறந்தமை உம்	எனது பிறப்பும்
குமரனார்	—சக்ரவர்த்தித்திருமகனுடைய		
சொல் உம்	—வார்த்தையும்	பொய் அன்றே	பொய்யாகாதோ?
பொய் ஆனால்	—பொய்யாகுமாகில்		

பிராட்டிக்கு மேன்மேல் எளிமை யேற்படுகிறது. முன்னே தான் அஞ்சி யிருப்பதையும் நாணற்றதையும் கூறினாள். இப்போது அடைக்கலமாகவே அறிவித்துக்கொள்ளுகிறாள். எம்பெருமான் அபிமானித்தவை யெல்லாம் கௌரவிக்கத்தக்கவையாகத் தோன்றின. உன் முறுவல். உனக்கு இப்புன்சிரிப்பு எம்பெருமானின் புன்சிரிப்பின் ஓரம்சமாவதாலே அதை நினைப்பூட்டுகிறது. அதனால் அல்லல் விளைகிறது. விளையாதபடி பார்த்துக்கொள். அவனையும் என்னையும் சேர்த்துவை யென்றபடி. ஆழி நங்காய். பரக்கப் பேசுவதோ, சிரிப்பதோ செய்யாமல் புன்சிரிப்பைக் காண்பிக்கும் உனது காம்பீர்யம் கொண்டாடத் தகுந்ததென்றபடி. ஆழி என்றது மண்டலமாய் மண்டலாகாரமாய்ப் பூத்திருப்பதைச் சொல்லுமாகில் அவகுண்டனம் போர்த்து விளங்கும் பிராட்டி போன்ற நங்கா யென்றதாம்.

கோல்லை யரக்கி=வரம்பொழிந்த செயலை யுடையவள் என வுரைப்பர். புருஷகாரமான பிராட்டியை யழித்துப் பெருமானைத் தனியே பெற முயன்றவளல்லளோ அவள். ராக்ஷஸிகளிலும் அவரவரில்லத்திலே யிருக்கும் நல்ல வரக்கிகள் பலர். இவள் எங்கும் திரியும்படி விடப்பட்டவளாகையாலே கொல்லை யரக்கி. அதனால் வரம்பை மீறினவ ளென்றபடியாம். ஐ என்பது அசையாய் கோல் அரக்கி கொல்லுமரக்கி எனவுமாகில் கொள்க. கொல்ல முயன்றவளை, கொல்லப்பட வேண்டியவளை மூக்கறுத்தனுப்பினார், ஸ்திரீவதம் கூடாதென்று. துட்ட வரக்கியையே வதைக்காதவர் என்னை வதைக்க நினைப்பாரா என வறிவித்தபடி. அரக்கியை என்பதை இட்ட என்பதோடு கூட்டுக. இட்ட. இவளைக் கொண்டு எல்லாவரக்கரையும் அழைத்தழிக்க விரட்டினார்போலும். குமரனார். அவளே, 'தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ ஸுகோசிதௌ' என்று புகழும்படி யிருப்பவர். ரகுவம்சக் குமரனாயிருந்து சொல்லும் சொல்லும் பொய்யாமோ என்றதுமாம். தாம் குமரனாயிருப்பதற்கேற்ப அவளோடு பரிஹாஸமாகச் சொன்ன சில சொற்கள் கூட உண்மையில் பொய்யில்லாதபோது மற்றது பொய்யாமோ என்றதுமாம். 'ஸ்ரீமான் அக்ருததாரச்ச லக்ஷ்மணோ நாம வீர்யவாந். அபூர்வீ பார்யயா சார்த்தீ தருண: ப்ரியதர்சந:. அநுரூபச்ச தே பர்த்தா ரூபஸ்யாஸ்ய பவிஷ்யதி' என்றார். லக்ஷ்மணனைக் கொண்டு மூக்கை யறுக்க வேண்டு மென்று உட்பொருள் வேறு வைத்துச் சொன்ன சொல்லன்றோ அது. சொல்லும் பொய்யானால். 'அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா', 'அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம:', 'யதி வா ராவண: ஸ்வயம்', 'மித்ரபாவேந' என்றவாறு சத்ருவும் அடைக்கலமென்றால் அழிக்காமல் காக்கப்படவேண்டு மென்ற சொல் பொய்யாமோ? அதுவே பொய்யென்றால் அவனும் பொய், உலகமும் பொய், நான் பிறந்தமையும் பொய்; ஸர்வசூன்ய மென்னவேண்டும், நானும் என்ற உம்மை நீங்களும், முழு உலகமும் என்ற கருத்தா

லாம். நானும் பிறந்தமை பெரியாழ்வாருக்கு நான் பெண்ணானமை என்னவுமாம். ஸீதைப்பிராட்டியைப் போல் நான் பூமியினின்றே பிறந்தமை யென்னவுமாம்.* இவை யெல்லாம் பொய்யில்லை யென்று தெளிந்தவர்க்கு குமாரனார் சொல் பொய்யென்ற எண்ணம் தகாது. இப்படித் தர்க்கமுகத்தாலே அநிஷ்டாபாதனம் செய்து அது உண்மை யென ஸ்தாபித்தனளென்க. இத் தெளிவு எனக்கு இப்பிறப்பின் சிறப்பாலே விசதமா மென்று தெரிவிப்பதற்காக, நானும் பொய் யென்னுமே நானும் பிறந்தமை பொய் என்றனள். இங்கே, ‘இப்படி முல்லை முதலானவை அல்லல் விளைவிப்பதால் என்னளவில் அவன் வார்த்தை பொய் யானபோது, எனக்குப் பெரியாழ்வார் வயிற்றிற் பிறப்பெங்கே பலனளிப்பது’ என்று மேலும் வருந்துகிறாளெனவும் கருத்துரைப்பர். உள்ள வருத்தத்தைப் போக்க ஒருவழி தேடுகின்றவளாய் இவள் பிரதிகூலமாக முன் தோற்றின வஸ்துக்களை அனுகூலங்களாக்க முயன்றவாறு இத் திருமொழிக்கு நாம் கருத்துரைத்து வருவதாம். எம்பெருமானின் அடிமையிலீடுபட்டவர்களுக்கு (பிராட்டியுள்பட) அவனோடு கலஹம் நீடிப்பதில்லை. பாதை யதிகமாய்போது பணிந்தாவது பெற முயல்வதியற்கை. (4)

உடனே குயில்களின் பாட்டும் காதில் விழுந்தது. அதனை ஸஹியாது சொல்லுகிறாள்—

5\. பாடும்குயில்காளீதென்ன பாடல் நல்வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்துபாடுமின்
ஆடும் கருளக்கொடியுடையார் வந்தருள்செய்து
கூடுவராயிடில் கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே. (98)

பாடும் குயில்காள் } நன்கு பாடக்கூடும் குயில்களே!
ஈது —இப்போது செய்வது
என்ன பாடல்-பாட்டாகுமோ?
நல் —நல்ல
வேங்கடம் —திருவேங்கடத்தை
நாடர் —நாடினவர்
நமக்கு —அவராலங்கீகரிக்கப்பட்ட நமக்கு
ஒரு வாழ்வு —வாழ்க்கையில் ஒரு வகையை
தந்தால் —அளித்தாராகில்,
வந்து பாடுமின் } பிறகு வந்து பாடுங்கள்.
ஆடும் —பாட்டுக்குத் தகுந்தபடி ஆடக்கூடும்
கருளன் கொடி உடையார் } கருடனை த்வஜமாக உடையவர்
அருள் செய்து-கிருபைகூர்ந்து
வந்து கூடுவர்-என்னிடம் வந்து சேர்ந்தவராக
ஆயிடில் —ஆனால்,
கூவி —நாமே அழைத்து
நும் பாட்டுக்கள் } உங்கள் பாடல்களை
கேட்டும் —கேட்போம்.

பூக்களும் கனிகளும் எற்பட்டவை உடனே அழியா. அவற்றைப் பூக்காமலும் காய்க்காமலு மிருங்களென்று கேட்டுக்கொள்வதும் முடியாது. வேண்டாமாகில் விலகிநிற்கலா மத்தனை. ஒலி யென்பது ஒதுங்கினாலும் படக்கூடியதே. உண்டானது உடனே அழியும். ப்ராணிகளின் பிரயத்னத்தால் வருமொலி யாகில் மேலே உண்டாகாதபடி தடுக்கலாம். ஆகவே குயில்களைப் பாடவேண்டாமென்கிறாள். பாடும் என்றதாலே அவற்றின் திறமையைப்

புகழ்ந்தபடி. ஈதென்னபாடல்: பாடல் என்பது கேட்போருக்கு மனத்தைக் கவருவதாய் ராகமெனப் பேர் பெற்றிருக்கும். இப்போது எனது தனிமையில் எனக்காகப் பாடப்படு மிதற்குப் பாடலென்ற பெயரே தகாதே. வாழ்வு தந்தால். அவரும் நல்லவர். அவர் நாடியுள்ள வேங்கடமும் நல்லது. என்னையு மவர் அங்கீகரித்தவர். வாழ்வு ஏதோ ஒரு விதம் செய்வது திண்ணம். அப் போது வரலாம்; பாடலாம். இப்போது வேணுமானால் அங்கே போகலாம்; பாடலாம். இங்கே வருவதற்கு தானே வேங்கடத்தை யாதரித்துள்ளார். உங்கள் பாட்டை அங்கே கேட்டு ஆடுவர்; தடுமாறுவர். கருடனும் அப்போது ஈதென்ன வென்று ஆடுவர். தம் மேல் ஏற வைத்து எழுந்தருளப்பண்ணிக் கொண்டு ஆனந்தப்பட்டு ஆடி வருவர். அவரும் வந்த பிறகு அவசியம் அருள் செய்வர்; கூடுவர். அப்போது நீங்களும் இங்குக் கூடலாம். அவரோடு கூடவே பாட்டால் அவரைத் துரிதப்படுத்திக்கொண்டு வரலாம். வராவிட்டாலும் நானே கூவி யழைப்பேன். அப்போது உங்கள் பாட்டை இருவரும் கேட் போம். சுவை புணர்ந்து ஆடுவோ மென்றபடி. நமக்கு. எனக்கு வாழ்வு தந்தால் தோழியும் வாழ்வதேயாம். கேட்டும். கேள் பகுதி. தும் தன்மைப் பன்மைவிகுதி. தோழியோடு இங்கு வேங்கடநாடரையும் சேர்க்க இது. (5)

பாட்டுக்குத் துணையான ஆட்டமும் முன் நினைவுற்றது. அத் தகைய ஆட்டம் மயில்களுக்குள்ளதை நேரில் கண்டு அவற்றையும் அடைக்கலம் புகுகின்றாள்—

6\. கணமாமயில்காள் கண்ணபிரான் திருக்கோலம்போன்று
அணிமாநடம்பயின்றாடுகின்றீர்க்கடிவீழ்கின்றேன்
பணமாடரவணைப் பற்பலகாலமும் பள்ளிகோள்
மணவாளர் நம்மைவைத்த பரிசிது காண்மினே. **(99)**

கணம் —கூட்டமாக இருக்கும்
மா மயில் காள்—பெரிய மயில்களே!
கண்ணபிரான்—கண்ணபிரானுடைய
திரு கோலம் போன்று } அழகிய வடிவு போல் வடிவுற்று
அணி —அழகிய
மா —மேன்மை பொருந்திய
நடம் —ஆட்டத்தை
பயின்று —கற்று
ஆடுகின் நீர்க்கு } ஆடுகின்ற உங்களுக்கு
அடி வீழ் கின்றேன் } ப்ரணாமம் செய்கிறேன்

பணம் ஆடு —படங்கள் எடுத்திருந்து ஆனந்தித்தாடும்
அரவு அணை—பாம்பரையணும் படுக்கையில்
பல் பல காலம் உம் } எல்லாக்காலத்திலும்
பள்ளிகொள் — சயனித்திருக்கும்
மணவாளர் —(மணந்தவர்) நாயகர்
நம்மை —அவராலேயே மதிக்கப் பட்ட நம்மை
வைத்த —வைத்திருக்கும்
பரிசு —வகையானது
இது —இத்தகையதே.
காண்மின் —நேரில் காணுங்கள்,

கண்ணபிரான்திருக்கோலம். மயில்த் தழை சூடி இலங்குவது கண்ண னுக்கே யுள்ளதாலே அவனுடைய ஒப்பனை போலிருப்பது மயிலென்கிறதெனவும் முன்னோர் உரையாம். பணமாடரவணை என்றவிடத்தில் பணவாடரவணை எனவும் பாடம். பொருளொன்றே. பணவாளரவணை யென்ற பாடமுண்டாகில், வாள்

என்பதற்கு ஒளியுள்ள எனப் பொருளாம். பற்பல காலமும், எப்போதும், அல்லது யோகநித்ரையிலும், பெரியபிராட்டியோடு சயனித்தபோதும், மனைவிமார்களோடு மகிழ்ந்த காலத்திலும், பல அவதாரங்களிலு மென்றவாறும் பொருளாம். இஃதென்ன விந்தை? உன் திருவடியில் நாங்கள் பணியவேண்டியிருக்க எங்கள் காலிலே நீ விழுவதோ என்கிறீர்களோ? மணவாளர் நம்மை வைத்த பரிசிது. நீங்கள் சொல்வதும் ஒரு சமயம் இருக்கலாம். இப்போது தசை வேறு. மணவாளர் அவர். செம்மையுடைய திருக்கையால் நம் தாள் பற்றினவர். உங்களைத் தம் திருக்கோலம் போலாக்கி, நம்மை விட்டுப்போய், நம் முன்னே ஆட்செய்தார். இது எதற்காக? இக்கோலத்திற்கு நான் கௌரவம் கொடுக்கிறேனா, இல்லையா என்று பரீட்சை செய்கின்றார் போலும். பெரிய பிராட்டியார் அவரை ஸுக்ரீவனைச் சரண மடையும்படி செய்து வைத்ததுண்டு. நாம் அவ்வண்ணம் செய்யவில்லை. அவர் தம் திறமையை நம்மிடம் காண்பிக்கின்றார். நம்மை, அவளிடம் வைப்பதற்குப் பதிலாக நம்மிடம் வைத்த பரிசிது. ஆனாலும் அவர் என் அடி பற்றினது நியாயமாகில் நான் உங்கள் அடி பற்றுவதில் என்ன விரோதமிருக்கிறதென்றே நான் நினைக்கிறேன். சாஸ்திரத்திற்குட்பட்டு நடக்கவேண்டியவர்களுக்குச் சில நியமங்களுள. அவை இன்னான் இன்னானை அடிபணியலாம், இன்னானைப் பணியலாகாதென்றாற் போல்வன. அவரும் நாமும் அதற்குட்பட்டவரல்லோம். நான் உங்களை நமஸ்கரித்தால் உங்களுக்கு அநர்த்தம் ஒன்றும் வாராது. திர்யக்ஜாதியிற் சேர்ந்த உங்களுக்கும் சாஸ்திரவச்யதை யில்லையே. ஆகையால் எனது கார்யத்திற்காக உங்களை நான் பணிவது கூடும். நம்மை வைத்த பரிசன்றோ இது. இதில் யாதொரு குற்றமுமில்லை யென்றபடி. .... (6)

அடி வீழ்வது எதற்காக? என்ன எங்களாலாவதென்கிறீர்களோ? கேளுங்கள்—

7. நடமாடித்தோகைவிரிக்கின்றமாமயில்காள் உம்மை
நடமாட்டம்காணப்பாவியேன் நானோர்முதலிலேன்
குடமாடுகூத்தன் கோவிந்தன் கோமிறை செய்தெம்மை
உடைமாடுகோண்டானுங்களுக்கினியோன்றுபோதுமே. (100)

நடமாடி —ஸஞ்சாரம் செய்து
தோகை — உங்கள் தழைகளை
விரிக்கின்ற —பரப்புகின்ற
மா மயில்காள் —மேன்மை பொருந்திய மயில்களே!
பாவியேன் நான் } பாபம் செய்துள்ள நான்
உம்மை —உங்களை
நடம் ஆட்டம்—நாட்டியத்தின் முயற்சியில் கூட
காண —காண்பதற்கு
ஓர் முதல் —ஒருவித பாக்கியமும்
இலேன். —இல்லாதவளாகிறேன்.

குடம் ஆடு கூத்தன் } குடங்களுடனாடும்படி நடிக்கின்றவனை
கோவிந்தன் —கோபாலன்
கோ மிறை செய்து } அரசர் செய்யும் மிறுக்குகளைச் செய்து
எம்மை —எனது
உடை —வஸ்திரம்
மாடு —தனம் எல்லாம்
கொண்டான்—கொண்டுபோய்விட்டான்
இனி —இதற்குப் பிறகு
உங்களுக்கு
ஒன்று —எனது ஆவிமாத்திர மிருப்பது
போதுமே —போதுமோ?

நானோர் முதலிலேன். காணக் கண்ணில்லை. கண்ணில்லையாகில், நாங்களாடுவதில் உனக்கென்ன வருத்த மென்னவேண்டா. முதலில்லை—முதல் காரணமான பாக்கியமில்லை யென்கிறேன். அது அவன் கூடினபோது கூடுவது. குடமாடுகூத்தன். உங்களாட்டத்தைக் காணும்போது குடமாடு கூத்தனின் ஆட்டம் நினைவுறுகிறது. அவ்வாட்டத்தைக் காணப் போய் என் சொத்துக்களை யெல்லா மழித்துக்கொண்டேன். என்னுடைய கரணக்ளேபரங்களெல்லாம் அவனுக்கே ஆய்விட்டன. உங்களுக்கென்ன நான் கொடுக்கமுடியும். ஆவி ஒன்று தான் இருக்கிறது. இது உங்களுக்குத் தகுந்த பரிசு அன்று. அவனும் நானும் சேர்ந்து கரணகளேபரங்கள் செம்மையாயிருக்கக் கண்டு நாங்கள் களிப்பதே யன்றோ உங்களுக்குப் பரிசாகும். ஆகவே ஆட்டத்தை நிறுத்துங்களென்கிறேன் என்றனள். ... . (7)

ஆடும் மயில்களை யடிபணிந்த பிறகு அவைகள் மேல் நோக்கிப் பார்த்த மேகங்களைத் தானும் பார்த்து வேண்டுகிறாள்—

8. மழையே மழையே மண்புறம்பூசி யுள்ளாய்நின்று
மெழுகூற்றினாற் போலூற்றுநல் வேங்கடத்துள் நின்று
அழகப்பிரானார்தம்மை யென்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்றென்னைத் ததைத்துக்கொண்டூற்றவும் வல்லையே. (101)

மழையே மழையே — ஓ மேகமே!
மண் புறம் பூசி — மண்ணை வெளிப்பக்கத்தில் நன்கு பூசி
உள்ளாய் நின்று — மிக்க யோசனைக்காரனாயிருந்து
மெழுகு — மண்பூசுவதற்கு முன் தடவியமைத்துள்ள மெழுகை
ஊற்றினாற் போல் — கீழே உருக்கித் தள்ளுமாபோலே,
நல் வேங்கடத்து — சிறந்த திருவேங்கடத்திலே
உள் நின்று — உள்ளே நின்றதிருக்கோலமா யெழுந்தருளியிருந்து
ஊற்றும் — உருக்கித்தள்ளும்
அழகப் பிரானார் தம்மை — அழகரை, அழகிய திருமாலை—
என்னைத் ததைத்துக் கொண்டு — என்னை நெருக்கிக்கொண்டு
தழுவி நின்று — என்னை வெளியிலும் அணைந்து நின்று
என் நெஞ்சத்து — எனது நெஞ்சிலும்
அகப்பட — அவர் அகப்பட்டிருக்கும்படி
ஊற்றவும் — வர்ஷிக்கவும்
வல்லையே — வல்லமையுள்ளாயோ?

விக்ரஹங்கள், பாத்ரங்கள் போன்றவற்றை வார்ப்போர் அவை அமையும்படி ஓர் உரு செய்து அவ்வுருவின் மேல் மெழுகை முழுதுமமைத்து அதன் மேல் மீண்டும் மண்ணைப் பூசி, த்வாரம் வைத்து, வார்க்கப் பதம் பார்த்து, மெழுகுள்ளவிடத்திலே உருகின உலோகம் பதியும்படி வார்த்து மெழுகை உருக்கித் தள்ளிவிடுவர். அது போல் திருவேங்கடத்துள் நின்று ஊற்றுகின்றார் அழகப்பிரானாரென்றாள். எதை ஊற்றுகின்றாரென்னில், தன்னை யுருக்கித் தள்ளுவதாகவே ஆண்டாள் திருவுள்ள மென்னலாம். மழை பொழியும் போது வேங்கடத்தினுள்ளிருந்து பல அருவிகள் பெருகுவதைப் பார்த்தால் ஓர் உருவின் மேல் மெழுகு வைத்து அதன்மேல் வேங்கட மென்னும் மண்ணைப் பூசி

மழை யென்றதை வார்த்து அம் மெழுகை ஊற்றுகிறார். அதே அருவிகளாகத் தோற்றமளிக்கின்றன என்னலுமாம். இப்போது மண்புறம் பூசி என்பதற்குப் பொருத்த முள்ளது. அழகப்பிரானார்தம்மை என்பதற்கு ஊற்றவும் என்றதோடு அந்வயம். உம்மை யானது, அவரையும் ஊற்ற=மழையை வர்ஷிப்பதோடு அவரையும் சேர்த்து வர்ஷிக்க என்ற பொருள் தரும்.

எங்கும் ஓதிவரும் பழைய பாடத்தில் சிறிதும் மாற்றமின்றி பாசுரத்தை இப்போது உரைத்துள்ளோம். இங்கே கண்மூடித்தனமாகப் பரம்பரையாகவே மூன்று எழுத்துப் பிழைகள் நெடுநாளாகவே நேர்ந்திருக்கின்றன வென்றும், ஒருவர் எடுத்துக் காட்டின பிறகுத் தெரியவந்தன வென்றும் கூறி, அங்ஙனமே பாடங்களை மாற்றியமைத்து உரை செய்துள்ளனர் சிலர். அவையாவன—முதலீரடிகளிலும், நின்று என்ற பதங்களை விலக்கி, நின்ற என அமைப்பதும், நான்காமடியில் தழுவி என்பதற்குப் பதிலாக, தழுவ என வமைப்பதும். இப்போதே பதங்களிணைவது. உள்ளாய் நின்ற என்பது மெழுகுக்கு விசேஷணம். உள்நின்ற என்பது அழகப்பிரானார் என்பதற்கு. தழுவ என்பதற்கு, நான் பிரானாரைத் தழுவும்படி எனப்பொருள். இவ்வாறு பொருள் கொள்ளவேண்டியிருப்பதால் இங்ஙனே பாடம் என்று அவர் கருத்தாகலாம். பெரியவாச்சான்பிள்ளையுரையை நோக்குங்கால் தழுவி நின்று என்றவிடத்தில், 'நானணைக்கும்படி பண்ணி' என வுரை யிருப்பதால் தழுவ என்றே அவர் கருதினதென விளங்குகிறது. ஆனால் தழுவி என்பதையே எச்சத்திரிபாகக் கொண்டு அவ்வாறு கூறியுள்ளாரா, தழுவ என்றே பாடமும் கொண்டாரா என வாராயும்போது மூலத்திலோ உரையிலோ எங்கும் 'தழுவ' என்ற பாடம் காணாமையால் எச்சத்திரிபே யென்ற வாதத்திற்கு அவகாசமுளது. நின்று என்ற பதங்களை நின்ற என மாற்றுவதற்கு அங்கு ஆதாரமில்லை. உள்ளாய்நின்று என்பதற்கு உள்ளே இருந்து என்று பொருளாகையால் உள்ளே யிருக்கும் மெழுகு என்றதற்கேற்ப நின்ற என மாற்றவேண்டுமென்பர். 'உள்ளாயிருத்தல்' என்பதற்கு மிக்க யோசனைக்காரனாயிருத்தலெனப் பொருள் பிரஸித்தமாகையால் உள்ளாய்நின்று என்பதற்கும் அதே பொருளாம். ஆக ஊற்றுகிறவனைச் சேர்ந்ததாம் உள்ளாய்நிற்றல். இவ் வினையெச்சத்தை ஊற்றினால் என்ற வினையோடு கூட்டுக. இரண்டாமடியில் பதக்ரமத்தை யநுஸரித்துப் பெரியோர் உரை செய்திருந்தாலும் நல் வேங்கடத்துள் நின்று ஊற்றும் அழகப்பிரானார் என்றே அந்வயம் அவர்கருத்திலுள்ளதாம்.

தழுவிநின்று என்றவிடத்திலும் உள்ள பாடமே ஒழுங்காப்படி பதவுரை வரைந்துள்ளோம். இப்படிப் புதுப் பாடங்களை ஆதார மின்றி புகுவித்தலை விட்டுப் பழைய பாடங்களைக் கொண்டே அந்வயம் அழகா யமைவதைக் கூறினம். பூர்வர்கள் கொண்ட கருத்தை யொருவாறு பின்பற்றிய உரையாமிது.

இனி இப்பாசுரம் வேறு வகையிலு முரை செய்யலாம்படி யமைந்திருப்பதையும் காண்மின்—மழையே மழையே! மண்புறம்பூசி யுள்ளாய்நின்று ஒருவன் மெழுகின் மேல் உலோகத்தை ஊற்றினாற்போல், ஊற்றுநல்=நல் ஊற்று=நீரூற்றுக்களை யுடைய வேங்கடத்தில் நீ நின்று அழகப்பிரானார் தம்மை நீ

தழுவி (உலோகத்தை வார்க்க அதை யோர் ஆதாரத்துடன் தழுவி யெடுக்குமா போலே யெடுத்துக்கொண்டு) என்னைத் ததைத்துக் கொண்டு=என்னிடம் நெருங்கி நின்று அவர் என் நெஞ்சத்தகப்படும்படி என்னுள்ளே அவர் திண்மை ஊற்றவும்=வார்க்கவும் வல்லையோ என்றவாறு. மழையைப் பெய்கின்றது போல் அழகரையும் பெய்யலாகாதோ. என் நெஞ்சத்தின் மேல் பூசியுள்ள மெழு காவது, 'நானவரை யெப்போது காண்பது' என்கிற அவாவே யாம். அவரே நெஞ்சில் நிறைந்தபோது அந்த அவா மெழுகு போல் போய்விடும். அவா அற அவருடன் நான் கூடவேண்டும். அவாவை யதிகப்படுத்தும் உன்னைப் போன்ற பல வஸ்துக்களைக் கண்டு மனம் கலங்கி அவா மட்டும் பெற்று அவரை யனு பவிக்காத நான், நீ அவரை யென் நெஞ்சில் நிற்கும்படி வார்த்தையாகில், 'நைஷா பச்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந். ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி' என்ற நிலை பெற்று வெளியில் கண்ணோட்ட மிராம லிருப்பேன். அவர் அடிக்கடி என் நெஞ்சிலும் நிற்காமற் போவதால் வெளி யில் இந்திரியங்களைச் செலுத்தி உன்னைப் போன்றவற்றைப் பார்த்து இப்படி துன்பப்பட வேண்டியதாகிறது. எனக்கனுகூலமாகவேண்டு மென்றபடி.

மழையே மழையே என இருதரம் சொன்னது பல மழைகளைக் குறிக்கவு மாம்; வெகுதூரத்திலிருப்பதை விளித்தலாலுமாம்; அன்புடன் வேண்டுவதைக் குறிக்கவுமாம். நல்வேங்கடத்து என்று கூறி அழகப்பிரானார் என்றதால் அழகர்மலை யையே வேங்கடமென்றிவள் கருதினாளென்று, இவள் வேங்கடமென்று கூறின விடமெல்லாம் திருமாலிருஞ்சோலையையே கொள்வதென்பது ஒரு பக்ஷம். மாலிருஞ்சோலைப் பதிகத்திலே வேங்கடமென்றாற் போன்ற சொல் இல்லாமை யாலும், அழகர் என்ற சொல்லையும், 'அத்திகிரி யருளாளப் பெருமாள் வந் தார் ஆனை பரி தேரின்மேலழகர் வந்தார்' என வேறிடத்திலும் காண்பதாலும், இங்கும் அழகர் என்னுமே அழகப்பிரானார் என்றதாலும், வட திருவேங்கட முடை யானின் அழகி லீடுபட்டமை தோன்றுவதால் வடவேங்கடமே யென்பது மற் றொரு பக்ஷம். மழையே மழையே, கடலேகடலே என்ற இரு பாட்டுக்களையும் அனுஸந்திக்கும் போதெல்லாம் திருமலைநம்பிகள் கண்ணும் கண்ணீருமாய் உருகிப்போவரென்பர். ... . (8)

மழை சேருமிடமான வேங்கடத் தெம்பெருமானுக்கு மூலஸ்தானமா யுள்ளது கடல். மழை கடலிற் புக்குமுகந்து கொடார்த்தேறுகின்றது. கொண் டதற்கு நூறு மடங்கதிகமாகக் கடலிற் போய் விழும்படி வர்ஷிக்கிறது. ஆக மேகம் மழையாய், கடலாய் விட்டதிப்போது. ஆகவே கடலையே யழைத்துக் கூறுகின்றாள் ——

9. கடலேகடலேயுன்னைக் கடைந்து கலக்குறுத்து
உடலுள்புகுந்து நின்றூறலறுத்தவற்கென்னையும்
உடலுள்புகுந்துநின்றூற லறுக்கின்ற மாயற்கென்
நடலைகளெல்லாம் நாகணைக்கேசென்றுரைத்தியே. (102)

கடலே கடலே — ஓ ஸமுத்திரமே!
உன்னை கடைந்து — அமுதத்திற்கென்று உன்னை மந்தர மலையால் கடைந்து
கலக்கு உறுத்து — கலக்கத்தை எங்கும் விளைவித்து
உடலுள் புகுந்து — நீ மலையை மூழ்த்தின போது அதை மேலே தாங்கக் கூர்மமாய்ப் புகுந்து
நின்று — அமுதம் கிடைக்கும்வரை உறுதியாயிருந்து
ஊறல் — ஊறிவந்த ஸாரத்தை
அறுத்தவற்கு — பிரித்தெடுத்தவனும்,
என்னையும் — என்னையும் கடைந்து கலக்குறுத்து
உடல் உள் புகுந்து — எனது சரீரத்தில் ஹ்ருதயத்திலுட்சென்று
நின்று — நான் காணும்படி நின்று
ஊறல் — ஆஹார ஸாரமான ரக்தாதிகளின் ஓட்டத்தையும் அதன்மூலம் வரும் அறிவையும்
அறுக்கின்ற — போக்குகின்றவனும்
மாயற்கு — மாயாவியுமானவனிடம் —
நாக அணைக்கு ஏ சென்று — அவனது திருப்பள்ளியான ஆதிசேஷனருகேபோய்
என் நடலைகள் எல்லாம் — எனது துன்பங்களையெல்லாம்
உரைத்தி — சொல்லுவாயா?

இது வரையில் எம்பெருமானை கௌரவித்துப் பன்மையாய்ப் பகர்ந்து வந்தவள் இப்போது அறுத்தவற்கு, மாயற்கு என ஒருமையாகப் பகர்வது காண்மின்.

'நமக்கு விரோதிகளாகத் தோன்றினவர்களிடத்திலே நாம் கௌரவமே வைக்கவேண்டும். எல்லாம் எம்பெருமானுடைய அம்சம். அவன் அபிமானத்திற்குப் பாத்திரமாய் ஒருவகை ஸாம்யம் பெற்றவை' யென்று வைத்து வணங்கி வேண்டினாள். பயனில்லை. இனி யவற்றை வெறுக்கவும் வேண்டா; வேண்டவும் வேண்டா என நினைத்தாள். இனி தன்னோடு ஸமான ஸுகதுக்கமாய், பகவானோடு ஸாரூப்யம் பெற்று அவனுடைய அபிமானத்திற்கும் பாத்திரமான தொன்றைத் தேடினாள். தான் நினைத்த கடலே யதுவாயிற்று. துன்பக் கடலிலே மூழ்கின எனக்கு இக் கடல் தான் துணையாகு மென நினைத்து அதை கடலே என்று அழைத்தாள். எவரையோ தூஷணை செய்யத் தன்னை யழைக்கிறாளென்று நினைத்து அது உபேக்ஷிக்கு மென்று நினைத்து, உபகாரம் செய்யத் தான் அழைக்கிறேனென்று தோற்றும்படி மீண்டும் கடலே என விளித்தாள். மேலே மொழிகிறாள் —

கடலே கடலே! இராமனாலும் கண்ணனாலு மழைக்கப்பட்டு உதவின கடலே! என் கஷ்டத்தைப் பார்த்தாயா? மாயன் என்னுள்ளே புகுந்து நின்று என்னை ஸாரமற்றவ ளாக்கிவிட்டான். நான் படும் கஷ்டம் எங்ஙன மிருக்கு மென்பது உனக்கு அறியக் கூடியதே. உன்னைக் கடைந்து கலக்குறுத்து உன் உடலுள் புகுந்து நின்றூற லறுத்தவனாயிற்றே யவன். "படுக்கை யென்று பாராதே', 'இடம் கொடுத்தார் நெஞ்சிலே கல்லை யிட்டு நெருக்கிச் சாறு பெறுத்தும்' அவனைப் பற்றி நான் விஸ்தரிக்கவேண்டிய தொன்றுமில்லை. அவனிடம் நான் துன்பப்படுவதை யெல்லாம் சொல்வாயா? அவன் எங்கிருக்கிறானோ என்று சொல்ல முடியாதே. உன் மேல் நாகணையில் தானே அசையாமல் நித்திரை கொண்டாற் போலிருக்கிறான். உறங்கினவனை யெழுப்புவது எப்படி யென்ன வேண்டா. உனக்கு நெருங்கினவனாய் அவனுக்கும் மிக்க அந்தரங்கனுமான அந்த ஆதிசேஷனிடம் சொல்லி வைத்தாயானால், அவனுக்கு

அவன் விழித்துக் கொள்வது தெரியுமானபடியாலே தெரிவிப்பான். நீ சொல்ல வேண்டியது இவ்வளவுதான். 'என் ஊறலறுத்த மாயன் மாதவன் என் மேல் பள்ளிகொண்டு எனக்கு ஆனந்தத்தை விளைவிக்குமா போலே, அவளுடையவும் ஊறலறுத்தவன் அவள் மேல் சயனித்து அவளை ஆனந்தம் பெறச் செய்ய வேண்டும். அணையான நீ அதற்குத் துணையாகவேண்டும்' என்றவாறு. இங்ஙனம் வேண்டினள். .... (9)

வீட்டுக்குள்ளே இருந்து வேதனை பொறுக்கமாட்டாமே வெளிவஸ்துக்களைக் கண்டு விநோதமாகப் போது போக்க நினைத்து வெளிக்கிளம்பினவள் தன்னைப் பிரியாத தோழியுடனே வர்ஷாகால வஸ்துக்களைப் பார்த்து இதுகாறும் கலங்கிப் பல படி பாடுபட்டாள். ஒன்றும் பயனளிக்கவில்லை. தருணம் பார்த்துத் தோழியும் கூறினாள்—'என்ன ஸகி! முதலில் எல்லாவற்றையும் புறக்கணித்து நீயே மாலிருஞ்சோலைமணாளனையே வேண்டிக் கொண்டாய். அது பயன்படாதபோது இந்தச் சேதநாசேதநங்களிட மெல்லாம் பாகவத கௌரவம் வைத்துப் புகழ்ந்து வேண்டினாய். கடைசியாகக் கடலே கதி யென்று கூறி மனம்மாறி யொழிந்தாய். இவை யெல்லாம் எதற்கு? நாகணையானைக் காணக் கடலை வேண்டிக்கொள்ள வேண்டுமா? "அரவத்து அமளியினோடு மழகிய பாற் கடலோடும் அரவிந்தப் பாவையும் தானுமகப்படி வந்து புகுந்து—பள்ளி கொள்ளுகின்ற பிரானை" (5. 2. 10), பனிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட் டோடிவந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ" (5. 4. 9.) என்னப்பட்டவனை உன் தகப்பனாரிடம் தானே காணமுடியும். ஆகையால் இவ் விநோதங்களை விட்டு வீட்டிற்குச் செல்வோம்' என்றவாறு. அந்த உபதேசத்தைக் கேட்டுத் தெளிந்து களித்துக் கூறுகின்றாள்—

10. நல்லவென்தோழி நாகணைமிசைநம்பரர்
செல்வர்பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென்
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள்தேவரை
வல்லபரிசு வருவிப்பரேலது காண்டுமே. (103)

நல்ல —ஸதுபதேசம் செய்யவல்ல
என்தோழி —எனது சகியே!
நாக அணை மிசை } முன் சொன்ன சேஷ சயனத்தின்மேல் (இருக்கும்)
நம் பரர் —நமக்கு ஸ்வாமியாய் பரத்வமுள்ளவர்
செல்வர் —சிறந்த செல்வம் கொண்டவர்.
பெரியர் —எல்லோருக்கும் மேலானவர்;
சிறு மானிடவர் நாம் } மிகச் சிறிய மானிடசாதியிற் பிறந்துள்ள நாம்
என் செய்வது } அவரைக் காண என்ன செய்ய வல்லோம்? (ஒன்றும் செய்யமுடியாது.)

வில்லி புதுவை விட்டுசித்தர் } ஸ்ரீவில்லிபுத்தூரில் விளங்கும் பொருள் பெறும் பேருடைய எனது தந்தையார்
தங்கள் தேவரை } தம்மை விடமாட்டாமே தம்மிடமே விளங்கும் தமது தேவரை
வல்ல பரிசு } பலனைப் பெறுவிக்கத் தக்கதொரு வகையாலே
வருவிப்பரேல் } எனது எதிரில் நிற்கவைத்தாரானால்,
அது —அந்த வகையால்
காண்டும் காண்போம்.

நீ சொன்ன நன் மொழி என் மனத்தில் நிலைநின்றது கல்லதோழீ. அவர் எங்கே? நாமெங்கே? ஆயிரம் தலைகொண்ட அநந்தநாகத்தைத் தனக்குப் பள்ளியாக்கிக்கொண்ட பரர் அவர். திருவுக்கும் திரு. மஹதோ மஹீயாக் என்னப்பட்டவர். ப்ரம்மருத்ராதிகளுக்கும் நித்யஸூரிகளுக்குங் கூட மிகவும் பெரியர். நாமோ மிகச் சிறிய மானிடஜாதியிற் பிறந்துளோம். ஜ்ஞானசக்தி களிலே அந்த ஜாதியிலிருப்போரிலும் மிகச் சிறியவராகிறோம். பெண்பிள்ளை. அவரை வசீகரிக்க நாமெல்லோரு மொன்று சேர்ந்தாற் கூடச்செய்வதொன் றில்லை. எதற்கு நாம் திருமாலிருஞ்சோலை முதலான விடங்களிலே நிலவது? வில்லிபுதுவைக்கே போய்ச் சேருவோம். அங்கே நம் தேவரான விட்டுசித் தரை வணங்கி நிற்போம். அவர் தங்கள் தேவரான செல்வரை வருவிப்பர். நமக்கு ஜ்ஞானமளித்துதவு மாசார்யரைக் கொண்டே நமக்கு வேண்டியதை நாம் பெறவிருக்க ஆசார்யருக்குப் பரதந்த்ரராம்நிலையை மறந்து நேராகவே பக வானைப் பெற முயல்வது நியாயமாகாது. ஆசார்யர் செய்யும் பரிசே வல்ல தாகும். அனுக்ரஹிக்க ஆசார்யர் இருக்கும்போது நம்மை நாம் சிறுவர்களா கவே பாவிக்கவேண்டும். முறையே நம் கோருதலை யறிவிப்பதே ஒழுங்கானது. நம் தந்தையார் செய்யும் பரிசென்ன வெனில், ஏதேனு மாகுக. அவர்தம் ஸ்ரீஸூக்திகளிலே யருளின கைங்கரியங்களிலே ஏதேனுமொன்று செய்வது மாம், அதாவது திருமஞ்சனம் செய்வித்தல்; அணியிடல்; பூவிடல்; இதுபோன்ற வேறேதேனு மாம். அல்லது ஓர் இசைபாடுதல். அல்லது சரணாகதி செய்தலு மாம். அதைப் பற்றின விசாரமும் நமக்கென். அதே வல்லது=வன்மையுடை யது. அப்போது நாம் காண்பது திண்ண மென்றபடி, இப் பாசுரம் ஆசார்ய நிஷ்டைக்கு ஸாதகமாக ஸ்ரீதேசிகனுல் உதாஹரிக்கப்பட்டது. காண்டும். காண் பகுதி-தும் தன்மைப்பன்மை விகுதி.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா—தி—10. கார்க்கோடல் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானுர் தேசிகன் திருவடிகளே சரணம்.

தாமுகக்கும் 11.

(தாய்மாரிடம் தெரிவித்தல்)

பெரியாழ்வாரைக் கொண்டே தன்பேறு பெறவேண்டு மென முடிவுக்கு வந்த ஆண்டாள் வெளிவிநோதங்களை விட்டுத் தோழியுடன் தன் இல்லம் வந்து புக, இவளுடைய தைந்யதசையைப் பார்த்து பந்துக்கள் ஒன்றுசேர்ந்து, ஏன் கோதாய்! இப்படியானுய்? எங்கே உன் கைவளைகள்? இங்ஙனமும்

ஒரு மூடநம்பிக்கை யுண்டோ என்றெல்லாம் வினவ, தனது நிலையை மறுக்காது தெரிவித்துக்கொள்ளுகிறாள்—அன்னை முதலானோர் மூலமாகத் தானே அந் நிலையைத் தகப்பனார் அறிவது தகும். முறையுமதுவே.

1. தாமுகக்கும்தங்கையில்சங்கமேபோலாவோ
யாமுகக்குமென்(ங்)கையில் சங்கமுமேந்திழையீர்!
தீமுகத்துநாகணைமேல்சேரும்திருவரங்கர்
ஆமுகத்தைநோக்காராலம்மனேயம்மனே. (104)

ஏந்து இழையீர் } தரிக்கப்படும் ஆபரணங்களை யுடைய தாய்மார்களே!
யாம் —நானும் நீங்களும்
உகக்கும் —இஷ்டப்பட்ட
என் கையில் சங்கு உம் } எனது கைகளிலுள்ள வளைகளும்
தாம் உகக்கும்—அவர் தாமே இஷ்டப்படும்
தம் கையில் —அவர் திருக்கையிலிருக்கும்
சங்கம் ஏ போலா ஓ } ஸ்ரீ பாஞ்சசன்னிய மென்ற சங்கு போல ஆகாவோ? [இப்படிச் செய்யலாமோ?]

தீ முகத்து } கொடிய (அக்னியை யுடைய) முகங்களையுடைய
நாக அணை மேல் } சேஷசயனத்தின் மேல்
சேரும் —சயனத்திற்கு நெருங்கும்
திரு அரங்கர்—ஸ்ரீ ரங்கமன்னார் (ஆ—வருத்தம்)
முகத்தை — எனது முகத்தை
நோக்கார் —நோக்கமாட்டார்.
ஆல் —வருத்தம்.
அம்மனே அம்மனே } அந்தோ! அந்தோ!

சங்கம் சங்கு. அதாவது கைவளையுமாம்; ஊதுசங்குமாம். எம்பெருமான் கையிலிருப்பதற்கு ஸமானம் தன் கையிலிருப்பது மென்பதை வெளியிடுவதற்கேற்ப, திருவாழி போன்றவற்றை விட்டு, ஒரே சொல்லால் சொல்லப் படுவதால், பாஞ்சசன்னியத்தையே இங்கெடுத்ததாம். இரண்டும் இனிய ஒலியுள்ளவை. சங்கை அவர் சிறப்பாக உகந்திருப்பது கருப்பூரத்திருமொழியிலே கூறப்பட்டுள்ளதும் காண்க. பஞ்சசனனென்ற அசுரனிடம் பிறந்துவைத்தே தீய வசுரர் நடலைப்பட முழங்குவதாலே விபீஷணனிடத்திற்போலே அதனிடமுமுகப்பதிகமே. அதனிடத்தில் அவர்க்கு அபிமானமும், அதனால் அவர்க்கேற்றமும் எவ்வளவோ, அவ்வளவை இங்கும் ஆராயவேண்டும். இப்படியிருக்க என்னையிதை யிழக்கும்படி செய்வதோ? யாமுகக்கும். அவர் சங்கை யவர் மட்டும் உகக்கின்றார். எனக்குக் கையில் சங்கை நான் மட்டு முகப்பதில்லை; நீங்களு முகக்கின்றீர்கள். அது இராமல் என் கையைக் காண மாட்டாமே வருந்துகிறீர்கள். இத்தனை பேரும் கவலைப்படும்படி செய்வது அவருக்கெங்ஙனம் நியாயமாகத் தோற்றுகிறதோ? ஏந்திழையீர். நீ கைவளை யிழந்திருக்க நாங்கள் அணிகளை யணிவதோ என்று நீங்களு மிழக்கப்பார்க்கலாமோ? நீங்கள் உங்கள் கைகளினின்று நழுவும் வளைகளைக் கஷ்டப்பட்டு ஏந்துங்கள். உங்களுக்கிவ் வளவு வருத்தத்திற்குக் காரணமானேனே. இழைகளைத் தரிப்பவருக்கன்றோ இதன் அருமை தெரியும். புருஷருக்கு இவ்வளவு தெரியாது போலும். ஆகிலும் தம் சங்கைப் போலாவது நினைக்கக்கூடாதோ? அல்லது, சங்கமே போலாவோ. ஆபரணமாக ஆகாததையும் தமக்கு ஆபரணமாக்க முயலுமவருக்கும் ஆபரணங் களில் உகப்பு நன்றாகத் தெரியும். ஆக இப்படிச் செய்வது நியாயமோ? அல்லது, ஏந்திழையீர். பல வணிகளை யணிந்துவிளங்கும் நாளிலே சேர்ந்த நான் அணியைத் தரிக்க இஷ்டப்படவில்லை யென்று நினைக்கவேண்டா. ஏந்திழையீர்

களான உங்களிடம் பழகினவளே நான். நானுகக்கிறேன். ஆகிலும் அவர் செய்ததற்குமேல் நான் என் செய்வது? இங்கே, 'நானவருடைய விரஹத்தாலே இங்ஙனமிருக்க நீங்கள் மட்டும் விரஹத்திற்குத் தப்பிப் பிழைத்து ஏந்திழையீராயிருத்தல் எங்ஙனம்? நீங்களே போய் அவனைக் கேளுங்கள்' எனவும் கருத்துரைப்பர்.

'அவர் என்ன செய்தார்? உன் கையில் சங்கு வேண்டாமென்றாரா' என நினைக்கவேண்டா. அவர் என் முகத்தைக் கூட நோக்காமலிருப்பதாலே நொந்திளைத்து வளையொழிந்தேனென்கிறாள் தீமுகத்து இத்யாதியால். விரஹத்தீயினால் வெதுப்புண்ட எனது முகத்தைப் பார்க்கமாட்டாமே படுத்திருக்கிறாரென்கிறீர்கள். வந்து பார்த்தால் இவ்வெதுப்பு விலகுமே. இதையே அண்டமாட்டாதவர் ஆயிரம் தலை கொண்ட தீ முகத்து நாகணையின் மேல் சேர்ந்திருப்பது எங்ஙனம்? சேஷனான திருவனந்தாழ்வான் விரோதிகள் நெருங்காதபடி தீமுகத்தனாய் அவரைப் பாதுகாப்பது பற்றி அவருக்கு அங்கே அபிமானமென்னில், சேஷனுக்கு சேஷியினிடத்திலே போலே சேஷிக்கும் தன் உடைமையிலே அபிமானம் வேண்டுமே. என்னை விடுவதென்? என்னோடு சேர்ந்து அந்த நாகணை மேல் சேர்வதன்றோ நியாயமாகும். அவர் பரமபதத்திலோ, பாற்கடலிலோ, எங்கேயோ நாகணை சேர்ந்திருக்கிறாரென்பதில்லை. திருவரங்கராகவுமிருக்கிறார். அங்கே போய் நீங்கள் அறிவித்துவருவீர்களா? அவன் சங்கையுமபஹரித்து வருவீர்களா? (அல்லது) தீ முகத்து நாகணை மேலிருப்பதால் அவரை நெருங்கி யார் அவத்யம் விளைப்பது? அவர் சங்கை யபஹரிக்க யாரால் முடியும்? அவரையண்டி எனது துன்பத்தைச் சொல்லத் தான் யாருக்கு முடியும்? நீங்கள் யாரையாவது அனுப்பவுமாகாது. ஆகவே தீமுகத்துநாகணைமேற் சேரும் திருவரங்கருடைய முகத்தையும் யாரும் நோக்கார். இப்படி யவரும் என் முகத்தை நோக்காமலும், அவர் முகத்தையும் யாரும் நோக்காமலும் இருக்கும் நிலையிலே யான் ஏது பலன் பெறுவது? ஆதிசேஷன் ப்ரளய காலத்திலே முகங்களினின்று தீயை விளைத்து உலகமடங்கலுமழிப்பா னென்பர்—திருவரங்கரின் நாகணைமுகத்தீ எனக்கு மட்டுமாக இப்போதே ஏற்பட்டதோ? அந்தோ! அந்தோ! என்றபடி. (1)

அவர் உன் வளைகளை யெடுத்துப் போகவில்லையே. நாங்கள் இப்போது இழைகளை ஏந்துமாபோலே நீயும் அவற்றைப் போகவிடாமற் பார்த்துக்கொள்ளலாகாதோ? இப்படி யணியுமிழந்து அழகுமழிந்திருப்பாயோ என்னவருளுகிறாள்—

2. எழிலுடையவம்மனைமீர் என்னரங்கத்தின்னமுதர்
குழலழகர்வாயழகர் கண்ணழகர்கொப்பூழில்
எழுகமலப்பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத்தாமும் கழல்வளையே யாக்கினரே. (105)

எழில் உடைய } அழகை யுடைய
அன்னைமீர் —தாய்மார்களே!
அரங்கத்து —அரங்கத்திலிருக்கும்

என் —எனது
இன் அமுதர் } இனிய அமிருதம் போன்றவருர்,
குழல் அழகர் } அழகிய கேசங்கள் உடையரும்
வாய் அழகர் } அழகிய திருப்பவள முள்ளவரும்
கண் அழகர் } அழகிய திருக்கண்களையுடையவரும்
கொப்பூழில் —திருநாபியில்
எழு கமலப்பூ—எழுந்த தாமரைப்பூவினுலும்
அழகர் —அழகு பெற்றவருமான
எம் மாஞர் —எனது பதியானவர்; என்னுடைய
கழல் வளையை } தாமே கழல்வளைகளா யிருக்கும் கைவளைகளை
தாமும் —அவர்தாமும்
கழல்வளை } கழன்று விழும் வளைகளாகவே
ஆக்கினர் —செய்துவிட்டனர்.

அணியும் அழகும் பொருந்திய உங்கள் இடையிலே இருக்கு மெனக்கு அவற்றில் வெறுப்பில்லை. அழகு என்பதை அநேக விடங்களில் பார்க்கிறோம். அன்னைமீர்! உங்கள் அழகே போதுமே—பார்ப்பதற்கு. ஆயினும் அவருடைய அழகு என்னைக் கவருகிறது. ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் அம்சத்திலே அழகிருக்கும். அவருக்கு குழல், வாய், கண், முதலாக எல்லாமே அழகாம். முகத்தை நோக்காரென்றேனுகையாலே திருமுகத்திலுள்ள வழகைச் சொன்னேன். இங்ஙனம் ஒவ்வோர் அங்கமும் அழகே வடிவாயமைந்தது. இஃதென்ன விந்தை? அவர் திருநாபியினின்று, கங்கையின் நடுமடுவி னின்று கிளர்ந்தாற் போல், ஒரு கமல மெழுந்து இருக்கிறதே. பிரமன் முதவாக ப்ரபஞ்சத்தை யெல்லாம் படைக்க மூலமான அக் கமலப்பூவின் அழகொன்றே போதுமே. இவ்வளவு அழகு வாய்ந்தவரென்றது மட்டுமோ? இன்னமுதமாயு மிருப்பரே. இவ்வளவு போக்யமானவர் எனக்குப் பதியுமாகி அருகில் அரங்கத்திலுமிருக்கிருரென்ருல் அவரைக் காணுமலிருக்கு மெனக்குக் கைவளைகள் நிற்குமோ? ஏன் ஏந்தியிருக்கக் கூடாதென்கிறீர்கள். யானென்ன சொல்வேன். அவை கழல் வளையாக வல்லவோ எம்பெருமானுலே ஸங்கல்பிக்கப்பட்டன. ஆகக் கழல் வளைகளாகவே அவை யாகவேண்டும். யான் என் செய்வது என்றனள். கையில் அணியும் வளையல்கள் கழற்ற முயன்ருல் உள்ளங்கை வழியாகக் கழன்று வருவதால் கழல்வளை யெனப்படும். இப்போது உடல் இளைத்ததால் ப்ரயத்னமின்றியே யவை கழன்று விழும்படியாகிக் கழல்வளையே யாயின, முன் பாசுரத்திலே இருபொருள் கொண்ட சங்க மென்ற சொல் போலே இங்குக் கழல் வளை யென்ற சொல்லு மொருவாறு பொருளைச் சிறிது மாற்றிச் சமத்காரமாக வருளப்பெற்றது. .... (2)

ஆகிலும் வளைகள் எங்கே விழுந்தன? அதைச் சொன்ருல் போய்க் கொணர்ந்து அணியச் செய்தாவது ஆறுதல் பெறுவோ மென்ருர்கள். அப்போது சொல்லுகிருள்—

3. பொங்கோதம்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்
அங்காதும்சோராமே யாள்கின்ற வெம்பெருமான்
செங்கோலுடைய திருவரங்கச்செல்வஞர்
எங்கோல்வளையா லிடர்தீர்வராகாதே. (106)

பொங்கு —விருத்தியடைகின்ற
ஓதம் —கடலினுல்
சூழ்ந்த —சூழப்பட்ட
புவனி உம் —பூமண்டலத்தையும்
விண் உலகு உம் —பரமபதத்தையும்
அங்கு —அவற்றிலெங்கும்
ஆரும் —(யாதும்) சிறிதும்
சோராமே —சோர்வுபெருமல்
ஆள்கின்ற —நியமிக்கின்ற
எம்பெருமான் —ஸ்வாமியாய்,
செங்கோல் உடைய —அவதாரதசைகளிலும் செங்கோல் செலுத்தும் திறமை நிறைந்த
திருவரங்கம் செல்வனர் —திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ச்ரிய: பதியானவர்
எம் கோல் வளையால் —எமது கைகளில் அமைந்த வளைகளைக்கொண்டு
இடர் தீர்வர் —தம் துன்பத்தைப் போக்கிக் கொள்வார் என்பது
ஆகாதே —தகாதே.

புவனி என்பது ப்ரக்ருதிமண்டலம் முழுதையும் குறிக்கும். அங்கு என்ற பதம் இராமலே வேண்டின பொருள் கிடைத்துவிடுவதால் இது அசைச்சொல் என்பதுமுண்டு. 'உபயவிபூதியிலும்' என்ற உரையைப் பின்பற்றி, 'அவ்விடங்களிலே' எனப் பொருள் கொள்வதுமுண்டு. இப்போது அங்கு என்பது ஆங்காங்குள்ள சேதநாசேதநங்களின் வகைகளை யெல்லாம் நினைப்பூட்டி இவ்வண்ணமிவற்றை யாள்வது வேறொருவருக்கும் கூடாததென வறிவிப்பதாம். அங்கு என்று நித்யவிபூதியை மட்டும் கொண்டு புவனியும், அங்காரும் சோராமே விண்ணுலகும் ஆள்கின்ற என்பதுமாம். புவனியில் கர்மாநுகுணமாக ஜீவன் சோர்வது முண்டாதலின். இனி, ஆரும் சோராமே தாம் சிறிதும் தளராமல் என்பதாம். ஆள்வதும் பலன் பெறுவதும் பிராட்டியும் அவருமென விளக்கவும், ச்ரிய : பதியானவருக்கு இன்னு மொன்று வேண்டியிருப்பது மோர் ஆச்சரியமென வறிவிக்கவும் செல்வனர் என்றதாம். செங்கோல் செம்மையான கோல் = ஆளுதல். கோல் கோலல் சூழ்தல். அல்லது அமைத்தல். உங்களால் ஆசையுடன் அமைக்கப்பட்ட வளைகளென்றபடி. இடர் தீர்வர். எல்லா வுலகங்களுக்கும் ஸ்வாமியான உபயவிபூதிகளையாளுமவனுக்கு எம் கைவளை பெற்றே வழ்மை நீக்கவேண்டியிருந்தது போலிருக்கிறது. இருக்கட்டுமென்றபடி. எம்பெருமான்தானே இவ்வளைகளுக்கும் ஸ்வாமி. அவர் இவற்றைத் தம் இஷ்டப்படி உபயோகித்துக்கொண்டார். எங்கு விழுந்தாலென்ன? அங்கு விழும்படி செய்ததும் அதனுலுகப்பதும் அவர்தாமே. அவற்றை யெங்கு வேண்டுமானுலும் கொண்டுபோகலாம். பொங்கும் கடலும் அவருடையது. அலை மோதி ஒங்கும் கடலிற் போயிருந்தால் நாமென் செய்வது? விண்ணுலகு மவருடையது. திருவரங்கம் மட்டும் அவருடையதாயிருந்தால் கூட நம்மால் பெறமுடியாதவையா மவை. உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் சேதநாசேதநங்கள் இரண்டும் கலந்தபடியே யிருக்கும். ததிபாண்டனுக்கு மோக்ஷமளித்த வரலாற்றை யறிவீர்களே. உங்களைச் சேர்ந்த என்னிட மிருந்த வளைக்கு அவர் விண்ணுலகு மளித்திருப்பார். எனது பதியான திருவரங்கருக்கு இங்கிலேயிலும் அங்ஙனம் செங்கோல் செலுத்தும் சக்திக்குக் குறை யில்லையே. இவ்வளவு ஐசுவரியமுள்ள செல்வருக்கு இவ்வளையாலென்ன ஆகவேண்டு மென்பதுண்டோ ? இப்படி ஒவ்வொன்றையும் வேண்டாமென்று கழித்தால் ஐசுவரியத்தையே யொழித்தபடி யாமே. இவற்றுலு மிடர் தீர்வது தகு மென்றவாறு கருத்தாம்.

எங்கோல்வளை. எம் என்ற பன்மை ஸர்வேச்வரனுக்கும் இடர் தீர்க்கும் வளையைப் பெற்றிருக்கும்படி அவர் அளித்திருந்த பெருமையைத் தெரிவிக்கிறது. முன்னே கழல்வளை யென்று கலகலவென்று சத்தமளிக்கும் வளைகளைச் சொன்னதாய், இங்கே கோல்வளை யென்று அழுந்த அமைக்கப்பட்ட வளைகளைச் சொன்னதாம்.

இங்ஙனம் ஆகாதே என்பதற்கு ஆகாதோ ஆகும் தகுமென்ற பொருளைக் கொண்டு கருத்துரைத்தாயிற்று. ஆகாதே. ஆகாது, தகாதெனவும் கொள்ளலாம். உபயவிபூதிகளையு முடைய எம்பெருமானுக்கு என் வளையாலாகவேண்டியதென்ன விருக்கிறது? அவனுக்கொன்றும் பலனில்லை. நானும் நீங்களும் வருந்துவதுதான் இதற்குப் பலனெனவும் கருத்தாகும். இங்கு முன்னோர், 'தமக்கொரு குறை யுண்டாய்—அவ்விடர் தீர்க்கைக்காகக் கொண்டாரோ. எனக்கு க்லேசத்தை விளைக்கைக்காகச் செய்தாரத்தனையன்றோ?' எனவுரைத்ததும் காண்க. ... ... (3)

நீ சூடிக்கொடுத்த பூமாலையாலே பேரிடர் தீர விருந்தவன் உனது கைவளைகளைக் கொண்டு களிப்பதும் கூடுமே யென்றார்கள் உபசரிப்பவர். அதன் மேல் கூறுகின்றனள்—

4. மச்சணிமாடமதிளரங்கர் வாமனனார்
பச்சைப்பசுந்தேவர் தாம்பண்டுநீரேற்ற
பிச்சைகுறையாகி யென்னுடைய பெய்வளைமேல்
இச்சையுடையரே லித்தெருவே போதாரே. (107)

பச்சைப்பசுந் தேவர்	ச்யாமநிறம் பொருந்தின தேவராகவேயிருப்பவரும்
வாமனனார்	வாமனாவதாரம் செய்தவருமான,
மச்சு	—மேனிலைகளையும்
அணி மாடம்	—அழகிய உப்பரிகைகளையும்
மதிள்	பல மதிட்சுவர்களையுமுடைய
அரங்கர்	ஸ்ரீரங்கத்திற்கு ஸ்வாமியானவர்
பண்டு	—முன் வாமனாவதாரத்திலே
நீர்	மாவலியிட்ட கமண்டலு ஜலத்துடன்
ஏற்ற	—ஸ்வீகரித்த
பிச்சை	—பிக்ஷையில்
குறை ஆகி	குறை யேற்பட்டு (அதைத் தீர்க்க) என்னுடைய
பெய் வளைமேல்	(உங்களால்) இடப்பட்ட வளைகளிடம்
இச்சை உடையரேல்	அபிலாஷையை உள்ளவராகில்
இ தெரு ஏ	—இந்தத் தெருவழியே
போதாரே	—செல்லாரோ?

நீங்கள் சொல்லுகிறபடி அவர்க்கு என் வளைகளில் விருப்ப மிருக்கிறதாகில், அது எனக்கும் ஸம்மதமே. அதை நேரில் வந்து கேட்கலாமே. கேட்பதற்கு வெட்கப்படவேண்டுமோ? அவர் மச்சணிமாடமதிளரங்கரானாலென்ன? இது பச்சைப்பசுந்தேவரென்பதற்கு மேற்பட ஏற்றமாமோ? மூன்றடி மண் வேண்டுமென்று மாவலியைக் கேட்க வாமனரூப மெடுத்துப் போனாரே. நான் அந்த அஸுரனைப் போன்றவளல்லளே. நேரில் வந்தால் இல்லை யென்று சொல்வேனோ என்று ஐயப்படவேண்டாமே. பச்சைப் பசுந்தேவராகவே

வரலாமே. தாம் சுத்தமாய் நிலைநின்ற தேவத்வமுள்ளவர். 'ஏகோ தேவ: ஸர்வ பூதேஷு கூட:' 'திவ்யோ தேவ ஏகோ நாராயண:' என்றபடி அவருக்கே அழியாத தேவத்வம். மற்றவர்க்குக் கர்மாநுகுணமாகச் சிறிது காலமே ஸ்வல்பமாகவே தேவத்வ முள்ளது. அவர் பசுமையும் மாற்றவேண்டாம். பசுமையாவது ச்யாமவர்ணமும், பொன்னிறமும். ச்யாமவர்ணமாய் பிராட்டியையும் மறைக்காமே திருமார்வில் கொண்டு எழுந்தருளலாம். அவர் மூன்றடி மண் கேட்டதற்கு இரண்டடி மண்ணே பெற்றார். கேட்டபடிப் பெறவில்லையே யென்ற குறையு மிருக்கும். என்னை வளை கொடு என்றால் எல்லா வளையும் நானே கொடுப்பேனே. அசுரனுக்குத் தம் அழகிய உருவைக் காண்பித்தவர் இத் தெருவே எழுந்தருளி உங்களுக்கும், என்னருகே வந்து எனக்கும் தம்மைக் காண்பித்துக் கேட்டிருந்தால், என் நோயெல்லாம் போயிருக்கும். உங்களுக்கும் என்மேல் ஒன்றும் சொல்லமாட்டாதபடி யாயிருக்கும். இவ்வளவு உபகாரம் செய்திலரே யென்றாள். போதாரே. போதுதல் செல்லல். பச்சைத் தேவரென்றால் வேறு அம்சம் கலசாத தேவத்வ முள்ளவரென்றதாம். பச்சைப் பொய் என்றாற்போல வாமிது. பசுந்தேவரென்றது பசுமை பொருந்திய தேவரென்றபடி. அல்லது பச்சைப் பசுந்தேவ ரென்பதற்கு மிகவும் பசுந்தேவரெனப் பொருளாம். இச்சை யுடையரேல். இச்சையுள்ளவராகில் நேரில் வந்திருக்கலாம். நமக்கு மனுகூலமாயிருக்கும். வாமனரைப் போலே வாராமையினால் இவர்க்கு இச்சையில்லை. என்னைக் கஷ்டப்படுத்துவது மாத்திரமென நினைக்கிறேனென்றபடி. ... ... (4)

கீழ் வாமனனுக்கும் அரங்கர்க்கு மொப்பில்லை யென்றாள், மீண்டு மாராய்ந்து ஒருவாறு கூறுகிறாள்—

5. பொல்லாக்குறளுருவாய்ப் பொற்கையில்நீரேற்று
எல்லாவுலகுமளந்து கொண்டவெம் பெருமான்
நல்லார்கள்வாழும் நளிரரங்கநாகணையான்
இல்லாதோம்கைப்பொருளு மெய்துவானொத்துளனே. (108)

பொல்லா	—பொல்லாத	நல்லார்கள்	—நன்மையே பெற்றவர்கள்
குறள் உருவாய்	வாமனரூபம் கொண்டவராய்	வாழ்	—வாழப்பெற்ற
பொன் கையில்	அழகிய கையில்	நளிர்	—குளிர்ந்த
நீர் ஏற்று	தானநீர்த்தாரையைப் பெற்று	அரங்கம்	—ஸ்ரீரங்கத்திலிருக்கும்
எல்லா உலகு உம்	உலகங்களை யெல்லாம்	நாக அணையான்	அரவத்தாழ்வானாகிற படுக்கை யுடையவனாய்
அளந்து	—ஈரடிகளுக்கேயாக்கி	இல்லாதோம்	—அகிஞ்சனரான நம்முடைய
கொண்ட	—ஸ்வீகரித்த	கைப் பொருளும்	கையிலுள்ள சொத்தையும்
எம்பெருமான்	—உபேந்த்ரனானவன்	எய்துவான்	—பெறவிருக்கிறவனோடு
		ஒத்துளனே	ஒத்தேயிருக்கிறான். அல்லது ஒத்துளனோ?

பொல்லாக்குறளுருவாவது வஞ்சனையாக வந்த வாமனாவதாரம். பொற்கையில். கை நீட்டிக் கேட்கும்போது அதன் அழகினீடுபட்டு அளிக்க ஆவலுற்றான் மாவலி. பொல்லா என்பதற்கும் அழகிய விலக்ஷணமான எனப் பொருளுரைப்பது முண்டு. பொல்லாத வுரு வென்பதை விளக்குவது இரண்டாமடி. நல்

லார் ஜ்ஞாநாநுஷ்டாநவைராக்யாதிகளிலே சிறந்தவர். பிறர்க்குத் துன்பம் விளை விக்காமலும் வஞ்சனை செய்யாமலு மிருப்பவர். இவர்களுக்கு இம் மேன்மை க்ஷேத்ரவாஸத்தாலே என நினைத்திருந்தேன். நல்லார்கள் வாழுமிடத்திலிருந்தும் இவனுக்கு நற்குணம் காண்கிறதில்லையே, நாகணைக்குள்ள நாவிரண்டும் நஞ்சும் தான் இருக்கிறன. இப்படிப்பட்டவனை நல்லார்கள் தங்களிடத்திலே வைத்துக் கொண்டு வாழ்கின்றார்களே. அதனாலேயே அவர்களை நல்லார்களென்ன வேண்டும். இவனுடைய பொல்லாங்கைப் பாருங்கள். இல்லாத நம்மிடத் திலே கைப்பொருளைக் கொள்ளையிடுகிறான். சொத்துள்ளவரிடத்தில் கேட்டுப் பெறுவது நியாயம். கொடுக்க சொத்தில்லாதவரிடம் சென்று கேட்காமலே கைப்பொருளையும் கொள்ளையிடுவது நியாயமோ? ஆகையால் வாமனனை விட அரங்கன் பொல்லாதவன். அவனுக்கு இவ்வளவு பொல்லாங்கில்லை. கேட்டுப் பெற்றான். நீர் வார்த்துக் கொடுத்த பிறகுப் பெற்றான். வேறு கைப்பொருள் கொள்ளவில்லை. ஆனாலும் வஞ்சனை செய்து வேற்றுரு கொண்டளந்ததாலும், எல்லா வுலகு மீரடிகளிலே யடங்கும்படியாக்கி மாவலியைக கீழே தள்ளிவிட்ட தாலும் இவனோடு அவனு மொத்துள னென்கிறது. குற்றம் அதிகமுள்ள இவனே உபமானம்; அவன் உபமேயம். உண்மையில் பார்த்தால் பொல்லாதவனாகவும் எல்லாம் கொண்டவனாகவு மிருந்தாலும், கேட்டு நீரேற்றுக்கொண்டதாலே இவனோடு அவன் ஒத்துளனோ? அல்லனென்றே சொல்லவேண்டியிருக்கிற தென்றாள். வாமனனைப் புகழ்ந்து அரங்கனைப் பழிப்பதாகக் கருத்துக்கொள் வதால் பொல்லா என்பதற்கு விலக்ஷணமான எனவே பொருளாகுக.

இங்கே குறளுருவாய்க்கொண்ட எம்பெருமானாகிய அரங்கநாகணையான் என்று சேர்த்துஇவன் எம் கைப்பொருள் எய்துவானொத்துளன் = நம்கைப்பொரு ளைக்கொள்வான் போலிருக்கிறானென உரைப்பர். கைப்பொருளைக்கொண்டுவிட் டவனை, கொள்வான் போலிருக்கிறா னென்பது பொருந்துமோ? கைவளைகளைக் கொண்டுவிட்டான். இனி, கைப்பொருளையும் கொண்டுவிடுவான் போலிருக் கிறதென்று, கைப்பொருளைக் கொள்வதற்குச் சிறிது முன்னே சொல்லலாமே யென்னில், மேற்பாசுரத்திலே, 'கைப்பொருளை முன்னமே கைக்கொண்டான்' என்றது சேராது. இங்கே கைப்பொருளாவது உடல்; அங்கே கைப்பொருள் என்பது கையிலுள்ள பொருள் என்னில், இப்படிச் சேர்ந்துள்ள பாசுரங் களிலே ஒரே பதத்திற்குப் பொருள் வேறு கொள்வது ஸ்வரஸமாகாது. உட லைப் பற்றி மேற்பாசுரத்திலே மொழிவாள். அரங்கனும் கைப்பொருளைக் கொள்ளப்போகிறவனு மொருமூர்த்தியாயிருக்க அவனையே அவனுக்கு ஒத்தி ருப்பதாகச்சொல்வதும் அழகன்று. மேலும் முன்பாசுரத்திற் சொன்ன வாம னாவதாரத்தை மீண்டு மிங்குச் சொன்னது வீணாகும். அரங்கனானவன் மனது கைப்பொருளைக் கொள்வான்போலிருக்கின்றான் என்று உத்தேச்யமும் விதே யமும் மேலடிகளிலேயே கிடைத்துவிட்டனவே. ஆகையால் அந்த வாமனன் இந்த அரங்கனுக்கொத்துளனோ என்று ஸ்வரஸமாக உரை செய்தனம். இது நிற்க.

நல்லார்கள். உபாயத்தையே ஆயுஷ்காலம் வரை யனுஷ்டிப்பாரைப் போலின்றி ப்ரபத்திநிஷ்டராய் பதினாறு மாற்றுத் தங்கம் போன்றவர். வாழும். முக்தரைப் போலே கைங்கர்யமாகவே எல்லாம் செய்வதை வாழ்க்கையாக உடையாரின் ஸ்தலமான. களிர். ஜ்யோதிர்மயமான பரமபதம்கூட இவ்வளவு அனுகூலமாய்க் குளிர்ந்திருக்கும்படியோ வென்று ஸந்தேஹிக்கும்படி யிருக்கும்.

கைப்பொருளென்பது கையிலுள்ள வளையே யாகலாம். சொத்துக்களை யெல்லாமவனுடைய கைங்கர்யத்திலே, தோன்றினபடி வரனுக்குச் சேரிப்பது போல், செலவு செய்திருப்பதாக வைத்து அவற்றையு மிதனால் கொள்ளலாம். இதனால் இனிப் புதிய வளைகள் செய்துகொள்ள சக்தியில்லை யென்றதாயிற்று.

இல்லாதோம் இத்யாதிக்கு, அகிஞ்சநர்களுடைய பாரத்தை = அவர்கள் தங்கள் கையால் செய்யப்படவேண்டியதைக் கிருபையால் ஸ்வீகரிக்க விருப்பம் கொண்டவன் நாகணையான் என்று உட்பொருளாகுக.

வாமனனை விட இவனைக் குறைத்துக் கூற நினைத்திருப்பதாலே இப்பாசுரத்திலே மட்டும் பன்மை யின்றி ஒருமையே யாதரிக்கப்பட்டது நோக்குக. (5)

மாவலியின் உடலுயிர்களுக்கு உயர்ந்த ஸுகமளித்துவரும் வாமனனாரா வரோ இவர். கைப்பொருளைக்கொண்டது மட்டுமின்றி, உடலையும் கொண்டாரே என்கிறாள்—

6. கைப்பொருள்கள்முன்னமே கைக்கொண்டார்காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்றார்க்கு மெய்தாதுநான்மறையின்
சொற்பொருளாய் நின்றாரேன் மெய்ப்பொருளும் கொண்டாரே. (109)

கை பொருள்கள் } என் கையிலிருந்த பொருள்களை யெல்லாம் (இப்படி)
முன்னமே கைக்கொண்டார் } தாமே ஏற்கனவே எடுத்துக் கொண்டவரும்,
எ பொருட்கும் } எல்லா வஸ்துக்களுக்குமாக
நின்றார்க்கும் } நின்றுள்ள ப்ரப்மருத்ராதிகளுக்கும்
எய்தாது } அடைய முடியாமலே யிருந்துவைத்து
நால் மறையின் } நான்கு வேதங்களின்
சொல் —எல்லாச் சொற்களுக்கும்
பொருளாய் —பரமார்த்தமாய்
நின்றார் —விளங்குகிறவருமான
காவிரி நீர் —காவிரி ஆற்றின் ஜலம்
செய் —செய்கால் நிலங்களிலே
புரள ஓடும் } மிகவாகிப் புரண்டு போம்படி வேகமாய் ப்ரவஹிக்குமிடமான
திருவரங்கம் } ஸ்ரீரங்கத்திலெழுந்தருளி யிருக்கும்
செல்வனார் —ச்ரிய: பதியானவர்
என் —எனது
மெய் பொருள் உம் } உடலென்ற பொருளையும்
கொண்டார் —ஸ்வீகரித்துவிட்டார்.

இவருக்கு ஐசுவரியத்திற்கென்ன குறைவு? மிக்க நீர்வள முள்ளது திருவரங்கம். பொன்னி யன்றோ எங்கும் புரண்டோடுகின்றது. அதனால்

அங்கெல்லாம் செய்நிலங்களே. பயிர்நிலமற்காமே கிடக்குமிடமே கிடையா. இப்படிப்பட்ட இடத்திலே பிராட்டியும் கூடவே யிருந்து மிகவும் செல்வனாக நின்றார். இது மட்டு மின்றி, உலகிற் பொருள்களை யெல்லாம், அதாவது, புருஷார்த்தங்களை யெல்லாம் நாங்கள் கொடுக்கின்றோ மென்று நிற்குமெல்லாத் தேவர்களுக்கு மெட்டவொண்ணாதவர். அளவற்ற ஐச்வர்யம் நித்யவிபூதியிலும் உள்ளவர். மேலும் எல்லாப் பொருள்களுக்கும் அபிமானிதேவதைகளாய் நின்றவர்களுக்கும் மிகவும் மேம்பட்டவர். இவ்வாறு எல்லா வேதங்களும் இவரையே எங்கும் புகழ்கின்றன. ஸர்வவேதங்களும் அந்தந்த சேதநாசேதநங்களுக்கு அந்தர்யாமியான இருப்பிலே இவரைச் சொல்லும். வேதாந்தவிழுப் பொருளு மிவரே. 'வேதாக்ஷராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி:. தாவந்தி ஹரிநாமாநி கீர்த்திதாநி ந ஸம்சய:' என்றபடியிலும் நான்மறையின் சொற்பொருள். இவ்வளவு ஐசுவரியமுள்ளவர் சிறிதும் கூறுது ஸகலபொருள்களையும் கொண்டதுமட்டு மின்றி எனது மெய்யையும் கொண்டார். இதுவு மவர்க்கு ஒரு பெரும் பொருளாயிற்று. பொருளுக்கும் பொருளாயிற்று எனது மெய்ப்பொருள். இப்படியிருக்கக் கைவளைகள் போயினவே, கைப்பொருள்களும் போயினவே என்ற கவலை யேது? உடல் நன்றாக இருந்தாலன்றோ உங்களுக்கு, வளை யில்லையே யென வருத்தம் கூடுவதென்றபடி.

எப்பொருட்கும் நின்றார்க்கு மெய்தாது என்றவிடத்தில் நின்று ஆர்க்கும் எனப் பிரித்து, எப்பொருட்கும் நின்று = வேடுவிச்சி, குரங்கு (சபரீ, ஸுக்ரீவன்) போன்றார்க்கும் ஸுலபனாகி நின்று, ஆர்க்கும் எய்தாது = மஹாஜ்ஞாநிகளுக்கும் அரியனாய் எனவுரை செய்வர். சபரீவாநராதிகளைப் பொருளென்றது அசேதந ப்ராயங்களென்பதற்காக. எப்பொருட்கும் நின்று = தாமே எல்லாப் புருஷார்த்தங்களையும் கொடுப்பவனாக நின்று எனவு முரை தகும். கேட்பவருக்கெல்லாம் எதையும் கொடுக்கவல்லனாய், 'கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும்' என விருப்பவனுக்கு எதற்கு என் கைப்பொருளும் மெய்யு மென்றபடி. இந்திராதிகள் எல்லாம் கொடுப்பவராயிருக்க இவர் கொடுப்பதென்பதென்னே என்னுமைக்காக இவனே எல்லோருக்கும் அந்தர்யாமியாயிருந்து கொடுக்கிறானென்று அறிவிக்க நான்மறை யித்யாதியாம். மெய்ப்பொருளும் கொண்டார். மெய் = உடல். அதைப் பொருளாக வுடையது ஆத்மா. அதையும் கொண்டார். மெய்யில் = உடலில் இருக்கும் பொருள், 'ஒளி வண்ணம் வளை சிந்தை யுறக்கத் தோடிவை யெல்லாம்' (8-3.) என்னப்பட்டவையும், ஆத்மாவுமாம். இதனால் மெய் ஒன்று இருப்பது உங்கள் கண் முன்னே தோன்றினாலும் அது பொருளற்றிருக்கின்றதென்றதாம். .... (6)

குறள்பிரம்மசாரியானதால் பெண் என்றால் பிடிக்காது போலிருக்கிறது. இப்படி வதைக்கிறானே என்னவேண்டா. அப்போது மவர் மார்விலே மறைத்து வைத்துக்கொண்டே போனாரே. அது கிடக்கட்டும். இராமாவதாரத்திலே அவர் பெண்ணுக்காகப் பட்ட பாடு கேண்மின்; சொல்லுகிறேன். இப்படிப் பட்டவர் என்னவோ இங்ஙனமாய்விட்டாரென்கிறாள்—

7. உண்ணாதுறங்கா தொலிகடலை யூடறுத்துப்
பெண்ணாக்கையாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம்
திண்ணார்மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய நன்மைகளை யெண்ணுவரே. (110)

திண்	—திடமாயும்	உறங்காது	—கண்வளராமலும்
ஆர்	—நிறைந்தவையுமான	ஒலி	—அலை மோதி யொலிக்கும்
மதிள்	—மதிள்களாலே	கடலை	—ஸமுத்ரத்தை
சூழ்	—சூழப்பட்ட	ஊடு	—நடுவிலே
திருவரங்கம்	ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி யிருக்கும்	அறுத்து	—பிரித்து
செல்வனார்	—ச்ரிய: பதியானவர் (முன் ராமவதாரத்திலே)	தாம் உற்ற	—தாம் பெற்ற
பெண்	—ஸீதைப் பிராட்டியின்	பேது எல்லாம்	வருத்தங்களை யெல்லாம்
ஆக்கை	—திருமேனியிலே	எண்ணாதே	—நினைக்காமலே
யாப்பு உண்டு	—கட்டுண்டு	தம்முடைய	
உண்ணாது	—புசிக்காமலும்	நன்மைகளை	—ஸுகங்களையே
		எண்ணுவர்	—நினைக்கின்றார்

திண்ணார். திண்ணார்ந்தென்றவிடத்திற்போலே திடமுள்ள எனவும் பொருளாம். செல்வனார். வாமனாவதாரத்திலே போலே ராமாவதாரத்திலும் அகலகில்லேன் இறையு மென்று உறையும் பிராட்டியைத் திருமார்வில் எப்பொழுதும் உடையவரே. ஆயினும் அப் பெண்ணின் ஸீதாமூர்த்தியான ஓர் ஆக்கையைக் கூட விட்டுப் பிரிந்திருக்கமாட்டாமே, 'அநித்ர: ஸததம் ராம:,' 'ந மாம்ஸம் ராகவோ புங்க்தே ந சாபி மது ஸேவதே' என்றபடி உண்ணாதுறங்காதிருந்தார். ஸுக்ரீவனை சரண மடைந்து ஸீதையிருக்குமிட மறிந்து ஒலிகடல் சேர்ந்த பிறகும் ஸர்வலோகசரண்யனென்று சொன்ன விபீஷணனே ஸமுத்ரத்தைச் சரண மடையச் சொல்லுமாறு மாறி உண்ணாதுறங்காது மூன்று நாள் வேண்டி, கடைசியில் ஒலி குறையக் காணாமையாலே கடுங்கோபங்கொண்டு கடலைக் குழப்பி அது அடங்க அதன் ஊடறுத்து அளவற்ற மலைகளை யெறிந்து அணை கட்டிப் பல பாடு பட்டுப் பல துன்பங்களுக்குட்பட்டு முடிவிலே ஜயித்த மனோரதம் பூர்த்தி பெற்றார். இப்படிப் பெண்ணாக்கையில் யாப்புண்டவர் இப்போது எல்லாம் மறந்துவிட்டாரா? என்னாக்கையாப்புண்டு மிருக்கவேண்டியவரல்லரோ? இப்போது தம்முடைய நன்மைகளையே யெண்ணிவருகிறார் போலும். அவ்வளவு ப்ரயாஸமின்றி யவளை யடையமுடியாதென்று அத்தனை பேதுற்றேன். இவளை யார் ராவணனைப் போலே நலிகின்றவர். மதிள்சூழரங்கத்தில் ஸுகமாய் படுத்திருந்தே பெறலா மென்றெண்ணுகிறார் போலும் என்றபடி. (7)

பெரியபிராட்டியாரின் ஆக்கை யெதாகினும், அதில் யாப்புண்டு அவர் பேதுற்றிருப்பர். ஏனெனில், அவ் விருவருமொரு தத்துவ மென்னலாம்படி யிருப்பதை 'ஏகதத்துவமிவோதிதௌ' என்றவாறு சாஸ்திரம் கூறுகிறது. அதனால் எல்லாப் பெண்களிடம் அவ்வாறிருப்பரோ? மேலும் அவர் சக்கரவர்த்தித்திருமகனாயவதரித்திருந்தபோது தர்மவீரமூர்த்தியான தம் நிலைக்குத் தக்கவாறு தம் குலத்திற்குப் புகழ் குன்றாதபடியிருக்கக் கருதி அவளைப் பெற அத்தனை பாடு பட்டிருக்கலாம். அதனால் உனக்கென்ன என்றார்கள் அன்னை

மார்கள். அப்போது, பெரியபிராட்டியாரோடு, வேறு தம்மனைவியோடு வாசியறவும், அவதாரவிசேஷத்தோடு அதில்லா நிலையோடு வாசியறவும் அவர் மனைவிகளிடமாப்புண்டவரே யென்று கூற நினைத்து, தான் பூமிப்பிராட்டியின் அவதாரமாகையாலே அவள் மேல் அவர் காதல் வைத்துச் செய்ததையே யெடுத்துரைக்கிருள்—

8. பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்குப் பண்டோருநாள்
மாசுடம்பில்நீர்வாரா மானமிலாப்பன்றியாம்
தேசுடையதேவர் திருவரங்கச்செல்வனூர்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே. (111)

திருவரங்கச் செல்வனூர்
பண்டு ஒரு நாள் } முன் ஒரு காலத்திலே
பாசி தூர்த்து —பாசியைத் தன் மேல் நிரப்பி
கிடந்த } கீழ் அண்ட கடாஹத்திலே யொட்டிக் கிடந்த்
பார் மகட்கு —பூமிப் பிராட்டிக்கு—
மாசு உடம்பில் } அழுக்கு நிறைந்த தம் திருமேனியில்
நீர் வாரா —கடல்நீர் பெருக
மானம் இலா } நானென்ற அஹங்காரம் பெற மாட்டாத
அல்லது பிறரால் மதிக்கப்படாத
பன்றி ஆம் } —பன்றி யுருவு மெடுத்து விளங்கும்
தேசு உடைய—தேஜஸ்ஸை யுடைய
தேவர் } தேவத்தன்மையுடையராகவே யிருந்து
பேசி இருப்பனகள் } பரிவினல் அருளிச் செய்த சொற்கள்
பேர்க்க உர் —அழிக்க முயன்ற போதும்
பேரா —அழியா.

ஹிரண்யாக்ஷன் பூமியைக் கடலில் மூழ்த்திச் பாதாளத்திலே யமுக்கி வைத்திட்டபோது பாசி படிந்து கிடந்த அவளை மீட்பதற்கு அவர் பட்டதைப் பாருங்கள். அவதாரநிலையி லில்லாமல் தேவரா யிருந்தவரே அதற்கென்று அவதரித்தாரே. அவதாரமும் எத்தகையது? மானமிலாப்பன்றியாம். சேறும் நீரும் பெருகின வண்ணம் பிறர் பரிஹஸிக்கும்படியிருக்கிறதே என நினைத்தாரா? 'அவள் பாசி படிந்திருக்கும்போது நாமேன் இம்மாசு பொறுக்கலாகாது. மனைவியைக் காக்கமுடியாமே யுபேக்ஷித்தானென்ற மாசு இராமலிருந்தாற் போது' மென்றெண்ணினூர். பன்றி யென்று பிறர் எளனம் செய்வாரென்று மாணத்துடன் வேறு வகையிற் பிறக்கவில்லை. 'எனக்காக இவ்வளவு பாடு பட்டீரே' என்று பார்மகள் விண்ணப்பித்தபோது அவளுக்கு அவர் பேசியிருப்பன பலவுள. அவ்வளவு காதலும் பேது முள்ளவ ரிப்போது எங்ஙனம் வேறுவிதமாயிருக்கக் கூடும்? இப் பேச்சு பொய்யானல், 'ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்த்தே' என்ற வராஹசரமச்லோக மென்ன ப்ரஸித்தமானதும் என் பொய்யாகாது என்றபடி. ஸ்ரீவராஹசரமச்லோகங்களைப் பொருளுடன் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யசிகாமணி யென்ற க்ரந்தத்தினின்று தெளிக. மானமிலா என்பதற்கு அளவற்ற பேருருவமான எனவும் பொருளாம். பன்றியாம் தேசு. தமது அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹமா யுள்ள பன்றி யுருவமது. பன்றியாகப் பிறந்ததாலேயே புகரும் புகழு மென்றதுமாம். (8)

தம் மனைவி யென்று நாடுநகர மறிய விரும்பவரை யவர் காக்க முன் வந்ததெல்லா மிருக்கட்டும். நீ அவரிடத்திலீடுபட்டிருக்கிருய். கனவில்

கல்யாணம் செய்துகொண்டதாகவும் சொல்லுகிறாய். அது உலகுக்குத் தெரியுமோ? இந் நிலையிலே உன்னை யவர் காக்கவில்லையாகில் அவருக்கு மானம் போவதேது? மேலுமவர் திருவரங்கச் செல்வனாய் விருத்தாப்பியமாய்ப் பள்ளி கொண்டிருக்க அவரை ஆசைப்பட்டு, வருவாரென நம்பியிருப்பதும் தகாதென்றனர் அன்னைமார்கள். அப்போது அறுதியிட்டுக் கூறுகின்றனள்—

9. கண்ணாலங்கோடித்துக்கன்னிதன்னைக்கைப்பிடிப்பான்
திண்ணார்ந்திருந்தசிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே யாங்கவளைக்கைப்பிடித்த
பெண்ணாளன்பேணுமூர்பேருமரங்கமே. (112)

கன்னி தன்னை } கல்யாணப் பெண்ணான ருக்மிணியை
கை பிடிப்பான் } விவாஹம் செய்து கொள்வதாக
கண்ணாலம் கோடித்து } கல்யாணத்திற்கு வேண்டு மேற்பாடுகளை யெல்லாம் செய்து
திண் ஆர்ந்து—திடநிச்சயம் கொண்டு
இருந்த —நிலைத்திருந்த
சிசுபாலன் —சிசுபாலனென்பவன்
தேசு அழிந்து—ஒளியும் வலியு மிழந்து
அண்ணாந்து இருக்கவே } முன் போல் வானத்தில் முகம் வைத்திருப்பதற்காகவே
ஆங்கு } விரோதிகளே சூழ்ந்திருந்த அந்த நகர நடுவிலே
அவளை —அக் கன்னிதன்னை
கை பிடித்த } தேரில் ஏற்றக் கை பிடித்தவனும்
பெண் ஆளன் } அவளையும் அவளைப் போன்ற பல பெண்களையும் ஆள்பவனுமானவன்
பேணும் —ஆசைப்பட்டிருக்கும்
ஊர் —ஊரின்
பேர் உம் —திருநாமமும்
அரங்கமே. —ஸ்ரீரங்கமே யாம்.

மனைவியாவதற்கு முன்னமே, உருக்குமணி கன்னியாயிருந்தபோதே அவளைக் கைப்பற்றினான். நாடு நகரமெல்லாம் அவளைக் கண்ணனைச் சேரவேண்டியவளாக நினைத்திருந்தனரோ? சிசுபாலனுக்குக் கொடுக்கவேண்டு மென்று பாரித்து எல்லாம் செய்தனரே. சிசுபாலனும் நம் க்ருஷி பலித்ததென்று பேரகங்காரத்துடன் அண்ணாந்தவண்ணமே யிருந்தானே. இனி நமக்கு நிகரார் என்று யாரையும் கண்ணாற் காண வேண்டாதபடி கர்வம் தோற்ற நிமிர்ந்தபடி யிருந்தவனை, யார் முகமும் காணமாட்டாதபடி வியஸநமும் விசாரமு முற்று வானமே பார்த்து அண்ணாந்தே இருக்கச் செய்துவிட்டானே நம்பிரான். அவனும் அவனுக்கு உடந்தையானவர்களும் ஒருமித்து நிற்க அவர்களெதிரிலேயே விரைவில் வந்திறங்கித் தேரில் கைபிடித்தேற்றிக்கொண்டானே. அவளை மட்டுமா? நரகாஸுரனைக் கொன்று மணந்த கன்னிகள் எத்தனை பேரில்லை. திருவாய்ப்பாடியிலே ஆய்ச்சிறுமிகளெல்லாம் அவனைக் கணவனாகக் கொள்ள நோற்றதும் அவன் அங்ஙனமே கொண்டதும் கண்டுளோம். 'எல்லாம் சரி. திருவரங்கத்திலிருப்பவனை யாசைப்பட்டுப் பயனில்லை' என்கிறீர்களோ. அவனைத்தான் ஆசைப்படவேண்டும். அவன் பாற்கடலில் பள்ளிகொண்டால் பூமகளொருத்திக்கே அனுகூலமாகிறது. இத்தனை பெண்மணிகளைக் கொண்ட பிறகு அந்த இடம் தகாதென்றன்றோ திருவரங்க மெழுந்தருளினது. நின்றிருந்தும் வீற்றிருந்தும் உலகவியாபாரத்திலீடுபட்ட மூர்த்திகளைப் போலின்றி பெண்களுக்குப் பிரயமானபடியிலே பைந்நாகணையும் விரித்தும் பெண்ணாளன் பேணுவது

இங்கேதானே. 'ஊரரங்கமே' என்றால் நீங்கள் அறியமாட்டீரென்று ஊர் பேருமரங்கமே என்கிறேன். ஊர் நாமத்தைக் கேளீர். அது அரங்கம். ரங்க மென்பது விளையாடுமிடமா, வயது முதிர்ந்தவன் விழுந்துகிடக்க இடமா? இத்தனை பெண்களை யாளுமவன் பெருமை யறியாமே, அவனுடைய நித்யயௌவநத்தை நினையாமே நீங்கள் இங்ஙனம் நினைக்கலாகாதென்றபடி.

அவன் சிறு பிள்ளை யென்பதை யுணர்த்துவதற்காக இப்பாசுரத்திலே பெண்ணாளன் என்று ஒருமையே கொண்டதாம். இப்பாசுரத்தை யாதாரமாகக் கொண்டே கண்ணனைக் கணவனாகப் பெறப் பேரவா கொண்ட ஆண்டாள் அரங்கனையே மணந்தாளென்பது. எம்பெருமானை மணந்தபிறகு அவன் எடுக்கும் எல்லா ரூபங்களும், அவனைப் போல் காமரூபமெடுக்க வல்ல இவளுக்குப் பதிரூபங்களே. அரங்கமே என்றதாலே என்னை அரங்கரே வந்து மணந்தார் கனவில் எனக் குறித்ததுமாம். .... (9)

பல கன்னிகளை யவன் மணந்ததுண்மையே. அவர்களுடைய விருப்பத்தை யவர்கள் ஒருவாறு தெரிவித்துக்கொள்ளவும், அதன்படி தான் நடக்கவும் அநுகூலமான விபவாவதாரமாயிற்று அது. இப்போது அர்ச்சாரூபத்திலே பேசாதே யசையாதே பள்ளிகொண்டிருக்குமவன் உன் பிரார்த்தனையைக் கேட்டு உன்னைப்பெறுவது கூடுமோ என்றனர் அன்னைமார். அப்போது மொழிகின்றாள்—

10. செம்மையுடைய திருவரங்கர்தாம்பணித்த
மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர்கேட்டிருப்பர்
தம்மையுகப்பாரைத் தாமுகப்பரென்னுஞ் சொல்
தம்மிடையே பொய்யானல் சாதிப்பாராரினியே. (113)

செம்மை உடைய } செப்பமுடைய
திருவரங்கர் —அரங்கநாதர்
தாம் பணித்த—தாமே அருளினதும்,
மெய்ம்மை —உண்மையானதும்,
பெரு —மதிக்கத் தக்கதுமான
வார்த்தை —சொற்களை
விட்டுசித்தர்—தகப்பனாரே
கேட்டிருப்பர் -நேரில் கேட்டிருப்பரே,
தம்மை உகப்பாரை } தம்மிடம் அன்புள்ளவரை
தாம் உகப்பர் என்னும் } தாமும் விரும்பி யிருப்பர் என்ற
சொல் —வார்த்தையானது
தம் இடை ஏ -- இதை வெளியிட்டவரிடமே
பொய் ஆனல்—பொருளற்று விட்டால்
இனி —இதற்குப் பிறகு
சாதிப்பார் —நியமிப்பார்
ஆர் —யாராளர்?

எவ்வவதாரத்திலும் எங்கும் அவருடைய பூர்ணதைக்குக் குறைவில்லை. 'எயிற்றிடைமண்கொண்ட வெந்தை இராப்பகலோதுவித்தென்னைப் பயிற்றிப் பணிசெய்யக்கொண்டான்' (பெரியா–5–2–3) என்று தகப்பனாருளிச்செய்ததைக் கேட்டிலீரோ? அதன் கருத்து யாது? பார்மகள்கேள்வன் பகலிலுமிரவிலும் தம்மைப் பயிற்றிப் பணிகொண்டதாக வருளினரே. வராஹசரமச்லோகங்கள், கீதாசரமச்லோகம் என்பவற்றை நன்கோதுவித்தார். மேலுமிங்கே எம்

பெருமான் பார்மகளிடத்தில் தனக்குள்ள அன்பை வெளியிட்டு அதற்குத் தக்கவாறு பணி செய்ய எப்பொழுதும் சொல்லி வந்தாரெனவும் தெரிகிறது. இதற்கேற்றவாறு இவர் என்னைச் சூடிக்கொடுக்கச் செய்து அந்தப் பூமாலையைக் கொண்டு பணி செய்யுமென்று வேண்டி தவறாமல் சொல்லிக்கொண்டு பணியைப் பெற்றுவருகிறாரே. இஃதென்ன விபவத்திலா, அர்ச்சையிலா! இப்படி நடவடிக்கைக்கு வந்திருக்கும் வார்த்தையை யவர் மேலுக்குச் சொன்னார் என்னக் கூடுமோ? ஆக அவரைச் செம்மை யுடையவரென்றே சொல்ல வேண்டும். இப்படி யெல்லா மென்னைப் பற்றியுள்ள வார்த்தைகளை யர்ச்சையிலே தகப்பனாரே கேட்டிருக்கும்போது நான் நினைப்பதில் தவறென்ன என்றபடி.

'இப்படிப் பல கால் கேட்டபிறகு என் தகப்பனார் சொன்ன சொல்லாம் இது. எது என்னில்—'தம்மையுகப்பாரைத் தாம் உகப்பர் திருவரங்கர்' என்றதே. எக் காலமாயினும், எப் பிறப்பாயினும் எங்கும் எம்பெருமானைப் பெறலாம். அவரிடம் யார் எத் தகைய அன்பு வைக்கிறார்களோ, அத் தகைய அன்பு அவரும் வைக்கிறார். 'ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:,' 'யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்,' 'யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்' என்றவை உண்மையே என்றபடி. இதைக் கேட்பவர் இதற்குத் தக்கவாறு நடவாமேயிருந்தால் பழியை யிவர்களிடம் வைத்து இதனை உண்மை யென்று ஸாதிக்கலாம். அன்பு இவர்கள் வைத்தபிறகு அவர் வைக்காது வார்த்தையைப் பொய்யாக்கினால் இனி ஸாதிப்பதேது? அன்புள்ளவரெல்லோரும் அன்புக்குப் பாத்திரமாவர் என்ற நியமம் நிற்காதே' என மேலீரடிகளின் கருத்து.

அன்றி, பெரியாழ்வார் கேட்டிருப்பதையு மெடுத்துரைத்து உங்களுக்குத் திருவரங்கரின் செம்மையைத் தெரிவித்தேன். என்னிடமே சில காலம் சொல்லிப் போனதைச் சொன்னால், அத்தகைய பேச்செல்லாம் புருஷன் பெண்டிரிடம் எதிரிற் சொல்லும் பொய்ப்பேச்சு என்பீர்களென்றே விட்டுசித்தரிடம் சொன்ன செம்மையைக் குறித்தேன். இப்போதும் உங்களுக்கு நம்பிக்கை யில்லையாகில், இதை நிரூபிப்பதெப்படி? அவரே தம் உகப்பை நேரில் காண்பிப்பதல்லது வேறு நிரூபிக்கும் வழியில்லை யென்றதாம்.

இனி, தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர். யாரேனும் சரி. தம்மை யார் உகக்கின்றனரோ, அவரைத் தாமும் உகப்பரென்றது உலகத்திலேற்பட்ட நீதி. இந்த நீதியை யுலகுக்குக் கற்பித்தவரும், இவ்வாறு பொருளிருக்கச் செய்தவரும் அவ் வெம்பெருமானே. அதை யவர் தம்மிடையே பொய்யாம்படி செய்தால், தாமே அதற்கு முரணாக நடந்தால் அவரை என் இப்படிச் செய்கிறீரென்று சாஸிப்பவர்=சிக்ஷிப்பவர் யாரென வுரைப்பதும் கொள்க. அன்றி, 'சாதிப்பாராரினியே'. இது பரமார்த்த மென்று ப்ரஸாதிப்பவர்=உபதேசிப்பவர் இனி யார் என்வுமாம்.

'முன்னீரடிகளுக்கு, அர்ஜுநனைக் குறித்துக் கண்ணன் அருளின சரமச்லோகாதிகளை விட்டுசித்தர் தாமும் கேட்டிருப்பர் என்றதும் பொருளே.

கீதாசரமச்லோகமும் இங்கே கருதப்பெற்றதென்று 'மா சுச:' என்ற விடத்தில் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலு மருளப்பெற்றது. தம்மை இத்யாதியில், அர்ஜு நனைப் பார்த்து, 'நீ பயப்படவேண்டாம், வருத்தப்படவேண்டாம். எல்லாம் உனக்குச் செய்விக்கிறே' னென்றவாறு சொன்னதைக் கொள்க' எனவு முரைப்பர். .... (10)

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 11. தாமுகக்கும் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

மற்றிருந்தீர்கட்கு 12.

(கண்ணனிடத்திற்கு உய்த்திட வேண்டல்)

தாய் முதலானவர்கள் இவள்வார்த்தையைக் கேட்டுவிட்டு, உனக்கு இவ்வளவு திடமான அத்யவஸாயமிருக்கும் பக்ஷத்தில் அசோகவனத்தில் பிராட்டி பொறுத்த வண்ணம் பொறுத்திரு. இவ்வளவு ஆயாஸப்படுவதால் எங்களுக்குக் கை கால் ஆடவில்லை. ஊரார் கேள்விக்கு உரைப்பதும் முடியாம லிருக்கிறது. ஆகையால் நீ உன் மனத்துக்குள்ளே எல்லாம் மறைத்து ஸஹஜ மான நிலையிலே யிருக்கவேண்டு மென்றனர். இவளுக்கு அவர்களுடைய உப தேசமும், அவர்கள் நடவடிக்கையும் பிடிக்கவில்லை. இனி இவ்விடத்தை விட்டு அவ்வமுதம் கிடைக்குமிடம் போவதே நல மென நினைத்தாள். திருவரங்கம் செல்லலாமா வென வாராய்ந்தாள். சென்றவுடன் திருமால் திருவுள்ளமுகந்து பெற்றால் ஒரு குறையுமில்லை. இங்குப் போல் அங்கும் நொந்திருக்கவேண்டு மாகில் இவர்களுக்கு அந்த விருத்தாந்த மெட்டும். இவர்கள் என்னை விடமாட் டாமே அங்கும் சேர்ந்து இத்தகைய துன்பத்திற்கு ஆளாவர்கள். ஆகவே இவர்கள் காதிலும் கண்ணிலும் படாதபடி உண்மையான கண்ணனிடத்திற்குப் போவதே தகு மென முடிவு செய்தாள். அருகிலிருக்கும் திருமாலிருஞ்சோ லைக்கே தோழியின்றித் தனியே போய்வரமாட்டாத நான் அவ்வளவு தூரம் தனியே செல்லல் கூடுமோ? ஆக இவர்களே அங்கு என்னைக் கொடுபோய்ச் சேர்த்து வந்துவிடட்டும். என் படியை நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று கொண்டாள். அதன்மேல் வடமதுரை முதலாகத் துவராவதி யளவாக அவனுடைய இடங்களைக் கூறி, அங்கே என்னை உய்த்திடுமின் என்று வேண்டு கிறாள் இத்திருமொழியில்—

1. மற்றிருந்தீர்கட்கறியலாகா மாதவனென்பதோரன்புதன்னை
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர் வார்த்தை
பெற்றிருந்தாளையொழியவே போய்ப் பேர்த்தொருதாயில்வளர்ந்தநம்பி
மற்பொருந்தாமற்களமடைந்த மதுரைப்புற(ர)த்தென்னையுய்த்திடுமின். (114)

மற்று இருந்தீர் கட்கு } என் இருப்புக்கு வேறான இருப்பு உடைய உங்களுக்கு
அறியில் ஆகா—அறிய வியலாத
மாதவன் என்பது } திருமா லெனப்படும்
ஓர் —ஒப்பற்ற
அன்பு தன்னை—பரமானந்தத்தை
உற்றிருந் தேனுக்கு } பற்றி யிருக்கு மென்னிடம்
உரைப்பது எல்லாம் } நீங்கள் சொல்வ தெல்லாம்
ஊமையரோடு—ஊமைகளுடன்
செவிடர் வார்த்தை } செவிடர்கள் பேசும் பேச்சுக்கு ஒத்திருக்கும்
பெற்று இருந்தாளை } தன்னை ஈன்று விளங்கா நிற்கும் தாயை

ஒழிய வ —அடியோடு விடும்படி
பேர்த்து } வசுதேவனைக் கிளப்பிக் கொண்டு
போய் —ஆய்ப்பாடிக்குச் சென்று
ஒரு தாய் —மற்றொரு தாயின்
இல் —இல்லத்தில்
வளர்த்த நம்பி } பால்யம் முழுதும் கழித்த குணபூர்ணன்,
மல் பொருந்தா } (தன்னை வெல்ல) வலி பொருந்தாத
மல் —மல்லர்களின்
களம் —போர் நிலத்தை
அடைந்த —அடையும் தேசமான
மதுரை —வடமதுரையின்
புறத்து —பக்கங்களிலாவது
என்னை உய்த்திடு மின் } என்னைக் கொண்டு சேர்த்திடுங்கள்.

மற்றிருந்தீர்கட்கு இத்யாதி. என் நிலை உங்களுக்கில்லை. எம்பெருமான் பெறுவான் என்ற அத்யவஸாய மிருக்கு மாறு எண்பிக்கிறீர்கள். உண்மையி லதுவு மில்லை. நானோ அத் திடம் மட்டு முள்ளவளல்லேன். எனக்குள்ள அன்பானது இவனை விட்டொரு நொடி கூட உயிருடனிருக்கமுடியாதபடி வளருகிறது. அசோகவனத்திலும் பிராட்டி உயிர் துறக்கவும் புறப்பட்டாளே. எம்பெருமானனுப்பிய வார்த்தை தானே அவளுக்கு ஒரு மாதமாவது உயிர் தங்கு மென நினைக்கும்படியில் அவளை நிறுத்திற்று. இப்படி யவனிடம் அன்பு பிறப்பதற்கு அவன் கடலைக் கடைவதுமடைப்பதுமாய்ப் பிராட்டியினிடம் பரிவைக் காண்பித்து அவ்வாறெல்லாரிடமும் இருத்தலை யறிவித்ததே காரண மாகும். ஆக அவனே அன்பு அன்பே வடிவெடுத்து வந்தவன். மேலும் அம்மாதவன் அத்தனை முயற்சி செய்யாதவனுறைலும் அவனிடம் அன்பு குறை யாது. ஏனெனில், அவனே அன்பு, நாம் அன்பு வைக்கும்படியான ஆரா வமுதம். ப்ரீதிரூபாபந்நஜ்ஞானமே அவன். 'ப்ரீதிரூபாபந்நம் ஜ்ஞாநம்' ஆகையால் மாதவனென்றதொரே விஷயத்தைப் பற்றின அன்புற்றவள் நான்.

உற்றிருந்தேனுக்கு. இப்போது உங்களுடன் பேசும்போது அது சிறிது குறைந்திருக்கிறதென்னலாம். நீங்கள் பேசின காலத்திலே நான் அத னையே உற்றிருந்தேன். அப்படியிலுள்ள என்னிடம் இதற்கு முன்னும் இனியும் நீங்களுரைப்பதெல்லாம் ஊமைக்குரைப்பதேயாம். ஊமை பேச்சை யறியான். பேசவுமாகான். உங்கள் பேச்சை யறிய வியலாதவள் நான். உங்கள் பாஷை யில் பேசவும் என்னால் மாளாது செவிடர்வார்த்தை. என்னுடைய பேச் செல்லாம் உங்கள் காதில் விழாததாலே நீங்கள் செவிடர்கள். ஆகையால் இப்படிப் பேசிக்கொண்டிருப்பதில் என்னுடைய பேற்றுக்கே நஷ்டமாகும், நீங்கள் என்னை அவனுள்ள இடத்திலே கொண்டுவிடுங்கள். அதுவும் திருவ ரங்கமன்று; மதுரைப்புறம். அவ்வளவு சேய்த்தான இடத்திலே உன்னைச்

சேர்த்து விட்டுப் பெற்ற தாய் எங்ஙனம் பிரிந்திருப்பாள் என்கிறீர்களோ? பிறந்தபோதே பெற்ற தாயை விட்டு வேறிடம் சென்றானே அவன். அவனைப் பெற விரும்பிய நான் இத்தனை வயதான பிறகு தாயை விட்டுப்பிரியலாகாதா? பெற்றவளுக்கு உயிரில்லையா?, பாலில்லையா? பெற்று இருந்தாளே. ஏன் அவளை விட்டான்? அவளே அவனைப் பார்த்து, 'நீ நன்றாக வளர்வதே நான் வேண்டுவன். நான் கண்ணுற்று காண பாக்கியம் பெற்றிலேனாகில், அது இருக்கட்டும்' என்று வேண்டினாள். அங்ஙனம் நீங்களும் என் வளர்ச்சியைப் பார்க்கவேண்டும். அவன் பிறகு வளர்தலுற்று மதுரை வந்து அவர்களோடும் சேர்ந்தவண்ணம் எனக்கும் உங்களோடு சேர்ந்திருக்க நல்ல காலம் வாய்க்கலாமே. அவனும் கல்யாணகுணபூர்ணனாய் தாய்தந்தைகளுக்கு அனுகூலம் செய்வதற்காகவே அங்ஙனம் நடந்துகொண்டான். நானும் அங்ஙனமே இருக்க ஆவல் கொண்டேன்.

ஆயினும் மதுரைப்புற மென்றால் எவ்விடமது? விளங்கச் சொல் எனில், ஒரு தாயை விட்டு மற்றொரு தாயில்லத்திற்குப் பிறந்த போதே போனவனுடைய இடத்தை இதுதானென்றுசொல்லவியலாதே. ஆயினும் மதுரையிலேயே கொண்டுவிடுங்கள். அவ்வாறு மதுரையிற் கொண்டுவிடக் கூடாமற் போனால் புறத்தில் விடுங்கள். அவன் ஆய்ப்பாடியிலிருந்து புறப்பட்டுப் போனபோது மதுரையின் புறம் சென்றதும் தேரிலிருந்து இறங்கிவிட்டான். அதுபோல் என்னையும் புறத்தில் விடுங்கள். நான் போய்ச்சேருவேன்.

ஊமையரோடு செவிடர் வார்த்தை யென்பதற்கு, உங்களுக்குப் பேச போக்யதையில்லை, எனக்குக் கேட்பதற்குச் செவியில்லை யெனக் கருத்துரைத்தல் பொருந்தாது. உரைப்பதெல்லாம் என்பதற்கு, 'நீங்கள் உரைப்பதெல்லாம்' என்ற பொருளானபோது அதுவும் செவிடர் வார்த்தையு மொன்றானதாலே அவர்கள் செவிடரேயவர்; ஊமையராகார். செவிடரோடு ஊமையர் வார்த்தை என மாற்றியந்வயம் கொள்வதும் பொருந்தாது. ஊமையருக்கு வார்த்தையேது? இனி, மற்றிருந்தீர்கட்கு=மற்றிருக்கும் உங்களிடம். உற்றிருந்தேனுக்குரைப்பது=எனது உரை யெனப்பொருள் கொண்டால் அவர்களை ஊமையராக்கல் கூடும். அது ஸ்வரஸமன்று. இங்கே, இருந்தீர்கட்கு=என்னோடு கூட இருந்து மிப்படியிருக்கும் உங்களுக்கு அறியாலாகா எனவும், மற்று என்பதை உரைப்பது என்றதோடு சேர்த்து முரைத்தனர் முன்னோர்.

ஒழிய. ஒழிதல் விடுதல். பேர்த்தொருதாய் வேறொருதாயெனவு முரைப்பர். அடைந்த என்பதை நம்பிக்கு விசேஷணமாக்கல் ஸ்வரஸமன்று. நம்பியடைந்த மதுரை யென அன்வயம். மதுரையை அவனடைந்தது, அதனுட்ப்ரதேசமாகிய மற்களத்திலே யென்பதை யறிவிக்க மற்களமடைந்த என்றதாம். திரும்பிவந்தபோதாவது தாயினில்லத்திற்கு நேராக வந்தானோ? கூடவில்லை யென்றபடி. மற்பொருந்தாமற்கள மடைந்த என்பதை மல் பொருந்தாமல் களமடைந்த என்றனர் சிலர் மல்=மல்லர் பொருந்தாத மற்களம். அதாவது மல்லர் போய்ப் பொருந்துவதற்கு முன்னமே இவன் மற்களம் போனான் என்றதாம் என

வுரைப்பர் பிறர். அவர்கள் பொருந்தாத மற்களமென்றதாலே, அவர்கள் அங்கு வந்து பொருந்துவதற்கு முன்னமே அங்கே சென்று அவனை அணைவதற்கு விரும்புகின்றாளென அதன் மேல் ரஸோக்தியும் பொழிவர் மல்=வலியாம். வலி பொருந்தாத மல்லர்களின் களம். முதலில் பார்ப்போர்க்கு மல்லர்களின் வலி யதிகமென்றும், அழகிய சிறுபிள்ளையான கண்ணனுக்கும் அவர்க்கும் பொருத்தமில்லை யெனவும் எண்ணம் பிறந்தது. பிறகுச் செய்கையில் இவன் தனக்கு வலி யதிகமென ரூபித்தான். அப்போதும் இருவருக்கும் பொருத்தமில்லை யென்றே முடிவேற்பட்டது எனக் கருதினபடி. மதுரைப்புறம். கிடைத்தில் மன்னுமதுரைத்தோடக்கமாக என இருப்பதால் இங்கு மதுரைப்புறத்து என்ற பாடமே பொருந்தும். புறத்து என்ற பாடத்திலும் பொருள் கூறியாயிற்று.

அவனிடமுள்ள பேரவாவினாலே இவளுக்கு இப்போதுமங்கே கண்ணனிருப்பதாகவே யுறுதியுண்டாயிற்று. அவ்வண்ணமித்திருமொழி பிறந்துளது.(1)

மதுரைப்புறமென்று பொதுவிலே சொன்னேன். மதுரையில் கொண்டுவிடமுடியாவிடில் அதன் புறத்துய்த்திடுமின் என்றேன். சில இடமும் சொல்லுகிறேன். வெகுதூரத்திலிருப்பதைச் சொல்லுகிறாயே என்ன வேண்டா. வேறு மருந்தில்லை. இவ்வளவு தூரதேசப்ரயாணம் செய்ய நாங்கள் கிளம்பினால், 'இஃதென்ன விந்தை? கண்ணன் அங்கே காத்துக்கொண்டிருக்கிறானோ? என்று ஊர் சிரிக்குமே' என்னவேண்டா. இப்போது மட்டும் சிரிக்காமலிருக்கின்றார்களோ என்கிறாள்—

2. நாணியினியோர்கருமமில்லை நாலயலாருமறிந்தொழிந்தார்
பாணியாதென்னைமருந்துசெய்து பண்டுபண்டாக்கவுறுதிராகில்
மாணியுருவாயுலகளந்த மாயனைக்காணில் தலைமறியும்
ஆணையால்நீரென்னைக்காக்கவேண்டி லாய்ப்பாடிக்கேயென்னையுய்த்திடுமின்.(115)

- மாணி உரு ஆய் — ப்ரம்மசாரி யுருவெடுத்து
- உலகு அளந்த — (பிறகு த்ரிவிக்ரமனாய்) உலகை அளந்தவனான
- மாயனை — ஆச்சரிய புருஷனை
- காணில் — நேரில் கண்டால் தான்
- தலை மறியும் — (நோய்) விடும்.
- நாலு அயலாரும் — நாலு பக்கங்களிலிருக்கும் பிறர் யாவரும்
- அறிந்தொழிந்தார் — நன்றாக என் நிலையை அறிந்து விட்டார்கள்.
- இனி — இதற்குமேல்
- நாணி — வெட்கப்பட்டு
- ஓர் கருமம் இல்லை — ஒரு கார்யமும் செய்வதற்கில்லை.
- நீர் — நீங்கள்
- பாணியாது — தாமதிக்காமல்
- மருந்து செய்து — நோய் தீர வழி செய்து
- என்னை — இவ்வளவு மெலிந்த என்னை
- பண்டுபண்டு ஆக்க — மிகவும் பழைய நிலையில் வைக்க
- உறுதிர் ஆகில் — பற்றுள்ளவராகி நீர்களானால்,
- ஆணையால் — சத்தியமாக
- என்னை காக்க வேண்டில் — உயிருடன் வைக்க விரும்பினீர்களாகில்
- ஆய்ப்பாடிக்கு ஏ — திருவாய்ப்பாடிக்கே
- என்னை உய்த்திடுமின் — கொண்டு சேருங்கள்

பண்டுபண்டு. பழைய நிலைக்கும் பழைய நிலை. பிரிந்து வருந்துமிவளுக்குப் பழைய நிலையாவது அவனை மணம் புரிந்து சேர்ந்திருந்த நிலை. அதற்

கும் முந்திய நிலையாவது பால்யநிலை. சேர்ந்திருந்த நிலையிலும், 'பிரிந்துவிட்டால் என் செய்வது' என்ற வருத்தமொரு பக்கமிருப்பதால் உடல் நிறம் பெறாது. ஒன்று மறியாத பால்யதசையில் நிறம் பெற்றிருக்கும். அந்த நிறத்தை மீண்டு முண்டாக்க என வுரைப்பதாம். இனி,பண்டு என்றது பழைய நிலையை. பண்டுபண்டு என்றது அது பின்வந்ததொன்றாகாதபடி யுள்ள முதல் நிலை. ஸஹஜ நிலை. அது பிறப்பிலேற்பட்ட நிலையு மாம்; அநாதிஸித்தமான நிலையுமாம். இத்தகைய இயற்கை நிலையில் என்னை வைக்க எனவும் பொருளாம். ஆணையால். நீங்கள் ஆஜ்ஞை யிட்டதை யெல்லாம் நான் செய்யும்படி என்னைக் காக்க வேண்டில் எனவு முரைப்பர். ... ... (2)

நீங்கள் கொண்டுவிடாவிடில் நான் தனியே போகும்படியாம். அந்தப் பழி வராதவாறு பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறி ஆய்ப்பாடியிலே விட வேண்டுமிடத்தை விளக்குகிறாள் —

3. தந்தையும் தாயுமுற்றாரும்நிற்கத் தனிவழிபோயினாளென்னும் சொல்லு
வந்தபின்னைப்பழிகாப்பரிது மாயவன்வந்துருக்காட்டுகின்றான்
கொத்தளமாக்கிப்பரக்கழித்துக் குறும்புசெய்வானோர்மகனைப்பெற்ற
நந்தகோபாலன்கடைத்தலைக்கே நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின். **(116)**

தந்தை உம் — சிறுவயதிலிருந்தே என் நிலையை நன்கறிந்த தகப்பனாரும்
தாய் உம் —அவர்க்கொத்த அன்னையும்
உற்றார் உம் —பந்துக்களான நீங்களும்
நிற்க —நன்மை செய்பவராயிருக்க
தனி வழி போயினாள் — 'அவர்களுக்கு இஷ்டமில்லா விதமாகவே நடந்துவிட்டாள் (அல்லது)
தனி —துணை யின்றி
வழி —வெகுதூரம் வெளியிலே
போயினாள் —சென்றுவிட்டாள்
என்னும் சொல்லு — என்கிற சொல்லானது
வந்த பின்னை —வந்துவிட்டால் அதற்குப் பிறகு
பழி காப்பு —கெட்ட பேரை மறைப்பது
அரிது —முடியாததாம்.
மாயவன் —யார்க்கு மரிய மாயை யுள்ளவன்
வந்து இங்கு நெருங்கி
உரு —தனது திருமேனியை
காட்டுகின்றான் — நான் காணும்படி செய்கிறான்.
கொத்தளம் ஆக்கி — கூத்தாடி மும்முரமா யிருந்து
பரக்கழித்து —பழிகளை விளைத்து
குறும்பு செய்வான் — தீமைகளைச் செய்யும்
ஓர் —ஒப்பற்ற
மகனை —புத்திரனை
பெற்ற —தவம் செய்து பெற்றவனான
நந்த கோபாலன்—நந்தகோபாலனுடைய
கடைதலைக்கே—வாயிலின் முன்னே
நள் இருள் கண்—நடுநிசி யிருளில் என்னை
உய்த்திடுமின்—கொண்டுவிடுங்கள்

பழி காப்பரிது. பழி வருவதற்கு முன்னம் அதைத் தடுக்கக்கூடும். பிறகு தடுக்க முடியுமோ? நீ தனியே போவதெப்படி யென்ன வருளிச்செய்கிறாள், மாயவனித்யாதி—உருக்காட்டும் மாயன் உங்களுக்குத் தெரியாமலே யழைத்துப்போவன். பிறகு நீங்கள், 'இல்லம் வெறியோடிற்றாலோ வென் மகளையெங்குங்காணேன் மல்லரை யட்டவன் பின்போய் மதுரைப்புறம் புக்காள் கொல்லோ', 'ஒரு மகள் தன்னை யுடையே னுலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண் மால் தான் கொண்டு போனான்' (பெரியா–3.1,8.) என்ற

வாறு கதறி, வழியிடைமாற்றங்கள் கேட்டு ஆயர்கள் சேரியிலும் புக்கு அவஸ்தைப்படுவீர்கள். இப்படி யவன் என்னைக் கொண்டுபோவது திண்ணம். ஆனால் அவன் பல படி குறும்பு செய்கிறவனானபடியாலே நடுவிலே என்னை விட்டுப் போய், நானும் நீங்களும் செய்வதென்ன வென்று வேடிக்கை பார்க்கவும் முயல்வான். ஆகையால் நீங்களே கொண்டுவிடுவது நன்று. நள்ளிருள். நள் = நடு. பகலில் போனால் அவன் தந்தை முதலானோரின் எதிரில் என்னைப் பார்க்காம லிருந்துவிடுவான். அவர்களும், இவள் யார்? நம் ஊர் இடைப்பெண் அல்லளோ என்பர். இத்தகைய இடையூறு நேராதபடி நள்ளிருளில் கொண்டுவிடுங்கள். நந்தகோபாலன் கடைத்தலை யென்றால் ஊர்ப்பெண்களெல்லாம் வந்து முறையிடு மிடம். அந்தக் கூட்டத்திலே தனித்தனியே விசாரணை செய்ய மாட்டாமே, வெளியில் கூட்ட மிருந்தால் ஊரார் ஏதேனும் சொல்வார்களென்று நந்த கோபாலன், நப்பின்னையைப் போலே, நாடின பெண்களை யெல்லாம் கண்ணனில்லத்திற்கே காணுதலுப்பச் செய்வன். பிறகு நான் பார்த்துக் கொள்ளுகிறேன் என்றபடி. ... ... (3)

நள்ளிருளில் செல்லமாட்டாமே நந்தகோபாலன் திருமாளிகை யேற அழைத்துப் போக முடியாவிடில் அங்கே வேறொரு வீட்டு வாயிலிலே கொண்டு நிறுத்தவேண்டாம். யமுனைக்கரையிலேயே விடுவது மேலாகு மென்கிறாள்—

4. அங்கைத்தலத்திடையாழிகொண்டா னவன்முகத்தன்றிவிழியேனென்று
செங்கச்சுக்கொண்டுகண்ணாடையார்த்துச் சிறுமானிடவரைக்காணில்நாணும்
கொங்கைத்தலமிவைநோக்கிக்காணீர் கோவிந்தனுக்கல்லால்வாயில்போகா
இங்குத்தைவாழ்வையொழியவேபோய் யமுனைக்கரைக்கென்னையுய்த்திடுமின். (117)

அம் கை தலத்து	அழகிய உள்ளங்கையின்	நாணும்	—வெட்கத்தினால் சுருங்கும்
இடை	—நடுவிலே	கொங்கை தலம் இவை	இந்த ஸ்தந ப்ரதேசங்கள்
ஆழி	—திருவாழியை	கோவிந்தனுக்கு அல்லால்	கோவிந்தன் திருமாளிகை வாயிலல்லது
கொண்டான்	—ஏந்தியிருக்கும்	வாயில்	—வேறு வாசலில்
அவன்	—அந்தப் பரமனுடைய	போகா	—போய் நிற்காதவை.
முகத்து அன்றி	முகம் தவிர வேறு முகத்தில்	நோக்கி காணீர்	நன்குற்றுப் பார்த்துத் தெளியுங்கள்.
விழியேன்	—விழிக்கமாட்டேன்	இங்குத்தை	—இவ்விடத்திலே இருக்கும்
என்று	—என்கிற ஸங்கல்பத்துடன்	வாழ்வை	—இந்த வாழ்வழகை
செம் கச்சு கொண்டு	(செம்மையான) நல்ல கஞ்சுகத்தையணிந்து	ஒழிய ஏ	—விடுவதற்காகவே
சிறு மானிடவரை	க்ஷுத்ர மனிதர்களை	போய்	—அங்குச் சென்று
காணில்	—பார்க்கும்போதெல்லாம்	யமுனை கரைக்கு	யமுனையாற்றின் கரையின் அருகில்
கண் ஆடை	—இடமுள்ள போர்வையாலும்		என்னை உய்த்திடுமின்.
ஆர்த்து	—மூடிக்கொண்டு		

எனது கொங்கைகளைத் திருவாழி யேந்துபவனே ஏந்தவேண்டும். இது நான் ஸங்கல்ப்பித்தது மட்டு மன்று. கொங்கைகளே வேறொருவனைக் காணல் ஆகாதென்று தம்மை மூடிக்கொள்கின்றன. அதுவும் சிற்சில தேசங்களிலணியுமா போலே சிறுகச் சாலன்று, மிகவும மெல்லிய நூலாலான கச்சாலு மன்று.

செம்மையான கச்சால் சிறிதும் தெரியாதபடி மூடிக்கொள்கிறன. கச்சு மாத்திரம் அணிந்திருக்கும் கொங்கைகள் சிறுமானிடவரை நான் காணும்படி நேரிட்டால் தாங்கள் அவரைக் காணாதபடி அகன்ற போர்வையாம் உத்தரீயத்தாலும் தங்களையுடலோடு சேர்த்து மறைத்துக்கொண்டு என் கண் அவரைக் கண்டதற்காகக் கூடத் தாங்கள் நாணுகின்றன. கொங்கைகள் நாணிக்கிறன வென்றது மட்டுமோ? கொங்கைளின் பக்கப்ரதேசங்கள் கூட நாணுகிறன. ஆகையால் கோவிந்தன்திருமாளிகையைத் தவிர்த்து வேறு வீட்டுவாயிலுக்கு என்னை அழைத்துச் செல்லவேண்டாம். ஆகில் இங்கேயே நின்றுவிடலா மென நினைக்கவேண்டா. இங்குத்தைவாழ்வு எனக்கு வேண்டா. அங்குத்தை வாழ்வு நான் யமுனைக்கரைக்குச் சென்றால் கூட நேரும். அங்கே யவன் மாடுகளை மேய்த்துக் கொண்டு வருவான். கோவிந்தனல்லனோ? அவனுடன் ஜலக்ரீடையில் இறங்கினல் நான் கச்சு கொண்டு கண்ணுடையார்த்திருந்தால் கூட எனது கொங்கைகள் அவன் முகத்தே விழித்துக் குதுகலிக்கு மாகையாலே வாழ்வுண்டென்றபடி

செங்கச்சுக் கோண்டு கண்ணுடை யார்த்து என்பதற்கு முலைக்கண்களைக் கஞ்சுகமாகிற ஆடையாலே மூடிக்கொண்டு எனவே பொருளுரைப்பர். சிறு மானிடவர். வசுதேவர்குமாரனுகவும் நந்தகோபாலனுகவு மிருப்பவனும் மனிதன் என்னவேண்டா. இது அவதாரத்தில் எண்பித்த மானிடத்தன்மை. இது அவன் பெருமைக்கு முரண்பட்டதன்று. கர்மாதீனமாய் ஜீவர்களின் பிறப்பே சிறுமைக்குக் காரணமாகைய லே இவர்களே சிறுமானிடவரென்றபடி. நாணும். வெட்கம் வந்தால் உடல் சுருங்குவது இயற்கை. சித்ரகூடத்திலே பரதனைப் பரிபவிக்க நினைத்த லக்ஷ்மணனைக் குறித்து இராமன் சில வார்த்தைகளைச் சொல்ல லக்ஷ்மணன் வெட்கமுற்றுரென்றவிடத்திலே 'லக்ஷ்மண: ப்ரவிவேசேவ ஸ்வாநி காத்ராணி லஜ்ஜயா' என்றார் ஆதிகவியும். அன்றி, ஆண்டாள் தனக்குள்ள வெட்கத்தைத் தன் கொங்கைகளின் மீது ஏறிட்டு நாணு மென்றது மாம். கொங்கைத்தலமிவை நாணுமென்று இதை வினைமுற்றாகவும் கொள்க. இல்லையேல் இவை யென்பதற்கு போகா என்பது மட்டும் பயனிலையாம். நோக்கிக்காணீர் என்பதற்கு நாணும்வகையை எனச் செயப்படு பொருள் சொல்லாமலே கிடைக்கும்.

கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா என்பதற்கு ஏகதாரவ்ரதனை இராமபிரானின் வாயிலுக்குப் போகா. கண்ணன்வாயிலுக்கே போகும் எனவும் கருத்துரைப்பர் கீழ் பலவிடங்களிலே இராமனைத் தன் கணவனாக இவள் நினைத்திருந்தாலும் யமுனைக்கரையிலே விடச்சொல்வதற்கேற்ப இது ஒரு ரஸோக்தியா மெனக. கோவிந்தன்வாயில் முத்தமிடத் தகுமே யல்லது வேறில்லை யெனவும் ரஸோக்தியாம். இப்போது வாயில் என்பது வாய் என்ற சொல்லின் ஏழாம் வேற்றுமையாம். .... (4)

கீழே காண்பது கூறப்பட்டது. மேலே அவன்திருமேனி தன்மேல் படுவது பணிக்கப்படுகிறது. ஜலக்ரீடைபண்ணும் இடமில்லாவிட்டாலும் காளி

யனைப் போன்றதால் கொடுமைக்கிடமான இடத்தில் கொண்டுவிட்டாலும் போது மென்கிறாள்—

5\. ஆர்க்குமென் னோயிதறியலாகாதம்மனைமீர் துழதிப்படாதே
கார்க்கடல்வண்ணனென்பானொருவன், கைகண்டயோகம், தடவத்தீரும்.
நீர்க்கரைநின்றகடம்பையேறிக் காளியனுச்சியில்கட்டம்பாய்ந்து
போர்க்களமாகநிருத்தஞ்செய்த பொய்கைக்கரைக்கென்னையுய்த்திடுமின். (118)

அன்னைமீர் —தாய்மார்களே!
ஆர்க்கும் —எவருக்கும்
என் —என்னுடைய
நோய் இது —இந்த நோய்
அறியல் ஆகாது } அறிந்துகொள்ளக் கூடியதன்று.
கார் கடல் வண்ணன் என்பான் ஒருவன் } கறுத்த கடலின் நிறமுடைய பிரான் ஒருவன்
தடவ —என் உடலைத் தடவின மட்டிலே
தீரும் —நோய் போய்விடும்.
கை கண்ட —அத்தாட்சிப்பட்ட
யோகம் —வழி யிது.
(ஆகையால்)
துழதிப் படாதே } நீங்கள் துக்கப்படாமல்

போர் களமாக } போர் செய்யு மிடமாகத் தான் ஆகி—
நீர் கரை —நனைந்த ஜலக்கரையிலே
நின்ற —நின்றிருந்த
கடம்பை —கடப்ப மரத்தை
ஏறி —உச்சிக்கு ஏறி
காளியன் உச்சியில் } காளியநாகத்தின் தலை களிலே
கட்டம் —நாட்டியவகையிலே
பாய்ந்து —குதித்து
நிருத்தம் —அற்புத நாட்யவகைகளை
செய்த } கண்ணன் செய்வதற்கு இடமாயமைந்த
பொய்கை —யமுனைமடுவொன்றின்
கரைக்கு —தீரத்திற்கே
என்னை உய்த்திடுமின்.

எம்பெருமானொருவன் தவிர வேறு எவரும் இந்த நோயைப் போக்க வழியுடையாரில்லை. அவனே வைத்தியன். அவன் மருந்து செய்யச் சேகரிக்க வேண்டிய சாமான் ஒன்றும் வேண்டா. நானும் ஒரு மருந்துண்ணவேண்டுவதில்லை. அவன் திருக்கையினால் என்னைத் தடவினால் அப்போதே நோய் போயிடும். இது கைகண்டயோகம். இந்த ப்ரயோகம் உடனே பலன் தருவது அனுபவஸித்தமானது. எனக்கே இவ்வனுபவமுண்டு. பல பெண்கள் இங்ஙனமே நோய் தீர்ந்து விளங்கினதுமுண்டு. பொய்கைக் கரைக்கென்னை யுய்த்திடுங்கள். அங்கே நான் விஷம் பட்டு மயக்க முற்றால் கூட எனக்கு இஷ்டமே. அறிவுடன் இருந்து இங்கு அவஸ்தைப்படுவதை விட அதே மேலாகும். துழதிப்படாதே. ஒரு வைத்தியனும் நோய் தீர்க்கவல்லனாகவில்லையே யென்ற துக்கம் வேண்டா. உலர்ந்த கடம்பையும் உயிர்ப்பித்துக் காளியனுக்கும் நன்மை செய்து கோபர்களையும் காத்த கண்ணன் என்னை விடமாட்டான். ஆகையால் போனவிடத்தில் என்னவாகுமோ வென்றும் துக்கப்படவேண்டா என்றபடி. கைகண்டயோகம். கை காணுதல்=அத்தாட்சிப் படுதல், நம்பத்தகுமாகுதல். யோகம்=ப்ரயோகம். அன்றி, யோக மென்பது உபாயமென்றதாம். ... . (5)

எதிர்பார்த்திருந்து அனுபவிக்கும் இருடீகேசனிடம் சேர்ப்பிக்கவேண்டு மென்கிறாள்—

6\. கார்த்தண்முகிலும்கருவிளையும் காயாமலரும்கமலப்பூவும்
ஈர்த்திடுகின்றனவென்னைவந்திட் டிருடீகேசன்பக்கல்போகேயென்று
வேர்த்துப்பசித்துவயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போதீதென்று
பார்த்திருந்துநெடுநோக்குக்கொள்ளும் பத்தவிலோசனத்துய்த்திடுமின். (119)

கார் —கருமைபொருந்திய
தண் —குளிர்ந்த
முகில் உம் —மேகமும்
கருவிளை உம்—காக்கணப் பூக்களும்
காயா மலர் உம் } காயாம் பூக்களும்
கமலம் பூ உம்—தாமரைப்பூக்களும்
வந்து —நெருங்கி வந்து,
இருடீகேசன் பக்கல் } ஹ்ருஷீகேசனிடம்
போகு ஏ —போய்ச்சேர்
என்று —என்றறிவித்து
என்னை இட்டு—என்னைத் தள்ளி
ஈர்த்திடுகின்றன } ஹிம்ஸிக்கின்றன.
(அந்த இருடீகேசன்)

வேர்த்து —ஆயாஸத்தால் வேர்வையுற்று
பசித்து வயிறு அசைந்து } பசியின் பாதை பெற்று வயிறு தளர்ச்சியுற
வேண்டு அடிசில் } வேண்டுமான அன்னங்களையெல்லாம்
உண்ணும் போது ஈது } உண்ணவேண்டும் காலமிது
என்று பார்த்து } என நன்கு கண்டு
இருந்து —பொருந்தியிருந்து
நெடுநோக்கு கொள்ளும் } நீண்ட நோக்குடன் எதிர் பார்க்குமிடமான
பத்தவிலோசனத்து } பக்தவிலோசன மென்னுமிடத்திலே
உய்த்திடுமின் —கொண்டு சேருங்கள்,

கருமுகில் முதலியன எம்பெருமான் திருமேனியை நினைப்பூட்டுகின்றன. தண் முகிலைக் காணும்போது ஸகலதாபம் போம்படி கண்ணனை யணைவதெப் பொழுதோ எனக் கதறுகிறேன். புஷ்பங்கள் புஷ்பஹாஸஸுகுமாரமான திருமேனியின் மென்மையையும் நினைக்கச்செய்கிறன. கமலக்காடு அவனது திருமுகம், திருக்கண்கள், திருப்பவளம், திருக்கைத்தலம், திருவடி யென்றாற் போலுள்ள பல அவயவங்களையும், அவன் திருமார்பில் மன்னி வாழ்ந்து விளங்கும் மங்கையையும் அறிவிக்கும். இவ்வாறெல்லாம் நினைவுற, ஸர்வேந்திரியங்களுக்கும் திருப்தி யளிக்கும் அந்த இருடீகேசனிடம் போ, போ என்று என்னை எல்லாம் சேர்ந்து இழுத்துத் தள்ளுகின்றன. அழைத்துப் போகவேண்டிய நீங்கள் இவ்வளவு பலாத்காரம் செய்து தள்ளிப்போனால் அழகாயிருக்குமே. இருடீகேசனுடைய இந்திரியங்களுக்கு நம்மாலானவகையிலே நாம் திருப்தி பெறுவிப்பதன்றோ கடமை. என்னை அன்னமாகக் கொண்டு அவனுக்கு ஸமர்ப்பித்து நீங்களும் பாக்கியம் பெறலாம். அவனும் 'அஹமந்நாத:' என்று பசித்துப் புசிப்பான். உங்களைப் போன்ற ரிஷிபத்னிகள் அவனுக்கு அன்ன மிட்டு அநுக்ரஹம் பெற்றது தெரியாதோ?

நாள் தவறாமல் இல்லத்திலிருந்தே ஆஹாரமெடுத்துக்கொண்டுபோகும் அவனும், அவனுடன் மாடு, கன்று மேய்க்கும் பிள்ளைகளும் கானகத்திலே வெகுதூரம் சென்றுவிட அங்கே பசியினால் வருந்தி எல்லோரும் ஆஹாரமில்லையே யென்று தவிக்கும்படி வைத்தானவன் ஒரு சிலரை அநுக்ரஹிக்கவேண்டுமென்று கருதி. 'அருகிலே சில அந்தணர்கள் யாகம்செய்கின்றனர். எனக்கு முங்களுக்கும் அன்னம் வேண்டுமென்று கேளுங்களென்று கோபகுமாரர்களையனுப்பினான். அந்தணர்கள் அவர்களை மதிக்கவே யில்லை. வேண்டுமடிசில்வகை

களெல்லாம் உண்ண நமக்கு ஸமயம் வாய்த்ததென்று நோக்குகின்றவன் நெடு நோக்கம் கொள்ளவேண்டியதாயிற்று. மீண்டும் அப் பிள்ளைகளை யழைத்து, ரிஷிகளிடம் போகவேண்டா. ரிஷிபத்னிகளிடம் போய்க்கேளுங்களென்றான். இவர்கள் போய்க் கேட்ட தக்கணமே அந்தணர்பத்னிகள் ஆனந்தத்துடன் தங்க ளாலியன்ற பலவகை அன்னபானங்களை யெடுத்து வந்தனர். வருமன்னவர்க் கங்களின் மீதே கண்ணோட்டம் வைத்து நெடுந்தூரம் நோக்கி நின்றான். நீண்ட முறைக்குண்பானுக்குப் புலன்கள் ஐந்தும் ஒரே ஸமயத்திலுணர்ச்சி பெறு மென்பதைக் கற்றோர் விமர்சிப்பதுண்டு. இவர்கள் கொண்டுவந்த அன்னங் களால் இருடீசேசனுக்குண்டான திருப்திக்கு அளவே யில்லை. அங்கே புருஷர் களை விட ஸ்திரீகளே நல்லறிவு பெற்றிருந்தனர். நீங்கள் அவ்வண்ணமிருந்தால் எனது தந்தையார் என்றைக்கோ என்னை யங்கு அனுப்பியிருப்பார். அவன் என்னைப் பெற வேர்த்துப் பசித்து முன் அங்கிருந்த வண்ணமே யிருக்கின்றனன். புக்ககம் புகாமே இங்கவனை நான் எதிர்பார்க்கலாகுமோ. இனியாவது தயவு செய்து அங்கென்னை யுய்த்திடுமின் என்றனள். தன்னை எம்பெருமான் பூர்ணா நுபவம் பண்ணவேண்டு மென்பது இங்கே கருதப்பெற்றது.

பசித்து. வயிறோ பசிக்கிறதென வழங்குவர். புருஷன் பசிக்கிறா னென வழங்குவதில்லை. ஆசையால் வயிறு பசித்தசைந்து எனக் கூட்டவேண்டுவ தால் அசைந்து என்பது அசைய எனப் பொருள் பெறும். வயிறசைந்து அசைந்த வயிறு பெற்று எனவுமாம். பசித்துண்பானென ப்ரயோகமுண்டு. பசித்து. பசிக்க. பத்தவிலோசனத்து. பத்த மென்றது பக்தபதத்தின் சிதைவு. பக்தமாவது அன்னம். அதனைக் கண்ணாரக் காணவிருந்த தேசத்திற்கு பக்தவிலோசனமெனப் பெயராம்.

கண்ணன் தன்னைக் காண்பதும், தடவுவதும், அநுபவிப்பதும் வேண்டி னாள். அவன் அநுபவித்துவிட்டு அதற்கடையாளமாகத் தனது துளஸிமாலை யைச் சூட்டவேண்டுமென வாசைப்பட்டு, முன்போலோரிடத்தி லுய்த்திடுமின் என்கிறாள். அல்லது, ஒரே வேளை பசித்தவனே அசையமாட்டாமே அங்கே நோக்கியிருந்தானென்றாயே. இத்தனை நாளாக வுண்ணாது எல்லாமொழிந்த உனக்குப் போக பலமேது என்ற கேள்விக்கு மறுமொழி கூறுகிறாள்—

7. வண்ணந்திரிவும்மனங்குழைவும் மானமிலாமையும்வாய்வெளுப்பும்
உண்ணலுறாமையுமுண்மெலிவு மோதநீர்வண்ணனென்பானொருவன்
தண்ணந்துழாயென்னும்மாலைகொண்டு சூட்டத்தணியும்பிலம்பன்தன்னைப்
பண்ணழியப்பலதேவன்வென்ற பாண்டிவடத்தென்னையுய்த்திடுமின். (120)

ஓதம் நீர் வண்ணன் என்பான்	திரை மோதும் கடல்நிற முள்ளவன் எனப்படும்	துழாய் என்னும்	திருத்துழாயெனப்படுகிற
ஒருவன்	—ஒப்பற்றவன்	மாலை	—தனது மாலையை
தண்	—குளிர்ந்த	கொண்டு சூட்ட	என்னிடமிருந்து கொண்டு தரித்து எனக்குச் சூட்டினா னாகில்,
அம்	—அழகிய		

(என்னுடைய)

வண்ணம் திரிவு உம் — நிறம் மாறுபட்டிருப்பதும்
மணம் குழைவும் — மனது வாடியிருப்பதும்
மானம் இலாமை உம் — இப்படிப் பேசும்படி மானம் கெட்டிருப்பதும்
வாய் வெளுப்பு உம் — உதடு வெளுத்துக்கிடப்பதும்
உண்ணல் உறுமை உம் — உண்பதில் பற்றற்றமையும்
உள் மெலிவு உம் — உணர்ச்சிக்குறைவும்
தணியும். —நீங்கும்.
பண் —அக்க வமைப்பானது
அழிய —அழியும்படி
பிலம்பன் தன்னை — பிரலம்பாசுரனை
பலதேவன் —பலராமன்
வென்ற —வெல்ல இடமாயிருந்த
பாண்டி வடத்து — பாண்டீரவடமென்ற ப்ரதேசத்திலே
என்னை உய்த்திடுமின்.

ஓத நீர் வண்ணன். ஓதம்=கடல். அதன் நீர்=ஜலம். அது போன்ற வண்ணமுள்ளவன். அல்லது, ஓதம்=திரை. நீர்=கடல் என்பது யுக்தம். ஒருவன். நிறத்திற்காகக் கடலைச் சொன்னேன். அதற்கில்லாத பல பெருமைகள் உள்ள இவனுக்கு ஸமானம் ஒன்றுமே இல்லை. நிறத்திலும் சிறப்பு இவனுக்கே. பல வியாதிகள் தீர்வது ஒருவனுடைய ஓர் வஸ்துவாலே என்பதுமாம்? ஒருவன் என்பதை மாலை என்பதோடு கூட்டலாம். அவனுடைய மாலையென்றதாம். அப்போது கொண்டு சூட்டுகின்றவர் தாய்மாரென்னப்படும். அப்போது பாண்டிவடம் போகாமலே இதனைச் செய்து எல்லாம் தணிக்கப் பார்ப்பர். ஆகையால் ஒருவன் சூட்ட எனக் கூட்டினது. இதற்குத் தக்கவாறு அவதாரிகையும் கீழே வைக்கப்பட்டுள்ளது. கொண்டு என்பற் கிப்போது, இவள் சூடிக்கொடுத்ததை யவன் தரிப்பவனாகையாலே இவளிடமிருந்து அவன் கொண்டு எனப் பொருள்கொண்டால் சிறந்ததாம். பலதேவன். விளையாடும் பாலர்களோடு கோபாலபாலனாய் மறைந்து வந்து விளையாட்டில் தோற்று, கண்ணனை ச்ரீதாமன் போலே பலராமனைத் தான் சுமந்திருந்த பிரவம்பன் எங்கோ கொண்டோடி கொல்லப் பார்க்க, பலராமன் தன் கையை முடக்கிக் குட்டின குட்டிலே அவன் அமைப்புக் குலைந்தழிந்தானே. அத் தகைய பலத்திற்குக் காரணமான கடல்வண்ணன் எனக்குப் பலம் கொடுப்பார்; உய்த்திடுமின் என்றபடி. ... ... (7)

இராமனை யயோத்திக்குத் திருப்புவதற்காகச் சித்திரகூடத்திலே ஜாபாலி முயன்றாப் போலே சிலர் இவளைக் கலக்கி, போகாமல் தடுக்க முயன்றனர். 'வீட்டில் திருடித் தின்பதாலே கட்டுண்டு, கன்று மேய்த்துக்கொண்டு காடுகளில் திரிந்திருந்து, பசித்து வயிறலசந்து எங்கும் பாதைப்படுமவன்தானா உனக்குப் பதியாகவேண்டும். ஏது? நீ நினைத்த வழகு போதுமே. வெளியில் சொல்லிக் கொண்டு புறப்படவேண்டுமோ' என்றனர். அது தாங்காமே அவர் சொன்னதைக் குணமாக நிரூபித்து அவர்களை நிந்தித்துத் தன்னை உய்த்திடச் சொல்லுகிறாள்—

8. கற்றினம்மேய்க்கவுமேய்க்கப்பெற்றான் காடுவாழ்சாதியுமாகப்பெற்றான்
பற்றியுரலிடையாப்புமுண்டான் பாவிகாளுங்களுக்கேச்சுக்கோலோ.
கற்றனபேசிவசவுணாதே காலிகளுய்யமழைதடுத்துக்
கொற்றக்குடையாகவேந்திநின்ற கோவர்த்தனத்தென்னையுய்த்திடுமின். (121)

எய்க்க	--பாவிகளை வஞ்சிப்பதற்காகவே
கன்று இனம்	--கன்றுகளின் கூட்டங்களை
மேய்க்க உம்	--மேய்ப்பதற்காகவும்
பெற்றான்	--ஸ்வீகரித்தான்.
ஆக	--ஸத்தை பெற
காடு வாழ்	--காட்டில் வாழ்ந்துவரும்
சாதி உம்	--ஆயரின் சாதியையும்
பெற்றான்	--ஸ்வீகரித்தான்.
பற்றி	--மருதமரம் முறிப்பதைப் பற்றி
உரல் இடை	--உரலின் நடுவிலே
யாப்பு உம்	--(வயிற்றில் கயிற்றால்) கட்டையும்
உண்டான்	--பெற்றான்.
பாவிகாள்	--பாவிகளே! உங்களுக்கு (இவை)

எச்சுக் கோலோ.	என்னமாகிறன போலும்.
காலிகள்	--மாடுகள்
உய்ய	--உஜ்ஜீவிக்க
மழை தடுத்து	வர்ஷத்தை அவற்றின் மேல் விழாதபடி செய்து
கொற்றம் குடை ஆக	வெற்றியைப் பெறும் குடையாகுமாறு
ஏந்தி நின்ற	--கண்ணனால் திருக்கையில் ஏந்தப்பட்ட
கோவர்த்தனத்து	கோவர்த்தனமென்ற மலையிலே--
கற்றன	--நீங்கள் தனிமையில் கற்றிருப்பதையெல்லாம்
பேசி	--இடம் தெரியாமல் சொல்லி
வசவு உணாதே	நான் நிந்தனைகளைச் செய்யும்படி யிராமல் என்னை உய்த்திடுமின்.

கன்று மேய்க்கலும், காடுவாழ்சாதி யானதும், உரலிலாப்புண்டது மெல்லாம் உங்களுக்கு அவனை யேசுவதற்காயின போலும். ஆம். பாவிகளுக்கு அவ்வண்ணமே யாகும். கன்று மேய்க்குமவன் விளங்கனிமேல் வத்ஸாஸுரனை எறிந்து வதைத்ததும், ஒவ்வொரு கறவைக்கும் தான் கன்றாக அவதரித்ததும், நெருஞ்சிக்காடான விருந்தாவனத்தை நிகரற்ற மேய்க்காலாக்கியும் மலையைக் கையிலேந்தியு மிருந்ததும், உரலிடையாப்புண்ணவசோதைக்குச் சிறு தாம்பினால் கட்டலாம்படியானதும், இருமருதங்களை மாய்த்ததும் உங்கள் மனத்தில் படவில்லையே, பாவிகாள்! உங்களைப் போன்றாரை எய்க்கவேண்டுமென்றே அவன் அவ்வாறு கன்றுகளை மேய்த்ததென்னவேண்டும். 'காலஸ்ய ஹி ச ம்ருத்யோச்ச ஜங்கமஸ்தாவரஸ்ய ச । ஈசதே பகவாநேக: ஸத்யமேதத் ப்ரவீமி தே. ஈசந்நபி மஹாயோகீ ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு:' கர்மாண்யாரபதே கர்த்தும் கீநாச இவ துர்பல:. தேந வஞ்சயதே லோகாந் மாயாயோகேந கேசவ:.' என்ற வசனங்கள் உங்களைப் போன்றாருக்கே பிறந்தன. இப்படிப் பாவிகளாகாமே புண்ணியம் செய்தார்க்கு இத்தகைய மோஹம் வாராது. 'யே தமேவ ப்ரபத்யந்தே ந தே முஹ்யந்தி மாநவா:' என்றார்களே என முதலீரடிகளின் கருத்து. மேலீரடிகளில் கோவர்த்தனத்தை யெடுத்ததும் அவர்களுடைய ஏச்சை யொழிக்கவேயாம். கன்றுகள் மட்டுமோ அவன் மேய்ப்பது. காலிகளையும் மேய்ப்பதுண்டு. மேய்ப்பது மட்டுமோ; அவைகள் உய்யவும் வழி செய்பவன். காடுவாழ்சாதி யென்கிறீர்களே. 'வநம் தேவா வயம் வநவாஸிந: ... ' என்றபடி காடுகள் அடர்ந்த கோவர்த்தனத்தையே தேவதையாக்கிக் கல்மாரி காத்தது காண்மின். உரலிடையாப்புண்ணும்படி

வெண்ணெயுண்டது தவறு என்கிறீர்களே. தேவதாந்தரங்களை யாராதனை செய்தங்கே தமது சொத்துக்களை யுபயோகிக்கும் இடையர்களை சிக்ஷித்து கோவர்த்தனபூஜை நடத்தி அவன் இஷ்டப்படி அன்னக்குவியல்களைச் செலவிட அவர்களைப் பவ்யப்படச் செய்ததை நினைமின் என்றபடி.

முதலடியிலே, 'கற்றினம் மேய்க்கவும் மேய்க்கப் பெற்றான்' என்றே முன்னோர் செய்த பதப்பிரிவு. மேய்க்கவும் என்பதற்கு மேய்க்கிலும் என வுரை செய்வர். 'மேய்க்கிலும் மேய்க்கப்பெற்றான்' என்றே ஓதுவாரு முண்டு. 'மேய்க்கலும் மேய்க்கப் பெற்றா' னெனவும் சிலர் படிக்கின்றனர். மேய்க்கலும் மேய்க்க என்றபோது மேய்க்கலும் செய்ய எனப் பொருளாம். 'வாக்ஷம்வ அதி' என்னுமா போலே. இப்போது மேய்க்க என்ற சொல் முழுதும் வீணாம். மேய்க்கிலும் என்றபோது கற்றினம் மேய்ப்பதானாலும், மேய்க்கவே கற்றினம் பெற்றான். மேய்ப்பதில் என்ன குற்றம் என்றதாம். 'மெய்க்கவும் மேய்க்க' என்றபோது கற்றினத்தை மேய்க்கவும் பெற்றான். நீங்கள் ஏசுவதற்காக எடுத்த தொழிலான மேயத்தலென்பதையும் செய்யப்பெற்றான். யாரில்லை யென்றார்கள்? எதற்காக? மேய்க்க. மேய்த்தலையே ஸ்வயம்ப்ரயோஜநமாகக் கொள்ள என்றாற் போலுரையாம். சிரமப்பட்டு ஏதேனுமொருபடி யுரைத்தலாகுக. ஆயினும் இப்பக்ஷங்களில் அவர்கள் ஏசுவது தவறு என்பதற்குக் காரணம் கூறினதாக வில்லை. மேலீரடிகளில் பெருமையைக் கூறுவதினின்று அதைக் கொள்ளவேண்டும். இங்கேயே அது கூறினதாவதற்காகவும், சிரமமின்றி பொருள் கொள்வதற்காகவும், சொற்களுக்குச் சிறந்தகருத்திருப்பதற்காகவும் மேய்க்கவும் ஏய்க்க எனப் பதங்களைப் பிரித்தது. மூலபாடம் மேய்க்கவு(லு)மேய்க்க எனப்பொதுவாக இருந்தது. காலக்ரமத்தில் உரையைப் பின்பற்றி எங்கும் மேய்க்க எனப் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டது. இப்பொருளைப் புராணவசனத்தைக் கொண்டு விவரித்துமுளோம்.

இதனைப் பின்பற்றி ஆக, பற்றி என்ற பதங்களை ஏசுவதைக்கண்டிக்கக் காரணமிருப்பதை விளக்கும் சொற்களாக்கி உரைசெய்தனம். 'நைவாஸுர ப்ரக்ருதய: ப்ரபவந்தி போத்தும்' என்றனர் ஆளவந்தாரும். ஆக என்பதற்கு, காடுசெழிக்க, காட்டிலுள்ளார் உய்ய, தத்துவமுணர்ந்தார் அனுபவித்து உய்ய என்றவாறு பொருளாம். ஏய்க்க, ஆக என்றவிரண்டையும் இரண்டிலும் கொள்க. ஏசுவார்களுக்கு வசவு கூறுவதில் நோக்காலே ஏய்க்க என முன்னம் சொன்னதாம். பற்றி என்பதற்கும் வெண்ணெயைப் பற்றி என்றாற் போன்றவை பொருளாகுமாகிலும், அசோதையையும் அர்ஜுநவ்ருக்ஷங்களையும் அனுக்ரஹம் செய்ய நினைத்து என்றால், ஏசுவது தவறென்பதை விவரித்தபடியா மாகையாலே இப்பொருள் உரைத்தனம். தகுமாறு கொள்க. கற்றன. விவேகம் பெறாத உங்கள் படிப்பும் படிப்போ என்று பரிஹஸித்தபடி. கோற்றக்குடை. 'கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையே' என்ற தங்கையாரின் திருமொழியை நினைத்துச் சொன்ன சொல் இது. கோவர்த்தனத்து, காடுவாழ்சாதியானவனைப் பெற நான் மலைஜாதிப்பெண்ணாகவே யிருத்தல் நலம் என்றபடி. .... (8)

திருவாய்ப்பாடி முதலான இடங்களிலே எனக்குச் சிறந்த வாழ்வு கிடைக்காதென்று மாநகரில் நாகரீகமாய் வாழ்க்கையே விரும்புகின்றீர்கள். அப்போதும் சொல்வதைக் கேண்மின். மிக்க உயர்ச்சியுள்ள மாடங்கள் சூழ்ந்த துவரைமாநகரில் என்னைக் கொண்டுவிடுங்கள். வீணாக ஏதேனும் சொல்லிப் போது போக்குவதாகில் உங்களுக்கே பெருங்கேடென்று நினைத்து இதைச் செய்யுங்கள் என்கிறாள்—

9. கூட்டிலிருந்துகிளியெப்போதும் கோவிந்தாகோவிந்தாஎன்றழைக்கும்
ஊட்டக்கொடாதுசெறுப்பனாகில் உலகளந்தானென்றுயரக்கூவும்
நாட்டிற்றலைப்பழியெய்தியுங்கள் நன்மையிழந்துதலையிடாதே
சூட்டுயர்மாடங்கள்சூழ்ந்துதோன்றும் துவராபதிக்கென்னையுய்த்திடுமின். (122)

கிளி —நான் வளர்க்கும் கிளியானது
கூட்டில் இருந்து —கூடு உள்ளே வசித்துக் கொண்டு
எப்போதும் —எல்லாக்காலங்களிலும்
கோவிந்தா! கோவிந்தா! என்று
அழைக்கும் —கூவுகின்றது.
ஊட்ட —தாதிகள் ஊட்டும்படி
கொடாது —உணவைக் கொடுக்காமல்
செறுப்பன் ஆகில் —கோபித்திருப்பேனானால்
உலகளந்தான் —உலகை யளந்த மூர்த்தியே!
என்று —என்றவாறு
உயர கூவும் —த்வநி வெகுதூரம் செல்லும்படி கத்தும்.
நாட்டில் —இவ்வுலகில்
தலை பழி —பெருர் நிந்தைகளை
எய்தி —பெற்று
உங்கள் நன்மை —உங்களுக்கு வரவேண்டும் நல்ல பலன்களையும்
இழந்து —பெருமை போக்கிவிட்டு
தலை யிடாதே —தலையிட்டுக்கொள்ளாமல்
சூடு உயர் —சிகரங்களாலுயர்ந்தவனான
மாடங்கள் —உப்பரிகைகள்
சூழ்ந்து தோன்றும் —சூழ்வதால் விளங்காநிற்கும்
துவரா பதிக்கு —த்வாரகைக்கு
என்னை உய்த்திடுமின்.

அவன் திருநாமங்களைக் கொட்ட மட்டிலே தரித்திருக்கும்படி யிருந்த காலத்திலே அனுகூலமாயிருத்தல் பற்றி நான் கிளிகளைக் கற்பித்திருந்ததால் இப்போதும் அவை கோவிந்தா கோவிந்தா என வழைக்கின்றன. இப்போது அச்சொற்களைக் கேட்டால் விரஹம் பொறுக்கமாட்டாமே மிகவும் மோகமாய் விடுகிறது. இவ்வாறு கத்த முடியாதபடி இக் கிளிகள் சக்தியற்றுக் கிடக்கட்டு மென்று அவற்றின் மேல் கோபித்து அவற்றிற்கு உணவு கொடுக்காமலிருந்தால், பசியினாலே ஊரடங்கலும் கேட்குமாறு உலகளந்தானே! எனக் கத்துகின்றன. உலகளந்தான் திருவடி பரவின விடமெல்லாம் அந்தச் சத்தம் போகும் போலும். எங்குப் போனால் தானென்ன? அவன் வருவதில்லை. அதனால் எனக்கும் மூர்ச்சையாம். என்னுயிர்க்கது காலனே யாகிறது என முதலீரடிகளின் கருத்து.

இனி, 'என்னைச் சேர்ந்த கிளி தன்னாலான உபகாரத்தை எனக்குச் செய்கிறது. கோவிந்தா கோவிந்தா என்றழைத்து அவனுடைய குணங்களை யெல்லாம் நான் நினைக்கும்படி செய்கிறது. இவ்வாறு ஒரே பெயரைப் பலகால் கூவுதல் மட்டுமோ? இவ்வளவு நான் வளர்த்தும்அவன் செவிபடவும் கூவவில்லையே யென்று கோபித்து ஊட்டம் கொடாமலிருந்தேனாகில் என் கருத்தறிந்து, 'உலக ளந்தானே! எங்குமுள்ள உன்னை இவ்வளவு கூவியழைக்கவேண்டுமா. நீ வந்தால்

தான் நாங்கள் உண்பது' என்றறிவிக்கு மாறு உயரக் கூவும். இதற்கு மேல் அது செய்யக்கூடிய தென்ன வுண்டு? நீங்களும் என்னைச் சேர்ந்தவர்கள். உங்களாலானதை நீங்கள் செய்யவேண்டாவோ' எனவும் இங்குக் கருத்தாம். 'மேற்றிருமொழியிலே அவனது வஸ்துக்களைக் கொண்டு தாபத்தைத் தீர்க்குமாபோலே அவன் நாமங்களைக்கொண்டிங்கு தாபம் தீர்ப்பதாகில் இக்கருத்துக் கூடுமே.

நாட்டிலித்யாதி. இவ்வுலகில் அநிஷ்டங்கள் நேருவதும் இஷ்டங்கள் விலகுவதுமென்றது மட்டு மில்லை; மேலுலகிலும் நன்மைகள் நீங்கும். தலையிடாதே. வெட்கமுற்றுத் தலை கவிழ்ந்துகொள்ளும்படி யாகும். அவ்வாறு செய்துகொள்ளாதபடி யெனப் பொருளாம். அன்றி, தலையிட்டுக்கொள்ள வேண்டா. உங்கள் தலையே போகும்படி செய்துகொள்ளவேண்டா. கஷ்டம் தாங்காமே தலையைப் போக்கிக்கொள்ளவேண்டா என்றபடியாம். மேலும் பழியெய்துவதும் நன்மை யிழப்பதுமே உங்களுக்குத் தலை போவதற்கொத்தவையா மென்றவாறும் கொள்க.

ஊட்டக்கோடாது என்றதே பழைய பாடம். ஊட்டுக்கொடாது என்று பாடம் கல்பிக்காமலே பொருள் கொள்ளவியலுமெனப் பதவுரையால் தெரியலாகும். கல்பிப்பதாகில், ஊட்டங்கொடாதெனவு மாம். சூட்டுயர் என்றவிடத்திலே சூடு என்றதுபோல் சூட்டு என்றதும் பதமாகு மென்பர். அப்பொழுதும் அதே பொருளாம். ... ... (9)

10. மன்னுமதுரைத்தொடக்கமாக வண்துவராபதிதன்னளவும்
தன்னைத்தமருய்த்துப்பெய்யவேண்டித் தாழ்குழலாள்துணிந்ததுணிவை
பொன்னியல்மாடம்பொலிந்துதோன்றும் புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை
இன்னிசையாற்சொன்னசெஞ்சொன்மாலை யேத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே.
(**123**)

தாழ் குழலாள் } தாழ்ந்த கூந்தலை யுடையள் ஒருத்தி.
தன்னை —கண்ணனிடம் காமுற்ற தன்னை
மன்னு --அவன் மன்னியிருக்கும்
மதுரை தொடக்கம் ஆக } திருமதுரையைத் தொடங்கி
வண் --விலக்ஷணமான
துவராபதி தன் அளவு உம் ஆக } துவாரகையின் முடிவுமாக = த்வாரகை வரையிலாக
தமர் --தன் தாய் முதலானோர்
உய்த்து பெய்ய வேண்டி } கொண்டு சேர்க்கவேணு மென்று அபேக்ஷித்து
துணிந்த துணிவை } அஞ்சாமற் சொல்வதற்கான நெஞ்சுறுதியைப்பற்றி

பொன் இயல்—பொன்னின் குணமுள்ள
மாடர் —உப்பரிகைகள்
பொலிந்து —மேன்மேலாகி
தோன்றும் புதுவையர் } ப்ரகாசிக்கும் வில்லிபுத்தூரிலுள்ளவர்க்கு
கோன் —ஸ்வாமியான
விட்டுசித்தன்--ஸ்ரீவிஷ்ணுசித்தரின் (புதல்வியான)
கோதை —ஆண்டாள்
இன் —இனிய
இசையால் —ராகத்துடன்
சொன்ன --இயற்றின
சொல் மாலை—செய்யுட்களை
ஏத்த --துதிக்க
வல்லார்க்கு --ஸமர்த்தர்களுக்கு
வைகுந்தம் ஏ-ஸ்ரீவைகுண்டமே
இடம் --வாஸஸ்தானமாகும்.

தாழ்குழலாள் என்பதைக் கோதை என்பதோடு கூட்டாமல் உள்ளபடி வைத்துரைப்பதே நலம். முன்னமே இத்தகைய ப்ரயோகம் நிகமங்களிலுள்

ளது. பொதுவாகத் தன்னைப் போல் எந்த ஸ்த்ரீ காமுற்றாலும் இவ்வாறே சொல்லுவாளென்று இதனை லறிவித்தபடி. இடம்லைகுந்தமே. பல அவதாரங்களில் ஏற்பட்ட மூர்த்திகளை த்யானம் செய்வோர்க்கும் பரவாஸுதேவ மூர்த்தியே ப்ராப்யமாகிறாப்போலே அவன் விளையாடின இடங்களான பல திவ்ய தேசங்களை யநுஸந்திப்பார்க்கும் பரமபதம் ப்ராப்யமாகிற தென்றபடி. (10)

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா—தி—12. மற்றிருந்தீர்கட்கு உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

கண்ணனென்னும். 13.

(களையாற்றக் கூறல்.)

'விபவத்தில் கண்ணபிரானுக்கு' வாஸ ஸ்தானங்களானவற்றி லெங்காவது என்னை உய்த்திடுமின் என்று இவள் வேண்டினள். புடையும் பெயராதில்லாத உன்னை நாங்கள் எங்ஙனம் அழைத்துப் போவது கூடும்! உனது நிலையைக் காணும்போது எங்களுக்கும் கை கால் விழுந்துவிடுகிறனவே. உன்னை எடுத்துக்கொண்டாவது போய்ச் சேர்த்து விடுவமென்றது நடவாதென நினைக்கிறோம். மேலும் உன்னையங்கே விட்டு வந்தால் கன்னியை க்ரமமாக ஒருவனுக்கு மணம் புரிய வளிக்காமல் கண் மறைவாக விட்டுவந்தார்களென்று எங்களை உலகம் பழிக்குமே. நாங்கள் என் செய்வோமென்றனர் அன்னைமார்கள். இவளுக்கும் வாட்டமும் கஷ்டமும் விஞ்சாநின்றன. அதனால் தான் போக முடியாதென்பதைத் தெளிந்து கொண்டு, இவர்களாவது அவனிடம் சென்று அவனது வஸ்துக்களைக் கொண்டு வந்தும், கடைசியாக அவனையுமழைத்துவந்தும் நம் துயரைத் தீர்ப்பரேல், உயிரோடிருக்கலாமென நினைத்து அவர்களை வேண்டிக்கொள்ளுகிறாள்—

1. கண்ணனென்னும்கருந்தெய்வம் காட்சிப்பழகிக்கிடப்பேனை
புண்ணிற்புளிப்பெய்தாற்போலப் புறநின்றழகுபேசாதே
பெண்ணின்வருத்தமறியாத பெருமானரையிற்பீதக
வண்ணவாடைகொண்டு என்னை வாட்டம்தணியவீசீரே. (124)

கண்ணன் என்னும் } கண்ணனெனப்படும்
கரு தெய்வம்—கருமை பொருந்திய தெய்வத்தின்
காட்சி —தோற்றத்திலே
பழகி —இணக்கமுற்று
கிடப்பேனை —விழுந்து கிடக்குமென்னைக் குறித்து
புறம் நின்று—அப்பால் ஒதுங்கி நின்று கொண்டு

புண்ணில் புளி பெய்தால் போல — புண்ணின் விரணபாகத்தின்மீது புளிரஸத்தை வார்ப்பதுபோல
அழகுபேசாதே-கடினமாகப்பேசாமல்
பெண்ணின் —பெண்ஜாதியின்
வருத்தம் —கஷ்டத்தை
அறியாத —அநுபவியாத
பெருமான் —பரமபுருஷனுடைய
அரையில் —திருவரையில் சாத்தப்பட்டிருக்கும்
பீதக வண்ணம் ஆடை — பீதாம்பரத்தை
கொண்டு —அவனிடமிருந்து பெற்றுக் கொணர்ந்து
வாட்டம் —எனது சோர்வு
தணிய —குறையும்படி
என்னை வீசீர்—என் உடலில் வீசுங்கள்.

கருந்தெய்வம். கருமையாவது கறுத்த நிறம் அல்லது பெருமை. கண்ணனென்றால் கண்ணுக்கு எதிரே ஸுலபமாய் நிற்பவனென நினைத்திருந்தேன். இப்போது தான் அவன் கிட்டவொண்ணாத தெய்வமாக எனக்கானானென்றபடி. காட்சிப்பழகிக்கிடப்பதாவது = அவன் காட்சி என்னுன்று கொலோ என்று ஏங்கிக்கிடப்பது; அல்லது, இதற்குமுன் அவன் காட்சியைப் பெற்றிருந்து இப்போது கிடைக்காமையால் வருந்திப்படுத்திருப்பது. புண்ணிற் புளி. காட்சி பெறாத வருந்துமெனக்குக் காட்சிக்கு வழி கூறுவதை விட்டு மேன்மேல் வாதிக்கும் பேச்சை வளர்ப்பது யுக்தமென்றென்றபடி. புறம் நின்று உள்ளே நுழையாமல் ஒதுங்கி நின்று. கீழே படுத்திருக்கும் எனதருகில் உட்கார்ந்து எவ்வாறு உபசரித்து இந்த வாதையைத் தீர்க்கலா மென்ற நோக்கமேயிராமல், நாமும் விசாரித்தோம் என்று நினைத்துக்கொள்ளட்டு மென்ற கருத்தாலே வந்து, உடனே போகவேண்டுமென்று நினைத்துக்கொண்டேயிருந்தென்றபடி. அழகுபேசாதே. என்னிடமும், என் உடலிலும் சிறந்த அபிமானம் வைத்துப்பேசுமாபோலே பேசவேண்டா. அறியாத. எல்லாமறிந்து ஸர்வஜ்ஞனான பெருமான் அறியாததென்னனமெனில், அறிவுக்குத் தகுந்த செய்கை யிராமையாலே அறியவேயில்லை யென்று வெறுத்துச்சொல்லுகின்றாளென்க. அறியாத அனுபவியாத. புருஷனுக்குப் பெண்களின் வருத்தம் இத்தகையதென்று ஸ்வாநுபவமாக வர நியாயமில்லை. அவர் எப்பொழுதாவது பெண்ணாகப் பிறந்து பார்த்தாவை மணந்துவிட்டுப் பிரிந்து வருத்தப்பட்டாலன்றோ இது அனுபவித்ததாமென்னலுமாம். அரையில். உத்தரீயமான பீதாம்பரமாகில், அது பெருமானுடைய திருமேனியிற் பதிந்திராமையாலே ஸர்வகந்தமான அதன் மணம் பொதிந்திருக்கமாட்டாதென்று அரையிலணிந்த ஆடையையே இவள் ஆசைப்பட்டது. காமினிக்குக் கீழாடையிலே கருத்ததிகம். மேலுமிங்கே கூடுமான வரையில் கண்ணனுடைய அங்கங்கள் ஒவ்வொன்றிலும் தனக்கொரு சேர்க்கையை விரும்பி இத் திருமொழி யருளிச் செய்கின்றாள். மற்ற அங்கங்களிற் சேர்ந்த வஸ்துக்கள் வேறு கூறக் கூடுவனவாயின. திருவரையினின்று திருவடிக்குமேல் வரையிலுள்ள அங்கங்களைச் சேர்ந்ததாய் பீதாம்பரமொன்றே கூறக் கூடியதாயிற்று. ஆகவே அரையில் என்றதென்க. (1)

திருமுடியைச் சேர்ந்த தொன்றாலே தாபம் தீர்க்க வேண்டுகின்றனள்—

2\. பாலாலிலையில்துயில்கொண்ட பரமன்வலைப்பட்டிருந்தேனை
வேலால்துன்னம்பெய்தாற்போல் வேண்டிற்றெல்லாம்பேசாதே
கோலால்நிரைமேய்த்தாயனாய்க் குடந்தைக்கிடந்தகுடமாடி
நீலார்தண்ணந்துழாய்கொண்டென் நெறிமென்குழல்மேல்சூட்டீரே. (125)

பால் ஆல் இலையில் } பால்வடியும் தருணத்து ஆலந்தளிரிலே
துயில் கொண்ட } கண்வளர்ந்தருளும்
பரமன் —பரமபுருஷனுடைய
வலைப்பட் டிருந்தேனை } மயக்கவி லகப்பட்டிருக்கு மென்னைக் குறித்து,
வேண்டிற்று எல்லாம் } உங்களுக்கு இஷ்டமான படியெல்லாம்,
வேலால் —வேலாயுதத்தினால்
துன்னம் —துளைத்தலை
பெய்தால் போல் } இடுவது போல்
பேசாதே —பேசுவதை விட்டு—
குடந்தை கிடந்த } திருக்குடந்தையிலே பள்ளி கொண்டவனும்,
ஆயனாய் —முன் இடையனாயவதரித்து
கோலால் —கையில் மேய்க்கும் கோலையும் கொண்டு *
நிரை —பசுக்கூட்டங்களை
மேய்த்து —மேயச் செய்துகொண்டு
குடம் ஆடி —குடக்கூத்தாடினவனுடைய
நீல் ஆர் —நீலநிறம் பொருந்திய
தண் —குளிர்ந்த
அம் —அழகிய
துழாய் —திருத்துழாய்மாலையை
கொண்டு —பெற்றுவந்து
என் —எனது
நெறி —(ஸம்ஸ்காரமில்லாமையால்) நெறிப்புக்கொண்டதும்
மெல் —இயற்கையில் மென்மையானதுமான
குழல்மேல் —கூந்தலின்மேலே
சூட்டீர் —சூட்டுங்கள்.

பாலாலிலை. முதிர்ந்த இலையா யிருந்தால் கூட அதுவும் நீரில் அமிழ்ந்து விடாதபடி அதன் மேல் பள்ளிகொள்ளுவது இயலாது. மிகவும் இளசான தளிரிலும் அவ்வாறு படுத்திருந்த அற்புதன் அவன். பரமன். ஸர்வஸம்ஹாரம். செய்து தானொருவனாயிருந்ததாலும் தனக்கொத்த பெரியபிராட்டியாரோடு சேர்ந்திருத்தலாலும் பரமன். மா - லக்ஷ்மி. தண். துழாய் இவளுடைய தாபத்தைப் போக்கும் வண்ணமிருப்பதால் குளிர்ந்ததெனப்படுகிறது. (2)

கண்ணனின் காட்சியில் முன் பழகியிருந்து இப்போது அதின்றித் தவிப்பதை முதற்பாட்டில் கூறினாள். அவன் செய்த மாயமயக்கத்தில் சிக்கியிருத்தல் மேலே சொல்லப்பெற்றது. எல்லாம் கேட்டிருந்த அன்னைமுதலானோர் அருகில் உட்கார்ந்து அஞ்சேலென்று சொல்லி உபசரிக்கத் தொடங்கினர். அப்போது, அவன் திருக்கண்ணால் புருவம் நெறித்துப் பார்த்தருளினதைக் கூறுகின்றவளாய் அவன் திருமார்விலணிந்த வனமாலையைக் கொணர்ந்து தன் மார்விலமைக்கவேண்டுகிறாள்—

3. கஞ்சைக்காய்ந்தகருவில்லி கடைக்கணென்னும்சிறைக்கோலால்
நெஞ்சூடுருவ வேவுண்டு நிலையும்தளர்ந்து நைவேனை
அஞ்சேலென்னானவனொருவ னவன்மார்வணிந்தவனமாலை
வஞ்சியாதேதருமாகில் மார்வில்கொணர்ந்துபுரட்டீரே. (126)

கஞ்சை —கம்ஸனை
காய்ந்த —கொன்றவனும்
கரு —பெரிய
வில்லி —வில் போன்ற புருவ முடையனுமான கண்ணனின்
கடைக்கண் என்னும் } கடைக்கண் என்று வழங்கப்படும்
சிறை கோலால் } சிறகுகளை யுடைய அம்பினால்
நெஞ்சு ஊடுருவ } அது நெஞ்சில் புகுந்ததாலே
வேவு உண்டு—வெந்துபோகப் பெற்று
நிலை உம் தளர்ந்து } தளர்ந்த உடல் நிலையுமடைந்து

கைவேலை —வருந்தித் தவளு மென்னைப் பார்த்து
அஞ்சேல் என்றான் } நீ பயப்படவேண்டாம் என்றருளாதவனும்,
அவன் ஒருவன் } அப்படிப்பட்ட அத்விதீயனு மான கண்ணன்
அவன் மார்வு—தனது மார்பில்
அணிந்த —அலங்காரமாகச் சாத்திக் கொண்டிருக்கும்

வனமாலை —வனமாலையை
வஞ்சியாதே—(நீங்கள் கேட்ட பிறகாவது) வஞ்சனை பண்ணாமல்
தருமாகில் —அளிப்பானாகில்
கொணர்ந்து —கொண்டுவந்து
மார்வில் —எனது கொங்கைகளின் மீது
புரட்டீர் —கீழ்மேலாகத் திருப்புங்கள்.

கஞ்சை. கொடியனான கஞ்சனை முழுச்சொல்லால் சொல்ல மனமிராமே சிதைத்துச் சொன்னபடி. அவனைப் போல் அவன் பெயரும் சிதைந்தது. கருவில்லி. கடைக்கண்ணை அம்பாக மேலே மொழிவதற்கேற்ப அவன் புருவத்தையே வில் என்று முற்றுவமையாகக் கொண்டனள். இச் சொல் அவன் கம்ஸனை வதைப்பதற்கு முன்னம் பெரும் வில்லை முறிக்கக் கைபிலெடுத்ததையும் குறிக்கும் சிறைக்கோலால். கண் இரெப்பைகளை இங்கே சிறகுகளாகக் கருதினதாம். ஊடுருவல் புகுதல். கோலாலென்பதை வேவுண்டு என்றதோடு கூட்டுக. இல்லையேல் ஆல் (வருத்தம்) எனப் பிரித்து, கோல் ஊடுருவ எனச் சேர்ப்பதாம். வேவுண்டு. வேவு=வேதல். ஏவுண்டு எனவும் பிரிப்பர். ஏவு=வருத்தம். அஞ்சேலென்றானவனொருவன். நீங்கள் கிருபை கூர்ந்து, 'அஞ்சேல்' என்கிறீர்கள். நீங்களும் அவன்மூலமாகத் தானே காக்கவேண்டும். அவன் ஒருவன்தானே அனைவருக்கும் தஞ்சமானவன். அவன் அஞ்சேலென்னவில்லையே யென்றபடி. அவன்மார்வு. அவன் என்ற சொல் முன்னுமுள்ளது. அது எழுவாய். இது மார்வு என்றதோடு சேரும். அவனது மார்வு எனப் பொருளாம். இருசொல்லையும் எழுவாயாகக் கொள்வதும் மார்வு என்றவிடத்தில் தனது மார்வு எனச் சேர்த்துரைப்பதும் தகா. தனது எனச் சேர்க்கக் கருதியிருந்தால் அகன் மார்வ எனவே யருளியிருப்பள். தன் மார்வை மேலே சொல்லப்போவதால் வேறுபாடு வ்யக்தமாவதற்காக அவன் மார்வென்றது. மார்வு என்ற விடங்களில் மார்பு எனவும் பாடம். வனமாலை துளவமாலை மார்வுக்குப் போதாது அதைத் தலையில் சூட்டுங்கள். நீண்டும் அகன்றுமுள்ள வனமாலை மார்வுக்குத் தகும் தருமாகில். துழாய்மாலையாகில் தருவான். விட்டுப் பிரிக்காத வனமாலையைத் தருவானோ எனவும் தோன்றுகிறது. என்னிடத்திலுள்ள காதலாலும் உங்களிடமுள்ள மதிப்பாலும தருவானெனவும் நினைக்கிறே னென்றபடி. மார்வில். அம்பு புகுந்த நெஞ்சுள்ளவிடத்திலே. வனமாலையும் வேவுண்ட எனதுடல் பட்டு உலர்ந்துவிடும். கஞ்சனைக் காய்ந்தவனின் வனமாலையும் காய்ந்துவிடும்படியன்றோ என் உடல் வேவிருப்பது. ஒரு பக்கம் உலர்ந்தால் மற்றொரு பக்கம், உட்பக்கம் எல்லாம் படும்படிப் புரட்டவேணுமென்கிறாள் புரட்டீரே என்றாள். (3)

வனமாலைக்கும் குளிர்ச்சி போதாதென்று அவன் திருப்பவளவமுதநீரையே கொணரக்கேட்கிறாள்—

4. ஆரேயுலகத்தாற்றுவார் ஆயர்பாடிகவர்ந்துண்ணும்
காரேறுழக்கவுழக்குண்டு தளர்ந்தும்முறிந்தும்கிடப்பேனை
ஆராவமுதமனையான்தன் அமுதவாயிலூறிய
நீர்தான்கொணர்ந்துபுலராமே பருக்கிஇளைப்பைநீக்கீரே. (127)

ஆயர் பாடி — சேரியிலுள்ள இடைச் சாதியனைவோராலும்
கவர்ந்து — கொள்ளைகொண்டு
உண்ணும் — அனுபவிக்கப்படும்
கார் ஏறு — கருத்த விருஷபமானது
உழக்க — மிதிக்க
உழக்கு உண்டு — மிதிபட்டு
தளர்ந்தும் — சந்திபந்தங்கள் குலைந்தும்
முறிந்தும் — ஒடிந்தும்
கிடப்பேனை — அசையாமல் விழுந்து கிடக்கு மென்னை
ஆற்றுவார் — தேற்றுகிறவர்
உலகத்து — உலகத்திலே

ஆரே. — ஆராவது இருப்பரோ?
ஆரா — திருப்தி பெறுவிக்காத
அமுதம் அனையான் தன் — அமுதத்திற்கு ஒப்பான அவனுடைய
அமுதம் — அமுதமயமான
வாயில் — திருப்பவளத்தில்
ஊறிய — உண்டான
நீர் தான் — அமுதத்தையே
கொணர்ந்து — கொண்டுவந்து
புலராமே — நான் உலர்ந்துபோகாதபடி
பருக்கி — என்னைப் பருகவைத்து
இளைப்பை — இளைத்திருத்தலை
நீக்கீர் — நீக்குங்கள்.

திருவாய்ப்பாடியிலுள்ளார் எல்லோரும் எளிதில் அனுபவிக்கும்படி இருந்தவன் எனக்குமுண்ணுமாறு இருக்கலாகாதோ எனக் கருதி ஆயர்பாடி கவர்ந்துண்ணும் என்றனள். அல்லது ஆயர்பாடியை, தான் ஆசைப்பட்டுண்பவன் அப் பாடி யடங்கலும் வைத்த ஆசையை முழுதும் என்னிடத்திலே வைத்திருந்தும் என்னை உழக்குகிறானே எனவும் கருத்தாம். காரேறு. கார் என்பது பலராமனை விட்டு இவனையே கொள்விக்கவாம். ஆராவமுதமனையான். இது அபூதோபமை. அமுத மொன்று ஆராததாயிருந்தால் அதற்கொப்பா யிருப்பானிவன் என்றபடி. எம்பெருமானின் திருப்பவளவமுதநீரைப் பருக விரும்பினள் இதைக் கொணர வல்லவர் யாரு மில்லையே யென நினைத்து ஆரேயுலகத்தார் என்றாள். இவள் கருத்தை யறியாமே, 'உனக்கு வேண்டுவதைச் சொல். முடிந்தவரை முயற்சி கொள்ளுகிறோ' மென்றனர் அருகி லிருந்தவர். பிறகுப் பின்னீரடிகளாலே அதை வெளியிட்டனள். இவ்வாறு கூறுமிவளுக்கு அவனையே அழைத்துவரவேண்டுமென வறிவிப்பதிலே நோக்கு. (4)

கோதாய்! திருப்பவளவமுதென்பது திருவைப் போன்றாருக்குத் தானே கிடைக்கும். நாங்கள் எப்படிப் பெறமுடியு மென்றார்கள் அவர்கள். அப்போது வேறு வழியில் அதுவும் சேர்த்துக் கொண்டுவரக் கூடுமாறு கூறுகின்றனள் —

5. அழிலும்தொழிலு முருக்காட்டானஞ்சேலென்ன னவனொருவன்
தழுவிமுழுவிப்புகுந்தென்னைச் சுற்றிச்சுழன்றுபோகானால்
தழையின்பொழில்வாய்நிரைப்பின்னே நெடுமாலூதிவருகின்ற
குழலின்துளைவாய்நீர்கொண்டு குளிரமுகத்துத்தடவீரே. (128)

அழிலும் —அழுதாலும்
தொழிலும் —தொழுதாலும்
உரு —தன் திருமேனியை
காட்டான் —காண்பிக்காதவனும்,
அஞ்சேல் —பயப்படவேண்டாம்
என்னான் --என வருளாதவனுமான
அவன் ஒருவன் } அந்த விலக்ஷண புருஷன்
புகுந்து —இங்கே வந்து
என்னை
தழுவி —அணைத்து
முழுவி —முத்தமிட்டு
சுற்றி சுழன்று போகான் } எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து போகாதவனுகிறான்.
ஆல் —கஷ்டம்.
(ஆகையால் வாயமுதம் நேரில் கிடைப்பதேது? ஆயினும் அந்த)

நெடுமால் —மிக்க வியாமோஹமுள்ளவனே
நிரை பின்னே } பசுக்கூட்டத்தின் பின்புறமாக
தழையின் —பீலிகளாலான
பொழில்வாய்—சோலையினுள்ளே
ஊதி வருகின்ற } வந்துகொண்டே ஊதும்
குழலின் —வேய்ங்குழலின்
துளை வாய் —துவாரங்கள் வழியாக (வரும்)
நீர் —வாயமுத நீரை
கொண்டு —கொணர்ந்து
குளிர —குளிரும்படி
முகத்து —எனது முகத்திலே
தடவீர் —தடவுங்கள்.

முழுவி என்றவிடத்தில் முழுசி என ஓதுவதுமுண்டு. 'மூக்கினால் முகருதல் செய்து' என வதற்குப் பொருள் உரைப்பர். தழுவி முழுசி நெருக்கியணைத்து எனவு முரைப்பர். முழுவி யென்ற சொல்லே செம்மையானதும், தழுவி யென்பதோடிணைந்ததுமாம். உருக்காட்டி, அஞ்சேலென்றும் சொல்லி தழுவுதல் முதலானவும் செய்து எனது எல்லா இந்திரியங்களையும் திருப்தி பெறுவிக்க வேண்டியவன் ஒன்றும் செய்வதில்லையே யென வருந்துகிறாள். போகான். மறைகின்றவன் இவ்வளவு செய்து பிறகு மறைந்தால் தரிக்கலாம். அங்ஙனம் செய்கிறானில்லை யென்றதாம். அல்லது போகான் என்று ஒரு சமயம் அவன் இருந்த இருப்பைச் சொன்னதாம். என்னைச் சுற்றிச் சுழன்று வேறிடம் பேகாதவன் இப்போது உருக்காட்டான், அஞ்சேலென்னானென்றபடி. அன்றி, சுழன்று போகான். சுழன்று ஸஞ்சரியான் என்றதாம். குளிரமுகத்துத் தடவீரே. என்னருகில் வராவிட்டாலும் அவன் குழலூதும் போது வரும் ஓசையுடன் கலந்து வரும் அமுதநீர் என் முகத்திற் பட்டாலும் போதும். அதற்கு முயற்சி செய்யுங்களென்றபடி. தழையின் பொழில்வாய் என்றவடியிலே 'சாலப்பன் னிரைப் பின்னே தழைக்காவின் கீழ்' என்றது கொண்ட திருமொழியை யநுஸந்திப்பது (பெரியா. 34.) துளை யென்றவிடத்தில் தோளை யெனவும் பாடம். (5)

திருமுகநீரைக் கொண்டுவருதல் கூடாமையை நினைத்துத் திருவடிப் பொடியைக் கொணர்ந்து உடம்பில் பூசப் பிரார்த்திக்கின்றனள்—

6. நடையொன்றில்லாவுலகத்து நந்தகோபன்மகனென்னும்
கொடியகடியதிருமாலால் குளப்புக்கூறுகோளப்பட்டுப்
புடையும்பெயரகில்லேன்நான் போட்கன்மிதித்தவடிப்பாட்டில்
பொடித்தான்கோணர்ந்துபூசீர்காள் போகாவுயிரேன்னுடம்பையே. (129)

உலகத்து நடை ஒன்று இல்லா — உலகமரியாதை யொன்று மில்லாதவனும்.
கொடிய — கொடுமை யுள்ளவனும்,
கடிய — வன்மை யுள்ளவனுமான
நந்தகோபன் மகன் என்னும் — நந்தகோபரின் மகனெனப் பட்ட
திருமாலால் — ச்ரிய:பதியினாலே
குளம்பு கூறு கொளப்பட்டு — மிதித்தவிடத்திலே மிதிக்கப்பட்டு
நான்
புடையும் பெயரகில்லேன் — ஒரு பக்கத்திலும் அசைய மாட்டிலேன்.
போட்கன் — போக்கனான அவனால்
மிதித்த — மிதிக்கப்பட்ட,
அடிப் பாட்டில் — திருவடிபட்ட, இடத்தில் உள்ள
பொடி தான் — பொடியையாவது
கொணர்ந்து — கொண்டுவந்து
போகா உயிர் — வெளிப்போகாத உயிருடனிருக்கும்
என் உடம்பை — எனது சரீரத்தை
பூசீர்காள் — பூசுங்கள்.

நடையொன்றில்லா வுலகத்து என்பதற்கு உலக மரியாதைகளிலே ஒன்று மில்லாதவன் எனப் பொருள். பெரியோர்களுக்குமடங்காமல் காரணமில்லாமே பெண்ணை இவ்வாறு வருத்துபவர் உலகிலில்லை யென்றபடி. மரியாதையே குலைந்து கிடக்கும் உலகில் எனவு முரைப்பர். அப்போது, அவன் செய்வது தவறென்று ஒருவரும் சொல்ல முன் வரவில்லையே யென்ற வருத்தத்தா லிவ்வாறு சொன்னாளென்க. திருமாலால், 'அப்ரமேயம் ஹி தத் தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா' என்றபடி அவனுக்குப் பகைவரைப் பரிபவிக்கும்படி ப்ரபாவம் திருவினாலேற்பட்டது. இப்படி ப்ரபாவத்தைப் பெற்று இதற்கு துஷ்ப்ரயோகம் செய்கிறானவன் என்னையும் பகைவரிலெ சேர்த்து என வறிவிக்கத் திரு என்றதாம். குளப்புக்கூறு கோளப்பட்டு. குளம்பாவது கால்நடையின் நகமாயிருக்குமது. 'அது அடிபட்டவண்ணமிருப்பதால் அதன் தன்மையையும் பெற்று என்று தன்னைச் சொல்லுகிறாள். கூறு = தன்மை. குளப்புக் கூறு = குளம்பின் குணம்' என்பர். இப்போது கோளப்பட்டு என்ற விடத்தில் 'கொண்டு' என இருத்தல் தகும். 'கூற்றினால் ஸ்வீகரிக்கப்பட்டு' என வொருவிதம் சரிப்படுத்தல் வேண்டும். கூறு கொள்ளுதல் என்பதற்கு அமர்த்தலெனப் பொருளாகையால் குளம்பில் அமர்த்தப்பட்டு என்பதுமாம். குளம்பாவது குளப்படி; குளம்பால் மிதித்த விடம். துவைத்தவிடத்திலே துவைக்கப்பட்டு. முன்னே (4) 'காரேறுழக்க வுழக்குண்டு' என்றபடி கண்ணனென்னும் காரேறு குளம்பினால் துவைக்க. துவைக்கப்பட்டு என்றபடி குளம்பினால் கூறு கோளப்பட்டு = மிதிக்கப்பட்டு என்னனுமாம். போகாவுயிர். இவ்வளவு வருத்தப்பட்ட எனதுயிர் எப்போதோ போயிருக்கவேண்டும். போகாமலிருப்பதாலே ஒருக்கால் அவ்வடிப்பொடி பூசப் பெறப் பாக்கிய முளதோ வென நினைக்கிறேனென்றபடி. (6)

அவனுடைய அடிப் பொடியாலே என்னுடம்பைப் பூசினால் எனக்குள்ள தாபம் சிறிது தீரும். அழுக்கான உடம்பைக் கண்டு அனைவரும் அனுதபிப்பர். அவன்தனக்கும் நான் இந்நிலையிலும் அடிமை செய்யவே காத்திருக்கிறேனென்பது கண்கூடாகும். அந்தப் பொடிக்கும் அஹல்யையை அவள் கேள்வரான கௌதமரோடு சேர்த்து வைத்தது போல் என்னையும் என் நாதனோடு சேர்ப்பிக்கச் சக்தி யுண்டு. அதனால் அவனே அணுகுவான். அத்தருணத்திலே நீங்கள் சுறுசுறுப்பாகச் செய்யவேண்டுமதைச் சொல்லுகிறேன்; கேளுங்கள் என்கிறாள்—

7\. வெற்றிக்கருளக்கொடியான்தன் மீமீதாடாவுலகத்து
வெற்றவெறிதேபெற்றதாய் வேம்பேயாகவளர்த்தாளே.
குற்றமற்றமுலைதன்னைக் குமரன்கோலம்பணைத்தோளோ
டற்றகுற்றமவைதீர அணையவமுக்கிக்கட்டீரே. (130)

வெற்றி —ஜயமே யுடைய
கருளன் —கருடனை
கொடியான் தன் } த்வஜமாக வுடையனுக்கு
மீ மீது —மேலே
ஆடா —செல்லாத
உலகத்து —உலகத்திலே
பெற்ற தாய் } அவனைப் பெற்ற தாயானவள்
வெற்ற வெறிதே } மிகவும் அறிவின்மையாய்
வேம்பு ஏ ஆக } வேப்பங்காயாகவே யாகும்படி
வளர்த்தாள் — வளர்த்து விட்டாள்.

குற்றம் அற்ற } பிறந்தது முதல் ஒரு குற்றமு மில்லாத
முலை தன்னை -எனது ஸ்தனத்தை
குமரன் } நித்ய கௌமார முள்ள அவனது
கோலம் —அழகிய
பணை } கிளைகள் போன்ற புஜங்களைச் சேர்ந்த
தோளோடு —தோளுடன்
அற்ற குற்றம் அவை } அதற்கு ஏற்பட்ட குற்றங்களெல்லாம்
தீர —தீரும்படி
அணைய —பொருந்துமாறு அமுக்கி கட்டீர்.

நந்தகோபன் பெருமையென்ன! அவன் பேரைக் கேட்டாலே தெரியுமே. அவனுக்குமித்தகைய மகன் பிறந்தானே என்று அனைவரும் சொல்லும்படி யிவ்வளவு கொடியனானமைக்குக் காரணம் அவன்தாய் அவனை வளர்த்து வந்த அழகே யாம். அவள் ஏன் அங்ஙனம் வளர்த்தாளென்னில், பெற்ற தாயாகத் தன்னை நினைத்துக்கொண்டாள் அவன் இஷ்டப்படி விடுவதே அன்போடு வளர்ப்பதா மென்றெண்ணிவிட்டாள். இதற்கு மற்றொரு காரணமும் சேர்ந்தது. அதாவது—பல காலங்களிலே அவன் தன்னை வெற்றிக் கருளக்கொடியானாகக் காண்பித்ததே. உலகமே அவனுக்கு அடங்கியிருக்க வேண்டியதாலகையாலே இவனைப் பெற்ற பெருமையையே நினைத்து இப்படி வேப்பங்காயாக்கிவிட்டாள். இப்படி வளர்த்தாளே, அதனால் ஏற்பட்ட குற்றங்களெல்லாம் இனி வராமைக்கு நல்ல மருந்து வைத்திருக்கிறேன். அவன் தோளோடு என் ஸ்தனத்தைச் சேர்த்து அமுக்கிக் கட்டுங்கள். இது எவ்வித குற்றமுமற்றது. இதன் சேர்த்தியாலே அதன் குற்றமெல்லாம் தொலையும். இதன் மணமதற்கு மேறும். அதுவும் என்னை விட்டு வேறொன்றுடன் சேரும் குற்றமற்று விளங்கும். அப்போது வேம்பு கரும்பாமென்றபடி. மீமீது. மீ=மாட்சிமை. அவனுடைய செங்கோலுக்கு மேல் என்றபடி. வெற்ற வெறிது. வெறிது= அறிவின்மை. வீண் எனவும் பொருளுண்டு. அது மிகவாயிருப்பதைச் காட்ட இங்ஙனம் சொன்னது, 'கன்னங்கரேல்' என்னுமா போலே. குற்றமற்ற. குற்றமாவது ஸ்தனலக்ஷணங்களில் ஏதேனும் குறைவும், வேறொருவனை நினைத்துக் கிளர்த்தலும். பணை கிளை. அற்ற குற்றமவை தீர. எம்பெருமானோடு சேர்ந்த பிறகு முன் அவனைப் பிரிந்ததாலுண்டான வியஸனங்கள் கூட மறந்துவிடும். அந்த வியசனம் உடமாடினால் அவனிடம் ப்ராதிகூல்ய புத்தியும் பிறக்கும்படியாம். பரமானந்த ரூபத்தைப் பார்த்தவுடன் அதிலுள்ள ஆனுகூல்யத்தின் சிறப்பாலே சிறிதும் ப்ராதிகூல்யம் பிறவாது. அதுவே வியஸனங்கள் பிறவாதபடி செய்

யும். முக்தர்களுக்குப் பழைய விலைவை நினைத்துத் துக்கம் வாராமை யென்ற வகையு மொன்றுண்டு. (7)

இவ்வளவு நீங்கள் செய்துவிட்டால் என் துக்க மெல்லாம் தீரும். அவன் பணைத்தோளோடு என் குற்றமற்ற முலையை யமுக்கிக் கட்ட உங்களா லாகாதபடி அவன் இங்கு வந்தபிறகும் நடந்துகொண்டானாகில் அவனைக் கண்டவுடனே கூடுமானதை நான் செய்துகொள்வே னென்கிறாள்—

8. உள்ளேயுருகிநைவேனை யுளளோ விலளோ வென்னாத
கொள்ளைகொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக்கண்டக்கால்
கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கைதன்னைக்கிழங்கோடும்
அள்ளிப்பறித்திட்டவன்மார்வி லெறிந்தென்னழலைத்தீர்வேனே. (131)

உள்ளே	—அகத்தினுள்ளேயே
உருகி	—கரைந்து
நைவேனை	—வருந்து மென்னைப் பற்றி
உள்ளோ இலளோ என்னாத	அவள் உயிரோடு இருக்கிறாளோ இல்லையோ என்று கவலைப்படாதவனும்,
கொள்ளை கொள்ளி	எனது உடல் புலன் பொருளெல்லாம் களவாகவே கொண்டவனும்,
குறும்பனை	—தீம்பனும்,
கோவர்த்தனனை	ஆ நிரையைப் போஷிப்பவனுமானவனை
கண்டக்கால்	நான் கண்ணாலே கண்டுவிட்டேனாகில்,
கொள்ளும்	—தான் பெறப்போகும்
பயன்	—பலன்
ஒன்று இல்லாத	சிறிது மில்லை யென்றவாறுள்ள
கொங்கை தன்னை	ஸ்தனத்தை
கிழங்கோடு	—வேருடன்
அள்ளி	—கையில் கொண்டு
பறித்திட்டு	—நன்றாகப் பிடுங்கியெடுத்து
அவன் மார்வில்	அவனுடைய திருமார்விலேயே
எறிந்து	—போட்டுவிட்டு
என் அழலை	—எனது தாபத்தை
தீர்வேன்	—போக்கிக்கொள்வேன்.

கோவர்த்தனனை. கோக்களை விருத்திபண்ணுகிறவனென்ற பொருளிலே இச் சொல் கண்ணனைச் சொல்வதாம். இனி, கோவர்த்தனமலைக்கு அந்தர் யாமியாயிருந்து அவன் செய்த நன்மைகளை யெல்லாம் குறிப்பது மாம். இவ்வளவு உபகாரம் செய்பவனென்று நம்பி அவனிடம் உள்ளே உருகி நைவேனை யவன் விசாரிக்காமலே யிருந்தால் இனி எதற்கிவ்வுடல் என்றபடி. கொள்ளு மித்யாதி. இத்தனை நாள் பயன் பெறாதிருப்பினும் இனியாவது பெறு மென்று தெரிந்தால் வைத்திருக்கலாம். அது இல்லை யென்றால் எதற்கிது? கிழங்கோடே. கிழங்கிருந்தால் ஒருக்கால் மீண்டும் கிளர்ந்து என்னை வாதிக்கும். மேலும், என்னை மீறி யவனை யணையக் குதுகலிக்குமது கிழங்கோடு அறியப்பட்டால் ஒருக்கால் அவனுடன் சேர்ந்திருக்கப் பெறுமாகில் இருக்கட்டும் என்கிற நோக்கத்தாலே கிழங்கோ டென்கிறாள். கிழங்காவது கீழுள்ள பாகம். அவன் மார்விலெறிந்து. என்னிடம் அவன் ப்ரீதி வைக்காமலிருப்பதாலே எனது கொங்கையை நோக்காமலிருக்கிறான். கொங்கையோ எனக்கடங்காமல் அவனிடம் போகக் கிளறுகிறது. எல்லாம் கொள்ளைகொண்டதுபோல் இதையும் அவனே கொண்டிருந்தால் என் துக்கம் தீர்ந்திருக்கும். இனி நானாவது பறித்து என் ஸம்பந்த மற்றதாகச் செய்து அவன் மேலெறிந்து விடுகிறேன். 'ஸ்தநௌ சாவிரளௌ பீநௌ மமேமௌ மக்நசூசுகௌ' என்று சீதைப்பிராட்டி நினைத்தாற்

போலே நானும் இக்கொங்கை இவனைப் பெறுமென்று நினைத்தது வீணான பிறகு இது எதற்கு? பறித்தபிறகு மிதை அவன் மார்விலேயே யெறிய வேண்டும். சிறுமானிடவரைக் காணில் நாணுமிதை வேறொருவன் பார்க்கும் படி வெளியிலே யெறிவேனோ? அவனுடைய வஸ்துவை அவன் மார்விலெறிந்து விட்டால் பிறகு அவன் எவ்வாறாவது செய்துகொள்ளட்டு மென்றபடி. (8)

கோதாய்! நீ கூறுவது விந்தை யாயிருக்கிறது. உலகில் ஒவ்வொரு வரும் உடலை விட்டாவது உயிரைப் பெருமானிடம் சேர்க்க ப்ரயத்னம் செய் கின்றனர். நீ உனது உயிரை ஒதுக்கிவைத்துக்கொண்டு உடலை யவன் மேலெறிந்து அழல் தீர்க்க விரும்புகிறாய். இது வேண்டாம். வைராக்ய முள்ள நீ விசேஷமாகத் தவம் புரிந்து உன் உயிர் அவனைச் சேருமாறு செய்து கொள்ளலாம். 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே' என்றானே அவன் என்றனர் அன்னைமார். அதன்மேல் இந்த உடலுடன் அவனைச் சேரவேண்டுமென்ற மனவுறுதியை யறிவித்துக்கொள்ளுகிறாள்—

9. கொம்மைமுலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர்குற்றேவல்
இம்மைப்பிறவிசெய்யாதே இனிபோய்ச்செய்யும்தவந்தானென்?
செம்மையுடையதிருமார்வில் சேர்த்தானேலும்ஒருஞான்று
மெய்ம்மைசொல்லிமுகம்நோக்கி விடைதான்தருமேல்மிகநன்றே (132)

கொம்மை முலைகள் — திரண்டுள்ள ஸ்தனங்கள்
இடர் தீர — வேதனைபோமாறு
கோவிந்தற்கு — கண்ணனுக்கு
ஓர் — ஏதேனுமொரு
குற்றேவல் — சிறு கைங்கர்யத்தை
இம்மை பிறவி — இந்தப்பிறவியிலே
செய்யாதே — செய்யாமல்
இனி போய் — இதற்குமேல் ஓரிடம் சென்று
செய்யும் — செய்யவடுக்கும்
தவம் தான் என் — தவமென்பதூர் எத்தகையதாம்?
ஒரு ஞான்று — ஒரே நாள்
செம்மை உடைய — செவ்வையா யிருக்கும்
திருமார்வில் — திரு சேர்ந்த மார்விலே
சேர்த்தானேலும் — கொங்கைகளைச் சேர்த்துக் கொண்டாகிலும்
முகம் நோக்கி — என் முகத்தைப்பார்த்து
மெய்ம்மை சொல்லி — எப்பொழுதும் சேர்ந்திருக்க முடியாத காரணத்தை உள்ளபடி கூறிவிட்டு
விடை தான் தருமேல் — போய் வா என்று அனுமதி அளித்தானாகில்
மிக நன்று — சாலவும் சிறந்ததாம்.

தவம் புரிவது பலனைப் பெறுவதற்காக. அப்பலன் இம்மையில் கிடைக் காததாகில் மறுமையில் அது வேண்டப்படும். சில பலன்களிலுள்ள ஏற்றத் தாழ்வும் ஆராயப்படவேண்டும். மறுமையிலே பெறவேண்டும் ஸ்வர்காதி பலன்கள் நமக்கு வேண்டா. எம்பெருமானுடைய கைங்கரியமொன்றே நாம் கோருவது. அது இங்குமங்கும் எங்கும் பெறக்கூடியது. இங்குப் பெற விருக் கும் கைங்கரியத்தை விட்டு வேறிடம் போகவேண்டுவதெதற்காக? எரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதென்? இங்குச் செய்யவியலாதென்னில், என் அதற்குத் தகுமாறு பாடு படலாகாது. அதை விட நமக்கு வேண்டுவ தென்? அக்கைங்கர்யந்தன்னிலும் கொம்மைமுலைகளிடர் தீரக் குற்றேவல்

செய்வதே இப்போதே வேண்டுவது. இல்லாதபோது, விவாஹாதிகளை விட்டு வழிதப்பி நிற்கிறதாக நினைத்து எனக்கும் என்னு ஞங்களுக்கும் நிந்தை நடக்கிறது. இதனைத் தீர்க்கவேண்டும். கோவிந்தனும் கனவில் வந்து மணந்து கொண்டான். இதை உங்களுக்கு ரூபிக்கவேண்டும். ஆகையால் ஒரு நாளாவது அவன் வந்து சேரவேண்டியது அவசியமாயிற்று.

இதற்குச் செய்யவேண்டும் தவம் யாது? தைத்திரீயோபநிஷத்தின் முடிவிலே, ஸத்யம் தொடக்கமாகப் பல தவங்களையெடுத்து, மாநஸம் என்ற பக்தி யோகத்தை அவற்றிற்கு மேல் கூறி, அதற்கும் மேலே ந்யாஸமெனப்படும் ப்ரபத்தியைப் பணித்து, அதனையே உயர்ந்த தவமாகவும் தேவரஹஸ்யமாகவும் துதித்தது. அந்த ப்ரபத்திதன்னிலும், 'ஸித்திர்பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம். ந ஸம்சயோத்ர தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்' என்கிற கணக்கிலே நேரில் தானே எம்பெருமானைச் சரணமடைவதை விடப் பெரியோர் மூலம் சரணமடைவது சிறந்ததெனவாராய்ந்து, 'விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே' என்று நான் தகப்பனாரைப் போன்றோர் மூலமாகவே அவனைக் காணக் கருதியுள்ளேன். என் தகப்பனாருக்கு மேம்பட்ட பெரியோருமில்லை. அவர் செய்யுமிவ்வல்ல பரிசுக்கு மேம்பட்ட தவமுமில்லை. இது இம்மையிற் பயனை யளிக்கவேண்டும். ஆகையால் இம்மைப் பிறவி செய்யாதே இனிப் போய் செய்யும் தவந்தானென்? என்றனள்.

இனிப்போய். இப் பிறவியிலே இத் தருணத்தை விட்டு இதன் பிறகும் வேறு பிறவியிலுமென்றபடி. விடைதான் தருமேல்மிக நன்றே. ஒரு நாள் அனுபவித்தாலும் உங்களுக்கும் மனத்துக்கு ஆறுதல் உண்டு; கொங்கையின் குதுகலிப்பும் பயன்பெற்றதாம். இப்பிறவி வீணாகவில்லை. ஆகையால் வெகு நாள் சேர்ந்திருந்து விடை தரவேண்டுமென்பதில்லை. ஒரே நாள் சேர்ந்தவனாயிருக்கும்போதே விடைதந்தாலும் நன்றே. சொல்லாமல் கொள்ளாமல் போவது யுக்தமன்று. மெய்யே சொல்லி முகம் நோக்கிப் போனால் அதுவே போதும். சேர்ந்தவன் மீண்டும் வருவானென்று எதிர்பார்த்து மோசம் போவதைக்காட்டிலும், விடை தந்துவிட்டால் விசாரமின்றி அவனை விடாமலிருக்க வேறு பிறவி பார்த்துக்கொள்ளலாமென்றபடி. மேலும் மதுரை வந்தபிறகு மணம்புரிந்த பெண்களை முழுப்பொழுதும் கூடவே வைத்திருந்தான். தன்னையே நம்பியிருந்த ஆய்ச்சிறுமிகளைச் சில நாள் சேர்த்திருந்து விடைகொடுத்துவிட்டான். இப்படி விட்டிருப்பதே நலமென்று குருக்ஷேத்திரத்திலே ஸந்தித்தபோது அவனே சொன்னான். அது போல் இதே மிக நன்றாகுக என்றதாம். மிக நன்றே. என்றது தனக்குச் சிற்றின்பத்திலே நோக்கில்லையென விளக்கும். சேர்த்தானேலும் என்ற உம்மையானது ஒரு நாள் சேர்த்தானேலும் எனக் கூட்டுதல்பற்றி வந்ததாம். இங்கு, 'சேர்த்தானேல் நன்று; இல்லையாகில் சேராமலே ஒரு நாள் மெய் சொல்லி விடை தந்தால் மிக நன்று' எனவும் இப்பாசுரத்தைப் பிரித்து யோஜிப்பர். அப்போது சேர்த்தானேலும் என்ற உம்மையை, தருமேல் என்ற விடம் கூட்டவேண்டும். (9)

இப்படி எம்பெருமானுடையவும் அவனுடைய வஸ்துக்களினுடையவும் சேர்க்கையே தனக்கு தாரகபோஷகபோக்யங்களாக நினைத்து அவற்றில் வேட்கையுற்று அருளி இத்திருமொழியின் பலனைப் பணிக்கின்றனள்—

10. அல்லல்விளைத்தபெருமானையாயர்பாடிக்கணிவிளக்கை
வில்லிபுதுவைநகர்நம்பிவிட்டுசித்தர்வியன்கோதை
வில்லைத்தொலைத்தபுருவத்தாள்வேட்கையுற்றுமிகவிரும்பும்
சொல்லைத்துதிக்கவல்லார்கள்துன்பக்கடலுள்துவளாரே. (133)

வில்லை தொலைத்த — தனுஸ்ஸை யழித்த = வில்லுக்கு மேலழகிய
புருவத்தாள் — புருவமுடையவளும்,
வில்லி புதுவை நகர் — ஸ்ரீவில்லிபுத்தூரில்
நம்பி — பூர்ணரான
விட்டுசித்தர் — ஸ்ரீவிஷ்ணுசித்தரென்ற தகப்பனாராலே
வியன் — பெருமையடைந்தவளுமான
கோதை — ஆண்டாள்
அல்லல் — துன்பத்தை
விளைத்த — உண்டாக்கின
பெருமானை — பரமபுருஷனும்
ஆயர்பாடிக்கு — இடையர் சேரிக்கு
அணி விளக்கை — மங்கள தீபமுமான கண்ணனிடத்திலே
வேட்கை உற்று — அளவற்ற ஆசைகொண்டு
மிக — விசேஷமாக
விரும்பும் சொல்லை — சொல்லி விரும்பின இத் திருமொழியை
துதிக்க வல்லார்கள் — தத்துவமுணர்ந்து ஸ்தோத்திரம் செய்ய ஸாமர்த்தியமுள்ளவர்கள்
துன்பம் கடலுள் — அல்லல் மோது மிக்கடலிலே
துவளார் — துவண்டிருக்கமாட்டார்கள்.

ஆயர்பாடிக்கணிவிளக்கானவன் எனக்கு அல்லல் விளைத்தது நான் இந்நிலைக்கு வரவேண்டுமென்று கருதிதான் போலும். நானும் என் புருவத்தில் அவன் வசப்பட்டானென்று அறிந்தேனாகிலும் நம்பிவிட்டுசித்தராலன்றி இப்பெருமையை நான் பெறமாட்டிலேனெனத் தெளிந்து தாய்மார்மூலம் அன்னையாரின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரமானேன். இப்படி நான்பெறவேண்டும் பலனுக்குக் கடைசியில் காரணமாய் நின்றதை விளக்குமித் திருமொழியையே நான் விசேஷமாக விரும்புவது. இவ்வுண்மையறிந்து இதை வல்லார்க்கு அல்லலில்லையென்றபடி. தொலைத்த என்றவிடத்தில் துலைத்த எனவும் பாடமாம்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ப்ரபந்தரக்ஷையில் நா. தி. 13. கண்ணனென்னும் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

பட்டிமேய்ந்து. 14.

(கண்ணனைக் கண்டுகொண்டது.)

‘நல்ல வென் தோழி நாகணை மிசை நம் பரர் செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென்’ என்று கண்ணனைக் காணத் தானோர் உபாயம் அநுஷ்டிப்பதைக் கைவிட்டு, ‘வில்லிபுதுவைவிட்டுசித்தர் தங்கள் தேவரை வல்லபரிசு வருவிப்பரேலது காண்டுமே’ என்று தன் தகப்பனாரின் பரிசினால் அவனைக் காணவேண்டுமென்று உறுதிகொண்டு, அவனைக் காண்பதென்பது அவனுள்ள இடத்திற்குத் தான் போவதாலாவதா, அவன் தன் இடத்திற்கு வருவதாலாவதா என வாராய்ந்து, மதுரை முதலான இடங்களிலெங்காவது உய்த்துமின் என்று வேண்டி, அது கூடாதென்று தெரிந்தவுடன் அவனை யிங்குத் தானும் கண்டு தன் உற்றார் சுற்றார் கலக்க மின்றி தெளிந்திருக்க வழி தேடுகின்றவளாய்ப் பெரியாழ்வாரின் வல்ல பரிசிலே யூன்றி நின்றாள். பெரியாழ்வாரும் பரிந்து உபசரிக்கும் பரிஜனங்கள் மூலமும், நேரிலும் அவள் பரிதாப நிலைமையைக் கண்டு அவனை யிங்குத் தம் பிரபாவத்தாலே வரவழைக்கக் கருதியருளினார். இதனைக் குறிக்கவே, ‘விட்டுசித்தர்வியன்கோதை’ என்றது. அவருள்ளத்திற்கிணங்கிக் கண்ணனும் ஸபரிவாரமாகத் தன் ப்ருந்தாவன விபவத்தோடே காட்சியளித்தான். அப்போது தான் கண்டுகளித்துத் தன் பக்கலுள்ள தோழிமார் முதலானோரிடம் அதை யறிவிக்கும் தருணத்திலங்கு நிகழ்ந்த காட்சிகளை யறிவிக்க ஆடிப்பாடுமாறு அமைந்தது கடைத்திருமொழி.

இத் திருமொழி முன்னீரடிமுடிவில் **கண்டீரே** என்று கேட்பதும், பின்னீரடி முடிவில் **கண்டோமே** என்று கண்டதாக மறுமொழி கூறுவதுமா யமைந்துள்ளது. இப் பாசுரம் முழுதும் ஆண்டாளுடையதானாலும், சிலர் வினாவிடைகளுக்கு இது அநுவாதமா, இவளுடைய வினாவிடைகளேயாமா, வினாவிடைகளிலொன்று மட்டுமிவளுடையதாய் மற்றொன்று பிறரின் சொல்லுக்கு அநுவாதமென்பதா என ஆராய்தல் இடம் பெறுகிறது. இம்மூன்று பக்ஷங்களில் முதல் பக்ஷம் பெரியவாச்சான்பிள்ளையுரை யாதரித்ததாகும். இவளுக்கு ஆற்றாமை மிகவாயிருந்தும் அவன் பரபக்திபர்யந்தமாகப் பிறப்பித்து முகங்காட்ட வேண்டுமென்று தாழ்க்க, பிறகு ஆற்றாமை கரைபுரண்டிட, பெறில் ஜீவிப்பது, பெறாவிடில் முடிவது என்ற நிலைபெற்று, நிர்ப்பந்தித்தாவது பெறும்படி யாகவே அவன் அவாவறச் சூழ்ந்தான். இப்படிப் பிறந்த பக்தியும் பெற்ற பேறும் ஓர் ஆச்ரயத்தில் இட்டுப் பேசவொண்ணாதபடி அளவிறந்திருந்ததாலே, **காண்டீரே** என்று கேட்கிறவர்கள் பாசுரத்தாலும், **கண்டோமே** என்று மறுமொழி கூறுபவரின் பாசுரத்தாலும் வெளியிடப்படுகிறன. பிருந்தாவனத்தை யிங்கு வருத்

திருப்பதாலே அங்குச் சில ஆயச்சிறுமிகள் தம் தோழிகளை கண்ணனைக் கண்டீரோ என்று கேட்பதாகவும், கண்டவர் தாங்கள் கண்டவண்ணம் கூறுவதாகவும் வைத்து இவ்வாறு அருளிச்செய்யப்பட்டது என இதனால் விளங்கும்.

இரண்டாவது பக்ஷமாகில் இவள் கண்முன்னே தோற்றமளிக்கும் கண்ணனைக் கண்டு தோழிகளைப் பார்த்து, 'நீங்களும் கண்டீரோ' என்று கேட்டுவிட்டு, அடுத்த ஈரடிகளாலே மீண்டுமவனைக்கண்டுகொண்டே அந்ததந்த ஸமயத்தில் அவன் அளிக்கும் தோற்றத்தைப் பின்பற்றித் தன் அனுபவத்தை, கண்டோமே என்று தானே வெளியிடுகிறாளென்றதாம். மூன்றாவது பக்ஷமாகில்—கண்ணனைக் கண்டு அவனுடைய வஸ்துக்களைக் கொணர்ந்து என் துயரத்தைத் தீர்க்க வேண்டு மென்றேனே, கண்டீரோ வென்று இவள் தோழிகளைக் கேட்பதாகவும், இவள்நிலையைக் கண்ட கண்ணன் அங்கே தோழிகளுக்கு விருந்தாவனத்துடன் காட்சியளித்ததாலே அவர்கள் கண்டதாகக் கூறுகின்றன ரென்றுமுரைக்கலாம். அல்லது நான்மட்டும் கண்ணனைக் காண்கிறேனா? நீங்களும் கண்டீர்களா? நான் கண்ணனால் கைப்பற்றப்பட்டவளென்பது இப்போதாவது உங்களுக்கு எல்லோர்க்கும் விளங்குமா என்ற கருத்துடன் கேட்கிறாளென்றும், நாங்களும் இவ்வாறு இவ்வாறு காண்கிறோம் என்று அவர்கள் சொன்னதை மேலே அனுவாதம் செய்கிறாளென்றும் கொள்ளலாம். அர்ஜுநனுக்கு விச்வரூபம் காண்பித்தவன் ஒரு காரணமாக தேவாதிகளுக்கு அப்போது அந்த ரூபத்தைக் காண்பித்தது போல், இவள்விஷயத்திலே எல்லோரும் உண்மையான ப்ரிதிபத்தியை வைத்து இவள் இஷ்டத்திற்குத் தக்கவாறு நடந்துகொள்ளும்படி இவளுடைய மேன்மையை வெளியிடத் திருவுளம் கொண்டு தன்னை யிவளுற்றார்சுற்றாரும் காணும்படி செய்துகொண்டானென்றதாயிற்று. பெரும்பாலும் பாசுரங்களில் முதலீரடி நடுவிலே என்னை யென்றாற்போல் ஆண்டாளைக்குறிக்கும் சொல் உள்ளதும், மேலடிகளில் அத்தகைய சொல் இராமையும் இம் மூன்றும் பக்ஷத்திற்கு அனுகூலமாகும். ப்ருந்தாவனத்தே கண்டோமே என்று பின்வாக்யத்தில் உள்ளதால் இவர்கள் உண்மையில் பிருந்தாவனத்திலுள்ளாரல்லரெனத் தெரிகிறது. கண்ணனைக் கண்டீர்களோ என்று அவள் கேட்டதற்கு, 'கண்ணனை மட்டுமோ நாங்கள் காண்கிறது; அவனெழுந்தருளியிருக்கும் ப்ருந்தாவனத்தையும், மற்றுமங்குள்ள விசேஷங்களையும் காண்கிறோமே யென்றனர் தோழிமுதலானோர். கீழே 'அதுகாண்டுமே' என்றவிடத்தில் தாங்கள் எல்லாரும் காணத் தான் விரும்பியது விளங்கும். நான் செய்யும் வகையால் நான்மட்டும்கூடக் காண முடியாது. விட்டுசித்தர்பரிசால் நாங்களெல்லோரும் கூட அதனால் காண முடியுமென்றங்கே பன்மைக்குக் கருத்தாம். (பெரியாழ்வார் திருமொழியிலே கதிராயிரமிரவியில் (4–1.) 'கண்டாருளர்' என்றருளிச்செய்வது வேறொருவகையிலாகு மென்பதை அங்கே உரையில் கண்டுகொள்வது—.)

1. பட்டிமேய்ந்தோர்காரேறுபலதேவற்கோர்கீழ்க்கன்றாய்
இட்டீறிட்டுவிளையாடி இங்கேபோதக்கண்டீரே.
இட்டமானபசுக்களை யினிதுமறித்துநீரூட்டி
விட்டுக்கொண்டுவிளையாட விருந்தாவனத்தே கண்டோமே. (134)

ஓர்	—ஒப்பற்ற	இட்டமான	—இஷ்டமான பசுக்களை
கார் ஏறு	—கரிய வ்ருஷபமானது	இனிது	—ப்ரியமாய்
பட்டி மேய்ந்து-களவாக மேய்ந்து		மறித்து	—மடக்கி
பலதேவற்கு—ப்லராமனுக்கு		நீர் ஊட்டி	—தண்ணீர் குடிக்கச்செய்து
ஓர்	—ஒரு	விட்டுக் கொண்டு	மேயவிட்டு
கீழ் கன்றாய்—பின்பிறந்த கன்றாக ஆகி		விளையாட	—விளையாடுவதாக
இட்டீறிட்டு	—செய்து முடித்துக் கொண்டு	விருந்தா வனத்தே	ப்ருந்தாவனத்திலே
விளையாடி	—விளையாடுகின்றதாய்		கண்டோம்.
இங்கேபோத	—இங்கே வர		
கண்டீரே.	—காண்டீர்களா ?		

இட்டீறிட்டு என்பதற்கு ‘போக்கு விட்டு’ என்ற கருத்து முன்னோர் உரையில் தோற்றுகிறது. இட்டு ஈறு இட்டு எனப் பதப்பிரிவாகும். வேண்டினமட்டும் இட்டு அதன் முடிவிலும் இட்டால் அப்போது போக்குவிடும் படியே யாமன்றோ? இடுதல் = அளித்தல், செய்தல் என்றபடியாம். ஈறு = முடிவு. நினைத்ததையெல்லாம் செய்துமுடித்து எனவும் பொருள்படும். பலவகையிலு மிதை விரிக்கலாம். ஜகத்வ்யாபாரலீலனுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களும் இங்கே தோற்றும். இங்கே போத. நான் உள்ளவிடம் அவன் வந்திருப்பது உங்களுக்குக் காணக்கூடுகிறதா என்றது கேள்வி. இங்கே என்று கேட்டிருக்க, விருந்தாவனத்தே என்ற மறுமொழியானது விருந்தாவனமும் இங்கே காணலாகிறதென்பதை யறிவிக்கும்.

நாயிகையாயிருப்பாளுக்கு நாயகன் தாமதித்து நெருங்கும்போது ப்ரணயரோஷத்திற்கேற்பச் சில சொற்கள் வரும். இது ஒவ்வொரு பாசுரத்திலும் முன்னடிகளிலே தெளியலாகும். ஆகையால், ‘கற்றினம் மேய்க்கவு மேய்க்கப் பெற்றான்’ என்றவாறெல்லாம் எம்பெருமானிடம் வெகுமதிப்பு வைத்தவள் இங்கே சிறிது குறைத்துக் கூறுவது பொருந்தும். இங்கும் உட்கருத்து அவனுடைய மேன்மையைப் பாராட்டியிருப்பதையே அறிவிக்கும். ஆக முன்னீரடிகளுக்குப் பொருள் இரு வகையாம். எங்கும் களவாக மேய்ந்து அக்குற்றங்களே கருநிறமாக வடிவு கொண்டாற்போலுள்ள காரேறு இது. இதற்கு மேல் பலமிருந்தும் பலதேவன் தன் தேவத்தன்மைக்குக் குறை வாராத படி விளங்கவில்லையோ ? அவற்குக் கீழ்ப்பட்டிருந்தும் இந்த ஏறு செய்யும் அநியாயம் சொல்லுக்காவதொன்றன்று என்றவாறு முதற் பொருள். பட்டி மேய்ந்தாலும் குற்றம் அண்டாதபடி ஓர் ஒப்பற்ற ஏறு. தனக்குக் கீழ்ப்பட்டாரையும் தனக்கு மேலாக்கும்படி ஆச்ரிதரை அபிமானிப்பவனிவன் என்றது உட்கருத்து. முன் ச்ரத்தை யிராமலிருந்த தாய்மார்கள் அவனைக் கண்டு வெகு மதிப்புடனிருக்க அதன்படி பிறந்தனவை மேலீரடிகள். இங்ஙனம் ஒவ்வொரு பாசுரத்திலும் காண்க. (1)

2. அனுங்கவென்னைப்பிரிவுசெய்தாயர்பாடிகவர்ந்துண்ணும்
குணுங்குநாறிக்குட்டேற்றைக்கோவர்த்தனனைக்கண்டீரே
கணங்களோடு மின்மேகம்கலந்தாற்போல(ல்)வனமாலை
மினுங்கநின்றுவிளையாடவிருந்தாவனத்தேகண்டோமே (135)

அனுங்க —வருந்தும்படி
என்னை பிரிவுசெய்து } என்னைப் பிரித்துவிட்டு
ஆயர்பாடி —சேரியிலுள்ள இடை சாதியை
கவர்ந்து —வசீகரித்து
உண்ணும் —வெண்ணெயளைந்துண்பவனும்,
குணுங்கு —அவ்வெண்ணெயளைந்த குணுங்கினால்
நாறி —நாற்றமுள்ளவனும்,
குட்டேற்றை —சிறுவிருஷபம் போன்றவனுமான
கோவர்த்தனனை } காலிகளை வளர்ப்பவனை
கண்டீரே. —கண்டீர்களோ?
மின் —மின்னலானது
மேகம் —மேகத்துடன்
கலந்தால் போல } சேர்ந்திருந்த வண்ணம்
வனமாலை —வனமாலையானது
மினுங்க —ப்ரகாசிக்குமாறு
நின்று —அழகாய் நின்றுகொண்டு
கணங்களோடு } தன்னேராயிரம் பிள்ளைகளோடு
விருந்தாவனத்தே } விருந்தாவனத்திலே
விளையாட —விளையாடும் தருவாயில் கண்டோம்

குணுங்கு. 'வெண்ணெயளைந்த குணுங்கும்' (பெரியா. 2–4–1.) என்றவிடத்திற் காண்க. குணுங்கைச் சொன்னதற்கேற்ப உண்ணும் என்பதை வெண்ணெய் தயிர் முதலானவற்றை எனவுரைத்தல் தகும். ஆயரைக் கவருவதாவது, அவர்களே வசப்பட்டு இவன் உண்பதை தடுக்காமலிருந்துவிடச் செய்வதாம். கணங்களோடு விளையாடுவது மிவ்வாறும். ஆயர்பாடியுண்ணுமென்பதற்கு ஆயச்சிறுமிகளை யனுபவித்தல் பொருளென்பது முண்டு. குட்டேற்றை. குட்டையேறு என்பது குட்டேறென விகரித்ததுக்கிடக்கிறது. (2)

3. மாலாய்ப்பிறந்தநம்பியைமாலேசெய்யும்மணாளனை
ஏலாப்பொய்களுரைப்பானை யிங்கேபோதக்கண்டீரே
மேலால்பரந்தவெயில்காப்பான் விநதைசிறுவன்சிறகென்னும்
மேலாப்பின்கீழ்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (136)

மால் ஆய் பிறந்த } ஆய்ச்சிகள் போன்றவரிடமிருந்த வ்யாமோஹமே வடிவாயவதரித்த
நம்பியை —குணபூர்ணனும்,
மால் ஏ செய்யும் } பிறர்க்குத் தன்னிடம் வ்யாமோஹத்தையே பிறப்பிக்கும்
மணாளனை —மணவாளனும்,
ஏலா —ஏற்கத்தகாத
பொய்கள் —அஸத்யங்களை
உரைப்பானை—சொல்லுகின்றவனுமான கண்ணனை
இங்கே போதக்கண்டீரோ.
மேலால் —மேலே
பரந்த —பரவின
வெயில் —சூரியதாபத்தை
காப்பான் —தன் மேல் விழாமே தடுப்பதற்காக
விநதை —விநதை யென்பவளின்
சிறுவன் —சிறு குமாரனான கருடனின்
சிறகு என்னும்-சிறகெனப்படும்
மேலாப்பின் கீழ் } மேற்கட்டியானது மேலே வர அதன் கீழே
வருவானை —வருமவனை
விருந்தாவனத்தே கண்டோம்.

மாலாய்ப்பிறந்த என்று அவனுக்குள்ள வியாமோஹமும், மாலே இத்யாதியால் அவன்மேல் பிறர்க்குள்ள வியாமோஹமும் சொல்லப்பெற்றன. ஏலாப்பொய்கள். பொய் சொன்னாலும் பொருந்தச் சொன்னால், 'இவன் என்ன நினைத்தானோ, அதைச் சொல்லுகிறான். இவன்மேல் குற்றமில்லை' யென்னலாம். தென்னைமரமேறுவானொருவனை, ஏன் ஏறுகிறு யென்று கேட்டால், 'கன்றுக்குப்

புல் கொண்டுவர' என்றானும். இதனைக் கேட்பார் இவன் தேங்காய் பறிக்கப் போனானென்பதையே திடப்படுத்திக்கொள்வார்களா, இவன் சொன்னதை நம்புவார்களா? அவனுக்கு அண்ணன் இக்கண்ணன். பானையில் என்ன கைவிட்டுப் பார்க்கிறா யென்றால், கன்றுகுட்டியைத் தேடுகிறேனென்பான். கண்ணனே திருடத் தென்னைமரமேறினானாகில், அங்கே புல் ஏதென்று கேட்ட போது, பனை, தென்னை யெல்லாம் த்ருணவ்ருக்ஷ மென்கிறார்களே. புல் இல்லாம லிருக்குமா என்று கூடக் கூறுவான். அது போல், கன்று பானையில் இருக்குமோ என்று வினவினால், நான் சிறிய பானையில் தேடவில்லையே; இது குகைபோலிருக் கிறதே யென்பான். ஒரு சமயம் என்னை விட்டு இப்படி வதைக்கலாமோ என்றால், விட்டகலாமல் என் மார்பிலே இருக்கும் மங்கை இவ்விதம் உன்னை ஹிம்ஸிக்கும்படியே சொன்னவண்ண மிருக்கிறாள். நான் என் செய்வது என்று கூறுகிறான். இதனை உலகும் ஏற்குமோ என்றவாறு ஆராய்க. விநதை சிறுவன். கருடனுக்கு அருணனென்ற அநூரு அண்ணனானபடியாலே இவனைச் சிறுவனென்கிற தென்னலாம். ஒரு சமயம் கச்யபரின் பத்னியான விநதை, கத்ரூ என்ற சக்களத்தியால் வெயிலில் வதைக்கப்பட்டபோது இவன் சிறகாலே அவளுக்கு வெயில் காத்தான். அதுபோல் கண்ணனுக்கும் காத்ததெனத் தோற்ற, 'கருடன்' எனனுமே விநதைசிறுவன் என்றதெனவும் கொள்க. (3)

4. கார்த்தண்சமலக்கண்ணென்னும் நெடுங்கயிறுபடுத்தியென்னை
ஈர்த்துக்கொண்டுவிளையாடுமீசன்றன்னைக்கண்டீரே.
போர்த்தமுத்தின்குப்பாயப்புகர்மால்யானைக்கன்றேபோல்
வேர்த்துநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (137)

கார் —அழகிய
தண் —குளிர்ந்த
கமலர் —செந்தாமரை போன்ற
கண் என்னும்—திருக்கண் எனப்படும்
நெடு கயிறு —நீண்ட கயிற்றுக்கு
படுத்தி —அகப்படுத்தி
என்னை
ஈர்த்து —இழுத்து
கொண்டு } எனக்குள்ள வற்றை யெல்லாம் கொள்ளை கொண்டு
விளையாடும் —(இந் நிலையைப் பார்த்து) உவக்கும்

ஈசன் தன்னை } ஸ்வாதந்த்ர்யச் செருக்குடையவனை
கண்டீரே.
வேர்த்து —முத்துபோல் வியர்வை புற்ற
போர்த்த —தன் மேல் போர்க்கப்பட்ட
முத்தின் குப்பாயம் } முத்தினாலான போர்வை புடையதும்
புகர் —தேஜஸ் உடையதும்
மால் —பெரிதுமான
யானைக் கன்றுவ போல் நின்று } யானைக் குட்டியைப் போலே விளங்கி
விளையாட —விளையாடுமாறு
விருந்தாவனத்தே கண்டோம்.

கார் என்பதற்கு மேக மென்ற பொருளைக் கொண்டு மேகத்திலே தாமரை பூத்தாற் போலுள்ள கண்ணெனவு முரைப்பர். வேர்த்து நின்று என ஒன்றாகச் சேர்க்காமே, 'வேர்த்து கன்று போல் நின்று' என அந்வயம் செய்வது அழகியதாம். படுத்தி யென்னை யென்றவிடத்திலே படுத்தேன்னை என்று சேர்த் தோதுவது முண்டாகில் கொள்வதுமாம். ... . (4)

5. மாதவனென்மணியினைவலையிற்பிழைத்தபன்றிபோல்
ஏதுமோன்றும்கொளத்தாரா வீசன்றன்னைக்கண்டீரே
பீதகவாடையுடைதாழப்பெருங்கார்மேகக்கன்றேபோல்
வீதியாரவருவானைவிருந்தாவனத்தேகண்டோமே. (138)

மாதவன் —ச்ரிய: பதியும்,
என் மணியினை } எனக்கு மணிபோல் பிடிப்பட்டிருந்தவனும், (இப்போது)
வலையில் பிழைத்த } வலையிற் சிக்காமல் தப்பிப் பிழைத்திருக்கும்;
பன்றி போல் —பன்றியைப் போல்
ஏதும் —ஓர் அங்கத்தையும்
ஒன்றும் —சிறிதும்
கொள —நான் கொள்ளும்படி
தாரா —கொடுக்காதவனுமான
ஈசன் தன்னை —ஸ்வதந்த்ரனை
கண்டீரே ?

பீதக ஆடை —பீதாம்பரமாகிற
உடை —தான் அரையிலணிந்திருக்குமது
தாழ —திருவடி வரை தாழ்ந்திருக்க
பெரு —பெருத்த
கார் —கரிய
மேகக் கன்று ஏ போல் } மேகக் குட்டி போலே
வீதி ஆர —தெரு நிறைந்து
வருவானை —வரும் அந்தக் கண்ணனை
விருந்தாவனத்தே கண்டோம்.

மாதவனென் மணியினை. பெரியபிராட்டிக்கு ஸுலபனாயிருந்தாற் போலே எனக்கும் ஸுலபனாயிருந்தான். மணியைக் கையிலெடுத்துத் தலைப்பில் முடிந்தாள்வது போல் இவனையும் ஆளமுடிந்ததொரு ஸமய மென்றபடி. வலையிற் பிழைத்த பன்றிபோல். பன்றியை உபயோகித்துக் கொள்பவர் முதலில் அதை ஸுலபமாக வலையிற் சிக்கச் செய்பலாம். வலையிற் சிக்கும் போது தெரிந்து தப்பி யோடிவிட்டால் மறுபடி யதைப் பிடிப்பதே முடியாது. அவ்வாறு இருக்கிறதே. அது கால், காது, மூக்கு, வால் என்ற எவ்வங்கத்திலும் பிடிபடாது. இவனும் திருப்பவளம், திருக்கை, திருவடி யென்றாற் போலுள்ள ஓரங்கமும் எனக்கதீனமாகாதபடி செய்கிறான். இவன் என்ன பன்றியைப் போல் என் திருப்திக்காகவே பிடிபடுகிறானா? அதனால் வரும் பயன் அவனுடையது தானே. பன்றியா யவதரித்ததாலே அதுவு மறியாதபடி யாய்விட்டதோ என்றபடி. ஆடை யுடை. ஆடையென்பது பொதுவிலே வஸ்திரமெனப் பொருள் படும். உடை யென்பது அவன் அரையில் தரித்திருப்பதை விளக்கும். பெருங் கார்மேகக்கன்று இத்யாதி. வானத்திலுள்ள பெருமேகம் வீதியில் நிறைந்து வருமாறு சிற்றுருவம் கொண்டது போல் விளங்குபவன். ஸர்வதாபங்களையும் விலக்கி யின்ப மளிப்பவன் என்றபடி. (5)

6. தர்மமறியாக்குறும்பனைத் தன்கைச்சார்ங்கமதுவேபோல்
புருவவட்டமழகிய பொருத்தமிலியைக் கண்டீரே.
உருவுகரிதாய்முகம் செய்தா யுதயபருப்பதத்தின்மேல்
விரியும்கதிரேபோல்வானை விருந்தாவனத்தேகண்டோமே. (139)

தர்மம் —நியாயமென்பதையே
அறியா —அறியாதவன் போன்றவனும்,
குறும்பனை —தீம்பே செய்பவனும்
தன் கை —தனது திருக்கையிலேயிருக்கும்

சார்ங்கம் அது ஏ போல் } சார்ங்கமென ப்ரஸித்தமான வில் போலவே
புருவம் வட்டம் } வட்டமான புருவங்களால்
அழகிய —அழகு பெற்றவனும்,

பொருத்தம் இலியை	எங்கும் பொருந்தியிராத வனுமானவனை கண்டீரே.	உதய பருப் பதத்தின் மேல்	உதயமலையின் மேல்
உருவு கரிது ஆய்	கரிய திருமேனியை யுடையனாய்	விரியும்	—ஒளி சேர்ந்து விரிந்தெழுந்தன
முகம் செய்து ஆய்	சிவந்த திருமுக முடையவனாய் (அதனாலே)	கதிர் ஏ போல்வானை	சூரியபிம்பம் போல விருப்பவனை விருந்தாவனத்தே கண்டோம்.

தர்மம் இத்யாதி. பகைவரை வெல்லக் கையிலே சார்ங்க மொன்று தரிப்பான், அந்தச் சார்ங்கத்திற்கே ஒப்பாய் அது போல் வட்டமாயிருப்பதோடு அதைப் போல் பிறரை வாதிக்க வல்லமையும் கொண்ட புருவங்களிரண்டைப் பரிவுடையாரையும் அழிக்க வைத்துக்கொண்டான். இப்படிப் பகைவர்க்கொரு வில்லும் பரிவார்க்கு இரு வில்லுமுடைய இவன் எல்லோர்க்கும் தீம்பு செய்பவனே; தர்மமென்பதே அறியானென்றுதானே சொல்லவேண்டும். உட்கருத்தில்—உலகதர்மத்தைப் பாராட்டாமல் குறும்பனென்று கூறும்படி நடந்து ஆய்ச்சிகளிடத்தில் அன்பு மிகுந்திருப்பவனும், அழகனும், தனக்கு நிகரில்லாதவனுமான பிரானைக் கண்டீரோ என்றதாம். உருவு இத்யாதி. உருவு உதயமலைக்கும், முகம் கதிருக்குமொப்பாம். கதிர்மதியம்போல்முகத்தானல்லனோ? (6)

'உத்யதேவோதயம் சைலம் ஸூர்யணேப்தம் கிரீடிநம்' என்றதொரு வகை (பார.).

7\. பொருத்தமுடையநம்பியைப் புறம்போலுள்ளுங்கரியானைக்
கருத்தைப்பிழைத்துநின்றவக் கருமாமுகிலைக்கண்டீரே.
அருத்தித்தாராகணங்களா லாரப்பெருகுவானம்போல்
விருத்தம்பெரிதாய்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (140)

பொருத்தம் உடைய	பொருந்தியே யிருக்கும்	அருத்தி	—ஆசைக்கிடமான,
நம்பியை	—குணபூர்ணனும்	தாராகணங்களால்	நட்சத்திரக் கூட்டங்களாலே
புறம் போல்	—வெளிப்பக்கத்திலே போல்	ஆர	—நிறைய
உள் உம்	—உட்புறத்திலும்	பெருகு	—பெருமையுடைய
கரியானை	—கருத்தவனும்,	வானம் போல்	—ஆகாயம் போலே
கருத்தை	—எனது மனதை	விருத்தம் பெரிது ஆய்	பெரிய மண்டலமாய்
பிழைத்து நின்ற	தப்பி நின்றவனும்,	வருவானை	—வருகின்றவனை
அ கரு மா முகிலை	அந்த, கருத்த பெரிய மேகம் போன்றவனுமாயிருப்பவனை கண்டீரே.		விருந்தாவனத்தே கண்டோம்.

முன்று பொருத்தமிலியை என்றேனே. அதனால் வருத்தம் வேண்டா. பொருத்தமுடையவனென்றே சொல்லிவிடுகிறேன். பொருத்த மில்லாதவன் அதையுடையவனாவனோ என்னவேண்டா. பொருத்தமே யிருக்கின்றதே. புறம்போலுள்ளும் கரியானானே. உள்ளும் புறமுமொத்திருப்பதாலே ஒருவாறு பொருத்த முடையவனல்லனோ? இது மட்டுமோ. வெளிப்புறம் காணப்பெறவில்லையே யென்று கருத்துக்குள்ளே காணலா மென முயன்றால், அங்கு

நின்றும்கூடத் தப்பி யோடிநிற்கிறான். வாராதபடி ஒதுங்குகிறான். கண்ட உருவே மறந்துபோம்படி வெகுநாள் வாராமலிருந்தால் கருத்தில் நிற்பதும் கூடாததே. அந்தக் காலத்திலே கலந்திருந்தபோது கருமாமுகிலாயிருந்தவன் இவ்வண்ணமாயினனென முதலடிகளின் மேற்பொருள். உட்கருத்தாவது— எனக்கு எதிரே வந்துவிட்டதாலே என்னோடு பொருத்தமுடையவன். கரியான் =எரியான்; தாபத்தை யுண்டுபண்ணுதவன். கருத்தை. என் கருத்தாகவே யிருப்பவன். கருத்தை என்பது இப்போது முகிலே யென்பதற்கு விசேஷணமாம். பிழைத்து நின்றவக்கருமாமுகிலை=என்னை விட்டுப் பிறிந்த காலத்திலே, 'ந ஜீவேயம் க்ஷணமபி' என்று உயிர் விடாதபடி எனக்காக ப்ராணனைத் தரித்து வந்து நின்றவனை என்றவாறும்.

அருத்தி. நட்சத்திரகணங்களும் வானமும் சேர்ந்து காணப்படும் போது கண்டுகொண்டே யிருக்கவேண்டுமென்று ஆசை யுண்டாமாகையாலே ஆசைக்கிடமாயிருக்கும். கணங்களால். க்ரஹங்கள், அச்வினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்கள், மற்றவை யென்றவாறு உட்பிரிவுகளிருப்பதால் கணங்களென்றது. 'நவக்ரஹபூஜை முதலியன செய்பவராலே பலனுக்காக ஆச்ரயிக்கப்படுவதாலே தாராகணங்களை அருத்தி என்றது. ஆசையை விளைப்பன அவை' எனவு முரைப்பர். விருத்தம் பெரிதாய் என்று தனது தோழன்மார்களோடு அவன் மண்டலமாக வருவதைச் சொல்லும். தாரா என்றதை மனைவியைச் சொல்லும் சொல்லாகக் கொண்டு, தன்னை எப்போதும் ஆசைப்பட்டிருக்கும் மனைவிமார்களாலே விருத்தம் பெரிதாய் வருவானை யென்பதுமாம். வானம் என்பது மழை யென்று கொண்டால், தாராகணம் என்பது தாராகணமாய் விசேஷமாக வர்ஷிக்க ஸந்நாஹமுள்ள மழை போலே என்றதாம். அப்போது, 'தழைகளும் தொங்கலும் ததும்பி யெங்கும் தண்ணுமையெக்கம் மத்தளி தாழ்பீலி, குழல்களும் கீதமு மாகி யெங்கும் கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு மழை கொலோ வருகின்றதென்று' என்ற (பெரியா 3—4—1) பாசுரத்தின் கருத்தை யிங்குக் கொள்க. (7)

விருத்தம் பெரிதாய் வருவானென்னப்பட்டவன் தன்னருகே நெருங்கி வந்துநிற்கப் பிராட்டிக்கு ப்ரணயரோஷம் போயிற்று. அவனுடைய ஆடையாபரணங்களிலு மழகிலு மீடுபட்டாள். அதனை யினி யவனைப் புகழ்ந்தே பணிக்கின்றனள்—

8. வெளியசங்கோன்றுடையானைப் பீதகவாடையுடையானை
அளிநன்குடையதிருமாலை யாழியானைக்கண்டீரே.
களிவண்டெங்குங்கலந்தாற்போல் கமழ்பூங்குழல்கள்தடந்தோள்மேல்
மிளிரநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (141)

வெளிய —வெண்ணிறமான
சங்கு ஒன்று உடையானை } ஒப்பற்ற ஸ்ரீ பாஞ்சசன்னியத்தை யுடையனும்,
பீதக ஆடை உடையானை } பீதாம்பர மணிந்தவனும்,

ஆழியானை —திருவாழியேந்தினவனும்,
அளி நன்கு உடைய } தயையை மிகவு முடையனுமான
திருமாலை —ச்ரிய:பதியை
கண்டீரே.
களி —களித்திருக்கும்

வண்டு —வண்டுகள்
எங்கும் —எல்லாவிடத்திலும்
கலந்தால் போல் } சேர்ந்திருக்குமா போலே
கமழ் —பரிமளம் வீசாநின்ற
பூ —அழகிய
குழல்கள் —குந்தளங்கள்

தடம் தோள் மேல் } பருத்த தோள்களின்மேல்
மிளிர —புரண்டு விளங்க
நின்று விளையாட } அருகில் நின்று விளையாடாநிற்க
விருந்தாவனத்தே கண்டோம்.

அடைவாக நான்கு விசேஷணங்களை யருளிச்செய்து—இடது மேற்றிருக்கையில் ஸ்ரீ பாஞ்சசன்னிய மேந்தியும், தன்னைக்கண்டதாலும், விரைந்து வருவதாலும் நழுவும் பீதாம்பரத்தை மற்றோர் இடது கையால் பிடித்துக்கொண்டும், வலது கையாலே கூடவரும் மனைவிகளுக்குள்ளே சிறந்தவளான திருமாமகளைக் கைபிடித்தழைத்துக்கொண்டும், வலதுமேற்றிருக்கையிலே திருவாழியேந்தியும், திருவின் சேர்க்கையால் மிகவான தயையே வடிவமாய் வருமவனைக் காணுங்கோள் என்கிறாள். அளிநன்குடைய என்றது திருவுக்கும் சேரும். (8)

9. நாட்டைப்படையென்றயன்முதலாத்தந்தநளிர்மாமலருந்தி
வீட்டைப்பண்ணிவிளையாடும் விமலன்தன்னைக்கண்டீரே.
காட்டைநாடித்தேனுகனும் களிறும்புள்ளுமுடன்மடிய
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (142)

நாட்டை —உலகங்களை
படை —உண்டாக்கக் கடவாய்!
என்று —என நியமித்தும்,
அயன் —பிரமனை
முதலா —முதல்வனாகை (னும்படி)
தந்த —உண்டாக்கின
நளிர் —குளிர்ந்த
மா —பெரிய
மலர் —தாமரைப்பூவை யுடைய
உந்தி —தனது கொப்பூழை
வீட்டை பண்ணி } அயனுக்கு வீடாகச் செய்தும்
விளையாடும் —லீலைகளைச் செய்கிற

விமலன் தன்னை } அகிலஹேயப்ரத்யநீகனை
கண்டீரே
காட்டை நாடி-கானகம் சென்று
தேனுகன் உம்-தேனுகாஸுரனும்
களிறு உம் —யானையும்
புள் உம் —பகாசுரனும்
உடன் —சேர்ந்து
மடிய —அழியும்படி
வேட்டை ஆடி } வேட்டையைச் செய்து விட்டு
வருவானை —வருகின்ற பிரானை
விருந்தாவனத்தே கண்டோம்

அயன் முதலாத் தந்த என்பதற்கு பிரமன் முதலான பிரஜாபதிகளை ஸ்ருஷ்டித்த எனப் பொருள் உரைத்து, 'அப்போது 'படையுங்கள்' எனப் பன்மை வேண்டுமே; படை என்ற ஒருமை பொருந்ாதே' என்ற கேள்விக்கு, ஸ்ருஷ்டித்தது பலரையானாலும், 'ஸ ஹோவாச ப்ரஜாபதிர் ப்ரஜா: ஸ்ருஜ' என்றபடி பிரமனொருவனே, 'படை' என்று நேரில் நியமிக்கப்பட்டவனென மறுமொழி கூறுவர். இதனால், என்று என்ற பதத்தோடு அயனை என வொரு சொல் சேர்க்கவேண்டுமென்றதாயிற்று. இதனை விட்டு அயனைமட்டும் ஸ்ருஷ்டித்ததையே சொல்லுமாறு அயன் முதலா என்றதற்குப் பதிலாக அயன்தன்னையெனப் பாடம் கொள்வது முண்டு. அயன்முதலா என்ற பாடத்திற்குப் பதவுரையிற் கூறின பொருளையு முணர்க அயன் முதலானரை உண்டாக்கின மலர் எனப்பொருள்கொண்டால், அயனை மட்டு முண்டாக்கின மலரை அயன்

முதலான பலரை யுண்டாக்கினதாகக் கூறக்கூடுமோ என்ற கேள்வி பிறக்கும். இதற்கு, 'மேவித்தொழும் பிரமன் சிவனிந்திரனாதிக் கெல்லாம் நாபிக்கமல முதற்கிழங்கே' (தி. வா. 10–10–3) என்ற விடத்திற்போலே விடையாம். 'படையென்று' என்ற நியமனத்தை மலர் செய்யக்கூடுமோ, நியமித்துவிட்டு அதன் பிறகுப் பிரமனை யுண்டாக்கினதாகக் கூறவுமியலுமோ என்ற கேள்வி வாராமைக்காக என்று என்பதை விளையாடும் என்பதோடு கூட்டுவதாம். தந்த= உலகுக்கு அளித்த எனவுரைத்து விமலனுக்கு அது விசேஷணமென்னலுமாம்.

விளையாடும். பிரமனைக் குழந்தையாகக் கொண்டு அவனோடு பேசி விளையாடும்; மதுகைடபர்களைக் கொண்டு வேதத்தை யபஹரிக்கச் செய்து மீண்டு மளித்து விளையாடும்; பிரமனை முன்னிட்டுத் தானே அந்தர்யாமியா யிருந்து வ்யஷ்டிஸ்ருஷ்டி யையும், ஸமஷ்டிஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைப் போல் செய்து விளையாடும். விமலன். ஜீவராசிகளுக்கு வீட்டை யளிப்பதற் காகப் பரமகிருபையாலே ஸ்ருஷ்டி செய்வதாலும், வைஷம்யம் முதலிய தோஷங் களும், அந்தர்யாமியாயிருந்தாலும் உலகிலுள்ள தோஷங்களும் தன்னிடம் தட்டாதபடி யிருப்பதாலும் நிர்மலன். களிறு. குவலயாபீடத்தைக் கொன்றது மதுரையிலேயாயிருக்க, 'காட்டை நாடி' யென்றது அங்கே சேருமோ வென்னில், களிறு என்று வேறேதேனும் விலங்கைச் சொன்னதாகலாம்; வேறேதேனும் யானையையும் தேனுகாதிகளைப் போலே அங்கே கொன்றதுமாகலாம். குவலயா பீடத்தைக் கொண்டாலும் பொருந்தும். 'அயோத்யாமடவீம் வித்தி' என்று இராமனில்லா அயோத்தியைக் காடாக நினைப்பது போல், கண்ணன் வந்து புகாத வரையில் மதுரை காடாகவே கருதப்பட்டதென்னலாம். அன்றி, இவன் காட்டிலே வேட்டையாடினது, பின்னால் தேனுகன் முதலானோர் மாள் வதற்கு மிக அநுகூலமாயிருந்ததென்னலாம். உடன்மடிய. இவனுடைய சிறு பிராயத்திலேயே தாமதமின்றி சேர்ந்தாற்போல் அவைகள் மடிந்ததால் ஒரு முயற்சியிலே மடிந்ததாகச் சொன்னதாம். இனி, தேனுகன், களிறு, புள் எல்லாம் ஒன்றித்து ஒரே சமயத்தில் வந்தாலும் மடிந்துபோம்படி வல்ல மையைப் பெறக் காரணமாயிற்று இவன் வேட்டையாடுவதிற் செய்த பயிற்சி என்னலுமாம்.

இப்படி துஷ்டர்கள் உடன்மடிய வேட்டையாடி வருவானை, 'தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம். பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே' என்றபடி அணைத்து, வீட்டைப் பண்ணி விளையாடும் விமலனை அவனோடு ஆனந்தமாக வாழ்க வென்று எல்லோரும் ஆண்டாளைக் கொண்டாடிக் கூறினதாக இங்கே கருத்தைக் கொள்ளலாம். (9)

இத் திருமொழி கற்றார்க்குப் பலன் அருளிச்செய்கிறாள்—

10. பருந்தாள்களிற்றுக்கருள்செய்த பரமன்தன்னைப்பாரின்மேல்
விருந்தாவனத்தேகண்டமை விட்டுசித்தன்கோதைசொல்
மருந்தாமென்றுதம்மனத்தே வைத்துக்கொண்டுவாழ்வார்கள்
பெருந்தாளுடையபிரானடிக்கீழ் பிரியாதென்றுமிருப்பாரே. (143)

பரு —பருத்த
தாள் —காலை யுடைய
களிற்றுக்கு —கஜேந்த்ராழ்வானுக்கு
அருள் செய்த—ஓடி வந்து அனுக்ரஹம் பண்ணின
பரமன் தன்னை—பரமபுருஷனை
பாரின் மேல்—மண்ணுலகில்
விருந்தா வனத்தே — ப்ருந்தாவனத்திலே யிருப்பதாக
கண்டமை — தானும் தன்னைச் சேர்ந்தவரும் கண்டதைப்பற்றின
விட்டு சித்தன் — ஸ்ரீ விஷ்ணு சித்தரின் அனுக்ரஹம் பெற்ற
கோதை சொல் — ஆண்டாளின் சொல்லான இத்திருமொழியை
மருந்து ஆம் என்று — ஸம்ஸார நோய்க்கு அரிய மருந்தா யிருக்குமிதென்றெண்ணி
தம் மனத்தே—தங்கள் மனத்திலே
வைத்துக் கொண்டு — மறவாமல் அநுஸந்தானம் செய்து
வாழ்வார்கள்—இங்கு வாழ்க்கைப் பெற்றவர்கள்
பெரு தாள் உடைய — பெருமை பொருந்திய திருவடிகளைப் பெற்றுள்ள
பிரான் —உபகாரகனுடைய
அடி கீழ் —திருவடிகளின் கீழே
பிரியாது —விட்டு போகாமே
என்றும் —எப்பொழுதும்
இருப்பார். —நிலைத்து விளங்குவர்.

பருந்தாள் இத்யாதி. தனக்குள்ள வலிமையை முழுதும் தன் காலில் வைத்து முதலையினின்று மீளப் பெரும் பாடு பட்டுக் களைத்த களிறு, 'முதலே! முதலே! என்று கதறின க்ஷணத்திலே தேவர்களும் கைவிட்டு தூரத்தில் நிற்கக் கருணைக் கடலான நம் பிரான் பரமபதத்தினின்று பறந்தோடிப் பாருக்கு வந்து அதன் துயரம் தீர்த்தருளினான். இது நாம் கேட்டது மாத்திரம். இத்தகைய கல்யாணகுணாதிசயத்தை இப்போது யான் நேரில் காணும்படி எனக்கு ப்ருந்தாவனத்தே காட்சி யளித்தான். களிறு தன்னால் பறிக்கப்பட்ட பூக்களை அவன் பெருந்தாளிலே சேர்க்கவேண்டுமென்று அவனைக் காணக் கதறினது. நானும் எனது கொம்மை முலைகளா லவனை யணைத்து அவனுடைய பெருந் தாளிற் பணிவிடை செய்யப் பாடுபட்டேன். களிற்றைப் போலென்னையும் காட்சி யளித்துக் காத்தருளினான். இனி அவனை விட்டுப் பிரியாமே கண்டு களித் திருக்கப் பெற்றேன். இப்படி விட்டுசித்தரின் வல்ல பரிசாலே யெல்லாம் பெற்ற எனது சொல்லான இதை மனப்பூர்வமாக ஓதி இதுவே இப் பிறவி நோய்க்கும், பகவத்கைங்கர்யம் செய்யக் கூடாதபடிக்காம் இடர்களுக்கும் மருந் தென மனத்திற் கொண்டவர்கட்கு இங்குமங்குமெங்கும் எம்பெருமானுடைய அனுபவமும் கைங்கர்யமும் எக்காலமு மிருந்துவரு மென்றனள்.

பரமன்தன்னைப் பாரின் மேல். பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கு மவன் இப்பாருக்கிறங்குவதென்றால், எவ்வளவு கருணை யிருக்கவேண்டும்? பாரின்மேல் விருந்தாவனத்தே கண்டமை விட்டுசித்தன்கோதை. விருந்தாவனத்திலே விபவாவதாரமா யெழுந்தருளியிருந்தபோது கண்டமை கூடும். இப்பொழு தங்கே காணலாம்படி யின்றி மறைந்தவனும் இப்போது இங்கே நான் அடைய விரும்பின விருந்தாவனக் கண்ணனாகவே ஸேவை யளித்திருப்பதாகிய இவ் வற்புத காட்சியை இப்பாரின் மேல் என் உற்றாரோடு யானே கண்டேன். என்ன அவன் நீர்மை! என்ன எனது தந்தையாரின் மேன்மை! என்றபடி.

பெருந்தாளுடைய. முழு உலகும் ஒரே காலத்தில் தன்னை யாராதிக்க முயன்றாலும் அது கூடும்படி த்ரிவிக்ரமாவதாரத்திலே தன் திருவடியைப் பரப்

பினவன்; என்னைக் காக்க வெகு தூரத்தினின்று விரைந்து வந்தவனென்ற வாறு. அடிக்கீழ் பிரியாதென்று மிருப்பார். அவனுக்கே யிங்கும் ஆட்செய்து லத்தை பெற்று விளங்குவர்.

இவ்வாறு மார்கழிமாதத்திலே ஆயச்சிறுமிகளின் நோன்பை யாதரித்த ஆண்டாள் தையொருதிங்கள் தொடங்கி மாசிமுன்னாள் வரை மன்மததேவனை யாராதித்து, மாலை வசப்படுத்திக் கனவிலவனை மணந்து, கண்முன்னே அவன் வந்து தன்னுடன் காலம் முழுதும் கலந்திருக்க முயன்று அதனையும் பெற்று இம்மைப் பிறவியிலுமினிது வாழ்ந்த வகையைத் தனது திவ்வியப்ரபந்தத்தின் வாயிலாக வெளியிட்டு நம்மையு மவ்வண்ணம் வாழ்ந்திருக்கச்செய்ய முயன்றனள். கோபர்களை விட கோபஸ்திரீகளுக்கும், ரிஷிகளை விட ரிஷிபத்னிகளுக்கும், ஆழ்வார்களை விட ஆண்டாளுக்கும் எம்பெருமானிடமுள்ள ஈடுபாட்டையும், பூமியிலுள்ளாரெல்லோருடைய செவிக்கு மின்பமூட்ட பூமியின் செவியிலே தோன்றின வால்மீகியின் கவிதைக்கு மேற்பட்ட ஆண்டாளின் செந்தமிழ்ச்சொன்மாலையின் சுவையையு முணர்ந்த எந்தப் பெண்மணியும் இவ்வுலகினை உய்விக்க வல்லளாவாள் புருஷர்கள் அந்நிலை பெற்றால் உலகம் முழுது மெங்கு மின்புறு மென்பதைச் சொல்லவேண்டுமோ? இந்நன்னிலை வருமாறு, எம்பெருமானுக்கு மேலாக இனிய உபதேசம் செய்தருளின இப்பிராட்டியாரின் பாதாரவிந்தத்தையே போற்றுக.

[illegible]

ப்ரபந்தரக்ஷையில் நாய்ச்சியார்திருமொழி உரை முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

சுபமஸ்து.

ஸ்ரீ

நாய்ச்சியார் திருமொழி யகராதி.

	பக்கம்		பக்கம்.		பக்கம்.
அங்கைத்தல	173	கருப்புவில்	24	தாமுகக்கும்	154
அல்லல்விளைத்த	194	கருப்பூரம்	100	துங்கமலர்	131
அழிலும் தொழிலும்	187	கருவிளை	129	தெள்ளியார்	52
அற்றவன்	58	கற்றினம்	179	தையொரு	11
அனுங்க	197	கன்னிய	51	தொழுது	23
அன்றின்னுதன	59	காட்டில்	54	நடமாடி	147
அன்றுலகம்	80	காயுடை	21	நடையொன்று	188
ஆயனுக்காக	98	கார்காலத்	123	நல்லவென்	152
ஆய்ச்சிமார்	56	கார்க்கோடல்	138	நாகத்தின்	125
ஆவலன்புடை	60	கார்த்தண்கமல	199	நாட்டைப்படை	203
ஆரேயுலகத்து	187	கார்த்தண்முகிலும்	176	நாணியினி	171
ஆர்க்குமென்	175	காலைக்கதுவிடு	44	நாமமாயிரம்	26
இதுவென்	40	காலையெழு	135	நாளைவதுவை	84
இந்திரன்	85	குங்குமம்	97	நாறுநறும்	132
இம்மைக்கும்	94	குண்டுநீர்	28	நாற்றிசை	87
இன்றுமுற்றும்	28	கூட்டிலிருந்து	181	நீரிலே	46
இன்றுவந்து	133	கொண்டகோல	61	பட்டிமேய்ந்து	196
உண்ணாது	163	கைப்பொருள்	161	பதினாறும்	112
உண்பது	111	கொம்மைமுலை	192	பரக்க	42
உருவுடை	20	கோங்கலரும்	136	பருந்தாட்களிற்று	204
உள்ளேயுருகி	191	கோவைமணாட்டி	142	பழகுநால்	61
உன்னோடு	107	கோழியழை	38	பாசிதூர்த்து	164
ஊடல் கூடல்	62	சங்கமா	122	பாஞ்சசன்னிய	113
எத்திசையும்	73	சந்திர	105	பாடும்குயில்	145
எல்லே	41	சந்தொடு	137	பாலாலிலை	184
எழிலுடைய	155	சலங்கொண்டு	121	பூமகன்	55
என்புருகி	69	சார்ங்கம்	77	பெய்யுமாமுகில்	31
ஒளி வண்ணம்	117	சிந்துர	126	பேதநன்கு	34
கஞ்சன்	49	சீதைவாய்	36	பைங்கிளி	78
கஞ்சைக்காய்ந்த	185	சுவரில்	17	பைம்பொழில்	130
கடலில்	102	செங்கமல	110	பொங்கிய	75
கடலே	150	செம்மையுடைய	166	பொங்கோதம்	156
கணமாமயில்	146	தடத்தவிழ்	45	பொய்த்தீர்த்தம்	108
கண்ணனென்றும்	183	தடவரை	104	பொருத்தம்	201
கண்ணலம்	165	தந்தையும்	172	பொல்லா	159
கதிரொளி	89	தருமமறியா	200	போர்க்களிறு	127

நாய்ச்சியார் திருமொழி யகராதி.

	பக்கம்.		பக்கம்.		பக்கம்.
மச்சணி	158	மாமிமார்	47	வாய்நல்லார்	92
மதயானை	124	மாமுத்தம்	116	வாரணம்	83
மத்தநல்	15	மாலாய்ப்பிறந்த	198	வானிடை	19
மத்தளம்	90	மின்னுக	118	வான்கொண்டு	119
மழையே	148	முல்லை	143	விண்ணீல	114
மற்றிருந்தீர்	168	முற்றத்தூடு	36	விண்ணுற	81
மன்னுபெரும்	65	முற்றிலாத	33	வெளியசங்கு	202
மன்னு மதுரை	182	மென்னடை	70	வெள்ளைநுண்	32
மாசுடை	22	மேற்றோன்றி	140	வெள்ளை	14
மாடமாளிகை	57	வட்டவாய்	35	வெள்ளைவிளி	66
மாதலிதேர்	68	வண்ணந்திரிவும்	177	வெற்றிக்கருள	190
மாதவன்	200	வரிசிலை	95		

சுபமஸ்து.